N30.1

224171



# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

| தொகுதி | சுக்லஹு தைமீ 1930. ஜனவரிமீ | பகுதி |
|---|---|---|
| 1 | | 6 |

பொருள் அடக்கம்.

கடவுள் வணக்கம் 161
ஆயர்முதுமகள் மாதரியின் ... ,, 164
கண்ணன் சரிதம் 166
கமலா 169
திருப்பாணாழ்வார் 172
பெண் கல்வி அவசியமா? 176
வள்ளல் பாரி 177
ஏறு தழுவுதல் 181
ஞானகலாவிலாசம் 182
விலாவதியின் நிரூபம் 185
சம்பகமாட்சி 188-190
இரங்கற்பாக்கள் 191.
கருவெழுத்தலங்காரமிஞ .192
இருபெருந்துக்கங்கள்

18 FEB 1930 MADRAS

Managing Editor.

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாச
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிராப்பள்ளி.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் நூஷணைகளின் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் ச மாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோ அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மது



திருவாளர்

## இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனூர் அவர்கள்.

இவர் நம் குலத் தலைவர்களுள் சிறந்து விளங்குபவர். மதுரையில் கோபால் மஹால் என்னும் பிரபல புத்தக விற்பனசாலையின் சொந்தக்காரர். தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்றுப் புத்தக வர்த்தகம் புரிந்து வருபவர். கவர்ன்மெண்ட் பிரசுரங்களுக்கும் ஏஜண்டாக விளங்குபவர். மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரைத் தாலூகா போர்டு, மதுரை ஜில்லா கல்விச்சபை ஆகிய உயரிய ஸ்தாபனங்களில் அங்கத்தினராகத் திகழ்பவர். பொதுமக்களது உள்ளத்தைக் கவரும் பரோபகாரகுண நலத்தாலும், சிறந்த செல்வாக்காலும் 11 வருடங்களாகத் தொடர்ந்து மதுரை மூனிசிபல் கவுன்சிலில் அங்கத்தினராக இருந்து வருகின்றனர். இரண்டாண்டுகளுக்கு முன்னர், போட்டியன்றியே ஷை கவுன்சிலுக்கு இவர் வந்ததே இதனை வலியுறுத்தும். 3-வது யாதவ மஹாநாட்டிற்கு வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து மதுரையில் கண்டோரெல்லாம் ஆச்சரியமும், பேரானந்தமும் அடையும்படி ஷை மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தவர். இப்போது யாதவமித்திரன் என்னும் பத்திரிகையை ஆயிரக்கணக்கான பணச்செலவில் வெளியிட்டு நம் சமுதாயத்துக்குப் புது உணர்ச்சியை வளர்த்து வரும் பெரியார்.

இவர் சென்னை யுனிவர்சிட்டி (சர்வகலா சங்கம்) செனட் சபைக்கு மதுரைஜில்லா மூனிசிபல் கவுன்சிலர்களின் பிரதிநிதியாகப் போட்டியன்றி அங்கத்தினராக (Senate Member) நாளது வருஷம் ஜனவரிமீ 25வ தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார். கல்வித்துறையில் உழைத்துவரும் இவருக்குப் பொருத்தமான இப்பதவி சமீபத்தில் எய்தியமைக்கு நாம் பெரிதும் மகிழ்வெய்துகின்றோம். முயற்சி திருவினையாக்கும் என்னும் ஆன்றோர் வாக்குக்குப் பெரிதும் இலக்காக விளங்கும் இவர் இன்னும் இத்தகைய பல உயரிய பதவிகளையும் கௌரவங்களையும் அடைந்து உடல்நலத்துடன் பல்லாண்டு இனிது வாழ நம் பெருமானது திருவடித் தாமரையை இறைஞ்சுவோமாக.

ஸ்ரீ

# யாதவமித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| | | |
|---|---|---|
| தொகுதி 1 | சுக்கில ஞு தை-மீ<br>1930-ஞு ஜனவரி-மீ | பகுதி 6 |

## கடவுள் வணக்கம்.

துப்புடை யாயர்கள்தம் சொல்வழு வாதொருகால்
தூய கருங்குழனற் றோகை மயிலனையே*
நப்பினை தன்திறமா நல்விடை யேழவிய
நல்ல திறலுடைய நாதனு மானவனே*
தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத்
தனியொரு தேர்கடவித் தாயொடு கூட்டிய என்
அப்ப வெனக்கொருகா லாடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே யாடுக வாடுகவே.

## ஆயர் முது மகள் மாதரியின் மாண்பு.

(133ம் பக்கத்துத்தொடர்ச்சி)

மாதரியால் இங்ஙனம் புகழப்பெற்ற கோவலன், உண்டபி...
தன் பத்தினி கண்ணகியோடு அளவளாவியிருந்து பின்பு கண்ண...
கியை நோக்கிக் கற்பின் கொழுந்தே; நான் உன் சிலம்புகளில் ஒ...

றை நகரத்தில் கொண்டுபோய் விற்று வருகின்றேன்; நான் வருந்
துணையும் "நீ தனிமையால் வருந்தா தொழிக" என்று சொல்லிக்
கண்ணகியைத் தேற்றி ஆய்ச்சியர் யாவரும் குரவை ஆடப் போயி
ருந்தமையால் கண்ணகி தனிமையாயிருப்பதற்கு மீண்டும் வருந்
திக் கொண்டே மாதரி வீட்டினின்றும் சிலம்பைக் கையில் எடுத்
துக்கொண்டு புறப்பட்டான். இவ்வாறு கோவலன் வருகையில்
அவனை ஓர் எருது பாய வந்தது. கோவலராயின் அதனைத் தீய
சகுனமென்றறிந்து செல்லாது மீள்வர். கோவலன் அதை அறி
யாது ஆயர்பாடியில் காதெருமன்றங்களைக் கடந்து தனித்தெரு
வின் நடுவே போய்க் கடை வீதியை அடைந்தான். அப்போது
அவ்வீதியின் வழியாக வந்த ஒரு தட்டானிடம் கோவலன் தன்
சிலம்பைக்காட்ட அவன் அரசன் மனைவியினது சிலம்பைக்கவர்ந்
தவனாதால் அதனை அபகரித்துக் கொள்வதற்கு இதுவே சமய
மென்று கருதி, கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடியவன்
என்று கோவலன் மீது பழிசுமர்த்தி அரசனால் கொல்லும்படி
செய்யக் கொலைஞர்கள் கோவலனை வெட்டி வீழ்த்தக் கோவலன்
கொலையுண்டான்.

கோவலன் சிலம்பு விற்கப் புறப்படுவதற்கு முன்னரே விடி
யற் காலையில் தயிர்கடைவதற்கு மாதரி தயிர்த்தாழி இருக்கும்
இடத்திற்குச் சென்றாள். முதல்நாள் பிரையிட்ட பாலும் தோ
யாது திரைந்திருந்தது; உருகவைத்த வெண்ணெயும் உருகாதிருந்
தது; அன்றியும் பசுக் கூட்டத்தில் காளைகள் கண்ணில் நீர் உகுத்து
நின்றன; ஆட்டு மறிகள் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடந்
தன; பசுக்களெல்லாம் உடல் நடுங்கிக் கதறி நின்றன. பசுக்களின்
கழுத்து மணிகள் அறுந்து விழ்ந்தன. இவற்றையெல்லாம் அவள்
கண்டு, தன் மகள் ஐயையை நோக்கி, "நமக்கு ஏதோ ஓர் தீங்கு
வருமென்று நினைக்கின்றேன்; ஆயினும் நீ அஞ்ச வேண்டாம்;
முன்னர் ஆயர்பாடியில் தாதெருமன்றத்தில் கண்ணபிரான் தன்
தமையன் பலராமனோடு ஆடிய பால சரித நாடகங்கள் பல உண்டு;
அவற்றுள் நம் நப்பின்னையோடு அவன் ஆடிய குரவைக்கூத்தை
மண்ணின் மாதர்க்கு அணிகலமாகிய கண்ணகி காண, நாம் ஆடக்
கடவோம்; இது இவ்வுற்பாதங்களுக்கு உபசாந்தியாகும்" என்று
கூறி, ஆய்ச்சியர் எழுவரைத் தேர்ந்தெடுத்து, வட்டமாய் முறைப்
படி நிறுத்திக் குரவைக்கூத்தை விதிப்படி ஆடும்படி செய்தாள்,
அவர்களும் முதலில்



"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ? தோழீ!"

என்று மாயவனை முல்லைப்பண்ணாலே பாடினர்; மாதரி அதுகண்டு
வியந்தாள். அப்பால் குரவை யாடிய மகளிர்,

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே;
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரை
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்"

என உள்வரி வாழ்த்தாகவும்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே"

எனப் படர்க்கைப் பரவலாகவும் பாடிக் குரவைக்கூத்தை ஆடி
முடித்தனர்.

குரவை நாடகம் ஆடி முடிந்த பின்னர் மாதரி, நீராடித் திரு
மால் அடியைப் பூசிப்பதற்கு வையையாற்றிற்குச் சென்றாள்.
அப்போது உள்நகரத்தில் கோவலன் கொலையுண்ட செய்திகேட்ட
இடைச்சி ஒருத்தி, அதனைத் தெரிவிக்க விரைந்து வந்தாள்; வந்த
வள், கண்ணகியின் அழகையும் இளமையையுங்கண்டு அவளிடம்
தன்வாக்கால் அதனைத்தெரிவிக்க நாவெழாது, குரவை ஆடி முடித்து
நீராடவந்த ஆயர் முதுமகளிடம் இரகசியமாய்க் கூறி, அவர்களு
டன் விம்மி நின்றாள். கண்ணகி இதனைக்கண்டு, அருகில் நின்ற
ஐயையை அழைத்து, 'தோழீ! என் காதலன் இன்னும் வரக்
காணேன்; அதனால் என் நெஞ்சம் வருந்தி மயங்குகின்றது, இம்
மகளிர் யாவரும் மறைவாகப் பேசிக்கொள்வது யாதோ? தெரிந்தி
லேன்" என்று இரங்கிக் கூறினாள். செய்தி அறிந்துவந்த ஆய்ச்சி,
"அந்தப்புரத்திலிருந்தசிலம்பை அபகரித்த கள்வன் கோவலனே"
என்று அவனைக் காவலர் கொலைசெய்து விட்டனராம் என்றனள்.
அந்தோ! அப்போது கண்ணகி அடைந்த துன்பத்தை எண்ணவும்
படுமோ? துயரம்பொங்கி எழுந்தாள்; கூந்தல் தாழ வீழ்ந்தாள்;

தன் வசம் இழந்தாள்; கண்கள் கலங்கிச் சிவக்கும்படி கையால் முகத்தில் அறைந்தழுதாள்; கொழுநனை விழித்து, 'அந்தோ! நீ எங்கிருக்கின்றாய்' என்று பொருமிப் புலம்பினாள். இங்ஙனம் பலவாறு துயருழந்த கண்ணகி, பின்னர்க் குரவையாடின மகளிரை நோக்கி, 'ஆயர் மகளிரே! நீங்கள் எல்லாம் கேளுங்கள்'' என்று சொல்லிப் பின் சூரியனை நோக்கிச், "செங்கதிர்ச் செல்வனே! இவ்வுலகிலுள்ள பொருள்களுள் நீ அறியாத பொருள்கள் ஒன்றும் இல்லை; ஆதலால், நீ அறிய என்கணவன் கள்வனோ"? என்றாள். அப்போது சூரியன், அசரீரியாய் "நின் கணவனோ கள்வன் அல்லன்; அவனைக் கள்வன் என்ற இவ்வூரை விரைவில் எரியுண்ணும்" என்றான். (தொடரும்.

ஆ. கார்மேகக்கோனார்,
மதுரை.

---

# கண்ணன் சரிதம்.

(135-ம் பக்கம் தொடர்ச்சி.)

## பூதனை வதம்.

இவ்வாறு நந்தகோபர் கோகுலத்திற்கு வந்துகொண்டிருக்கையில் பூதனை என்னும் ராக்ஷசியானவள் கம்சனால் அனுப்பப்பட்டுப் பெரிய நகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள சிசுக்களை எல்லாம்கொல்வதே வேலையாகக்கொண்டு ஆங்காங்குத் திரிந்துகொண்டிருந்தாள். இவ்வாறு திரிந்த பூதகி நந்தகோகுலத்திற்கருகாமையில் வந்து தான் நினைத்தபடி வடிவம் கொள்ளும் மாயை உடையவளாதலால் தனது கோர ரூபத்தை மறைத்துக்கொண்டு, மிக அழகிய பெண்வடிவந் தாங்கிப் பல அலங்காரங்களையும் செய்துகொண்டு புன்முறுவலோடுகூடின கடைக்கண்களினின்றும் பரவுகின்ற பார்வைகளினால் கோகுலத்திலுள்ள கோபிமார்களின் மனதைக் கவர்ந்தாள். அவளைக் கண்ட கோபிமார்கள், மிகுந்த வணப்புடையவளும் கையில் தாமரைமலர் ஏந்தியவளுமாகிய இவள், தன் கணவனாகிய பரமபுருஷனைக் காணவந்த மகாலட்சுமியோவென்று நினைத்தார்கள். பாலர்களைக் கொல்லும் அந்தப்பூதகியை, அவளது அழகினால் மெய்மறந்து கோபிகைகள் யாவரும் அவள் உள் நுழைவதைத் தடுக்காதே இருந்துவிட்டார்கள்.



பூதனை நந்தகோபருடைய மாளிகையிலும் நுழைந்து தனது தேஜஸையும், அபார சக்தியையும் மறைத்துக்கொண்டு, நீறு பூத்த நெருப்புப்போன்றிருக்கும் பரமபுருஷனாகிய கண்ணபிரான் திருமஞ்சத்தில் கண்துயில்வதைக் கண்டாள். ஜங்கமஸ்தாபர ரூபமான எல்லாப் பொருள்களுக்கும் அந்தராத்துமாவாகி அவற்றின் மனோபாவங்களை எல்லாம் அறியும் பரமபுருஷன், அப்பூதனை பாலர்களைக் கொல்லும் பாதகி என்பதை அறிந்தவனாயினும், நினைத்தமாத்திரத்தில் அவளைக் கொல்ல வல்லவனாயினும், இளமையை நடித்து, ஒன்றும் செய்யாது அமர்ந்திருந்தான். அதன்மேல் அந்த ராக்ஷசி அக்குழந்தை, துஷ்டர்களின் உயிர்களைப்பறிக்கவல்லவன்என்பதை அறியாமல் ஒரு மூடன் உறங்குகின்ற நாகத்தை மடியில் எடுத்து வைத்துக்கொள்வதுபோல மடியில் எடுத்துவைத்துக்கொண்டாள். அப்பகவத் குழந்தையின் தாய்மார்களான யசோதை, ரோகிணியாகிய இருவரும் பூதனையினுடைய தேஜஸினாலே மயங்கிச் சும்மா பார்த்துக்கொண்டிருந்தார்களேயன்றிக் குழந்தையை எடாதே என்று தடுக்கவில்லை. அப்பால் கொடுந் தன்மையுடைய அப்பூதனை பாலகிருஷ்ணனை மடியில் வைத்துக்கொண்டு, தன் தன்னியத்தை அவன் வாயில் மடுத்து உண்பித்து விஷ மயமாகிய பாலை ஊட்டினாள். பகவானும் கோபம்கொண்டு அவள் ஸ்தனங்களை இறுகப் பிடித்து அவளது பிராணங்களோடு கூடப் பாலை உறிஞ்சிப் பருகினான். அப்பொழுது அவள் எல்லா உயிர்நிலைகளிலும் பீடிக்கப்பட்டுக், குழந்தையே! இவ்வளவோடுபோதும் சீக்கிரம்விடு என்று சொல்லித் தன் கண்களை மலரவிழித்துப்பாதங்களையும் புஜங்களையும் அடிக்கடி உதறி உடம்பெல்லாம் குலுங்கப்பெற்றுப் பெரும் சத்தமாகக் கதறினாள்.

அவளுடைய பெரும் கூக்குரலினால் பூமியும் மலைகளும் ஆகாயமும் சூரியன் முதலிய கிரகங்களும் நடுக்கமுற்றன. பாதளமும் திசைகளும் எதிரொலி செய்தன. மனிதர்கள் யாவரும் இடிஇடிக்கின்றதோவென்று நினைந்து அஞ்சிப் பூமியில் மூர்ச்சித்து விழுந்தார்கள். ராக்ஷசி ஸ்தனங்களில் பீடிக்கப்பட்டு வாயைத் திறந்துகொண்டு தன் பழைய உருவத்தைப் பெற்று, தன் வடிவம் அகன்றவிடங்களையெல்லாம் மறைக்கும்படி விழுந்தாள். விழுந்தவுடன் பாலுண்ட பரந்தாமன் அவள் மார்பிலேறித் தவழ்ந்து விளையாடிநின்றான். பூதனையின் கோர ரூபத்தால் அஞ்சிநின்ற ஆயர்களும்

ஆய்ச்சிகளும் யசோதை இளஞ்சிங்கமாகிய பாலகனைக் கண்டு
விரைந்தோடி வந்து பரபரப்புடன் எடுத்துக்கொண்டார்கள். பிறகு
அந்தக் கோபிமார்கள், யசோதைரோகிணி இவர்களுடன் ஆலோ
சித்துத் திஷ்டிதோஷபரிகாரங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

முதலாவது குழந்தைக்குக் கோமய கோஜலங்களால் ஸ்நா
னம் செய்வித்துக் கோமயத்தினால் நெற்றி முதலிய 12 இடங்களி
லும் 12 நாமங்களைத் தரித்து ரக்ஷை செய்தார்கள். அந்தக் கோபி
மார்கள் பிறகு ஆசமனஞ்செய்து அகர முதலிய அட்சரங்களை உச்
சரித்துத் துஷ்ட தேவதைகளாலும், பூத பிசாசங்களாலும் உண்
டாகும்படியான தீங்குகள் எல்லாம் திருமாலின் நாமோச்சாரணத்
தினால் உன்னைத் தீண்டாது நசித்துப்போமாக என்று மந்திர பூர்வ
மாக ரட்சை செய்தார்கள். பிறகு தாயான யசோதை திருக்கண்
ணனை எடுத்துப் பால் ஊட்டிப் படுக்க வைத்தாள். அவ்வளவில்
நந்தகோபன் முதலிய யாதவர்கள் வடமதுரையினின்றும் கோகு
லத்திற்கு வந்து பூதனை உருவத்தைக்கண்டு அச்சமும் வியப்பும்
அடைந்தார்கள்.

(தொடரும்)

ஆ. கார்மேகக்கோனார்,
மதுரை.

---

# கமலா.

---

## ஒரு சீர்திருத்தச் சிறுகதை.

திருநெல்வேலி ஜில்லாவை வளப்படுத்துவது தெள்ளிய நீர்
பாயும் தாம்பிரபர்ணியாறு. தாம்பரபர்ணியின் இரு கரைகளும்
தீராவாசமெனப்படும் நன்செய்நிலங்கள் நிறைந்திருக்கின்றன. இந்
நதி ஜலத்தால் தகுந்த சௌகரியங்களைப்பெற்ற நகரங்களில் முக்கி
யமானது திருநெல்வேலி. திருநெல்வேலிக்கு அண்டையில் இருக்
கும் முக்கியமான இடம் பாளையங்கோட்டை. திருநெல்வேலி ஜில்
லாவிற்கே முக்கியமான கச்சேரிகளெல்லாம் பாளையங்கோட்டை
யிலேயே இருக்கின்றன. பாளையங்கோட்டை ஆங்கில நாகரிகத்தில்
பேர்போனதெனக் கூறுவார்கள். அங்கே யாதவர்களுடைய வீடு
கள் ஏராளமாக விருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் இராம
சுவாமிக்கோனார் என்பவர் பாளையங்கோட்டையில் வாழ்ந்துவந்
தார். அவர் மனைவி பெயர் லக்ஷ்மியம்மாள் இவர்களுக்குக் கமலா



என்ற ஒரே மகள்தான் உண்டு. மலா ருதுவாகி மூன்றுவருஷங்
களுக்கு மேலாகின்றன. அவள் நல்ல அழகு வாய்ந்தவள்.
மேலான குணங்கள் அவளையே அணுகியிருக்கின்றனவெனக் கூற
லாம். கமலா ஆங்கிலத்தில் மூன்றாவது வகுப்பு வரையில்தான்
கற்றிருந்தாளெனினும் வீட்டில்வைத்துத் தமிழும் நன்கு பயின்று
கொண்டாள். தையல் வேலையில் அவளுக்குச் சாமர்த்தியம் அதி
கம். வீட்டு வேலைகளொழிந்ததும் தையலிலும், புத்தக பாராயணத்
திலும் காலங்கழிப்பதல்லாமல் வீணே வம்புபேசி நேரம் போக்கும்
சாதாரணப் பெண்களின் வழக்கம் கமலாவினிடங் கிடையாது.

கமலாவின் கலியாணத்தை முன்னிட்டு இராமசுவாமிக்கோனா
ருக்கும் அவர் மனைவி லக்ஷ்மியம்மாளுக்கும் அடிக்கடி சம்பாஷணை
நிகழ்வதுண்டு. சிலபோது அது விவாதமாக மாறினும் மாறும்.
என்றும் ஒரு முடிவிற்கு வாராமல் ஓய்வதே அவர்கள் வழக்கம்.
கமலாவுக்கு வரப்போகும் கணவனைப் பற்றியே இவ்விவாதங்க
ளெல்லாம் நடைபெற்றன. கமலா ருதுவாகி மூன்று வருஷங்க
ளும் கழிந்து நான்காவது வருஷமும் இவ்விவாதத்திலேயேகழிந்து
கொண்டு வந்தது. கமலாவோடு பள்ளிக்கூடத்தில் படித்துவந்த
பெண்கள் விவாஹமாய்த் தாய்மாராய்விட்டனர். கஷ்டம் கமலா
விற்கு இன்னும் கலியாணமாகவில்லை. அவள் நற்குணங்களைக்கண்டு
பல யாதவ இளைஞரின் பெற்றோர்கள் தங்கள் குமாரர்களுக்கு
விவாஹஞ் செய்ய விரும்பிக் கேட்டுவந்தார்கள். இராமசுவாமிக்
கோனார் எல்லோருக்கும் பின்னாலாகட்டும், பின்னாலாகட்டும் என்
றே கூறிவந்தார்.

கமலாவின் தந்தை இராமசாமிக்கோனார், திருநெல்வேலி ஜில்
லாவில் வள்ளியூரென்ற சிறு கிராமத்தில் பிறந்தவர். அவர் சிறு
வயதிலேயே சிலரோடு கொழும்புக்குச் சென்றுவிட்டார். அங்கே
சில நாட்களுக்குப் பிறகு ஆப்த நண்பரொருவரை அடைந்தார்.
அவர் திருநெல்வேலியை அடுத்த பாளையங்கோட்டைக் காரரான
பெருமாள் கோனார் என்பவர். இருவரும் கொழும்பில் மிக ஒற்று
மையாக இருந்து சிறிதுபொருள்தேடிப் பங்கிட்டுக்கொண்டுதங்கள்
தாய்நாடு திரும்பினார்கள். இருவரும் தங்கள் ஊருக்குச்சென்று
விவாஹஞ்செய்து கொண்டனர். கொழும்பு நகரில் சிறு பருவ
முதலே வசித்துவந்த இராமசாமிக்கோனாருக்கு வள்ளியூர் வாசம்

பிடிக்கவில்லை. அவர் தன் நண்பர் பெருமாள்கோனாரின் தூண்டுதலினால் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார். இராமசாமிக்கோனாருக்குப்பாளையங்கோட்டையிலேயே ஒருவீடும் நன்செய்நிலங்களும் வாங்கப்பட்டன. கமலா பாளையங்கோட்டையிலேயே பிறந்தாள். இராமசாமிக்கோனாரும் லெக்ஷ்மியம்மாளும் தங்களுக்கு ஒரே மகவானதினால் மிக அருமையாகக் கமலாவை வளர்த்துவந்தனர். கமலாவை அவள் தந்தை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார். கமலாவும் நன்கு கற்றுவந்தாள். ருதுவானதின் பிறகு கமலா பள்ளிக்கூடம் போவதில்லை.

இராமசுவாமிக்கோனார் கமலாவின் கலியாண விஷயத்தில் காலந் தாழ்த்திக்கொண்டு போனதற்குக் காரணமில்லாமலில்லை. நமது யாதவ மக்களில் சில கிராமங்களிலுள்ளவர்கள் குறிப்பிட்ட தங்கள் குலத்துள்ளேயே விவாஹஞ்செய்துகொள்வது என்றவழக்கத்தை இக்காலத்திலும் கட்டாயமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இக்கொடிய வழக்கத்தால் தகுந்த தம்பதிகள் சேர்ந்துகொள்வது அபூர்வம். அழகிய கன்னிகைக்குக் குரூபியானவன் கணவனாய் அமைந்துகொள்வான். இப்பொருந்தா விவாஹங்களால் எப்பொழுதும் அல்லலுள் ஆழ்ந்து கிடக்கும் குடும்பங்கள் அநேகம். செல்வந்தர் வீட்டுக்கன்னிகைகளுக்குச் சீக்கிரத்தில விவாஹம் நடைபெற்றுவிடும். வறிஞர்வீட்டுமகளிரை விவாகஞ்செய்துகொள்ள ஆடவர் எவரும் ஏற்படார். தங்கள் குலத்தைவிட்டு வேறு குலத்தவரோடு விவாகஞ் செய்துகொள்ளலாமென்றாலோ இழிவு. அது ஆசாரத்திற்கு மாறுபட்ட விஷயமாகிறது. ஆசாரத்திற்கு அஞ்சிவாழும் பெண்மணிகள் பலர். இப்பெண்கள் மனைவியரை யமன்கையில்கொடுத்துவிட்டு இரண்டாவதோமூன்றாவதோஇவைகளுக்கும் மேற்பட்டனவோ ஆகிய விவாஹங்களுக்கு விரும்பும் கிழவர்களுக்கு மனைவியராகின்றனர். முதியவர்களுக்கு மனைவியான இம்மகளிர் எளிதில் விதவைகளாகின்றனர். விதவை இம்மையை மேலானதன்றோ? இதுபோன்ற துன்பங்கள் பல குறிப்பிட்ட ஒரு சிறு சமூகத்தினுள்ளேயே விவாகஞ்செய்து கொள்வதென்ற பிடிவாதக் கொள்கையால் யாதவசமூகத்தைச் சூழ்ந்திருக்கின்றன. கலப்பு மணங்கள் மிகுதியாக நடைபெறுமிக்காலத்திலேனும் யாதவசமூகத்தவர் தங்கள் சமுதாய உட்பிரிவிற்குள்ளேயே விவாகஞ் செய்ய முன் வருவார்களாக?

(தொடரும்.)

ச. செல்லம்,
சுசீந்தரம்.

# திருப்பாணாழ்வார்.

(139ம் பக்கத் தொடர்ச்சி.)

பிராமண முனிவரின் தோள்களிலே பாணர் திகழ்ந்த காட்சியை என்னவென்று சொல்வது! பக்தர்கோஷ்டியிலே தொண்டர் திருக்குலம் என்பது ஒன்று தவிரச் சாதிப்பிரிவினைகளுக்கு எங்கே இடம்?

"குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலம்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

என்றும்,

"குலம் தாங்கு சாதிகள் நாலிலும்
கீழிழிந்து எத்தனை
நலம் தானிலாத சண்டாள
சண்டாளர்கள் ஆகிலும்
வலம்தாங்கு சக்கரத் தண்ணல்
மணிவண்ணற்கு ஆளென்று உள்
கலந்தார் அடியார் தம்
அடியார் எம் அடிகளே"

என்றும் திராவிட வேதம் முழங்கவில்லையா? அன்றியும் ஞானசம்பந்தரின் திருப்பாசுரங்களை மனைவியும் தாமுமாக யாழிலே இசை துக் கானம் செய்துவந்த நீலகண்ட யாழ்ப்பாணரைச் சிவபெருமானின் ஆக்ஞைப்படி கோவிலுக்குள் அழைத்துவந்து தங்கப்பலகையிட்டு வீற்றிருக்கச் செய்ததாகப் பெரிய புராணம் கூறவில்லையா? இத்தகைய நிகழ்ச்சிகளே, பக்திப் பெருமார்க்கத்தின் உயிரு ஒளியுமாய் விளங்கித் தமிழகத்திலே சைவ வைணவ சமயங்களை

நிலைபெறச் செய்தன, முனிவாகனரான பாணாழ்வார் அரங்கநாதன் சந்நிதியைச் சேர்ந்து, திருவரங்கப் பெருநகருள் பள்ளிகொண்டிருக்கும்,

"கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும்நாளே?

என்று தாம் இதுவரை ஏங்கித் தூரத்திலே நின்று, தம் அகக்கண் முன்னே சித்திரித்து உருவகப்படுத்திப் பாடிப் பக்திசெய்து வந்த செல்வரங்கனைக் கண்படைத்த பாக்கியம் பெற்றுக் கண்களாலே கண்டு தரிசித்து "அமலனாதிபிரான் என்ற திருப்பதிகம் செய்து அவனுடைய ரூபலாவண்யங்களிலே பாதாதிகேசமாக ஈடுபட்டுத் துதிசெய்து வாழ்ந்துவந்தார். நாலாயிரப் பிரபந்தத்திலே திருப்பாணாழ்வார் பாடியதாய்க் காணப்படுவன "அமலனாதிபிரான்" என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களேயாகும்.

"அரங்கத்தம்மான் திருக்கமல பாதம்வந்
தென்கண்ணி னுள்ளன ஒக்கின்றதே"

என்று தொடங்கி ஒன்பது ஆசிரியத் துறைகளாலே பாதாதிகேசமாக ஈடுபட்டு வியந்து பாராட்டிக் கலிவிருத்தம் ஒன்றினால்

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள்மற் றொன்றினைக் காணாவே!"

என்று அருளி மேலே சொல்ல இயலாதவராய் அரங்கனின் திருப்புகழ்ப் பாசுரத்தைப் பேரழகுடன் முடித்துவிடுகிறார். "அரங்கத்தம்மான் அரையிற் சிவந்த ஆடையின்மேற்சென்ற தம்சிந்தையைத் திருப்பித் "திருவயிற்று உதரபந்தம் என்உள்ளத்துள் நின்று உலாவுகின்றதே"என்றும்,

"கோரமாதவம் செய்தனன்கொல்! அறியேன்
அரங்கத்தம்மான் திருஆரமார்பதன்றோ அடியேனை யாட்
[கொண்டதே

என்றுமெல்லாம் பாடிப்பரவி வந்தவர் பகவானின் சர்வ சக்தியையும் தம் எளிமையையும் அவன் தம்மை யாட்கொண்ட சௌலப்பியத்தையும் நினைத்தவுடன்

"அண்டரண்ட பகிரங்கத்தொரு மாநிலம்எழுமால் வரைமுற்
உண்ட கண்



என்று கூறுகிறார். அவர்கவிதையிலே காம்பீரியம் பெருகுகிறது. மேலீட்டினால் பெருமிதம்கொண்ட ஆழ்வார்

"செய்யவாய் ஐயோ! என்னைச்சிந்தை கவர்ந்ததுவே என்றும்,
"கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோர்
நீலமேனிஐயோ! நிறைகொண்டது என்நெஞ்சினையே! [எழில்

என்றும் தம் இதயத்தைப் பார்வை மாத்திரையிலே பகவானின் பேரெழில் நலங்களுக்குத் திறைகொடுத்துவிட்டு அழகு தாங்காது ஆற்றுகிறார். பெருமானின் திருக்கண்களின் அழகை அநுபவிக்கத் தொடங்கியவர்

"வதனம் மைதீர் கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்" என்றபடி

அடித்தலங் காணமுடியாத தடக்கண்களிலே அமிழ்ந்து மீள வழியின்றித் திகைத்துப்போய் விடுகிறார். படிப்படியாக வளர்ந்த அவர்கவிதையும்,

"கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடிநீண்டவப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே

என்னுமிடத்து அழகு நிறைந்து உணர்ச்சி பெருக்கெடுத்து உயர் வெய்தி ஒளிவிடுகிறது. விசேஷமான கலைத்திறமாவது கல்விப்பயிற் சியாவது திருப்பாணாழ்வார் கவிகளிலே காணப்படவில்லை. எனினும் பக்திப் பெருங்காதல் மேலீட்டினால் கடவுளின் எல்லையில்லாத அழகுத் தோற்றத்திலே திளைத்துக் கவியுள்ளம் பெற்ற அவர் பாசுரங்கள், குறிப்பிட்ட இடங்களில் மிக உயர்ந்த கவிதையாகப் பரிணமித்துவிடுகின்றன. திருப்பாணாழ்வாரது பெருவாழ்வும் பக்திப் பெருங்கவியும், பண்டைத் தமிழ் மாலுமிகளுக்கு நடுக்கடலிலே தனித்துணையாக மிளிர்ந்த துருவ நட்சத்திரங்கள் போன்று, தமிழர் புது வாழ்விலே தோன்றிய யாதவ குல மக்கள் முன்னேற்றமடைய வழிகாட்டியாக ஒளிருமாக.

தா. ந. கோபால், (யாதவன்,)
பூதப்பாண்டி.

# பெண்கல்வி அவசியமா?

‘எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவிதான் யாதினுமரிதரிதுகாண்’ என்பதுபோல் எல்லாம் வல்ல இறைவனருளால் அருமையினுமருமையான இம்மானிட ;உடலத்தைப் பெற்ற நமது மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்புலன்களும் தாம்தாம் இச்சித்த வழிகளில் இழுத்துச்சென்று அந்தகாரத்திலாழ்த்தி மக்களாகிய நம்மை மாக்களாக (மிருகமாக) மாறுபடுத்தி விடாதபடி தடுப்பது நம் பெருங் கடமையன்றோ? இக்கொடிய ஆபத்திற்காளாகாமல் நாம் சதுர்வித புருடார்த்தங்களையடைந்து சற்குணசீலர்களாய் விளங்கவேண்டுமாயின் கல்வியையே கருந்தனமாகக்கருதிக் கற்றல் வேண்டும்.

கல்வி மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாததோர் பொக்கிஷமாகிறது. “அறப்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும் • உறுங்கவலொன்று உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை” என்றார் ஒரு பெரியாரும். மானிடர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு பேதமுண்டு கற்றவர்க்குங் கல்லாதவர்க்கும்; இதுபற்றியே திருவள்ளுவரும்:

“விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்” என்றார்.

பெற்றோர் தம்மக்களுக்கு வேண்டிய கல்வியளிக்காது திரவியத்தை மாத்திரம் தேடிவைப்பது நல்லறிவில்லாத பித்தனுக்குக் கொலை செய்தற்கு வேண்டிய வாளாயுதத்தைக் கொடுப்பதொக்கும்.

“கலைபயிற் றுறுதுகா தலர்க்கு மாநிதி
நிலையென வளித்திடல் நெறியில் பித்தர்க்குக்
கொலை செய்வா ளீவதுங் குழவி தன்னைமா
மலையி னோர்த்து வைப்பது மானுமே” என்பது காண்க.

கல்வியின் பெருமையை இன்னும் எழுதினால் விரியும்.

ஜீவராசிகளுக்குக் கஷ்டநஷ்ட முதலிய இன்னல்களை விளைவிக்காது சன்மார்க்கத்தில் பொருள்தேடிப் பொருளற்றோர், உதவியற்



றோர், உணவற்றோராகிய பல்லோரனைவருக்கும் இனிய மொழி கூறி அறத்தினைப் புரிந்து இறைவனை இடையறாது வழுத்தி இல்லற தருமத்தை இனிது நடத்த, நற்குண நற்செய்கைகளையும், கற்பெனும் கலங்கா நிலைமையையும் அணிகலமாகக் கொண்டுள்ள பெண்மணியைப் பாரியாளாகக் கொள்ளுவது மிகவும் அத்யாவசியமன்றோ? அப்படியானால் பெண்களுக்கு இப்பெரும் இல்லறத்தைச் சரிவர நடத்தப்போதிய ஞானம் உண்டாவதெப்படி? கல்வியின் வளர்ச்சியாலல்லவோ?

பெண்களுக்குக் கல்வி அவசியமென்று சிலர் ஒப்புக்கொண்டாலும் அநேகர் பெண்கள் படித்து என்ன உத்தியோகஞ் செய்யப்போகிறார்களென்றும், அவர்கள் படித்தால் புருஷனுக்கு அடங்கி நடவாது கர்வத்தினால் கெட்டுப்போவார்களென்றும் பறை சாற்றுகின்றனர். தெய்வபக்தியும், விவேகமும், நற்குணங்களும், உலக ஞானங்களும் பெறுவதற்காகக் கல்வி பயில்வதல்லாது உத்தியோகத்திற்கன்று. பழங்களுக்காக வைக்கும் விருக்ஷம் நிழல் முதலியவை கொடுத்துதவ வில்லையா? பானத்திற்காக வெட்டுங் குளம் ஸ்நாநம் முதலியவற்றிற்கும் உதவவில்லையா? அதுபோல அறிவின் அபிவிர்த்திக்காகக் கற்குங் கல்வி உத்தியோக முதலியவற்றிற்கும் சாதனமாகிறதேயன்றி படிப்பதற்கு உத்தியோகமேகாரணமன்று. பெண்களுடைய மனமும்,' புருஷர்களுடைய மனமும் ஒத்திருப்பதால் பெண்களுக்கு மட்டும் கல்வி கற்பிக்காவிட்டால் அவர்களுடைய சித்தம் எவ்விதத்தில் நன்மார்க்கத்தில் நடைகொள்ளும்? “புல்லுண்ணாத பசுவும் வேண்டும் பூரணமாகக் கறக்கவும் வேண்டும்” ‘காசுக்கொரு குதிரையும் வேண்டும், காற்றைப்போல் பறக்கவும் வேண்டும்’ என்பதுபோல் பெண்கள் படியாத மூடர்களாயிருக்கவும்வேண்டும் உத்தமிகளாய் நடக்கவும் வேண்டுமென்றாலெப்படியாகும்?

பெண்கள் கல்விகற்பதினால் அவர்களுக்குப் பதிவிரதாதர்மம் முதலிய நற்குணங்கள் மென்மேலும் அதிகரித்துப் புருஷன்மீது உண்மையான உருக்கமான காதல், பக்தி, விசுவாசம் முதலியவைகள் உண்டாகுமென்பதில் யாதொரு ஐயமுண்டோ? அவர்கள் புருஷத் துரோகிகளாவார்களென்பது குறுகிய புத்தியினரின் கொள்கையாம். புருஷர்களில் சிலர் உயர்தரக் கல்வி கற்றும் நற்குணமுண்டாகாமல் கற்றதனால் கர்வங்கொண்டு தாய் தந்தையர்

பெரியோர் முதலியவர்களைப் பொருட்படுத்தாது யாவரும் ஒப்புக்கொள்ளத்தகாத காரியங்களைச் செய்வதைக் கண்டு 'அவன் இன்னும் படித்தும் முட்டாளாயிருக்கிறான்' என்று நீங்கள் சொல்வதில்லையா? சிலர் கற்றும் தாய் தந்தையர்மீது அன்பு இரக்கமில்லாது கிழோராகக் கருதுவதும் சகஜமாயிருக்கிறதல்லவா? இவர்கள், "சினமிறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும், மனமிரக்கமில்லார்க்கு வாயேன் பராபரமே" என்றபடி ஆண்களும் கல்வி பயின்றும் பிரயோஜனமடையாமற் போவதுபோலப் பெண்களிலும் சிலர் இருப்பது கூடாதோ? அப்படியானால் ஸ்திரீகளுக்குக் கல்வி கூடாதென்று சொல்வது தர்மமா? சகோதரர்களே சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

சில சமயங்களில் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும்போது பால் புரையேறித் திடீரென்று பிள்ளை இறந்துபோவதால் பொதுவாகப் பிள்ளைகளுக்கே பால் கொடுக்கக்கூடாதென்று கூறலாமா? அதுபோல கல்வி பயிலுவதால் ஆயிரத்திலொருபெண் அகங்காரங்கொண்டு கெட்டுப்போனால் மற்ற பெண்களும் படிக்கக்கூடாதென்று கூறுவது நியாயமாகுமா? மத்தியான காலவெயில் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது காமாலைக் கண்ணின் குற்றமேயன்றி வெயிலின் குற்றமாகுமா? சர்க்கரை கசப்பது வாய்க் குற்றமேயன்றிச் சர்க்கரையின் குற்றமா? குறுணி மையிட்டாலும் குருட்டுக்கண் நல்லகண்ணாகாது போலவும் சிலர் படித்துந் திருந்தாமலிருப்பது இயற்கைத் துற்குணமேயன்றிக் கல்வியால் வந்த குற்றமன்று. கல்வியைக் கற்கும்பெண்ணின் கற்பானது திருந்தி வளருமல்லாது கெட்டுப்போகாது. அப்படிக் கெட்டுப்போகுமென்று கூறுதலானது சாகும் உயிரைத் தடுக்கச்செய்யும் தேவாமிர்தத்தை மானிடர் அருந்தினால் உயிர் விடுவார்களென்று சொல்லுவதற்குச் சமானமென்று பின் வரும் செய்யுளால் இனிது புலனாகிறது.

"பொருந்துநற் கலைதெரி பூவை கற்பது
திருந்தியே மிகுமலாற் றேய்ந்துபோ மெனல்
வருந்திடா துயிர்தரு மமுதை மானுடர்
அருந்திடிற் சாவரென் றுரைத லொக்குமே"

பூகோள சாஸ்திரமுதலிய நூல்களையும், ஞானத்திரட்டு முதலிய நூல்களையும் படியாவிட்டால் இறைவனின் உண்மையான பெருமையும், சர்வசக்தியும், மகிமைப் பிரதாபமும் பெண்கள் அறிவதெப்படி?



பொதுவாக நம் யாதவகுல மக்களில் படித்தவர் மிகக் கொஞ்சம். அதிலும் மாதர்கள் மிகவும் கொஞ்சம். நம்குல மாதர்கள் கற்றதனாலாய பயனை யடைவதிலும் அவர்கள் குழந்தைகள், அறிவாளிகளாகவும் சர்ச்சனர்களாகவும் ஆவதற்கு ஏதுவாயிருக்கின்றனர். ஆதலால் இவர்கள் கல்வியபிவிருத்தியில் நம் யாதவ சமூகத்தார் முன்னேற்றம் சார்ந்திருக்கிறதென்று கூசாமல் கூறலாமல்லவா? "நான் இந்த நிலைமையை அடைந்ததற்கு என் நற்றாயே காரணம்" என்று உலகப்பிரசித்திபெற்ற நெப்போலிய வீரன் கூறியிருக்கிறான். நானும் என் விஷயத்தில் அப்படியே கூறுகிறேன். "தாயின் இருதயமே குழந்தையின் கல்விச்சாலை" "பிற்காலத்தில் தன் குழந்தையின் தலைவிதியை எழுது'கிறவள் தாயேயன்றி வேறொருவருமில்லை" என இரு மேதாவிகளும் கூறியிருக்கின்றனர். "நூலைப்போல சேலை; தாயைப்போல பிள்ளை" ஆதலால் நம் குல மக்கள் கல்வியிலும், அறிவிலும் சன்மார்க்கத்திலும், வீரத்திலும் மேம்பாடடைந்து உலகுக்கு உதாரண புருஷர்களாய் விளங்க வேண்டினால் அவர்களை அருகிலிருந்து வளர்க்கும் அவர்கள் தாய்மார்களாகிய நம் குல மாதர்கள் கல்வி கற்றிருப்பது அவசியமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆதலால் யாதவகுலப் பெண்மணிகளே! நம் யாதவகுல சிரோன்மணிகளே! நம் யாதவகுலப் பெருமை என்றுந் தழைக்க உங்களுக்கு உரோசமிருப்பின் ஆண்களைப் போலவே நீங்களும் கல்வி பயில முற்படவேண்டும். நீங்கள் கல்வியில் முன்னேற்றமடையாவிட்டால் எத்தனை மகாநாடுகள் கூடினும் நம் குலம் முன்னேற்றமடைவது கஷ்டமே. உலகம் நாகரிகத்தில் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வரும்போது நீங்களும் மற்ற மாதர்களைப்போல் கல்வி கற்றாலன்றிச் சுய உரிமைப் போட்டியில் உங்களுக்கு இடமிராது. சகோதரிகளே! "பெருக்காறிடிகரை யொத்தது இளமை இடிகரையொத்தது வாழ்நாள்" ஆதலால் நம்குலப் பெண் மக்கள் யாவரும் தம்தம்மாலியன்ற கல்விகற்று நம் யாதவ குலத்தைப் பெருமைப்படுத்தமுன்வர எல்லாம்வல்ல இறைவனருள்புரிவானாக.

கு. கோ. கிருஷ்ணன்.
B· Sc (Hons).

# வள்ளல்பாரி.

(1-வது தொகுதி 4-வது பகுதி 120ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பறம்பு நாட்டிற்குத் தலைநகரம் "பறம்புமலை" (அது இற்
றைக்குப் "பிரான்மலை" என வழங்கப்படுகிறது. மதுரைமா நக
ருக்கு வடகிழக்கில் நாற்பது மைல் தூரத்தில் உள்ளது.) இப்
பறம்புநகரானது, இந்திரன் அரண்மனையே போன்று பல இராஜ
மாளிகைகளாலும், தேவாலயங்களாலும், செழிப்புடன் வாழுங்
குடிகளைக்கொண்ட அழகிய தெருக்களாலும், இரதம், கஜம், துர
கம், பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளின் செறிவாலும்,
தெய்வச்சிறப்புக்களாலும், திருமணச் சடங்குகளாலும் வெண்ணில
வைத் தாவும் மேல்மாடத்திருந்து நுண்ணிடை மாதர்கள் கூடிக்
கண்ணினாற் காண்பதற்கு அழகாகிய மேன்மை பொருந்திய மெல்
லிய இழைகளாக வரும்படி இடக்கையிற் பஞ்சைப் பிடித்து இராட்
டினத்தில் வைத்து வலக் கையினால் இராட்டினத்தைச் சுழற்றவுண்
டாகும் இராட்டின ஒலியும் கோகுல மாதர்கள் விடிய ஒரு சாமத்
தில் எழுந்து ஸ்நானஞ்செய்து திருமண் காப்பிட்டுப் பக்திசிரத்தை
யோடு அஷ்டாக்ஷரத்தை ஜெபித்து ஆயர்குலக் கோமானாகிய ஸ்ரீ
கண்ணனைத் தொழுது பாகவத புராணம், பகவத்கீதை முதலிய நூல்
களைப் படித்துத் தர்மதேவதையாகிய பசு தரிசனம் செய்து தூய
தயிர்கடையுமோசையும், அப்பெண்கள் கோவிந்தநாமசங்கீர்த்தனஞ்
செய்து, பால்கறக்கும் அதிர்ச்சியும், தேவருலகில்வசிக்கும் தேவர்
களை அன்புடன் அழைப்பதுபோலவும், பக்திமேலிட்ட ஓர் உத்தம
பாகவதன் தனது அழகிய வாயைத் திறந்து பகவந்நாமோச்சாரஞ்
செய்வது போலவும், "ஓம்" என்ற "பிரணவமந்திரம்" ஒலித்துக்
கொண்டிருப்பதனாலும், இந்நகரமக்கள் மட்டுமல்ல, இந்நாட்டுமக்க
ளெல்லோரும் பசி, பிணி வறுமை, துன்பம், பிறர்க்கு இன்னல்
செய்தல் முதலியவைகளைக் கனவிலுமே தெரியாது, இன்சொல்,
அன்புடைமை, பிறர் துயரந் தீர்த்தல், பகைவனுக்கருள்தல், விருந்
தினரை எதிர்கொண்டழைத்து உபசரித்தல், பெரியோர்கட்கு
வணங்கி நடத்தல், நிமிஷமும் கண்ணபிரானை மறவாதிருத்தல்
பக்ஷந்தோறும் வரும் ஏகாதசி விரதமிருத்தல் முதலிய நற்குணங்
களினாலும், தான தருமங்களினாலும், ஞான விசாரணையினாலும்,
மேன்மை பெற்று விளங்குவதாகும்.



இத்தகைய சிறப்புவாய்ந்த நகர்க்கு அரசனே, இற்றைக்கு ஆயி
ரம் ஆண்டுகட்கு முன்னிருந்து, உலகமுழுதும் பரவிய தன் கீர்த்தி
யாற் சிறந்தவனும், செல்வத்திலும், தெய்வபக்தியிலும், உயர்ந்தவ
னும், மேன்மையாகக் கூறப்படுகின்ற போரில் வெற்றிகொள்ளும்
யுத்தத்திறமை வாய்ந்தவனும், பரிசுத்தமான வாசனைபொருந்தி
வண்டுகள் மிகுதியாக மொய்க்கப்பெற்ற முல்லை மலர் மாலையையும்
வாகைமலர் மாலையையும், நீங்காது தரித்த மார்பையுடையவனும்
இரவலர்க்கு மேகத்தைப்போன்று குறிப்பாலறிந்து குற்றமற்ற
தானத்தைக் கொடுத்தலினாலும், பகைவருக்கு, "யம"னென்று
சொல்லும்படியான கூரிய வேலாயுதத்தையும், கோதண்டத்தை
யும் காண்டிபத்தையும் நிகர்த்த நீண்ட பெரிய வில்லையும் ஏந்திய த
னாலும், சிவந்த கையை யுடையவனும், படைவலியை அடக்கும்
மலைகளெனத் திரண்ட தோள்களையுடையவனும், வண்மையால்
இம்பர் நாடெல்லாம் பெருங் கீர்த்தி விளைவித்தவனும், யாதவகுல
வழித் தோன்றலுமாகிய, வள்ளல் பாரி என்னும் மன்னன்.

(தொடரும்)

காந்திதாசன்,
பர்மா.

# ஏறு தழுவுதல்.

(தொழுமாடு பிடித்தல்)

பண்டைக்காலத்து இத்தண்டமிழ்நாட்டுமக்களிடத்துச் சிறந்து
விளங்கிய வீரச் செயல்களுள் ஏறு தழுவுதல் என்பது ஒன்றாகும்.
இது, அக்காலத்து ஒரு விழாவாகவே கொண்டாடப் பெற்றுள்
ளது. பாரத காலத்துக் கண்ணபிரான் நப்பின்னையாரை ஏழு ஏறு
களைத்தழுவி மணந்திருப்பதனையும், சங்கத்து நூல்களில் இவ்வேறு
தழுவல் குறிக்கப்படுவதனையும் அறியவல்லார்க்கு இதன் பழை
மையை எடுத்துரைக்க வேண்டா. இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டுக
ளாகத் தொடங்கி வரும் இது, காலந்தோறும் பிறழ்ந்தும் குறைந்
தும் வந்திருப்பினும், இன்றும் நமது நாட்டுப்புறத்து ஊர்களில்
ஒருவாறு நடை பெற்று வருகின்றது. நாட்டுப் புறங்களில் இவ்
வேறுதழுவற் கிளர்ச்சிகளை, முன்பனிக்காலமாகிய மார்கழி, தைத்
திங்கள்களில் நாளைக்குங் காணலாகும். இக் கிளர்ச்சி மேற்குறித்த

படி முன்பனிக்கால முழுவதுங் காணப்பெறினும், தைத்திங்கள்
மூன்றாம் நாளில், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வீட்டிலும் இவ்
விழா நிகழக் காணலாகும். அண்மையில் நிகழவிருக்கும் இவ்விழா
வின் நினைவே, இக்கட்டுரையினை இன்று எழுதத் தூண்டிற்று. பண்
டைக்காலத்தே ஐந்திணை மக்களுள் ஒருவராய ஆயரிடத்தே மட்
டும் நிகழ்ந்துவந்த இது, இக்காலத்திலோ எத்திறத்தாரிடத்தும்
ஒப்ப நிகழக் காணப்பெறுகின்றது. இவ்விழா, பண்டை யாதவமக்
களின் அரிய செயல்களுள் ஒன்றை நமக்கு நினைவூட்டிப் பெருமிதம்
ஊக்கம், வீரம் முதலியவற்றை விளைவிப்பதொன்றாகும். இவ்விழா
வினைப்பற்றிய பண்டைய நிகழ்ச்சிகள் முல்லைக்கலி, சிலப்பதிகாரம்
என்னும் நூல்களிற் காணுமாறு, நூல், உரைகளைப் போற்றிச்
சிறிது எழுதப்படுகின்றன.

'தென்னவன்—தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாயர்' 'இருங்குடி யாயர்' என்றெல்லாம் தொன்னூல்
களிற் சிறப்பிக்கப் பெறும் ஆயர் குடியினர், தங்கள் பெண் மக்க
ளுக்குத் தக்கவாறாகிய வீர மணமக்களைத் தேர்ந்துகொள்ளுதற்கு,
மணத்தேர்தலாக (கன்னியா சுல்கம்) இந்த ஏறு தழுவலைக் கை
யாண்டு வந்தனர். இவ் ஆயர்குடியில் ஒரு பெண்மகவு பிறந்தால்
அதே காலத்து அக்குடியினர்க்கு உரிமையான பசுக்கூட்டத்துள்
பிறந்துள்ள ஆண் இளங்கன்றுகளைத் தம்மூட்டாகத் தம் போக்காக
விட்டு வளர்த்துவந்து, தம்மக்களின் மணப்பருவத்தே இக்காளை
களைத் தழுவி வலியடக்குவானுக்கு அம்மகளை மணஞ்செய்து தரு
வது அவர்கள் வழக்கம். இக்காலத்தே இதனை மணத்தேர்தலாகக்
கொள்ளுவதின்றெனினும், சில அரிய பணையங்கள் வைத்தேனும்
நடத்துவர். (இக்காலத்தும் மைத்துனக் கேண்மையிடத்தே, தங்
கள் ஏற்றினைப் பிடித்தற்கு இயலுமா என்ற வினாவும், பிடித்தால்
நும்பெண்ணை மணஞ்செய்து கொடுப்பீரா என்ற விடையும் விளை
யாட்டாகக் கூறப்படுதலைக் காணலாகும்.)

இவ்விழா ஆண்டுதோறும் குறித்த சில காலங்களிலாவது,
ஆயர்மகளொருத்தியை மணம் விரும்பினவன், உரிய ஏற்றினைத்
தழுவ முன்வந்து வேண்டிக்கொள்ளுங் காலத்திலாவது நிகழும்.
ஏறுகட்கு உரியோரும், தழுவுவோரும் ஆகிய ஆயர்கள் பிடவம்
செங்காந்தள், காயா, கொன்றை, வெட்சி, முல்லை, கஞ்சங்
குல்லை (கஞ்சா) குருந்து முதலிய மலர்களாலும், கொத்துக்களா



லும் ஆகியமாலை, கண்ணிகளைத் தரித்துச் செந்துவராடையராய்த்
திரண்டு கூடுவர். முல்லை நிலக் கடவுளாகிய மாயோனையும், அவ்
வவ்வூர்த் தண்ணீர்த் துறைகளிலும், ஆலமரம் மராமரங்களின்
கீழுமுள்ள தெய்வங்களையும் பரவித் தத்தம் அலுவல்களை மேற்
கொள்வர்.

இவ்வாயர் குல மகளிர் முல்லை நிலத்திற்குச் சிறந்த 'குடிப்
பிறப்பும் கற்பும்' முதலாய உயர் சிறப்புக்கள் உடையவர். "விரிநீ
ருடுக்கை யுலகம் பெறினும்—அருநெறி யாயர் மகளிர்க்கு இரு
மணங் கூடுத லில்லியல் பன்றே" என்று பாராட்டுபவர். தாம்
தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலொடு காமன் கோயி
லிலே செல்லின்; அக்காமனும் நெஞ்சழிந்து தன் கையிற் படை
யைக் கீழேபோகட்டு மயங்குதற்கேற்ற பேரழகினர்; "கொலை
யுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி—யினைவனப்பின்
மாயோய் நின்னிற் சிறந்தார்—நிலவுலகத் தின்மை தெளிநீ" என்
றெல்லாம் பாராட்டப்படுபவர்; பூங்கரை நீல ஆடைநிலந்தாழ
உடுத்து மயிலொடுமாறுகொளுஞ் சாயலவர்; குயிலொடு மாறு
கொள்ளும் கொம்பனார்; 'மாணவுருகிய நன்பொன் மணியுறீஇப்
பேணித் துடைத்தன்ன மேனியர்.'

தொன்றுதொட்டுவரும் மிக்க திருவினராகவும், தன் முயற்சி
யாலீட்டும் பொருளினையே துய்த்து மகிழ்பவர்; இதனை ஒரு சிறுமி
மணல்வீடு கட்டி விளையாடுங்காலை, ஒரு சிறுவன் போந்து நல்லாய்
யானுங்கட்டித் தருவனெனக்கூறிக் கட்டப்புக, எம்போல்வாரை
மணந்து ஒரு இல்லமைத்து அறம் நடாத்தும் தன்முயற்சியிலாகிய
நீயோ எனக்கு வீடுகட்டித்தருவது! என்று நகையாடிக் கூறிய,

"முற்றிழை யேர்மட நல்லாய்நீ யாடும்
சிற்றில் புனைகோ சிறிதென்றான்; எல்லா நீ!
பெற்றேம்யா மென்று பிறர்செய் யில்லிருப்பாய்
கற்றதில்லை மன்ற" என்ற முல்லைக்கலி

யான் உணர்தலாகும். இங்ஙனம் இவ் வாயர் மகளிடத்துக் காண
லாகும் உயர்குணங்கள் மிகப்பல. இன்னவர் தத்தம் காதலர் தழு
வும் காட்சியினைக்காண வந்தீண்டுவர். இம்மகளிர்கள் நன்கணம்
வீற்றிருந்து காணப் பக்கலில் பரண் அமைக்கப்பெற்றி

இவ்வேறுகள், வானினிடத்து விரிந்த திங்கள்போலவும், திருமாலினிடத்துள்ள சங்குபோலவும் அழகிய நெற்றிச் சுட்டியையுடைய-கரிய நிறமுடைய-காரிகள்; கரிய மஞ்சு சூழும் மலையிடத்து நின்றும் வீழ்கின்ற அருவிகள் போல அழகிய வெள்ளைக் கால்களையுடைய காரிகள்; பலராமன் திருமார்பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்டகொடி மறுவினையுடைய வெள்ளைகள்; விண்மீனுடன் விளங்கும் செவ்வானம்போல அழகிய வெள்ளைப் புள்ளிகளையுடைய—சிவந்த நிறத்தனவாகிய—சேய்கள்; சிவபெருமான் திருமிடற்றின்கட் டோன்றும் கருமைபோலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும், உயர்ந்து வளர்ந்த திமிலி (கொண்டையி) னையுமுடைய கபில நிறத்தனவாகிய-குரால்கள்; விளக்கமாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளிகளையுடைய வெள்ளைகள்-என இவ்வாறு பலவகைப்படும் உருவச் சிறப்பினவாகும். மதம்பொருந்திய களிற்றினும் மிக்க அஞ்சாமையை யுடையன; இடையறாது காலாலே தரையினை வெட்டித் தூளி எழுப்புவன; கொம்பாலே குத்திக் கோட்டுமண் கொள்வன; ஒன்றோடொன்று தாக்கியும், மீண்டும், அடியால் மண்ணைப் பறித்தும், கூறிய கொம்புகளாற் குத்தியும் பொருதுகொண்டிருப்பன; மெய்யினின்றும் வடிகின்ற குருதியால் மூடப்பெற்றுச் சிவந்த மேகங்கள் போல்வன. அவற்றை அவ்வவற்றிற்குரிய ஆயர்கள் பிடித்துப் பரமன் கணிச்சிப்படையென, முள்ளின் முனையெனக் கொம்புகளைச்சீவி, வழுக்குமாறு நெய் தடவி, சீராட்டித் தொழுவினுட் கொண்டுய்ப்பார். இவை கூற்றுவனையும் அவன் ஏவலரையும் ஒப்பச் சினந்து, மருண்டு, சுழன்று, கொண்டிருக்கும்.

குறித்த நேரத்தே பறையும், கொம்பும், முழவும், பிறவும் இணைந்து இடிக்கூட்டமென இயம்பும். இந்நிலையில் தொழுவினைத் திறந்து வைப்பர். ஏறுதழுவுவோர் தாம்தாம் குறித்த ஏறுகளின் மீது புலியெனப் பாய்ந்து பிடிப்பர். உடன் பெரும்போர் நிகழும்.

# ஞான கலா விலாசம்.

கேசவனையே செவிகள் கேட்கத் திருவரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக—கேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய்

(திருவரங்கக் கலம்பகம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் பஞ்சேந்திரியங்களுள், கண் எம்பெருமானையே தரிசிப்பதும், மூக்கு அவன் சூடிய துளவத்தையே மோப்பதும், கை கால் முதலிய உறுப்புகளையுடைய மெய் அவனைத் தொழுது வணக்கஞ்செய்வதும்; ஆக இவ்வாறு இவ்வைம்பொறிகளும் பகவான் விஷயத்திலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும். சர்வேஸ்வரனது நினைவையே அனைத்தினும் கொள்வதாயின் நமது அகம் நிர்மலமாகும். ஸகல போக பாக்யங்களும் வித்தியாகும். ஆதலின் "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள" என்றவாறு கேவலம் சிற்றின்பத்தே ஐம்பொறிகளையும் செலுத்தி உழன்று அழியாது "உண்ணுஞ்சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே" எண்ணி, இகத்திலும் பரத்திலும் சுகமடைந்து பேரின்பப்பேற்றை அடைதற்குச் சாதன மூர்த்தியாகிய ஆதிநாதன் பாதகமலங்களை என்றென்றுந் துதிப்போமாக.

## "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேதுக்கு"

பண்டைக்காலத்தில், பெண் மக்கள் கல்வியறிவு மிகுதியும் வாய்க்கப்பெற் றிருந்தனரென்பது நமது பழைய நூல்களால் நன்கு விளங்கும். இடையே நாகரிகம் மேலிடப் பெண்களுக்குக் கேடுவிளைப்பது கல்வியே யெனக்கருதி அதனை விலக்கினர்போலும். நம் நாட்டில் பெண்கள் குழந்தைப்பருவந்தொட்டே உபேக்ஷிக்கப் படுகின்றனர். பெரும்பாலும் அநேககுடும்பங்களில் ஆண்குழந்தை பிறந்ததென்றால், வெகு ஆடம்பரங்கள் செய்வதுண்டு. பெண் பிறந்தால் 'ஐயோ நம்துரதிர்ஷ்டம் பெண்ணாச்சே' என மனதில் சிறிது கவலை கொள்வர். மேலும் ஆணுக்கு ஐந்தாம் வயதில் அக்ஷ

ராப்பியாசம் செய்வர். பெண்ணுக்கோ கல்வி அவசியமில்லையே,
'அடுப்பூதும் பெண்ணிற்குப் படிப்பேதுக்கு' எனும் வாசகத்தைக்கூறி,
எழுத்து வாசனை யின்றித் தடுக்கின்றனர். இஃது சரீரத்தில் பாதி
யை அலங்கரித்துப் பாதியில் ஆபரணமின்றி விடுத்தலொக்கும்.
ஸ்திரீகளே தம்தம் கணவருக்குக் கௌரவத்தையும், நற்பெய
ரையும் அளிப்பவராவர். ஆதலான் ஒரு தேயமோ, நாடோ, சமூ
கமோ முன்னேற்ற மடையவேண்டுமானல், ஜனத்தொகையில்
பெரும்பாலும் மிகுதியாயுள்ள பெண்மக்கள் முதலில் கல்வியிலும்,
அறிவு ஒழுக்கங்களிலும் முன்னேற்றமடையவேண்டும். "அன்னை
தயையும் அடியாள் பணியும், பலர்ப் பொன்னினழகும், புவிப்
பொறையும், விறன்மந்திரி மதியும், பேசில் இவையுடையாள்
பெண்" என்றபடி இவைகள் யாவும் ஓர் பெண்ணிற்கு வாய்க்கப்
பெறவேண்டுமானல் அவர்களுக்குக் கல்வியறிவின்றேல் எங்ஙனம்
அமையும்? ஆதலால் பெண்களுக்கும் ஆண்களைப்போல் கல்வியபி
விருத்தியால் சமவுரிமை கொடுப்பது மிகவும் நன்மையானதாகும்.

(தொடரும்)

திரு. ஐயன்பெருமாள்,

யாதவன்.

---

# லீலாவதியின் நிருபம்.

---

## ("இல்வாழ்க்கைக்கின்றியமையாத முறைகள்".)

என் ஆருயிரனையதங்கை ரங்கநாயகிக்கு சேஷசயனனை திரு
மால் அருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாவதாக. யான்
உனக்கு முன்னமே தெரிவித்திருந்தவாறு குலமகளிரின் மேம்பா
டான வாழ்க்கையை எனக்குத் தெரிந்தவரை இந்நிருபத்தில் எழுத
லானேன். நான் சொல்லப்போகும் முறைகள் யாவும் நம் மூதா
தையர் காருண்ய சிந்தையோடு கூறினவையேயாம். மிகச் சுலப
மான இக்கொள்கைகளை மேற்கொண்டொழுகி, அவனியில் சிறந்த
வளாயும், பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாயும், இருக்கும்படிக்
கும்; நீயும் நின் கணவனும் இல்லறத்தை நன்கு நடத்தும்படிக்கும்



யான் எல்லாம் வல்ல பரஞ்ஜோதியாகிய, கருணைவள்ளல் கண்ணன்
மலரடி போற்றுகின்றேன்.

இனி இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத முறைகளைச் சொல்
கிறேன். குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதலேயாம்;
ஆகையால் குலமகளாகிய நம்மவர், அதனை மேற்கொண்டொழுக
வேண்டும். அதனாலன்றோ தெய்வப் புலமை வாய்ந்த திருவள்
ளுவரும் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்"
என்று கூறியிருக்கின்றனர். ஆகவே நீ உன் கணவனைத் தவிர வேறு
தெய்வம் இருப்பதாய்க் கருத வேண்டாம். அவனே தாய், தந்தை,
சுற்றமும், மற்றுமுள்ள தெய்வமும். அவனுக்கு இயற்றும் திருப்
பணிகளே, தேவபூஜையாம். ஆகையினால் நீ உன்கணவனிடத்து
மாறாத அன்புடையவளாயும், பக்தியுடையவளாயும் இருக்கக்
கடவை. வீட்டின் காரியங்கள் அனைத்தையும் செய்துமுடிப்பதில்
சாமர்த்தியம் உடையவளாயும், உனது கேள்வன், அழகு, செல்
வம், அறிவு நல்லொழுக்கம் இவைகள் இல்லாதவனாய் இருப்பினும்
கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருடன் என்பதை
அறிந்து அவனுக்கு உற்ற துணைவியாய் இருப்பாயாக.

அநுதினமும் நீ உன் கணவன் எழுந்திருப்பதற்கு முன்னால்,
வெள்ளி உதயமாகும் நேரத்தில் எழுந்து, உனது தெய்வமாகிய
உன் கணவனை வணங்கி எழு. பின் உன் வீட்டைப் பசுஞ் சாணம்
கொண்டு மழமழவென மெழுகி, அரிசிமாக் கோலமிட்டு, உன் இல்
லத்தை இலக்குமிக்கு உறைவிடமாகும்படி செய்துகொள். பிறகு
சமையலுக்கான பாத்திரங்களைச் செவ்வனே துலக்கி அவைகளை
வைப்பதற்கான இடத்தில்வைத்துவிட்டு; நீ மனசுத்தையாய் நறு
மஞ்சள் அரைத்துத் தேய்த்துக்குளித்து நெற்றியைப் பாழடைந்து
போகவிடாமல் திலகமேனும், ஸ்ரீ சூர்ணமேனும் அணிந்து
கொண்டு சமையல் அறைக்குள் நுழைவாயாக. உனது கணவன்
ஜீவன நிமித்தம் செல்லும் வேலைக்கு உன்னால் ஓர்வித பங்கமும்
நேரிடாதவண்ணம் சரியான காலத்தில் உண்டிகளைப் பக்குவம்
செய்து காலாகாலத்தில் அவ் வறுசுவை உண்டிகளை உனது கை
யால் உனது கணவன் மகிழும்படி இட்டு அவனைத் திருப்திசெய்து
அனுப்பிவைப்பாயாக. உனது வீட்டை இலக்குமி கடாக்ஷத்திற்
கேற்றவாறு செய்ய உன்னாலேயே முடியும்; ஆகையால், இல்லா

ளாகிய நீ மனைவாழ்க்கைக்கு ஆவனவற்றை உன்கணவனிடம் கூறிப்
பெற்று விருந்தினரைப்பேணி, குடித்தனம் செய்தலும், நற்குண
நற்செய்கைகள் பூண்டவளாயிருத்தலும் உனக்கு மாட்சியாகும்.

கணவன் விருப்பப்படி நடந்து அவன் விரும்புகின்றவற்றைச்
செய்யவேண்டும். "பெண்டிர்க்கழகு எதிர்பேசா திருத்தலாம்"
என்றபடி நீ குடும்பத்தில் உன் கணவன், மாமனார், மாமி
யார் முதலிய யாவரிடத்தும், எதிர் பேசாது கீழ்படிதல் நலம்.
ஆகவே நீ அவர்களது குணதிசயங்களை நன்கு அறிந்து அவற்றிற்கு
ஏற்க நடந்து அவர்களை மகிழ்வித்து 'நல்லபெண்; குலத்தை விளக்க
வந்த கோமளாங்கி' என்ற புகழ் மொழியை அன்னாரிடமிருந்து
பெற்றுக்கொள். பெண்களுக்குத்திருமணம் நடந்தேறியது முதற்
கொண்டு கணவரது பெற்றோரும் உற்றோருமே உனது தாய்தந்தை
ஆவார். மற்றுமுள்ள சுற்றமும் கணவனிடத்தில் பக்தியும், கபட
மின்மையும், மாமியார் மாமனிடத்து அளவிறந்த அன்பும், வணக்
கமும், வேலையிற் சுறுசுறுப்பும், தாட்சண்யமும் கணவரது மித்திரரி
டத்துப்பரிவும், கீழ்ப்படிதலும் வேண்டும். எவ்விதத்துன்பங்கள் வந்
தபொழுதும் உன் முகமானது புன்னகை மிளிர்ந்து இலக்குமி
தேவிக்கு உறைவிடமாய் இருக்கட்டும். மேலும் புருடனைப் போஷிக்
கும் விஷயத்தில் தாயைப்போல் இருக்கவேண்டும்; அதனாலன்றோ
'தாய்க்குப் பின் தாரம்' என்றார் பெரியோர். அவனுக்குப் பிரிய
மான வஸ்துக்கள் உனக்கும் உகந்ததாயிருக்கட்டும். நீ அவன்
தேகநிலைக் கேற்றவாறு தீஞ்சுவையுள்ள உண்டிகளை அளித்துத்
தேகக்காப்புக்கான வேலைக்கு அவன் சென்றபின். மாமனார், மாமி
யார், கொழுநர் இவர்களை உண்பிக்கச் செய்து, பின்னர் நீ உண்டி
கொள்ளலை மேற்கொள்வாயாக.

வேலைநிமித்தம் சென்ற உன் கணவன் வரும் தறுவாயில் நீ
கதவைப்பூட்டிவிட்டு அண்டை அல்லது அயல்வீட்டுக்குப் போயி
ருப்பாயானால் அவனுக்கு உன்மேல் கோபமும், வெறுப்பும், சந்
தேகமும் தோன்றும்; ஆகவே நீ இத்தகைய ஒழுக்கங்களை அறவே
நீக்குவாயாக. அவனை உபசரிப்பதில் அதிக நாணத்தையும், வெட்
கமே சிறிதுமில்லாத அசட்டுத் தைரியத்தையும் மேற்கொண்டு,
நடக்காதே. பலகணிசமீபம், மேல்மாடி, முன்வாயில் ஆகிய இவ்வி
டங்களில் பலரும் பார்க்கத்தக்க வண்ணம் நில்லாதே. அங்ஙனம்



அவன் சோர்வோடு வீடுதிரும்புகையில், நீ உன்னை நன்றாய்த்திருத்
திக்கொண்டு, அவனைக் கண்டவுடன் நீ உன் மதிபோன்ற முகத்தி
னிடையே உள்ள பவள விதழ்களின் புன்முறுவல் தோன்றும்
படிக்கு, அவனை உட்காரச்சொல்லி உபசரித்து; விசிறியினால் வீசி
யும், மற்றும் பல செய்தும் அவனது சோர்வு நீங்கும்படிசெய்.
பின்பு சாவதானமாய் இருக்கும்பொழுது உன் குடும்ப விஷயங்
களோ அல்லது நீ ஏற்கனவே கேட்கவேண்டுமென்று நினைத்தவற்
றையோ கேட்பாயாகில் உன் எண்ணம் நிறைவேறும். உனது
வேண்டுகோள் நிறைவேற்றப்பெற்றது மன்றி உன்மேல் கணவ
னுக்கு ஆர்வமும் பிரேமையும் உண்டாகும். இங்ஙனமின்றி அவன்
வரும்பொழுது, பெரியவளாகிய "அக்காள்" (மூதேவி) உடைய
ஜோதியே துலங்கும்படி இருப்பதும்; அவன் வந்ததைக்கூடக் கவனி
யாது வேலைசெய்வதுபோல் பாவனைகள் செய்வதும் ஆகிய இவ்வித
அகங்காரங்கள் உன்னிடம் அணுகாவண்ணம் கவனித்துக்கொள்.

(தொடரும்)

சி. இராஜரத்தினம்.

மதுரை.

---

## நம்பகமாட்சி.

---

அர்ச்சுனன் "சுவாமி! தாங்கள் கூறுவதுண்மையே. சுடர்வி
னக்கு ஆயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்" என்று பெரி
யோர் சொல்லுவதால் தாங்கள் எனது தேரை நடத்தும்சாரதியாக
மட்டும் இருந்தால் அது ஒன்றே எனக்குப் போதுமானது; மற்ற
விவகாரங்களை நானே பார்த்துக்கொள்ளுவேன்" என்றான். அன்
பர்க்கிரங்கும் அருளாளனாகிய பகவான் 'அங்ஙனமே ஆகட்டும்
என்று ஒத்துக்கொண்டனன். பார்த்தன் விடை பெற்றுக்கொண்டு
தன்னிடம் போயினன்.

போனதும், வஞ்சனையால் வந்த பேய்முலையுண்ட அஞ்சன
வண்ணனாகிய கண்ணபிரான் பின்பக்கந்திரும்ப, அங்கோர் அரியா
சனத்தில் அரவ கேதனனாகிய துரியோதனன் அமர்ந்திருத்தலைக்

கண்ணுற்று, "மகாராஜரே ஏது இவ்வளவு தூரம் இந்த ஏழையை
நாடித் தாங்கள் வந்தது. காரணம் என்னவோ தெரியவில்லை.
என்னை வரும்படி கட்டளையிட்டால் நானே தங்களிருப்பிடத்
திற்கு வந்திருக்கமாட்டேனா? ஆ! ஹா! அபசாரம், அபசாரம்;
விசேஷமிருப்பின் தெரிவித்தருளவேண்டும்" என்று சொல்லிக்
கொண்டே எழுந்து நின்றார். துரியோதனன், "பிரமாதம் ஒன்று
மில்லை. பீஷ்மர் முதலான அமைச்சர்களின் வேண்டுகோளால்
இங்கு வரலானேன். பஞ்சையரான பாண்டவருக்கும் விஞ்சிய
செல்வரான எங்களுக்கும் யுத்தம் மூண்டிருப்பது எல்லோருக்
கும் தெரிந்த விஷயந்தானே. அதில் எங்கள் பங்கில் தங்கியிருக்க
உம்மை எனது அமைச்சர்கள் கோருகிறார்கள். அதன்பொருட்டே
நானிங்கெழுந்தருளியது; உம்முடைய சம்மதம் அறிய விரும்புகி
றேன்" என்றுகூறினான்.

கபட நாடக சூத்திரதாரியாய்ப் பூபாரம் போக்கவந்த கண்
ணனெம்பெருமான் "அப்படியா? மகாப் பிரபுவே! தங்கள் விருப்
பத்தைச் சிறிது முன்னரே அறிந்திருப்பேனாயின் அவ்வாறே தங்
கள் கூட்டத்தில் நானும் ஒருவனாயிருக்க உடன்படலாம். சற்று
முன்புதான் அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாயிருக்க வாக்களித்து
விட்டேன். மேலும் நான் அவ்வளவு வல்லமைசாலியும் அல்லவே.
எல்லோருடையதயவும் எனக்குவேண்டியிருத்தலால் போரில் நான்
படையெடுக்கப்போகிறதில்லை. தாங்கள் என்னைக் காட்டியவரை
யில் தங்களுக்கொரு சகாயம் புரிய இஷ்டப்படுகிறேன். எங்கள்
குலத்தில், போரில் பூரிப்பும் பெருந்தினவும் பொருந்தியுள்ள
கோபால வீரர்கள் பலரிருக்கிறார்கள். அவர்களனைவரையும் தங்க
ளுக்குத் துணையாகக் கூட்டி யனுப்புகிறேன்; அழைத்துக்கொண்டு
போகலாம்" என்றனர்.

துரியோதனன் "நல்லது; படையெடேன் என்ற வாக்கு
நாணயத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று விடைபெற்றகன்று
பீஷ்மரிடம் தான் போய்வந்த விஷயங்களைப் புகன்றான். பின்னும்
அவரை நோக்கி "இன்னும் ஒரு விசேஷமிருக்கிறது; அதாவது
யுத்தத்தில் கண்ணன் படையெடுப்பதில்லை என்று சொன்னான்.
அந்த உறுதிப் பாட்டையும் அவன் வாய்க்கொண்டே பிடுங்கிவந்
தேன்" என்றான். அதுகேட்ட பீஷ்மர், தெய்வ நம்பகம் உள்ள



வராதலால், "இங்கிருக்கும் நாங்கள் என்ன பேடிகளா? நானே
கண்ணபிரானைப் படையெடுக்கச் செய்கிறேன் பார்" என்று சப
தம் செய்தார். யுத்தம் நடக்கும்போது "என் சபதம் நிறைவே
றுமாறு கிருபைபுரிய வேண்டுமென்று பகவானைத் தமது உள்ளத்
தில் தியானித்து வந்தார். அவ்வாறே தாம் ஒரு பக்கத்தில் வீம
னோடு போர் செய்யும்போது அவனையும் அவன் சேனையையும்
சின்னபின்னப்படுத்தி அலறவைத்தார். அப்போது அர்ச்சுனன்
அந்த அலங்கோலத்தை ஒரு வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டி
ருந்தானே யொழிய பீமனுக்கு உதவிசெய்ய முயலவில்லை. அது
கண்ட பகவான், அர்ச்சுனனைப் பார்த்து,

"கான்எரிதுற்றென வீடுமன் இப்படிக் காதிமலைத்திடவும்
மானம் நினைத்திலை சாபமெடுத்திலை வாளிதொடுத்திலையால்
ஏனிதுனக்கென மாயனுரைத்தவன் ஏறிரதத்திழியா
ஆனதெனக்கினி ஆகனைத்தனி ஆழியெடுத்தனனே"
(பாரதம்)

இச்செயலைக் கண்ணுற்ற பீஷ்மர் பகவானிடம் ஓடிவந்து கண்க
ளில் ஆனந்தவெள்ளம் பெருகத் தம் கைகளைக் கூப்பிக்கொண்டு,
"எழிற்படை எடுக்கிலேன் என்றிசைத்த நின்மொழி விட்டுன்னை
விழுப்படை எடுப்பித்தன்றி விடுகலன் எனயான் சொற்ற
மொழித்திறம் பிழையாவண்ணம் முருகு வெஞ்சினத்த ஆழி
அழற்படை எடுத்தாய் அன்பர்க்கழியை நீ பெரிதுமன்றே"
(பாகவதம்)

என்று துதித்தார். ஆழ்வாரும், திருவாய்மொழியில்,
"மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காய்ப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம் பெருமான் நமக்கருள்தான் செய்வானே"
என்றருளினர்—'படைதொட்டான் விட்டானில்லையியே' என்று
வியாக்கியானத்தும் வருதல் காண்க.

தெய்வ நம்பகத்தால் விளையக்கூடிய இத்யாதி வைபவங்கள்
பலவுள. தெய்வ பலத்தால் வருவனவாகிய நன்மைகளும் அளவி
றந்தனவுண்டு. இவைகளை யெல்லாம் சமயம் நேரும்போது
கொஞ்சங்கொஞ்சமாக விளங்கி வருவோமாக.

தெய்வ நம்பகம் உள்ளவர் தெரிந்தோ தெரியாமலோ தீது
புரிய நேரிடுந்தோறும் தெய்வமே அவர்கள் மீது கொண்ட அன்

பால் அவர்களை உடனுக்குடன் திருத்தி நல்வழிப்படுத்த இரக்கம் சிறிதுமின்றித் தண்டித்தவரும் என்றும், தெய்வம் இல்லையென்பவர்க்கு அத்தகைய தண்டனை "அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்" என்கிற பழமொழிப்படி உடனே இல்லையென்றும் குமரகுருபரர் தமது நீதிநெறிவிளக்கத்தில் கூறுகிறார். அதுவருமாறு,

"தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலநாளும் சொல்வார் பயன்"

என்பதாம்.

தெய்வம் உண்டு என்பதையும் பின்னர் விளக்குவாம். அன்பர்களே! இன்னோரன்ன காரணங்களை முன்னிட்டு நாம் தெய்வ நம்பகத்தைக் கையாண்டு ஒழுகத் தவறாதிருப்போமாக.

ம. இராஜகோபாலன்,
வித்வான், சோமளேசுவரன்பேட்டை, சென்னை.

---

சென்னை
திருவள்ளூர் தாலூகாபோர்டு உபதலைவரும்
யாதவ மகாநாட்டு ஸ்தாபகருமாகிய, புரசை திரு.
M. அப்பாத்துரை பிள்ளையவர்கள் அருமைத் தாயார்
## திருவை பாக்கிய அம்மாள் அவர்கள்
விண்ணுற்றதற்கு ஆற்றாது கூறிய
## இரங்கற்பா.

---

### ஆசிரிய விருத்தம்.

நிலஞ்செய்த பவமென்கோ! தணிவிலா யாதவரின்
சீர்மை மிக்க
குலஞ்செய்த பவமென்கோ! வென்னென்கோ குறையாத
குணத்துப் பூவை



நலஞ்செய்த புகழோடு நிலவியபாக்கியவம்மாள்
நளிநீர் வைப்பைப்
புலஞ்செய்த மனத்தாலே விட்டுதிரு விண்ணேறிப்
புக்காளந்தோ! (1

இமையாத நாட்டமுறும் விண்ணவரே என்செய்தீர்!
இதுநன்றாமோ?
உமையாளுந் திருவரங்கப் பெருமானு ரடிமறவா
வுறுதி யாளை
அமையாரும் புகழ்மணக்கு மன்புமிக்க பாக்யமெனு
மருமைத் தாயை
இமையாகு மொருநொடியிற் கரந்துற்றே எடுத்தோடி
யிருக்கின் றீரே. (2)

அருமறை நெறியும் வணக்கமுங் கொடையு
மன்பு மாதரவு நல்லறிவுந்
தருமமும் பொறையு மிரக்கமுங் குணமுந்
தயவுஞ் சீரொழுக்கமு மென்றும்
பெருகிய அப்பாத்துரையெனு மகனைப்
பெற்ற பாக்கியமெனும் பொன்னாள்
உருகவே புலவ ருயர்பதி சேர்ந்தா
ளுண்பது முடுப்பதும் விடுத்தே. (3)

அரங்கனை மறவாப்பாக்கியம்மவோ! நினது சேவை
இரங்கவே நிலத்தில் விட்டுஇமையவருலகமுற்றாய்
உரங்கிளர் மனத்தோரெல்லா முடைந்தன ருனைநீத்து
வரங்களும் புரிந்து நின்பால் வருகுவ ரருட்கண் பாராய்.

ஆண்டுசுக்ல மார்கழி யாமிருபத் தெட்டதனி
லீண்டியவே காதசிநா ளோர்சனியில்—காண்டகுசீர்
போதநிறை பாக்கியம்மாள் போந்து பரமபத
நாதன் கழல்சேர்ந்தாள் நன்கு.

திரிசிரபுரம், ஐயன்பெருமாள்கோன்.

---

## ஸ்ரீமான், ம. அப்பாத்துரைப்பிள்ளை அவர்கள் தமது தாயாரது பிரிவாற்றாது இரங்கிய

# இரங்கற்பாக்கள்.

*

நேரிசை வெண்பா.

பன்னருஞ்சீ ரென்றாயாம் பாக்கியம்மாள் மாதவன்றாள்
மன்னவே சுக்கில மார்கழியி—லுன்னி
வைகுண்டவே காதசி மாநாளில் மாயோன்
வைகுண்டத்தே சேர்ந்தாள் மகிழ்ந்து. (1)

பாங்கிருந்த ஜயலட்சு மியம்மாளாம் மருமகளும்
ஏங்கியேயாம் உனைச்சூழ எங்கொளித்தாய் உத்தமியே
தாங்கருஞ்சீர் கற்புடைமை தருசீலம் பொறையின்சொல்
சங்கிவைசே ரனையேயென் எழிலமுதா மென்றாயே! (2)

பொன்போலும் நற்றாயே பொன்றன்னைப் புத்திரரை
நன்மனைவி உளசுற்றம் நற்பொருள்கள் பெறலாகும்
என்றனக்கு ஒருயிரே எனைப்பயந்த பாக்கியமே
உன்றன்னை இப்பிறப்பி லுறுவதுண்டோ உரையாயே! (3)

என்னையன் அப்பாக்கண் ணெனும் பேர்கொள் நற்சீலன்
என்றனைப்போல் நின் பிரிவை யெண்ணிமிக வருந்துகின்றான்
இன்னமினி யென்செய்வேன் இரங்குகின்றேன் நினைக்காணு
பன்னாளும் ஆற்றலெங்ஙன் பாக்கியமாம் என்றாயே! (4)

வருவிருந்து வப்பவூட்டும் வண்மைமிகு நற்றாயே
இருவினையைப் பற்றறுக்க இராமனடி பூசித்துக்
கருவிலுரு வாராமே கார்வண்ணன் வைகுந்தம்
உருவிலியாய் நடந்தனைகொல் ஊனமிலா உத்தமியே (5)

குணங்களா லுயர்ந்ததாயே கோதறுகற் பின்மிக்காய்
பணமனையும் இராமன்றாள் பன்னாளும் வாழ்த்திவந்தாய்
இணங்கியவன் வைகுந்தஞ் சேர்ந்தடியார் குழாங்கூடி
வணங்கியவன் றாளடிமை செயச்சென்றாய் வாழியவே. (6)

# நடுவெழுத்தலங்கார வினா.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியம்.

1. பூமண்ட லத்தின்மேல் நோய்கால்கங் காளனொடு
பூர்வீக மாது ஞானம்
காமர்மிகு முபயோக விலங்கொன்றின் பெருநங்
கையோடு நெருப்புங் கொண்ட
நாமங்க ளொவ்வொன்றி லும்வரும் படியான
நடுவெழுத் தெட்டுங் கூட்டிற்
சேமங்கொள் "யாதவ மித்திரன்" என்னவே
சேர்ந்திடக் கூறுவீரே

# விடுகவி வினா.

## வெண்பா.

2. எழுத்துக்க ளைந்துக்கு மேமுற்பங் கற்பம்
வழுத்தியபிற் பாதி மலரோன்—கழுத்தற்றால்
வாகுடலா மாதியின்றேல் மங்களங்காண் முன்கபிலை
யாகுமொன் றும் நான்குமிது யாது?

3. ஆதி யதிப னடுத்த விரண்டெழுத்து
மோதிடிற் சாப முபயோக—மீதியுள்ள
முன்னுங் கடையு முனைவாளி மூன்றுமில்லம்
நன்னயமா யிஃதை நவில்

4. செய்யுட் பெயராந் திகழ்ந்திடு மூன்றெழுத்து
ளெய்யு முதலிரண்டு மேகாக்கி—துய்ய
விடைக்கடையும் புத்தி யினமுதலு மீற்றும்
படைக்கருவி யாகப் பகர்

## விபரம்.

1. மேற்கண்ட வினாக்கள் நான்கிற்கும் விடைகள் மாசிமீ 15 தேதிக்குள் எமக்குக் கிடைக்கும்படி ஒரு அணா தபால் பில்லையுடன் அனுப்பவேண்டும்.

2. அவ்விதம் அனுப்பும் விடைகளைச் செய்யுளில் கொடுப்பவர்களுக்கு எதிர்கால இரண்டு வருடத்திற்கும் சாதாரண வாக்கி

யத்தில் கொடுப்பவர்களுக்கு ஒரு வருடத்துக்கும் நமது யாதவ மித்திரனை (எம்மாற் சந்தாச்செலுத்தப்பெற்று) இனாமாசக்கிடைக்கும்படி செய்யப்படும்.

3: சரியான விடைகளின் வரிசை இலக்கமிட்ட சீட்டுகளைக் குலுக்கிக் கொட்டியெடுத்து அதில் வந்த சீட்டின் இலக்கமுள்ள விடையாளரின் பேருக்கே பத்திரிகைப் பரிசு உரிமையாகப் பெறும்.

4. செய்யுள் விடைகளுக்கும் சாதாரண விடைகளுக்குமாக முறையே இருதடவை சீட்டுக் குலுக்கி எடுக்கப்படும்.

5. 'தபால்பில்லை' அனுப்பாத விடைகளைக் குலுக்குச் சீட்டின் இலக்கத்தில் சேர்க்கப்படமாட்டாது.

6. சரியானவிடைகள் கொடுத்தவர்களையும் விடைகளையும் அடுத்தமாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பெறும்.

7. ஷை விடைகளைக் கீழ்க்கண்ட விலாசத்துக்கே அனுப்ப வேண்டும்.

வீ. எஸ். வீரணக்கோன்,
அம்பலத்தாடி, சிறுவாலை ஜமீன்,
சமயநல்லூர் போஸ்டு, மதுரை ஜில்லா.

ஸ்ரீ பாலகிருஷ்ண விலாசம்.

# இரு பெருந் துக்கங்கள்.

நமது யாதவ மகாநாடுகளைச் சில வருடங்களாக ஆங்காங்குச் சென்று இயக்கியும் மற்றும் பலவகையாகவும் சமூகத்தொண்டாற்றிவரும் சென்னை (Higgin Botham) ஹிக்கின்பாத்தம் கம்பேனியில் உயர்ந்த உத்தியோகம் வகித்து இப்பொழுது இளைப்பாறி வருகின்றவரும், திருவள்ளூர் தாலூகாபோர்டு உபதலைவரும், செங்கல்பட்டு ஜில்லா போர்டு அங்கத்தினரும், உயர்ந்த பலகுணங்களுக்கு உறைவிடமாக விளங்குபவருமாகிய நமது தலைவர் சென்னை திருவாளர் ம. அப்பாத்துரைப்பிள்ளை அவர்களது அருமைத் தாயார் திருமதி பாக்கிய அம்மாள் அவர்கள் நளது வருஷம் மார்கழிமீ 28உ வைகுண்ட ஏகாதசித் தினத்தன்று புரசபாக்கத்திலுள்ள தமது கற்பக விலாசத்தில் சிலநாள் சுகமில்லாதிருந்து, பரமபதமடைந்த செய்தி அறிந்து மிகவும் வருந்துகின்றோம்.



அம்மையார் விருத்தவயதுடையவர்களாக இருந்தும் இறக்கும் பரியந்தம் உடல் பலம் உடையவர்களாகவே இருந்தார்கள். இவ்வம்மையார் உத்தம பெண்டிர்களுக்குரிய சுற்றம் போற்றுதல், விருந்தினரை உபசரித்தல், ஈகை, இரக்கம் முதலிய குணங்கள் சாலவும் அமையப் பெற்றவர். திருவரங்கப் பெருமானிடம் மாறுதபக்தி உள்ளவர். அதற்கேற்ப அவர்கள் வைகுண்ட ஏகாதசி தினத்தன்று இவ்வுலக வாழ்க்கையை விட்டது மிக ஆச்சரியத்தை விளைவித்து இறைவன் திருவடி இன்பம் எய்தினர் என்பதை நிச்சயமாய்த் தெரிவிக்கிறது. அன்னையாரின் பிரிவால் வருந்தும் நமது பிள்ளை அவர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது மனம் அமைதிபெறுமாறு திருவருளைச்சிந்திக்கின்றோம்,

---

இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூரைச் சேர்ந்த செல்வநாயகபுரம் திரு. A. வேலாயுதக்கோனார் அவர்கள் நளது வருஷம் தை மாசம் 15உ செவ்வாய்க்கிழமை அன்று இரவு 10 மணிக்கு தமது இல்லத்தில் சுரநோயால் வைகுண்டபதவி அடைந்தார் என்ற செய்தி கேட்டுத் தணுக்குற்று ஆற்றொண்ணாத்துயரத்துள் ஆழ்கின்றோம். இவருடைய அகாலமரணம் மின்னாமல் இடித்தாற்போல் இருக்கிறது. இவருக்கு வயது சுமார் 50 இருக்கும். இவர் பால்ய முதல் நமது மாட்சிமை தங்கிய ஆங்கில அரசாங்க ராணுவத்தில் சேவைபுரிந்து தமது திறமையால் அவுல்தார் பதவிக்கு உயர்ந்தவர் கண்டோர் உள்ளத்தைக் கவரும் ஆஜானுபாகுவான உருவத்தோற்றமும் வீரக்குறி ஜொலிக்கும் முகவிலாசமும் உதாரகுணங்களும் நன்கு அமையப்பெற்றவர். தாம் ராணுவ சேவையினின்றும் இளைப்பாறத்தொடங்கிய நாள் முதலாகச் சமூகத்தொண்டு ஆற்ற வேண்டும் என்னும் கருத்து வாய்ந்தவர். திருநெல்வேலியில் நடைபெற்ற 4-வது யாதவ மகாநாட்டில், 5வது யாதவ மகாநாட்டை இராமநாதபுர ஜில்லாவில் நடத்தவேண்டுமென்று அழைத்த பிரதிநிதிகளுள் இவரும் ஒருவர். 5-வது யாதவ மகாநாடு நடைபெறுவதற்கான காரியப்பிரசாரங்களைச் செய்வதற்குப் பரமக்குடியில் ஒரு கூட்டத்தைச்சமீபத்தில் திருவாளர். M. அப்பாத்துரைப்பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டுதற்குப்பெரும முயற்சிஎடுத்துக்கொண்டவர். இராமநாதபுரம் ஜில்லாவில் சில ஊர்களில் வசிக்கும் நம் யாதவர்களுக்குப் பிறசமூகத்தாரால் தொல்லைகள் ஏற்படாது பாதுகாத்து

வந்த வீரபுருஷர் 5 வது மகாநாடு நடைபெறுவதற்காகத் தம்மூர்ப் பக்கத்திலுள்ள யாதவர்களிடமிருந்து இரண்டு மாசத்துக்குள் சுமார் 700 ரூபாய்வரை சேகரித்து அனுப்பிய தீவிர முயற்சி உடையவர் சமீபத்தில் நடைபெற இருக்கும் 5வது யாதவமகாநாட்டைக் கண்டுகளிப்பதற்குப் பேராவல்கொண்டிருந்தவர் இறக்கும்போதும் மகாநாட்டின் ஞாபகமாகவே இறந்துள்ளார் அந்தோ! அந்தோ பரிதாபம்! இவரது மரணம் பொதுவாக யாதவ சமூகத்திற்குச் சிறப்பாக இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களுக்கும் பெரும் நஷ்டத்தை விளைவித்ததென்று திண்ணமாகக் கூறலாம். இவரது ஆத்மா இறைவன் திருவடி இன்பம் துய்க்கும்படி திருவருளைப் பிரார்த்திப்பதோடு நமது அனுதாபத்தை இவரது குடும்பத்தார்க்கும் இவரது சகோதரர் ஜார்ஜன்மேஜர் கொளும்பு திரு. A. நாகலிங்கக்கோனார் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---


# பாலவித்யா

1930ஞூ ஜனவரிமீ முதல்
இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும்
வெளிவரும் தமிழ் ஜர்னல்.

இதில் மகா அற்புதமான நாவல்கள் மாதம் ஒன்றுக்கு 40-பக்கங்களுக்குக் குறையாமல் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும். நேயர்கள் உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிக்கும்படி கோரப்படுகிறது.

வருட சந்தா:— தபாற்கூலி யுள்பட ரூபா 1 8 0 தான்
வெளிநாடுகளுக்கு ரூபா 2 0 0

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டுகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

குறிப்பு:—"பாலவித்யா" மாதிரி (இனாம்) லஞ்சிகை விரும்புவோர் தபாற்கூலிக்காக ½-அணா லேபிள் அனுப்பி விலாஸமும் தெரிவித்தால் பெற்றுக் கொள்ளலாம்.

பப்ளிஷர்ஸ்:— ஸ்ரீவித்யா பிரெஸ், கும்பகோணம்.


## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு ஞூ 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு ஞூ 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
யாதவ மித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

Printed & Publised by E. M. GOPALAKRISHNA KONE



# யாதவ மித்திரன்

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | சுக்லஹு மாசிமூ |
|---|---|
| 1 | 1930. பிப்ரவரிமூ |


5 MAR 19





பொருள் அடக்கம்.


கடவுள் வணக்கம், மாதரியின் மாண்பு 195
198
தமிழ் எழுதும் முறை 201
கண்ணன் சரிதம் 203
ஏறு தழுவுதல் 207
ஸர் ஜகதீஸ்…டன் 211
ஞானகலாவிலாசம் 212
லீலாவதியின் திருப்பம் 218
கமலா 215 கொம்பு சீவுதல் 219
கால்நடை வைத்தியம் 222
மித்திரனின் மாட்சி 223
அடிமைப்புத்தியை அகற்றவேண்டும் 225
வாலிபர் சங்கம் 224 விகடகவி விடை 226
கையறுநிலை 228
5-வது மகாநாடு 227 அனுதாபம்




Managing Editor.

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறைப்பள்ளி.



## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறி வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக் மாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரு அடியிற்காணும் விலாசத்திற்கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மது

1948




பூதனை வதம்.

[164-ம் பக்கம் பார்க்க]

192
2 5MAR1930

ஸ்ரீ

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 1 | சுக்கில ஹு மாசி-மீ<br>1930-ஹு பிப்ரவரி-மீ | பகுதி 7 |
|---|---|---|

### கடவுள் வணக்கம்.

பேய் மகள் கொங்கை நஞ்சுண்ட பிள்ளைபரி சிதுவென்றால்
மாநில மாமகள் மாதர்கேள் வணிவனென்றும் வண்டுன்
பூமகள் நாயகனென்றும் புலங்கெழு கோவியர்பாடி
தேமலர் தூவ வருவான் சித்திரகூடத் துள்ளானே.

(இதன் பொருள்) "பேய்ச்சியான பூதனையினுடைய மார்பில் (தடவியி
ருந்த) விஷத்தை (அம்ருதமாக) உறிஞ்சியுண்ட இக்காரியம் இச்சிறு பிள்ளை
யின் செயல்" என்று சொல்லக் கேட்டதும் அழகிய இடைப்பெண்களானவர்
கள், 'இக்கண்ணபிரான் பூமிபிராட்டிக்கு வல்லபன்" என்றும் "வண்டுகள்
மதுவுண்கிற தாமரைப்பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு நாதன்" என்
றும் சொல்லிப் பாடிக்கொண்டு செவ்வி குன்றாத புஷ்பங்களைப் பணிமாற
(திருவாய்ப்பாடி திருவீதிகளிலே) ஸஞ்சரித்த பெருமான். (இப்போது) சித்தி
ரகூடத்திலே ஸேவை ஸாதிக்கிறான் (என்பது).

## ஆயர் முது மகள் மாதரியின் மாண்பு.

(164ம் பக்கம் தொடர்ச்சி)

பின்பு கண்ணகி, தனது மற்றொரு சிலம்பைக் கையிலேந்திக்
கொண்டு ஆயர்பாடியினின்றும் மதுரை நகரினுள்ளே சென்று நகர
மாந்தர்க்குத் தனது கணவனை அரசன் ஆராயாமல் கொலை செய்தது
அநியாய மென்றுகூறி அழுது புலம்பி, பாண்டியனிடம் வீராவேசத்து

டன் சென்று வழக்காடி, தன் கணவன் கள்வனல்லனென்பதை நிரூபித்தாள். பாண்டியன் தான் செய்த தவறுக்கு ஆற்றாது உயிர்துறந்தான். பாண்டியன் தேவியும் அவனுடன் இறந்தாள். பின்னரும் கண்ணகி சீற்றந் தணியாது மதுரையைச் சபித்து எரித்தாள். எரிக்கும்போது அக்கினியை நோக்கி அறத்தோர் இடங்களைவிட்டுப் பாவிகள் இருப்பிடங்களையே எரிக்கவென்றாள். அவ்வாறே தருமிகளிடம் சேராமல் அழல் பாவிகள் இடங்களைப் பற்றி எரித்தது. நெருப்பு நெருங்குதலால் நகரத்துள்ள பசுக்களும் கன்றுகளும் அறநெறிதவறாத ஆயர்களது வீதிகளை அடைந்தன. பின்னர் மதுராபதித் தெய்வத்தால் சினந்தணிந்த கண்ணகி வையைக்கரை வழியாகச்சென்று திருச்செங்குன்று என்னும் மலைமீதேறித் தேவர்களுடன் வானோர் வடிவத்தில் வந்த கோவலனோடு விமானமேறிச் சுவர்க்கம் புகுந்தாள்.

இஃதிவ்வாறாக, காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கண்ணகியின் செவிலித்தாயும் அடித்தோழியும் தேவந்தியும் கண்ணகியைத் தேடிக்கொண்டு மதுரை வந்து விசாரித்து மாதரி அகத்தை அடைந்தார்கள். மாதரியோ கவுந்தியடிகளாற் கொடுக்கப்பட்ட அடைக்கலப் பொருளாகிய கோவலனை இழந்ததினால் துன்புற்று, தீயிற் பாய்ந்து இறந்துபோனாள். இது தெரிந்த அவர்கள் வருத்தமுற்று மாதரி மகள் ஐயையிடம் நடந்த செய்திகளையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு கண்ணகிசென்ற வழியாக ஐயையுடன் திருச்செங்குன்று என்னும் மலையைப் போய் அடைந்து அங்குச் செங்குட்டுவன் என்னும் சேரமன்னனால் கண்ணகிக்கு எடுத்த ஆலயத்தில் கண்ணகியின் கடவுட் கோலத்தைத் தரிசித்து அங்கு நடந்த பல அற்புதநிகழ்ச்சிகளைக் கண்டிருந்தார்கள். தீயிற்பாய்ந்த மாதரி திருவநந்தபுரத்தில் திருமால் கோயில் பூஜகனுக்குத் திருமகளாய் மறுஜென்மமெடுத்திருந்தாள்.—இவைகளே கண்ணகி கதையோடு கலந்துவந்த மாதரி வரலாறாகும். இனி இவைகொண்டு மாதரியின் மாண்பினைச் சிறிது ஆராய்வாம்.

## மாதரி மாண்பு.

கண்ணகி கோவலன் இருவரும் தவப்பள்ளியிலிருக்கும்போது கவுந்தி அவர்களைப்பார்த்து, நீங்கள் தவத்தோர் பள்ளியாகிய இவ்விடத்தில் இருத்தல் தகாது; நீங்கள் பொழுது விடிந்ததும் மதுரையுள் தக்க இடம் போய்ச் சேரவேண்டும் என்கிறாள். இச்சமயத்



தில், ஆரியாங்கனை என்னும் தெய்வத்துக்குப் பாற்சோறு நிவேதித்து வரும் நமது மாதரி கவுந்தியடிகளைவணங்குகிறாள் என்று கதையுள் கூறப்படுகிறது. இதனை ஆராய்ந்தால் மாதரி நல்வினைஞ் சேர்தலில் விருப்பும் பெரியோரிடத்துப் பணிவுமுடைய நற்குணநற்செயலுடையவளாக இருந்தாளென்று அறியப்படும். தெய்வத்திற்கு இவள் நிவேதித்து வருவது பாற்சோறு என்று தெரிகிறது. இதனால் பண்டைக்காலத்தில் நம்குலத்தோர் தெய்வபூஜனை நெறியை பரிசுத்தமுறையில் எவ்வாறு கடைப்பிடித்தார்களென்பது அறியப்படும். தற்காலத்தில் வீரன் மாடன் முதலிய சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வணக்கம் செய்து வருபவர்கள் இதனைக் கவனித்தல் அவசியமாகும்.

இனி மாதரியைக் கண்டமாத்திரத்தில் ஞானத்தால் குறிப்பறியும் வன்மையுடைய கவுந்தியடிகள், "இவளே கோவலன் கண்ணகி இருவரையும் அடைக்கலமாகச் சேர்ப்பதற்குத்தகுதியானவள் எனக் கருதுகின்றாள். இதனால் மாதரி பிறர் கண்டமாத்திரத்தில் மதிக்கக்கூடிய பொறாமை, முதலிய தீக்குணமில்லாத உத்தமகுணங்கள் புறம்பொசிந்து தோன்றும் தோற்றமுடையவளாக விருந்தாளென்பது அறியப்படும். அன்றியும் மாதரியைப்பார்த்த கவுந்தி புனிதமான 'பசுக்களை ரக்ஷித்துப் பலர்க்கும் பாலமுதளிக்கும் இடையர்கள் வாழ்க்கை கொடுமை கலவாத தருமகதியிற் செல்வது; இவளிடம் இவர்களை அடைக்கலமாக வைத்தால் இவர்கட்குத்தீங்குறாது என்று நினைக்கின்றாள். இதனால் நம்குலத்தோர் உலகமக்கள் புகழும் முறையில் மறம்கடிந்து அறநெறிபற்றி யாவரும் நம்பும்படி உண்மை மிகுந்து ஒழுகிவந்தார்களென்பது பெறப்படுகின்றது. மகாபாரதம் முதலிய இதிகாசபுராணங்களிலும் வழிப்போவோர் தங்குமிடமாகப் பெரும்பாலும் ஆயர்களது அகங்களையே குறித்திருப்பதும் நமது இக்குலவியற்கை உண்மை என்பதை வலியுறுத்தும். அன்றியும் பிற சான்றோர்களும் 'அறவை நெஞ்சத்து ஆயர்' 'தருமகதி ஆய்ப்பாடி' என்றெல்லாம் குறிப்பிட்டுச்சொல்லுதலுங்காண்க.

தொடரும்

ஆ. கார்மேகக் கோன்,
தமிழாசிரியர், மதுரை.

# தமிழ் எழுதும் முறை.

கல்வி மக்களுக்குக் கண் போன்றது. இக்கண் இல்லையானால் புறக்கண்களிருந்தாலும் இடுக்கண்ணே விளையும். ஒரு பொருளின் உண்மையறிதற்கும் ஒரு செய்கையைத் துணிந்து முடித்தற்கும் கல்வி வேண்டும். சுருங்கச் சொல்லில் உண்பதற்கும் உறங்குவதற்கும் உயிர் வாழ்வதற்கும் கல்வியே இன்றியமையாத கருவியாகும். 'தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்றவாறு கல்வியளவே அறிவும் அமைகிறது. ஆதலின் ஒருவன் சாந்துணையும் கல்வி கற்க வேண்டும். அறிவைப் பெருக்குதல் வேண்டும். அறிவுக்கேற்றவாறு ஒழுகவேண்டும். 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றார் தெய்வப்புலவரும்.

இத்தகைய கல்வியைப் பெறுதற்குப் பலர் விரும்புகின்றனர். ஆனால் அதனைப் பெறுதற்கு வேண்டும் மெய் வருத்தத்தை மேற்கொள்ளுதற்கு எல்லாரும் பின்வாங்குகின்றனர். உழைப்பின்றி எத்தகைய நுண்ணறிவுடையோர்க்கும் கல்வி முற்றுப்பெறாது என்பது திண்ணம். 'சித்திரமுங் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்றபடி பேசப் பேசச் சொல்வன்மையும், எழுத எழுதக் கட்டுரை எழுதும் வன்மையும், நினைக்க நுண்பொருள்களை ஆராய்ந்து தெளியும் அறிவுவன்மையும் கைவலமாகும்.

இக்காலத்திலே அரங்கத்தில் ஏறிப் பேச ஆசைப்படுவோர் பலர்; பத்திரிகைகளிற் கட்டுரை தீட்ட விழைவோர் பலர். இவர் தம்முள் சிலர்க்குத் தமிழ் இலக்கண ஞானமும் கைகூடுமானால் அவர்கள் சொல்லும் எழுத்தும் இன்னும் சிறப்புற்றுத் திகழுமென்பதில் ஐயமில்லை. அத்தகையோர் பொருட்டும் ஆங்காங்குத் தமிழைத் தப்பின்றி எழுத அவாக்கொண்டும் உதவியின்றி அல்லல் உழக்கும் தமிழர் பொருட்டும் சுருக்கமாகச் சிற்சில இலக்கண விதிகளை எளிய முறையில் அடிக்கடி எழுதிவருவோம்.

இதனால் பலர்க்கும் பயன் விளையுமாயின் தமிழ்ப் புலமையை அடைவதற்கேற்ற வழிகளை அடிக்கடி எழுதித் தமிழ் மணம் எங்குங் கமழச்செய்வோம். எவ்வளவு பொருளடங்கி யிருப்பினும் இலக்கணப்பிழைகள் மலிந்த கட்டுரைகள் இன்பந்தரமாட்டா. எவ்வளவு கல்வியுடையோராயினும் இலக்கண ஞானம் வேண்டுமளவிற்கேனும்



வாய்க்கப்பெறாராயின் அவர் தம் கல்வியறிவின் கவின் அழியும். 'எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும் எழுத்தறிவார்க் காணின் இலையாம்' என்பது இக்கருத்துப்பற்றியே எழுந்தது.

## எழுத்துவழு.

எழுத்துவழு, சொல்வழு, புணர்ச்சிவழு, முடிபுவழு, மரபுவழு, பொருள்வழு முதலாகப் பல வழுக்கள் வருதல் உண்டு. இவற்றுள் பொருள் மரபு வழுஉக்களை விடுத்து எழுதும் பொழுது தோன்றும் ஏனைய வழுஉக்களையே முதற்கண் எடுத்துக்கூறுவோம்.

தமிழில் வல்லின றகரம் இடையின ரகரம் (ற ர) ஆகிய இவ்விரண்டின் பேதம் தெரியாமல் பலர் இடர்படுகின்றனர். இவ்விடர்ப்பாட்டினின்றுங் கற்றுக் கரையேறாமல் ஆங்கில பட்டதாரி ஒருவர் தமிழிலே உள்ள வல்லின றகரம், இடையின ரகரம் ஆகிய இரண்டெழுத்துக்களில் ஏதேனும் ஒன்றை வைத்துக்கொண்டு மற்றொன்றை ஒழிக்கவேண்டுமென ஆராய்ச்சியின்றிக் குழறினார். இவ்விரண்டெழுத்துக்களுக்கும் பிறப்பிடம் வேறு, ஒலி வேறு, எழுத்துக்களுடன் சேரும் போது தோன்றும் ஒலி வேறு. ஆதலின் இவற்றில் ஒன்றை ஒழிப்பதும் மற்றொன்றை வைத்திருப்பதும் என்பது பேதைமையினும் பேதைமை.

இனி, லகர ளகரங்கள் ளகர, ழகரங்கள், ழகர யகரங்கள், நகர ணகரங்கள் ஆகிய இவைகளிலேயும் பிழை செய்கின்றனர். இவையனைத்தும் முதலிலேயே ஒழுங்கான உச்சரிப்பிற் பழகாமையினாலேயே உண்டாகின்றன. ஆசிரியர்கள் உச்சரிப்பில் மிக்க நோக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். நாட்டு வழக்கத்தால் ஏற்படும் ஒலிபேதத்தையும் கற்போர் நோக்கத்துடன் பழகி விலக்கிக்கொள்ள வேண்டும்.

எழுத்துப் பிழையை உச்சரிப்புக்கொண்டே பெரும்பாலும் நீக்கி விடலாமானாலும் வல்லின றகரம் இடையின ரகரம் ஆகிய இரண்டிலும் வரும் பிழையை ஒலி பேதத்தைக்கொண்டே பெரும்பாலும் ஒழித்துவிடமுடியாது. ஏனென்றால் ஒலிபேதமறிந்து எழுத்துக்களை உச்சரிப்பவர் பெரும்பாலும் இலர் என்றே கூறலாம். இத்தகைய தளர்வைப் பரிகரிக்கும் பொருட்டே ஆங்கிலேயர் உச்சரிப்பு விஷயத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து மாறாதபடி அறிவு புகட்டித் தமது மொழியின் ஒலியைப் பாதுகாத்து வருகின்றனர்.

ஆங்கிலமொழி, உச்சரிப்பில் ஒரு வழிக்கும் ஒத்துவாராததாக இருந்தும் நமது நாட்டாரும் அதனைக் கற்றுத் தேர்ச்சியடைந்துவிடுகின்றனர். தமிழில் எவ்வளவு குறைபாடுகள் இல்லாதிருந்தும் அதனைக் கற்க அஞ்சுகின்றனர். எழுத்துப் பிழையை ஒழிப்பதற்கு இன்ன சொல்லில் இன்ன பொருளுக்கு இன்ன எழுத்து என நூலைப் படிக்கும் பொழுதே பார்த்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே எழுத்துப் பிழையை ஒழிப்பதற்கு விதியாகுலும், தப்பில்லாமல் பார்த்து எழுதுவதனாலும், சொல்வதைக் கேட்டு எழுதுவதனாலும் பிழை வாராமற் காக்கலாம். அப்பொழுது கண், காது, கை ஆகிய மூன்று உறுப்புக்களும் ஒழுங்கான முறையில் பழகிவிடுகின்றன. இப்பழக்கத்தினால் கண் பார்த்தவுடனறியும், காது கேட்டவுடனறியும், கை எழுதும் பொழுது தானே அறியும். இதனை ஒவ்வொருவரும் அநுபவத்திலறியலாம்

இனி இவ்வழுவை ஒழிப்பதற்குச் சில குறிப்புக்களை ஈண்டுத் தருவோம்.

(i) நிகழ்காலத்தைக் காட்டும் கிறு, கின்று என்னும் இடை நிலைகளிலுள்ளது வல்லின றகரமே. ஆதலின் இதனை மனத்தில் வைத்துக் கொள்க: வருகிறது, வருகின்றது, வருகிற, வருகின்றவன்.

(ii) இறந்தகால இடைநிலையாகிய ற என்பதையும் பார்த்துக் கொள்க. சென்றான் (செல்-ற்-ஆன்), கற்றான் (கல்-ற்-ஆன்).

(iii) ல திரிந்தாலும், ன திரிந்தாலும் வல்லின றகரமே ஆகும். வந்தால்-போவேன்-வந்தாற்-போவேன். முயல்-சி-முயற்சி; பொன்-குடம்-பொற்குடம்.

(iv) பகுதியை நோக்குக. தமிழில் வல்லின றகரவொற்றில் முடிந்த சொற்களே இல்லை. ஆதலால் பகுதிகளைப் பார்த்து எழுத்து இன்னதெனத் தெரிந்து கொள்ளலாம். பார்த்தான் என்பதில் பார் பகுதி, தேர்ச்சி என்பதில் தேர் பகுதி, கூறினான் என்பதில் கூறு பகுதி.

(v) வடமொழியில் வல்லின றகரம் இல்லாமையால் வடசொற்களில் எல்லாம் இடையின ரகரமே கொள்க. இவ்வாறே வடமொழியில் னகரமு மின்மையால் அம்மொழிகளில் எங்கும் நகரமே கொள்க. ஓசையும் பிறப்பும் ஒன்றாதலால் மாறி வரினும் வரலாம்.

(vi) னகரமும் றகரமும் ஓரின வெழுத்துக்களாதலால் னகரத்தைச் சேர்ந்து வல்லின றகரமே வரும். கன்று, ஒன்று, குன்றம், அன்றில், பன்றி.

மணி-திருநாவுக்கரசுமுதலியார்,
தமிழாசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

# கண்ணன் சரிதம்.

(166-ம் பக்கம் தொடர்ச்சி.)

பூதனை கண்ணனால் சங்கரிக்கப்பட்டதைக்கண்டுஆச்சரியமுற்று நின்ற ஆயர்கள், பிறகு அப்பூதனையின் சரீரத்தைக் கோடாரிகளால் கைவேறு கால்வேறாக வெட்டி நெடுந் தூரத்திற் கொண்டுபோய்ப் போகட்டுக் கட்டைகளை அடுக்கித் தீயை மூட்டினார்கள். ஸ்ரீகிருஷ்ண பகவானால் பாலுண்ட சம்பந்தத்தைப் பெற்றமையால் பாபங்களெல்லாம் தொலையப்பெற்ற அப்பூதனையின் சரீரத்தைக் கொளுத்தும் பொழுது அதினின்றும் கிளம்பிவரும் புகை அகிற் புகைபோல் நறிய வாசனையுடையதாயிருந்தது. பாலகர்களை யெல்லாம் கொன்று மகா பாதகியாயிருந்தும் கண்ணபிரானைக் கொல்லவேண்டுமென்ற எண்ணமுடையவளாய்ப் பாலூட்டியவளா யிருந்தும் சர்வலோகங்களாலும் போற்றப்பட்டதும் பிரமாதிதேவர்களாலும் புகழப்பட்டதும் பக்தர்களது ஹிருதயகமலங்களில் அமர்ந்திருப்பதுமாகிய பகவானது திருப்பாதத்தால் மிதிக்கப்பெற்ற திவ்ய பரிசத்தினால் பூதனை பெரியோர்கள் பெறும் பரமகதியாகிய முத்தியை அடைந்தாள். இதனால் பகவானுக்கு அன்போடு பாலூட்டிய தாய்மார்கள் எத்தகைய பரமகதியை அடைந்திருப்பார்களென்று சொல்லாமலே அறியலாகும்.

பின்பு இடையர்கள் இப்பிணப்புகைக்கு இத்தகைய வாசனை உண்டானது எதனாலென வியந்துகொண்டே தமது சேரிக்குச் சென்றார்கள். மதுரையினின்றும் வந்த நந்தகோபர் முதலியோர்கள் பூதனை ஆயர்பாடிக்கு வந்தது முதலியவற்றையும் அவள் மரணமுற்றதையும் குழந்தை யாதொரு ஆபத்தையும் அடையாமல் சுகமாயிருப்பதையும் தெரிந்து ஆனந்தமும் அதிசயமும் உற்றார்கள்.

## சகடாசுரவதம்.

இவ்வாறு பகவான் கோகுலத்தில் வளர்ந்துவருங்கால் ஒருகால் உத்தான உத்ஸவம் வந்தது. அன்று அசோதை தன் புதல்வனுக்கு, சன்மநக்ஷத்திரமாகிய ரோகணி நக்ஷத்திரமாகையால் பல வாத்திய கோஷங்களுடனும் அந்தணர்களது மந்திரகோஷங்களுடனும் குழந்தைக்கு அபிஷேகம் செய்தாள். பின்பு அசோதை, அன்ன வஸ்திரங்களையும் பூமாலைகளையும் பசுக்களையும் தானமாகக்கொடுத்து, அந்தணர்

களால் ஸ்வஸ்திவாசனம் செய்து மஞ்சனமாட்டி அங்கரக்ஷைகள் செய்து பாலகனை மஞ்சத்தில் படுக்கவைத்து உறங்கப்பண்ணினாள். பின்பு உதாரகுணமுடைய அசோதை உத்தான மகோத்ஸவத்தில் மகிழ்ச்சியுடன் உலாவிவந்த கோபாலர்களை உபசரித்துக்கொண்டிருந் தாள். அப்போது கம்சனாலேவப்பட்ட சகடாசுரனென்பவன் சொர் ணத்தினாலும் வெள்ளியினாலும் உறுதியாய்ச் செய்யப்பட்ட வண்டி உருவங்கொண்டு தொட்டிலின் அருகில் நெருங்க, சுவாமி மாயமாய் வரும் சகடாசுரன் என்று அறிந்துகொண்டு பசியினால் அழுகின்றவர் போல வீறிட்டழுது அவ்வழுகை யொலி அசோதை முதலானவர்க ளுக்குக் கேளாமலும் மறைத்துத் தமது தாமரை இதழ்போன்ற திருவடிகளால் நெருங்கிய சகடாசுரனை யுதைத்தார். உதைபடலும் சகடம் நொருங்கி ஒரு பக்கத்தில் விழவும் அதில் ஆவேசித்திருந்த அசுரன் மாயமாய் மடிந்தான். அசோதை முதலிய கோபிகைகளும், நந்தகோபர் முதலிய கோபாலர்களும் வண்டி முறிந்த ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணன் உறங்கும் மஞ்சத்தருகு வந்து பார்த்து இஃதென்ன வென்று ஆச்சரியமும் அச்சமும் அடைந்து நின்றார்கள். நிற்கையில் தொட்டிலின் அருகிலிருந்த கோபாலச் சிறுவர்கள், அவர் களை நோக்கி இவ்வண்டியானது தொட்டிலினருகில் வரவும் குழந்தை அழுது காலால் உதைத்தது. உதைபடவும் வண்டி உடைந்து விழுந் தது என்று சொன்னார்கள். அதைக்கேட்டு நந்தகோபர் முதலான வர்கள் இவ்விடத்திற்கு இவ்வண்டி எவ்வாறு வரக்கூடும்! இளஞ் சேயாகிய கண்ணனது கால்பட்ட அளவில் வண்டி எவ்வாறு முறியும்! இஃது ஏதோ மாயமாக விருக்கின்றதென்று சங்கித்து, ஏதோ நமது அருமைக் குழந்தை இவ்வாபத்தினின்றும் தப்பியதே! இதுவே போதும் என்று பேசிக்கொண்டார்கள். பின்பு அசோதை அழுகின்ற கண்ணனை எடுத்து மடிமீது வைத்துப் பாலூட்டப் பின்பு மந்திர பூர்வமாக அந்தணர்களைக்கொண்டு ரக்ஷைசெய்தார்கள்.

(தொடரும்)

ஆ. கா.

# ஏறு தழுவுதல்.

(தொழுமாடு பிடித்தல்.)

180-ம் பக்கம் தொடர்ச்சி.

இனி அப்போர் நிகழ்ச்சி வருமாறு:—ஏறுகளின் மீது பாய்ந் தவர் கொம்பை இறுகப்பற்றியும், கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப் பற்றியும், கழுத்திடத்திலே மாலைபோல் அடங்கிக் கிடந்தும், குட் டேறு (கொண்டை) முறியும்படி தழுவியும் தங்கள் தோளுக்கு நடுவே அவற்றின் கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக் கொண்டும் எங்ஙனமும் தப் பாது பிடிப்பார். ஒரு வெள்ளேற்றின் பக்கத்தே ஒடுங்கிக் கிடப் பான் ஒருவன், திங்களிற் (சந்திரனில்) கிடக்கின்ற மறுப்போலக் (களங்கம் போல) காணப்படுவான். ஒரு மறுவினையுடைய ஏற்றின் மீதேறி ஒடுங்கி விடாது செல்வான் நீர்த்துறையினிடத்துத் தெப்பத் தின் மீது கிடந்து அதனைத் தள்ளுகின்றவனை யொப்பான். தன் மீது கடிது ஓடிவந்த ஒரு காரியை அதன் வலியடங்கத் தழுவி வருத்தி அதன்மேலே தோன்றும் ஒருவன், கூற்றுவனை உதைத்துத் தள்ளி அவன் உயிரை வாங்கும் பரமனைப்போல்வான். நீங்காத சினத்துடன் தன்மேலே பாய்ந்த ஒரு சிவந்த ஏற்றைக் கொம்பைப் பிடித்து அதன் வலியைப் போக்கி அடக்கினவன், கஞ்சன் தன்னைக் கொல்ல ஏவிய குதிரையின் வாயைக்கிழித்துக் கொன்ற கண்ண பிரானை நிகர்ப்பான்.

இங்ஙனம் ஏறுதழுவுவோர் வெற்றியுறுவர். இங்ஙனமின்றித் தோல்வியுறுவதும், ஒரோவழி வீரர் பதம் (சுவர்க்கம்) புகுவதும் உண்டு. ஓர் ஏறு, தம்மீது பாய்வானைச் சாகுமாறு தன் கூரிய கொம் பினாற் குத்திக் குலைப்பது-கடுஞ்சினங்கொண்ட வீமசேனன் போர்க் களத்தே துச்சாதனனைக்கொன்று ஆரவாரஞ் செய்ததனோடு ஒக்கும். ஓர் ஏறு தன்மீது பாய்ந்தவனை வீழ்த்தித் தன் கூரிய கொம்பால் குடர் சரியக் குத்தி அலைப்பது, பரமன் ஊழிக்காலத்தே கூற்றுவன் (யமன்) மார்பைப் பிளந்து கொன்று அவன் குடரைக் கூளிக்கு (பேய்க்கு) இடுவதனோடு ஒக்கும். ஓரேறு தன்மீது பாய்ந்தான் ஒரு வனை முள்ளினது நுனிபோலும் முனையினையுடைய தன் கொம்பா

லெடுத்துக் குலைப்பது, தன் தந்தை துரோணாசாரியனைக் கொன்றானை, நள்ளிருளிற் சென்று கொன்று அவன் தலையைத் திருகும் அச்சுவத்தாமாவின் செயலினை யொக்கும். வெள்ளை நிறத்தினதாகிய ஓர் ஏற்றின் கழுத்திலே பாய்ந்து பற்றினானைப் பின்னே சென்றதோர் கரிய எருது பாய்ந்து தள்ளுதல் பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அதினின்றும் விடுவிக்கும் நீலநிறத்தனாகிய கண்ணனை யொக்கும். ஓர் ஏறு தன் மெய்யைத் தழுவியும் நிலைகொள்ளாது தன் முன்னே வீழ்ந்தவன் மேலே செல்லாமல் அகலுதல், தனக்கு ஒப்பில்லாதவன் தன் கைப்பட்டாலும் அவனைக் கொன்றால் மறம் வாடுமென நாணி விட்டுவிடும் உண்மை வீரனின் செயலினை யொக்கும்.

ஊழ் வயத்ததாக நிகழ்வது உண்மைக்காதல். இக்காதலரை ஊழ்வினை எங்ஙனமும் கூட்டுவிக்கும் கடப்பாடுடையது; தன் முயற்சிக்குத் தடையாய எத்தகைய இடையூறுகளையும் அவ்வூழ்வினை உப்பக்கம் காணவல்லது; இங்ஙனம் ஊழியின் வழியராய உண்மைக்காதலர் வெற்றியுறுதலும், ஒழிந்தார் புரியும் முயற்சிகள் பயன்படாமையொடு தாமும் ஒழிதலும் இயற்கையே அன்றோ. ஆகவே, இப்போரில் ஊழின் புறத்ததாய ஒருதலைக்காதலுற்றார் சிலர் தோல்வியுறலொடு மாண்டொழிதலும் உண்டு. இங்கே ஊழ் என்றது நல்லூழேயாகும்.

இங்ஙனம் ஏறுதழுவுதற்குரிய நாளின் முன்னாள் மாலையிலாவது, ஏறுதழுவும் நாளன்று மாலையிலாவது ஊர்ப்பொதுமன்றமாகிய தாதெருமன்றத்தே ஒரு குரவைக்கூத்து நிகழும். குரவைக் கூத்தாவது ஆடவரும் பெண்டிரும் சேர எழுவர், ஒன்பதின்மர்கூடி, கைகோத்து வளைந்து நின்று பாடியாடுவது. இக்காலத்து நிகழும் 'கும்மி' முதலியன இதன் சார்பினவேயாகும். குரவைக்கூத்து நிகழுமிடமே காதலர்கள் தடையின்றி ஒன்றுபட்டுத் தம் உள்ளக்கருத்துகளை வெளிப்படுக்கும் இடம். ஏறு தழுவும் நாளின் முன்னாளாயின் தம் காதலரை ஏறு தழுவுதற்குத் தூண்டும் பாட்டுக்களும், ஏறுதழுவிய நாளாயின் தம் காதலர் வெற்றியைக் கொண்டாடிப் பாடும் பாட்டுக்களும் நிகழும். 'எம் தந்தையார் குறித்துள ஏறுகளைத் தழுவினார்க்கே யாம் உரியேம்; ஆகவே, காதலர் முனைந்து தழுவி எம்மை யடையுங் கடப்பாடுடையர்' என்னும் குறிப்பினை அக்காதலர்க்குத் தெரிவிப்பார்:—



காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமில்
வேரி மலர்க்கோதை யாள்;

நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியஇப்
பொற்றொடி மாதராள் தோள்;

மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியள்இம்
முல்லையம் பூங்குழல் தான்;

நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகும்இப்
பெண்கொடி மாதர்தன் றோள்; என்றெல்லாம்பாடுவார்.

இன்னும், தங்கள் காதலரை மிக வற்புறுத்தித் தூண்ட வேண்டுமிடத்து, காதலீர்! எமக்கு உரிய ஏற்றினை நாளை நீர் தழுவீரேல், எம்மை இம்மையில் மட்டுமன்று: மறுமையிலும் அடைதல் அரிது என்று குறிப்பிப்பாராய்:—

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்;

அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கரிய ... ...
.... ...ஆயமகள் தோள்; என்றும்.

உயிரை ஒரு காற்றாக எண்ணாது, பெரிதாக எண்ணிக் காத்திருக்கும் வீரமில்லார்க்கு எம் ஆயர்குலமகளிர் தோள் எய்துவதில்லை என்னும் குறிப்பில்:—

வளியா அறியா, உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்; என்றும்பாடுவார்.

இனி, ஏறுதழுவியநாளில், தம் காதலர் வெற்றிகண்டு பாடுவார் ஏறுதழுவியதால் தம்காதலர்க்கு எய்திய புண்களுக்குத் தம்முடைய முயக்கினும் சிறந்ததோர் மருந்தின்மையின், அப்புண்ணிற்கும், அயர்விற்கும் தாங்கள் செயக்கிடக்கும் வேது (ஒற்றடம்) முதலிய கடமைகளை வைத்து:—

முயங்கிப் பொதிவேம், முயங்கிப் பொதிவேம்,
... ... ... முயங்கிப் பொதிவேம்,
கொலை யேறு சாடிய புண்ணையெங் கேளோ! என்பது

போன்ற பாட்டுக்களைப் பாடுவார். மேலும், தங்கள் காதலர் எய்திய வெற்றியும், வெற்றியுடையாரையே மணக்கும் தங்கள் மேன்மையும் தங்கள் ஆயர்குடிக்குப் புதியனவல்ல வாகலின், ஏறுகளை யஞ்சும் ஆடவர்களும், அங்ஙனம் அஞ்சுவார் உளரேல் அவர்களை மணக்கும் ஆய்ச்சியர்களும் தமது குடியிலில்லை என்னும் பெருமித உணர்ச்சியோடு:—

போரேற் றருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்-
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ வெங்கேளே!

என்றெல்லாம் பாடியும் மகிழ்வர்.

இங்ஙனம் ஏறுதழுவல் பற்றித் தங்கள் குறிப்புக்கள் எல்லாம் வெளிப்படப் பாடியபின், முல்லைத் தெய்வமாகிய மாயோனை வாழ்த்திக் குரவைப்பாட்டுப் பாடுவர்.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

என்றாற்போலவும்,

இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்!
அறுவை யொளித்தான் அயர அயருந்
நறுமென் சாயல் முகமென் கோயாம்!

என்றாற் போலவும்,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன்! பண்டொருநாள் கடல்வயிறு
கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ மருட்கைத்தே!

என்றாற் போலவும்,



பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரி கமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே!

என்றாற் போலவும் பாடி, அம்மாயோனைத் தங்கள் குடியினையும் அரசர் பெருமானையும் கடைக்கணித்தருளவேண்டி, அந்திக்காலத்தே தத்தம் இல்லம் வந்துற்று மகிழ்வர்.

R வேங்கடாசலம்பிள்ளை,
(யாதவர்)
கரந்தைத் தமிழ்ச்சங்க அமைச்சர்,
தஞ்சை.

# ஸர். ஐசக் நியூட்டன்.

உலகத்தின் புத்திர ரத்தினங்களாய், "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ப
தைப் பூர்த்தி செய்துகொண்டு விளங்கா நின்ற சாஸ்திர நிபுணர்களில்
சர் ஐசக் நியூட்டன் என்பவரும் ஒருவராவர். இவரது கூரிய புத்திக்
கும் ஆழ்ந்த யோசனைக்கும் அக்காலத்தில் யாரையும் இவருக்கிணை
சொல்ல முடியாமலிருந்தது. அறியாமையிலும் மூடக் கொள்கை
களிலும் அதிகமாய் ஆழ்ந்து கிடந்த ஜனங்கள் பலரினூடே மிக
எளிய குடும்பத்திற் பிறந்து தாய் தகப்பனார் பேருதவியின்றிப்
பெருங்கியாதி பெற்றோங்கிய சர் ஐசக் நியூட்டனின் சரிதையை
ஒவ்வொருவரும் தெரிந்திருப்பது அத்யாவசியமேயாம்.

## பிறப்பு

நியூட்டன் இங்கிலாந்தில் 'லின்கான் ஷையர்' ஜில்லாவில் 'வூல்ஸ் தார்ப்' என்ற கிராமத்தில் 1642-ம் வருடம் டிசம்பர்மீ 25உ (சரியாக காலிலியோ என்ற வான சாஸ்திரி இறந்த ஒரு

வருஷத்திற்குப் பின்) பிறந்தார். இவர் தந்தையார் ஐசக் நியூட்டன் என்பவர் தன் 36-வது வயதில், இவர் தாயார் ஹாரியட் ஐஸ்கோ என்ற மாதைத் திருமண முடித்த சில மாதங்களுக்குள் விண்ணுலகை யடைந்தார். ஆதலால் நியூட்டன், தன் தந்தையார் இறந்த பின்னரே பிறந்தார். இவர் பிறந்த காலத்தில் இவருடைய உருவம் மிகச் சிறியதாய், பார்த்தோர் இவர் வெகு நாளைக்கு நிலைத்திரார் என்றஞ்சும்படியாக அவதரித்திருந்தார். இறைவனருளால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து முதலாவது சிறிய பள்ளியில் வாசித்துப் பிறகு 12-வது வயது வரையில் 'கிரான்தம்' என்ற இடத்திலுள்ள பள்ளியில் வாசித்து வந்தார். இவருடைய மூன்றாவது வயதிலேயே இவர் தாயார், பர்னபாஸ் ஸ்மித் என்பவரை மறுமண முடித்துக்கொண்டு நியூட்டனைத் தன் தாயார் வசம் ஒப்புவித்துச் சென்றுவிட்டார்.

## படிப்பும் இளமைச் செய்கைகளும்.

நியூட்டன், சிறு வயதிற் கல்வியிற் கவனஞ் செலுத்தாமலிருந்து பள்ளியில் கடைசிப் பையனாகவே யிருந்தார். ஆனால் ஓர் தினம் இவருக்கு முதன்மையா யிருந்த ஒரு பையன், இவரை வயிற்றில் ஒரு உதை உதைத்தான். அதன் பின்னரே நியூட்டன் ரோசங்கொண்டு படிப்பில் மிகக் கவனஞ் செலுத்தி எல்லாப் பையன்கள் விளையாட்டுகளில் விருப்புற் றிருக்கும்போது இவர் மாத்திரம், தான் கண்டவைகளைப் போல உருவங்களையும், இயந்திரங்களையுமே செய்வதா யிருந்தார். இப்படியாக, இவர் தன் இள வயதில் காற்றினாற் சுழலும் இயந்திரத்தையும் (Wind-mill) தண்ணீர் வீழ்ச்சியால் ஓடும் கடிகாரத்தையும் (Water-clock) மனிதனால் ஓட்டக்கூடிய சிறு வண்டியையும் யாவரும் வியக்கத்தக்கதாய்ச் செய்திருந்தார். நியூட்டன் சாதாரணமான விளையாட்டுகளை விளையாடாவிட்டாலும் சாஸ்திரங்களை யொட்டியுள்ள ஆட்டங்களைத் தன் சிநேகிதர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். பள்ளிக்கூடத்தில் காற்றாடியைப் பறக்கவைப்பார். காற்றாடி நன்றாய்ப் பறப்பதற்கு அதன் அளவு, நூல் கட்டுமிடம் முதலியவற்றைக் காண வெகு கஷ்டம் எடுத்துக்கொண்டார். காகிதத்தில் விளக்குகள் செய்து அவைகளை இருட்டான சமயங்களில் பள்ளிக்குப் போக வழிகாட்டியாய் வைத்துக் கொள்ளுவார். சில சமயம்



காற்றாடியின் வால் பக்கத்தில் இவ்விளக்குகளைக் கட்டிப் பறக்கவிட்டு ஆகாயத்தில் நட்சத்திரங்கள் போல ஜனங்களுக்குத் தோற்றுவிப்பார்.

## உயர்தரப் படிப்பும் உத்தியோகமும்.

நியூட்டனுக்கு வயது 15 ஆனவுடன் இவர் ஸ்கூலுக்குப் போகாமல் நிறுத்தப்பட்டு விளைந்த தானியங்களை விற்று வரும்படி அனுப்பப்பட்டார். ஆனால் இவரோ வேலைக்காரர்களை அனுப்பிவிட்டு வழிகளில் செடிகளினருகே அமர்ந்து தான் கொண்டு சென்ற புஸ்தகங்களை மிகக் கவனமாய்ப் படித்து வருவது வழக்கம். இதை ஓர் நாள் இவருடைய தாய் மாமன் கண்டு சந்தோஷமடைந்து இவர் மேலும் கேம்பிரிஜ் சர்வ கலாசாலையிலுள்ள டிரினிட்டி கல்லூரி (Trinity College) யில் சேர்ந்து பயிலும்படி சிபார்சுகள் செய்தார். அப்படியே நியூட்டன் தன் 18-வது வயதில் (1660-ம் வருஷம் ஜூன்மீ 5௳) டிரினிட்டி கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். இவ்விடத்திலேயே இவருக்கு உண்மையான ஞானம் பிறந்தது. இங்கே இவருடைய கல்விப் பயிற்சியில், உதவி ஆசிரியராக இருந்தவர்களைக் காட்டிலும் அதிகக் கெட்டிக்காரராயிருந்த, டாக்டர் பாரோ (Dr. Barrow) என்பவரின் கணித உபந்நியாசங்களுக்கு அதிக உதவி புரிந்திருக்கிறார். நியூட்டன் 1664-ம் வருஷம் 'ஸ்காலர்' (வித்யார்த்தி) என்ற பெயர் பெற்று 1665-ம் வருஷம் பி. ஏ. பட்டம் பெற்றார். 1667-ம் வருஷம் 'ஜூனியர் பெல்லோ' (Junior fellow) வாக நியமனம் பெற்று 1668-ம் வருஷம் யம், ஏ பரீக்ஷை தேறி 'சீனியர் பெல்லோ' (Senior fellow) வாக நியமனமும் பெற்றார். 1669-ம் வருஷம் கணிதத்தில் தலைமை ஆசிரியராக (Professor of Mathematics) கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் நியமனம் பெற்ற பிறகே சாஸ்திரங்களில் அரிய பெரிய ஆராய்ச்சிகள் பல செய்து உலகத்திற்கு உதவினார்.

## ஆராய்ச்சிகள்

நியூட்டனுடைய உன்னத சாஸ்திர ஆராய்ச்சிகள் முழுவதையுங் கூறுவதற் கிடமில்லை. ஆதலால் முக்கியமான சிலவற்றையே ஈங்குக் குறிப்பிடுவோம். சூரியன் கிரகணங்களைச் சிறிதளவாக, ஐந்து பக்கங்களையும், ஆறு கோணங்களையு முடைய ஒரு கண்ணாடி

(Glass Prism) யினுள் செலுத்தினால் மறு பக்கம் வெளிவரும் வெளிச்சம் அநேக நிறங்களை யுடையதாக நியூட்டன் காலத்திற்கு முன்னரே தெரிந்திருந்தாலும், நியூட்டன்தான் அதன் பூரணச் செயல்களைச் செவ்வனே ஆராய்ச்சி செய்தவர். இவர் மேற்கூறிய வாறு சூரிய வெளிச்சக் கதிரைக் கண்ணாடியினுட் செலுத்திய போது மறுபுறம் வரும் கதிர், தான் உட் பிரவேசித்த வழியின் நேராகவே வராமல் அம் மார்க்கத்தை விட்டு ஒரு பக்கம் ஒதுக்கப் பட்டு, வான வில்லில் நாம் காணும் சிவப்பு, ஆரஞ்சி, மஞ்சள், பச்சை முதலிய ஏழுவித நிறங்களை (Red, Orange, Yellow, Green, Blue, Indigo and Violet) வரிசைக் கிரமமாய்க் காட்டிற்று. இந் நிறங்களில் சிவப்பு நிறம், தன் ஆதி நேர் பாதையிலிருந்து சிறிதாகவும், வயோலெட் என்ற நிறம் அதிகமாகவும் ஒதுக்கப்பட்டன. நியூட்டன் இவ் வுண்மையையும், வெளிச்சம் அநேக நிறங்களை யுடையது; ஆனால் கண்களுக்கு ஏதோ ஒரே வெள்ளை நிறம்போல் தோற்றப்படுகிற தென்னும் உண்மையையும் வெளிப்படுத்தினார்.

பிறகு 'லென்ஸ்' (Lens) என்ற வட்டமான கண்ணாடிகளைக் கொண்டு பிரதிபிம்பிக்கும் தூர திருஷ்டிக் கண்ணாடி (Reflecting Telescope) யொன்று ஆறு அங்குலம் நீளமுடையதாய்ச் செய்து அதன் மூலமாய் ஜூபிட்டர் என்ற கிரகத்தையும் அதன் உபக் கிரகங்களையும், வீனஸ் என்ற கிரகத்தின் தோற்றத்தையும் தெளிவாய்ப் பார்த்தார் 1671-ம் வருஷம் ஜனவரிமீ 11௳ ராயல் சொசைட்டி (Royal Society)க்கு இப்புதிய தூரதிஷ்டிக் கண்ணாடி வரைந்தெழுதி அனுப்பப்பட்டது. நியூட்டனுக்கு நல்ல பெயருங் கீர்த்தியு மேற்பட்டு அதே தினத்தில் இவர் ராயல் சொசைட்டியின் அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

(தொடரும்)

K. G. கிருஷ்ணன் B. Sc., (Hons.)

# ஞானகலா விலாசம்.

(182-ம் பக்கம் தொடர்ச்சி)

## "நல்லது செய்ய நாலிடையூறு வரும்"

தன்னலங் கருதாமல் பொது நன்மைக்காகத் தன் அரிய காலத்தை முழுதும் செலவிட்டு உழைத்துப் பாடுபடும் ஒருவருக்கு, பெரும்பாலும் பிறர் இகழ்ந்து அவமதித்துப் பேசுதலாய இடையூறுகள் பல ஏற்படுவது இயற்கை. அதைக்குறித்துச்சற்றும் சோர்வடையாது தொட்ட காரியத்தை முட்டின்றி முடித்தலே தகுதியுடையதாகும். அவ்வாறு முடித்தற்கு முக்கியமாக வேண்டுவது இடையறா ஊக்கமேயாம். முயற்சியுடையா ரிகழ்ச்சி யடையாரென்பது உண்மையேயன்றோ. ஊக்கமுடையார் தாம் எடுத்த காரியங்களுக்கு எண்ணிறந்த இடையூறுகள் அடுக்கி வரினும் விடாது முயன்று அதனை முடித்தே விடுவர். நன் முயற்சிக்கண் ஊக்கங்கொண்டு உழைத்து வரும் உத்தமர் தம்மை ஒருவர் முன் புகழினும், இருவர் பின் பிகழினும், தாம் கொண்ட காரியத்தை ஒரு சிறிதும் தளரவிடார். ஒரு விஷயத்தில் நாட்டங்கொண்டவர் உடம்பின் வருத்தங்களைப் பாராமலும், பசிநோக்காமலும், நித்திரை கொள்ளாமலும், பிறர் தம்மை இகழ்ந்து அவமதித்தலையும் பொருட்படுத்தாமலும், பாயிற் படுக்க நேரினும், பஞ்சணையில் துயில நேரினும் கூழ் குடிக்கவேண்டினும், அறுசுவையுண்டி உண்ணக் கிடைப்பினும், வெறுப்பும், விருப்புங் கொள்ளாது மனத்தை ஒரே நிலைப்படுத்தித் தாம் கொண்ட காரியம் கைகூடும் வரை இடைவிடாது முயன்று நலம்பெறுவர் என்பது திண்ணம்.

## உத்தமதானம்.

"தானங்களிற் சிறந்தது கலாதானமே" இல்லாதார்க்கு ஒன்றினைக் கொடுப்பதே தானமெனப்படும். அதுவே புண்ணியத்தைக் கொடுக்குமென்று நூல்கள் கூறுகின்றன. அத்தானம் பொருளைக் கொடுப்பதும் அறிவைக் கொடுப்பதும் என இருவகைப்படும் அவற்றுள் தற்காலத்தில் வறுமை மிகுந்து அஞ்ஞானம் மேலிட்டு, அறிவின் பயனை யடைய இயலாது வருந்தும் ஏழைமக்களுக்கு அறிவை ஊட்டுவதற்

கான கல்வியைப் போதிப்பதற்கேற்ற வழியில், செல்வர் தம் பொருளைச் செலவிடும் கலாதானமே, ஏனைய தானங்களினும் தலைசிறந்ததாகும். ஏனெனில் கல்விநலம் வாய்ந்தவரே மக்களெனக் கருதப்படுவர், அறிவு நூல்களைக் கல்லாதவர் கேவலம் விலங்குகளையே ஒப்பர் என்பதனால் பகுத்தறிவுடைய மக்களுக்கு இன்றியமையாதது கல்வியே என்பது விளங்கும். தர்ம சிந்தனையும், தயாள குணமும், உள்ள சில கனதனவான்கள், தற்காலம் மாந்தர் இருக்கும் நிலையுணராது, ஏற்கனவே பற்பல ஆலயங்கள் நிறைந்துள்ள நம்நாட்டில் புத்தம் புதிய ஆலயங்களை யுண்டுபண்ணவும், ஆலயங்களில் உள்ள விக்ரகங்களுக்கு விலையுயர்ந்த ரத்னாபரணங்களைச் சூட்டி மகிழவுமே முற்படுகின்றனர். மாந்தர்கள் உடுக்க உடையும் உண்ண உணவுமற்று அறிவு குன்றிய காலத்துக் கடவுளிடத்து பக்தி எவ்வாறு ஏற்படும்? ஆதலால் கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியாய் இலங்கும் ஈசன், கல்லார் நெஞ்சில் நில்லான் என்பது உண்மையேயாயின் ஆலயத்திருப்பணிகள் செய்வதன் முன் மாந்தர் அறிவை வளர்க்கும் கல்விச் சாலைகளை ஸ்தாபித்தல் வேண்டும். உலகியலில் மக்களுக்குத் தெய்வபக்தியையுண்டாக்குவது கல்வியே யெனக் கண்டறிந்த செட்டி நாட்டரசராகிய, வள்ளல் கனம், இராஜா அண்ணாமலை செட்டியாரவர்கள் கோடிக்கணக்காகத் தமது பொருளைச் செலவிட்டு நம் தமிழ் நாட்டிற்கென ஓர் சர்வகலாசாலையை உண்டாக்கியிருப்பது உலகம் கொண்டாடத்தக்கதன்றோ. ஆகலின் பல்வேறு தானங்களினும் ஆத்மவளர்ச்சிக்கேற்ற கலாதானமே தலைசிறந்த தென்பதை நாம் நன்குணர்ந்து, நம்மாலியன்றவரை சிறுவர் சிறுமிகளுக்குக்கல்வி விஷயத்தில் உதவி புரியவேண்டும்.

* * *

**ஐயன்பெருமாள்க் கோன்,**
தமிழாசிரியர்,
செயிண்ட் ஜோசப் கலாசாலை,
திரிசிரபுரம்.

# லீலாவதியின் நிருபம்.

---

## இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத முறைகள்.

(185-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஒரு வேளை உன் மீது யாதொரு தவறும் இல்லாதிருக்கையில் உன் பர்த்தா உன்னைக் கோபித்துக் கொள்ளலாம். அப்பொழுது அவனது சொல் உன் மனத்தைத் தீப்போல் சுடுமாயினும், அதற்கு நீ மாறாக, முகம் கடுகடுத்துப் பேசாமல், மலர்ந்த முகத்துடன் நேர்மை, உண்மை, இதம், அன்பு, இவற்றோடு கூடிய வார்த்தைகளை இன்புடன் கூறி அவன் முனிவும் முறுவலாகும்படி செய்து கொள்.

அவன் காரணம் பற்றிக் கோபமடைவானாகில்; மறுமுறை முதல் உன்னைச் சீர்படுத்த முயன்று கொள். அங்ஙனமின்றி அவன் மேல் உள்ள கோபத்தை, அவனுக்கெதிரிலேயோ, நண்பர் முன்னிலையிலோ, அல்லது குழந்தைகளை அடிப்பதாலோ, வீட்டுப் பண்டங்களை திடீர், திடீர் என வைப்பதாலோ உன் கோபத்தைக் காட்டாதே. நான் மேற்சொன்ன குணங்கள் யாவும் கீழ்மக்கள் கொண்டொழுகுபவைகளேயாம்; ஆகையால் அவை உன்னிடம் அணுகா வண்ணம் காத்து, நம் குடிமைக்கேற்ப மேலான எண்ணங்களைக் கைக்கொள்வாயாக.

கணவன் விரும்பிய வாறெல்லாம் செய்வதே மனைவியின் கடமையாகும்: ஆகையால் அவன் ஒன்றைச் செய்யச் சொன்னால் ஏன்? எதற்காக? என்ற இவ்விதக் கேள்விகளைக் கேட்காதே. கணவன் யாதொரு காரியஞ்செய்யச்சொன்னாலும் உடனே செய்யவேண்டும்; கணவன் உத்தரவின்றிக் குடும்ப காரியங்களைத் தவிர வேறெதையும் செய்யத்துணியாதே.

நீ யாரிடத்தும் பேசும்போது வெகு அமரிக்கையுடன் பேசவேண்டுமே அல்லாது இடி இடித்தாற்போல் பேசுவது ஆகாது.

ஒருபெண் பேசினால் பூமி அதிரும்
இரண்டு பெண் பேசினால் பூமி சுவறும்
மூன்று பெண் பேசினால் நட்சத்திரம் உதிரும்
நான்கு பெண் பேசினால் உலகம் யாதாகுமோ என்பதால்

நீ அதிர்ச்சியாய்ப் பேசக்கூடாது. பெண்கள் தங்கள் குயில் போன்ற மெல்லிய குரலால் பேசவேண்டும்.

வீட்டுப் பண்டங்கள் யாவற்றிலும் அதிகக் கவனமாய் இருக்க
வேண்டும், தூசி, பூச்சி, எலி முதலியன நெருங்காமலும், குழந்தை
கள் எடுக்காமலும் கணவனுக்காக வைத்துள்ள பண்டங்களைப்
பத்திரமாய் வைக்கவேண்டும். மூடவேண்டிய சாமான்களை மூடா
மலும், கையாளாமல் பாத்திரங்களைக் களிம்பு ஏறும்படிக்கும்
விட்டு வைக்கக்கூடாது. மண்பாண்டம், மூங்கில் கூடை முதலிய
வற்றை மலிவாய் இருக்கும் பொழுது வாங்க உன் கணவன் மனம்
எங்ஙனமென்பதை அறிந்து கொள். யாதொரு விஷயத்தையும் முன்
ஆலோசனையின்றிச் செய்யாதே. குடும்ப வேலைகள் யாவும்
முடிந்த பின்பு பகற் காலங்களில் ஓய்வாய் இருக்கும் பொழுது;
அண்டை வீட்டு, அயல் வீட்டு மாதர்களை அழைத்து வைத்துக்
கொண்டு ஊர்வம்பு பேசுதல், சொக்கட்டான் ஆடல், பல்லாங்குழி
ஆடுதல் முதலியவைகளில் காலம் கழிப்பதைப் பார்க்கிலும் நல்ல பிர
பந்தங்களை வாசித்தறிவதினாலும், அல்லது கல்வி இல்லாத அண்டை
அயல் வீட்டு யாதவச் சிறுமிகளுக்குத் தெய்வபக்தி தேச பக்தி
ஊட்டகூடிய சிறு கதைகள், நற்குணங்கள் இவைகளைப் பயிற்றுவிப்
பதினாலும் உன் கணவனுடைய அனுமதியின் பேரில் பொழுது
போக்கினால் மிகவும் நல்லது. மேலும் நமது குல முன்னேற்றத்திற்
காக முன் வந்துள்ள பல பெரியோர்கள் முயற்சியாலும் உதவியா
லும் யாதவமித்திரன் என ஓர் மாதப் பத்திரிகை வருகிறது. அதில்
பல விதமான விஷயங்கள் கல்வி, பெருளாதாரம், ஆசாரச் சீர்திருத்
தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்று
வருவதால் உன் கணவனை அதில் ஓர் சந்தாதாராய்ச் சேர வேண்டிக்
கொள். இன்னும் ஒழிவுள்ள நேரத்தில் கைராட்டினத்தில் நூல்
நூற்றல் ஆகிய இவைகளில் செலவிடு. ஆடல், பாடல், நடனசாலை
இவைகளைக் கனவிலும் நினையாதே. உன் சினேகிதிகள் இவைகளைப்
பற்றிப் பிரஸ்தாபம் செய்யக்கூட இடங்கொடாதே; அன்றியும்
தலையை நன்றாய் வாரிமுடியிட்டோ அல்லது பின்னிக்கொண்டோ,
நெற்றியை நன்றாய் அலம்பிக் குங்குமமோ அல்லது சாந்துப்
பொட்டோ இட்டுக்கொண்டு உன்னைத் திருத்திக்கொள்.

(தொடரும்)

ஸி. இராஜரத்தினம்,

யாதவன்.

# கமலா.

## (ஒரு சீர்திருத்தச் சிறு கதை.)

(168-ம் பக்கம் தொடர்ச்சி)

இக்கொடிய ஆசாரப் பேய்பிடித்த கிராமங்களில் வள்ளியூரும்
ஒன்று. இராமசாமிக் கோனார் அவ்வூர்வாசி யானதால் அவரை அப்
பேய் பிடித்துச் சிறிது ஆடத் தொடங்கிற்று. அவருடைய ஆசாரப்
படி வள்ளியூரி லிருக்கும் தனது தங்கை புதல்வனுக்குக் கமலாவைக்
கட்டாயமாகக் கலியாணஞ் செய்யவேண்டிய தாகிறது. அவ்விதம்
நடைபெறுமென்பதே வள்ளியூர் வாசிகளின் நம்பிக்கை. ஏனென்
றால் அவர்கள் ஆசாரப்படி, கமலாவை வேறு எவருக்கும் கலியாணஞ்
செய்து கொடுக்க முடியாது. இராமசாமிக் கோனாரின் சகோதரி
மகனான அவனுக்கு, அவர் புதல்வியான கமலாவை எவருடைய சம்
மதத்தையும் எதிர்பாராமல் கலியாணஞ் செய்துகொள்ளலா மென்பது
அவர்களுடைய ஆசார சட்டம். ஆனால் இராமசாமிக் கோனாருக்கு
இவ் விஷயத்தில் ஒரு சிறிதாவது மனமில்லை. கமலாவிற்குக் கணவனா
யிருக்கும் யோக்கியதை அவனிடம் சிறிதளவு மில்லையென இராம
சாமிக் கோனாருக்கு நன்கு தெரியும். அவனது தடுமாறும் உரையும்
தனியான உடை நடை பாவனைகளையும் விவரித்துக் கூறி அவனுக்
கும் கமலாவிற்கும் விவாஹப் பொருத்தம் கற்பித்த அறிவிலிகளு
டைய ஆசாரப் பித்தை வெளிப்படுத்த நினைக்கவில்லை. இவையெல்
லாம் நன்கு தெரிந்த இராமசாமிக் கோனாரும் அவர் மனைவி லக்ஷ்மி
யம்மாளும் தனது ஒரே அருமைப் புதல்வியை-கற்றறிந்து நற்குணம்
வாய்ந்த கற்பகக் கொடிபோன்ற கமலாவை வள்ளியூரில் தள்ளுவ
தற்கு எண்ணுவார்களா? இவ்விஷயத்தை முன்னிட்டுத்தான் லக்ஷ்மி
யம்மாளுக்கும் இராமசாமிக் கோனாருக்கும் முடிவுபெறா விவாதங்
கள் நடைபெற்றுக்கொண்டு வந்தன. அவ்விருவர் விவாதங்களும்
இப்போது முடிவடைந்து விட்டன. கமலாவின் கலியாண விஷய
மாக உற்றார் உறவினரை யெல்லாம் வெறுக்கவேண்டிய திருக்கிறதே
எனச் சஞ்சலங் கொண்டிருந்த இராமசாமிக் கோனார் லக்ஷ்மி யம்மா
ளின் மனோநிலையைவாதிட்டுத்திருப்புவதற்கு இவ்வளவுகாலம் வேண்
டியதாயிற்று. தனது மகள் கமலா ருதுவாகி மூன்று வருஷங்களுக்கு
மேலாவதாலும் தனது குலத்தில் அவளுக்குத் தகுந்த ஆடவரில்லாத

பெரும் குறையாலும் இராமசாமிக் கோனார் கமலாவிற்குக் குறிப்பிட்டிருக்கும் கணவன் அவளுக்கு மிகப் பொருத்தமானவனாகையாலும் இராமசாமிக் கோனாரின் கொள்கையில் லக்ஷ்மியம்மாள் சேர்ந்து கொண்டாள்.

(3)

இராமசாமிக் கோனாருக்கு இங்கும் இலங்கையிலும் உத்தம நண்பரா யிருந்த பெருமாள்க் கோனாருக்குக் கோபாலனென்ற ஒரே புதல்வனே உண்டு. கோபாலன் குண நலம் மிக்கவன். இப்போது அவன் பிரவேச வகுப்பில் படித்து வருகிறான். கோபாலன் தன் சிறுபருவ முதலே தந்தையோடும், தனியாகவும் கமலாவின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தான். கமலாவின் தந்தையும் தாயும் அவனை நன்கு உபசரித்துப் பாராட்டி வந்தனர். கமலா ருதுவானதின் பிறகு அவள் வீட்டிற்குக் கோபாலன் போவதில்லை. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது கோபாலன் கமலாவிற்குச்சிலபோது பாடங்கள் கற்பித்து வந்தான். இருவருக்கும் சிறு பருவம் முதலே மனதுள் சினேக முண்டாயிற்று. இப்போது அச்சினேகம் காதலாக மாறிவிட்டது. கோபாலன் கமலாவின் வீட்டிற்குப் போவதில்லையானாலும் அவள் கலியாண விஷயத்தில் கவனமாகவே இருந்தான். அவன் தந்தையான பெருமாள்க் கோனார் அவனது கலியாண விஷயத்தை முன்னிட்டுப் பேசினார். அப்போது அவன் கமலாவின் கலியாணத்திற்குப் பிறகு தனக்குக் கலியாணம் நடைபெற்றால் போதுமெனக் கூறிவிட்டான். கமலாவும் தன் தந்தை, கோபாலனுக்கன்றி வேறு எவர்க்கும் தன்னை விவாஹஞ் செய்யாரெனத் திடமாக எண்ணியிருந்தாள். இவ்வுறுதியான எண்ணம் அவளிடம் இல்லாமலிருந்தால் இக்கதை வேறு விதமாக எழுதவேண்டியதாகும். கோபாலனுக்கும் கமலாவிற்கும் கலியாணமென்றவதந்தி ஊரெங்கும் கிளம்பிற்று. ஆனால் பெருமாள்க் கோனார் ராமசாமிக் கோனார் என்ற இரு உயிர்த் தோழர்கள் மாத்திரம் கமலா கோபாலர் கலியாணத்தைப்பற்றிக் கலந்துகொள்ளவில்லை. கமலாவும் கோபாலனும் தம்பதிகளாக வேண்டுமென்ற ஆசை இருவருக்கும் உண்டு. இருவரிடமும் ஏற்பட்ட அச்சத்தால் முதலில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. மிகவும் அன்புடையாரிடை இம்மாதிரி அச்சம் நிகழ்வதுண்டு.

ஒருநாள் இராமசாமிக் கோனாரும் அவர் மனைவி லக்ஷ்மியம்மாளும் கமலாவிற்கும் கோபாலனுக்கும் நடக்கப்போகும் கலியாண விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பெரு



மாள்க் கோனாரும் இயல்பாய் வந்துசேர்ந்தார். நல்ல வேளையில் அண்ணாவும் வந்தீர்கள். கமலாவின் கலியாண விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். நமது கோபாலனுக்கும் கமலாவிற்கும் கலியாணஞ் செய்துவிடுவதென்று தீர்மானப்படுத்தி யிருக்கிறோம். ஊரெல்லாம் இதேபேச்சாக இருக்கிறது. நீங்கள் இரண்டுபேரும் இன்னும் கலந்துகொள்ளவில்லை'' என்று லக்ஷ்மியம்மாள் கூறி முடிக்கு முன் பெருமாள்க் கோனார் கண்ணன் கிருபையால் எல்லாம் சிறப்பாக நடைபெறும்'' என்று கூறினார். லக்ஷ்மியம்மாளின் முயற்சியால் கலியாணத்திற்கு வேண்டியன வெல்லாம் நடைபெற்றன. இராமசாமிக் கோனாரின் கவலைகள் ஒழிந்தன. தன் அருமைப்புதல்விக்குப் பொருத்தமான புமான் கிடைத்ததுபற்றிச்சந்தோஷம் உண்டாயிற்று. கமலாவிற்கும் கோபலனுக்கும் மனப்பூரிப்பு ஏற்பட்டது. கலியாணத்திற்காகத் தங்கள் ஊரிற்குக்கடிதம் அனுப்பினதற்கு ஒருவராவது வராததினால் லக்ஷ்மியம்மாளுக்குச் சிறிது மனோசஞ்சலம் ஏற்பட்டது. தன்னுடையவும் தன் கணவனுடையவும் உடன்பிறந்தார்கூட ஒருவர் வரவில்லையே என்ற கவலை அவளுக்கு ஏற்பட்டது. தன் மகளுக்கு ஏற்பட இருந்த பெருங் கஷ்டங்களை எண்ணினபோது அவையெல்லாம் பறந்துவிட்டன. இராமசாமிக் கோனாருக்கு இவ்விஷயத்தில் சிந்தை செல்லவே இல்லை. அவ்விருவருக்கும் தங்கள் குலத்திலேயே வெறுப்பு உண்டாயிற்று. இல்லறத்தின் இயல்பும் தம்பதிகளின் தன்மையும் தெரியாத அப்போலிகள் பகையைப் பொருட்படுத்துவரோவர்? நீண்டநாளாய் எதிர்பார்த்திருந்த காதலி காதலர்களுடைய கலியாணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. யாவரும் தம்பதிகளை ஆசீர்வதித்துப் புகழ்ந்து பேசினார்கள். காதலர்இருவர் கருத்தொத்து வாழ்ந்து இல்லறத்தைத்திறனே நடத்தினர். இராமசாமிக் கோனாருக்கு ஆண்மகவில்லாக் குறையும் பெருமாள் கோனாருக்குப் பெண் மகவில்லாக் குறையும் நீங்கிற்று. யாவரும் இன்புற்றிருந்தனர்.

ச. செல்லம்.

சுசீந்திரம்.

# கொம்பு சீவுதல்.

(மாடுகளின் கொம்புகளைச் சீவுவதனால் உண்டாகும் அபாயங்கள்.)

1930ம் வரு ஜனவரீ வெளிவந்த மூன்றாம் நெம்பர் இந்திய கால்நடை பத்திரிகையில் மாடுகளின் கொம்புகளைச் சீவுதலைக் குறித்தும் அதனால் ஏற்படும் அபாயத்தைக் குறித்தும் ஒரு சிறு வியாசம் செங்கற்பட்டு கால்நடை சிகிச்சை அசிஸ்டண்டு சர்ஜனாகிய ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களால் எழுதப்பட்டிருக்கும் சாராம்சத்தை இதனடியில் எழுதியிருக்கிறோம். அதை நமது மித்திரன் நேயர்கள் கவனித்து வாசிப்பதுடன் மற்ற விவசாயிகளுக்கும் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மாட்டுச் சந்தைகளில் விற்பனைக்காகக் கொண்டுவரும் மாடுகள் பசுக்கள் முதலியவைகளின் கொம்புகளைப் பளபளப்பாய் இருக்கும்படி சீவும் வழக்கம் இருந்துகொண்டிருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இப்படிச் செய்வது முக்கியமாய் மாடுகளினுடையவும் பசுக்களினுடையவும் கொம்புகளின்மேற் விழுந்திருக்கும் உருண்டை வடிவமான வரைகளை மறைப்பதற்கும் அம்மாடுகள் வயது சென்றவைகளாயிருந்தபோதிலும் அவைகள் இளமையான மாடுகள் என்று தோற்றும்படியும் இவ்வேலை செய்யப்படுகிறது. இப்படிச் செய்யும்போது கொம்பின் நீளத்தின் சில பாகத்தைக் கத்தரித்து உரித்துக் கொம்பு பளபளப்பாயிருக்கும்படி சீவப்படுகிறது. அப்படிச் செய்வதால் கொம்பு கரடுமுரடில்லாமலும் பளபளப்படைந்தும் மாட்டிற்கு ஒரு அழகைக் கொடுக்கிறது. ஒவ்வொரு மாட்டுச் சந்தையிலும் இவ்வேலை செய்வதற்கு அநேக வேலைக்காரர்களைப் பார்க்கலாம். அவர்கள் மாடொன்றுக்கு அணா 8 வாங்கிக்கொண்டு கொஞ்ச நேரத்திற்குள் இவ்வேலையைச் செய்து முடிக்கிறார்கள். இப்படி மாட்டுக் கொம்புகளை அவசரமாய் வெட்டி ஜாஸ்தி சம்பாதிக்க வேண்டுமென்று அவசரவேலை செய்யும்போது அநேகமாய்க் கொம்பின் இளம்பாகமாகிய குருத்துப் பாகத்தையும் சேதப்படுத்தி விடுகிறார்கள். இப்படிக்கொத்த சம்பவங்கள் நேரிடும்போதும் கொம்புகளின் கெட்டிப்பாகத்தை ஜாஸ்தியாய்ச் சீவும்போதும் அம்மாடுகள் வெயிலின் கொடுமையால் பாதைப்பட்டுக் கஷ்டப்படுவதற்காகக்



கொம்புகளின்மேல் ஈரத்துணியையாவது சாணியையாவது பூசி அவைகளை ஈரப்பதமாகச் செய்து வைக்கிறார்கள். விலையுயர்ந்த மாடுகளின் கொம்புகளை உரித்துச் சீவும்போது எதாவது குருத்தில் காயம் பட்டால் அப்பேர்ப்பட்ட மாடுகளின் தலையில் வந்திருக்கும் மாட்டு ஈ முதலியவைகளின் உபாதையை நீக்கும்படி தலையை ஆட்டும்போதாவது அல்லது மற்ற மாடுகளுடன் சண்டைபோட எத்தனிக்கும் போதாவது அப்பேர்ப்பட்ட மாடுகளின் கொம்புகள் கெட்டியான சுவர் மேல் தாக்கும்போதாவது அல்லது சண்டைபோடும் மாட்டுத் தலையின்மேல் தாக்கும்போதாவது மெல்லிசான கொம்புகள் ஒடிந்துபோய் மாட்டின் அழகையும் விலையையும் குறைப்பதுடன் அநேக சந்தர்ப்பங்களில் மாட்டிற்கும் கொம்பிலிருந்து சீவடிந்து நாளுக்கு நாள் மாடு கேவலமடைந்து நஷ்டம் உண்டாகிறது. அப்பேர்ப்பட்ட மாடுகளை நாம் அநேகமாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஆகையால் மாடு விற்பனைக்குக் கொண்டு வருபவர்கள் பார்வைக்காகச் செய்யும் வேலை அப்பால் மாடு வாங்குகிறவர்களுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டாக்குகிறது.

அத்துடன் போகாமல் ஒடிந்த கொம்புக்குச் சரியானபடி சிகிச்சை செய்யத் தெரியாமல் நாட்டிலுள்ள மாட்டு வைத்தியர்கள் சில தினுசு மரங்களின் பால்களை அடித்துத் தலைமயிர் சுத்தி வைப்பதால் உள்ளிருக்கும் ரணம் அதிகமான புரையோடி மாட்டுக்குப் பாதையை உண்டாக்குகிறது; ஆகையால் கிருஷிகரெல்லாம் மாடுகளின் கொம்புகளைச் சீவி அவைகளை ஆபத்திற்குள்ளாக்கக் கூடாதென்றும் மாடு விற்கும் வியாபாரிகளுக்கு இக்கொம்பு சீவுவதால் உண்டாகும் கெடுதிகளையும் வற்புறுத்திச்சொல்லும்படியும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கிருஷிகன்.

# கால் நடை வைத்தியம்.

(கால் நடைகளின் வியாதிகளும், சிகிச்சைகளும்)

(115-ம் பக்க தொடர்ச்சி)

அம்மை— இவ்வியாதிகண்டால் உடலெல்லாம் கொப்புளிக்கும். கண்கள் சிவக்கும் வாயிலிருந்து நுரையும் மூக்கிலிருந்து சளியும் விழும். பசியில்லாதிருக்கும். வயிற்றுக் கழிச்சலும் காணுவதுண்டு.

சிகிச்சை—தேங்காய்த் திருவலை வெங்காயத்துடன் சேர்த்து இடித்துத் தண்ணீரும் காடியும் சமமாகக்கலந்து வாய்க்குள் வார்க்கலாம். இவ்வியாதிகண்ட மாட்டின்பாலை உபயோகப்படுத்தக்கூடாது. மாடுகளுக்கு ஒருதரம் அம்மை வந்தால் மறுதரம் வராது.

காய்ச்சல்—இவ்வியாதியினால் மாடுகள் நடுக்கங்கொண்டு பசியற்று நாளுக்குநாள் இளைக்கும்.

சிகிச்சை—மிளகுத்தூளை வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

அடைப்பான்—இது மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் வரும் ஒரு கோரமான வியாதி. இவ்வியாதி உண்டானால் மண்ணீரல் வீங்கி இரத்தம் கெட்டுக் குடலில் வலியுண்டாகும். இதற்குக் காரணம் அடைப்பான் பூச்சி இரத்தத்தில் சேர்வதே. இவ்வியாதிகண்ட சிலமணிநேரத்திலும் இரண்டொரு நாட்களிலும் கால்நடைகள் இறப்பதுண்டு.

சிகிச்சை—இதற்குச் சிகிச்சையே இல்லை. நோய்கண்ட மாட்டை அப்புறப்படுத்தி அது இருந்த இடத்தை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். அது அதிகம் கஷ்டப்படாமலிருக்க நோய்கண்டவுடனே காலையரைக்கால்படி ஆளிவிதை எண்ணெயில் ஒரு டிராம் கார்பாலிக் ஆஸிட்டைச் சேர்த்துக் கொடுக்கலாம்.

கழிச்சல்—மழைக்குப்பின் முளைக்கும் இளம் புல்லை அதிகம் தின்பதனாலும் வெயிற் காலத்தில் வறட்டுத்தீனி தின்னும் மாட்டுக்குப் பச்சைப்புல் கொடுப்பதனாலும் அசுத்தமான தண்ணீர் காட்டுவதனாலும் வயிற்றுப்போக்கு உண்டாகும்.

சிகிச்சை—இந் நோய்கண்ட மாட்டிற்கு ஒருபடி ஜலத்தில் கால்படி ஆளிவிதை யெண்ணெயைக் கலந்து கொடுக்கச் சொஸ்தமாகும்.

சொறி—மாட்டிற்கும் ஆட்டிற்கும் தோலில் உண்டாகும் ஒரு தொற்றுவியாதி. ஆரம்பத்தில் இது திமிலிலும் வாலிலும் கண்டு பின்பு மற்ற இடங்களுக்குப் பரவும். ஆட்டுக்குச் சொறிவந்தால் மயிர் கற்றை கற்றையாக உதிரும். மயிர் உதிர்ந்த இடத்தில் கொப்புளம் காணும்.

சிகிச்சை—சொறி கண்டவைகளை மற்றவைகளினின்று நீக்கித் தனித்தனியே கட்டவேண்டும். தினந்தோறும் அவைகளைச் சோப்புப் போட்டுக் கழுவிக் கந்தகம் 4-பாகம் ஆளிவிதை எண்ணெய் 8-பாகம் கற்பூரத்தைலம் 2-பாகம் இவைகளைக் கலந்து சொறிகண்ட இடத்தில் தேய்க்கவேண்டும். இளைத்த மாட்டிலும் ஆட்டிலும் பேன் பிடிப்பதுண்டு. அதற்கும் இதுவே சிகிச்சை.



சேற்றுப்புண்—மாட்டை ஈரமான சதுப்பு நிலத்திலும் சேற்றிலும் கட்டுவதனால் அதன் கால்களில் சேற்றுப்புண் உண்டாகி வீக்கம் உண்டாகும்.

சிகிச்சை—மாட்டைக் காய்ந்த இடத்திற்கு மாற்றிச் சேற்றுப்புண் உள்ள பாகத்தைப்பினெய்ல் அல்லது கார்பாலிக் ஆஸிட் கலந்த ஜலத்தைக்கொண்டு கழுவி மயில்துத்தத்தைப் பொடிசெய்து தாரில் கலந்து புண்ணின்மேல் தடவக் குணமாகும்.

சுளுக்கு—கால் சதையிலும் நரம்புகளிலும் சுளுக்கு உண்டாகி வீக்கம் கண்டு மாடு நடக்கமுடியாமல் நொண்டும்.

சிகிச்சை—இதற்குச் சூடு போடுவதுண்டு. சுளுக்குக் கண்ட இடத்தில் வென்னீர் ஒத்தடம் கொடுக்கலாம். தண்ணீரில் இரண்டுமணி நேரம் நிற்கவைப்பதினாலும் சுளுக்கு நீங்கும்.

கொம்பு முறிதல்—மாடுகள் ஒன்றுக்கொன்று முட்டிச் சண்டை செய்வதனாலும் பாறை மேடு இவற்றில் முட்டித் தாக்குவதினாலும் வேறு காரணங்களாலும் கொம்புகள் முறிந்துபோவதுண்டு.

சிகிச்சை—உள்ளிருக்கும் கொம்பு குருத்துக்குப் பழுதில்லாமல் மேல் கொம்புமாத்திரம் மட்டைபோல விழுந்துவிட்டால் அப்போது குருத்தைச் சுற்றி ஈரத்துணி கட்டினால் போதும். கொம்பும் குருத்தும் ஒடிந்துபோனால் ஒடிந்த இடத்தில் கரடுமுரடாக இருப்பதை வாளினால் ஒழுங்காக அறுத்து இரத்தத்தைச் சூட்டுக் கோலால் நிறுத்திக் கர்பாலிக் ஆஸிட் கலந்த தண்ணீரைவிட்டுக் கழுவித் தார் தடவின நாரை அதன்மீது சுற்றித் துணியினால் கட்டிவிடவேண்டும்.

கன்றின் கழிச்சல்—கன்றுகள் பால் அதிகம் குடிப்பதனாலும் இளம்புல் அதிகம் தின்பதனாலும் கழிச்சல் உண்டாகும். பட்டினி கிடப்பதனாலும் இது உண்டாகலாம்.

சிகிச்சை—கால்படி கஞ்சியில் 2 அவுன்ஸ் விளக்கெண்ணெய் கலந்து கொடுக்க வியாதி சொஸ்தமாகும்.

கன்றின் மலச்சிக்கல்—தாய்ப்பசுவின் சீம்பாலே இதற்கு மேலான மருந்து. பேதிக்குக் கொடுக்கவேண்டியிருந்தால் கால்படி அரிசிக் கஞ்சியில் 2 அவுன்ஸ் விளக்கெண்ணெயும் அரைக்கால் ரூபாய் எடை சுக்குத்தூளும் கலந்து கொடுக்கலாம்.

(தி. 747) எஸ். பெருமாள் கோன்
போர்டு ஸ்கூல் உபாத்தியாயர்,
திண்டுக்கல்.

# மித்திரனின் மாட்சி.

யாதவ மித்திரன் பத்திரிகையைக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தேன். நவீன உலகின்கண் தற்போது தோன்றியுள்ள பத்திரிகைகள் எண்ணுதற்கரியன. வெளிநாடுகளில், உணவுப்பொருள் எவ்வாறு உயிருக்குகந்ததாகக் கருதப்படுகின்றதோ அவ்வாறே பத்திரிகைகளும் மாந்தர் சமயசமூக சமுதாய முன்னேற்றங்களுக்கு இன்றியமையாத சாதனங்களாகப் போற்றப்படுகின்றன. ஆனால் நம் பாரத தேசத்திலோ பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அவ்வளவு உச்சம் பெறவில்லை; பத்திரிகை அளவும் வளர்ந்திடவில்லை. எனினும் சந்திர சூரியன் தனது ஒப்பற்ற ஒளிக்கிரணங்களை உலகெங்கணும் பரப்பி விளங்குவதால் நம் பாரதநாடு அதிவிரைவில் பத்திரிகாபிமானத்தால் மேன்மையுற்றோங்குமென்பது அன்பர்கள் உள்ளக்கிடக்கை.

பத்திரிகை உலகில் தமிழகம் எங்ஙனம் பெற்றிருக்கிறதென்பது சிந்திக்கற்பாலது. பலப்பல பத்திரிகைகள் தோன்றி நொடிக்குள் நசித்துவிட்டன. காரணம் பொதுஜன ஆதரவின்மையே. ஆதலால் எவ்வித உயர்ந்த பத்திரிகையானாலும் பொதுஜன ஆதரிப்பில்லாவிடில் நிலைநிற்றலரிது. இனிய தமிழராய்ப் பிறந்தோரனைவர்களும் நன்னோக்குடைய தமிழ்ப்பத்திரிகைகளை இயன்ற அளவில் ஆதரித்தல் சிறந்த கடமையாகும். அதனிலும் கோமேய்த்தல் ஒன்றையே குலத்தொழிலாகக் கருதி, அடைதற்கரிதாகிய இம் மானிடப் பிறவியை வீண்போக்காது நவீன உலகில் ஏனையோரைப் போல் நாகரிகத்திலும் வாணிபம், கைத்தொழில், விவசாயம், கல்வி முதலிய நானாவித உன்னதத் துறைகளிலும் நமது யாதவகுலத்தோர் மேலோங்குதற் பொருட்டு மாணிக்கம்போல் மாதவகுலத்திற்கென்றே யாதவமித்திரன் உற்பவித்திருக்கின்றது.

லோக நாயகனாகிய ஸ்ரீ கண்ணபிரானால் யாதவகுலம் எவ்வண்ணம் புகழ்பெறுகின்றதோ அவ்வண்ணம் யாதவமித்திரன் யாதவகலா வல்லவர்களின் இன்னுரைகளோடு வெளிவந்துலாவுதல் யாதவகுலத்தின் தவப்பயனே. ஏனைய வகுப்பினர் பத்திரிகைகளாலும் புதிய நூல்களாலும் முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்க, நம்மவர்கள் ஆழ்ந்த நித்திரையில் அயர்ந்துகிடக்கின்ற தருணத்தில் சமய சஞ்சீவிபோல் மித்திரன் கலைமணம் வீசி இன்னமுதூட்ட வந்துளது பொன்னேபோல் போற்றத்தக்கது.



மித்திரன் மற்ற பத்திரிகைகளைப்போல ஜாதித்துவேஷம் சமயத்துவேஷம் முதலிய அழுக்காறின்றிப் பண்டை நூல்களின் தத்துவங்களைப் பெரிதும் போதிக்கின்றது. யாதவமக்களின் மாண்பினை நன்கு தெரிவிக்கின்றது. அவர்கள் மேம்பாடடைவதற்கான விசேஷ சீர்திருத்தங்களை எடுத்தியம்புகின்றது. யாதவர்கள் சமுதாய சீரும் சிறப்பும் எய்துவதற்கென்றே கங்கணம் பூண்டுளது. யாதவமித்திரன் படிக்குந்தோறும் இன்பம் நல்குகின்றது. இதன் சந்தா மிகச்சிறிது. ஆனால் இதன் மகிமை சாலப் பெரிது. பலவழிகளிலும் நம் குலமணிகள் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மு. நா. பிள்ளை.
போஸ்டு மாஸ்டர்,
இன்டான். எப். எம். எஸ்.

---

# அடிமைப் புத்தியை அகற்றவேண்டும்.

ஸ்ரீ நம்மாழ்வார் அவதாரஸ்தலமாகிய ஆழ்வார் திருநகரியின்கண் வசித்து வரும் யாதவமக்களின் பான்மையை யான் என்னென்று உரைப்பேன்.

ஒவ்வொரு யாதவ மக்களும் தக்க ஐசுவரிய முள்ளவர்களாகத்தானிருக்கிறார்கள், ஆயினும் தினசரி ஆங்குள்ள பிராமணர்கள் வீட்டில்போய் ஆணும் பெண்ணும் அடிமைத் தொழில் புரிந்து வந்தால்தான் அவர்களுக்குத் திருப்தி. அந்தோ! அதிசயம்! அவர்களுடைய மூட நம்பிக்கையை யான் என் சொல்வேன். பிராமணர்களுக்கு அடிமைத்தொழில் புரிந்துவந்தால் தாங்கள் மோட்ச பதவியைப்பெறலாமென்றும் பிதற்றிக்கொண்டு அவ்வாறு நடந்து வருகிறார்கள்.

நம் யாதவ மகான்களே யான் பிராமணத் துவேஷத்தோடு எழுதுகிறதாக நினைக்கக் கூடாது:

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்"

என்னும் செய்யுளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலும் அப்படி அடிமை புரிந்துவருவதால் அந்தப் பிராமணர்கள் நம் குலத்தை எவ்

வளவோ கேவலமாக மதித்து நடத்தி வருகிறார்கள். அதற்கு இவ் வூரினரும் ஈடுபட்டு வருகிறார்கள். இதையெல்லாம் நினைக்குங்கால் என் மனம் அனலைக்கண்ட வெண்ணெய்போல் உருகுகிறது.

இதற்குத் திருஷ்டாந்தம் பின்வரும் சம்பவத்தில் தெள்ளெனப் புலப்படும். தற்சமயம் அக்கிராமத்தில் கிராமக்கமிட்டி ஒன்று ஏற்படுத்தி அதற்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அந்த அங்கத்தினர்களுள் நம் யாதவரொருவரை நியமிக்க உத்தேசிக்கையில் அந்தப் பிராமணர்கள் யாதவனை நம்மோடு சமமாக எப்படி நியமிக்கிறது என மமதைப்பேய் பிடித்து அவர்களை ஆட்டினது. யாதவர்கள் ஒருவர்களையும் சேர்க்கவில்லை. இவ்வாறு அவர்களை நினைக்கச் செய்தது இவர்களின் அடிமைப்புத்தி அல்லவா! இனியேனும் இவர்கள் தங்களுடைய அறியாமையினின்றும் கண் விழிப்பார்களா?

குறிப்பு:—இதில் கூறிய குறைவுகளை ஆழ்வார் திருநகரி வாசிகளான நம்மவர்கள் உண்மையென்று உணர்வார்களானால் இக் குறையை அவசியம் நீக்கிக்கொள்ள விரைவில் முன்வரவேண்டும். ப-ர்.

S. வேலாயுத தாஸ்

குல வணிகர் புரம்

திருநேல்வேலி ஜில்லா.

Asst Station master, Chatrapatti. S. I. Ry.

---

## திருநெல்வேலி ஸ்ரீ பாலகிருஷ்ண இராமாநுஜ சித்தாந்த வாலிபர் சங்கம்.

11-வது ஆண்டு நிறைவு விழா.

இச் சங்கத்தின் 11-வது ஆண்டு நிறைவுவிழா நிகழும் சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் 29-ம் நாள் (12-1-30) ஞாயிற்றுக் கிழமையன்று திருநெல்வேலி தெற்கு யாதவர்கள் வீதி, ஸ்ரீ பாலகிருஷ்ண இராமாநுஜ சித்தாந்த பஜனை சபாமண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும், நமது யாதவமித்திரன் தலைமை ஆசிரியருமான திருவாளர் ஆ. கார்மேகக் கோனாரவர்கள் தலைமை வகித்தார்கள். வீரராகபுரம் J. சக்கரபாணி நம்பியார் B. A., B. L. அவர்கள் உபதலைவராக அமர்ந்தார்கள்



12-1-30 பிற்பகல் 3 மணிக்குக்கூட்டம் துவங்கி நிகழ்ச்சி முறையில் குறிப்பிட்ட வண்ணம் யாதவகுலப் பெரியார்கள் பலரால் அநேக காலக்ஷேபங்கள் நடந்தேறின. பின்னர் தலைவரவர்களின் வேண்டுகோளின்படி அவண் வந்திருந்த சி. யம். எஸ். கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் புன்னைவனநாத முதலியார் அவர்கள் செயிண்டு சேவியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் சுப்பிரமணியபிள்ளை அவர்கள், ஸ்ரீ வைணவன் பத்திராதிபர் ஸ்ரீ பெரிய நம்பியா பிள்ளை அவர்கள் ஆகிய இவர்கள் மூவரும் மேஷ சங்க முன்னேற்றம் கருதி யாதவ வாலிபர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப் பற்றிச் சில அரிய விஷயங்களை வாலிபர்கள் மனதில் பசுமரத் தாணிபோல் பதியுமாறு எடுத்துரைத்தார்கள்.

முடிவில் தலைவரவர்களின் சிறந்த சொற்பொழிவைக் கேட்டு ஆனந்திக்க எல்லோரும் எதிர்பார்த்திருக்கத் தலைவரவர்களும் தாம் நெடுங்காலமாக யாதவமக்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய முறைகளின் ஆராய்ச்சிமுடிவைத் திரட்டி, சில வார்த்தைகளில் கேட்போர் மனமும் சிந்தனையும் களிப்புறும் வண்ணம் தமது இன்னுரையை நிகழ்த்தினார்கள்.

கடைசியாகத் திருவாளர் T. கோவிந்த தாஸ் B. A., B. L. அட்வோகேட் அவர்கள் சங்கத்தின் சார்பாக வந்தன உபசாரம் கூறப்பெற்றதுடன் விழா முடிவு பெற்றது.

T. T. சுப்பிரமணியம் B. A.

(யாதவன்(

சங்க அமைச்சர்.

## நடுவெழுத்தலங்கார, விடுகவி வினா.

அறிவிப்பு.

தைமாதப் பத்திரிகையில் எம்மால் வெளியிடப் பெற்றிருந்த மேஷ வினாக்களுக்கு விடையனுப்ப நாட்கள் போதாதெனக் கடிதங்கள் வந்திருப்பதால் நாளிது பங்குனி-மீ 15-உ வரை அனுப்பலாமென ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—நடுவெழுத்தலங்கார வினா "யாதவ மித்திரன்"

வீ. எஸ். வீரணக் கோன்.

அம்பலத்தாடி,

சிறுவாலை ஜமீன்.

ஸ்ரீபாலகிருஷ்ண விலாசம், சுக்ல வருஷம் 1930.

சென்னை திருவல்லிக்கேணி யதுகுலசங்கத்தின்
காரியதரிசியும், உபதலைவருமாக இருந்து பல வருடங்களாக
உழைத்துவந்த யாதவகுலத்தலைவர்

## ஸ்ரீமாந்: முத்துசாமி பிள்ளையவர்கள்

தேகவியோகமடைந்தமைக்காற்றாது
மதுரை யாதவகுல சங்கத்தார் கூறிய
கையறுநிலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீராருஞ் சென்னைநகர்த் திருவல்லிக் கேணியில்வாழ் செங்கண் மாலாம்
பேராரும் பார்த்தசா ரதிப்பெருமான் பத்திமையே பெரிது மெய்தி
ஏராரும் யதுகுலத்தின் மணிவிளக்காய்த் தோன்றியுல கிருந்து வாழ்ந்து
நேராரு மில்லாத தபாற்றலைமை யுத்யோக நிலையைப் பெற்று,

முப்பானுண் டதுகழித்திக் கிளைப்பாறத் தொடங்கிநாள் முதற்கொண் டென்
தப்பாமெய்க் குலத்தொண்டு தனைப்புரிந்தும் யதுகுலமா சங்கத்திற்காங் [றுங்
கெப்பாருந் துதிசெய்தக் னில்லிடமா கக்கொடுத்து மெல்லு மல்லும்
ஒப்பார்யா ரெனச்சங்க மோங்கஅமைச் சியற்றிறமை ஒச்சிநின்றும்,

மன்னுதிற லுபதலைவ னெனவிருந்து சிறந்துபல வருட நன்மை
தன்னையுறப் புரிந்தும்வந்த பெருந்தகையா யதுகுலத்தின் தலைவன் யாண்டுஞ்
சென்னியெனத் திகழ்ந்தமுத்து சாமிப்பேர்ப் பெரியோனைச் செம்மையோனை
இங்கிலத்தி லாயிரத்துத் தொளாயிரத்து முப்பானுண் டிரண்டாந் திங்கள்,

ஆனபிப்ர வரிபதினைந் தாம்திகதி சனிவார மருக்கன் றேன்றி
வானிலெழு பகற்றசமா மணிநேரத் திழந்தோமிவ் வள்ள லான
தேனவிழு மொழியான்றன் பிரிவால்யா முறுதுயரஞ் செப்பற் பாற்றோ
பானிலவை யிழந்தஇர வன்றோவிப் பெரியனிலாப் பரவசங்கம்,

அந்தோதன் மூப்பான வயதுறபத் தைந்திலுந்தன் னகஞ்சற் றேனும்
பிந்தாது சலியாது யாதவமகா நாடு பிறங்கிக் கூடும்
நந்தாத நகரங்க டொறும்பிரதி நிதியாப்போய் நயந்து மீளுஞ்
சந்தான கரணியன இவன்பிரிவுக் காற்றாது தளர்கின் றேமால்,

மனைக்குரியா ளழுதரற்ற இராமகிருஷ்ணாப் பெயர்புனைந்த மைந்தனன்பால்
அனைத்துயிர்க்குந் தாய்போன்ற அத்தாவோ! அத்தாவோ! வகில வாழ்க்கை
தனைத்துறந்து பரமபதஞ் சார்ந்தனையோ நங்குலத்துத் தமர்க ளெல்லாம்
நினைப்பிரிந்திங் கரற்றுகுரல் கேட்டிலையோ வென்றுருகி நின்று சோர,

நிலங்காத்து மரசர்புகழ் நெறியுடையாய் நினைப்போன்று நேயம் பூண்டு
குலங்காக்கு முரிமையுளார் தமையாங்குக் காண்போமின் கொற்ற மிக்க
கலங்காக்கு முயர்குணமுங் குலத்தொண்டும் உளநினைந்து நைந்துவாடி
மலங்காக்கண் ணீருகுத்து யாங்களெலாந் துயருளப்ப வான்சென் றுயோ

உத்தமமாங் குணங்களுக்கோ ருறையுளென விருந்தவுய ருதார சீலன்
சத்தியநன் னெறியுடையோன் றனைப்பிரியா நவகுலத்தின் சங்கம் உற்ற
சித்தமுறு மனுதாபத் தினையன்னோன் புதல்வனெனச் சிறந்து வாழும்
வித்தகசற் குணநிபுணன் இராமகிருஷ்ணாப் பெயரோற்கு விளம்பு மன்றே.

பூவுலகி லிருந்துகுலத் தொண்டுபுரிந் ததுபோன்றிப் புனிதன் மற்றைத்
தேவுலகி லிருந்துநமக் காவனவெல் லாம்புரிந்து சிறந்து வாழ
மேவுலகெல் லாம்புரிதன் முதலாய வைந்தொழிலும் விதிக்கும் வல்ல
கோவுலக முதல்வனருட் பாதப்போ தினைச்சிரமேற் கொள்வா மன்றே.



## சென்னைமாகாண
## 5-வது யாதவ மகாநாடு.

இம்மகாநாடு 1930ஹூ ஏப்ரல்மீ 19, 20உ களில் (Easter Holidays) இராமநாதபுரம் டவுனில் நடைபெறும். அக்ராசனர் இன்னார் என்பது முதலாகிய விஷயங்கள் சமீபத்தில் சமாசாரப் பத்திரிகைகளின் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தெரிவிக்கப்படும்.

நமது யாதவ மகாநாடு நடைபெறும் நாள் சமீபமாக இருக்கிறபடியால் இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களுள் மகாநாட்டுச் செலவுக்கு இதுவரை நன்கொடைப் பணம் கொடுக்காமலிருக்கிறவர்கள் அந்தந்தப் பாகத்தில் பண வசூல்செய்ய நியமனம் பெற்றவர்களிடம் உடனே கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
இ. மா. கோ.
ஆ. கா.

### சந்தாதார் கவனிக்க.

ஒவ்வொரு தமிழ்மாதம் முதல்தேதியிலும் நமது யாதவ
மித்திரன் சந்தாதாருக்குத் தவறாமல் அனுப்பப்பட்டு வந்தும் இத்
சிலர் பத்திரிகை வரவில்லையெனத் தெரிவிக்கின்றனர். அவ
தகையோர் நமக்கு எழுதுவதோடு மட்டும் நில்லாமல் போஸ்டு
ரவர்கள் ஊர் போஸ்டுமாஸ்டருக்கும் தெரிவித்தால், கண்டு
மாஸ்டர், இடையிலே உள்ள பெருச்சாளிகளைக் வைக்கக்கூடும்.
பிடித்துப் பத்திரிகைகளை ஒழுங்காக அனுப்பி சந்தா
மித்திரன் ஆபீஸுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் ப-ர்.
நம்பரையும் குறித்தனுப்பவும்.

# ஒரு விசேட அநுதாபம்.

சென்னை திருவல்லிக்கேணி திரு. முத்துசாமி பிள்ளை அவர்கள் காளது 1930-ஞ பிப்பிரவரி-ீ 15-உ தமது இல்லத்தில் சில நாள் அசௌக்கியமாக இருந்து பரமபதமடைந்த செய்திகேட்டு மிகவும் வருந்துகின்றோம். நம் குல திலகரான பிள்ளையவர்கள் முப்பது வருடங்கள் போஸ்ட்மாஸ்டராக இருந்து பின் இளைப்பாறத் தொடங்கியநாள் முதலாகச் சமுதாய சேவை புரியவேண்டுமென்ற அவாவால் தூண்டப்பெற்றுப் பல வருடங்களாகச் சென்னை யதுகுலசங்க காரியதரிசியாயும் பின்பு உபதலைவராயும் இருந்து சங்க முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்துவந்தார். அல்லும் பகலும் சங்க வளர்ச்சியைப்பற்றிய சிந்தனையன்றி வேறொன்றும் அவர் மனதில் இருந்ததில்லையென்று துணிபாகக் கூறலாம். வருடந்தோறும் கூடிய யாதவ மகாநாடுகளுக்கெல்லாம் தவறாமல் தமது தளர்ந்த பருவத்திலும் விஜயஞ்செய்துகொண்டிருந்ததே இவரது குலாபிமானம் எத்தனைத்து என்பதைக் காட்டும். இவரது பிரிவு சென்னை யதுகுல சங்கத்துக்கும் சமூகத்துக்கும் பெரிதும் நஷ்டம் விளைத்துவிட்டது. நம் குலப் பெரியாராகிய இவரது பிரிவால் ஏற்பட்ட எமது அநுதாபத்தை மேஷ்டி-யார் புதல்வர் திரு இராமகிருஷ்ண பிள்ளை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இப் பெரியாரது ஆத்மா இறைவன் திருவடியில் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.

ப - ர்.


## பாலவித்யா

1930ஞ ஜனவரிீ முதல்
இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும்
வெளிவரும் தமிழ் ஜர்னல்.

இதில் மகா அற்புதமான நாவல்கள் மாதம் ஒன்றுக்கு 40-பக்கங்களுக்குக் குறையாமல் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும்.

நேயர்கள் உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிக்கும்படி கோரப்படுகிறது.

வருட சந்தா:— தபாற்கூலி யுள்பட ரூபா 1 8 0 தான்
வெளிநாடுகளுக்கு ரூபா 2 0 0

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டுகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

குறிப்பு:—"பாலவித்யா" மாதிரி (இனாம்) லஞ்சிகை விரும்புவோர் தபாற்கூலிக்காக ½ அணா வேபிள் அனுப்பி விலாசமும் தெரிவித்தால் பெற்றுக் கொள்ளலாம்.

பப்ளிஷர்ஸ்:— ஸ்ரீவித்யா பிரெஸ், கும்பகோணம்.




## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு ஞ 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு ஞ 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4 யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

228 B

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
யாதவ மித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura

228 C






# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | சுக்லஹூ பங்குனிமா- | பகுதி |
|---|---|---|
| 1 | 1930. மார்ச்சு மீ | 8 |


பொருள் அடக்கம்


கடவுள் வணக்கம்
ஆயர்முதுமகள் மாதரியின் மாண்பு 232
ரவிவர்மன் குலசேகரன் 236
ஆசிரியர் குறிப்பு
ஸர் ஐசக்நியூட்டன் 237,, மக்கட்பேறு 244
லீலாவதியின் சொரூபம் 247
சோநாட்டு யாதவ அரசகுலம் 250
மாடுகள் பாதுகாப்பு 253
முயற்சி திருவினையாக்கும் 256
கோகில கிருஷ்ணன் 259
செய்யாறு யாதவகுல சங்கம் 260
மன்னார்குடி யாதவர்குல3-வதுமகாநாடு 262
ஆதனூர் யாதவசபைத் தீர்மானம் 263
யாதவமாணவர்களுக்கோர் நன்கொடை 263


THE REGISTRAR 6 MAY 1930





Managing Editor.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்
(Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி, எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை.
திண்டுக்கல்.
7. ,, R வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L M F ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறுப்பள்ளி


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றிப
முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறி
வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுரு
மாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோ
அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---


யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மது

228 F



புதுவை ஸ்ரீமான்: முத்துசாமி பிள்ளை அவர்கள்.

இவர் புகழ்வாய்ந்த யாதவகுல திலகராய் புதுவையம்பதியில் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பிள்ளையவர்களின் தவப் புதல்வராய்க் கருவிற்றிருவுடன் தோன்றியவர்; சுயபாஷையாகிய தமிழுடன், ஆங்கிலமும், தெலுங்கும் நன்குணர்ந்தவர். உத்தம குணங்களும் உயர்தரச் செயல்களும் பிறவிப்பேறாய் அமையப் பெற்றவர். தபால் நிலயத்தில் போஸ்ட்மாஸ்டர் வேலையில் அமர்ந்து பல இடங்களில் இருந்து பிரபலராய், கடைசியில் சென்னைமாநகரில் மவுண்ட்ரோட் என்னுமிடத்தில் ஸ்தாபனமாயுள்ள தபாலாபீஸில் போஸ்ட்மாஸ்டராய் யாவராலும் கொண்டாடப்பெற்று உபகார ஊதியங் கொண்டு திருவல்லிக்கேணியின்கண் உள்ள தமது சொந்த கிருகத்தில் பதினெட்டு வருஷம் சுகஜீவியாய்த் தங்கியவர்.

பல வருணத்தவரும் தத்தமது குலாபிவிருத்திக்கான காரியங்களைச் செய்துவரக்கண்ட, யான் சென்னையில் யாதவகுல சங்கமொன்று கூட்டி நம்மவரின் உயர்வை நிலைபெறச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் நமது மரபின் பெரியார் பலரைச் சந்தித்துப் பேசி அவர்களை யூக்கி 12-7-1917ல் ஒரு கூட்டம் கூட்டினேன். அப்பெருங்கூட்டத்திற்கு என் வேண்டுகோளின்படி தமது வீட்டிலேயே இடங்கொடுத்துதவி வந்தவர் இவரே. அதுதான் இப்போது ஒளிபுற்றுவரும் ஸ்ரீ யதுகுல மகா சங்கம். இதில் இவர் காரியதரிசியும், பொக்கிஷதாரியுமாக இருந்து பின்பு உப அக்கிராசனருமாகிப் பாடுபட்டவர். இச்சங்கம் ஸ்தாபகமானது முதல் இவருக்குந் தம் குல முன்னேற்றத்தில் ஊக்கமும் உற்சாகமும் பிறந்து என்னுடன் உழைத்து வரலானார். நமது குலத்து ஏழைமாணவர் கல்லூரிகளில் கற்கும்படி அவர்களுக்கு அரைச் சம்பளம் நம்மவர் பலரிடஞ்சென்று வசூலித்து உபகரித்து வந்தவர். வருடந்தோறும் பல இடங்களில் கூடும் ஸ்ரீ யதுகுல மகாநாட்டுக்குச் சிரமம் பாராமல் சென்று தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவந்தவர். இத்தகைய குலாபிமானியான பரோபகாரி தமது 75-வயதில், நிகழும் சுக்கில-ஞு மாசி-மீ 4-உ (15-2-1930) சனிவாரம் காலை 9-30 மணிக்கு ஆசாரிய திருவடி அடைந்ததுபற்றி, இன்னுஞ் சிறிதுகாலம் இருந்து நமது சமூகத்தை ஆதரியாமற் போயினரே என்கிற விஷயமாக நாம் மனம் வருந்தாமலிருக்கக் கூடவில்லை. இவருடைய குடும்பம் நீடுவாழப் பகவானைப் பிரார்த்திப்போமாக.

M K. ஆராவமுதன்.

MAY 1930

ஸ்ரீ

# யாதவமித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 1 | சுக்கில ௵ பங்குனி-மீ<br>1930-௵ மார்ச்சு-மீ | பகுதி 8 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

தேட்டருந்திறல் தேனினைத் தென்னரங்கனைத் திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி மால்கொள் சிந்தையராய்
ஆட்டமேவி யலந்தழைத்து அயர்வெய்தும் மெய்யடியார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண்பயனாவதே.

## ஆயர் முதுமகள் மாதரியின் மாண்பு.

(197-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதரி தன்னிடம் கவுந்தியடிகள் கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலமாகக் கொடுத்தபின் அவர்களை மகிழ்ச்சியுடனழைத்துச் சென்று தன் வீட்டினருகில் புதிதாய்க்கட்டிச் செம்மண் பூசிப் பந்தரோடு விளங்கும் வீட்டில் இருக்கச்செய்து இனிது உபசரித்தாள் என்று கூறுவதிலிருந்து மாதரி விருந்தினரை உபசரிக்கும் நாகரிகத்தை நன்குணர்ந்தவள் என்று தெரிகிறது. மாதரி தன் வீட்டருகில் விருந்தினர்க்கென்றே தனி இல்லம் அமைத்து வைத்திருந்ததிலிருந்து அக்காலத்தில் நம்மவர்கள் விருந்து போற்றுதலை எவ்வளவு சிறந்த கடப்பாடாகக் கொண்டிருந்தாரென்பது புலப்படும்.

மாதரி வீட்டின் அமைப்பும் இயற்கையும் கூறப்பட்டதிலிருந்து அக்காலத்தில் நம் பெண்கள் வீடுகளை எவ்வளவு புனிதமாயும் அழகாயும் வைத்திருக்க அறிந்தார்கள் என்பது அறியப்படும். இக்காலத்தில் கிராமாந்திரங்களிலும், நகரங்களில் சில இடங்களிலும் நம் பெண்கள் தமது வீடுகளை வைத்திருக்கும் தன்மையை மிகப் பழைய காலத்தில் நிகழ்ந்திருந்த வயது முதிர்ந்த இம்மாதரியின் மனை மாண்போடு ஒப்பிட்டுப் பார்த்தால் வாசகர்க்கு மிக்க வியப்பு விளையும் என்பதில் ஐயமில்லை.

மாதரி கவுந்தியடிகளின் முன்னிலையில் கூறிய உறுதிமொழிப்படியே பின்பு விருந்தினர்க்குப் பல்வகை உபசாரங்கள் செய்து தன் மகள் ஐயையைத் தோழியாகக் கொடுத்ததிலிருந்து மாதரியின் புனிதமும் உண்மையும் மிகுந்த உள்ளப்பாங்கு மிகவும் போற்றும் தன்மையதாக விளங்குகிறது. விருந்தினரை உபசரிப்போர்க்கு வேண்டிய உத்தம குணங்கள், விருந்தினரைத் தூரத்தில் கண்டபோதே இன்முகமும் அதனால் அவர்கள் அணுகிய போது இன்சொல்லும், அவற்றால் அவர்கள் உண்ணுதற்கு உடன்பட்டபோது நன்கு உபசரித்தலும் ஆகிய மூன்றுமாகும். இவற்றுள் முதலாவதாகிய இன்முகம் காட்டாவிடத்து விருந்தினர் வாடி அகன்றுவிடுவர். இதுபற்றியே, "மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து, நோக்கக்குழையும் விருந்து." என்று அனிச்சமலரினும் விருந்தை மென்மையுடையதாகக் கூறிவைத்தார் நம் வள்ளுவனாரும். இத்தன்மையெல்லாம் நன்கறிந்திருந்ததாலன்றோ நம்மாதரி கண்ணகி கோவலன் இருவரையும் இன்முகம் காட்டித் தன் இல்லத்திற்கு அழைத்துவந்து 'கண்ணகி ஒன்றுக்கும் கவலை வேண்டாம், இனி இவ்விடத்தில் உங்கட்குத் துன்பம் உறுதலுமுண்டோ? இல்லை!' என்று இனியமொழி பகர்ந்து உணவளிக்க முற்படுகிறாள். மிகத் தளர்ந்த வயதில் மாதரி, 'உங்களுக்குத் துன்பமுறுதலுமுண்டோ' என்று கூறிய ஔதரிய வசனம் ஆச்சரியத்தை விளைத்துப் பிறர்க்குறும் துன்பங்களை உடல் பொருள் ஆவி மூன்றாலும் நீக்குதற்கு முற்படும் மாதரியின் உயர்ந்த குணத்தை நன்கு தெரிவிக்கின்றது. விருந்தினர்க்கு மாதரி அளித்த உணவுப்பொருள்களை நோக்கும்போது அக்காலத்தில் நம் குலத்தவர்களுடைய உணவு மிகத் தூய்மையானதாகவும், புலவு கலவாததாகவும் இருந்ததாகத் தெரிகின்றது. அன்றியும் பண்டைக் காலத்துத் தமிழ்நாட்டு மாந்தருடைய வாழ்க்கை இயற்கை முதலிய



வற்றை உள்ளவாறே விரித்துக்கூறும் சங்கநூல்களில் மக்கள் உணவு வகைகள் கூறிய இடங்களிலெல்லாம் நம் குலத்தவரது உணவு புலால் உணவு கலவாத மிகச்சிறந்த புனிதமான உணவாகவே இருந்ததென்று கூறிப்போதலால் இவ்விஷயம் வலியுறும். இக்காலத்தில் நம் குலத்தவர்கள் பெரும்பாலோர் இவ்வுணவு முறையில் வழுவுடையவர்களாயிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். இது அவரவர்கள் வாழ்ந்த இடங்களிலுள்ளோரது கூட்டுறவால் ஏற்பட்ட குறையேபோலும். கோரக்ஷணத்தைக் குலத்தொழிலாகக் கொண்டோர்க்கு உயிர்க்கொலையும் ஊன் உணவும் உளவேல் அஃது பெரிதும் விபரீதமன்றோ! களரிகளிலும் திருவிழாக்களிலும் இரத்த வெள்ளமோடப் பேதை ஆடுகளைத் துண்டிரண்டு செய்யும் நம்மவர் இயற்கையை என்னென்று உரைப்பது! நாம் தெய்வப்பிரீதியாகச் செய்வது பால் பொங்கல் ஒன்றே என்பதும் இம் மாதரியின் மாண்பால் முன்னரே அறியப்பட்டதாகும்.

செல்வமிகுந்த வைசியகுலமாது கண்ணகி சமைக்கும் அடுப்பில், ஆயர்குலமாது ஐயை, வைக்கோலால் தீமூட்டுகின்றாள். இந் நிகழ்ச்சி "இடையர், வேளாளர், வணிகர் ஆகிய முத்திறத்தினரும் குலத்தால் ஒருவர், தொழிலால் மூவராயினர்." என்ற கொள்கையை நிலைநாட்டி நம் குலம் தமிழ் நாட்டில் கோவைசிய குலமாகக் கருதப்பட்டு வந்ததென்பதை நன்கு காட்டுகின்றது.

கோவலன் உண்டி அருந்தும்போது மாதரி தன் மகளுடன் நின்றுகொண்டு கோவலனை அசோதை பெற்ற பூவை வண்ணனே என்றும் கண்ணகியை நப்பின்னைப் பிராட்டியேதான் என்றும் மிகுத்துக் கூறியது விருந்தினரை உண்பிக்கும் மகிழ்ச்சி மேலீட்டில் கூறிய உபசாரமேயாகும். விருந்தினரை இடையிடையே கூறும் முகமன் மொழியோடு உண்பிக்கவேண்டுமென்பது விதி.

கோவலன் கொலையுண்டநாளின் காலையிலேயே தயிர் உறையாமை முதலிய நிகழ்ச்சிகளால் வரப்போகும் தீங்கை மாதரி ஊகித்தறிந்துகொள்ளுகிறாள். உடனே தெய்வானுக்கிரகத்தால் தீங்கை வராது தடுக்கலாமெனவும் கருதுகிறாள். துன்னிமித்தத்திற்குச் சாந்தி கண்ணபிரான் நப்பின்னையோடு ஆடிய குரவைக் கூத்தே எனவும் கூறுகின்றாள்.

இவற்றால் மாதரி எதனையும் ஆய்ந்து ஓய்ந்து பார்த்து எதிர்கால சம்பவங்களை ஊகித்தறியும் அறிவாற்றல் வாய்ந்திருந்தவளென்றும் தம்குலத்தில் அவதரித்த கண்ணபிரானே தன் தெய்வமென்ற உறுதி வாய்ந்தவளென்றும் அறியலாகும்.

(தொடரும்)

ஆ. கார்மேகக் கோன்,
ஆசிரியர்.

---

# ரவிவர்மன் குலசேகரன்.

## ஒரு கேரள நாட்டு யாதவ மன்னன்.

---

முற்காலத்தில் மலைநாடு துளுராஜ்ஜியம், கூபகராஜ்ஜியம், கேரள ராஜ்ஜியம், மூஷிகராஜ்ஜியம் என நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் "பெரும்புளாவிலிருந்து நீலேஸ்வரத்துக்கருகிலிருக்கும் புதுப்பட்டணம் வரையுள்ள தேசம் கூபகராஜ்ஜியமெனப்படும்," எனக்'கேரளோற்பத்தி' கூறுகிறது*. திருவனந்த புரத்துக்கு வடக்கே சுமார் 22 மைலுக்கப்பாலுள்ள ஆற்றுங்கல் பிரதேசமே இக்கூபகராஜ்ஜியமென்பது ஆற்றுங்கல்லுக்கருகிலுள்ள ஆப்பனேஸ்வரர் கோவிலைக் கூபகதேயத்து அரசியொருத்தி புதுப்பித்ததாக அக்கோவில் கல்வெட்டு† கூறுவதினின்றும் தேற்றமாம். இந்தத்தேசம் பழமை வாய்ந்த தென்றே தோன்றுகிறது. ராஜ ராஜ சோழன் கூபக மன்னனைப்போரில் புறங்கண்ட செய்தி அச்சோழனது முப்பதாமாண்டுச் சாஸனமொன்றில் காணப்படுகிறது‡. முதலாங்குலோத்துங்கச் சோழனுக்குத் திறை கொணர்ந்த மன்னர்களில் கூபக நாட்டரசனுமொருவன் என்பது, "தென்னவர், வில்லவர், கூபகர்" என்னும் கலிங்கத்துப் பரணி அடியிலிருந்து விளங்கும். இன்னும் கி. பி. 1118ல் விளங்கியிருந்த விக்கிரம சோழன் காலத்தவன் எனக் கருதப்படும் பராந்தக பாண்டியனது ஒன்பதாமாண்டுச் சாஸனமொன்று, இவ்வழுதியர்கோன் "சேரலனைச் செருவில் வென்று திறை கொண்டு வாகைசூடிக் கூபகர்கோன் மகட்கு [கொ]டுப்பக்குல

* Ind. Ant. Vii. P. 275; †. Ibid xxiv. P. 282; ‡. Ep. Ind. iv. P. 146 f.



விழிஞங்கைக்கொண்'' $டான் என அறிவிக்கிறது. இவைகளெல்லாம் கூபகநாட்டின் பழமை பெருமைகளுக்கு உற்ற சான்றாகும்.

இந்தக் கூபகதேசத்தில் 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசு புரிந்தவன் ரவிவர்மன் குலசேகரன் என்னுமோர் யாதவ மன்னனாவன். இவன் தந்தையின் பெயர் ஜயசிம்மன்§ தாயார் உமாதேவியார். இவன் சகம் 1128-ல் (=கி. பி. 1266-67-ல்) பிறந்தவன் என்று காஞ்சி அருளாளப் பெருமாள் கோவில்கல்வெட்டு குறிக்கிறது. இக்கல்வெட்டு இவ்வேந்தனைக் "கொளம்பஅதிப" எனக் கூறுகின்றமையால் இவன் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய தலைநகர் கோளம்பம் என்பது பெறப்படும். இந்நகரம் தற்போதுள்ள கோல்லம் என்னும் ஊரே என்று சாஸனவிற்பனரான டாக்டர் கீல் ஹார்ன் என்பவர் முடிவு கட்டியுள்ளார்‖. இவ்வேந்தனை "யதுகுல சிரோரத்னம்," "யாதவ நாராயணன்" "ஸ்ரீபத்ம நாப கமல பரமாராதகன்*," "கருடத்துவஜன்" என முற்கூறிய அருளாளப் பெருமாள் கோயில் சிலா சாஸனமும், "ஓ, யாதவ பூபதி!," "ஓ, யதுபதி!" என ஸ்ரீரங்கம் கோவில் கல்வெட்டும் கூறுதலின் இவன் யதுகுலத் துதித்தவன் என்பதும், பகைவரைப் புறங்கண்டு, தன்குல தெய்வமாகிய விஷ்ணுவை ஸ்ரீரங்கத்தில் வணங்கியதாகக் கூறப்படுதலின் இவன் ஸ்ரீவைஷ்ணவன் என்பதும் தெளியப்படும்.

இந்த யதுகுல மன்னன் மிகுந்த போர் விருப்பம் வாய்ந்தவன். இவனது முப்பத்து மூன்றாமாண்டில், அதாவது கி. பி. 1299-1300ல் இவன் கேரள மன்னனான வீரபாண்டியனைப் போரில் வென்று அவனது நாட்டைப் பிடித்துக் கொண்டான். இந்த வீரபாண்டியன் ஸ்ரீ வீர உதயமார்த்தாண்டவர்ம திருவடியார் II என்னும் கேரளத்தரசனே என்று கேரள புரத்துக் கல்வெட்டொன்று அறிவிக்கிறது†. இந்த வேணாட்டு மன்னன் பாண்டியராதிக்கத்தினின்றும் ஒருவாறு விடுதலை பெற்றுப் பாண்டியநாட்டினோர் பகுதியையும் கைப்பற்றிக்

$ T. A. S. iii. p. 4.  § கொல்லம் பிரதேசத்தில் இவன் ஆட்சி புரிந்த காரணத்தால் அப்பிரதேசம் மிகச் சமீபகாலம்வரை 'ஜயசிம்ம நாடு' என்று அழைக்கப்பட்டது. T. S. M. p. 259. ‖ Ep. Ind. iv. p. 115.

* திருவனந்த புரத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் திருநாமம் ஸ்ரீபத்ம நாபர் என்பதும், திருவாங்கூர் அரசர்கள் "ஸ்ரீபத்மநாபதாஸன்" என்றும், பட்டமணிந்து கொள்ளும் வழக்கும் ஈண்டுச் சிந்திக் கற்பாலன.

† Ind. And. xxiv. p. 335.

கொண்டதாற்றான் இவ்வீர பாண்டியன் என்ற பட்டப் பெயரைச் சூடிக்கொண்டனன் போலும்.

இவ்வாறாக இவன் கேரளதேயத்தில் அரசு புரிந்து வரும் நாளில் மலைய நாட்டிலிருந்து கிருஷ்ணா நதிவரையுள்ள பெரும் விஸ்தீரணமுள்ள ராஜ்ஜியத்தை ஆண்டு பெரும் புகழ் பெற்ற பாண்டியர் நிலைமையும் தளர்வுற்றது. பிரசித்தி பெற்ற கடைசிப் பாண்டியனான "எம்மண்டலமும் கொண்ட" மாறவர்மன் குலசேகரனுக்கு ஜடாவர்மன் வீரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் என இரு பிள்ளைகளிருந்தனர். இவருள் வீரபாண்டியன் வைப்பாட்டியின் பிள்ளை; சுந்தர பாண்டியன் பட்ட மனைவியின் மகன். வீரபாண்டியன், சுந்தர பாண்டியனைப் பார்க்கிலும் வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்தவனானபடியால், மாறவர்மன் குலசேகரன் தன் பட்ட மனைவியின் மகனது பட்ட உரிமையைப் புறக்கணித்து, வீரபாண்டியனே தனக்குப் பின் பட்டமாளத் தகுந்தவனென முடிவு செய்தான். இம்முடிவைக் கண்டு சகியாத சுந்தர பாண்டியன் கோபாவேசத்தில் கிழ அரசனைக் கொன்றுவிட்டான். பின் பட்டத்துக் குரியவர் யார் என்பது குறித்து இவ்விரு தாயாதிகளும் போர் தொடுத்தனர். வீரபாண்டியனுக்குப் பேராதரவிருந்ததை உணர்ந்த சுந்தர பாண்டியன் டில்லி சுல்த்தானான அலாவுத்தீன் இடம் போய் அடைக்கலம் புகுந்து கொண்டான். இவன் இவ்வாறு செய்ததானது தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம் முதலான தக்கண இந்து ராஜ்ஜியங்களைக் கொள்ளையடித்துப் பெரும் பொருள் கவர்ந்து சென்ற மலிக்கபூர் என்னும் அல்லாவுத்தீனின் தளகர்த்தன், பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்துவர நல்ல சந்தர்ப்பத்தை யளித்தது. இப் பிரபல முகமதிய தளகர்த்தன் கி. பி. 1310ம்-௵ நவம்பர்-௴ பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்து வந்து, "கண்ட நாடு கொண்டு, கொண்ட நாடு" கொளுத்திக் கொள்ளையடித்ததுமல்லாமல் ஸ்ரீரங்கம், மதுரை முதலிய விடங்களிலிருந்த கோவில்களையும் நாசப்படுத்தித் தெற்கே ராமேஸ்வரம் வரைக்கும் சென்று, அவ்விடத்தில் ஒரு முகமதியப் பள்ளியையும் கட்டிவிட்டு டில்லிக்குத் திரும்பிப் போயினன்.

இம் முகமதியப் படையெடுப்பின் பலனாய்ப் பாண்டிய நாடெங்கும் அராஜகம் குடிகொண்டிருந்ததை யுணர்ந்த ரவிவர்மன் குலசேகரன் பாண்டியநாட்டுள் புகுந்து அந்நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டான். இவன் சுந்தர பாண்டியன் என்னுமொருவனைப் போ



ரில் புறங்கண்டதாகப் பூந்தமல்லிச் சாஸனமொன்றிலிருந்து அறியக்கிடக்கிறது*. பாண்டிய அரசிளங்குமரியொருத்தியை இவன் மணந்து கொண்டானென்றும் அறியப்படுகிறது†. இவனது பூந்தமல்லி சாஸனத்தில் இரு மீன்களின் உருவங்களும் அவற்றினுச்சியில் ஒரு அங்குசமும் பொறிக்கப்பட்டுள்ளமையின் இவன் பாண்டியநாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொணர்ந்தவனென்னும் உண்மை வலியுறும். இவ்வேந்தன் கி. பி. 1313-ல் தென் ஆற்காட்டிலுள்ள திருவடியென்னுமிடத்தில் இருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 1313-14-ல் இவன் காஞ்சிபுரத்தைப் பிடித்து, இந் நகருக்கருகில் பாலாற்றோடு வந்து கலக்கும் வேகவதி யாற்றங்கரையில் மகுடாபிஷேகஞ் செய்து கொண்டான். இவன் கி. பி. 1316 வரை காஞ்சியிலிருந்திருக்கிறான் என்பது தவிர, இவ் வருஷமுதல் இவனைப்பற்றி விளக்கமாய் அறிவிக்கும் ஆதாரமொன்றும் இதுகாறும் கிடைத்திலது. ஆனால் இவன் வேணாட்டு மன்னனான வீர உதய மார்த்தாண்ட வர்மன் திருவடியார் II மீது மறுமுறையும் கி. பி. 1316-ல் போர்தொடுக்கவே, அவ்வேந்தன் கொங்கண நாட்டிற்சென்று ஒளிந்துகொள்ள அதையறிந்த ரவிவர்மன் குலசேகரன் அங்குச் சென்று அவனைக் காட்டிற்குள் ஓடும்படி செய்ததோடு, அவ் வடநாட்டுப் பிரதேசத்தையும் பிடித்துக் கொண்டான்‡. ரவிவர்மன் குலசேகரன் மலைநாடு சென்றிருந்ததை அறிந்த காகதீயமன்னனாகிய பிரதாபருத்திரனது தளகர்த்தன் முப்பிடி நாயகன் என்பவன், காஞ்சியைப் பிடித்து, அந்நகருக்கு அதிபனாக மானவீரன் என்னு மொருவனை நியமித்தான்$. பிரதாபருத்திரன் காலத்திய காஞ்சி அருளாளப் பெருமாள் கோவில் சாஸனத்தில், 'காஞ்சி புகுமுன் முப்பிடி தென் நாட்டு மன்னரை ஓடும்படி செய்தான்' என்ற குறிப்பொன்று காணப்படுகிறது. இதிற் குறித்த தென்னாட்டு மன்னன் ரவிவர்மன் குலசேகரனே போலும். மிகப் பராக்கிரமசாலியாகிய இந்த யாதவமன்னன் கொங்கணம் உட்பட்ட கேரள, பாண்டிய சோழநாடுகளைத் தன் ஆட்சிக்குட்படுத்தினமையால் 'திரிபுவனச் சக்கரவர்த்தி,' 'கோனேரின்மை கொண்டான்' என்னும் பட்டங்களைப் புனைந்திருந்தான்.

சி. முத்து. பி. எ. (யாதவன்)

---

* South India and Her Muhammadan Invaders p. 124.

† Ep. Indi. iv. p. 146. ‡ Travancore State Manual. i. p. 259.

$ Ep. Ind. vii p. 130.

# ஆசிரியர் குறிப்பு.

## ஐந்தாவது யாதவ மகாநாடு.

இம் மகாநாடு நிகழும் ஏப்ரல்மீ 19, 20 தேதிகளில் இராமநாத
புரத்தில் நடைபெறும் என்று சென்றமீ மித்திரனில் வெளியிட்டி
ருந்த செய்தியை வாசகர்கள் நன்கறிவார்கள். இம்மகாநாட்டைத்
திறந்து வைப்பதற்குச் சென்னை இராஜாங்க முதல் மந்திரியும்,குமாரமங்
கலம் ஜமீந்தாருமாகிய மாண்பு மிக்க டாக்டர் சுப்பராயன் அவர்கள்
அன்போடு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேல் குறித்த 19, 20 தேதி
களில் நடத்த நிச்சயத்திருந்த மகாநாட்டைக் கனம் முதல் மந்
திரியின் சௌகரியத்திற் கிணங்க மேமீ 17, 18 தேதிகளில் நடத்து
தற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய விவரங்கள் யாவும்
சமாசாரப் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாக
வும் சமீப காலத்தில் பிரசுரிக்கப்படும். மகா நாட்டிற்கு ஆயிரக்கணக்
கான பிரதிநிதிகள் விஜயம்செய்து குல முன்னேற்றத்திற்குரிய யோஜ
னைகளையும் தீர்மானங்களையும் செய்து மகா நாட்டை அலங்கரிக்கும்
படி கேட்டுக் கொள்கிறோம். சாப்பாடு சமபந்தமான வசதிகள்
யாவும் யாதொரு கட்டணமு மின்றி அமைக்கப்படும். மகா நாட்
டின் நிகழ்ச்சிகளைச் சிறப்பெறச் செய்து முடித்தற்கு ஒரு தொண்டர்
படை (Volunteers) அவசியம் வேண்டப்படுகிறது. இதில் சேர
விருப்பமுள்ள வாலிபர்கள் யாவரும் நமது மித்திரன் ஆசிரியரவர்
கட்கு மேமீ 7உக்குள் தங்கள் முழுவிலாசத்தோடுந் தெரியப்படுத்
திக்கொள்ள வேண்டும். இம்மகாநாட்டுப் பந்தலிலேயே யாதவ
வாலிப மகாநாடும் நடைபெற முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

இப்பெரும் காரியத்திற்கு ஆயிரக்கணக்கான தொகை தேவை.
இத்தொகை சேகரிப்பதற்குக் கடமைப்பட்டவர்கள் மகாநாடு நடை
பெற விருக்கும் இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களே. இராமநாத
புரம் ஜில்லாவில் சில கிராமங்களிலுள்ள சிலயாதவர்கள் 'இம்மகாநாடு
எங்களுக்கு உரியதல்ல, நாங்கள் வேறு வகுப்பு, அவர்கள் வேறு
வகுப்பு' என்றெல்லாம் வகுப்பு வித்தியாசங்களைப்பேசிப் பணவுதவி
செய்யாமலும் பணவுதவி செய்கிறவர்களைத் தடுத்தும் வருகிறதாகக்
கேள்விப்பட்டு மிகவும் விசனிக்கிறோம். இம்மகாநாடு சென்னை ராஜ
தானியைச் சேர்ந்த 26 ஜில்லாக்களிலும் வசிக்கும் ஏழுலக்ஷம் யாத
வர்களுக்கும் பொதுவான முன்னேற்றங்களைப்பற்றிய பெரிய காரியம்
என்பதனை இனியாவது அவர்கள் உணர்ந்து இதில் ஊக்கங் கொள்
வார்களென நம்புகிறோம்.

# சர். ஐசக் நியூட்டன்.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

சூரியன் முதலிய வெளிச்சந் கொடுக்கக் கூடியவைகளிலிருந்து
சிறிய அணுக்கள் (Minute Corpuscles) புறப்பட்டு நமது கண்
களிலோ அல்லது தேகத்திலோ தாக்கி நமக்கு வெளிச்சத்தையும்
உஷ்ணத்தையும் காணக்கூடிய உணர்ச்சிகளைத் தருவதாக நியூட்டன்
நம்பினார். ஆனால் ஹைஜன்ஸ் (Huygens), டாக்டர் ஹூக் என்பவர்
கள், சப்தத்தைப் போல உஷ்ணமான வஸ்துக்கள் தங்கள் அணுக்
களின் அசைவுகளால் உண்டாகும் அலைகள் உலகத்தில் நிறைந்து
காணக்கூடாத ஈதர் என்ற வஸ்துவில் புறப்பட்டு நமக்கு வெளிச்சத்
தைத்தருவதாகப் போராடினர். இதற்குத் திருஷ்டாந்தமாக இரண்டு
சிறிய வெளிச்சக் கதிர்களை ஒன்றைக்கொன்று சமீபமாகப் புறப்படச்
செய்துபார்த்தால் வெளிச்சமும் இருட்டும், வெளிச்சமும் இருட்டு
மாக மாறி மாறித் தெரிவதைக் காணலாம் (Interference of Light)
இத் தோற்ற வெளிச்சம், அலைகள்போல வந்தால்தான் உண்டாகு
மென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நியூட்டன் அணுக்களால் உண்
டாகும் வெளிச்சத்தைக்கொண்டு பிரதிபிம்பம் முதலியவற்றை
(Reflection and Refraction)ச் செவ்வனே காரணங்களோடு
எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் நியூட்டன் நோக்கப்படி பார்க்கு
மிடத்து வெளிச்சம், காற்றடங்கிய பாகத்திலிருந்து தண்ணீர் அல்
லது கண்ணாடி முதலியவைகளினுட் சென்றால் அப் பாகங்களில்
(தண்ணீர், கண்ணாடி.) வெளிச்சம் வெகு வேகமாய்ச் செல்ல ஏற்படு
கிறது. இது முற்றிலும் தவறு. வெளிச்சம் காற்றுப் பாகத்திலேயே
வேகமாய்ச் செல்லுகிறது. இதுபோல இன்னும பல காரணங்கள்
வெளிச்சம் அலைகளையுடையன வென்பதற் கனுகூலமாக உண்டு.
ஆனால் நியூட்டனின் வல்லமையாலும், அவர் மீதிருந்த நம்பிக்கையா
லும் ஜனங்கள் வெளிச்சத்திற்கு அவர் கூறிய காரணத்தை 1800-ம்
வருடம் வரை நம்பி வந்தனர். ஒரு தட்டையான கண்ணாடியின்மீது
'லென்ஸ்' (Lens) என்ற கண்ணாடியை வைத்து வெளிச்சத்தை உட்
செலுத்த மோதிரங்கள் போல மத்திய பாகத்தி லிருந்து வெளிச்ச
மும் இருட்டுமாக (Newton's Rings) அநேகம் தோற்றுவதை
நியூட்டன் கண்டார்.

பிரஸ்நெல் (Fresnel) என்பவர், வெளிச்ச அலைகள் சப்த அலை
களைப் போல நீளமாக இல்லாததினால் சப்தத்தைப்போல வெளிச்சம்
மூலை முடுக்குகளைக் கடந்து நமது கண்ணுக்குத் தெரிவதில்லை என்று
செவ்வனே ஏற்பதோர் காரணங்களோடும், கணிதங்களோடும் எடுத்
துக் காட்டியுள்ளார்.

நியூட்டன் வான சாஸ்திரத்திலும் அரும் பெரும் செயல்களைக்
கண்டுபிடித்திருக்கிறார். இவருக்கு முன் வான சாஸ்திரத்தின் முற்
போக்குக்கு வழிகாட்டியாயிருந்தவர்கள் கோபர்நிக்ஸ் (Copernicus)
டைச்சோ பிரகே (Tycho Brahe). கெப்லர் (Kepler), காலிலியோ
(Galileo) என்பவர்கள். கெப்லருடைய வான சாஸ்திரத்தின் மூன்று
உண்மைகள் நியூட்டனுக்கு அதிக உதவி செய்தன. பூமிக்கு எப்படி
வஸ்துக்களை இழுக்கும் சக்தி உளதோ அப்படியே வானத்தில் உள்ள
சூரியன் சந்திரன் முதலியவைகளுக்கும் ஒன்றுக்கொன்று இழுக்கும்
சக்தி (Universal Gravitation) இருக்கவேண்டுமென்றும், கிரகங்
கள் வட்டமாகச் சுற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் தன் 25-
வது வயதிலேயே நியூட்டன் மனதிலுதித்தன. இதைக்கொண்டு
வானத்திலுள்ள கிரகங்களின் சுற்றுக் கணக்குகள் (Celestial
Motion) பல எடுக்கப்பட்டன. நியூட்டன் கண்டு பிடித்த உண்மைக
ளெல்லாம் 'பிரின்சிப்பியா' (Philosophiae Naturalis Principia
Mathematica) என்ற பெயருடன் மூன்று பெரும் புஸ்தகங்களில்
வெளிப்படுத்தி ராயல் சொசைட்டிக்கு 1686--ம் வருஷம் ஏப்ரல்மீ
28உ அனுப்பப்பட்டன. முதல் இரண்டு புஸ்தகங்கள், வஸ்துக்களின்
அசைவுகளை (Motion of bodies)ப் பற்றியும் மூன்றாவது புஸ்தகம்
உலக அமைப்பை (System of the World)ப் பற்றியும் சகலரும்
ஒப்புக் கொள்ளும்படியாகவும் ஆச்சரியப்படக் கூடியதாகவும் எழுதி
யிருக்கிறார். முக்கியமானதோர் உண்மையாவது: உலகத்திலுள்ள
வஸ்துக்களின் சிறு சிறு பாகங்கள் ஒன்றுக்கொன்று, அவைகளின்
தூரங்களை இருதரம் பெருக்கி வரும் தொகை ஒன்றின்கீழ் வரும்
பின்னமான (Fraction) பலாத்கார விதமாக இழுக்கப்படுகின்றன.
(That every particle of matter in the universe is att
racted by gravitates to every other particle of matter
with a force inversely proportional to the squares of
their distances) இவ்வுண்மைகளால் பூமி, சூரியன் முதலியவை
களின் நிறைகளை (Calculation of the quantity of matter)ச்



சரியாக அளவிட முடிந்தது. சமுத்திரங்களின் பெருக்கு வடிவு
(Tides of the ocean) களும் சந்திர சூரியன்களின் (தண்ணீரை)
இழுக்கும் சக்திகளால் உண்டாவதெனவுங் காட்டியுள்ளார்.

நியூட்டன், கணிதங்களிலும் அநேக ஆராய்ச்சிகள் செய்திருக்
கிறார். 'பைனாமியல் தியோரம்' (Binomial theorem) என்ற கணி
தத்தைக் கண்டுபிடிக்க ஆதரவா யிருந்தார். வஸ்துக்களின் இழுக்
கும் சக்திக்கு மத்திய பாகங்களை (Centers of Gravity) க்கணி
தங்களால் கண்டு பிடிக்கும் ஆற்றலை யுடையவரா யிருந்தார், 1707-ம்
வருஷம் விஷ்டன் என்பவர், நியூட்டன் கேம்பிரிஜ் சர்வ கலாசாலை
யில் செய்த கணித உபந்யாசங்களை (Algebraical Lectures) ப்
புஸ்தக ரூபமாய் வெளிப்படுத்தினார், 1711-ம் வருஷம் நியூட்டனு
டைய 'Methodus Differentialis' என்ற அரிய கணித புஸ்த
கமும் 1779-ம் வருஷம் 'Geometria Analytica' என்ற புஸ்தக
மும் வெளி வந்தன. 1696-ம் வருஷம் ஜூன்மீ பெர்னூலியும்
லீப்னிட்ஜ் என்பவரும் (Bernouilli and Leibnitz) ஐரோப்பா
வில் உள்ள கியாதி பெற்ற கணித சாஸ்திரங்களைத் தங்கள்
இரண்டு புதிய கணிதங்களுக்கு விடை யளிக்கும்படி விளம்பரஞ்
செய்தவுடன், நியூட்டன் தனக்குக் கணிதங்கள் கிடைத்த இரண்
டாம் நாள் விடையை அளிக்கும் திறமை வாய்ந்தவரென்றால் இவ
ருடைய கணித ஆராய்ச்சியின் பெருமையை அதிகம் எழுத வேண்
டுமோ? இவருடைய ஆராய்ச்சிகளின் உண்மைகளைத் தவறென்று
அநேகர் போராடியும் அஞ்சா நெஞ்சத்தோடு தன் ஆராய்ச்சிகளின்
உண்மையைப் பல கோட்பாட்டுக்களுடன் எடுத்துக் காட்டித் தன்
பகைவர்களின் வாயை மூடி வந்தார். பல வருஷங்களாய் ஆராய்ச்சி
செய்து எழுதி வைத்திருந்த நியூட்டனுடைய காகிதங்கள் நெருப்
புப்பிடித் தெரிந்துவிட்டன. அதனால் நியூட்டன் கொஞ்ச காலம்
சுய மதியிழந்திருந்ததாகத் தெரிகிறது.

## சன்மானங்கள்.

1688-ம் வருஷம் இவர் பார்லிமெண்டுக்குச் சர்வ கலாசாலைப்
பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நியூட்டனுடைய 53-வது
வயதில் (1695) இவருடைய சிநேகிதர் மான்டேக் (Montague,
Earl of Halifax) என்பவரின் உதவியால் தங்கசாலைக்குக் (Royal
Mint) காவலராயும், 1699-ம் வருஷம் அதற்கு அதிகாரியாகவும்

நியமனம் பெற்ஞர். அதே வருஷத்தில் 'Royal Academy of Sciences of Paris' என்ற புகழ் பெற்ற சாஸ்திர சங்கத்திற்கு அங்கத்தினராக எடுத்துக்கொள்ளப் பட்டார். 1708-ம் வருஷத்திலிருந்து மீதியான தன் 25 வருடங்கள் வரை ஒவ்வொரு வருஷமும் ராயல் சொசைட்டிக்கு அக்ராசனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1705-ம் வருஷம் எப்ரல்மீ 16உ ஆன் (என்ற பெயரையுடைய) இராணியால், (Queen Anne) நியூட்டனுக்கு அவருடைய சாஸ்திர ஆராய்ச்சி முன்னேற்றத்திற்கான அரிய பெரிய வேலைகளுக்காக 'சர்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.

## கடைசி நாட்கள்.

சர். ஐசக் நியூட்டனுக்கு 1722-ம் வருஷத்திலிருந்து குணதோஷங்கள் ஏற்பட்டு 1725-ம் ஆண்டில் தங்கசாலையிலிருந்து இராஜிநாமா செய்துகொண்டார். 1727-ம் வருஷம் மார்ச்சுமீ 4உயிலிருந்து அடி வயிற்றில் கொடிய வியாதி ஏற்பட்டு மார்ச்சுமீ 20உ திங்கட் கிழமை காலை ஒரு மணியிலிருந்து இரண்டு மணிக்குள் தன் 85-வது வயதில் உலகத்தார் யாவரும் கண்ணீர் விட விண்ணுலகையடைந்தார். இவருடைய தேகத்தை 'வெஸ்ட் மின்ஸ்டர் அபே' (West Minister Abbey) என்ற கோவிலில் அடக்கப்பட்டு 1781-ம் வருடத்தில் இவரின் உருவத்தையும், சாஸ்திர வேலைகளையுங் குறிக்கப்பட்ட ஓர் நேர்த்தியான சிறு கோபுரம் நிறுத்தப்பட்டது. 1755-ம் வருஷம் ஜுலைமீ 4உ டிரினிட்டி கலாசாலையிலும் நியூட்டனின் முழு உருவத்தோடு வெள்ளைக் கல்லில் (White Marble) செய்து வைக்கப்பட்டது. 'கிராந்தம்' (Grantham) என்ற இடத்திலும் இவருடைய சிலையொன்று நிறுத்தப்பட்டிருக்கிறது.

நியூட்டனுக்குத் தன் சொந்தத்தில் இருந்தது 32,000 பவுன்கள். அவைகள் நியூட்டன் தாயாரின் (அவள் இரண்டாவது ஸ்மித் என்ற கணவனுலுண்டான) பேரன் பேத்திகளால் பங்குப்போடப்பட்டன. நியூட்டன் குடும்பச் சொத்தை நியூட்டன் சிறிய தந்தையின் பேரன் (John Newton) அடைந்தான். இப்படியாக நியூட்டன் சொத்துக்கள் பாகங்கள் செய்துகொள்ளப் பட்டன. நியூட்டனுக்குக் கலியாணமானதாகத் தெரியவில்லை. இவருக்கு நேர் சந்ததியும் அற்றுப் போய்விட்டது.



சர். ஐசக் நியூட்டனைப் போலவும் நமது இந்திய சாஸ்திர நிபுணர்களாகிய சர் C. V. இராமன், சர் போஸ் இவர்களைப் போலவும் இந்திய மக்களில் அநேகர் ஏற்பட்டு நம் பெருமை வாய்ந்த இந்தியாவை முன்னணியில் கொண்டுவரும்படி அருள் புரிய எல்லாம் வல்ல இறைவனை அஞ்சலி செய்வோமாக.

K. G. கிருஷ்ணன் B. Sc., (Hons.)

---

## மக்கட்பேறு.

---

இம்மண்ணுலகத்துள் இயற்றப்பெறும் எத்தொழில்களையும் இயற்றப் பெரியோர் வலியிலரான், அவற்றைச் செய்யப் பயன்படுவர் இளம் மக்களன்றோ? ஆதலின் பெரும் பயன் விளைக்கும் மக்கட்பேற்றினைப்பற்றிச் சிறிது சிந்திப்பாம்.

மக்கள், மகவு, குழவி என்பன ஒரு பொருட்கிளவி. மக்கட்பேறென்பது மக்களைப் பெறுதல் எனப் பொருள்படும். ஒருவனது இல்லறத்திற்கு அவனது மனைவியின் மாட்சிமை மங்கலமாகும். அதற்கு மக்கட்பேறு நல்லதோர் அணிகலமாகத் திகழும்.

எத்துணைப் பேற்றினைப் பெற்றும், மக்கட் பேற்றினை அடையாமாந்தரை ஊரரெல்லாம் எள்ளுவர்; பழித்துரைப்பர். இவர் முற்பிறப்பிலெவ்வெத் தீவினைகள் இயற்றினரோ? என்பர். இதனுனே நந் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்ல பிற" என்றோதினர்.

ஆகவே பிள்ளையில்லார் அக்குறையினை நிறைவேற்ற அற நிலையங்கள் பல ஆக்குவர். கொடும் வேனிலில் நீர் கிடையாது வருந்துவோர் விடாயை நீக்குவான் யாண்டும் நீர்ப்பந்தர்களை நிரப்புவர். வெயிலாலுலர்ந்து தளர்வோர், களைப்பை யகற்றச் செல்லும் நெறியெங்கணும் நிழல் தரும் இள மரங்களைத் தழைக்கச்செய்வர். இம்மட்டோ? பாடுபடவொண்ணுப் பாலருக்கும், தள்ளாடுங் கிழவருக்கும், நொண்டி, செவிடு, ஊமை, கூன், ஆதியோருக்கும், உண்டி, உடை, உறையுள் இவை ஈந்து இன்னலை நீக்கி, அவருறும் இன்பினைக் கண்ணுறக்கண்டு தம்மகம் மிக மகிழ்வார்.

இனியொரு பெண் மகவேனும் பிறவாதா? எனக் கோயில்கள் தோறுஞ் சென்று, ஏற்ற வழிபாடுகள் இயற்றுவர்; அரசமரங்களை யமைத்து வலம் வருவர். எத்துணைத் தூரமே யாயினும் பெயர் பெற்ற இடங்களுக்கேகி ஆங்காங்குள்ள தூய நீரினில் மூழ்கிக் கடவுளை இறைஞ்சுவர். ஓயாது நோன்புகளை நோற்பர்; அரும்பெரும் வேள்வியினை ஆற்றுவர்.

இவ்வாறு அவர்தம் நெஞ்சம் புண்ணாகி உள்ள முருகிக் கண்ணீருடைவதை இறைவனுங்கண்டு ஓராற்றான் மனங்கசிந்து மக்கட்பேறு பெறமதிப்பர். சிலர் எவ்வகைப் பாடு படினும் ஆயுள் காலமட்டும் மகப்பேறில்லாதிருப்பினு மிருப்பர். இஃது அவர்தந் தீவினைப் பயனே யாகும்.

மக்கட் பேறில்லா மாந்தர் வீடடைதல் ஆதிய நற்பயன்களை எய்தார். இதனாலேயே "அபுத்ரஸ்யகதிர் நாஸ்தி" என வட நூலாரும் கூறுகின்றனர். எத்தகைச் செல்வரே யாயினும் பிள்ளையில்லார் தம் வாணாள்முற்றும் வீணாளாம். இதனைக் கீழ்க்காணும் புறநானூற்றுச் செய்யுள் வற்புறுத்தும்!

"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணு
முடைப்பெருஞ்செல்வராயினு மிடைபடக்
குறுகுறு நடந்து சிறுகைநீட்டி
யிட்டுந்தொட்டுங்கவ்வியுந் துழந்தும்
நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறையில்லைத்தாம் வாழுநாளே"

மண், பெண், பொன், என்ற மூவகைப் பொருளினையும் அறிவு ஆற்றலினையும் எஞ்சாப்புகழினையும் இன்னும் பலபேற்றினையுமுடையோராயினும் வெள்ளிய சோற்றினைத்தம் சிறியகைகளாலளையும் பூமணம் மிகும் வாயினையுடைய மக்களை வாய்க்கப்பெறார் எவைபெற்றும் பெற்றிலர் என்பது உண்மையே யன்றோ?

குழலிகளின் குழலினும் யாழினும் இனிய மழலைமொழிகளைக் கேட்டும் இன்புறாச் செவியுமோர் செவியோ? அது மரச்செவியே.



எப்பற்றினையுந் துறந்து, இறைவன் பற்றினைப் பற்ற முயலும் பெரியாரும் இளம் மக்களைக் காணலும் தம் மெய்நிலை துறந்து அவர் மீதார்வமுறுவரேல், ஏனையோர் மக்கள்மேற் காதலைக் கடவாரெனக் கூறலும் வேண்டுமோ?

நிற்க இதுகாறும் நாம் மேற்கூறிப் போந்தனவெல்லாம் மக்கட்பேற்றின் சிறப்பினைப்பற்றியன்றோ? ஆதலான் இப்பூமியில் மக்களாய்ப் பிறந்து இல்வாழ்வினை யடையும் நாமொவ்வொருவரும் மக்கட்பேறடைதல் இன்றியமையாததாம்.

வெகுளியுடன் விரைந்துவரும் பெற்றோர், பளிங்குபோலுங் களங்கமில்லா உளத்தராய்த், தள்ளாடித் தள்ளாடி, நடந்து, விழுந்து விழுந்து எழுந்து, புன்முறுவலுடன், மழலை மொழிகளைக் கூறிக் கொண்டு தம்மை நோக்கிவரும் சிறார் சிறுமியரைக் காண்டலும், மனமுவந்து, மார்போடணைத்து, உச்சிமோந்து, முத்தமிட்டுத் தாம் கொண்ட சினம் முற்றும் மாறி, அடங்காமகிழ்ச்சியிலாழ்ந்து,ஆழ்ந்து பேருவகைபூப்பர், இதனானே "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" எனப் பெரியோருங் கூறினர்.

துன்பமுடனும், மனத்துக்கத்துடனும் இருப்போர், துள்ளித் துடித்துப் பெருவிரலைச் சுவைத்து, அம்மா! அப்பா! என அரற்றித் தம்மைத் துன்னிவரும் இளம்மக்களைக் கண்டு, முகமலர்ந்து செஞ்சொல் மிழற்றித் தம்பெருமின்னலைத் துறந்து, மகிழ்ச்சி யெனும் ஆழியினுள் திளையா நிற்பர்.

இவ்வாறு மக்கள் தம் பெற்றோரைப் பல்வகையானும் மகிழச்செய்து, பொறுமை முதலிய நற்குணங்களை யவர்க்கமையச் செய்வரென்பது திண்ணம். இஃதன்றி அறிவும். ஆற்றலும் உடல் வலியும், மனவலியும், ஒருங்கே திரண்ட ஆண்மகனாய் வாய்ப்பனேல் ஊராரெல்லாம் 'இத்தகைப்பிள்ளையைப்பெற இவன் தந்தைஎன்னோற்றான்' எனக்கூறும் புகழினையுந் தம் பெற்றோருக் காக்குவன்.

இனி எஞ்சாது தீச்செயலினையே இயற்றும் மகவினையொருவன் பெறின் அவனை ஊர் பழிக்கும். அப்பொழுது அவனுக்குப் "பிள்ளையில்லாப்பேறு கள்ளியிலே சோறு எனப் பேரேயன்றி வேறென் பயன் பயக்கும்" என வெறுக்கும் ஓயாத் துயரினையே கொடுக்கும். இது பிள்ளைகளின் தவறன்று. "விரும்பி யாவரும் புசிக்குங் கரும்பு

கைப்பது தன்னாய்க் குற்றமே'' ஆகலின் பிள்ளைகள் யாவும் பிறக்கு மங்கிலேயும் ஓர்படித்தே. பிறந்தபின் அவர் தாய் தந்தையர் அவர்களை நன்னெறிக்கண் செலுத்த முயலலே பெரும் பேற்றைப் பெருக்கும். பெற்றோர் பிள்ளைகளைக் கைநழுவ விடின் பிள்ளைகள் தத்தம் மனம் போல் செல்லுமாறெலாஞ் சென்று தீநெறிக்கண் புகுந்து கெட்டொழிவர். இது தாய் தந்தையரின் குற்றமே.

ஆகவே பெற்றோர் தம் மக்களது உடம்பின்வலி, அறிவு, நற்பழக்கம் உணவு, உடை முதலியவற்றினைத் தருந்தவாறமைக்க எற்ற முயற்சிகள் எடுத்தல்வேண்டும் இவ்வாறு சிறுரை நன்னடை பயிற்றுவோர், ஊரரால் போற்றப்படுவர். இதுவே பெற்றோர் பெறும்பேறு. இதனையே ''தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லாமினிது'' என நம் வள்ளுவனாரும் உள்ளியுரைத்தனர். இவைகளான் பெற்றோர் தம் இளஞ்சிறுரை நன்னெறிக்கண்ணுய்யுத்து நலமுறச் செய்வாராக.

சு. ஆண்டியப்பா (யாதவன்)

புதப்பாண்டி.

---

# லீலாவதியின் நிருபம்.

---

(214ம்-பக்கத் தொடர்ச்சி).

தங்காய்! இன்னும் உனக்கு முக்கியமாய் நான் சொல்ல வேண்டியது, ஒன்று உளது. இப்போதுதான் ஞாபகம் வந்தது; சொல்லுகிறேன்கேள். அதாவது நீ குடும்ப விஷயத்தில் எப்பொழுதும் மிகச் செட்டும்சீருமாய் இருப்பது நலம். உன்னுடைய கணவன் அன்பைப் பெறுவதற்கு இதுவும் ஒரு முறையாகும். இதனால் உலோப குணம் உன்னிடம் இருக்கவேண்டும் என்பது என் கருத்தல்ல. சிக்கனமென்றால் செய்யும் செலவுகளை வரையறையோடு செய்தலும், வீணான செலவுகளை ஒழித்தலும் வருமானத்திற்கேற்பக் குடும்பத்திற்கான பொருள்களை மலிவானபொழுது வாங்கி அவைகளை எதிர் காலத்திற்கு வேண்டுமென்ற நோக்கத்தோடு வைத்தலுமாம்.



தங்காய்! நீ சிக்கனமாய் மாத்திரம் இருந்தால் போதாது. சமையம் நேரும்போதெல்லாம் ஏழைகளுக்கும், கூன், குருடு, முடம் முதலிய அங்கஹீனர்களுக்கும் தர்மம் செய்தல் வேண்டும். தர்மம் செய்வதிலும், ''பாத்திர மறிந்து பிச்சையிடு'' என்பதை ஓர்ந்து, நம்முடைய தர்மத்தை மண்டுமாரியாய்த்திரியும் போலிச் சாமியார்களுக்கு அளிப்பதில் பிரயோஜனமில்லை. மேலும் தருமம் செய்வதில் எசிச் செய்வதைவிட எசாமற் செய்வது நன்று. நீ செய்யும் தர்மம் கடுகத்தனையாகிலும் அதை உள்ளன்போடு செய்தல் வேண்டும்.

''ஒப்பொடு முகமலர்ந்தே உபசரித் துண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவாராகிற்
கப்பிய பசியினோடும் கடும்பசி யாகுந்தானே''

(விவேக)

என்றபடி நீ உப்பில்லாக் கூழ் இட்டாலும் உள்ளன்புடன் இட்டால் அதை வாங்குபவர் மனம் குளிரும். ஆகையால் நீ தர்மம் செய்யும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பாயாக. ஆகவே நீ இவ்வாறு சிக்கனமாயிருத்தல் நல்ல பெயரையும் நற்பயனையும் அளிக்கும்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர் கூறினமையால் நீ உன் கணவனுக் குகந்த மனைவியாய் இருக்கக்கடவை.

தங்கையே! இதுவரையில் நீ எங்ஙனம் குடித்தனம் செய்ய வேண்டு மென்பதைச் சொல்லி வந்தேன். இனிக் கற்பு என்பதை எனக்குத் தெரிந்தவரையில் கூறுகிறேன்.

''கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'', கணவன் சொல்லுக்குத் திறம்பாமல், அவன் வார்த்தைக்கடங்கி மனப்பூர்வமான அன்புடன் பணிந்து நடத்தல் வேண்டும். தன் கணவனையன்றி மறு புருஷனைப் பார்க்காதவளும், மனதில் நினைக்காதவளும், பிறபுருஷரிடம் மனதால் வளுமே கற்பைக் காத்தவர்கள் ஆவார்கள். பிற புருஷனை மனத்தால் நினைத்தாலும் கற்புக்குப் பங்கமாம். கற்புக்கரசிகளில் ஒருத்தியாகிய சாவித்திரியைப்பார். தன் மனத்தால் வரித்த கணவன் அற்ப ஆயுளுடையவனாய் இருந்தாலும் ஏன் மணந்துகொண்டாள்? தன்மனத்தை

ஒருதரம் அவனுக்கே அற்பணம் செய்துவிட்டபடியால் மறுமுறை மனத்தைமாற்றினால் தன் கற்புக்குப் பங்கம் ஏற்படுமென்றல்லவோ எண்ணி அவள் அங்ஙனம் செய்தாள்?

தன் கணவனை விட்டு மற்றொருவன்மேல் காதல்வைத்துச் சிலர் அவனுடன் சென்றுவிடுகிறார்கள். அந்தோ! அப்பா! அவர்கள் படுங் கஷ்டம் சொல்லவும் முடியாது; நினைக்கவும் முடியாது. அங்ஙனமிருப்பினும் அதிகம் கூறாது சிறிது கூறிமுடிக்கிறேன்.

பொருவில் கற்பின் வழீஇயபுன் மங்கையர்க்
குரிய மூன்று மரபினுள் ளோரையும்
வெருவந் தேங்க விழுங்கி யுமிழ்கிலா
வெரியுந் தீநர கிற்குடி யேற்றுவர்.

(காசிகாண்டம்)

என்ற அருமை மொழியைப்பார். முன் அகலிகை என்பவள் தன் விபசாரத்தாலன்றோ கல்லாய்ச் சபிக்கப்பட்டாள். அவளுடைய கதியைப்பார். அங்ஙனம் விபசாரியானவளுடைய பெயர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படி யன்றோ நமது முன்னோர்கள் நமது கல்யாணச் சடங்குகளில் ஒன்றாகிய அம்மிமிதித்து அருந்ததியைப் பார்க்கும் சட்டம் வைத்துள்ளார்கள். அதாவது அகலிகையாகிய கல்லை மிதித்துக் கற்புக்கரசியாகிய அருந்ததியை மேலே பார்க்கச்சொல்லுகிறார்கள். ஆகையால் அவள் விபசாரம் போனது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியாய்விட்டது. என்ன பரிதாபம்! அது போலவே ஓர் குடும்பத்தில் ஒருத்தி விபசாரியாய்ப் போய்விட்டால் நீடூழிகாலம் அவளுடைய பெயர் இழிவுபட்டுக் கிடப்பதுமன்றி அக்குடும்பத்தை எல்லோரும் வெறுக்கிறார்கள்.

உன் தலைவனுக்கு வெறுப்பான காரியங்கள் உனக்கும் வெறுப்பாகவே இருக்கட்டும். நீயும் அதை விட்டொழித்து அவனுக்குவிருப்பானவற்றைக் கொள். பெண்கள் பிடிவாதம் என்பதை அறவே ஒழிக்க வேண்டும். அங்ஙனமில்லையேல் அவர்கள் கணவனுடைய கோபத்திற்குள்ளாவார்கள்.

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்யாசங் கொள்"



என்பதுபோல் ஒரு பெண் தன் கணவனுக்கு ஏறுமாறாக நடப்பாளாகில் அவன் "பிடாரியைப் பெண்ணென்று பிடித்துப் பேயனானேனே! இதுவும் என் தலைவிதியே" என்று விசனப்பட்டுச் சந்நியாசியாவதுமுண்டு. ஆகையால் 'பழம் நழுவிப் பாலில்விழுந்ததுபோலவும், சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது போலவும், ஏதோ என் பாக்கிய வசத்தால் எனதில்வாழ்க்கைக்கு நல்ல பெண் வாய்த்தாள்" என்று உனது கேள்வன் சொல்லும்படி நீ நடந்துகொள்.

(தொடரும்)

ஸி. ராஜரெத்தினம்.
(யாதவன்)

---

# சேர நாட்டு யாதவ அரச குலம்.

---

### வேள்-ஆய்.

மலைய மலைத்தொடரின் தென்பக்கத்தில் ஒரு முக்கியமான பகுதி பொதிகை ஆகும். 'இதனை அகஸ்தியர் கூடம்' எனவும் வழங்கி வருகிறார்கள். தென் திருவாங்கூர் பக்கத்தில் இம்மலை இருக்கிறது. இம்மலையை அடுத்த தென் திருவாங்கூர் பகுதிக்குப் பொதிகை நாடு அல்லது ஆய்நாடு என்று பெயர் வழங்கும். இந்நாட்டிற்கு ஆய்க்குடி தலைநகர். ஆய்குடி இப்போது கோட்டாறு என வழங்கும் ஊர் ஆதல் கூடுமென்பது திருவனந்தபுரம் சிலாசாசன பரிசோதகர் A. கோபிநாதராவ் அவர்களின் அபிப்பிராயம். தென்னாடு வந்த யவன யாத்திரீகர்களான 'தால்மியும், பிளினியும், ஆய்நாட்டில் கோட்டாறு என்ற ஒரு முக்கிய பட்டினம் இருந்ததெனக் கூறுகிறார்கள். தென் திருவாங்கூரில் மிகப் பழமை வாய்ந்த பட்டணம் கோட்டாறு ஒன்றே இருந்திருப்பதாகத் தெரிய வருவதால் ஸ்ரீ ராவ் அவர்களின் அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளத் தகுந்ததேயாகும். இவற்றால் 'ஆய்' என்பானது நாடு பொதிகை நாடு என்பதும் அதில் முக்கிய பட்டணம் கோட்டாறென்பதும் அறியப்படும்.

நறுநீர்ச்சுனைகளையும் யானைப் பெருக்கினையும் பொதிலை நாடு பெற்றிருந்தது. பகைவர் புகவொண்ணாத அரண் வலி இதற்கு

உண்டு. இது

மழை தவழ் பொதியில்
ஆடு மகள் குறுகினல்லது
பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே.

என்பதனால் அறியலாம்.

இந்நாட்டை வேளிர் குலத்தவனாகிய ஆய் என்பான் ஆட்சி புரிந்து வந்தான். ஆண்டிரன் என்பதும் இவனுக்கு ஒரு மறுபெயர். இவன் வேளிர் குலத்தவனென்பது 'மாவேள் ஆய்' 'தேர்வேள் ஆய்' என்ற புறநானூற்று அடிகளால் அறியலாம். வேள், ஆய் என்ற மொழிகள் யாதவர்களைக் குறிப்பிடுகின்றன என்று முன்னால் குறிப்பிட்டிருப்பதனால் அதைப்பற்றி இன்னும் மேற் கோள்களுடன் விளக்கவேண்டுவதில்லை. வேள்-ஆய் என்பவன் யாதவகுல அரசன் என முன்னரே அறிந்துகொண்டோம். ஆய் நற்குணங்கள் நிறையப் பெற்றவன். யாவரிடமும் இன்சொல் பேசும் இயல்பினன். இவன் பல மகளிரை மணம்புரிந்து வாழ்ந்து வந்தானென்று தெரிகின்றது.

அக்கால அரசர்களைப்போல ஆய் அரசனும் புலவரைப் போற்றும் இயல்புடையவன். புலவர்களும் தம் வாயார இவனைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். இப் புலவர்களில் முடமோசியார், ஒடைகிழார் குட்டுவன்கீரனார், பரங்கொற்றனார், பரணர், காரிக்கண்ணனார் முதலியோர் முக்கியமானவர்கள். இவரில் முடமோசியார் என்பவர் ஆயின் உத்தமகுணங்களைத் தமது வித்தகக்கவியால் நன்கு விளக்கியிருக்கிறார். ஆயும் முடமோசியாரும் ஆப்த நண்பர்களாக இருந்திருக்க வேண்டும். இது "திருந்துமொழி மோசி பாடிய ஆயும்" என்பதனால் அறியப்படுகிறது.

கடையெழு வள்ளல்களில் வேள் ஆயும் ஒருவன். அவனது வண்மை பல பாடல்களால் பாராட்டப்பட்டிருக்கிறது. அவன் தன் மனைவியரது மங்கல நாண் தவிர ஏனைய எல்லாச் செல்வங்களையும் இரவலருக்கும் புலவர்க்கும் அளித்த வண்மையாளன். மோசியார் இவ் வள்ளலின் கொடைச் சிறப்பையும் நற்குணங்களையும் கண்டு வியப்படைந்தார். இவனைக் காண்பதன் முன் பிறரைப் பாடிய தன்னை.

முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே
ஆழ்க என்னுள்ளம் போழ்க என் நாவே
பாழூர்க் கிணற்றில் தூர்க என் செவியே



என முடமோசியார் தம்மை வெறுத்துக்கொண்டார். தலைசிறந்த வள்ளலாகிய வேள் ஆய் ஏனையருக்கு முன்னால் எவராலும் எண்ணி ஏத்தும் இயல்புடையவனாயிருக்க அவனை நான் முதலில் எண்ணாது யாவருக்கும் பின்னால் எண்ணினேன். அங்ஙனம் முன்னால் எண்ணு பவனைப் பின்னால் எண்ணின என் உள்ளம் ஆழ்ந்துவிடுக. அவனை முன்னால் போற்றாத என் நாவு பிளவுபடட்டும். அவன் புகழை முன்னால் கேள்விப்படாத என் செவி தூர்ந்துவிடட்டும் என்பது இதன் பொருள் "நீ இல்லாத இடத்தில் புலவர்கள் வாழாதிருக்கக் கடவர்" என்றும் "பெரிதாக ஏத்தினும் சிறிதும் உணரமாட்டாத பெருமை இழந்த அரசரை என்னை ஒத்தவர்கள் போற்றமாட்டார்கள்" என்றும் முடமோசியார் வேள் ஆயைப் புகழ்ந்து கூறியுள்ள வார்த்தைகளால் அவனது புலவரைப் போற்றுந் தன்மை வெளிப்படுகிறது. இப் புலவர் ஒருநாள் பொதிகை நாட்டு மலை வழியாகப் போகும் போது ஆங்கு நிற்கும் யானைக் கூட்டங்களைக் கண்டு

"குன்றம் பாடின கொல்லோ"
களிறு மிகவுடைய விக் கவின் பெறு காடே"

எனக் கூறியுள்ளார். இம் மலைகள் ஆய் அரசனைப் புகழ்ந்து பாடி அவனால் அளிக்கப்பட்ட யானைக் கூட்டங்களைப் பெற்றிருக்கின்றன வோ என்பது இதன் பொருள். இதனால் ஆயின் யானைக்கொடை விளங்குகிறது. இன்னும் "இம்மையில் அறஞ் செய்தால் மறுமைக்கு ஆகுமென்ற கருத்தோடு ஆய் அறஞ் செய்ததில்லை. அவன் எதிர் உபகாரத்தை இச்சிக்காமல் அறஞ்செய்பவன்" என்பதனை "இம்மைச் செய்தது மறுமைக்காமெனும் அறவிலை வணிகன் ஆயலன்" எனக் கூறியுள்ளார்.

ஆய் வள்ளல் சிவ பக்தியில் சிறந்தவன். நீல நாகத்தால் கிடைக் கப்பட்ட அரிய ஆடையைக் கடவுளுக்குத் தகுதியுடையதெனக்கருதி ஆலின் அடியில் அமர்ந்திருந்த சிவபிரானுக்கு உவந்தளித்தான். அதை நாகங்கள் புணரும்போது அவைகளின் மேல் போர்க்கப்பட்டிருக்கும் ஆடை மேலானதென்பது சிலர் கொள்கை. அரிய பொருள்களை ஆலயங்களுக்கு அளிப்பது அன்பருக்கு இயல்பாதலால் ஆய் வள்ளலும் தனக்கு அருமையாகக் கிடைத்த அந்த ஆடையை மனமுவந்து சிவபிரானுக்கு ஈந்தான். இச்செய்தி,

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன் மொழி ஆய்"

என்ற பழைய பாடற் பகுதியில் விளங்குகிறது.

இவ்வரசர் கொங்குநாட்டு மன்னனைப் போரில் வென்று அவனை மேல் கடல் பக்கத்தில் தோல்வியுறச் செய்து ஓட்டினானெனத் தெரிகிறது. கொடையும் வீரமுமுடைய இவ்வள்ளல் பெருந்தகை இப்பூமியில் அழியாப் புகழை நிறுவிச் சிலகாலம் ஆட்சி புரிந்து காலஞ்சென்றான். அவன் மரணத்திற்கு ஆற்றாத அவன் மனைவியர் தீப்பாய்ந்து உயிர் நீத்தனர்.

இந்தியா வெங்கும் சுற்றி நாட்டின் இயல்புகளை நன்கு எழுதின யவன யாத்திரீகரான தால்மி தமிழ்நாடு வந்து ஆய் நாட்டைப் பற்றியும் எழுதியுள்ளார். இவர் வந்த காலம் 1750 வருஷங்களுக்கு முன்பு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடையெழு வள்ளலாகிய வேள் ஆயின் காலமும் கடைச்சங்க காலமே. கடைச்சங்க காலம் 2000, வருஷங்களுக்கு முன்பு என்ப. இவ்விரு கொள்கைகளும் ஒத்து வருகிறதினால் வேள் ஆயின் காலம் 2000 வருஷங்களுக்கு முற்பட்டதென்று தெளியலாகும்.

ச. செல்லம் (யாதவர்.)
சுசீந்திரம்.

---

# மாடுகள் பாதுகாப்பு.

---

மாடுகள் பாதுகாப்பும் விருத்தியும் அவசியம்
எச்சரிப்பு—கோடைகாலம்.

கும்பத்திற் பாதிகோடை என்பது மாசி மாதம் பிற்பாதியான 15ம்தேதி முதல் வைகாசிமாதம்வரை. இவ்வேனிற்காலத்தைச் சூரிய உஷ்ணபாதை என்பார்கள். இக்காலத்தில் மனிதரும் மாடுகளும் மற்றைய எல்லாப் பிராணிகளும் தாங்கமுடியாமல் உஷ்ணம் அதிகப்பட்டிருக்கும்.



வேனிற்காலம் மாடுகளுக்கு வாய்நோவு கால்நோவு பாதித்துக் கஷ்டப்படுவதுண்டு. முன்னெச்சரிப்பாயிருந்தால் வியாதி பாதியாமல் தடுக்கலாம். பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, நெல்லூர் இந்த ஜில்லாக்களில் மழை குறைவாயிருந்தும் உஷ்ணபாதை தாக்கவிடாமல் அங்கே மாடுகளைப் போஷித்து வருவதால் வியாதி அதிகமாய்ப் பாதிப்பதில்லை. தெலுங்கு ஜில்லா மாதிரி தமிழ் ஜில்லாக்களில் மாடுகள் சரியாய்ப் போஷிக்கப் படாததால் வியாதி காண்பதாச்சரியமன்று. கவலையீனத்துக்குத் தக்க தண்டனையாகவே ஜெகதீஸ்வரர் வியாதியைப் பரவச்செய்து வருவதாகச் சொல்லலாம்.

தெலுங்கு ஜில்லாக்களில் மாடுகள் சரியாய்ப் போஷிக்கப்படுவதால் புஷ்டியானமாடுகள் ஆழமாயுழவுசெய்யச் சோளம்பருத்திகளில் தக்க மாசூல் கிடைக்கிறது. ஆழமாக உழுவதால் மண் புலபுலப்பாயிருந்து பயிருடாகக் குண்டகாவென்ற சிறுகத்திபாம்பால் மண்சீவி பயிர்மூட்டிலணைத்துப் பயிர் காய்ச்சல் கொடாமல் ஈரப்பதமாயிருந்து பயிர் விளைவாகிவிடுகிறது. மாடு போஷிப்பதால் ஆழ உழவு செய்யவும், பயிர் மூட்டில் மண்ணணைக்கவும் மாடு சௌகரியமாய் வேலைசெய்து அங்கே விளைவு தாழ்வாய் நஷ்டமாவதில்லை.

தெலுங்கு ஜில்லாக்களில் மாட்டுக்கொட்டகைகளில் இரவுபூராவும் லாந்தல் போட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இரவு 2-3 தடவை செலவாகச்செலவாகத் தீனி வைப்பதால் தீனி சேதமாவதில்லை. பருத்தி விரையரைத்தும், சோளக்கஞ்சி, கேழ்வரகுமா ஜலத்தில் கலந்தும் வைப்பதால் மாடுகள் புஷ்டியாய், வயது முதிர்ந்தமாடும் காளங்கன்று மாதிரி காணப்படும். அவர்கள் மாடுகளைக் குழந்தைமாதிரி போஷிப்பதால் தெலுங்கு ஜில்லா விவசாயம் மேன்மையாயிருக்கிறது. அதுபோல் தமிழ் ஜில்லாவிலும் மாடுகளைப் பாதுகாத்தாலொழிய விவசாயம் மேம்பாடாகமாட்டாது. சரியாய்ப்பாதுகாக்கும் மாடுகளுக்கு நோவு பாதியாதெல்பதற்கு வெட்டரினெரி டிபார்ட்மெண்ட்டார்கையிலுள்ள மாடுகளே போதிய ருசுவாகும். மாடு போஷிப்பு வளர்ப்பு முறை கவனித்தாலொழிய தமிழ் ஜில்லா விவசாயம் முன்னேற்றமடையாது. வருடந்தோறும் சந்தைகளில் மாடுவாங்கிப் பணம் வியர்த்தமாவதும் நிற்காது. ஆனால் மாட்டு விலைக்குச் செலவிடும் பணத்தில் ஒரு சில பாகம் செலவுசெய்து இருக்கிற மாடுகளைப் போஷித்தால் மாடு அடிக்கடி வாங்க வேண்டியிராது.

கிரேட். பிரிட்டன் தேசத்தில் மாடுவளர்ப்புத் திருஷ்டியாய்க் கவனிக்கப்படுகிறது. அங்கே சாகுபடியாகும் நிலத்தில் 10ல் 1பாகம் மாடு மேய்ச்சல் நிலமாக விட்டு உழவு செய்து மாடுவளர்க்கப்படுகிறது. தக்க போஷிப்பால் மாடு விருத்தியாகிப் பால்வெண்ணெய் வியாபாரம் செய்யவும் படுகிறது. இந்தியாவில் மனிதர் உணவுக்கான தானியாதி பயிர் செய்வதே தவிரப் புல்வளர்த்து மாடுவளர்த்து விருத்திசெய்யும் பிரதேசம் ஏகதேசமே. மைசூர் ராஜ்ஜியத்திலும் நெல்லூர் கிருஷ்ணா ஜில்லா சில பாகங்களிலும் கோயமுத்தூர் ஜில்லா பழயகோட்டை பட்டயகாரர் வகையறு சிலபேராலும் மாடு விர்த்தி செய்யப்படுகிறது. இவர்கள் பால்வெண்ணெய் வியாபாரம் செய்வதில்லை. பழயகோட்டை பட்டயகாரர் மேய்ச்சல் நிலம் ஏராளமாய் ஏற்படுத்தி விருத்திசெய்கிறார். அவ்வாறு எல்லாரும் செய்ய முடியாதென்று கூறி யாட்சேபணை செய்யக்கூடும்.

கோவாப்ரேடிவ்கிரேடிட் சொசைட்டி முறையில் பங்கு நிர்ணயித்து நிலங்கள் ஏற்பாடாகி மாடுவளர்ப்பு முறை செய்வது தேச க்ஷேமமடைய ஏதுவாம்.

மாடு பராமரிப்பு இன்றியமையாதெனச் சொல்லி நிறுத்தி மேல் வாய் நோவு, கால் நோவு பரிகாரந் தொடர்ந்து பேசுவோம்.

வேனிற் காலம் மாடுகளுக்கு வாய் நோவு கால் நோவு காண்பது சகஜமாதலால் இரண்டே முக்கால் அடி உயரமுள்ள மாடுகளுக்கு ஆமணக்கெண்ணெய் கால்படியுடன் நிதானமான சூடுள்ள வெந்நீர் காலே அரைக்கால் பக்காவும் கலந்து பேதிக்குக் கொடுக்கவும். பேதியாகாதவரை 2-3-மணிக்கொருதபா அரை பக்கா இளஞ்சூடான வெந்நீர் கொடுத்தால் பேதியாய்விடும். எந்த வியாதி ஆரம்பத்திலும் பேதிக்குக்கொடுத்து வயிற்றைச் சுத்தஞ் செய்து பின் மருந்து கொடுப்பது நலம். பேதிக்குக் கொடுத்தால் மருந்தின் குணம்நன்றாய்ப் பலிதமாகும். வியாதியின் மும்முரமும் சாந்தமாய்விடும். மாடுகளின் உயரங் கூடுவதற்குத் தக்கபடி மருந்தளவு குறைக்க வேண்டும். இவைகன்றுகளுக்கு மேற்கூறிய மாட்டளவில் 4ல் 1ம் ஆடுகளுக்கு 6ல் 1ம் கொடுக்கவேண்டும்.

(தொடரும்.)

கிருஷிகன்.

# "முயற்சி திருவினை ஆக்கும்."

## என் வாழ்நாள்.

பூர்வீக பாரம்பரியமாய் எங்கள் குடும்பம் ஒருசெல்வாக்குடையதாகவே யிருந்து வருகிறது. பெரிய சமுசாரி என்பதற்குப் 'பெரிய தனக்காரர் வீடு' என்ற பட்டம் எங்கள் குடும்பத்துக்கு வழங்கி வருவதிலிருந்தே அறியலாகும்.

பொன்னகலா மணிமார்பப் புயல் வண்ணக் கருணையங்கடங் கடலாய் வைகுண்டத் தெழுந்தருளிய சாட்சாத்கார சர்வஞ்ஞ பரம பதநாதன் நந்த நந்தனனாகவந்து திருவிளையாடல் புரிந்த கோபால குலத்திற்றோன்றி அப்பெருமானின் பொற்பாத கமலங்களையே போற்றக் கடமைப் பட்டிருக்கும் எனது மூதாதைகள் யாதுபற்றியோ இடையில் 'மரபுதான் கோபால கோத்திரம். மதம்-சைவம். குலதெய்வம்-வீரபத்திரசுவாமி என்றும் விபூதி முதலிய சிவ சின்னங்களையே தரிப்பதன்றித் திருமண் திருத்துழாய் முதலிய வைணவக் குறிகளைத் தரிக்கக் கூடாதென்றும் அவ்விதம் தரித்தால் குல தெய்வம் கோபித்துக்கொண்டு குடும்பத்துக்கே இடைஞ்சலைக்கொடுக்குமென்றும், எங்காவது ஒரு பெருமாள் சந்நிதிக்குப் போக நேர்ந்தாலும் நின்று தெரிசிப்பதன்றி நிவேதனம், காணிக்கை முதலியவைகள் செய்யக்கூடாதென்றும் சங்கற்பித்து நடந்து வருகின்றனர். இந் நிகழ்ச்சி என் தலைமுறைவரை நடந்து வந்திருக்கிறது; இவ்விதம் நடப்பது எத்தனை தலைமுறைக்கு முன்னிருந்தோ என்பது தெரியவில்லை.

இவ் விஷயம் பள்ளியிற்பயின்றுவந்த எனக்குத் தெரியவந்தது. அப்போது நான் எண்ணியதாவது: 'உலகத்திலே இடையர் என்ற குலம் உண்டானதற்கும் "அச்சுதன் பிறந்த ஆய்குலம், கோவிந்தன் புரந்த கோகுலம், விண்டுவினுடைய ஆடல்களைக் கண்டதான அண்டர்குலம்'' என இதிகாச புராணங்களும் சகல மத, சமய, வருணத்தவர்களும் மேன்பாடாகப் போற்றுதற்கும் காரணகர்த்தாவான யாதொரு கண்ணன் வழிவந்த நங்குடும்பத்துக்குத் தெய்வமும், மதமும் பின்னைகேள்வனும் வைணவமும் அன்றிப் பின்னையாதையுங் கூறவுங் கொள்ளவும் ஆதாரமுண்டோ? அல்லவே! ஆதலால் நம் வாழ்நாளில் நமது குடும்பத்தைத் தற்போதய முரணான நிலையி

லிருந்து எவ்வகையிலேனும் இடையறாது முயன்று பூர்வநிலைக்குக் கொண்டுவந்தே தீரவேண்டும்' என்பதே.

இஃதிங்ஙனமிருக்க, குடும்பத்தில் நானே முதற்பிள்ளை யாகையினால் எனக்கு வயது பதினெட்டு நிறையவும் விவாகம் செய்து வைக்கும் விஷயத்திற் சிந்தையைச் செலுத்தினர். எம்பெரியோர் அவ்விடயத்தை எனக்குந் தெரிவித்துச் சம்மதம் வினவினர். அதற்கு உறுதியாக நான் கூறியதாவது;—நமது குலோற்பவ மூர்த்தியாகிய கண்ணபிரான் திருப்பணியொன்று நமக்குச்சொந்தமான மைதானத்தில் (களத்தில்) நிருமித்துக் கும்பாபிடேகம் செய்த பிறகுதான் மணவினைக்கிசைவேன் என்பதே. அதற்கு எம் பெரியோர்:—அடே! அது முடியாத காரியம். கும்பிடுவதன்றித் திருநாமந் தரித்தாலும் பிணங்கிக்கொள்ளும். விட்டுணுதிருப்பணி செய்தோமானால் நம் குலதெய்வம் மிகவுங் கோபித்துக்கொள்ளாதோ? என்ற பழம் பாடங்களைப் படித்தனர். அதற்கு நான்:—நமக்கும் நமது குலத்துக்கும் தெய்வம், கண்ணனும், மதம் வைணவமுமேயன்றி நமது குடும்பத்தில் கையாண்டுவரும் மார்க்கத்திற்கு எவ்வித ஆதாரமும் கிடையா.

நிற்க நமது குடும்பத்திலோ பூமியின்கண் சாதாரணமாகப் பேசிக்கொள்வதான "அரியும் சிவனும் ஒன்று" என்றுவது அன்றி வீர சைவர்களின் செய்கைகளையாவது அனுசரிப்பது நமது குலமுறைக்குச் சிறிதும் ஒத்ததாகாதுஎன்று பாகவதம்,விட்டுணுபுராணம் நாலாயிரத்திவ்யபிரபந்தம் முதலிய கிரந்தங்களிலிருந்து எவ்வளவோ உதாரணங்கள் எடுத்துச் சொல்லியும் நீண்டகாலமாக முதிர்ந்த வழக்க பழக்கமாகையினால் நான் கூறும் நியாயங்கள் யாவும் அவர்களுக்கு மாறாகவே தோன்றியதுமன்றி என்னுடைய எண்ணம் பூர்த்தியடைவதாகவும் தென்படவில்லை.

பிறகு சின்னாட்செல்ல மறுபடியும் எனது மணச் செய்தியை என்னிடம் பெரியார்கள் கூறியபோது நான் இதுவே ஏற்ற தருணமென வெண்ணிக்கொண்டு 'நமது சொந்தச் செலவில் பெருமான் கோவில் ஒன்று கட்டி அவ் ஆலயத்தின் கும்பாபிடேகம் காணாது எவ்வளவுகாலம் ஆயினும் மணவினைக் கிசையேன். இது நிச்சயம்' என உறுதியாகக் கூறிவிட்டேன். அதன்பின், பெரியார்கள் கருதியதாவது:—இனி இவன் இணங்கான். நாம் ஏன்தான் வீண் பிடிவாதம் செய்யவேண்டும். குடும்பத்தின் பிற்காலத்திய லாப நட்டங்களை



அனுபவிப்பவன் அவனே. ஆதலால், அவன் பிரதிக்கினைப்படியே செய்துவிடுவோம் என்பதே. அதன்படி திருப்பணிக்கு முகூர்த்தமிட்டு வேலையாரம்பித்து (1928) பிரவ ஆண்டு தைமாசம் 28நாள் கும்பாபிடேகம் நிறைவேற்றி அதன் பின் விபவ வருடம் ஆவணி மாதம் 26தேதி என் மணவினையும் பூர்த்தியாயது.

எனதன்பார்ந்த கோபால சிலகுலோத்தமப் பெருந்தகையீர்! நமது ஆயர்மரபிலவதரித்துத் தூய சந்ததிகளாய்த் தோன்றிய யாவருக்குமே குலதெய்வம் கண்ணனும், மதம் வைணவமுமேயன்றிப் பிறிது தெய்வமும் மதமுமில்லை என்பது யாவராலும் மறுக்கத் தகாததாகும். அன்றி இவை இரண்டையும் விடுவார்களாயின் அஃது ஒரு தந்தைக்குப் பிறந்த ஒருவன் மறு தந்தைக்குப் பிறந்ததாகச் சொல்வதுபோலாம். ஆனால் சிகரன்போன்று அபிமான தெய்வமாகக் கொள்வதற்கும் மேற்கூறிய விஷயத்திற்கும் சம்பந்தமில்லை. இன்னும் எங்குடும்பத்தைப்போன்று எக்குடும்பமாவது யாராவது மாறியிருந்தால் உடனே மீண்டு "கோபாலர்" என்பவர் யாவரும் "வைணவரே" என்று முன்போன்று உறுதிகொள்ளு வண்ணம் ஒருங்குசேர வேண்டுமெனப் பன்முறையும் பணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது மேற்கூறிய ஸ்ரீ பாலகிருஷ்ண ஆலயத்திற்கு முன்பாக எம்மாலேயே கட்டப்பெற்ற "பாலகிருஷ்ணவிலாசம்" என்ற கட்டிடத்தில் "யாதவ வாலிப சங்கம் ஒன்று நமது குலோத்தாரண தலைவர், திருவாளர், இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள் அக்கிராசனத்திலும் "இலவச வாசகப் புத்தக நிலையம்" ஒன்று. நமது மித்திரன் தலைமையாசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள் தலைமையிலும் நிறுவும் விழா ஆற்ற வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆதலால்,

என்றன் முயற்சி இனிது நிறைவேறற்
கென்றும் பணிந்திங் கிறைஞ்சிடுவேன்—மன்றனுறை
தண்ணந் துளபமணி தாமோ தரனாகுங்
கண்ணன் கமலக் கழல்.

வீ. எஸ். வீரணக்கோன்,

அம்பலத்தாடி,

சிறுவாலை ஜமீன்.

# கோகில கிருஷ்ணன்.

அல்லது

## இரு யாதவ மணிகள்.

(ஒரு சீர்திருத்த நாடகம்.)

---

[அங்கம் 1.]

[காட்சி 1.]

காலம்—நடுப்பகல்.

இடம்—யாதவபுரியில் நவநீதக்கோனார் வீடு.

கோகிலம்:—(தன் அறையிலுள்ள ஒரு மேஜையின் அருகே
உட்கார்ந்து தன் சகோதரன் வரவை எதிர்பார்த்தவண்ணம் ஒரு பத்
திரிகையை வாசித்துக்கொண்டிருக்கிறாள். கடிகாரம் ஒன்று மேஜை
யின்மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிமிர்ந்து பார்த்து) ஆஹா!
இதென்ன ஆச்சரியம்! ஏன் நமது சகோதரன் வரவில்லை இங்கு?
மணியோ சுமார் ஒன்றாகிவிட்டது! இவரென்ன! கல்வியறிவில்லாத
வரா, குறிப்பிட்ட காலத்தை மறந்து தனக்கு ஒழிந்தவேளையில் இங்கு
வர? காரணமில்லாமல் மாத்திரம் இத்தகைய தாமதம் செய்வதற்கு
இடமிராதென்பது நிச்சயம். (யோசித்துச் சிறிது சுற்றிப்பார்த்து)
என் படிப்பை முடித்துக்கொண்டு கலாசாலையைவிட்டு இந்த யாதவ
புரிக்கு நான் வந்தது முதல் பொழுது போக்குவதற்கு இடமில்லை.
இந்த யாதவ மித்திரன் போன்ற சில பத்திரிகைகளும் இல்லையேல்
என்னாகும்! அங்கே, நமது நண்பருடன் உல்லாசமாய்ப் பொழுது
போக்குவதும், நல்ல சுத்தமான காற்று வாங்கிக்கொண்டு, உலக
விஷயமான பற்பல சமாச்சாரங்களைச் செவ்வனே கவனிப்பதுமாகக்
காலத்தைப்போக்கி வந்த எனக்கு இங்கே வசிப்பது மகா சிரமமாகத்
தானிருக்கிறது. ஆனால் இப்போது இங்கு பொழுது போகாததைப்
பற்றிக்கூட எனக்குச் சிறிதும் வருத்தமில்லை. அவ்வாறு செய்தாலும்
தவறுதான். ஏனெனில் நமது தேச ஆசாரப்படி ஸ்திரீகள் தன் கண
வனையே தெய்வமாக நினைத்து இருவரும் ஒருங்கே குடும்ப பரிபால
னம் செய்யவேண்டுவதுதான் உத்தம குணமுடையவர்க்கு லக்ஷண
மாகும். அதற்குச் சந்தேகமில்லை. அவர்களுக்கு எவ்வளவு கல்வியிருப்
பினும்கூடக் கணவனில்லாத வாழ்வு தாழ்வுதான். ஆயினும், வீடு
வாயில்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, மாடு கன்றுகளுக்கெனப்
பிரத்தியேகமான இடம் ஏற்படுத்திக் கொட்டில்களில் இருக்கும்



மற்றவர்க
அசுத்தங்களை அப்போதைக்கப்போது போக்கி, அதனால் மற்றவர்க
ளுக்குச் சிறிதும் வெறுப்புண்டாகாமல் செய்து வைத்துக்கொள்வத
னால் ஏற்படக்கூடிய சௌகரியம் இவர்களுக்குத் தெரியவில்லையே.
இங்கு வந்தது முதல் இந்த அசுத்தங்களைக் கண்ணுறுவதால் ஏதே
தோ தோற்றங்கள் உதிக்கின்றன. இப்படியே இருந்தால் இவர்கள்
சுத்தமான ஆகாயத்தை உட்கொண்டு சுகிப்பது எங்ஙனம்? இத்து
டன் இவர்கள் வியாபாரம் செய்கின்றனரே! இதற்கென்று ஏற்பட்
டுள்ள தயிர் பால் பாத்திரங்களை அடிக்கடி தேய்த்துச் சுத்தமாக்கி,
அவைகளைத் தனியே ஓர் இடத்தில் வைத்துக்கொண்டு அதையாவது
சரிவரப் பரிபாலனம் செய்கிறார்களா? ஐயோ! பாவம்! (யோசித்து)
எவ்வளவோ புராணங்களிலும் கூட மகாசிரேஷ்டமாயும், சுத்தம் சுசி
ருசியுள்ளவர்களாயும் கூறப்பட்டுள்ள யாதவகுலத்துதித்த எனக்கு
இவ்விஷயங்களைக் கவனிக்கும்போது, மனம் என்னபாடு படும்?
இதை முதலில் நம்மவர் கவனிக்கும் பட்சத்தில் தயிர், பால் வேண்
டியவர்கள் நமது வீடுகளுக்கே வந்து நேரில் வாங்க ஆசையுள்ளவர்க
ளாகக்கூட இருப்பார்களே! (யோசித்து) ஆம் இவர்களைக் குறை
கூறுதலில் என்ன இருக்கிறது! இவ்வளவு கல்வியறிவு ஏற்பட்ட
பிறகுதானே எனக்கே இவையெல்லாம் புலப்படுகிறது! இதைப்
போல் நம்மவர் பலரும் ஏன் கல்வி உணர்வு சிறிது பெறலாகாது?
பாவம்! இவர்கள்மீது குறை கூறினேனே இத்துணைநேரம் நான்!
(யோசித்து) ஆம்! நமது யாதவ குலத்திற்கு முன்னேற்றம் வேண்டு
வது அவசியம்தான். இல்லையேல் தங்கள் பழக்க ஒழுக்கங்களைப் பரி
சீலனைசெய்து விலக்குவன விலக்கி, சுகமே வாழ இவர்களுக்கு எவ்
வாறு தெரியக்கூடும்? ஆகவே நமது குல ஆடவர்களும், மகளிரும்
கட்டாயம் கல்விப் பயிற்சி பெற்றாலே ஒழிய முன்னேற்றமடைவ
தென்பது ஒருவாறு கடினமெனவே கூறலாம் (சோர்ந்து-பெருமூச்
செறிந்து) உம்—ஐயனே! ஏ! பரமாத்மா! என்றுதான் இத்தகைய
பெருமையை எங்களுக்கு அளிப்பீரோ? (பக்கத்திலிருந்த ஒரு சோபா
வில் சாய்ந்து யோசித்தவண்ணம் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறாள்.)

தபாற்காரன்:—"கோகிலத்தம்மாள்" [என்று கூப்பிடுகிறான்].

நவநீதக்கோனார்:—[கடிதத்தைப் பெற்றுப் புரட்டிப்பார்த்து-சந்
தோஷித்து] அடா! டா! என்னா அளவுபோலே எளுதிருக்குது.
பேஷ்! கன ஜோக்கால்ல இருக்குது! நம்ப மச்சான் பேச்சேக் கேக்
காமே கோகிலத்தே கொஞ்சம் கோண எளுத்துப் படிக்கப் போட்

டாலும் போட்டோம், அது எம்புட்டோ பெருமையால்ல இருக்
குது—இது இப்படி படிச்சிட்டு, நல்ல சேலேயா கட்டிக்கிட்டு, இங்கு
னியே அளுக்குப்படாமே குந்திருக்குதே, வூட்டுவேலே செய்யுமோ
என்னுமோண்ணு ஒரு சந்தேகம் இருந்துச்சு. இண்ணைக்கி காத்
தாலே சமைச்சிருக்குது பாருங்க; டேயப்பா! என்ன ருசி தெரியுங்
களா? த்-த்-த்-த் (நாக்கைக்கொட்டி) அவுங்க அம்மா சமையலெல்
லாம் கூட கெட்டுது பூங்க. அத்தோடே மாத்திரமா! வுன் வூட்
டுக்காரி சோறுக்கிச்சுண்ணு அடுப்பாங்கரையெல்லாம் எக பாத்திர
மும் பண்டமுமா பரத்திக்கிடக்கும் பாத்துக்குங்க. இது சோறுக்
கிறப்போ காலேயிலே பார்ப்பேனு! அப்படியே பிரமிச்சுப்போய்த்
தேன். ஹ-ஒம் (யோசித்து) என்னுமோ போவுது எப்படியாச்சும்
சொவமா இருந்தா சர்தான். ஆச்சு! இந்த வருஷத்துலே எப்படி
யாச்சும் நம்ப மவேன் கிருஷ்ணனுக்கும் ஒரு பொண்ணே பாத்து,
இந்த கோகிலத்துக்கும் கண்ணாலத்தே செய்து வெச்சிட்டம்னு ஒரு
பெரிய கவலே உட்டுப்போயிரும்—சாமி என்னு எண்ணி யிருக்கு
றுரோ பாப்போம். இந்தக் கடுதாசியேக் கொண்டுக்கிட்டு போய்
குடுத்திட்டு நம்ப வேலேயே கவனிப்பம். (உள்ளே போய்த்திரும்பி)
கொட்டில் அள்ளிக்கிட்டிருந்தவேன் அப்படியே போட்டிட்டு இங்
தத் தபாலே வாங்கி, புள்ளேக்கிட்டே குடுத்திட்டு போவோம்னு வங்
தேன். வீணு அப்புறம் மேலே வெயிலேறிப் போயிரும். போறேன்
(கோகிலத்திடம் சென்று) அம்மா கோகிம் இந்தா (கடிதத்தைக்
கொடுக்கிறுன்).

கோகி:—அப்பா! இது எப்போது வந்தது?

நவநீ:—இப்போதான் நம்ப பெருமாளு கொண்ணாந்து குடுத்
தான் ஏன் அம்மா?

கோகி:—(புரட்டிப் பார்த்து) இதில் இதற்குள் இத்தனை அசுத்
தம் எப்படிப் படிந்தது என்று கேட்டேன்; வேறொன்றுமில்லை. கடி
தம் வருமுன் என்னசெய்துகொண்டிருந்தீர்கள் ?

நவநீ:—கொட்டிலே சுத்தம்பண்ணிக்கிட்டிருந்தேன்.

கோகி:—ஐயோ! பாவம்! அப்படியே இந்தக் கடிதத்தை வாங்
கினீர்களோ?

நவநீ:—ஆமா! அதுக்கென்ன?



கோகி:—அம்மாதிரி வேலை செய்வதால் ஒன்றும் குற்றமில்லை.
ஆனால் அவ்வேலையை விட்டு இன்னொரு வேலையைக் கவனிக்க நேர்ந்
தால் கைகால்களை நன்றாகச் சுத்தம்செய்துகொண்டு கவனிப்பதுதான்
மேலானது.

நவநீ:—(சிரித்துப் பிரமித்து)நான் அப்புடிச் செய்லேண்ணு
ஒனக்கு என்னமா தெரிஞ்சுச்சு?

கோகி:—அடாடா! இவ்வளவு சிறிய விஷயமும் தெரிந்துகொள்
ளக் கூடாதபடி அவ்வளவு வெள்ளையான மனத்தினரா யிருக்கின்
றீரே பாவம்! அப்பா! இதோ இந்தக் கடிதத்தின் ஓரம் ஈரமாகவும்
அசுத்தமாகவும் இருக்கிறதே! நீங்கள் கவனிக்கவில்லையா?

நவநீ:—(திகைத்து விழித்து-புன்சிரிப்புடன்) ஓஹோ! சரி! சரி!
இனுமேலே அப்புடிப்போவாமே பாத்துக்கிற்றேன். நீ பயப்ப
டாதே அம்மா. உள்ளுக்கு வேலே இருக்குது நான் பேரேன்.

கோகி:—[கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும்சமயம்—கிருஷ்
ணன் பின்புறமாக வந்து நின்று கடிதத்தை வாசிப்பதைக் கவனித்து
எழுந்து] அண்ணு! என்ன நியாயமிது கல்விப்பயிற்சி யடைந்த
நமக்கு "டீஸன்ஸி" இருக்கவேண்டியது அவசியமில்லையா? அதிருக்
கட்டும் இங்கு எப்போது வந்தீர்கள்?

(தொடரும்.)

---

# செய்யாறு தாலூகா யாதவகுல சங்கம்.

---

திருவத்திபுரத்தில் அனக்காவூர் ஸ்ரீமான் எ. வி. இராமசாமிபிள்ளை
யின் முயற்சியாலும் யாதவ பிரமுகர்கள் உதவியாலும் நாளது
1930-ஆு பிப்ரவரிமீ 23உ ஆதித்தவாரம் சுமார் 800 யாதவர்கள்
சங்கத்திற்கு விஜயம் செய்தது போற்றத்தக்கது. சங்கத்தின் சார்
பாக இடைபோஜனம் நடந்தேறி 2மணிக்கு ஸ்ரீமான் வெங்கிடராய
பிள்ளையவர்கள் தலைமையில் சங்கம் ஆரம்பித்தது. கடவுள் வணக்கம்
முடிந்ததும் ஸ்ரீமான் A. V. இராமசாமிபிள்ளை யாதவகுலம் முதன்
முதல் உற்பத்தியான விஷயமும் ஷை குலத்தின் மகிமையும், கூறி
ஒற்றுமை, கல்வி அவசியம் என்னும் விஷயத்தை மிகத் தெளிவாயும்,

விரிவாயும் தகுந்த மேற்கோள்களுடன் எடுத்துரைத்தார். ஸ்ரீமான் மாத்தூர் அங்குபாகவதர் கோரக்ஷணம் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியின் மகிமையைத் தகுந்த மேற்கோள்களுடன் மிகத் தெளிவாய் எடுத்துரைத்தார்.

ஸ்ரீமான் வரச்சனூர் உபாத்தியாயர் அப்பாத்துரைப் பிள்ளையவர்களால் யாதவகுல வாலிப ஸ்திரீகள் வெளியில் சென்று தயிர் மோர் விற்கக்கூடாதென்றும் பின்னும் யாதவர்களின் கடமை இன்னதென்றும் அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள்.

தலைவர் முடிவுரையின் மேல் வந்தனோபசாரத்துடன் மாலை 5-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

---

# மன்னார்குடி
# யாதவர்குல மகாசங்கம் 3-வது மகாநாடு.

———(*)———

இம்மூன்றாவது மகாநாடு மன்னார்குடி மேலராஜவீதி மிஷின் ஸ்கூல் கட்டடத்தில் வெகு விமரிசையாய் நடைபெற்றது. வெளியூர்களிலிருந்து சுமார் 500 பிரதிநிதிகளுக்குமேல் வந்திருந்தார்கள். காலையில் பிரதிநிதிகளின் வரவேற்பும், அன்னதானமும் மிக்க சிறப்பாய் நடைபெற்றது.

மாலை 4 மணி முதல் சிக்கல் உயர்திருவாளர் கோ. மாரியப்பக் கோனார் அவர்கள் அவைத்தலைமையின்கீழ் மகாநாடு ஆரம்பமானது. அவைத்தலைவர் முன்னுரைக்குப் பின் திருக்களர் திருவாளர் அ. வைத்திலிங்கம் பொய்ந்தராயர் அவர்களால் "யாதவர்குல முன்னேற்றம்" என்னும் உருக்கமுடைய உபந்யாசம் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ நல்லான் சக்கிரவர்த்தி ஆச்சாரிய சுவாமிகள் அவர்களால் "யாதவர் மரபு" என்னும் பிரசங்கம் அழகாய் நடைபெற்றது. இறுதியில் "கல்வி, ஒற்றுமை, பத்திரிகை படித்தல்" முதலிய தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறி வந்தனோபசாரத்துடன் மகாநாடு இனிது நிறைவேறியது.



## தீர்மானங்கள்.

(க) தமிழ் நாட்டிலே உள்ள சிறுஞ்சிறப்புமுடைய பல்வகை வகுப்பினர்களிலும் யாதவர்குல வகுப்புமொன்றென்பதையும், இவ்வகுப்பினர் பல்லாண்டுகளாக வறுமைவாய்ப்பட்டுக் கல்வி வளர்ச்சி கெட்டுப் பிற்போக்கிலிருக்கிறபடியால் காருண்ய கவர்ன்மெண்டார் கருணை பாலித்து எங்கள் கல்வி வளர்ச்சிக்காக ஒரு சிறு நிதியாவது எங்கள் மாட்டுக்கென ஒதுக்கி மகாசங்கங்களின் வாயிலாக அளித்தும், கல்வி வளர்ச்சிக்கென நிறுவும் கமிட்டிகளில் எங்களில் படித்தவர்களைச் சம்பந்தப்படுத்தியும் ஆதரவு புரியவேண்டுமெனச் சென்னை மாகாண கல்வி மந்திரியை இம்மகாநாடு வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறது.

(உ) யாதவர்குல மக்களின் முன்னேற்றத்தைக் கருதி மாதம் ஒரு முறையாக வெளிவரும் "யாதவமித்திரன்" என்னும் தமிழ்ப் பத்திரிகையை ஒவ்வொரு யாதவகுலத்தினரும் ஆதரிக்கவேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(ங) யாதவர்குல மக்களின் முன்னேற்றத்தைக் கருதி மன்னார்குடியில் நிறுவப்பெற்ற "யாதவர்குல மகாசங்கம்" யாதவர்களின் ஒற்றுமையை வளர்க்கவும், அதற்குரிய திட்டங்களை வகுத்து அவைகளை அமுலுக்குக் கொண்டுவரவும், இவ்வாண்டு வேலை செய்யத் தொடங்குமாதலால் இவ்வொற்றுமை வளர்ச்சிக்குக் கிராமவாசிகளும், யாதவகுலாபிமானிகளும் பேராதரவு நல்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

ந. கோதண்டபாணி,
கௌரவ காரியதரிசி.
மன்னார்குடி.

1929 வருடம் டிசம்பர் மீ 29உ ஞாயிற்றுக்கிழமை தென் ஆற்காடு ஜில்லா திண்டிவனம் தாலூக்கா தாதாபுரம் போஸ்டு ஆதனூர் கிராமத்தில் கூடிய யாதவ சபையில் சென்னை ஸ்ரீ யதுகுல மஹா சங்கத்திற்கு அடியில் கையொப்பமிட்டிருக்கும் யாதவர்கள் டை சங்க மூலதனத்திற்காகப் பிரதி வருஷம் தலைக்கட்டு ஒன்றுக்கு ரூ. 1—0—0 வீதம் செலுத்தும்படி தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

ம. அப்பாத்துரைப் பிள்ளை, சபாநாயகர்.

| நெ. | பெயர். | தகப்பன் பெயர். |
|---|---|---|
| 1 | குருசாமி பிள்ளை | மன்னப் பிள்ளை |
| 2 | உலகளந்தா பிள்ளை | இஷ்டப் பிள்ளை |
| 3 | சுப்பராய பிள்ளை | வீராசாமி பிள்ளை |
| 4 | பாலப் பிள்ளை | முனியப் பிள்ளை |
| 5 | இஷ்டப் பிள்ளை | காளியப் பிள்ளை |
| 6 | ராமசாமிப் பிள்ளை | கந்தப் பிள்ளை |
| 7 | கோடிசாமிப் பிள்ளை | நாராயணசாமி பிள்ளை |
| 8 | ராஜுப் பிள்ளை | மன்னப் பிள்ளை |
| 9 | சின்னசாமி பிள்ளை | முத்துராம பிள்ளை |
| 10 | மேக்கரப் பிள்ளை | நாராயண பிள்ளை |
| 11 | மருதப் பிள்ளை | வடமலை பிள்ளை |
| 12 | எட்டியா பிள்ளை | சபயப் பிள்ளை |
| 13 | நாராயண பிள்ளை | எட்டியாப் பிள்ளை |
| 14 | சின்னத்தம்பி பிள்ளை | பெருமாப் பிள்ளை |
| 15 | கந்தசாமி பிள்ளை | பெருமாப் பிள்ளை |
| 16 | ராமசாமி பிள்ளை | பெருமாப் பிள்ளை |
| 17 | மொட்டைய பிள்ளை | சுப்பராய பிள்ளை |
| 18 | ராஜுப் பிள்ளை | பெருமாப் பிள்ளை |
| 19 | முத்துப் பிள்ளை | மொண்ணையப் பிள்ளை |
| 20 | வரதம் பிள்ளை | முத்துப் பிள்ளை |
| 21 | கோடிசாமி பிள்ளை | முத்துப் பிள்ளை |
| 22 | ஆறுமுகப் பிள்ளை | இஷ்டப் பிள்ளை |
| 23 | மாணிக்கப் பிள்ளை | இஷ்டப் பிள்ளை |
| 24 | ரத்தினப் பிள்ளை | இஷ்டப் பிள்ளை |
| 25 | கன்னியாப் பிள்ளை | நாராயணசாமி பிள்ளை |
| 26 | நடேச பிள்ளை | மு. வீராசாமி பிள்ளை |
| 27 | திருவேங்கிடப் பிள்ளை | சுப்பராய பிள்ளை |
| 23 | ராமசாமி பிள்ளை | காளியப் பிள்ளை |
| 29 | சின்னகுழந்தைப் பிள்ளை | எட்டியாப் பிள்ளை |
| 30 | கோவிந்தராஜுப் பிள்ளை | ஆறுமுகப் பிள்ளை |
| 31 | கோடியா பிள்ளை | ஆறுமுகப் பிள்ளை |
| 32 | சுப்பராய பிள்ளை | முனியப் பிள்ளை |
| 33 | கோட்டியாப் பிள்ளை | கிருஷ்டப் பிள்ளை |
| 34 | நாராயணப் பிள்ளை | கிருஷ்டப் பிள்ளை |
| 35 | தொரறங்கப் பிள்ளை | பொன்னுசாமி பிள்ளை |
| 36 | நாராயணப் பிள்ளை | பச்சையப் பிள்ளை |
| 37 | சுப்பராயப் பிள்ளை | உலகளந்தாப் பிள்ளை |
| 38 | ரங்கசாமி பிள்ளை | உலகளந்தாப் பிள்ளை |
| 39 | சுப்பராயப் பிள்ளை | இஷ்டப் பிள்ளை |
| 40 | ராகுவப் பிள்ளை | எட்டியாப் பிள்ளை |
| 41 | ஏழுமலை பிள்ளை | கோவிந்தப் பிள்ளை |

# யாதவ மாணவர்களுக்கோர் நன்கொடை.

சென்னை திருவல்லிக்கேணியிலிருக்கும் ஸ்ரீ யதுகுல மகா சங்கத்தின் தலைமை ஆபீஸின் மூலமாய் அநேக யாதவ ஏழை மாணவர்கள் தங்கள் உயர்தரப் படிப்புக்காக உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு இப்பொழுது பி. ஏ. பட்ட பரீக்ஷையில் தேறியிருக்கிறார்கள். இது அநேக வருஷங்களாய் நடந்து வருகிறது. இச்சங்கத்துக்குத் தரும குண தயாளருப் பிரக்கியாதி பெற்றவரும், மதுரையில் பிரபல புத்தக வியாபாரியும், மதராஸ் செனட் சபையில் ஓர் அங்கத்தினருமான திருவாளர், இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்கள் ரூபாய் 500 வருடாவருடம் கொடுக்க முன்வந்திருக்கிறார். இப்பணத்தை உயர்தரக் கல்வி கற்கும் தகுதியுடைய ஏழை மாணவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்கம் அவர் கொடுக்கும் பணத்தை மிகவும் அன்பார்ந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மிகவும் நன்றிபாராட்டுகிறது. இன்னும் அநேக யாதவ மகான்களும் யாதவ சீமாட்டிகளும் இத்திருவாளரைப்போல் முன்வந்து இச்சங்கத்துடன் ஒத்துழைத்து நமது ஏழை மாணுக்கரை முன்னேற்றி நமது குலத்தை முன்னுக்குக் கொண்டுவருவார்கள் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இந்த உபகாரச் சம்பளத்திற்குத் தகுதியாயுள்ள யாதவ ஏழை மாணுக்கரிடமிருந்து அவர்களுடைய ஏழ்மைத் தன்மையைக் குறித்தும் பிறப்பின் நிலைமையைக் குறித்தும் எழுதப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களுடன் அவர்களின் தலைமை அதிகாரியின் மூலமாய் உபகாரச்சம்பள வேண்டுகோள் பத்திரம் சென்னை திருவல்லிக்கேணி யதுகுல மகா சங்கத்திற்கு அனுப்ப அங்கத்தார் கேட்டுக்கொள்கின்றனர்.

எம். கே. ஆராவமுதன்.

## ஓர் நற்செய்தி.

மதுரை அமிர்தம் அண்டுகோ புரோப்ரைட்டரும் மதுரை முனிசிபல் கவுன்சிலரும் நம்குல வாலிப சிரேஷ்டருமான திருவாளர், P. பிச்சைமுத்துக் கோனாரவர்கள் சென்ற வருடம் நவம்பர் மீ 6உ மதுரை முனிசிபல் கவுன்சில் வைஸ் சேர்மனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நற்செய்தி நமது மித்திரன் 4-ம் பகுதியில் வெளிவந்ததை வாசகர்கள் அறிவார்கள்.

இப்போது ஷை கோனாரவர்கள் நாளது எப்ரில் மாதம் 9உ மதுரை ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வரான் தேவஸ்தான கமிட்டிக்குந் தலைவராகப் போட்டி யன்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற செய்தியை நமது மித்திரன் நேயர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இவ்வாறே நம் சமூகத்தினர் நாளும் நாளும் பல்வகை முன்னேற்றங்களையும் அடைதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு நம் சமூகத்திற்குப் பெருமையை யுண்டுபண்ணுதற்கு முனைந்து நிற்பது அவரவரது கடமையாகு மென்பதை வற்புறுத்திக் கூறுகின்றோம்.

ப-ர்.

---

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

யாதவமித்திரன் ஆபீஸ்க்குக் கடிதம் எழுதும் போதும் சமாசாரம் தெரிய விரும்பும்போதும் தங்கள் தங்கள் சந்தா நம்பரைக் குறித்தனுப்பவேண்டும். சந்தா நம்பரைக் குறிக்காத கடிதமும் பதில் வேண்டுவோர் தபால் பில்லை அனுப்பாத கடிதமும் கவனிக்கப்படமாட்டா.

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வரு 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வரு 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம. அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

23 APR 1930

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
யாதவ மித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura.




# யாதவ மித்திரன்

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

| தொகுதி | ப்ரமோதூத சித்திரைமீ | பகுதி |
|---|---|---|
| 1 | 1930. ஏப்ரல்மீ | 9 |

## பொருள் அடக்கம்.

| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 265 |
| சென்னைமாகாண 5-வது யாதவமகாநாடு | ,, |
| ஆனந்தரங்க பிள்ளை | 267 |
| கடுவெழுத்தலங்கார விருவிடை | 272 |
| ஜனகணத்தாரும் யாதவர்களும். | 273 |
| நமது சமூகப்பெருமை நமை இன்றுரும் | 275 |
| பத்திரிகை படிப்பதேன்? | 278 |
| சுதந்தரமுழவல் | 281 |
| லீலாவதியின் நிருபம் | 285 |
| யாதவர்க்கோர் வேண்டுகோள் | 288 |
| அறிவு இச்சை செயல் | 290 |
| கோகுல கிருஷ்ணன் | 292 |
| மித்திரன் மதிப்புரை | 295 |
| வள்ளல் பாரி | ,, |



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

264

# யாதவமித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)


தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கலாசாலை,
மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ பி. எல்
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், F. L. M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சினாப்பள்ளி.


## வேண்டுகோள்.


வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

OFFICE OF THE REGISTRAR
2- JUN 1930
MADRAS



தோட்டக்காடு

## இராமகிருஷ்ண பிள்ளை அவர்கள்,

பி. ஏ., எப். எம். யு., எப். ஆர். எச். யஸ்., எம். ஆர். ஏ. எஸ்.

இவர் செங்கற்பட்டைச் சேர்ந்த தோட்டக்காடு என்னும் ஊரில் யாதவகுலசிரேட்டர். வரதபிள்ளை என்பவருக்கு 1855ம் ஞு பிறந்தார். சென்னைகிறிஸ்தவக்கல்லூரியில் டாக்டர் மில்லரிடம் கல்வி பயின்று தனது 21ம் வயதில் பி. ஏ., பட்டம் பெற்றார். சென்னை உயர்தர நீதி மன்ற (High Court) த்தில் மொழிபெயர்ப்பாள (Interpreter) ராகவும் உதவி ரிஜிஸ்ட்ராராகவும் வேலை பார்த்தவர். இவர் ஆங்கில அறிஞர்கள் வியக்கும் வண்ணம் ஆங்கில நாவல்களும் ஆங்கிலப்பாடல்களும் எழுதியவர். ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேக விசேடத்திற்குச் சென்று அங்கு இவர் பாடிய ஆங்கிலப்பாடல் ஆங்கிலேயரால் பெரிதும் வியக்கப்பட்டது. தமிழிலும் நிரம்பப் புலமை வாய்ந்தவர். சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷகர் சங்கத் தலைவராகவும் தமிழ் அகராதி (Lexicon) கமிட்டி அங்கத்தினராகவும் விளங்கி, தமிழைப் பெரிதும் வளர்த்து வந்தவர்; பல வருடங்களாகச் சென்னை ஸ்ரீயதுகுல மகாசங்கத்து அக்கிராசனராக அமர்ந்திருந்தவர். இவரது அரிய சேவைகளை மெச்சிய அரசாங்கத்தார் இவருக்கு 1912ஞு ராவ்சாஹிப் என்னும் பட்டத்தை வழங்கினார்கள். இவர் 1920ம் ஞு மார்ச்சு மீ 1உ புகழுடம்பைப் பூமியில் நிறுவிப் பூதவுடம்பை நீத்தனர். (இவர் சரிதை இனி விரிவாய் வெளிவரும்)


# யாதவமித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.


எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

JUN 1930


| தொகுதி 1 | பிரமோதூத ஞு சித்திரை-மீ 1930-ஞு ஏப்ரல்-மீ | பகுதி 9 |
|---|---|---|


### கடவுள் வணக்கம்.

குன்றினால் குடைகவித்ததும் கோலக்குரவை கோத்ததும்
குடமாட்டும்
கன்றினால் விளவெறிந்ததும் காலால் காளியன்தலை மிதித்ததும்
முதலா
வென்றிசேர் பிள்ளைநல் விளையாட்ட னைத்திலும்
அங்குஎன் னுள்ளம்உள் குளிர
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் காணுமாறு
இனி உண்டெனில் அருளே.

## சென்னைமாகாண ஏவது யாதவமகாநாடு

இம்மகாநாடு நிகழும் மேமீ 24, 25 தேதிகளில் இராமநாதபுரம் பாரதகான நாடகசாலையில் நடைபெறப் போகிறது. மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசைந்துள்ள பெரியார் செங்கோட்டை மிட்டாதாரும் இருபெருஞ் செல்வமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவருமான ஸ்ரீமான் S. முத்துசாமிக் கரையாளர், ஆவர். தலைவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த அறிவு வாய்ந்தவர். குலமுன்னேற்

றத்தில் மிகுந்த கருத்தும் முயற்சியும் பொருந்தியவர். நாட்டுக்குத் தற்காலம் வேண்டிய அறச்செயல்களைப் புரிந்துவருகின்றவர். இவர்கள் குடும்பத்தாரால் செங்கோட்டையில் ஓர் உயர்தர கலாசாலை நடைபெற்று வருவது இவர்களது உதாரத்துவத்தை நன்கு காட்டும். இத்தகைய அருங்குணங்களோடு தலைவரவர்கள் தற்காலத்துக்குத் தக்கபடியான சீர்திருத்தங்களில் மிகுந்த விருப்பம் பூண்டு அதனை நடைமுறையில் தாமே செய்து காட்டிக்கொண்டு வருகிற சீரியராவர். யாதவர்க்குள் இருக்கும் வகுப்புப் பிரிவினைகளை யொழித்துச் சமூகவொற்றுமை செய்வதில் மிகுந்த பற்றுடையவர். இத்தகைய உத்தம குணங்கள் வாய்ந்த பெரியார் நமது 5வது மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வருவது நமக்குப் பெரிதும் மகிழ்வூட்டுகின்றது.

மகாநாட்டு உபசரணைக் கமிட்டியார், மகாநாட்டுக்கு ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் வருவார்களென்று எதிர்பார்க்கின்றார்கள். அதற்குத் தகுந்தபடியான ஏற்பாடுகள் தீவிரமாய் நடைபெறுகின்றன. குலாபிவிர்த்தியில் கருத்துடைய கனவான்கள் தத்தம் கிராமங்களைப் பாராது மகாநாட்டுக்கு விஜயஞ் செய்யவேண்டும். குலத்தின் முன்னேற்றத்திற்குரிய தீர்மானங்களை ஆலோசித்துச் செய்தல் வேண்டும். முன் நடந்த மகாநாடுகளில் தீர்மானித்த தீர்மானங்கள் இதுவரை அநுட்டானத்தில் நடைபெறவில்லை; எழுத்து ரூபத்திலேயே இருக்கின்றன. இம்மகாநாட்டிலேனும் அவற்றைப் புதுப்பித்து நடைமுறையில் நம் சமூகத்திற் பரவச்செய்ய உறைப்பாக எண்ணங்கொள்ளவேண்டும். பிரதிநிதிகள் இவ்விஷயங்களுள் கருத்துச் செலுத்தாவிட்டால் வருஷமொன்றுக்குக் கால் லக்ஷ ரூபாயை நம் சமூகத்தினின்றும் வீணாக்குகின்றவர்களாவோம் என்பதில் சந்தேகமில்லை. இம்மகாநாட்டில் நம் சமூகத்திற் பரவியுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும் அநாச்சாரங்களையும் அறியாமையையும் பேதைமையையும் ஏழ்மையையும் அகற்றுதற்குரிய உபாயங்களை ஓர்ந்து அறியவேண்டியது அவசியமாகும். மகாநாட்டில் முதியோர்களும், வாலிபர்களும் இணங்கி நின்று ஏகோபித்த தீர்மானங்களைப் புரிந்து, சமூகத் தொண்டாற்றுவார்களென்று நம்புகிறோம்.

இராமநாதபுரம் ஜில்லா யாதவர்கள் தங்கள் செலவின் பொறுப்பிலேயே மகாநாட்டை நடத்துகின்றார்களாகையால் அந்தஜில்லாப் பிரமுகர்கள் இக்காரியத்திற் பின்னிடாது தலையிட்டு உபசரணைக் கழகத்தாருடன் ஒத்துழைத்து மகாநாட்டைச் சிறப்பிப்பார்களென்று கருதுகின்றோம்.



மகாநாட்டுப் பிரதிநிதிகள் யாவரும் 24உ காலை 7 மணிக்கு மதுரையிலிருந்து இராமநாதபுரம் புறப்படுகிற ஷட்டில் டிரெயினில் புறப்படத் தகுந்ததாக மதுரைவந்து சேர்ந்துகொள்ளுதல் நலமாகும். அதே வண்டியில் தலைவரவர்களும் புறப்பட ஏற்பாடு செய்யப்படும்.

குலாபிமானமுள்ளவர்களே! நீங்கள் மகாநாட்டுக்கு வரத் தவறாதீர்கள். இஃதோர் கண்ணியம் கிடைக்கும் புண்ணியதினமாம். வருக வருக யாதவர்கள் யாவரும் வருக.

ஆசிரியர்.

---

## ஒரு ராஜ தந்திரி
# ஆனந்தரங்க பிள்ளை.
## (யாதவகுல சிரேட்டர்.)
## (A Yadhava Diplomat),

---

போர்த்துக்கல், இங்கிலாந்து, ஹாலந்து முதலிய தேசத்தினர் இந்தியாவிற்கு வந்து வியாபாரஞ் செய்ததன் பயனைப் அத் தேசங்களின் செல்வ நிலை அதிகரித்ததை யறிந்த பிரான்ஸ் தேசத்தினரும் இந்தியாவோடு வியாபாரஞ் செய்வதற்கு, கி. பி. 1664ல் வர்த்தகக் கூட்ட (Company) மொன்றை ஏற்படுத்தினார்கள். இதற்கு முன் ஆங்கிலேயர் சென்னையில் ஜார்ஜ் கோட்டை (Fort St. George)யையும் பண்டகசாலைகளையும் கட்டி நல்ல வியாபாரஞ் செய்து வந்தனர். பிராங்காய் மார்ட்டின் (Francois Martin) என்னுமோர் பிரான்ஸ்தேச வர்த்தகன் 1674-ம் வருஷம் சென்னைக்குத் தெற்கே 85 மைல் தூரத்திலுள்ள புதுச்சேரி யென்னுமிடத்தில் வந்திறங்கி, உள்நாட்டு அதிகாரியின் அநுமதிபெற்று, பண்டகசாலைகளைக்கட்டி வியாபாரத்தை ஆரம்பித்தான். 1683-ம் வருஷத்தில் புதுச்சேரியைப் பிரான்ஸ் தேசத்தார் விலைக்கு வாங்கினர். வியாபாரத்தில் நல்ல அநுபவமும் ஆற்றலுமுடையோரின் உதவியினால்தான் வியாபாரத்தை வளர்க்க

முடியுமென்பதை யுணர்ந்த ஹெபர்ட் (M. Hebert) புதுச்சேரி அதிபன் (Governor of Pondichery) சென்னையிலிருந்து சில வியாபாரிகளை அழைத்துவரும்படி நைனியப்பபிள்ளை என்பவரை அனுப்பினான். நைனியப்பபிள்ளை சில வியாபாரிகளுடன் தனது மைத்துனராகிய திருவேங்கடம்பிள்ளை என்பவரையும் புதுச்சேரிக்கு அழைத்து வந்தார். இத்திருவேங்கடம்பிள்ளையின் புதல்வரே ஆனந்தரங்கபிள்ளை. இவர் 1709-ம் ௵ மார்ச்சுமீ 30௳ பிறந்தார். திருவேங்கடம்பிள்ளை இவ்விளைஞருக்கு எத்தகைய கல்வி போதித்தனரென்பதை நாம் அறிவதற்கில்லை. இவர் பல தான தர்மங்கள் வழங்கி, சத்திரமொன்று கட்டுவித்து, அதனருகில் ஒரு சிற்றூரையும் தோற்றுவித்தார். அச்சிற்றூருக்குத் திருவேங்கடபுரமெனப் பெயர் வழங்கியது. திருவேங்கடம்பிள்ளை 1726-ம் ௵ ஜூன்மீ காலஞ்சென்றார். தந்தையையிழந்த தனயனின் தனிநிலையைக் கண்டு ஆற்றாத புதுச்சேரி யதிபன் ஆனந்தரங்க பிள்ளையைப் பரங்கிப்பேட்டை (Porto Novo) என்னுமிடத்துள்ள தொழிற்சாலையில் வேலைபார்த்த இந்தியர்களுக்கெல்லாம் மேலாளாக நியமித்தான்.

இஃதிவ்வாறாக, மிகப் பிரசித்திபெற்ற டூப்லே (M. Dupleix) 1741-ம் ௵ அக்டோபர்மீ புதுச்சேரி அதிபனாக நியமிக்கப்பட்டான். இவன் 1720 முதல் 1731 வரை புதுச்சேரியிலிருந்தவனாதலின் காலஞ்சென்ற திருவேங்கடம்பிள்ளையின் வியாபாரத்திறன், நாணயம், செல்வாக்கு முதலியவற்றை நன்கறிந்தவன். ஆனதுபற்றி, அவருடைய மகன் ஆனந்தரங்க பிள்ளையை மிக்க அன்புடன் ஆதரித்துவந்தான். அப்போது டூப்லேயின் பிரதம துபாஷாக* இருந்த கனகராயமுதலியா ரென்பவர் 1745-ம் ௵ பிப்ரவரிமீ 12௳ மரணமடைந்தார். அதுமுதல் ஆனந்தரங்கம்பிள்ளை டூப்லேயின் பிரதம துபாஷாக நியமிக்கப்பட்டார். ஒரு ஹிந்துவை அப்பதவிக்கு நியமித்தல் கூடாதென யேசு சங்கப்பாதிரிகள் (Jesuist Fathers) டூப்லேயிடம் சென்று முறையிட்டனர். டூப்லே தனது ராஜீய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஆனந்தரங்க பிள்ளையின் உதவி இன்றியமையாததெனக் கருதினனாதலின் பாதிரிகளின் யோசனையைப் பொருட்படுத்தவில்லை. துபாஷ் உத்தியோகத்தை வகித்த ஆனந்தரங்கபிள்ளை பிரான்ஸ்காரரின் வியாபாரத்தை நடத்தும் முழுப்பொறுப்பையும் ஏற்று, அதன் வளர்ச்சிக்காக இடைவிடாது உழைத்

* இது துவிபாஷி என்பதன் மரூஉ. துவிபாஷி = இருபாஷைபேசுவோன்.



2 JUN 1930 MADRAS

துவந்தார். இவரது யோசனையைக்கேட்டே டூப்லே நடந்துவந்தான். துபாஷாக நல்ல ஊதியம் பெற்றதோடு சொந்தமாக வியாபாரம் நடத்திக்கொள்வதற்கும் ஆனந்தரங்க பிள்ளை அநுமதிக்கப்பட்டார். தம் தாய்ப் பாஷையாகிய தமிழையும் பிரஞ்சுப் பாஷையையும் நன்கு கற்றிருந்தார். தெலுங்கு, மலையாளம், போர்த்துக்கல்காரர் பாஷை, பாரசீகர் பாஷைகளை நன்கு பேசும் திறமையும் பெற்றிருந்தார்.

ஆனால், இவர் தலைசிறந்து விளங்கியது, ராஜீயத் துறையிலாகும். ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டியடித்துவிட்டு, பிரான்ஸ் ராஜ்ஜியத்தை இங்கு ஏற்படுத்தவேண்டுமென்பதே டூப்லேயின் முக்கிய கருத்து. இவன் சுதேச அரசர்களுக்கு அனுப்பும் கடிதங்களையும், அவர்களிடமிருந்து இவனுக்கு வரும் கடிதங்களையும் பிரஞ்சுப் பாஷையில் மொழிபெயர்க்க வேண்டியது துபாஷின் கடமைகளிலொன்று. துபாஷாகிய ஆனந்தரங்க பிள்ளையோ இயற்கையாகவே மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்தவர்; சுதேச அரசுகளின் விவகாரங்களை நன்குணர்ந்தவர். ஆதலால், டூப்லே சுதேச வல்லரசுகளுடன் கடிதப் போக்குவரத்துச் செய்கையில் ஆனந்தரங்கபிள்ளையையும் கலந்து யோசித்து, அவரது அநுபவத்தையும் அரசியல் ஞானத்தையும் பயன்படுத்திக் கொள்வானாயினன். நாளடைவில், ஆனந்தரங்க பிள்ளை, சுதேச அரசர்களுடனும் அவர்கள் சம்பந்தமான மற்ற விஷயங்களிலும் டூப்லே எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தும் அமைச்சரா (Foreign Secretary)யினார். வேற்றரச சபைகளில் நடப்பனவற்றைத் தனக்குத் தெரிவிக்கப் பல ஒற்றர்களை வெவ்வேறிடங்களில் ஏற்படுத்தினார். சுதேச அரசர்கள் டூப்லேயுடன் உடன்படிக்கை முதலியன செய்யவேண்டியதிருந்தால், அதற்கு ஆனந்தரங்க பிள்ளையே ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக, 1746-ம் ௵ டி லா போர்டனேய்ஸ் (De la Bourdonnais) சென்னையைப் பிடித்துக்கொள்ளவே, தேவணாம்பட்டண (Fort St.David)த்தையும் கைப்பற்றினால் ஆங்கிலேயரைத் தென்னிந்தியாவிலிருந்து துரத்திவிட்டுத் தன் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமெனக் கருதி, டூப்லே யுத்தசன்னதமாய்ப் புறப்பட்டான். அப்போது ஆங்கிலேயர் வேண்டுகோளுக்கிணங்க, ஆற்காட்டு நவாப்பு தனது மூத்த மகனை மாபுஸ்கான் (Mahfuz Khan) என்பவனைப் பெரும் படையுடன் அனுப்பினான். பிரஞ்சுக்காரரின் போர்த்திறமையைக் கண்டஞ்சி, மாபுஸ்கான் பிரஞ்சு அதிபனோடு ஒரு ராஜி ஏற்படுத்திக்

கொண்டான். இவ்வேற்பாட்டுக்கு ஆனந்தரங்க பிள்ளையே காரணம். இக்காலத்தில் பிரஞ்சுக்காரரின் ஆதிக்கம் தென்னிந்தியாவில் அதியுச்சம் பெற்றிருந்தபடியால், டூப்லேயின் தயவை நாடிவரும் சுதேச அரசர்கள் பல வெகுமதிகளுடன் வந்து முதல்முதல் ஆனந்தரங்க பிள்ளையையே கண்டு, அவர் மூலமே தாங்கள் நாடிவந்த தயவைப் பெறவேண்டும். டூப்லே இவரது மந்திராலோசனையை அநுசரித்தே எந்தக் காரியத்தையும் செய்வான்.

இந்த யதுகுல பதியூகியின் புகழ் தேசமெங்கும் பரவியது. "இராஜ தந்திரத்திலும், புத்திக் கூர்மையிலும், துணிந்து காரியம் முடிக்கு மாற்றலிலும் ஆனந்தரங்க பிள்ளைக்குச் சமானமானவர்கள் யாருமில்லை" என இந்திய மன்னர்களும், ராஜ தந்திரிகளும், "நிஜாம் மன்னருக்காவது டில்லி சுல்தானுக்காவது அமைச்சராயிருக்கத் தகுந்தவர்" என ஆற்காட்டு நவாபின் மூத்தமகனான மாபுஸ்கானும் ஏகோபித்துக் கூறுவார்களாயின், ஆனந்தரங்க பிள்ளையின் பெருமையை எடுத்தியம்பவும் வேண்டுமோ? "சென்னையிலுள்ள பிரமுகர்கள், வியாபாரிகள் ஆகியவர்களின் சாமர்த்தியம் நட்சத்திரங்களைப்போல மிளிர்கின்றன; ஆனால் நம் ரெங்கப்பனின் சாமர்த்தியம், மனதிடம் முதலியனவோ சூரியனைப்போல் பேரொளிவீசிப் பிரகாசிக்கின்றன" என்று புதுச்சேரியிலுள்ள பிரஞ்சுக்காரர்கள் கூறுவதிலிருந்து அவர்கள் ஆனந்தரங்க பிள்ளையை எவ்வளவு மேன்மையாய் மதித்துவந்தனரென்பது தெற்றென விளங்குகின்றது. இவ்வாறாகப் பலராலும் புகழப்பட்ட ஆனந்தரங்க பிள்ளை 1761-ம் வருஷம் ஜனவரி மாதம் 12உ காலகதியடைந்தார்.

இந்த இராஜ தந்திரி 1736-ம்௵ முதல் தம் வாழ்நாட்களில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் தினந்தோறும் எழுதிவைத்து வந்தார். அவ்வாறு இவர் எழுதிவைத்திருந்தவற்றைச் சென்னை அரசாங்கத்தார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 12 தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். இக்குறிப்புக்கள் 1736—1761 வருஷங்களுக் கிடையில் தென்னிந்தியாவில் நிகழ்ந்தவற்றை அறிவிப்பதற்குச் சிறந்த சாதன



மாக விளங்குகின்றன. இவர் தினசரிக் குறிப்புக்கள் எழுதிவந்த காரணம்பற்றி, இவரது குறிப்புக்களைப் பதிப்பித்த ஆசிரியர், இவரை "இந்திய தேசத்துப் பெப்பிஸ்" (The Indian Pepys) என்று அழைக்கின்றார். பெப்பிஸ் என்பவன் இங்கிலாந்து மன்னனான இரண்டாம் சார்லஸ் காலத்தவன்; நாடகசாலையிலும் அரச மாளிகையிலும் தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தினந்தோறும் குறித்துவைத்து வந்த ஒரு நாடோடி. ஆனந்தரங்க பிள்ளையோ வென்றால் அரிய ராஜீய விஷயங்களைக் குறித்து வைத்தவர். ஆதலால் பெப்பிஸ் என்பவனுடன் இவரைப் பொருந்தவைப்பது அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை. ஆனந்தரங்க பிள்ளையைப்போல அரசியல்துறையில் இறங்கி, பர்மிய அரசனொருவனுக்கு அமைச்சனாக இருந்து, தன் வாழ்நாட்களில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை யெல்லாம் குறித்துவைத்த கின்—வுன்—மிஞ்சி (Kin Wun Mingyi) யோடு ஆனந்தரங்க பிள்ளையை ஒப்பிடுவது சாலப் பொருத்தமுடைய தெனத் தோன்றுகின்றது.

சி. முத்துக்கோன், B. A.

---


சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

யாதவமித்திரன் ஆபீஸுக்குக் கடிதம் எழுதும் போதும் சமாசாரம் தெரிய விரும்பும்போதும் தங்கள் தங்கள் சந்தா நம்பரைக் குறித்தனுப்பவேண்டும். சந்தா நம்பரைக் குறிக்காத கடிதமும் பதில் வேண்டுவோர் தபால் பில்லை அனுப்பாத கடிதமும் கவனிக்கப்படமாட்டா.

# நடுவெழுத்தலங்கார வினாவிடை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீரணவு முறைதாங்கி வருகின்ற யாதவபித்
திரனெனு மொருவனும்
பேரணவு "வியாதிபகஞ் சிலவொடுதா மிரைபுத்தி
பிறக்கிடாது
போரணவு குதிரைகாம் வன்னி"யெனு மிவற்றிடையே
பொருந் தெழுத்தால்
வீரணவேள்! நமதுவினா வினுக்கிதுவே சிறந்ததொரு
விடையாகுமே.

## விடுகவி வினாவிடை வெண்பாக்கள்.

2. ஆகமென் றாகும் அதன்பாதி யற்பமாம்
பேசுறுமிற் பாதி பிரமனென்றும்—வீ'சு' தவிர்ந்
தா லுடலாம் ஆதி அகலமங்க ளம்முதலைப்
பா லுதவு நற்பசுவென் பார்.

3. கோவில்ல எனுஞ் சொல்லைக் குறிக்கில் முதலதியன்
மேவிரண்டாம் பேற்றி விடுகிலையாம்—தாவி
முதலிறுதி சாரின் முனைவாளி மூன்றும்
நுதலில்ல மென்றே நவல்

4. தன்னுங் கவிதையெனுஞ் சொல்லிற் கடையகல
மன்னுமொரு கண்ணுடைய மாவெள்ளி—பின்னுமிடை
யிறுற்ற தாற்புலமை யென்றும் முதலிறுதி
யிறுற்ற தண்டெனச் சொல்வீர்.

செவ்வேளகம்
வந்தவாசி
வடஆற்காடு ஜில்லா }

இங்ஙனம்,
அன்புக்குரிய சிறுவன்,
**வேணுகோபாலன்.**

## முடிவுரை.

முறையே குலுக்குச் சீட்டில் எடுக்கப்பட்ட எண்ணின் விடையாளராகிய மேற்கண்ட வேணுகோபாலன் அவர்கட்கே பத்திரிகைப் பரிசு உரிமையாக்கப் பெற்றுளது.

குறிப்பு:—இரண்டாவது எண்குறியுள்ள விடுகவி வினா வெண்பாவில் உள்ள எழுத்துக்கள் நான்குக்கும் "ஏ"—அம்பு: ஆகம் எனப் பதவுரை செய்திருக்கவேண்டும்.

# ஜனகணிதமும் யாதவர்களும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம், கல்வி முதலியவற்றை அறி
ந்து கொள்ள ஜனகணிதம் இன்றியமையாததாயிருக்கிறது. சமயம்,
தொழில், ஜாதி முதலானவைகளும் ஜனகணிதத்தைச் சேர்ந்தன
வைகளாம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ வாதம் வளர்ந்து வரும்
தமிழ் நாட்டில் ஜாதியைப் பற்றிய ஜனகணிதம் முக்கியமாய்க்
கவனிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தவரும் ஜனகணிதப் பட்டி
கைகளைப் பத்தி பத்தியாக வெளியிட்டு வருகின்றனர். இந்தியாவி
லுள்ள ஒவ்வொரு தனித்தனி சமூகத்தவரும் தங்கள் சமூகத்தவ
ரின் தொகை மொத்தமாக எவ்வளவென்றும் அதில் கற்றறிந்தவர்
எத்தனை யென்றும் ஆடவரும் பெண்டிருமாக எத்தனை பெயரென
வும் குழந்தையாக இருப்பவர் எத்தனை பெயரெனவும் அறிந்து
கொண்டு தங்களுக்கு இருக்கும் குறைகளை நீக்கிக் கொள்ள வழி
தேடுகின்றனர். இந்த ஜனகணிதம் சில மாதங்களில் நம்முடைய
நாட்டில் நடைபெறப் போவதால் அப்போது யாதவர்களாகிய நாம்
நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் கூறுவதே இக்கட்டுரை
யின் முழு நோக்கம்.

வாழ்க்கை முறை பற்றி ஒரு வகுப்பார்க்கு ஒரு இடத்தில்
செல்வாக்கு அதிகரித்தும் வேறொரு இடத்தில் அது குறைவாகவும்
இருந்து வருகிறது. எல்லா வகுப்பினரும் எங்கும் சிறப்பாக இருப்
பதில்லை. எந்த இடத்தில் எந்தச் சமூகம் சிறப்பாக இருக்கிறதோ
அந்த இடத்திலுள்ள ஏனைய சமூகத்தவரில் சிலர் அதனோடு
இணைந்து கொள்ள ஆசைப்படுகின்றனர். இவர்கள் ஜனகணிதத்தி
லும் பிற சமூகப் பெயரைக் கொண்டே இருக்கிறார்கள். இது
எல்லா வகுப்பிலும் பொதுவாக நடைபெற்று வருகிறதெனினும்
யாதவகுலத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது என்னு
டைய அனுபவ பூர்வமான கொள்கை. யாதவ குலத்தவராகிய
சிலர் வேறு குலத்தவராக மாற்றங் கொண்டிருப்பதை நான் நன்
கறிவேன். இது அவர்களின் அறிவும் அபிமானமுமற்ற செய்கை
யென்பதற்கு ஐயமுண்டோ? யாதவ குலத்தின் பெருமைகளை
நன்கறிந்தோர்கள் இங்ஙனம் செய்ய முன்வரமாட்டார்கள். சிற

ழிந்து கிடக்கும் தன் சமுதாயத்தைச் செம்மை செய்வதன்றி அதை
வெறுத்து விடுவது சால்பாகுமா?

தமிழ் நாட்டில் சில ஜாதிப் பெயர்கள் சில இடங்களில் மிகத்
தாழ்ந்த நிலையில் வழங்கப்பட்டு வருகின்றன. அப் பெயர்கள்
பொருளால் பெருமையுடையனவாக விருப்பினும் கவனிக்கப் படுவ
தில்லை. அப் பெயரைக் கொண்ட சமுதாயத்தவன் அதை மிக
அருவருப்போடு ஏற்றுக் கொள்ளுகின்றான். யாதவ குலத்தவரா
கிய நம்மை இடையர் என்பது தமிழ் நாட்டு வழக்கு. இப் பெயர்
தமிழ்நாட்டில் சில இடங்களில் தாழ்வாகக் கருதப்பட்டு வருவதாகத்
தெரிகிறது. இப் பெயரின் பொருளை ஆய்ந்தால் இழிவு யாதும்
இருப்பதாகத் தெரியவில்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
என்ற நான்கு நிலங்களில் நடுவேயுள்ள முல்லை நிலமாகிய இடை
நிலத்தில் வாழ்ந்து வந்ததால் இடையர் என்ற பெயர் உண்டாயிற்
றெனவும் க்ஷத்திரியர்க் குரியனவும் வைசியர்க் குரியனவுமாகிய
பசுபரிபாலனத்தை இருவருக்கும் இடையே நின்று செய்து வருவ
தால் இவருக்கு இடையர் என்ற பெயருண்டாயிற் றெனவும் பசு பரி
பாலனத்திற்கும் கிருஷிக்கும் இடையே நின்று இவ்விரு தொழில்
களையுஞ் செய்து வருவதால் இடையர் என்ற பெயர் தோன்றிய
தெனவும் கூறுகிறார்கள். இவைகளால் எவ்வித இழிவும் யாதவ
ருக்கு ஏற்பட்டு விடவில்லை. ஆயினும் யாதவர்கள் அதை இழி
வென எண்ணி ஏற்றுக் கொள்ளாதிருக்கிறார்கள். பத்திரப் பதிவு
களில் தங்கள் ஜாதிப் பெயரை யாதவர்களென இவர்கள் எழுதிவரு
வதே இதற்குப் போதிய சான்றாகிறது.

இங்ஙனம் தங்கள் பெயரை இழிவாக எண்ணி வந்த பல சமு
தாயங்கள் ஜனகணிதத்தில் தங்கள் பெயரை மாற்றிப் பல ஆண்டுக
ளாயின. ஆனால் யாதவர்கள் இழிவென எண்ணிவருகிற இடையர்
என்ற தங்கள் பெயர் ஜனகணிதப் பட்டிகையில் அவ்வண்ணமே
இருந்து வருகிறது. ஜனகணிதக் கணக்கில் யாதவர்கள் என்ற
பெயரை எங்களுக்கு வைத்துக்கொள்ள வேண்டு மென்று அரசாங்
கத்தை வேண்டிக்கொள்ள வேண்டும். ஆங்காங்கிருக்கும் யாதவ
சங்கங்கள் இதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுமாக. திருவாங்கூர்
சமஸ்தானத்து யாதவர்கள் ஜனகணிதத் தலைவருக்கு இதைப்பற்றி
மனுச் செய்தும் பத்திரிகைகள் மூலம் வெளியிட்டும் வந்திருக்கிறார்



கள். தமிழ் நாட்டு யாதவர்களும் இதற்கு வேண்டிய முயற்சியை
எடுத்துக் கொள்வார்களாக. இடையர் என்ற பெயர் தாழ்வெனக்
கருத்துக் கொள்ளாது யாதவர்கள் என்ற பெயரை வட நாட்டு
நமது ஜாதியாரும் கொண்டிருப்பதால் இவர்களுக்கும் நமக்கும் ஒத்
துழைப்பும் ஒருமை உணர்ச்சியும் உண்டாகவேண்டு மென்ற கருத்
துப்பற்றியே ஜனகணித சமயத்தில் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள
நம்மவர்கள் தங்களை யாதவர்கள் என்ற பெயராலேயே பதியும்படி
சொல்ல வேண்டும். இதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்
கொள்ளுமாறு யாதவ இளைஞர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.
சென்னை யாதவ சங்கம் இதில் கவனம் செலுத்துமாக.

ச. செல்லம்,
சுசீந்திரம்.

# நமது சமூகப் பெற்றோரும் இளைஞரும்.

பரந்த இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் சகல வளங்களி
லும் முன்னேற்ற மடைந்திருப்பது வாலிபர்களாலேயே என்பது
யாவரும் ஒப்பத்தக்கது. வாலிபர்களைக்கொண்டு நடத்தாத முயற்சி
திருவளிக்காது, அவர்களாலேயே நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு
சமூகமும் மேனிலை யடைவது. நமது சமூகமும் முன்னேறிவர எண்
ணினால் நமதிளைஞர்களைக் கொண்டுதான் என்பது உண்மை. சிறிது
நாளைக்குமுன் நமது சமூகம் இருந்த சீர்கேடும் தற்கால மிருக்கும்
நமது சமூகக் கிளர்ச்சியும் நோக்கினால் நமது வாலிப சகோதரராலே
யே யென்பது வெளிப்படை.

ஆனால் தற்காலமிருக்கும் வாலிபர் இயக்கம்போல் இன்னும் தீவிர
முயற்சியோடு நமதிளைஞர்கள் யாவரும் கிளர்ச்சி செய்தால் சிறிது
நாளையில் நமது சமூகம் முன்னேற்றமடையும் என்பது திண்ணம்.

நமது வாலிப சகோதரர்களுடைய கிளர்ச்சிக்கு வயோதிகத்
தந்தைகள் இட்டிருக்கும் விலங்கு தறிபடமாட்டுதில்லை. அவ்விதத் தந்
தைகளின் சிறைவாசத்தினால் நமது வாலிபர்கள் கூண்டி லடைபட்ட
பட்சிபோல் விழிக்கின்றனர். அவர்களுடைய மனதை எல்லாம் வயோ
திகருடைய கருத்தினால் பறிகொடுத்திருக்கின்றனர். சிறைவாய்ப் பட்

டார்க்கும் கால்அளவு உண்டு. இவர்களுக்கோ அஃதில்லை. காரணம் நமது பெரியோர்கள் வயதில் மாத்திரம் முதிர்ந்ததும் கல்வியிருக்கிற இடத்தை யறியாததும் இரவும் பகலும் வனசஞ்சாரத் தொழில் புரிந்து உலகானுபவந் தெரியாததுமே என்பது தெரிந்தோம்.

ஆனால், அவ்விதப் பெரு விலங்கை முறித்து முன்னேறிவர நமதிளைஞர்களால் முடியுமா என்பதை ஆய்ந்தால் குலத்தினால் நலமடைய எண்ணி நிற்கும் யாதவ சகோதரர்களின் துணிகரத்தினால் முடியும் என்பது திண்ணம். நமதிளைஞர்கள் கூடிக் கிளர்ச்சி செய்யும் முயற்சி வீணாகாதென்பதும் உண்மை. “தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லா மினிது” என்பது திருக்குறள். மக்களது கிளர்ச்சியினால் உலகத்தார் அம் மக்களைப் புகழும் புகழைக் கண்டு பெற்றோரும் பின்னால் மனமுவந்து நிற்பர். ஆகவே தம்மைப் பார்க்கிலும் தம் மக்களைக் கல்வி அறிவு முதலிய நல்லொழுக்கத்தில் முற்படச் செய்வது நமது பெற்றோரின் கடமையென அறிந்தோம். அவ்வித நல்லறிவு நமது குலப் பெரியாருக்குவர நமது சமூகம் எதிர் பார்த்து நிற்கின்றது.

ஆகையால் ஒவ்வொரு தாய் தந்தைகளும் நமதிளைஞர்கள் கல்வி அறிவு ஒழுக்கமுதலிய நற்குணத்தில் முற்படச் செய்வதே முதற் றொழிலாய்க் கருதி வரும்படி எதிர்பார்க்கிறோம். அறிவுடை மக்களைப் பெற்று வளர்ப்பவர்க்கே இம்மை மறுமை இரண்டிலும் சிறப்புண்டு. அவர்களுக்கே உலகத்தில் புகழுண்டு. “பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்லபிற.” என்ற ஆன்றோருடைய கொள்கையை நம்புக. நமது குலத் தொழிலுக்குக் கல்வி வேண்டாமென்று பகருவது தவறு. கல்லாவொருவன் குல நலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே. என்றபடி கல்லாதவன் குலம் பேசவே முடியாதென்றால் எந்தத் தொழில் கல்வியில்லா தமையும்! ஆகையால் நமது குலத்தொழி லெதுவானாலும் கல்வி வேண்டிய அவசியம் என்பதை உணருங்கள். தாழ்ச்சி யன்னியில் மாட்சிமைப்பட்ட நமது யாதவகுலமானது இவ்வளவு சீர்கேடுற்றதற்குக் காரணம் நமது குலப் பெரியோரின் கொடுமையே யன்றி வேறில்லை. அவர்களாலேயே நமது இளைஞர்கள் மூடப்பழக்கங் கொண்டார் என்பதற்கு எட்டுணைச் சந்தேகமும் வேண்டா.



சிறிது நாளைக்குமுன் எம்மூரிலுள்ள சில இளைஞர்களின் துற்கதியை நோக்கி மனம் பொறாது பக்கத்திலுள்ள ஒரு பாடசாலையில் இராப்பாடம் படிப்பிக்கத் தீர்மானித்தேன். அது வகைக்கு நானெடுத்த சிரமத்திற்கு அளவில்லை. ஆக ஒருவாறு ஒரு டஜன் மாணவர்களைத் திரட்டி வரிசையாய் நாட்டினேன். இரண்டாம்நாள் வரை நானும் கூடவே சென்று அமர்ந்தேன். மூன்றாம்நாள் துவக்க இரண்டொருவரை மாத்திரம் பார்த்தேன். ஒரு வாரத்திற்குள் பள்ளிக்கூடத்தில் விளக்கெண்ணெய்ச் செலவு வேண்டியதில்லை என்பதாய் முடிந்தது. அந்தோ இவர்கள் அறியாமைக்குக் காரணம் பெற்றோர்களே.

இன்னொரு வேளை எம்மூரிலுள்ள ஒரு முதியோரிடம் - சிறிது செல்வாக்குடையாரிடம்- அவரது சொல் செல்லுமியல்புடையாரிடம்- நமது சமூக இவ்வூர்த் தலைவரிடம் ‘ஐயா! நமது பொதுக் கட்டிடம் ஒன்று பழுதுபட்டிருக்கிறதைப் புதுப்பித்து நமது வாலிபர்களைக் கிளர்ச்சித்து நாமும் பக்கவுதவியாய் நின்று ஒரு சங்கம் ஏற்படுத்தலாம்' என்றேன். அதற்கன்னவர் இதுவரை இல்லாத ஒரு புதுமையை நீ உண்டு பண்ணுவது தவறு என்றனர். அந்தோ இவ்வூரார்கள் இவரைப்புகழும் புகழுக்கிரங்கவா அல்லது அன்னவர் புன்மதிக்கிரங்கவா!! இன்னோரன்ன விபரீதச் செயல்களினாலேயே நமதிளைஞர்கள் மனம் பறி கொடுத்தலைகின்றனர். இன்னவர்கள் சொல்லையே வேதமென நம்பித் திரியும் புல்லறிவை நீக்க நம்மிறைவனென்றைக்கருள் புரிவனோ என்றிரங்கவேண்டுமேயன்றி வேறில்லை.

ஆகையால் எமது சமூக இளைஞர்களே! நமது முதியோர்களின் அடாத பழைய வழக்கங்களை அடியோடு தொலைத்து, நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகமும் முன்னேறி வருவது எவ்விதமென்பதை ஆய்ந்து அறிந்து, அவ்வித முயற்சிக்கு வழியாய்க் கல்வியை அபிவிருத்தி பண்ணி அதனாலறிவொழுக்கமடைந்து, நமது சமூகப் பற்றுதலேறி, ஒவ்வொருவரும் செயலினால் நடத்தி நமது சமூகத்தை உயர்த்துவது உங்களது கடமையாகும்.

S. நாராயணக்கோன்,
களக்காடு.

# பத்திரிகைகள் படிப்பதேன்?

இவ்விஷயத்தைப்பற்றி எழுத, தர்க்கிக்க அல்லது ஆராய வேண்டுமானால் பரந்த நோக்கமும், விரிந்த உலக அநுபவமும் வேண்டும். ஆனாலும், உள்ள நல்ல சரக்கை வைத்துக்கொண்டு பேராசையற்ற வணிகன் செய்யப்புகும் வியாபாரத்தில் சிறு லாபம் சட்டெனச் சேருமென்கிற ஆப்த வாக்கியத்தைக் கருத்திலிருத்திக் கொண்டு ஷை விஷயத்தில் புத்தியைச் செலுத்துவோமாகில் பல உண்மைகள், அவைக்கேற்ற நன்மைகள் உண்டாகுமோ வென்ற சந்தேகம் சிறிதும் தோன்றுதொழியும்.

'ஏன் பத்திரிகைகள் வாசிக்கவேண்டும்' என்கிற முதற் கேள்விக்கே நேர்முகமாய் உத்தரஞ் சொல்லாமல் சற்று வினயமாய் மறுகேள்வி கேட்டுப் பார்ப்போம். அதாவது 'மனிதர்களாகிய நாம் கிணற்றுத் தவளைகளா; நாட்டு வளப்பத்தை யறிந்துணரக்கூடாதபடி?' என்பது. இதிலிருந்து ஒவ்வொருமனிதனும் ஸ்திரியுங்கூடப்பத்திரிகைகள் வாயிலாய்ப்பல நூதன விருத்தாந்தங்களை அல்லது செய்திகளைக் கேட்டுணரலாம், ஆச்சரியப்படலாம், ஆநந்திக்கலாம், ஆர்ப்பரிக்கலாம், ஒடுங்கலாம், அடங்கலாம், அச்சங்கொள்ளலாம், ஆர்வங்கொள்ளலாம், வெறுக்கலாம், கண்டிக்கலாம். இன்னும் அநேக வழிகளில் நம் மனத்தையும், புத்தியையும், பண்படுத்திக்கொள்ளலாம். பலதீமைகளை யகற்றி நல்ல பலந்தரும் அம்சங்களை யேற்றுக்கொள்ளத் துணிகிறோம், துரிதப்படுகிறோம். பத்திரிகைகள் பற்பல சமாசாரங்களை வெளியிடுகின்றன. எல்லாவற்றையும் வாசித்துணர நமக்குச் சாவகாசம் வேண்டும்; அப்படிச் சாவகாச மேற்படினும், சில அவசியமாகவிருக்கலாம். சில கேவலம் பொழுதுபோக்குக்காக ஏற்பட்டிருக்கலாம். சில்லரை விஷயங்கள், பட்டி தொட்டிகள், மூலைமுடுக்குகளிலிருந்தும் செய்திகள் நமக்கெட்டலாம், பொருத்தமற்றதும், அசம்பாவிதமுமான அச்செய்திகள் நம்முடைய காலத்தை வீணாக்கலாம். மனதுக்கு ஓர்வித வெறுப்பை யுண்டாக்கலாம், புத்தியின் சக்தியைக் கிஞ்சிற்று தளரச்செய்யலாம். ஆகவே சில அறிஞர்கள் பத்திரிகைகளை வாசிப்பது கூடாதென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இதனால் நாம் அவைகளை அறவே சலாம்செய்து 'போய்விடுங்கள், திரும்பாதீர்கள்' என்று நினைக்கலாகாது. அவசியமும், பிரயோசனமுள்ளதுமான செய்திகளைக்கொள்ளவேண்டும், மற்றவைகளைத் தள்ளவேண்டுமென்ற கருத்தே. எனக்குத் தெரிந்தமட்டில், சில வக்கீல்கள், வியாபாரிகள், உபாத்தியாயர்களும் இங்கிலீஷ் அல்லது தமிழ்ப் பத்திரிகைகளை வரவழைத்து வாசிக்கின்றனர். ஆனால் எப்படி? தங்கள் தளர்ச்சியான பழக்க வழக்கங்கள், நாகரிகம், சம்பிரதாயம் அல்லது வெளித்தோற்றம் முதலியவைகளை யனுசரித்தே வாசிக்கின்றனர். அல்லது அவசரப்பட்டுக்கொண்டு, இங்குமங்கும் பார்த்துவிட்டு அவைகளை மடித்து வைத்துவிடுகின்றனர். பொட்டணங்கள் கட்டவும், கடையில் விற்கவும் செய்கின்றனர்.



பத்திரிகைகள் நமக்கு உண்மையில் பிரயோசனப்படவேண்டுமானால் முதலில் நாம் தலைவரிசைகளை அல்லது உரைகளைக்கவனித்துக் கொள்ளவேண்டும். அடையாளமிட்டுக்கொள்ளவேண்டும். ஒரு பத்திரிகையில் அநேக விஷயங்கள் வியாசங்கள் எழுதப்பட்டிருந்தாலும் படிப்போர்கள் தங்கள் பிரியம், கோரிக்கை, பழக்க வழக்கங்களையனுசரித்துப் பொறுக்கியெடுத்த சில வியாசங்களைக்குறித்துக் கொண்டு அவைகளைச் செவ்வனே படித்துச் சிந்திக்கவேண்டும், ஆராயவும்வேண்டும். அவைகள் உண்மைக்கும் உலகப்போக்குக்கும் எவ்வளவு தூரம் ஒத்திருக்கின்றன; தற்கால நாகரிகம், வாழ்வு, மேன்மை, பொது சங்கங்களின் நோக்கம், அபிவிருத்தி, ராஜாங்க சீர்திருத்தம், நாட்டில் பல வரிப்பண வசூலின் ஒழுங்கு, அப்பொது ஜனங்களின்பணம் பலதுறைகளில் அவர்கள் செட்டாய்ச்செலவு செய்யப்பட்டு வருகிற முறை, பொதுஸ்தாபன பரிபாலனம், அப்பரிபாலனத்தின் சட்டதிட்டங்கள், ஆசார சீர்திருத்தம், ஜாதீயக்கல்வி, மத சீர்திருத்தம், ஆலயங்கள் பரிபாலனம்; உயர்குலத்தோர் கீழ்குலத்தோரென்று சொல்லிக்கொண்டு அக்கிரமமாய் நடந்து கொள்ளல், அதிக்கிரமித்தல், ஆதிக்கியஞ் செலுத்துதல், அடக்கியாளுதல், அடிமைப்படுத்துதல், நகரபரிபாலனம், ஜனசமுகத்திற்குற்ற சுகவாழ்வு, சுகாதார சாதனங்கள், வியாபார சங்கங்கள், தொழிற்சாலைகள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், கிருஷிசாஸ்திர அநுபவசாதனங்கள், இன்னும் மிஞ்சியுள்ள (மனிதவாழ்வுக்கு) இன்றியமையாத சாதனங்களுக்கும் பொருத்தமுள்ளவைகளா வென்றும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஆனால் ஒவ்வொருவரும் பல பத்திரிகைகள் அல்லது ஒரு பத்திரிகையிலுள்ள எல்லாச் செய்திகளையும் படிக்க வேண்டிய அவசியமிராதென்றே சொல்லலாம். இதற்குச் சில காரணங்கள், ஏகதேசத்தில் மேலே சுட்டிக்காட்டி இருக்கிறது. உட்புகுந்து பார்க்குமிடத்து இன்னும் சில விவரங்கள் புலப்படாமல் போகவில்லை.

பத்திரிகைகளைப் பொதுவாய் மார்க்கட்டுகளுக்குச் சமானமாகச் சொல்லலாம். சென்னை போன்ற பெரிய நகரங்களில் விஸ்தாரமாயுள்ள மார்க்கட்டுகளைப் பார்த்திருக்கின்றோம். லட்சக்கணக்கான ஜனங்களுக்கு உபயோகப்படும்படி எண்ணிறந்த சாமான்கள், சரக்குகள், தானியங்கள், மரக்கறிப்பதார்த்தங்கள், கனிவர்க்கங்கள், கோழி, வாத்து, பட்சி இனங்கள் முதலியன ஏராளமாய்க் கொட்டியும் அடுக்கியும் சேர்த்தும், நிறுத்தியும், அடைத்தும் வைத்து விற்பனை செய்கின்றார்கள். பிரதிதினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மேற் சொன்ன ஒவ்வொரு மார்க்கட்டுக்கும்போய்ச் சாமான் சரக்குகள் வாங்கிவராமலிருக்கவில்லை இங்கு ஒன்றைக் கவனிக்கும் அவசியம் மேற்படுகிறது. அதாவது, எல்லோரும் எல்லாச் சாமான்களையும் ஏககாலத்தில் வாங்குவதில்லை. அவரவர் அவரவருடைய ஆசை, எண்ணம், அபிப்பிராயத்துக்குத் தக்கபடி அந்தந்த வஸ்துக்களை அப்போதைக்கப்போது வாங்குகிறார்கள், விற்கிறார்கள், உபயோகிக்கிறார்கள். இதுபோலவே பத்திரிகைகளும், சமாசாரங்களும், பெரிய நகரங்களில் பத்திரிகை மார்க்கட்டுகள் விஸ்தாரமாயுள்ளன, மலிந்துகிடக்கின்றன. நாள் தோறும் வெளியாகும் பத்திரிகைகள்—தினசரி, வாரமிருமுறை, ஒருமுறை, மாதமிருமுறை, ஒரு முறை—இப்படியாகப் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளிருக்கின்றன. திராவிடன், சுதேசமித்திரன், ஹிந்துவைப் போன்ற தினசரிப் பத்திரிகைகளில் செய்திகள் நிறைந்துள்ள ஒவ்வொன்றுக்கும் சந்தாதாரர்கள் அநேக ஆயிரக்கணக்காயிருந்து வருகின்றனர். என்றாலும், ஒவ்வொருவரும் அவைகளைப் படித்துத் தலைவரிசைகளையாவது ஞாபகத்தில் வைப்பது அசாத்தியம். எல்லாவற்றையும் படிப்பது அசாத்தியம். அப்படி எல்லாவற்றையும் படிக்க எத்தனிப்பதும் உசிதமற்ற செயலேயாகும்.

இது நிற்க. மேல் நாட்டைப்பற்றிச் சற்று யோசிக்குமளவில் அங்குபிரசுரிக்கும் பத்திரிகைகளுக்கு வரைமுறையோ, கங்குகரையோ கிடையாதென்றே சொல்லத் துணியலாம். கூலிகளுக் கேற்பட்ட கக்கூஸ் முதற்கொண்டு லார்டுகள், மெம்பர்கள், கூடும் பார்லிமெண்டு சபை, மாளிகைகள்வரை நடக்கும் சகல செய்திகளையும் மின்சாரத் தந்திகள் தினே தினே ஜனங்கள் எல்லோருக்கும் கொண்டுவந்து தள்ளிவிடுகின்றன. இச்செய்திகள் முக்கியமாய் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலிருந்து கிடைக்கின்றன. (தொடரும்)

எஸ். ஆர். தாஸ்.

# சுற்றந் தழுவல்

## ஙப்போல் வளை.

இஃது தமிழ்த்தாயாகிய ஒளவைப்பிராட்டியாரருளிச் செய்துள்ள "ஆத்திசூடி" என்ற நீதி போத வாக்கியங்களுள் ஒன்றாகும். இதன் பொருள் "ங" என்னும் எழுத்தைப் போன்று தன் சுற்றத்தைத் தழுவிக் காப்பாயாக; என்பதே.

அஃதாவது இனிய செந்தமிழ்ச் சொற்றொடர்களில் "ங, ங்" என்னும் இரண்டெழுத்துக்கள் மட்டுமே உபயோகப்படுவதன்றிப் பிறிதொன்றும் பிரயோகத்திலிருப்பதாகப் புலனில்லை. அவ்வாறிருந்தும் ஆதிமுதல் அந்தம்வரையும் பயன்படும் மற்றைய வர்க்கங்களிலிருப்பது போலவே உபயோகமற்ற "ஙா" முதல் "ஙௌ" வரை அரிச்சுவடியிற் செறிக்கப்பட்டிருப்பது ஙகரத்தின் நிமித்தமேயென்பது எழுதப் படிக்கத் தெரிந்த தமிழ் மக்களனைவர்க்குந் தெரிந்ததே.

எவ்வாறு ஙகரமானது தனது உபயோகமற்ற சுற்றத்தைத் தழுவிக்கொண்டிருக்கின்றதோ அவ்வாறே நீயும் நின் இனத்தாரை அணைத்தாதரிப்பாயாக. என்பது இதன் நிறைந்த கருத்துரை.

கடவுட் படைப்பின் உயிர்ப் பிராணிகளில் அநேகமாக "இனம் இனத்தோடு" என்றபடி தன் சுற்றத்துடன் ஒன்றியே வாழ்வதை நாம் பார்க்கிறோம். உதாரணமாகப் பகுத்தறிவற்ற "எறும்புகள்" கூட்டங் கூட்டமாய் வசிப்பதையும், அவ்வெறும்புகளில் ஒன்று தான் சம்பாதித்த இரைப் பொருளைத் தன் வளைக்குக் கொண்டு செல்லத் திறனற்றபோது ஏனைய எறும்புகள் அதற்குத் துணையாக உதவி புரிவதையும் நாம் காணலாம்.

இன்னும் இதுபோன்றே காக்கையானது கிடைத்த உணவுப் பதார்த்தத்தை மறைத்துத் தான்மட்டும் புசித்துக்கொள்ள எண்ணாது தன் இனத்தையுங் கூவியழைத்து இரையுண்டு "சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்" என்ற பழுத்த அநுபவ மொழியை நிரூபிக்கின்றனவன்றோ! இதனையே "காக்கை கரவா கரைந்துண்ணும்" என்றார் பெரியார்.

மேற்கூறிய அஃறிணை வர்க்கங்களாகிய எறும்புகட்கும், காகங்கட்கும் தத்தமினத்திடத்து இத்துணை ஒற்றுமை வளர்த்தலும், சுற்றந்தழுவலும், பந்து நேசமும், சொந்தப் பாசமும் இருக்க, வகுத்துணரும் பகுத்தறிவுற்ற உயர்திணைப் பகுதியினராகிய நமக்கு எத்தனையோ பன்னூறுமடங்கு அதிகமாக வளர்ந்தோங்க வேண்டுவது முறையன்றோ? அவ்வாறின்றித் தனது சமூகத்தையும், இனத்தையும், நட்பினரையும் அன்புடன் ஆதரிணைசெய்யாதார் யாரும் மனிதத் தன்மைக்கு உரித்தானவராகார். இதனை

"அரம் போலுங் கூரிய ரேனும் மரம்போல்வார்
மக்கட்பண் பில்லா தவர்"

என்னும் பொன்னுரையே இன்னும் நன்கு வலியுறுத்தும்.

"வைத்துப் பொருளைத் தானுகரான் வழங்கானிருந்துஞ் செத்தானே" என்றபடி அன்னாரிருந்தும் இறந்தவரே.

நிற்க, பிறருக்கு உதவிபுரிதலையே பெரும்பேறெனக் கொண்டு இடர்ப்பட்டார் மாட்டு அருளுடையராய் விளங்கலே அறநெறிபிடித்தொழுகும் அரிய உத்தம மனித இயற்கையாகும். அத்தகையார்க்கு,

சாதல் வந்துற்றகாலுந் தனக்கொரு சாதலின்றி
பூதல மிறக்குங் காலும் புகழுடம்பிருக்கு மந்த
கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங்கூர
வாழ்தலையுடையா ரன்றே வானமும் வணங்கு நீரார் (வி. பு.)

அஃதற்றூர் "தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற வாக்கியத்திற் கிலக்காவாரென்பதற்கையமுளதோ!

நமது உறவினர் அறிந்தோ அறியாமலோ தவறிழைத்தனராயின் அதை விபரீதமாகப் பாராட்டாது "விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல" மாற்றிக்கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த முயலவேண்டும். அன்றிக் "குற்றம் பார்க்கில் சுற்றமில்லை".

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்.

என்ற வண்ணம் சமூகசேவை செய்து இனவிருப்பிற்கு உரியவராக வாழ்பவாது செல்வவாழ்க்கை "பொன்மலர் நன்மணம்" பொருந்தப் பெற்றதை ஒக்கும்.



மகிழும் குணமுடையவ உற்றூர் மெலிந்திருக்க உண்டுடுத்து ராய்த் தன்னலமே பெரிதெனக் கருதிவாழும் இயல்புடையவர்களது வாழ்க்கை எவ்வளவு உயரிய உன்னத செல்வாக்குடையதாக இருப்பினும் அஃது மலராத இதழ்களின் மத்தியிலிருக்கும் மகரந்தக் குப்பியின் வனப்பையும் மணத்தையுமே நேரும்.

ஒரு குலத்திலவதரித்த ஒருவன் இழிதொழில் வழியிற் பிரவேசிப்பானாயின் அவன் "குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு" போல்வான் எனவும், நன்னெறித் துறையிலிறங்கி யொழுகுவானாயின் "குலத்தை விளக்கவந்த கோமகச் செல்வன்" எனவும் குலத்தின் சார்பாகவே இகழவும் புகழவும் பெறுகிறான். மேலும் "குலத்தளவே ஆகும் குணம்" என்றதனால் ஒரு சமூகம் அடையும் பெருமையும், சிறுமையும் அந்தச் சமூகத்தின் ஒவ்வொரு மக்களையுஞ் சார்ந்தே நிற்கிறது. ஆகவே, குணநலமுறையில் மேன்மையாக வாழ எண்ணும் ஒவ்வொருவரும் தமது குல சமூகத்தின் குணநல முறை நிலைமையை முன்னணிக்குக் கொண்டுவருவதற் பொருட்டு முயல முற்படவேண்டும் என்பது இதனால் உணரப் பெறுகிறதன்றோ?

பொதுவாகக் கூர்ந்து நோக்குமிடத்துச் சமூக வாழ்க்கையில் மக்கள் மூன்றுவித நிலைமைகளில் அமையப் பெற்றிருக்கின்றனர். அந் நிலைமை முறையே

முதற் பிரிவினர்:-தம்குடும்பத்தைக் காப்பதோடு, வேறு பல குடும்பங்களைப் பராமரிக்கத்தக்க பாக்கிய முடையவர்களாகவும்,

இரண்டாம் பகுப்பினர்:-தம் குடும்பத்தைமட்டும் தாராளமாகத் தற்காக்கும் சம்பத்துடையவர்களாகவும்

மூன்றாந் தரத்தினர்:-தங்குடும்பத்தையுந் தாங்கமுடியாது தவிக்குந் தன்மையுடையவர்களாகவும், வாழ்கின்றனர் என்பது கண்கூடாகக் காணும்.

ஆகலான் அம்மூன்று பாகுபாட்டினருள் முதற் பிரிவினர் பொருளையுபயோ முன்னையவர் பொருளையும், இரண்டாம் பிரிவினர் கிக்கும் வகையில் தம்மாலியன்றதான சரீரப் பிரயாசையையும் உதவி மூன்றும் பிரிவினரையும் தம்போன்ற மேனிலைக்குக் கொண்டுவர வேண்டியது முக்கிய கடமையென்பதை உறுதியாக உலகுக் கறி

விப்பான் வேண்டியே "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்" எனக்கூறி யருளினர் மூதாட்டி.

"இன்சொல் மலர்ச்சி யீடமினிதாண் யார் யார்க்கும் வன்சொல் களைந்து," "பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு"

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

என்று; தெய்வப் புலமையராகிய ஆன்றோரது சீரிய பொய்யாமொழிக் கிணங்கச் "சுற்றந்தழால்" என்ற முறைப்படி நடந்துகொள்வார்களாகில் அதுவே பிற்காலத்து நன்மைக்காகச் சேகரித்து வைக்கும் சேமநிதியாகும். அவ்வாறின்றி ஈத்துண்ணாது தேட்டிவைத்த "பொருளு மவனை நகுமே உலகத்தருளுமவனை நகும்" இன்னும்:-

"இளைஞர்க் குதவாதான் செல்வமும்" பைங்கூழ்
விளைவின்கண் போற்றா வுழவும்—இளையளாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

என்ற செய்யுளும் அதனை உறுதிப்படுத்தும். மேலும், இத்தகையர் இல்வாழ்க்கைக் கின்றியமையாத உத்தமமுறையைக் கையாளாது மாறுவாராயின் அன்னார்; "மருவு பல்கிளையு மோம்பார் வளம் படைத்தென் பெற்றாரால்? என்ற வினாவுக்கு விடையிறுக்க வொண்ணாது நிந்தைக்கே உட்படுவர். ஆதலால் உலகில் தான் செல்வம் பெற்றதால் பெற்ற பயன் யாது? எனுங் கேள்விக்குச் "சுற்றத்தா சுற்றப்பட ஒழுகல்" என்ற மறுமொழியின் பேரொலி தமிழ் மறை மலையாகிய திருக்குறளினின்று மூவுலகுங் கேட்கத் தொனியா நிற்கின்றது.

**வீ. எஸ். வீரணக் கோன்,**
அம்பலத்தாடி,
சிறுவாலை ஜமீன்.

# லீலாவதியின் நிருபம்.

(247-ம் பக்கத் தொடர்ச்சி)

உனது கணவன் உன்னிடம் ஏகாந்தமாய் இருக்கும் பொழுது, தனது பிரதாபம், எடுத்த காரியம் இனிது முடிக்கும் ஆற்றல் இவைகளை எடுத்துரைப்பானாகில் அவைகளுக்கு நீ செவிசாய்த்து, அங்கம் பூரித்துப் புளகாங்கிதமுறவேண்டும். உன்னுடைய அந்தரங்கங்களை அவனுக்கு வெளியிட்டு அவன் புத்திமதியின்படி நடக்கவேண்டும். அவனுடைய ரகசியங்களை நீ பாதுகாக்கவேண்டும். அவன் எத் தொழிலில் திறமை உடையவனோ அதைச்செய்யச் சொல்லிக் கண்டும் கேட்டும் களிக்கலாம். உதாரணமாக, உனது கணவன் சங்கீதப் பயிற்சி பெற்றவனாயிருக்கலாம், அங்ஙனமிருப்பின் நீ அவனைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழலாம். நீயும் அவனை மகிழ்விக்க உனது இனிய குரலால் கடவுளைத் துதிக்கும் பாக்களையோ, அல்லது மற்றைய கீர்த்தனைகளையோ பாடி மகிழ்விக்கலாம்.

ஆனால் கணவன் வியாகூலத்தோடிருக்கையில், அவனுக்குத் தேறுதல் கூறியும் அன்புடனும், மனக்கலக்கத்துடன் பரிந்து நோக்கியும், அவன் துயரம் நீங்கிச் சந்தோஷமடையும்படி செய்யவேண்டும். தங்கையே! இதற்கு உவமானமாக ஓர் சிறு கதை சொல்லுகிறேன் கேள்.

முன்னொரு காலத்தில் ஓர் யுத்த வீரனும் அவன் மனைவியும்இல்லறத்தை ஒரு ஏரில் பூட்டிய மாடுபோல் நடத்தி ஒத்துழைத்து வந்தனர். அங்ஙனம் வரும் காலத்தில், அவ்வூர் அரசனுக்கும் அயல் தேசத்தரசனுக்கும் போர் நிகழ, இவ்வீரனும் செல்லும்படி வந்தது. கணவனைப் போர்க்களத்திற்கனுப்புவதென்றால், பெண்மணிகளின் மனம் எங்ஙனமிருக்குமென்பதை நான் சொல்லாமலே நீயறிந்து கொள்வாய். ஆனால் கணவன் ஜயத்துடனும் மார்பில் காயத்துடனும் திரும்புவதே வீரப்பெண்மணிகளுக்கு அடையாளமாகையால் அப்பெண்மணி தன் கணவனுக்குப் பற்பல தேறுதல்களும், உறுதி மொழிகளும் கூறிக்கணவனைப் போருக்கனுப்பினாள். கணவனை அங்ஙனம் அனுப்பிவிட்டு எல்லாம் வல்ல திருமாலைப் போற்றிய வண்ணமாயும் காதலனுடைய வரவை எதிர் நோக்கிய வண்ணமாயும் இருந்

தான். கதிரோன் கிரணங்களும் மறைந்தன. கணவன் இன்னும் வரவில்லையே என்ற கவலை அதிகரித்தது.

சிறிது நேரத்திற்குள் கணவன் வரவைக்கண்டு, அங்கம் குளிர்ந்தவளாய், அவனுக்கு வேண்டிய உபசாரணைகள் செய்து அவன் அமுது அருந்தியபின், சாவதானமாய் உட்கார்ந்து இருக்கும் பொழுது, மெல்லிய குரலில் மிக இனிமையாகவும், சென்ற விஷயம் எங்ஙனமென்று வினவ, அவன் ஜெயமடைந்தேன் என்று சொன்ன அளவில் அவள் கையில் இருந்த வளையல்கள் எல்லாம் கற, கறவென்று முறிந்தனவாம். ஏன் முறிந்தது என்று நீ கேட்கலாம், அதற்கு விடை நீயே யோசித்துப்பார்.

அங்ஙனமே மறுமுறை அவன் போருக்குச் சென்று திரும்பி வந்து தோல்வி அடைந்தேன் என்று கேட்டவுடன் அவள் வளையல்கள் தானகவே கழுவி விழுந்தனவாம். அவளன்றோ மனைவி! தங்கையே! பார்; நீயும் அப்பெண்மணியைப்போல், சந்தோஷம், துக்கம் இவைகளில் நீரின் மேலுள்ள நீரோம்பல் போன்று உயிரொன்றும் உடல் வேறுமாய் உன் கணவன் விஷயத்தில் இருப்பாயாக.

உன்னைக் கணவன் பலர் முன்னிலையிற் கடிந்து கொண்டாலும்; அல்லது இகழ்ச்சியாகப் பேசினும், அதை நீ மிகவும்பொறுமையுடன் எதிர் பேசாது, மென்மேலும் உன் அன்பைப் பெருக்கிக்கொள்வது உத்தமமாகும். அல்லது கணவன் உன்னைக் கடிந்துகொண்ட கோபத்திற்காக, அவன் தன் நண்பர்களிடமோ அல்லது பந்துஜனங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கும் பொழுதோ உன் குழந்தையை அடித்தோ, அல்லது கிள்ளியோ அழவிட்டு, "உன் தந்தையிடம் போ" என்று சொல்வது அழகல்ல. அங்ஙனம் செய்வையேல் அவர்தம் சம்பாஷணைக்குப் பங்கம் நேரிடும். அது காரணமாக உன் மீதும் குழந்தைமீதும் உன் கணவனுக்குக் கோபம் உண்டாகக்கூடும்.

புருஷனைப் பார்த்துத் தனக்கு ஒரு நகையும் செய்து போடாதவரையில், தான் புருஷனிடம் 'அண்டை வீட்டு அமிர்தவல்லி காசுமாலை பல தரித்திருக்கிறாள்; பக்கத்து வீட்டுப் பார்வதி பட்டுச் சேலை பத்து வைத்திருக்கிறாள்; நான் தாலிகட்டி வந்த நாள் முதல் முக்கால் துட்டு மூக்குத்தித் திருகாணிக்கும் விதியில்லாமல் திரிகிறேன்' என்று இம்மாதிரி வார்த்தைகள் பேசக்கூடாது. போதுமென்ற



மனமே பொறுமைக்கிடம் கொடாமருந்து. ஆகையால் நீ நகை, பணம், முதலியவற்றில் சிறிதேனும், பொறுமையாவது, கௌரவமாவது வைப்பது ஆகாது. நகை, நகை என்று உன் கணவனுக்கு வருத்தம் விளைவிக்காதே; இதற்கு மாறாக, அவன் வாங்கிக் கொடுத்த ஆடைகளைக் கொண்டும், அணிகளைக் கொண்டும் திருப்தி அடை. ஆகவே கணவனுக்குத் தெரியாமல் அவன் வருவாயினின்றும் நகைகளுக்காயினும், ஆடைகளுக்காயினும் ஒன்றும் சேர்க்காதே, அவ்வாறு சேர்க்க எண்ணமுண்டானல் சேர்த்துக் கணவன் பணத்திற்கு முட்டுற்றுக் கேட்கும்போது கொடுப்பாயானல், அவனுக்கு இன்னும் உன்மேல் பிரிய மேற்படும். உன் புத்திசாலித்தனத்திற்கும் மெச்சுவான்.

உன் கணவன் விரதம் ஏதேனும் அனுஷ்டித்து வருவானகில் நீ அதிக சிரத்தையுடன், கஷ்டப்பட்டுச் செய்யும் பொழுது உனது கொழுநன், உனக்காகப் பரிதாபப்பட்டு அவ்விரதத்தை ஒழிக்க வேண்டுமென்றால், நீ அவை எனக்கு அவ்வளவு சிரமத்தைத் தரா என்று கூறி அவற்றை அவன் அனுட்டியா தொழிவதால் நேரும் பாவத்தை நீ அடைவதாயும் கூறி, அவன் தேகக்காப்பில் கருத்தாயிரு. நீ தனியாக விரதம் எதையும் அனுஷ்டிக்க வேண்டாம். ஏனென்றால், "கொண்டானிற் சிறந்த கோயிலில்லை" என்பதால் மகளிர்க்குப் பர்த்தாவைப் பேணுவதைவிடச் சிறந்த விரதம் கிடையாது.

நீ நறுமஞ்சள் தேய்த்துக் குளித்தவளாய், தூய்மையும் அழகும் பொருந்தியவளாய் உன் கணவன் வாங்கிக் கொடுத்த ஆடையை அணிந்து, உன்னுடைய அணிகளையும் அணிந்து, கண்ணில் அஞ்சனமும், நெற்றியில் திலகமும் இட்டவளாய், உன் கூந்தலைச் சிக்கறுத்து வாரி முடித்து, உன் பவள விதழினிடையே புன் முறுவலும் தோன்ற உன் கணவன் பார்க்க நடந்துகொள். ஸ்திரீகளின் அலங்காரம் கணவன் கண்டு களிப்பதற்கே யன்றி ஊரார் பார்க்கும் பொருட்டல்ல.

தங்காய்! நீ நினது கேள்வன் ஆயுள், ஆரோக்கியம் முதலிய பெறவேண்டில் நீ மங்கையர்களுக்கு இன்றி யமையாதது ஆகிய திருவிளக்கு ஏற்றித் தொழுவதை மேற்கொள்ள வேண்டும். இங்ஙனம் செய்வாயானல் உன் இல்லம் இலக்குமிக்கு உறைவிடமாய்விடும். கணவனை விட்டுத் தனியாக ஒரு கணமும் நீ இருக்க விரும்பவில்லை

என்பதையும் அவனை இம்மை மட்டுமே யன்றி மறுமையிலும் சேர அவாவுள்ளவளாய் இருக்கின்றனை என்பதையும் உன் ஒவ்வொரு செய்கைகளிலிருந்து வெளிப்படக் காட்டுவாயாக.

அவனைவிட்டு ஒரு கணமும் அகலாது வசித்து அவனுக்கு வேண்டிய தொண்டினை யெல்லாம் செய்துவரத் தவறாதே.

தங்கையே! நான் கூறவந்தது ஒருவாறு முடிந்துவிட்டது. ‘இல்லற மல்லது நல்லற மன்று’’ என்பதை நீயும் நினது கணவனும், ஓர்ந்து, தீதில கருமம் புரிந்து சுகவாழ்வு பெறுமாறு நான் லீலாவிநோதனை கண்ணனைப் போற்றுகிறேன். மேலும் உன் ஒழிவு நேரங்களில் சூழ்ச்சிகள் பொருந்திய தற்கால நாகரிக நாவல்களைக் கண்கொண்டும் பாராதவளாய் ஏதேனும் பதிவிரதைகளுடைய கதையை வாசித்துக் காலத்தைப் போக்குவாயாக. உன் கணவரிடத்தும், மாமியார், மாமனாரிடத்தும், மற்றும் யாவரிடத்தும் என் வந்தனத்தைச் சொல்லவும். வேறு விசேஷம் ஒன்றுமில்லை. உன் பதிலை எதிர்பார்க்கும்,

உன் சகோதரி
லீலாவதி.

(இவ்வெழுத்துக்கு எதிர் நிருபம் தொடரும்.)

ஸி. ராஜரெத்தினம்.
(யாதவன்)

---

## யாதவர்க்கோர் வேண்டுகோள்.

---

ஒரு நாடோ அல்லது ஒரு சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், அந்நாடு அன்றி அச் சமூகம் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். கல்வியில் போதிய திறனைப் பெறாமல் எந்நாடும் எந்த சமூகமும் முன்னேற்றமடையவே முடியாது. நமது யாதவ சமூகத்தின் தற்போதைய நிலையை அறிவுள்ள ஒருவர் சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்பாரானால் உண்மையில் இரத்தக் கண்ணீர் வடியாது போகார். மற்ற சமூகங்களின் நிலைமைக்கும் நமது சமூகத்தின் நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள



வித்தியாசத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடல் பொருந்தும். இக்காலை உலகிலுள்ள ஒவ்வொரு தேசமும் சமூகமும் மேன்மையடைய வேண்டியதற்கான பலதிறவழிகளில் முயன்றுவந்துகொண்டும்பெரும்பாலான முன்னேற்றத்தை யடைந்து மிருக்கின்றன. ஆனால் நமது சமூகமோ கும்பகர்ணன் நித்திரையில் தனக்கு நிகர் எவருமில்லை என முன்னேற்ற மடைந்துகொண்டு வருகிறது! ‘கல்வி’ என்றால் ‘வேப்பங்காய்’ என எண்ணிக்கொண்டு அலட்சியப்படுத்தி வருகிறது! நமது சமூகத்தவரில் பெரும்பாலானவர் ‘கல்வி’ நமக்கு எதற்கு? என்று கேட்கின்றனர். [இவர்கள் நிலைமையை உணர்ந்து அழுவதா? சிரிப்பதா? என்பது எனக்கு விளங்கவில்லை] இந்தக் காலத்திற்கு இன்றியமையாததாய் வேண்டுவது தொழிலே யல்லாமல் கல்வியல்ல எனவுங் கூறுகின்றனர். தொழிலும் முக்கியமாய் வேண்டியதுதான் என்பதை நான் மறுக்கப்போவதில்லை. அத்துடன் கல்வியும் மிக மிக முக்கியம் என்றே நான் கூறுவேன். என்னைப் பொறுத்த வரையில் முதலில் வேண்டியது கல்வியே என்று சொல்லத் தயங்கேன். வெறும் தொழில் மட்டும் தெரிந்து, ஊமையராய்—செவிடர்களாய்—குருடர்களாய்—மூடர்களாய்ப் பல கோடிப் பொருளுடன் தனவந்தராய் நூறு வயது வரை இருப்பதைக் காட்டிலும், கல்வி என்ற அறிவுப் பொருளுடன் பத்து ஆண்டுகள் இருந்து ‘அறிஞன்’ என்ற பெயருடன் இறத்தலே மேலாகும் என நான் கூறுவேன். எனவே நமது சமூகம் கல்விசொரூப மாகாமலிருந்து வரும் வரையில்—அறிவைப் பெறாமலிருந்துவரும் வரையில் முன்னேற்றத்தை யடைதல் முயற்கொம்பே. நமது சமூகம் இன்று மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருந்து உழன்று வருகிறதின் காரணம் என்ன? மூடப் பழக்கவழக்கங்களுக்குத் தாயகமாயிருந்து வருவதின் காரணம் என்ன? கல்வியை அடையாததே காரணம் என்று சகோதரர்கட்குக் கூறவும் வேண்டுமோ?

சகோதர சகோதரிகளே! விழியுங்கள்! எழுங்கள்! நமது சமூகத்தின் நலன் கோரி உழைக்க முன்வாருங்கள்! நமது சமூகம் எலும்பு மனிதன் போலிருந்துவரும் தோற்றம் உங்களுக்குத் தெரியவில்லையா! நமது சமூக மக்கள் கிராமங்களில் மூடர்களாய்—குருடர்களாய்— வாழ்ந்து வருவது உங்களுக்குத் தெரியவில்லையா? இன்னுமா உறக்கம்? போதும்! போதும்!! இன்றே இப்போதே வெளியில் வாருங்கள்! நமது சமூகத்தின் நலன் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு

முன்வந்துள்ள 'யாதவ மித்திரன்' நமது மக்கள் வீடுகள்தோ, செல்லத் துணைபுரியுங்கள். நமது சமூகம் முன்னேற்ற மடைவதற்கான—தலை நிமிர்ந்து நிற்பதற்கான—நலம் பெறுவதற்கான வழி காணப் பிரயாசைப்படுங்கள்! நமது சமூகச்சங்கங்களைக் கிராமந்தோறும் தாலூகா தோறும், ஜில்லா தோறும் உண்டாக்குங்கள். நமது மக்கள் இருக்கும் எல்லாவிடங்களிலும் பள்ளிக்கூடங்களையும், வாசகசாலைகளையும் தோற்றுவியுங்கள்! பகலில் படிக்க முடியாத நிலையிலுள்ள ஏழைத் தொழிலாளிகளுக்கு ஆங்காங்கு இரவுப் பாடசாலைகளை ஏற்படுத்துங்கள்! உழக்கில் கிழக்கு மேற்குப் பார்ப்பதுபோல் நமது யாதவ சமூகம் என்பதை உணர்ந்துகொள்ளாமல் நான் உயர்ந்த யாதவன், இவன் நடுத்தரமான யாதவன், நீ தாழ்ந்த சாதி யாதவன் எனக் கூறி வீணாக—அநியாயமாக—வெறுக்கும்படியான வேற்றுமைகளைக் கற்பித்துக்கொண்டு இடர்ப்பட்டு வருவதைத் துரத்துங்கள்! நமது சமூகம் ஒன்றே! அதில் பலபலவாகக் கற்பிப்பது பெருங்கொடுமையே! இனியேனும் இம்மாதிரியான வேற்றுமைகளைக் கிளப்பிக்கெடுப்பதை நிறுத்துங்கள்; என நான் உங்களை இருகை கூப்பி இறைஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
**ப. வீரக்கோன்.**
மதுரை.

# அறிவு இச்சை செயல்.

யாதவ நண்பர்காள்!

காணக்கூடியவற்றைக் கண்டுணர்வது அறிவு. அறிவுடையார் எல்லாமுடையார். என்றபடி அறிவினால் பெறமுடியாத பொருள் இல்லை. வளம்பெறக் கருவி அறிவுதான் என்பது உண்மை.

ஆகவே, அறிவினாலன்றி நமது சமூக முன்னேற்ற மடைய முடியா. நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகத்தினுயர்வும் நமது சமூகத்தின் தாழ்வும் அறிவினாலாய்ந்தவர்க்கன்றிக் காண இ[illegible] லாது. நமது அறிவுக்கு அன்னையாயிருப்பது கல்வி. கல்வி உய. கருதுவன அனைத்துமுயரும். அஃதொன்றினால் அடையலாம் நம சமூக உயர்வு யாவும் என்பது வெளிப்படை.



ஒவ்வொரு நாடும் அறிவினாலேயே முன்னேறித் திருவுற்றது. அதில் நம்மறிவைச்செலுத்தினால் அது நன்றாக விளங்கும். கல்வியினால் அறிவும் அவ்வறிவினால் ஒழுக்கமும் அடைகின்றன எனச் சமூகம். நமது சமூகமோ இம்மூவகையினும் குறைவுற்றது. ஒவ்வொருவரும் நலத்தை விரும்புவது இயல்பு. நலத்தை நாடியதே சமூகக் கிளர்ச்சி. நலம்பெற்றுயர்வதோ மற்றைச் சமூகங்கள்.

நலத்தைக்கண்டின்புறுவது நமக்கழகல்லவா! ஆகையால் ஒவ்வொரு சமூகமும் நலத்தினாலடையும் நன்மையை நாடி நாமும் இச்சைப்பட வேண்டியதவசியம். இச்சையின்றி ஒரு பொருளும் வாய்க்காது. நமது சமூக நலத்தினில் ஒவ்வொருவரும் இச்சை வைப்பதவசியம். இச்சையிருந்தாலன்றி நமது சமூகம் முன்னேற்ற மடையமுடியாது. நன்மையில் நாட்டமில்லாது நாம் நன்மையடைய முடியுமா! ஆகவே நமது சமூக நலத்தில் ஒவ்வொருவரும் இச்சையுண்டாய் அந்நலனுக் கேதுவாய்க் கல்வி முதலிய சகல வளமும் பெற இசைவரென அறியலானேம்.

ஆனால், ஒவ்வொரு இன்பத்தையும் பெறக்கூடிய வழிகண்டும் அவ்வின்பத்திலவாவுற்றும் நினைத்திருந்தால் போதுமா; போதுமென்றால் அனுபவிப்பதெப்படி? ஆனால் அறிவினாலாய்ந்து ஆசையைக் கொண்டு அவரவர் செயலிலே நடத்தினால் அனுபவிக்க முடியும்.

ஆகவே, சமூக முன்னேற்றத்திற்குரிய நன்னலங்கண்டு அந்நலத்தினில் விருப்பமுற்று தாமும் தமது சுற்றமும் நண்பரும் செயலினால் நடத்த முன்வருவாரென எதிர்பார்க்கின்றது நமது சமூகம்.

**S. நாராயணக்கோன்,**
களக்காடு.

# கோகில கிருஷ்ணன்

அல்லது

## இரு யாதவ மணிகள்.

(ஒரு சீர்திருத்த நாடகம்)

---

(259-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிருஷ்,—(சிரித்துக்கொண்டு) ஓஹோ! "லூஸி" "டென்ஸியும்" "கல்ஸரும்" இன்னும் எத்தனை நாளைக்கு உன்னிடம் இருக்கப்போகிறதோ பார்க்கிறேன்.

கோகி:—"ஓய், வாட்டீஸ் தி மேடர்"? ஏன் என்ன சமாசாரம்? திடீரென்று தாங்கள் அப்படிக் கூறுகிறீர்களே?

கிருஷ்:—நான் அதைச் சொல்வானேன். நீ வீணே என்மீது கோபங்கொள்வானேன்? நல்ல "எட்டிகட்" கிடையாது. "டீஸன்ஸி" தெரியவில்லை என்று தூஷிப்பானேன்?

கோகி:—அண்ணா! "கைண்ட்லி எக்ஸ்கியூஸ்மி" ஏதோ நான் தெரியாத்தனத்தால் அவ்விதம் கூறிவிட்டேன். அது போகிறது. என்ன காரணத்தால் சற்று முன்பாக அவ்விதம் உரைத்தீர்கள்?

கிருஷ்:—ஒன்றுமில்லை. எல்லாம் உனக்கு விவாகம் ஆகட்டும் சொல்லுகிறேன். என்று—

கோகி.—(பெருமூச்செறிந்து) அப்பா! இவ்வளவுதானா? அண்ணா! இந்தப் பரிகாச வார்த்தையை நீங்கள் விடவே மாட்டீர்கள் போலிருக்கிறதே. பெண்களுக்குக் கலியாணமென்பது ஸகஜந்தானே! இப்போது அதைப்பற்றி உங்களுக்கு நினைவு வருவானேன்? ஏதாவது உள்ளே பிரஸ்தாபம் நடந்ததோ?

கிருஷ்:—(மௌனமாயிருக்கிறான்)

கோகி:-ஐயோ! இருக்கட்டுமே (என்று சலுகையுடன் கோபித்து முகத்தைத் திருப்பிக்கொள்ள)

கிருஷ்:—தங்கா! நீ அதற்காக இவ்விதம் கோபித்துக் கொள்ளலாமா? இப்படிவா சொல்கிறேன்.



கோகி:—(சிறிது) உம்—சொல்லுங்கள்.

கிருஷ்:—வீட்டில் இன்று காலையில் நமது குலத்தவர் சிலர் வந்து கலியாண விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கத் தந்தை என்னை அழைத்து 'இவ்வருடம் கலியாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டந்தானோ' வென்று கேட்டார். அப்போது "அப்பா! கோகிலத்தைப்பற்றிய சிந்தனையே உங்களுக்கில்லையே, என்னைப்பற்றி அவசரப்படுகிறீர்களே?" என்று கேட்டேன். உடனே அவர் உனக்கு வரன் நிச்சயம் செய்து விட்டதாகக் கூறினார்.

கோகி:—(வெட்கத்துடன் சிரித்து) அப்படியா! எங்கேயோ?

கிருஷ்:- அதைப்பற்றி நான் கேட்க எனக்கு ஸந்தர்ப்பப்படவில்லை.

கோகி:—ஆமா! பிறகு உங்கள் விவாகத்தைப்பற்றி நீங்கள் என்ன கூறினீர்களோ?

கிருஷ்:—கூறுகிறதென்ன? ஒப்புக்கொண்டேன்.

கோகி:—ஆனால் மதனி வந்தபின் என்னையெல்லாம் மறந்துவிடுவீர்கள்.

கிருஷ்:—கோகிலம்! நானும் என்ன "ஓல்டு ஸ்கூலை"ச் சேர்ந்த பேர்வழி என்று எண்ணினாயோ? பேஷ்! "ஐ அஷ்ஷியூர் யூ, ஐ வில் நெவர் டூ இட்".

கோகி:—அண்ணா! அவர்களை நாம் நேரில்—பார்த்து—பிறகு—

கிருஷ்:—கோகிலம்! இதற்கென்ன இவ்வளவு யோசனை! அவர்களது உருவப்படங்களைத் தருவிக்கச் சொல்லியிருக்கிறேன். பிறகு பார்த்துக்கொள்ளுவோம். அது போகட்டும்! ஏதோ ஒரு கடிதத்தை வெகு கவலையுடன் படித்தாய். நான் வந்ததும் அதை நிறுத்திவிட்டனையே? அது எனக்குத் தெரியக்கூடியது தானோ?

கோகி:—ஆமாம்! அது அவ்வளவு ரகஸியமானது ஒன்றுமில்லை. நாம் வாசித்துக்கொண்டிருந்தபோது "புஷ்பாமணி" என்ற ஒரு பெண் அடிக்கடி என்னைப் பார்க்கவருவாளே; ஞாபகமிருக்கிறதோ?

கிருஷ்:—ஆம்! அவள் தந்தைகூடப் பாடலீபுரத்தில் ஓர் பெரிய மாட்டு வியாபாரியென்றும் கூறியிருக்கிறாய். அவளுக்கென்ன?

கோகி:—அவளை மணஞ் செய்து கொடுத்திருக்கிறார்களாம். தன் புருஷன் வீட்டில், படிப்பும் பெருமையும் அற்று, அவள் தயிர்க்கூடை தூக்கும்படி ஏற்பட்டிருக்கிறதாம். அதைப்பற்றி வருந்தி எழுதி இருக்கிறாள்.

கிருஷ்:—என் கோகிலம்! உனக்கு ஒரு வேளை (முகத்தைச் சுழித்து) அவ்விதம் நேர்ந்தால்?—

கோகி:—அதுவும் நமது விதிவசமென்றே இருக்கவேண்டியது தான். ஆனால் நமது சாமர்த்தியத்தால் அத்தகைய புருஷனைச் சீர்திருத்த வேண்டும். அவ்வளவுதான். ஆனால் வியாபாரம் செய்வது தவறுதலென, நமக்குப் பாரம்பரையான விருத்தியைக் கை நழுவ விடவேண்டும் என்று சொல்லவில்லை நான். அது ஒரு பெரிய அறியாத்தனமாகும். ஆயினும் அதைக் கௌரவமாய் நடத்தும் வழியைத் தேடவேண்டும். பொதுவில் நமது புஷ்பாமணியைப்போல, ஸ்திரீகளுக்குப் படிப்பு அமைவதுடன் புத்திசாலித்தனமும் ஏற்பட்டுவிட்டால் ஒரு குடித்தனத்தை எவ்வளவோ சிறப்பிக்கலாமே. அது தெரியாவிடில் அக்குற்றம் அந்த ஸ்திரீயைத்தான் சேர்ந்ததாகும்.

கிருஷ்:—ஆனால் இவளுக்கு இப்போது என்ன பதில் எழுதப் போகிறாய்?

கோகி:—அவளுக்கு வேண்டிய ஹிதோபதேசங்களை எழுதி எப்படியாவது அவள் கணவனையும் சீர்திருத்தும்படி எழுதப்போகிறேன்.

கிருஷ்:—கோகிலம்! மெச்சினேன் உன் புத்திக்கு. என்னைப் போன்ற ஆடவர்களுக்கு அத்தகைய தீர்மானங்கள் ஏற்படுவது ஒரு ஆச்சரியமல்ல. உன் போன்ற சிறுமிகளுக்கு இத்தகைய எண்ணங்கள் உதிப்பதுதான் விசேஷம். ஆனால் உன் இஷ்டப்படியே அவளுக்குப் பதில் எழுதிவிட்டுச் சீக்கிரம் வா! நான் உள்ளே போகிறேன். (புறப்படுகிறான்)

கோகி:—அண்ணா! அது படங்கள் விஷயம்—

கிருஷ்:—ஓ! ஞாபகமிருக்கிறது! நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

கோகி:—[மேஜையின் அருகே உட்கார்ந்து ஒரு கடிதம் எழுதி ஒரு கவருக்குள் வைத்து ஒட்டி எடுத்துக் கொண்டு பரபரப்புடன் உள்ளே போகிறாள்.]

(தொடரும்)



## மித்திரன் மதிப்புரை.

திருசிரபுரம் நேஷனல் கல்லூரி, தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
**திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்**
எழுதியது.

அன்புமிக்க ஐயா!

தங்களால் வெளியிடப்பெறும், 'யாதவ மித்திரன்' என்னும் மாதப் பத்திரிகையின் தொகுதி 1-ல் பகுதி 2-ம் 6-ம் வரப்பெற்றுப் படித்து மகிழ்ந்தேன். உடல் நோய் முதலிய தொல்லைகளால் தங்கட்கு முன்பே கடிதம் எழுதாதிருந்துவிட்டேன். நல்லறிஞர் பல்லோரால் ஆராய்ச்சியுடன் எழுதப்படும் சிறந்த கட்டுரைகள் பலவற்றுடன், மகளிரும், சிறுவர் சிறுமியரும் படித்தற்குரிய இனிய கதைகளுந் தாங்கி, எழிலுருவும் பொருள் வளனு முடையனாய் 'யாதவ மித்திரன்' திகழ்கின்றனன். இவனது சார்பாற் பயனெய்துதற் குரியார் யாதவகுல மக்கள் மட்டுமன்றித் தமிழ் மக்கள் அனைவருமே யாவர் என்பது துணிபு. கடவுளருளால் இச்செல்வமகன் பல்லூழி வாழ்வானாக.

## வள்ளல் பாரி.

(177-ம் பக்கத் தொடர்ச்சி.)

அருந்தமிழ் மொழியை ஆதரித்த பழந்தமிழரசனாகிய பறம்புக் கோமான் உலகமெல்லாம் விலைமதிக்கக்கூடிய "மாணிக்கம்" போன்றவன். "கோஹினூர் அல்லது ஜோதிமலை"யை நிகர்த்துப் பிரகாசித்துக்கொண்டிருப்பவன். அடுத்தோரைக் காக்கும் அமிர்தவசனன். செந்தாமரைக்கண்ணன், மலைகளெனத் திரண்ட தோள்களையுடையவன். வனச மலரையொத்து முழங்கால்வரை நீண்டு வளர்ந்து வரையாது கொடுக்குங் கைகளையுடையவன். அருள்சேர் மனத்தான். தலை, இடை, கடை என்னும் வள்ளல்கள் மூவேழ்வரில் ஒருவனாகிக் கடையெழு வள்ளல்களில் முதன்மை பெற்றவன். நட்டார்க்கும் நள்ளாதவர்க்கும் மட்டற்ற பொன்னை வாரி, வாரி வழங்குபவன். வறுமை நோயால் வாடும் உயிர்களைக்கண்ட இவ்வள்ளலது உள்ளம்

அனலருகே போந்த மெழுகுபோல இளகி நெகிழும். அரும்பசியால் வருந்திவந்தவர் கற்றோராயினும் கல்லாராயினும் எக்குடிப் பிறப்பின் யாவரேயாயினும் அவ்வறியார்க்குப் போதும் போதுமென இரப்போர் புகல வாரி வழங்கும் வண்மை, பாரி இடம் அமைந்திருந்தது. இவ்வாறு பிறர் துயரங்கண்டு கரையும் பாரியின் கருணை மக்களினும் இழிய மற்றைய உயிர்களிடத்தும் மாண்புறச் சென்று நிலவிற்று. பாரி மன்னன் எத்தன்மையானெனின்:—

"நிழலில் நீள் இடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோன்" [புறம் 119]

இவன் இரவலர்க்கு மட்டுமன்றி இயற்கைப் பொருள் கட்கும் ஈந்த தியாகி என்பதற்குப் பின் வரும் அடிகள் சான்றாகும்:—

... ... ... ... சுரும்புண
"நறுவீயுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" [சிறுபாண 87, 89]

என்ற பா வலியுறுத்தும்:—

இமயமுதல் குமரிவரை இவன் புகழ் பரவி இருந்ததற்கு, இந்துஸ்தானத்தில் இன்றும் வழங்கும் பழமொழியாகிய 'பாரிசமஸ்தானம், பாரிகுடும்பம், பாரிமாண் மக்கள்" என்று பாரியைப் புகழ்ந்துரைக்கும் பாரத நாட்டுப் பழமொழியே பாரியின் பெருமைக்கு என்றும் அழியாத சாட்சியாகும். இவன் ஆட்சிக்குட்பட்ட ஜனங்கட்கும், மற்றையோர்க்கும், தந்தை போன்றவன். அன்னையினும் தயையுடையவன், அழகிற் சிறந்தோன், அஞ்சாத நெஞ்சன், வீரப்பிரதாபன், இவன் இன்மொழி பகரும் நன் மதிப்புடையான், எங்கும் பரவிய கீர்த்தியுள்ளான். "பாரி பறித்த பறியும்" என்று பழந்தமிழ்க் கிழவியாகிய "ஔவைப் பிராட்டியாலும்" "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரில்லை" என்று திருப்புகலூர் தேவாரத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகளாலும் தன்னை ஆதரித்த எட்டையபுரம் மன்னனைப் பற்றிப் புகழ்ந்துரைக்கும் தேசிய தமிழ்க் கவி "ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார்" அவர்களால். "பாரி வாழ்ந்திருந்த நாட்டுப் பழம்பதி நாட்டின் கண்ணே" என்றும் "பாரி வள்ளலைப் பற்றிப் புகழ்ந்துள்ள நயம் பாராட்டத்தக்கதாகும்.

(தொடரும்) **காந்திதாசன், பர்மா.**

296 H

## யாதவமித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

296
B

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

## வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாராய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவ மித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.


யாதவமித்திரன் நம்மவர்வாழும் ஒவ்வொருகிராமங்களிலும் உலாவ வேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவ மித்திரன் மாதா மாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறுமாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதியனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
யாதவ மித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்.
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.


Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura.



# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | பிரமோதூத வை-ஆனி மீ | பகுதி |
|---|---|---|
| 1 | 1930. மே-ஜூன் மீ | 10-11 |



பொருள் அடக்கம்.


சென்னை மாகாண 5-வது யாதவ மகாநாடு, 1-வது யாதவ வாலிப மகாநாடு இவைகளில் நடந்த நிகழ்ச்சிகளும், தீர்மானங்களும் 297-315
கோகில கிருஷ்ணன் 316
வள்ளல் பாரி 350
அபிராமம் யாதவ வாலிபர் சங்கம்
சென்னை யாதவ வாலிபர் சங்கம் 351
ஆனய நாயனர் 353
சென்னை யதுகுல சங்கத்தின் தீர்மானங்கள் 356
357
ஊர் நற்செய்தி 359
செய்தித் திரட்டு


20 AUG 1930



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

296

297
2964

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ.. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்
7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறுப்பள்ளி.



## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தாஷ [illegible] முழு விலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---


யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.




இராமநாதபுரத்தில் 1930௵ மேமீ 24, 25உ களில் நடந்த
சென்னை மாகாண 5-வது யாதவ மகாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒரு சிலர் இப்படத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

# யாதவமித்திரன்

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 1 | பிரமோதூதஸ்ரீ வைகாசிமீ 1930-௵ மே-மீ | பகுதி 10 |
|---|---|---|

### கடவுள் வணக்கம்.

தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்
 தண்ணுமை எக்கம்மத் தளிதாழ்பீலி
குழல்களும் கீதமுமாகி எங்கும்
 கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலோ வருகின்றதென்று சொல்லி
 மங்கைமார் சாலக வாசல்பற்றி
நுழைவனர் நிற்பனராகி எங்கும்
 உள்ளம் விட்டு ஊண்மறந் தொழிந்தனரே.

## சென்னைமாகாண 5வது யாதவமகாநாடு.

இம்மகாநாடு 1930௵ மேமீ 24, 25உ களில் இராமநாதபுரத்தில் பாரதகான தியேட்டரில் செங்கோட்டை ஸ்ரீமான் S. முத்துசாமிக் கரையாளர் அவர்கள் தலைமையில் மிக்க விமரிசையுடன் நடைபெற்றது. இதற்கு முன் நடந்த மகாநாடுகளைக் காட்டிலும் ஒரு மடங்கு அதிகமாகச் சுமார் 5000 பிரதிநிதிகள் விஜயஞ் செய்திருந்தார்கள். தலைவர்களுக்குக் குதூகலமான வரவேற்பு நடந்தது. 24உ மகாநாட்டு நிகழ்ச்சி முடிந்தபின் தலைவரவர்களுக்கு இரவு

8 மணிக்குப் பாரதகான தியேட்டரிலிருந்து முசாபரிபங்களா வரை பெருந்திரளான கூட்டத்தோடு விசேஷமான ஊர்வலம் நடைபெற்றது. மகாநாட்டில் அறிஞர்களால் குல முன்னேற்றங்கருதிய சிறந்த உபந்நியாசங்கள் நடைபெற்றன. குல முன்னேற்றத்திற்கு இன்றியமையாத தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இவ்வருடம் இம் மகாநாட்டை யொட்டி யாதவ இளைஞர் மகாநாடு நடந்தது ஒரு விசேட சம்பவமாகும். இதற்குத் தலைமை வகித்தவர் மதுரை ஸ்ரீமான். S. பிச்சைமுத்துக் கோனாரவர்கள் இவ்விளைஞர் மகாநாட்டில் தீவிரமுயற்சியைக் காட்டும் தீர்மானங்கள் பல நிறைவேறின. 6வது மகாநாட்டைச் செங்கோட்டையில் நடத்துவதாக ஒப்புக்கொண்டு தலைவரவர்கள் அழைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

---

1930-ஞு மேமீ 24, 25உகளில் இராமநாதபுரத்தில்
செங்கோட்டை, மக-ா-ா-ஸ்ரீ
**எஸ். முத்துச்சாமிக்கரையாளரவர்கள்**
தலைமையில் நிகழ்ந்த சென்னைமாகாண

## ஐந்தாவது யாதவ மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

---

1. மாட்சிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தியினிடத்துத் தனக்குள்ள பக்தியையும், விசுவாசத்தையும் இந்த மகாநாடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

தலைவர்களால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோரும் நின்று வணக்கத்துடன் நிறைவேற்றப்பட்டது.

2. மதராஸ் ஸ்ரீ யதுகுல மகாசங்க வைஸ்பிரஸிடெண்டுகளில் ஒருவரான பி. முத்துச்சாமிபிள்ளை அவர்கள், முதலாவது மாகாண யாதவ மகாநாட்டுத் தலைவர் பங்களூர் டாக்டர் V. அப்பாயி நாயுடு (யாதவர்) அவர்கள், இந்த மகாநாட்டை ராமநாதபுரத்துக்கு அழைத்தவர்களுள் ஒருவராகிய முதுகுளத்தூர் வேலாயுதக்கோனார் ஆகிய யாதவ சமூகப்பிரமுகர்கள் திடீரென இறந்தமையால் உண்டான துயரத்தையும், நஷ்டத்தையும் இந்த மகாநாடு மிகுந்த துக்கத்தோடு பதிந்துகொள்ளுகிறது.



இது தலைவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, எல்லோரும் எழுந்து நின்று நிறைவேற்றப்பட்டது.

3. வெகுகாலமாக அவசியமெனக் கருதப்பட்ட யாதவமித்திரன் என்னும் பத்திரிகையை வெளியிட்டதற்காக மதுரை ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்களுக்கு இந்த மகாநாடு வந்தனம் செலுத்துவதோடு, ஒவ்வொரு யாதவரையும் அதற்குச் சந்தாதாராய்ச் சேரும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

4. உயர்தரக் கல்வி படிக்கும் யாதவ மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுப்பதற்காக மதராஸ் ஸ்ரீ யதுகுல மகா சங்கத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 500 உதவிவரும் ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களுக்கு இந்த மகாநாடு தன்னுடைய வந்தனத்தைச் செலுத்தி, யாதவர்களிடையே கல்வியை அபிவிருத்தி செய்வதற்கும், பரப்புவதற்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப்போகும் ஸ்பெஷல்நிதிக்குத் தாராளமாக நன்கொடையளிக்கும்படி யாதவ சமூகத்தினர் அனைவரையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

5. யாதவ சமூகத்திற்கு எல்லாப் பொது ஸ்தாபனங்களிலும் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்னும் கோரிக்கையை இந்த மகாநாடு, வற்புறுத்துவதோடு, இங்கும், சுதேச சமஸ்தானங்களிலும் நீதியிலாகா உத்தியோகங்களுக்குப் பூர்ண தகுதியுடைய யாதவ சமூகத்தவரின் பாத்தியதைகளைப் புறக்கணிப்பதன் மூலம் கவர்ன்மெண்டார் காட்டும் கவலையீனத்தைக் குறித்து விசேஷமாக வருந்துகிறது.

மதராஸ் மகா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். வேணுநாதன் அவர்கள் F. C. I. M. R. A. S. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

திருநெல்வேலி முனிஸிபல் கவுன்சிலர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். அருணாசலக்கோனார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

6. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவவிஷயமாய் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை இந்த மகாநாடு முழுமனதோடு ஒப்புக்கொண்டு, ஜனத் தொகைக்குத் தகுந்தபடி யாதவர்களுக்கு இதுவரை உதவி செய்யாததற்காக ஷை கட்சியின் தலைவர்களை வன்மையாகக் கண்டிப்பதோடல்லாமல், இவ்விஷயத்தில் இன்னும் அபிவிருத்தி யேற்படாவிட்டால் ஷை கட்சி, யாதவர்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறது.

இது திருவெள்ளூர் தாலூகா போர்டு வைஸ் பிரஸிடெண்டு மதராஸ் மகா-ா-ா-ஸ்ரீ எம். அப்பாத்துரைப்பிள்ளை யவர்களால் பிரேரேபிக்கப்பட்டுமதுரை முனிஸிபல் கவுன்சில் வைஸ் சேர்மனும், மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் கோவில் கமிட்டி பிரசிடெண்டுமான மகா-ா-ா-ஸ்ரீ S. பிச்சைமுத்துக்கோனாரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

மதராஸ், மகா-ா-ா-ஸ்ரீ T. S. வேணுநாதன் F. C. I., M. R. A. S., அவர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

7. மதராஸ், பப்ளிக் சர்விஸ் கமிஷனை இந்த மகாநாடு வரவேற்பதோடு எல்லா உத்தியோகங்களுக்கும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாகக் கவர்ன்மெண்டார் உத்தரவில் சொல்லப்பட்டிருக்கிற பிராமணரல்லாதாரில் யாதவ சமூகத்தாருக்கு அவர்களுக்கு உரிய சலுகை காட்டும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

திருநெல்வேலி, அட்வோகேட் மகா-ா-ா-ஸ்ரீ S. ராமசாமிக் கோனார் பி. ஏ. பி. எல்., அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

செங்கோட்டை, மகா-ா-ா-ஸ்ரீ சட்டநாதக்கரையாளர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

திருநெல்வேலி முனிஸிபல் கவுன்சிலர் S. அருணாசலக்கோனாரவர்களாலும் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

8. (a) போதுமான மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்றும், தற்சமயம் இருந்துவரும் தடைகளை நீக்கி, தனிப்பட்ட நபர்களுக்கு மேய்ச்சல் நிலங்களைச் சாரிசெய்வதை நிறுத்த வேண்டுமென்றும், இந்த மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(b) நாட்டுப் பஞ்சாயத்துகளில் யாதவ சமூகத்தாருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும், இந்த மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.



(c) ஆடு மாடு மேய்ச்சலுக்குப் பெரிதும் விரோதமாயிருப்பதால், ஏரி உள்வாய்களிலுள்ள கருவேல மரங்களைக் கவர்ன்மெண்டு உத்திரவுக்கு விரோதமாகக் குத்தகைக்கு விடுவதை வன்மையாக ஆட்சேபிப்பதோடு, அப்பேர்ப்பட்ட முறையை ஒழிக்கும்படி இந்த மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

மதராஸ் L. M. F. ஸ்கூல் பிரதம தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ எம். வி. வேணுகோபால பிள்ளையவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ S. ராமசாமிதாஸ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. அபிராமம் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். முத்துக் கோனார் B. A. அவர்களால் ஆதரிக்கப்பட்டு. ஏகமனதாக நிறைவேறியது.

9. (a) இனி எவ்வித தாமதமுமில்லாமல் ஜில்லா சங்கங்கள் ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொள்வதாக இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

(b) இந்தச் சங்கங்கள் தங்களுடைய வருஷ வரும்படியில் நூற்றுக்கு 5 வீதம் மதராஸிலுள்ள தலைச் சங்கத்துக்குச் சந்தாவாகச் செலுத்தி அதோடு இணைக்கப்படவேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

(c) தலைமைச் சங்கத்தில், இணைக்கப்பட்ட சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட டைரெக்டர்களில் ஒருவர் இருக்கவேண்டும்.

விருதுநகர், காப்டன் C. கிருஷ்ணசாமி பிள்ளை L. M. S. (யாதவர்) அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

துரைசாமிபுரம் மிட்டாதார் மகா-ா-ா-ஸ்ரீ டி. டி. ராமசாமிக் கோனார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை (King's Police Medalist) ரிட்டையர்டு சப்இன்ஸ்பெக்டர் M. சங்கரலிங்கக் கோனார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

(10) உயர்தரப்படிப்புக்காக அந்நிய நாடுகள் செல்லும் யாதவ மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுக்கும்படி இந்த மகாநாடு கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்:—மதுரை முனிசிபல்கவுன்சிலரும், தாலூகாபோர்டு மெம்பருமான மகா-ா-ா-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கள்.

ஆமோதித்தவர்:—அபிராமம் K. கோபாலகிருஷ்ணக்கோனுர் B. Sc, (Hons,) M. R. A. S அவர்கள்

ஆதரித்தவர்:—திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ T. T. சுப்பரமணியன் அவர்கள்.

நிறைவேறியது.

11. ஐக்கியமுறையில் பாங்குகள் ஆரம்பிக்கும்படி யாதவர்களை இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்:—பாளையங்கோட்டை ரிடையர்டு சப்இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ M. சங்கரலிங்கக்கோனுர் அவர்கள்.

ஆமோதித்தவர்:—மகா-ள-ள-ஸ்ரீ செங்கோட்டை L. சட்டநாதக் கரையாளர் அவர்கள்.

ஆதரித்தவர்:—திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ N. பெருமாள் கோனுர் அவர்கள்.

நிறைவேறியது.

12. ஒவ்வொரு யாதவரும் தன்னுடைய குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியையாவது கட்டாயம் கொடுக்கவேண்டு மென்றும், முனிஸிபாலிட்டிகளும் ஸ்தலபோர்டுகளும் கட்டாய ஆரம்பக் கல்வி கொடுக்கவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்:—உத்தமபாளையம் சப்ரிஜிஸ்தரார் மகா-ள-ள-ஸ்ரீ R. பொன்னையாக்கோனுரவர்கள்.

ஆமோதித்தவர்:—நாகபட்டணம் மகா-ள-ள-ஸ்ரீ S. E. குப்புசாமி அவர்கள்.

ஆதரித்தவர்கள்:—ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ எம். பெருமாள் பிள்ளை அவர்கள். செங்கோட்டை மகா-ள-ள-ஸ்ரீ A. ராமசுப்பிரமணியக்கரையாளர் அவர்கள்.

நிறைவேறியது.

13. (a) கவர்ன்மெண்ட் பட்டாக்களிலும், 10 கிர். கிராமக் கணக்குகளிலும், மற்ற பொது ரிக்கார்டுகளிலும் யாதவர்கள் பெயர்களுக்கு முன்னுல் 'இடை' என்று எழுதுவதை இந்த மகாநாடு



ஆட்சேபித்து, அந்த வார்த்தையை எடுத்துவிடும்படி உத்தரவு பிறப்பிக்க இந்தமகாநாடுகவர்ன்மெண்டைக்கேட்டுக்கொள்ளுகிறது.

(b) யாதவ என்னும் வார்த்தையில் இடையர், கொல்லர் கோபர், கௌடர் என்பவை அடங்கியிருக்கின்றனவென்று இந்த மகாநாடு கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, படிப்பில் பிற்போக்கடைந்திருக்கும் சமூகங்களை இன்ன இன்னவை என்று சொல்லுகிற கவர்மெண்ட் ஆர்டரில் அவசியமான திருத்தங்கள் செய்யவேண்டு மென்றும், வருகிற ஜன கணிதத்திற்குப் பொதுப் பெயராக யாதவர் என்பதை உபயோகிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

பிரேரேபித்தவர்:—கோயம்புத்தூர் பிரிப்பரேட்டரி இங்கிலீஷ் ஸ்கூல் ஹெட்மாஸ்டரும், மானேஜருமான மகா-ள-ள-ஸ்ரீ K. ராமகிருஷ்ணக்கோனுர் அவர்கள்.

ஆமோதித்தவர்:—நாகர்கோவில் வீரனி மகா-ள-ள-ஸ்ரீ S. சொக்கலிங்கக் கோனுர் அவர்கள்.

ஆதரித்தவர்:—செங்கோட்டை மகா-ள-ள-ஸ்ரீ எம். சுப்பிரமணியக் கரையாளர் அவர்கள்.

நிறைவேறியது.

(14) யாதவசமூக வெவ்வேறு உள் வகுப்புக்களுக்குக் கலப்பு விவாகத்தை இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

பிரேரேபித்தவர்:—விருதுநகர் அசிஸ்டெண்டு சர்ஜன் Captain C. கிருஷ்ணசாமி பிள்ளை L. M. S. அவர்கள்.

ஆமோதித்தவர்:—மதுரை முனிசிபல் கவுன்சிலர் இ. மா. கோபால கிருஷ்ணக்கோனுர் அவர்கள்.

ஆதரித்தவர்:—அபிராமம் மகா-ள-ள-ஸ்ரீ S. முத்துக்கோனுர் B. A., அவர்கள்.

நிறைவேறியது.

(15) சுமார் 200 வருஷங்களுக்குமுன் உடையார்க் கோனுர் என்னும் யாதவப் பெரியாரால் இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டிருக்கும் நந்தகோபால சத்திரத்தையும் ஷை. உடையார்க்கோனுரால் ஷை சத்திரத்துக்குத் தானம் செய்யப்பட்ட குமரியேந்தல் வகை

யறு கிராமச் சொத்துக்களையும் அபிராமத்திலிருக்கும் இராமநாத புரம் ஜில்லா கோனைசிய யாதவகுல தர்மபரிபாலன சபையாரிடம் ஒப்புவிக்கும்படி இந்தமகாநாடு கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள் கிறது.

பிரேரேபித்தவர்:—அபிராமம் மகா-ா-ா-ஸ்ரீ V. ஆயர்பாடிக்கோனர் அவர்கள்.

ஆமோதித்தவர்:—மேமங்கலம் மகா-ா-ா-ஸ்ரீ கு. முத்துக்கோனர் அவர்கள்.

நிறைவேறியது.

---

## ஒரு விசேஷ பொதுக்கூட்டம்.

---

நாளது ஜூலை மீ 18உ (ஆடி மீ 3உ) இராமநாதபுரம் கோனை சிய யாதவகுல தர்ம பரிபாலன சபையின் சார்பாக மதுரை தல்லா குளம் பெருமாள் கோவிலுக்கு எதிரிலுள்ள மண்டபத்தில் ஒரு விசேஷக் கூட்டம் கூடிற்று. இதற்கு மதுரை திருவாளர் வைஸ் சேர்மன் P. பிச்சைமுத்துக் கோனாரவர்கள் தலைமை வகித்தார்கள். இராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து ஆட்டுக் கிடைகள் கொண்டுவந்தி ருக்கிற யாதவர்கள் சுமார் 300 பேர் வந்திருந்தார்கள். கிடைகள் கொண்டுவரும் இடங்களுக்குப் பெண்பால்களை இனி மேல் கூட்டிக் கொண்டு வருகிறதில்லை யென்று கூட்டத்திற்கு வந்து யாவரும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது குலத்தின் நாகரிக அபிவிர்த்திக்குரிய காரியமாகும்.

---

## 1930-ளு மே மீ 24, 25உகளில் இராமநாதபுரத்தில் கூடிய சென்னைமாகாண 5-வது யாதவர் மகாநாட்டின் தலைவர், செங்கோட்டை மிட்டாதார் மகா-ா-ா-ஸ்ரீ N. K. S. முத்துசாமிக் கரையாளரவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

---

கனவான்களே !

இத்தருணத்தில் தலைமை வகிக்கும் அரிய பெரிய பதவியை எனக்களித்ததற்காக எனது வந்தனத்தைச் செலுத்திக் கொள்வ துடன் உங்களது மனப்பூர்வமான ஒற்றுமைப்பால் இம்மகாநாடு அமைதியாய் நடைபெற்று அநுகூலமாய் முடிவுபெறுமென்றும் நம்புகிறேன்.

நமது ஸமூகமானது மிகப் பழமையானவற்றுள் ஒன்றென்பது மறுக்கப்படாத உண்மையே. அதன் சரித்திரமானது தமது நுட்ப மான சோதனையில் மிக்க பழமையானவற்றை ஆராய்வோரையும் சரித்திர ஆசிரியரையும் ஒன்றுபோல் கலங்கச்செய்யும் 'புராதன' மென்னும் வெள்ளிய மூடுபனிக்குள் புதைந்து கிடக்கின்றது. சரித் திரத்திற்கு முந்திய காலங்களில் உலகமெங்கும் அதனது மிளிரும் ஒளியைப் பரப்பியிருந்தது. ஜனஸமூகத்திலுள்ள சகலரையும் அது இனிமையும் மனதைக் கவருந்தன்மையதுமான இயற்கையாலும், விருந்தோம்பல், முதலிய செயற்கையாலும் வசப்படுத்திவிட்டது. உலகத்தில் தற்காலம் முன்னேற்றம் அடைந்திருக்கும் தேச ஜனங் களின் ஸமூகமாகிய கப்பலில் மூட பக்தியென்னும் நங்கூரமானது மிகப் பளுவாய்த் தொங்கிக்கொண்டும், இங்கிலாந்தானது காட்டா ளர் தன்மையினின்றும் வெளியேறாமலும், 'கொலம்பஸ்' என்பவ ரால் 'அமெரிக்கா' கண்டுபிடிக்கப்படாமலும் இருந்த உலக நாகரிகத் தின் விடியற்காலத்தில், இமயமலை முதல் கன்யா குமரி வரையும் நாம் மகிமைமிக்க பதவி யடைந்திருந்தோம். நமது ஸமூகமானது தரும சிந்தனையுள்ள அரசர்களுக்கும், திறமைமிக்க அமைச்சர்களுக் கும், ஊக்க மிகுந்த படைவீரருக்கும், தளகர்த்தருக்கும் இருப்பிடமா யிருந்தது. இவ்வாறாக நமது ஸமூகமானது பெருமை நிரம்பிய பதி ரார்ஜிதமுடைய தென்பது உறுதியே! ஆயினும் சென்றகாலச் சிறப்

புகள் சென்றவைகளேயாம்! இத்தருவாயில் நாம் எங்கிருக்கின்றோம்?
எதை முன்னிட்டுச் செல்லுகின்றோம்? துரைத்தனத்தாராலாவது
அல்லது மற்றவர்களாலாவது 'நாம் இருக்கிறோம்' என்பதை உணரச்
செய்ய இயலாதவர்களாயிருக்கின்றோம்.

நாம் பரிதாபகரமான நிலைமையிலிருப்பதால் வழியேபோகிற
ஒவ்வொருவரும் நம்மை நிந்தையாய்ச் சுட்டிக் காட்டுவது அதிசய
மல்லவே? ஆனால் சின்னாட்குமுன் சென்னை "யதுகுல ஸங்கத்தாரின்
ஸத்துவமிக்க சுறுசுறுப்பான உழைப்புகளால் நம்மவரில் சிலர் எழுப்
பப் பெற்று, ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் எய்தியிருந்த இந்த
ஸமூகத்தின் முன்னேற்றத்திற்கும், உயர் பதவிக்குமாக யாதவர்களை
ஒன்று சேர்க்கவும், அவர்களுடைய கவனத்தை ஒருமுகப்படுத்தவும்
சென்ற ஐந்து வருடங்களாக உழைத்து வருகின்றோம். நம்மவரில்
மிக்க சிறப்புடைய சிலர் அவர்களுடைய மூளைகளைக் கேல்லி எத்
தனையோ இரவுகள் உறக்கமேயின்றி எல்லா நோய்களையும் ஒழிப்ப
தற்குரிய மருந்து, இவ்விடத்தாயினும் மற்றெவ்விடத்தாயினும்,
"கல்வி"யே என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். நமது ஸமூகமானது
கல்வியில் மிகவும் பின்னடைந்திருக்கிறதென்பது மறுத்துப் பேசக்
கூடியதன்று. கல்வியின் பூர்ணமான கௌரவத்தை நம்மவரில் பெரும்
பான்மையோரும் உள்ளபடியே உணர்ந்திருக்க மாட்டார்களென்று,
நான், வெளிப்படையாய்ச் சொல்லும்போது என்னைக் குற்றப்படுத்த
மாட்டீர்களென்று நம்புகிறேன். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல்
தன் மகனையோ மகளையோ அறியாமைக் குட்படுத்தி வைக்கும் ஒவ்
வொருவரும், தனக்கும், தன் சொந்த மகனுக்கும், தனது குலத்திற்
கும், பொது ஜன ஸமூகத்திற்கும்-இவைமாத்திரமல்ல-கடவுளுக்கும்
நேர் விரோதமான, பாவத்தைச் செய்தவரே யாவார்! குழந்தை
களுக்குக் கல்வி கற்பிக்காமலிருப்பதற்கு ஒரு பொதுவான நியாயம்
போல் தோன்றுகிற வாதம் என்னவென்றால், உத்தியோகம் கிடைப்
பது அநேகருக்குச் சிரமமாயும் சிலர்க்கு அஸாத்தியமாயுமிருக்கிறது
என்பதேயாம். பெற்றோர் தங்களுடைய பார்வைக் குறியையும்
மனப் போக்கையும் ஒருவாறு மாற்றிக் கொள்ளும்படியாகக் கேட்
டுக் கொள்கிறேன். கல்விப் பயிற்சியின் முக்கியமான நோக்கம்
குழந்தைகளின் மனோசக்தியை அபிவிருத்தி செய்து அவர்களை மதிப்
பவர்களாகவும் உலக முன்னேற்றத்தைத் தழுவி நடப்பவராகவும்
செய்வதேயாம். உத்யோகங்கள் கிடைக்குமாயின் மிக்க நலம், அத



னால் குழந்தைகள் இருமடங்கு அனுக்கிரகம் பெற்றவராக, அவரு
டைய தாய் தந்தையர் தமது அதிர்ஷ்டத்தைக் கொண்டாடலாம்.
உத்யோகம் கிடையாவிட்டாலும், அவர்கள் ஜன ஸமூகத்துக்கு
ஆஸ்பதமாவார்களென்பது கருதத் தக்கதே. தற்காலத்திய உயர்
தரக் கல்வி காரணமாக முதுகெலும்பற்ற இறகு ஒட்டிகளும், அதா
வது குமாஸ்தாக்களும், தேவையும் நிறைவுறாத, திருப்தியற்ற உபாத்
தியாயர்களும், கக்ஷிக்காரர் கிடையாத நியாயவாதிகளுமே வருஷத்
திற்கு இரு முறை வெளி வருகிறார்களென்பது மெய்யேயெனினும்
ஆரம்பக்கல்வியும் நல்காதிருப்பதற்கு என்ன காரணம் சொல்ல முடி
யும்? ஆரம்பக் கல்வியும் அளிக்க இயலாதபடி பெற்றோர்கள் அவ்
வளவு எளியவராயிருக்கிறார்கள் என்பதை நான் நம்பமுடியாது. இப்
பேர்ப்பட்ட உண்மையான தகுதியுடைய ஏழைப் பிள்ளைகளுக்கு
அவ்வத்தலங்களிலுள்ள யாதவ ஸங்கங்கள் உதவி செய்வதற்காகத்
தடையற்ற வண்மையுடன் முன்வர வேண்டும். மேலும், தங்கள்
பிள்ளைகளுக்கு உயர்தரப் படிப்பை நல்கக் கூடியவர், அதைப் பெறு
வதற்குரிய செலவுகள் செய்யப்பின் வாங்கவே கூடாது. இந்தக்கல்வி
முறையில் எத்தனை குற்றங்களிருப்பினும் கல்வி கற்ற ஒருவன், கல்
லாதவனை விடத் தான் தெரிந்தெடுக்கும் எந்தவிதமான தொழிலி
லும் மிகவும் மேலாகவே விளங்குவான் என்பது திட்டம்.

நாகரிகத்தின் வரன்முறையில் இனிப் பெண்பாலர்களிடத்தில்
தான் அதிகாரத்தின் நடு நிலயம் ஏற்படும். ஏற்கனவே பிரயோஜன
கரமான விஷயங்களிலேயே அவர்கள் தங்கள் அதிகாரத்தை உப
யோகப் படுத்தி வந்தார்கள். இப்பொழுது தேச ஜனங்களின் ஆண்
மையைப் பாழ்ப்படுத்தும் போரின்பயனுக்கு ... வரின் கல்வியானது
மேல் நாட்டில் மேன்மேலும் பெண்பாலின் கைய ... யிருந்து
வருகின்றது. இல்வாழ்க்கை, இல்லற இன்பம், இவற்றின் அடிப்படை
யான தத்துவங்களைச் சிறுவரின் மனதில் புகுத்துவதற்குப் பெண்டி
ரே தகுதியுடையவராயிருக்கின்றனர். ஆனால் பெண்கள் படிக்கக்
கூடாதென்று நம்மவரிற் சிலருடைய மனதில் ஒரு பொதுவான
கருத்து ஆழமாய் வேரூன்றியிருப்பது உண்மைக்கும் பொதுவான
அறிவுக்கும் நேர்விரோதமேயாகும். பெண்களுக்கு உயர்தர கல்வியா
னது இல்லற இன்பத்தை உள்ளபடியே உணர்வதற்குப் பெருந்
தடையாயிருக்கிறதென்று நினைக்கும் கொள்கையுடையவர்களில்
நானும் ஒருவனயினும் தேசிய விஷயங்களும் ஸமூக விஷயங்களும்

சூழ்ச்சியுற்றிருக்கும் இந்நாளில் நாமும் இருக்கவேண்டி யிருப்பதால்
இந்த மாறுதலுக்கிடமான நிலைமைக்குத் தக்கபடி நாமும் நம்மை
விரைந்து இணைத்துக் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. ஸமூக
முன்னேற்றத்திற்கு எல்லை யேற்படுத்த ஒருவருக்கும் உரிமையில்லை
என்பதை நான் அறிந்திருந்தபோதிலும் ஒரு கல்வி முறையானது
தேசீய ஒழுக்கத்தை இடர்படுத்துமானால் "இம்மட்டே! அப்பால்
இல்லை" என்றே நான் கதறுவேன்! ஏனெனில் உலகம் அனைத்திற்
கும் பெரியார் என ஒருங்கே கருதப்படும் ஸபர்மதி யாசிரமத்தின்
பிரம்ம ஞானியாகிய மகாத்மா காந்தியடிகள் "கல்வித்தேர்ச்சியிலும்
ஒழுக்கமே எத்தனையோ மடங்கு முக்கியமானதென்று அருளியிருக்
கின்றனர். இதையே தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என வெகு அழகாய்க் கூறியுள்ளார். பெண்களுக்கு அளிக்கப்
படும் கல்வியானது அவர்களைச் சிறந்த மனைவியர்களாகவும் தாய்
மார்களாகவும், பெண்டீர்களாகவும் செய்யவேண்டும். இந்திய மாதா
வானவள் பற்பல சீதைகளையும், தமயந்திகளையும், சாவித்திரிகளையும்,
சகுந்தலைகளையும் பெறுவதற்குப் பெண்பாலர்கள் உயர்தர நாட்டுக்
கல்விபயின்று, இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, முதலிய
ஆத்ம இன்பக்கிளர்ச்சிக்குரிய நூல்களைப் படிக்கவேண்டும். ஆகவே
ஒவ்வொரு யாதவப் பெண்ணுக்கும், ஆரம்பக் கல்வி [illegible]ளிக்கப்பட
வேண்டும் என்ற அவசரமான அவசி[illegible]த்தை வற்புறுத்திக்
கூறலானேன்.

நா[illegible]த்தில், கல்விப் பயிற்சியில்லாத பிராயமடைந்த பலரும்,
[illegible]லவிக் கடலின் திரைகளால் மோதப்படார்களாயின் நமது ஸமூகத்
திலுள்ள கல்லாமை யென்னும் அழுக்கானது முற்றிலும் அகற்றப்
படவே மாட்டாது. கொடியவறுமையானது இவர்களில் அநேகரைப்
பகற் பள்ளிக்கூடத்திற்குப் போக முடியாமல் தடுப்பதால் இவர்
களுக்காக இராத்திரிப் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும்
ஏற்படுத்த வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இவ்
வழியில் செய்யப்படும் முயற்சி உங்களுக்குப் பெரும் பயன் அளிக்
கும் என்பது திண்ணம். ஒரு காரியத்தைச் செய்யாமலேயிருப்பதை
விடப் பிந்தியேனும் செய்வது நலம் என்ற ஆன்றோர் மொழியை
நம் மனதில் ஆழப்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வி வெகு முக்கிய



மானதென்பதையும் அதுவும் நமது ஸமூகத்தின் முன்னேற்றத்திற்
குரிய சாதனங்களில் தலை சிறந்ததென்பதையும், நீங்கள் அறிந்திருப்
பீர்களாயின் கல்வி விஷயமாக நான் அளவு மீறிப்பேசி விட்டதாக
என்னைப்பழிக்க மாட்டீர்களென்ற உறுதியுடையவனாயிருக்கின்றேன்.

நமது ஸமூகத்திலுள்ள பலவாறான அவசியமில்லாத அநுசித
மான பிரிவுகளால் நாம் பிளவுபட்டுச் சிதறிக்கிடக்கின்றோமென்பது
வெகு நன்றாய்த் தெரிந்த விஷயமே. தொழிலினாலோ சிற்சில இடங்
களில் வசிப்பதினாலோ ஆதியிலுண்டான சாதிகள், பண்டைக் காலத்
தில் பிரயாணம், போக்கு வரவு முதலியவை அநேகமாக அஸாத்திய
மாயிருந்தமையால் ஸமூக முன்னேற்றத்திற்குச் சாசுவத தடைகளாய்
ஏற்பட்டு விட்டன. அவசியமில்லாத நமது வேறுபாடுகளை ஒழித்து
நமது ஸமூகத்தின் பற்பல கூட்டத்தாரையும் கிளைகளையும் ஒன்று
படுத்தி "இந்திய யாதவர்" என்னும் ஒரே தன்மையுடையவராய்
ஏகஸமூகமாகச் செய்யவேண்டிய தருணம் அணுகிவிட்டது. அப்
படியானால்தான், நமது வலிமையைச் சிதற அடித்தும், நமது ஸமூக
ஆற்றலைச் சூன்யமாகிய சிறையிலடைத்தும், வருகிற பல்லாயிரம் சக்
திகளையும், நாலா பக்கத்திலிருந்து வரும் கொடுங் காற்றுகளையும்
ஒருங்கே எதிர்த்து நிற்கும் வலியுடையவராவோம். எவ்வாறு ஒற்
றுமை யடையப் போகிறோம் என்னும் கேள்வி இயற்கையாகவே
இந்த இடத்தில் உண்டாகின்றது? எங்ஙனம் வலிமைபெறப் போகின்
றோம்? நமது உணர்ச்சியின் ஒருமைப் பாட்டை எவ்வண்ணம் காண்
பிக்கப் போகின்றோம்? இவ்வினாக்களுக்குரியவிடை, கலந்துண்ணலும்
திருமணக் கலப்புமேயாம். கலந்துண்ணல் சின்னாளாக நடப்புக்கு
வந்துகொண் டிருப்பதைப்பற்றிக் களிப்புற்றவனாகின்றேன். ஆனால்
மணக்கலப்பு அவ்வாறாகவில்லையே! மாமூலாலும் மூடபக்தியாலும்
நடத்தப்பெற்ற நாம் வைதீகம் அல்லது ஸதாசாரமென்னும் புறக்
கூட்டிலேயே விரைவாகச் சிறகடித்துக்கொண் டிருக்கின்றோம்.
தவிர்க்க முடியாத "விதி"யின் கையிலேயே நம்மை ஒப்புவித்து
விட்டோம். திருமணத் தேவதையாகிய 'மாரனது' சந்நிதியில் நமது
பிரிவினைகளையும், கிளைகளையும் உள்ளன்பென்னும் கயிற்றால் ஒன்றாய்ப்
பிணைத்தாலொழிய, வகுப்போ, கிளையோ யாதொன்றையும் கவனி
யாமல் நமது இளைஞர் எந்த யாதவப் பெண்ணையும் திருமணம் புரி
யும் நோக்கங்களுடன் முன்னேறி வந்தாலொழிய, மதிநுட்பமுடைய
யாதவயுவாக்கள் யாவர்க்கேயாயினும், தமது பெண்களை மணஞ்

செய்து கொடுக்கப் பெண்களின் பெற்றோர்கள் மனமிசைந்தா லொ
ழிய, நமது மீட்சியானது வருங்காலத்தின் மங்கலான அடிவானத்
தில் மறைந்தேயிருக்கும். நாம் அடையவேண்டிய உயர்பதவியானது
சந்திரனை நாடிச் செல்லும் பிரயாணமேயாகும். இந்த ஸந்தர்ப்பத்
தில் இந்த இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக முன்வந்து உள்ளக்
கிளர்ச்சியோடு உழைக்குமாறு நமது ஸமூக இளைஞர்களிடம் மன்
றாடிக் கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில் இவ்வியக்கத்தின் எதிர்
கால நிகழ்ச்சியானது உங்களைச் சார்ந்ததா யிருப்பதனாலேயாம்.
துருக்கி, ஜப்பான், ருஷியா, எகிப்து இத்தேசங்களிலுள்ள இளைஞர்
தமது நாட்டிற்கு யாது செய்திருக்கின்றனரோ, அதையே நீங்களும்
உங்கள் ஸமூகத்திற்கும் தேசத்திற்கும் செய்யவேண்டும். இத்தேசங்
களிலுள்ள வயது சென்றவர்களால் எத்தனையோ நூற்றாண்டுகளி
லும் செய்யமுடியாமற் போனவைகளை யுவாக்கள் முன் வந்து வரு
டக் கணக்கில் செய்து முடிக்கலாயினர். எல்லாவற்றிற்கும் மேலாக
யுவாக்கள் மதுவிலக்குக்காக உழைக்கவேண்டும். காலம் நீடிக்குமுன்
மதுவால் நனைவுற்ற புண்ய பூமியாகிய பாரதகண்டத்தை மதியாமல்
வறட்சியுறச் செய்வீர்களென்று நம்புகின்றேன். நன்னம்பிக்கையும்
அருள் விலாசத்தோற்றமும் உங்களுக்குண்டாகவேண்டும். "இளைஞர்
கள் அருள் பெற்றவராவர்" ஏனெனில் வருங்கால உலகம் அவர்களா
லாகியதே, புதிய யுகமானது அணுகிக் கொண்டிருக்கின்றது, அது
யுவாக்கள் கைக்குள் அடங்கியதே.

நாம் பெயர்ச்சியுறும் பருவத்திலிருக்கின்றோம். உலகத்தில்
பற்பல தேசத்தாரும் தடுக்கமுடியாத சக்தியுடன் முன்னேறிச்
செல்ல, நாம் இன்னும் நமது தொன்மையாகிய மேய்ச்சற் றொழி
லையே பற்றிக்கொண்டிருப்போமாயின் பொதுவாக இந்தியா முழுவ
திலும் முக்கியமாகத் தென்னிந்தியாவிலும் உள்ள சகல ஸமூகத்தின
ரும் சில வருடங்களுக்குள் நம்மைக் கடந்து முன்னேறிச் சென்று
விடுவார்கள். இத்தொழில் ஒரு காலத்தில் லாபகரமாயும் மிக்க
பொருள் வரவுடையதாயும், இதற்கெல்லாம் மேலாக, தேவர்களும்
ஆதரிக்கக் கூடியதாயு மிருந்த தென்பதற்கு ஐயமே இல்லை. ஆனால்
இப்பொழுதோ சீர்திருத்தத்திற்கு இடமே இல்லை; மேய்ச்சற்றரை
களெல்லாம் விரைவுடன் குறைந்துகொண்டே வருகின்றன. சின்னாட்
குள் நாம் துயரப்படக்கூடிய தட்டுமுட்டில் அகப்படுத்தப்படுவோம்.
கனவான்களே! நமது புராதனமான தொழிலை இடித்துப் பேசவ



தாக ஸம்பத்தப்பு அடையாமலிருக்கும் வண்ணம் உங்களைக் கேட்டுக்
கொள்கிறேன். நூதன விஞ்ஞான நூல் முறையைத் தழுவி விசால
மான விதங்களில் உழைக்கக் கூடியவர்கள், அதைக் கையாளலாம்.
வேறு விதமாய் அதிக ஆதாயகரமான தொழில் செய்யலா மென்ற
எண்ணமுடையவர்கள் தங்கள் நிலைமைக்கும் யோக்கியதைக்கும்
தகுந்தவாறு தொழில்களைக் கைக்கொள்ளவேண்டும். ஏனெனில்,
தங்கள் பழமை மிக்க தொழில்களைக் காற்றில் பறக்கவிட்டெறிந்தவர்
களில் நேற்றுவரையும் அதிகாரத்திலும் செல்வத்திலும் பின்னணியி
லிருந்த ஸமூகங்கள் இன்று அதிகாரத் தோரணையிலும் நாகரிகத்தி
லும் முன்னணியிலிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோமல்லவா?
காலம் மாறுபட்டுக்கொண்டே வருவதால் நாமும் அதைத் தழுவியே
செல்லவேண்டும். தொழிலும் விடாமுயற்சியும் ஸத்துவமும்
வாய்ந்த வழக்கங்களுடைய நமது இளைஞரிற் பலர் வர்த்தகத்துறை
யில் பிரவேசிக்கலாம். அதற்கு ஏராளமான விடுமுதல் வேண்டிய
தில்லை. யாதவ பாங்குகள் ஏற்பட்டு அவற்றால் தேவையான சிறு
முதலீடானது முன்கூறாய்க் கொடுக்கப்படவேண்டும். இத்தகைய
பாங்குகள் ஏற்படுவது நமது அடுத்த வருடத்திய காரியமாயிருக்க
வேண்டும். வேளாண்மை, வர்த்தகம் முதலிய முயற்சிகளுடைய
யாதவர்களுக்கு இந்தப் பாங்குகள் உதவிபுரிய வேண்டும். ஐம்பதி
னாயிரம் ரூபாய் பாங்குக்கு முதல் ஏற்படுத்துவது சுலபமேயாம். இக்
கடமையானது முக்கியமாக நம்முடையதாயினும் துரைத்தனத்தா
ரும் இதை ஆதரிக்க முன்வரவேண்டும். தீவிரமான தேவையிலும்
கஷ்டமான சோதனையிலும் ஒரு காலத்தும் குறைவுறாமலிருக்கும்
நமது ஸமூகத்திலுள்ள தர்ம சிந்தனையுள்ள சீமான்களின் பணத்தை
இம்முயற்சியிலும் தாராளமாய்ச் செலவிட அவர்கள் முன்வரவேண்
மென்று அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக உங்கள் எல்லோருக்கும் முக்கியமாக நமது சங்கத்
தைச் சார்ந்த எளிய குடும்பத் தலைவிகளுக்கும் ஒரு ஆற்றல் மிக்க
மனிதனது, தெய்வீகமான திருமொழியைத் தெரிவித்துக் கொள்
கின்றேன். அதாவது அந்தச் சிறிய "ராட்டே" யாம். ஏனெனில்
அதைக்கொண்டு நமது பொருள் ஆதார சுதந்திரத்தைத் தேடிக்
கொள்ளலாம். சோம்பலுக்கிடமான இன்ப நுகர்ச்சிக்குரிய பொழு
தின் பெரும் பாகத்தையும் நமது பெண்பாலர்கள் உபயோகமான
உழைப்பாக மாற்றிக்கொள்ளக்கூடும், "மாஞ்செஸ்டர், டோகியோ,

நியூயார்க்கு, நகரங்களிலுள்ள யந்திரசாலைகளின் சொந்தக்காரரின் பிரியம்போல் நெய்யும் துணிகளையே நாம் அணியும் ஆடைகளுக்காகச் சார்ந்திருப்பது நமது கலப்பற்ற மதியீனமல்லவா ?

ஓர் புதிய யுகமானது புலர்ந்துகொண்டிருக்கிறது. சுதந்திரம், ஸமத்வம், ஸகோதரத்வம் இவற்றிற்குரிய காலம் என்பது மாத்திரமின்றி, இது உலகளாவிய அன்பிற்கும் உரிய தருணமேயாகும். தனியுரிமைகளும் விசேஷ ஆதரவுகளும் ஒரு போதும் மீண்டு வராதபடி விரைந்து மறைந்துகொண்டே வருகின்றன. இன்றைய உலகமானது ஸமமான தருணங்களையுடையதாயும் எல்லாச் சமூகங்களிலும் இராநின்ற திறமைசாலிகளின் நீதும் தயைபிக்க தனது கரத்தினால் ஆசீர்வாதங்களைப் பொழியும் உலகமாக அமைந்திருக்கப்பெற்ற பெரும் புண்ணியத்திற்கு நமது வந்தனத்தைச் செலுத்துவோமாக. இத்தகைய காலத்தில் 'யாதவர்' ஒரு கெட்ட குணத்தால் கீழோடு கீழாகத் தள்ளப்பட்டிருக்கிறார்களென்பதை நினைக்கத் துடித்துக்கொண்டிருக்கும் என் மனம் துக்கத்தால் நிரம்புகின்றது. நான் குறிப்பிடுகிற தீயகுணமானது, போதுமெனக் கருதுவதாகிய "திருப்தியே" யாம். சிறந்த ஞானியர்களெல்லாம் நாடுகின்றதாகிய மேலான குணத்தைக் கெட்டகுணமென்பது முறையா? என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கனவான்களே! சுதந்திரமானது காலால் மிதிபடாமலும் மனோசக்தி அடக்கப்படாமலும் முன்னேற்ற நாட்டம் முரண்படாமலும், சுறுசுறுப்பான காரியங்கள் இடர்ப்படாமலும் இருக்குமளவும் போதுமென்ற மனம் நன் மனமேதான். தாழ்வையும் நிந்தனையையும் பொறுத்துக்கொண்டு, உங்களை நடத்தும் முறையானது, யுக்திக்கும், நீதிக்கும், நடு நிலைமைக்கும், ஸமய பாவனைக்கும் விரோதமானது என்று சுட்டிக்காட்ட ஓர் விரலையும் உயர்த்தாமலிருப்பது ஒரு போதும் திருப்தியாகாது. அது வெறும் கோழைத்தனமேயாகும். ஒருவாறு குறைந்த திருப்தியுடையவர்களாகவும் உரத்த குரலையுடையவர்களாகவும் இருக்குமாறு எனது சகோதரர்களை வேண்டிக்கொள்ளுகிறேன். ஏனெனில் கேட்போர் செவிடராயிருப்பாராயின் பத்திரிகை வாயிலாகவும் பிரசங்க மேடை மூலமாகவும் ஒழுங்கான தர்க்கத்தாலும் ஊர்ஜிதமும் திட்பமும் வாய்ந்த பிரசார வேலையாலும் ஜன ஸமூகத்தில் நமது உரிமைகளை வலிந்து பற்றுவதற்கு நமது குரல் உரத்ததாகத்தானே யிருக்கவேண்டும்? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற முதுமொழியால் குழந்தை அழாமலிருந்துவிட்டால் பெற்ற தாயும் குழந்தையின் பசியை யுணரவல்லவள் ஆகாள் என்றன்றோ விளங்குகின்றது!



கனவான்களே! இதற்குமுன் நான்கு மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் சாஸ்வதமாக யாதொன்றும் செய்யப்படவில்லையே! ஆண்டுதோறும் இரண்டாயிரம் முதல் நாலாயிரம் ரூபாய் செலவு செய்து ஓர் மகாநாடு கூடி அது முடிந்ததும் தத்தம் வீடு சென்று அமைதியாய்த் தூங்குவதில் யாதுபயன்? மத்திய நிர்வாக நிலயம் ஒன்று அவஸரமான தேவையென்று நான் உத்தேசிக்கின்றேன். ஜில்லா நிர்வாக மன்றங்களும் ஏற்படுத்தி அவைகளுக்குத் தாலூகா நிலயத்திலிருந்து அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு யாதவரும் கிராமச் சங்கத்தில் அங்கத்தினராக வேண்டியதும் அவரிடமிருந்து வருடசந்தாவாக ஆறு அணா வசூல் செய்ய வேண்டியதும் அவசியமே. கிராமச் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட தொகையில் பாதியைத் தாலூகா நிர்வாக ஸபைக்கு அனுப்பவேண்டும். தாலூகா சபை அதில் பாதியை ஜில்லா நிர்வாக மன்றத்துக்கு அனுப்பவேண்டும். ஜில்லா ஸபையார் தங்கள் வருவாயில் நாலிலொன்றை மத்திய நிர்வாக ஸபையாருக்குச் செலுத்தவேண்டும். இச்சபையார் நமது ஜனங்களின் உயர்வுக்கும் சீர்திருத்தத்திற்குமாக உழைக்கலாம். ஸபையார் கூடும் கூட்டங்களில் இப்பணத்தை நமது மாணவர்களுக்குப் படிப்புக்கு ஸகாயதனமாகவும் மற்றும் உபயோகமான காரியங்களுக்கும் வழங்குவதற்கு வேண்டிய தீர்மானங்கள் செய்யலாம். சங்கமானது சண்டை சச்சரவுகளையும், வியவகாரங்களையும் முடிவு செய்வதன் மூலம் நீதிமன்றங்களில் அதமாக்கப்படும் பொருளை மிகுதியாக மீதம் வைக்கலாம். பிரத்தியேகமான வாக்காளர் சுதந்திரம் வேண்டுமென்று அலறவேண்டாம். என் அபிப்பிராயத்தில் யாதவர்களுக்கெனப் பிரத்தியேகக் கல்விச்சாலைகள் ஏற்படுத்துவதால் விசேஷ உபயோகம் ஏற்படுமென்று தோன்றவில்லை. தொகையில் நாம் வலியுடையவரே; செல்வத்திலும் கல்வியிலும் குறைந்திருக்கலாம். நீங்கள் கிளம்பி, உங்களுடைய சோம்பலை அசைத்துத்தள்ளி ஏனைய முன்னேற்ற மடைந்துள்ள ஸமூகத்தருடன் நாமும் இணையாகி, சட்டசபையில் பிரத்தியேக வாக்காளர் சுதந்திரம் முதலிய சிறு அநுகூலங்களை யாசியாமலிருப்பதே உங்களுக்கு அடுத்ததாயிருக்கிறது. நமது மாணாக்கர்கள் மற்ற மாணாக்கர்களுடன் கலந்து அளவளாவி யிருக்கவேண்டும். மாசற்ற யோக்கியதையிலும் தனியாயும் இயக்கத்தாலும் செய்யப்படும் முயற்சிகளாலும் நாம் மேன்மையடைய வேண்டும். ஆனால் அரசாங்கத்தார்

நமது முன்னேற்றத்தைக் கவனித்துச் சொற்பகாலத்திற்காவது உத்யோகங்களை நம்மவர்க்களித்து நம்மிடைக் கல்வியைத் தீவிரமாய்ப் பரவச்செய்ய வேண்டியது அவர்களது கடமையேயாகும்.

நான் எனது கட்டுரையை முடிப்பதற்குமுன் நமது கிராமங்களில் இடைவிடாது காணப்படும் கட்சிகளைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். இக்கொடிய வியாதிக்குள் அகப்படாத ஒரு கிராமத்தையாவது கண்டு பிடிப்பது அஸாத்தியமே. நமது ஸமூக சீர்திருத்தத்திற்குக் கட்சிகள் சாஸ்வத இடையூறுகளாய் இருக்கின்றன. இக்கட்சிகளைச் சதா நிலைக்கச் செய்வதிலேயே ஜனங்கள் தங்களுடைய சிறந்த பொழுதிலும் பொருளிலும் பெரும் பாகத்தை அவமாக்கி விடுகிறார்கள். இதில் பாதி ஊக்கத்துடன் தங்கள் ஸத்துவத்தையும் ஸமயத்தையும் ஸமூக க்ஷேமத்திற்காகச் செலவிடுவார்களாயின் நமது ஜனங்கள் சீக்கிரத்தில் சீர்திருத்தமடைந்து விடுவார்கள். ஆகையால் எங்கெங்கே கட்சிகளிருப்பினும் அவற்றை அறவே யொழித்து உங்களை நிறைகுண மாந்தராகவும் உத்தம தேசாபிமானிகளாகவும் ஆக்கக்கூடிய மனோரம்யம், அன்பு, அருளுடைமை ஆகிய குணங்களை விருத்தி செய்து நமது ஸமூகமானது அதன் புராதனமான மகிமையைத் திரும்பப் பெற்று இந்தப் பரிசுத்தமான தேசத்தில் முன்னேறிச் செல்லும் ஸமூகங்களில் ஒன்றாய் விளங்கும் வண்ணம் செய்யக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்தியாவானது அரசியற் சுழற்சியென்னும் பிரசண்ட மாருதத்தின் வசமாகி ஒரே ஜனஸமூகமாகவேண்டுமென்ற பூரண நம்பிக்கையுடன் உழைத்து வரும் இத்தருவாயில் சமூகங்கள் யாவும் கலந்து ஒற்றுமையடைய வேண்டுவது அவசியமே. பாரதமாதாவின் மைந்தரிற் சிறந்த சிலரால் தம் தாய்நாட்டின் நிலைமையானது தீவிரமாய்க் கவனிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலைமையை நாம் சீர்படுத்துவோமானால் "இந்தியா தேச மஹாஜன ஸமூகமாய் விட்டதென்றும் 'பள்ளிவாஸல்பூன் ஸங்கீதம்' பசுவதை முதலியவற்றைப் பற்றி அது மண்டையை உடைத்துக்கொண்டிருக்கவில்லையென்றும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும் ஸமூகத்தார்க்கிடையே நேசமும் இருக்கிற" தென்றும் உலகமனைத்தும் ஆரவாரிப்பதைக் கேட்கும் திருப்தி நமக்குண்டாகும்.



வருங்காலத்தின் மங்கலான மரச்சாலைகளுக்கு ஊடே மிக்க ஆனந்தமும் மகிமையும் வாய்ந்த ஓர் இந்தியாவைப் பார்க்கின்றேன். அந்தச் சிரார்ந்த யுகமானது மீண்டும் வரவேண்டும் என்று மிக்க விருப்பமுடையவனா யிருக்கின்றேன். ஆகையால் கனவான்களே! நமது ஸமூகத்தைப் பொதுஜன விஷயமாகவும் பொருள் ஆதார விஷயமாகவும் நம்மாலான மட்டும் சீர்படுத்தும் அதே ஸமயத்தில் தேசிய ஒற்றுமைக்குத் தடை செய்யாமலும் தேச அமைதிக்கும், ஸமாதானத்திற்கும், கலக்கம் வராமலும், எழுந்துவரும் ஒற்றுமையை அபாயச் செய்யாமலும், இரவும் பகலும் வெவ்வேறு வாக்காளர் சுதந்திரமும் வெவ்வேறு கல்விச் சாலைகளும் வேண்டுமென்று மன்றாடாமலும் இருப்போமாக! தேசமஹாஜன அபிவிர்த்திக்குத் தடையில்லாமல் இருப்போமாக! பாரதமாதா முன்னேற்றத்தில் நம்மாலியன்ற சிறு உதவியைச் செய்து வருவோமாக! இந்தியாவின் மிகப்பெரிய க்ஷேமாபிவிருத்தி விஷயத்தில் உத்தமமான ஸன்மார்க்கத்தின் சார்பாக, நம்மவர், தங்களையும் தங்கள் தேசமஹாஜன சமூகத்தையும் உயர்வுறச் செய்யுமாறு தூண்டுகின்றேன். இந்தியா உன்னத பதவியடையப் பிரார்த்தித்துக் கொண்டு, நமது ஸமூகமும் உன்னத பதவியடையப் பிரார்த்தித்துக் கொண்டு, நமது ஸமூகத்தை உன்னத பதவிக்குக் கொண்டு வருவதன் வாயிலாக, இந்தியாவையும் உயர்ந்தோங்கச் செய்வோமாக! சுபம்.

---

ஸ்ரீ

இராமநாதபுரத்தில் கூடிய

சென்னை மாகாண

# யாதவ இளைஞர் மகாநாட்டில்

வரவேற்புக் கழகத்தலைவர் திருவாளர்,

## K. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்கள் B. Sc (Hons), M. R. A. S.

# நிகழ்த்திய வரவேற்பு பிரசங்கம்.

---

கனமிகுந்த தலைவரவர்களே! குலாபிமானத்திற் சிறந்த வாலிபப் பிரதிநிதிகளே! மற்றுமுள்ள கனதனவான்களே! யாதவ இளைஞர் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும் என் சார்பாகவும் எனது மனமுவந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகின்றேன்.

நம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ள திருவாளர் P. பிச்சைமுத்துக் கோனாரவர்களின் புகழையும், கீர்த்தியையும் நீங்கள் யாவரும் நேரே தெரிந்தும் அல்லது நமது "யாதவமித்திரன்" மூலமாவது அறிந்துமிருப்பீர்களென்று நம்புகிறேன். இவர் சென்னை இராஜதானியில் ஜனத் தொகையில் சென்னை நகருக்கு இரண்டாவதாயுள்ள மதுரைமா நகரின் பரிபாலன சபையின் உதவித் தலைவராயிருந்து வருகிறாரென்றால் இவருடைய ஜனசமூகத் தொண்டையும், ஜனங்கள் இவர்பால் வைத்துள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும் எவ்வாறெடுத்துரைப்பது! இதுதானோவென்றால் இன்னொரு பெருந் தொண்டாற்றி வருகிறார். மதுரை மீனாட்சி சுந்தரேசுவராள் தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவராயுமிருக்கிறார். இவ் வாலிபத்திலேயே இம்மாபெரும் பதவிகளைப் பெற்றது இவருடைய கல்வி நிலையையும், புத்திக் கூர்மையையும், ஜன சமூக ஊழிய உணர்ச்சியையும் நன்கு காட்டுகின்றதல்லவா? இப் பெரியாரை நாம் நமது மகாநாட்டிற்குத் தலைவராகப் பெற்றது நாம் பெற்ற பெரும் பாக்கியமே! மேலும் நம்மைப்போன்ற இளைஞர்களுக்குக் குன்றின்மேலிட்ட தீபம் போல் ஓர் வழிகாட்டியாயிருந்து நமக்கு மேலான நிலைமைக்கு வர ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகிறார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இப் பெரியார் யாதவ இளைஞர் மகாநாட்டைக் கூட்டுவிக்க



மிக்க ஆவலுற்றவர். நமது சமூகத் தொண்டைப் பெரிதும் கடைப்பிடித்தவர். தன் குலாபிமானத்தால் நம் குலத்தில் தோன்றும் பல் வேறு வகுப்புகளை வேரற ஒழிக்கக் கண்ணுங்கருத்துங் கொண்டவரென்றால் இவர் நம்குலச் சீர்திருத்தங்களுக்கு எவ்வளவு பாடுபட்டு வருகிறாரென்று நான் சொல்லாமலே விளங்கும். முதன் முதலாக நடைபெறும் இவ்வாலிப மகாநாட்டிற்குச் சீருஞ் சிறப்பும் வாய்ந்த இப் பெரியாரை நாம் தலைவராக அடைந்தது நமது அதிர்ஷ்டவசமேயன்றி வேறல்ல. இவருடைய தலைமையின் கீழ் நமது மகாநாடு வெகு சிறப்புடன் நடைபெறுமென்பதில் ஏதேனும் ஐயமுண்டோ?

### யாதவ இளைஞர் மகாநாடு.

நான் இரங்கூனிலிருக்கும்போது சென்ற வருஷத்தில் திருச்சிராப்பள்ளியிலுள்ள "யாதவ இளைஞர்" சங்கத்திலிருந்து ஓர் வரவழைப்புப் பெற்று அதனால் ஓர் இளைஞர் சங்கமுமிருப்பதாகத் தெரிந்து அளவற்ற மகிழ்வடைந்தேன். இதுவரை யாதவ இளைஞர் மகாநாடு கூடப் பெறவில்லை. இவ்வருடம் இராமநாதபுரம் ஜில்லாவில் எந்நகரிலும் நற் நகரமாயும் சகல நீர் நிலவளங்களையும் பூரணமாய்ப் பெற்றுப் பூமாதேவிக்கோர் திலகம் போன்று விளங்கக்கூடிய இந்த இராமநாத நாங்கள் புரத்தில் முதலாவதாக யாதவ இளைஞர் மகாநாட்டை கூட்டுவிக்கப்பெற்ற பாக்கியமே பாக்கியம். அதிலும் சென்னை மாகாண 5-வது யாதவ மகாநாட்டோடு கலந்துகொண்டு நமது மகாநாடும் நடைபெற முடிந்தது தெய்வ சங்கல்பமே! இவ்வைந்து வருடகாலமாக இளைஞர் மகாநாடு கூடாமல் போனது நாம் செய்த துர்பாக்கியமே. சென்னை மாகாண யாதவ மகாநாட்டிற்கு அடிப்படையாய்ப் பின்னால் சகல பொறுப்பையுந் தாங்கி நம் சமூகத் தொண்டை ஆற்றக் கூடியவர் யாதவ இளைஞர்களென்று ஒருவருக்கும் புலப்படவில்லை போலும்! இனிமேலாவது எங்கெங்கு யாதவ மகாநாடு கூடுகிறதோ அங்கும் நமது இளைஞர் மகாநாடு கூடச் செய்து நம்குலச் சீர்திருத்தத்திற்கு வேண்டிய தீர்மானங்களை நிறைவேற்றி அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது நம் பெருங்கடமையாகும்.

ஒவ்வொரு நாடும் முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகமும் முற்போக்கை அடைந்திருத்தல் அவசியமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஒவ்வொரு சமூகமும்

முன்னேற்றமடைவது அச்சமூகத்தின் இளைஞர்களின் முற்போக்கைப் பெரிதும் தழுவி நிற்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நாகரிகத்தில் சிறப்புற்றிருக்கும் இக்காலத்தில் நம் சமூகமும் தன் பிற்போக்கிலிருந்து முற்போக்கை அடைய வேண்டுமானால் நம் குலத்து இரத்தம் ஓடும் ஒவ்வொரு இளைஞருக்கும் உள்ளத்தில் குலாபிமான உணர்ச்சி உதிக்கவேண்டும். உணர்ச்சி உதித்தால் மாத்திரம் போதாது. நம் சமூகத்தின் தொண்டைப் பெரிதும் கைப்பிடித்து வருதல் நம் கடமையாகவேண்டும். சுமார் 60 வருஷங்களுக்கு முன் இருந்த இடம் தெரியாதிருந்த ஜப்பான் தேசம் தற்போது முன்னணியில் வந்திருப்பதின் காரணம் அந்நாட்டு இளைஞர்களின் தேசாபிமானமும் விடாமுயற்சியுமே. இப்படியாக ஒவ்வொரு தேசமும் முன்னேற்றமடைந்தது அத்தேசத்தின் இளைஞர்களின் தீவிரச் செய்கைகளைக் கொண்டே என்று கூசாமல் கூறலாம். இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் "பாய்ஸ் ஸ்கௌட்" (Boys' Scout) என்ற ஓர்வித இளைஞர் இராணுவப்படை உண்டாயிருப்பதைக் கொண்டு உலக முன்னேற்றத்திற்கும், சகோதரத்வ வாழ்க்கைக்கும் இளைஞர்கள் இன்றியமையாதவர்களாயிருக்கின்றனரென்று கூறுவது பிழையாகாது. இன்னும் இளைஞர்கள் பல சங்கங்களை வெவ்வேறு வழிகளில் நிறுவித் தாங்களும் தங்கள் தேசமும் முன்னேற்றமடையக் கருதி வேலைகள் செய்து வருவதை நாம் ஒவ்வொருவரும் கேட்டு வருகிறோம். அப்படியானால் மிகவும் பிற்போக்கையடைந்துள்ள நமது சமூக முன்னேற்றத்திற்கு நம்குல இளைஞர் பெரும்பாலும் பொறுப்புடையார் என்பது சாலப் பொருந்தும்.

இப்படிப்பட்ட மகாநாடுகளைத் தவறாமல் வருஷமொருமுறை நடத்துவதால் மாத்திரம் நாம் முன்னேற்ற மடைந்துவிடமுடியாது. ஓர் சமூகம் முன்னேற்றமடையத் தூண்டுகோலாயிருப்பது பலவிதச் சங்கங்களே. ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது ஒரு இளைஞர் சங்கமாவது இருக்க வேண்டும். இச்சங்கமும், அந்தந்தப் பிரதிநிதிகளும் இது போன்ற மகாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஆங்காங்கு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பெரிதும் முயலவேண்டும். சங்கங்களால்தான் வருஷமுழுவதும் இடைவிடாது நம்குல முன்னேற்றங் கருதி வேலைகள் தீவிரமாய்ச் செய்துவர முடியும். இராமநாதபுரம் ஜில்லாவில் யாதவகுல சங்கமே இல்லா




திருப்பது மிகவும் வருத்தப்படத்தக்கதா யிருக்கிறது. 1907ல் இங்கு "யாதவகுலப் பரிபாலன சங்கம்" என்ற பெயருடன் ஓர் சங்கமிருந்தது. அது மிகச் சிறப்புகளடைந்து வந்ததுபோலவே கொஞ்ச காலத்திற்குப் பின் மறைந்து விட்டது. இதனால் நாம் எடுத்த காரியத்தைக் கைவிடாது செய்து முடிப்பதில் எவ்வளவு ஆற்றலுடையவர்களென்று நன்கு புலனாகிறதன்றோ? இதுவே இப்படியிருக்க எப்படி இளைஞர் சங்கம் இங்கு உண்டாகப் போகிறது. நம்குல நலங்கருதித் தீவிர முயற்சிகள் செய்ய விரும்பினால் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள நம் யாதவ இளைஞர்கள் சங்கங்கள் நிறுவ வேண்டுமென்பதை நான் அழுத்தமாகக் கூறுகிறேன்.

## கல்வியும் நம் நிலைமையும்.

பொதுவாகக் கல்வியில் நம் சமூகம் மிகுந்த பிற்போக்கடைந்திருக்கிறதென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. கல்வியற்ற சமூகம் பாழாகுமென்பதும் உங்களுக்குத் தெரியும். நம் குலம் அறியாமையில் பன்னாள் ஆழ்ந்து கிடக்கிறது. அந்த அறியாமை என்னும் அந்தகாரத்தை ஞானம் என்னும் சூரியோதயத்தால் அதைப் போக்க வேண்டும். நம் சமூகம் மிகவும் எளியது. அதிற் பிறந்த நாம் நம் கல்வி வளர்ச்சிக்கு நாமே சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு எத்தனையோ பேர் தங்கள் தாய் தகப்பனார் உதவியின்றித் தங்கள் ஊக்கம் விடாமுயற்சி முதலிய அரிய குணங்களால் உயர்தரக் கல்விகற்று உயர்ந்த ஸ்தானங்களில் திகழ்கின்றனர். நம் நிலைமைக்குத் தகுந்தவாறு தாய் தந்தையர் உதவியைப் பெரும்பாலுங் கருதாமல் நம் தேகப்பிரயாசையால் கல்வியிலே முற்படவேண்டும். நம் குலாபிமானர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த எளிய குடும்பத்து இளைஞர்களுக்குப் பொருளுதவி செய்ய வேண்டியது அவர் பெருங்கடமையாகும். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள இளைஞர் சங்கங்கள் தங்களால் கூடிய திரவியத்தைத் தேடி இலவசக் கல்வியைக் கொடுத்து வருவது முதற் கடமையாம். பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றி நான் நமது "யாதவ மித்திரனில்" எழுதி வந்திருப்பதால் அதை இங்குக் குறிப்பிடவில்லை.

பற்பல கல்விகள் புதிதாகத் தோன்றி மேனாடுகளைச் சிறப்படையச் செய்து வருவது கண்கூடு. இக்காலத்தில் ஒவ்வொரு தேசமும் தன் மூடப் பழக்க வழக்கங்களை அறவேயொழித்து, சாஸ்திரப்

பயிற்சியில் விடா முயற்சி கொண்டிருக்கிறது. சாஸ்திர வளர்ச்சியாலேயே உலகம் இவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறதென்று கூசாமல் கூறலாம். முன்னேற்றமடைய விரும்பும் ஒவ்வொரு தேசமும் சாஸ்திரீகக் கல்வியைப் பெரிதுங் கற்க வேண்டும். ஒரு சமூகத்தாரில் பலர் சாஸ்திரீகக் கல்வி பயின்றிருந்தால் அந்தச் சமூகம் முன்னணியில் வெகு விரைவில் வந்துவிடு மென்பது என் துணிபு. நம்குல இளைஞர்கள் பெரும்பாலோர் கல்வி வாசனையின்றி இருந்து வருவது பெரிதும் வருந்தத் தக்கது. உயர்தரக் கல்வி பயின்றவர்கள் வெகு கொஞ்சமென்றே கூறவேண்டும். இங்குக் கோரட்சணையையும், பயிர்த் தொழிலையுமே நம்மவர்கள் அதிகம் கையாண்டு வருகின்றனர். இத் தொழில்களுக்குக் கல்வி அவசியமில்லை என்னுந் தப்பபிப்பிராயங் கொண்டிருக்கிறவர் பலர். அந்நாளிலிருந்து இந்நாள் வரை தீனியில்லாக் குறைவால் மெலிந்து எலும்பெல்லாந் தெரியும் இரண்டு மாடுகளை ஒருமுழக்கலப்பையில் பூட்டி இரண்டு மூன்று அங்குலம் ஆழமாக உழுது பயிர் செய்தால் நாம் எங்ஙனம் நல்ல விளைவை யடைந்து தக்க இலாபமடைவது? மாடுகளையும் நல்லவிதமாக வளர்க்குமுறையில் தக்கபடி பால் கொடுக்குமாறு வளர்க்காது அவைகளைப் பார்ப்பவர் மனம் திடுக்கிடும்படி அவ்வளவு கேவல நிலையில் வைத்திருப்பதினால் பிரயோஜன மென்ன? மேல் நாடுகளில் இயந்திரக் கலப்பை கொண்டு வெகு ஆழமாக உழுது சாஸ்திர விதமாகப் பயிர் செய்து ஏராளமான இலாபத்தைப் பெற்று இன்புற்றிருக்கின்றனர். பசு மாடுகளையும் நல்ல முறையில் சுகாதாரத்தை அனுஷ்டித்து வளர்த்துப் போதிய பால்கொடுக்கும் நிலையில் வைத்து வருகின்றனர். இம்மேம்பாட்டிற்கெல்லாம் சாஸ்திரப்படிப்பே தக்க காரணமாம். சாஸ்திரப்படிப்பானது ஒருவேலையைக் குறைந்த செலவில், மிகுந்த தேகப் பிரயாசையின்றி, சின்னாட்களில், தகுந்த இலாபம் பெறும்படி செய்விக்கின்றது. அப்படியானால் நம் சமூகத்தாரின் தொழிலுக்கும் சாஸ்திரப் படிப்பு இன்றியமையாததா யிருக்கிறதென்று கூறவும் வேண்டுமோ? எத்தொழிலையும் சாஸ்திரீக விதமாய் நடத்தா விட்டால் அத் தொழிலினால் நாம் தகுந்த பிரதிப் பயனையடையமாட்டோமென்பது திண்ணம். எத் தொழிலிலும் விர்த்தியடையாது கஷ்ட நஷ்டங்களையே யடைந்து வருவதாயிருந்தால் அத் தொழிலினால் பிரயோஜனமென்ன?



இராமநாதபுரத்தில் 1930ஆ மே 24, 25 உகளில் நடைபெற்ற
சென்னை மாகாண முதலாவது யாதவ இளைஞர் மகாநாட்டுப் பிரதிநிதிகள்.



ஓர் சமூகம் எளிய நிலைமையிலிருந்து தக்க கல்விப்பயனை யடைய யாதிருந்தால் சர்க்கார் முன்வந்து உதவி புரிந்து அச்சமூகம் முன் னேற்ற மடையச் செய்ய வேண்டிய தவசியம். மற்றுமுள்ள மூடப் பழக்க வழக்கங்களையும் அறவே யொழிக்கச் சட்டமிட்டங்களையும் ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தாரின் கடமையாம். ஜப்பான் தேசத்திலுள்ள ஏழைமக்களை, கவர்ன்மெண்டார் தங்கள் செலவில் அந்நிய நாடுகளுக்கனுப்பி, சாஸ்திரப் படிப்புகள் படித்துவர ஏற்பாடு செய்து வருவதின் காரணமாய் அத்தேசம் வெகு சீக்கிரத்தில் முன் னேற்ற மடைந்து விட்டது. கல்வியில் மிகவும் பிற்போக்கையுடைய நம் சமூகத்திற்கு வேண்டி ஆதரவுகளைச் சர்க்கார் உதவி புரிந்திருக் கின்றனரா? என்று பார்த்தால் அப்படிக்கில்லை யென்றே தெரிகிறது. உலகத்தில் நாகரிக அரசாங்கங்களெல்லாம் தங்கள் பிரஜைகளை மாத் திரம் அரசாட்சி செய்வதுடன் நின்று விடாமல் அப்பிரஜைகளின் சமூக அபிவிருத்திக்கு ஒத்தாசையும் செய்து வருகின்றன. அது போல நம் சமூகத்தைக் கவர்ன்மெண்டார் ஆதரித்துப் பல வழிக ளில் உதவி செய்ய வேண்டு மென்று இதனால் அழுத்தமாய் அறிவுறுத்துகின்றோம்.

## சமூக ஒற்றுமை.

நம் சமூகத்தில் எத்தனையோ பிரிவுகளும், வகுப்புகளும் ஏற்பட் டிருக்கின்றன வென்று தெரிகிறது. ஒரே சமூகத்தில் பல பிரிவுக ளிருந்தால் அச்சமூகம் சீக்கிரம் முன்னேற்ற மடைய முடியாது. எங்கே பிரிவினையுண்டோ அங்கே பற்றுகளில்லாமல் போய்விடுறது. இப்பிரிவினைகள் நம் குல முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளா யிருக்கின்றன. நம் சமூகத்தில் ஒற்றுமை ஏற்பட்டாலன்றி நாம் உன்னத பதவி அடையோம். நம் சமூகத்தில் பிரிவினை என்னுங் கொடிய வியாதிக்குக் கலப்பு மணம் என்னும் மருந்தே அத்யாவசிய மானது. நம் சமூகத்தில் எவராயிருந்தாலும் யாதொரு பிரிவினை களையுங் கருதாது நம் சமூகத்திற் பிறந்த சன்மார்க்க ரெவரிடத்தும் சம்பந்தஞ் செய்துகொள்ள வேண்டியது அவசியம். இக்கலப்பு மண இயக்கம் வெற்றிபெற வேண்டுமானால் இளைஞர்களே பெரும்பாலும் தீவிர வேலைகள் செய்ய வேண்டும். நம் குல இளைஞர்களே முன் னின்று இக்கலப்பு மணத்திற்கு வேண்டிய தீர்மானங்களைச் செய்ய வேண்டும். இதற்கு முன் கூடியுள்ள பெரிய மகாநாடுகளில் இத்தீர்

மானம் நிறைவேறி இருந்தாலும் இதுவரை அனுஷ்டானத்திற்கு வராதது மிகவும் வருந்தப்படத்தக்கது. இதனால் இக்கலப்பு மணத்திற்கு வயது முதிர்ந்தோரின் ஆதரவுகளால் யாதும் நடக்கப்போகிறதில்லை என்று நன்கு புலனாகிறதல்லவா? சிலர் வயது முதிர்ந்தோரால் செய்யக்கூடாத விஷயங்கள் வாலிபர்களால் செய்ய முடியாது என்னுந் தப்பபிப்பிராயங் கொண்டிருப்பதை நாம் இங்குக் கண்டிக்கிறோம். பொதுவாக இளைஞர்களால் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லை என்றே கூறவேண்டும். அமெரிக்கா சுதந்திரம் பெற்றதும் துருக்கி, ருசியா தேசங்களின் சமூகக் கொடுமைகள் ஒழிந்ததும் ஜப்பான் முன்னேற்றமடைந்ததும் இளைஞர்களின் தீவிரச் செய்கைகளாலன்றி வேறல்ல. தற்காலத்தில் எல்லாத் தேசங்களிலும் வயது முதிர்ந்தோர்கள் எல்லா விஷயங்களையும் இளைஞர் பால் கொடுத்து மேல் நடத்தும்படி செய்து விடுவதை நாம் அறிந்துவருகிறோம். மகாத்மா காந்தியடிகளை நமது அகில இந்தியா காங்கிரஸ் மகா நாட்டிற்குத் தலைமை வகிக்க எவ்வளவோ வேண்டியும் அவர் தற்காலத்தின் இளைஞர்களின் உணர்ச்சியை அறிந்து வாலிப வீரரான பண்டிதர் ஜெவர்லால் நேரு அவர்களே காலப் பொருத்தமானவர் என்று அவரைத் தலைவராக்கினார். இதனால் உலகப் போக்குக்கு இளைஞர்களே பொறுப்பாளர்களென்று நன்கு தெரிகிறதல்லவா? ஆதலால் நம் சமூகக் கொடுமைகளில் ஒன்றாகிய வகுப்புகள் என்னுந் துஷ்டமிருகங்களை அதமாக்கக் கலப்பு மணமென்னும் ஆயுதத்தை இளைஞர்கள் தாங்கிச் செல்லவேண்டும்.

நமது சமூகத்தில் இன்னும் எத்தனையோ மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்திருக்கின்றன. அவைகளை யெல்லாம் நாம் அறவே யொழிக்கப் பாடுபடவேண்டும். இவ்விதக் கூட்டங்களில் வாக்கு சாதுரியத்திற்குத் தகுந்தவாறு பேசித் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றிக் காகிதங்களில் எழுதி மாத்திரம் வைத்து கடந்த மகாயுத்தத்திற்கு முன் ஜெர்மனி இங்கிலாந்துக்குப் பெல்ஜியத்தின் உடன்படிக்கை விஷயமாய் "ஓ! அது காகிதத்துண்டுதானே" என்று கூறிய வண்ணமாயிருக்கக்கூடாது. உலகத்தில் வாக்குஞ் செயலும் ஒன்று யிருப்பது கஷ்டம். ஆனால் இப்படிப்பட்ட மகாநாடுகளுக்கு அப்படிப்பட்ட கஷ்டங்களொன்று மிருக்கப்படாது. நமது சமூகத்தினரைப் பலா, மா, பாதிரி என மூன்று விதமாக ஒப்பிட்டுப் பிரிக்கலாம். பூக்குமுன் காய்க்கும் பலா மரத்தைப்போல் பிறர் யாரும் எடுத்துச்



சொல்லுமுன் தாங்களே யறிந்து செய்வன செய்கின்றனர். மாமரம் பூத்தபின் காய்ப்பதுபோல் பிறர் அறிவுறுத்தின பின்பு செய்ய முயலுகின்றனர். பாதிரி மரம் பூத்தும் காய்ப்பதில்லை. அதுபோல் பலர் இப்படிப்பட்ட மகாநாடுகளில் எத்தனை பிரசங்கங்கள் செய்தும் ஒரு செவியில் வாங்கி மறு செவியில் விட்டுவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு ஒரே விஷயத்தைப் பலர் அடிக்கடி எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. நம் குலப் பெருமைகளையே எடுத்துக் கூறிக் கொண்டிராமல் நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாயிருப்பவைகளை ஒழிக்க அஞ்சா நெஞ்சுடையவர்களா யிருந்து நம் சமூகத்தை முன்னணியில் கொண்டுவரச் சதா பாடுபட வேண்டியது நமது பெருங்கடமை யென்று மறுமுறையும் கூறுகிறேன்.

நமது சபைத்தலைவரவர்களின் பிரசங்கத்தைக்கேட்க மிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறீர்களென்பதை நான் நன்கறிவேன். உங்களுக்கும் அவருக்கும் மத்தியில் நின்று இன்னுங்காலத்தைக் கழிக்க எனக்கு இஷ்டமில்லை. இன்னும் அரை நிமிஷத்தில் என் பேச்சை நிறுத்திவிடுகிறேன்.

இன்று யாதவ இளைஞர் மகாநாடு இங்குக் கூட்டுவதற்கு மிகுந்த முயற்சியெடுத்துக்கொண்டு எங்களுக்கு ஊக்கமளித்த திருவாளர் அப்பாத்துரைப் பிள்ளையவர்களுக்கும், கொட்டகை, சாப்பாடு முதலிய வசதிகளை இளைஞர் மகாநாட்டிற்கும் கொடுத்துதவிய சென்னை மாகாண 5-வது மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் திருவாளர் ஆ. கார்மேகக் கோனாரவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இக்கொடிய வெயிலில் சிரமம் பாராமல் இங்கு வந்து எங்களைக் கனப்படுத்திய உங்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை மறுமுறையும் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்

தங்கள் விதேயன்

இராமநாதபுரம்
21—5—30.

K. கோபாலகிருஷ்ணக் கோன்.
வரவேற்புக்கழகத் தலைவர்.

இராமநாதபுரத்தில்கூடிய

சென்னை மாகாண

## யாதவ வாலிபர் மகா நாட்டின்

தலைவர்

மதுரை முனிசிபல் வைஸ்சேர்மெனும்,

ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வராள்

தேவஸ்தானம் கமிட்டி பிரசிடெண்டுமாகிய

திருவாளர், P. பிச்சைமுத்துக் கோனாரவர்கள்

நிகழ்த்திய தலைமைப் பேருரை.

வரவேற்புக் கழகத் தலைவரவர்களே! சகோதரர்களே! சகோதரிகளே! நமது சமூகத்தில் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த பலிருக்கச் சிறியோனாகிய என்னைத் தலைமை வகிக்க வரவேற்புக் கழகத்தார் அழைத்த பொழுது மறுக்கலாம் என்று நினைத்த போதிலும் நம் குல முன்னேற்றத்திற்குத் தொண்டுபுரிய ஏற்பட்ட சந்தர்ப்பத்தை விட்டுவிட மனமிலாது ஒப்புக்கொண்டேன். நான் உங்களுக்குத் தெரியாத புதிதான விஷயம் ஒன்றையும் சொல்லப்போவதில்லை. பல தடவைகளில் தாங்கள் கேட்டும், படித்தும் உள்ள சாதாரணவிஷயங்களையே திரும்பச் சொல்லப் போகின்றேன். நான் தலைமை வகித்து என் கடமையைச் செய்வதில் குற்றங் குறை இருந்தால் மன்னிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

### யாதவ வாலிப மகா நாட்டின் அவசியம்.

தென்னிந்தியாவில் முதல் முதலில் யாதவ வாலிப மகாநாடு கூட்டப்பெற்றது இதுவே முதல் தடவை யாகும். இவ்வாறு கூட்டக் காரணம் யாதெனப் பார்க்குமளவில் இதற்கு முன் 4, 5 வருடங்களாகப் பல யாதவ மகா நாடுகள் கூட்டி நன்றாய் விருந்துண்டு அங்கு நிகழ்த்திய பிரசங்கங்களைக் கேட்டு அங்கேயே விடுத்து வீடு சென்று தம் தம் சொந்த வேலைகளைப் பார்ப்பது வழக்கமாகிவிட்டபடியால் இனி வாலிபர்களாலே தான் நமது சமூகம் முன்னேற வேண்டுமெனக் கூட்டப்பட்டதெனத் தெரிகிறது. ஆனால் வாலிபர்களாகிய நாமோ நம் சக்தி நமக்குத் தெரியாதிருக்கின்றோம். இதற்குக் காரணம் நமது பெற்றோர்களாகிய வயதில் முதிர்ந்தவர்கள் வாலிபர்களைச் சுயேச்சையாகத் தங்கள் காரியத்தை அவர் அவர் சொந்தச் சக்தியையும் புத்தியையும் உபயோகப்படுத்தி முடித்துக்கொள்ளவிடாது எக்காரியத்தையும் தங்கள் வார்த்தையையும் யுக்தியையும் கேட்டுத்தான் நடக்கவேண்டுமென வற்புறுத்தலே யாகும். இதனால் வாலிபர்களின் சுதந்திரமும் சுயேச்சாதிகாரமும் தடைபட்டுத் தங்கள் வாலிப காலத்தில் நாட்டிற்கோ நமது சமூகத்திற்கோ தொண்டு புரிய முடியாமல் போகின்றது. அமெரிக்கா, துருக்கி இட்டாலி முதலிய தேசங்கள் வாஷிங்டன், கமால்பாஷா முசலோனி முதலிய வாலிப வீரர்களாலல்லவோ சீர்திருத்தப்பட்டது! பௌத்தர்; கிறிஸ்து, முகம்மது முதலியோர் தம் தம் மதங்களை ஸ்தாபித்து ஜனங்களிடம் போதித்தபோது அவர்களுக்கு வயது எத்தனை? அவர்கள் வாலிபர்கள் அன்றோ? ஆனால் நான் இங்குக் கூடியிருக்கும் நாம் அவர்களைப் போலவே சக்திவாய்ந்தவர்களென்று சொல்லவரவில்லை. அவர்கள் அந்தக் காலத்தில் அவர் அவர் சக்திக்குத் தகுந்தவாறு தேச முன்னேற்றத்திற்குப் பாடுபட்டிருக்க நாம் நமது சமூகமாவது முன்னேற்றமடையப் பாடுபட வேண்டு மென்பதே என்னுடைய ஆவலாகும்.

### சமூக ஒற்றுமை.

நமது சமூகத்தில் ஒற்றுமை இல்லாவிடில் எதுவும் செய்ய முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நம் முன்னேற்றத்திற்குக் கல்வியும் செல்வமும் இன்றியமையாததாக இருப்பினும் கூட ஒற்றுமை என்பது இல்லாவிடில் இவை இரண்டுமிருப்பினும் பிரயோஜனப்படாது. நாம் ஒற்றுமையாயிருக்கத் தடைகள் பல உள. அவைகள் நமது சமூகம் பல பிரிவுகளாகவும் பல விதமான பட்டப் பேர்களைக் கொண்டனவாகவும் இருக்கின்றது. இவைகள் நம்மால் ஏற்பட்டதில்லை. நமது முன்னோர்கள் காலத்தில் ஏற்பட்டது. முதலில் ஒருவரை யொருவர் முகமறியச் செய்வது அவர்களுடைய பெயர்களைக் கொண்டே யாகும். அவரவர் ஜாதியைக் காண்பிக்கும் பொருட்டு அவரவர் பேர்களின் கடைசியில், பிள்ளை, கோனார், ரெட்டியார் போன்ற பட்டப் பெயர்களைச் சேர்த்துக்கொண்டே வருவது வழக்கமாய்ப் போய்விட்டது. ஒருவன் எச்சாதியான் என்று அறிவதற்கு அவனுடைய பட்டப் பெயரே காரணமாக இருக்க வேண்டி

யிருக்கிறது. இவ்வாறிருக்க நமது இனத்தவர்கள் தற்காலம் எவ்வாறு இருக்கின்றார்கள் என்று பார்ப்போமானால் அவரவர்கள் தங்கள் ஊர்களுக் கேற்றவாறோ தங்கள் சௌகரியத்திற் கேற்றவாறோ பற்பல விதமாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள். இவைகள் முற்காலத்தில் இப்போதைய ரயில், மோட்டார் போன்ற இயந்திர வாகனங்கள் இல்லாததாலும் ஒருவரை யொருவர் அடிக்கடி சந்திக்க ஹேதுவில்லாததாலும் ஏற்பட்டதாகும். இதற்காக ஒருவரையும் குறைகூற முடியாது. ஆனால் நாம் வைத்துக் கொண்டிருக்கும் பட்டப் பெயர்களைக் கொண்டு ஒருவரை யொருவர் எச்சாதியினர் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. கோனார், நம்பி, தாஸ், செட்டியார், சேர்வை, பிள்ளை, நாயுடு என்ற பெயர்களுடைய யாதவர்கள் ஓரிடத்தில் புதிதாகச் சந்தித்து ஒருவரை யொருவர் விசாரித்தால் ஒவ்வொருவரும் தன்னைத் தவிர மற்றவர்கள் யாதவர் இல்லையென நினைக்க வேண்டுமே யல்லாது வேறில்லை. இவ்வாறு பல பட்டப்பேரில்லாமல் நமது ஜாதிக்கெனத் தனிப்பட ஓர் பட்டப்பெயரை எல்லோரும் வைத்திருந்தால் சுலபமாய்த் தன் இனத்தவர் எனத் தெரிந்துகொள்ள முடியும். இதைப்பற்றிப் பல மகாநாடுகளில் பேசியபோதிலும் கூடச் சரியான முடிவுக்கு வரவில்லை. தங்கள் பட்டப் பெயர்களை விட்டுப் பொதுவாக யாதவரெனக் குறிப்பிட்டுத் தெரியக்கூடிய பெயரை வைத்துக் கொள்வதால் எவர்க்கும் எவ்வித நஷ்டமும் ஏற்படாதென நினைக்கிறேன். ஆனால் சிலருக்கு வழக்கத்தைக் கைவிட மனமிராது தான். தற்காலம் தேசம் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில் பழைய பழக்க வழக்கங்கள் எல்லாம் தவிடு பொடியாகிக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன் சில ஜாதியினர் தங்கள் பழைய வழக்கத்திற் கேற்பத் தங்கள் குடுமிகளையும், காதுகளையும் பற்பல மாதிரி வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் நாகரிகமும் கல்வி யறிவும் அதிகமாக ஆக அப்பழக்கவழக்கங்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போயின. இவ்வாறிருக்க நாம் பெயர் வைத்துக் கொள்வதிலாவது ஓர் ஒற்றுமையைப் பாராட்டவேண்டு மென்பதே என்னுடைய கருத்தாகும். இவ்வாறு தாங்கள் வைத்துக்கொண் டிருப்பதை மாற்றப் பிரியமில்லாம லிருப்பவர்கள் தற்காலச் சீர்திருத்தத்திற் கேற்ப ஜாதிக் குறியைக் காண்பிக்காமல் இருக்கும் பொருட்டுச் சிலர் எவ்வாறு தங்கள் பட்டப் பெயர்களை எடுத்துவிடுகிறார்களோ அம்மாதிரியே எடுத்து விடுவது நலமென நினைக்கிறேன்.



நாம் எல்லோரும் யாதவர்களெனச் சொல்லிக் கொள்கின்றோம் ஆனால் நம்மவர்களுக்குள் பல பிரிவுகளாக அந்த இடையர், இந்த இடையர், அந்தத் தாலி கட்டுகிறவர்கள், இந்தத் தாலி கட்டுகிறவர்கள், அந்தச் சாமி கும்பிடுகிறவர்கள், இந்தச்சாமி கும்பிடுகிறவர்கள் என்ற பற்பல வித்தியாசங்களை வைத்துக்கொண்டு அவற்றிற் கேற்றவாறு பிரிவினைகளையும் ஒற்றுமைக் குறைவையும் வளர்த்துக்கொண்டே போகின்றோம். இவற்றை எல்லாம் ஒழித்தாலொழிய நமக்குள் வேற்றுமை நீங்காதென்பது திண்ணம். இவ் வேற்றுமையை நீக்க ஒரே வழிதான் உண்டு. அதாவது நம் யாதவர்களுக்குள் ஓர் வகுப்பிற்கும், மற்றொரு வகுப்பிற்கும் கலப்பு மணங்கள் நடந்து, நமது யாதவ ரத்தம் ஒன்று பட்டால் தான் நமக்குள் வேற்றுமை எல்லாம் ஒழிந்து ஒற்றுமை ஏற்படுமே யொழிய வேறு எவ்விதத்திலும் முடியாதென்று உறுதியாகக் கூறலாம்.

## கல்வி.

கல்வியைப்பற்றி ஒவ்வொரு மகா நாட்டிலும் வெகு விரிவாகச் சொல்லப்பட்ட போதிலும் நானும் கொஞ்சம் சொல்லவேண்டிய திருக்கிறது. கல்வியில் நாம் தற்காலம் இருக்கும் நிலைமை பரிதாபகர மான நிலையில் இருக்கிறது. ஒரு மனிதனுக்குச் சுவாசம் எவ்வாறு இன்றியமையாததோ அம்மாதிரியே மனிதனுக்குக் கல்வி இன்றி யமையாததாகும். நம்மவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவில்லாத வர்களாகவே இருக்கின்றார்கள். கல்வி கற்ற சிலரும் நகரங்களிலேயே வசிக்கிறார்கள். கிராமங்களில் வசிப்பவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப மனமோ, சக்தியோ, வசதியோ அல்லது அவர்களுக்கு வழி காட்ட அறிவாளிகள் இல்லாமலோ, தங்கள் குழந்தைகளின் வாழ்நாட்களை வீணாக்குகின்றனர். இதற்கெல்லாம் காரணம் நமது சமூகத்தில் அறிவிலும் செல்வத்திலும் சிறந்த பெரியோர்கள், சிரத்தையெடுத்துக் கொள்ளாததே யாகும். ஆனால் இவ் வருடமோ, மதுரையில், யாதவ குலதிலகராய் விளங்கி வருகின்ற திருவாளர், இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள் வருட மொன்றுக்கு ரூபாய் 500—0—0 நம் சமூக இலவச உயர்தரப் படிப்பிற்கு நன்கொடையாகத் தந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். இம்மாதிரி பலர் முன் வருவார்களாகில், நமது சமூகம் சில ஆண்டுகளில் ஏனைய சமூகங்களைவிட அதி விரைவில் மேன்மையடையு மென்பதில் ஐயமில்லை. கிராமங்களில் வசிக்கும் நம்மவர்கள் தங்கள் குழந்தைகளை

வாசிக்க வைக்கத் தக்க சக்தி யிருந்தபோதிலும் கூடத் தங்கள் பழய மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து மீளாமல் குழந்தைகள் பள்ளிக்குப் போகும் பருவகாலத்தில் தாங்கள் தொன்று தொட்டு செய்துவந்த தொழிலிலேயே பழக்குகிறார்களே யொழிய, அவர்களைக் கல்வி கற்க அனுப்புவதில்லை. கிராமங்களில் கட்டாய ஆரம்பக் கல்வி இருந்தாலொழிய நமது சமூகம் கடைத்தேறாது. ஒவ்வொரு கிராமத்திலும் நமது ஜாதிக் கூட்டமும் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. இவ்வாறிருக்கக்கூடிய கிராமங்களில் யாதவச் சிறுவர்களை ஆரம்பக் கல்விக்கு அனுப்பச் சக்தியுள்ள பெற்றோர் அனுப்பாவிடில் ஜாதியைவிட்டுத் தள்ளிவிட வேண்டுமென்ற கடுமையான கட்டுப்பாடு வைத்தால் ஒழிய இதற்கு வேறு வழியில்லை.

## கவர்ன்மெண்டாரின் போக்கு.


சர்க்காரே நமது முன்னேற்றத்திற்கு முதல் தடையாக இருக்கிறார்கள். நாம் சர்க்காரோடு சகல விதத்திலும் ஒத்துழைத்துங்கூட நாம் இதற்குமுன் பல மகாநாடுகளில் நமது உரிமைகளைக் கேட்டுச் சில தீர்மானங்கள் அனுப்பியும் கூடச் சற்றேனும் கவனித்தார்களில்லை. நாம் வரி கொடுப்பதில் ஏதாவது குறைத்துத் தருகின்றோமாவென்ன? அல்லது இன்றுவரை யேதாவது ராஜத்துவேஷமான காரியம் செய்திருக்கின்றோமா வென்ன? ஒன்றுமில்லையே?

(தொடரும்)

ஐயா!

சென்ற மாதம் 25உ இராமநாதபுரத்தில் கூடிய யாதவ வாலிபர் மகாநாட்டின் தீர்மானப்படி என் பட்டப்பெயராகிய "பிள்ளை"யை விலக்கிக் "கோன்" என வைத்துக் கொண்டேனெனத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுமன்னியில் இதை நம் "யாதவமித்திரனில்" பிரசுரிக்கும்படியும் வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
T. S. VENUNADHA KONE.
28—5—30.



சென்னை மாகாண 5-வது யாதவ மகாநாட்டுத் தொண்டர்கள் பின் அணியில் நிற்கிறார்கள்.
முன் அணியில் தலைவரும் பிரமுகர்களும் அமர்ந்திருக்கிறார்கள்.

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.



| | | |
|---|---|---|
| தாகுதி 1 | பிரமோதூத ஹு ஆனிமீ 1930-ஹு ஜூன்மீ | பகுதி 11 |



### கடவுள் வணக்கம்.

குன்றெடுத்து ஆநிரை காத்தபிரான்
கோவலனாய்க் குழலூதி யூதி
கன்றுகள் மேய்த்துத் தன்தோழரோடு
கலந்துடன் வருவானைத் தெருவில்கண்டு
என்றும் இவனை யொப்பாரை நங்காய்!
கண்டறியேன் ஏடி! வந்து காணாய்
ஒன்றும் நில்லாவளை கழன்று
துகிலேந்திள முலையும் என்வசமல்லவே.

இராமநாதபுரத்தில் கூடிய சென்னைமாகாண
ஐந்தாவது யாதவ மகாநாட்டில்
வரவேற்புக் கழகத்தலைவர் திருவாளர்,
ஆ. கார்மேகக் கோனார் அவர்கள்
கூறிய வரவேற்பு விரிவுரை.

கண்ணியமிகுந்த தலைவர்களே! குலாபிமானத்திற் சிறந்தவான்களே! வரவேற்புக்கழகத்துச் சார்பாகவும், என் சார்பாகவும் நங்களுக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

தென்னாட்டுச் சரித்திர சம்பந்தமான நகரங்களில் முக்கியமானதாயும், புண்ணியச் சேதுகாக்கும் கண்ணியம் வாய்ந்தவர்களும் அமிழ்தினுமினிய நமது தமிழ் மொழியை வழிவழியாகப் புரந்து வருபவர்களுமான மாட்சிமிக்க சேதுபதி அரசர்களது இராஜதானியாயும் விளங்கும் முகவை என்னும் இராமநாதபுரத்தில் இந்த ஐந்தாவது யாதவ மகாநாட்டைக் கூட்டப்பெறும் பாக்கியமும் உங்களையெல்லாம் இன்று சந்திக்கும் சமயமும் எங்களுக்குக் கிடைத்தது பற்றி அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

1928-ம் டிசம்பர் மீ 26, 27 தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்ற நமது நான்காவது மகாநாட்டில், ஐந்தாவது மகாநாட்டை இராமநாதபுரம் ஜில்லாவில் நடத்துவதாக நாங்கள் ஒப்புக்கொண்டு அழைத்தபடி 1929-ம் டிசம்பர் மீத்திலேயே மகாநாட்டை நடத்தவேண்டியிருக்கவும் அவ்வாறு நடத்தாது காலந் தாழ்த்துப் போனதுபற்றி நாங்கள் மிகுந்த விசனமுறுவதோடு தங்களை மன்னிப்புங் கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாகவிருக்கின்றோம். சென்ற வருடம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்த ஜில்லாவில் ஏற்பட்ட மழை வெள்ளங்களாலும், கிராமங்களில் பரவியிருந்த தொத்து நோய்களினாலுமே மகாநாட்டைக் கூட்டிவைக்க முடியாது போயிற்று. வெய்யிலின் கொடுமை மிகுந்த இக்கோடை காலத்தில் தேகசிரமங்களைப் பாராது எங்களது அழைப்புக்கிணங்கித் தாங்கள் நெடுந்தூரங்களிலிருந்து விஜயஞ்செய்திருப்பது குலாபிவிர்த்தியில் தங்களுக்கு இருக்கும் அளவற்ற சிரத்தையே நன்கு வெளிக்காட்டுகின்றது.

இப்போது இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் திருவாளர், S. முத்துசாமிக் கரையாளர் அவர்களை மிகுந்த ஆனந்தத்தோடும், உற்சாகத்தோடும் வரவேற்கின்றோம். நம் தலைவர் அவர்களை, திருவாங்கூரிலும் தமிழ்நாட்டிலும் அறியாதார் சிலரேயாவர். தலைவர் அவர்கள் பெருஞ் செல்வமும், செல்வாக்கும் படைத்தவர்கள். பெருஞ்செல்வம் அடைந்திருப்பதென்பது சாமானியம். அதனோடு கல்விச் செல்வமும் ஒருங்கே வாய்க்கப் பெறுதலே அருமையாகும். "இருவேறுலகத்தியற்கை திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்ற தேவர் திருவாக்கு உண்மையனுபவம் நிறைந்ததன்றோ? தலைவரவர்கள் குடும்பம் செல்வக்களிப்பாலேற்படும் மௌடீகநிலைமைக்கு இடந்தராது கல்வியையே கருந்தனமாகக் கொள்ளும் இயற்கை



பெரிதும் வாய்ந்தது. இதனாலேயே தலைவர் அவர்களும், அவர் தம் வழியினரும் உயர்தர ஆங்கிலக் கல்வியிலும், தமிழ்க் கல்வியிலும் சிறப்பு வாய்ந்து திகழ்கின்றார்கள். தலைவரவர்கள் தளராத முயற்சியும், பெருங் காரியங்களைச் சாதிக்கும் ஆற்றலும்; லோகோபகார குணங்களும் வாய்ந்தவர்கள்.

தற்போது நம் நாட்டுக்கு வேண்டிய தருமம் வித்தியா தருமமே என்ற உண்மையையறிந்து இவர்கள் தமது பிறப்பிடமாகிய செங்கோட்டையில் ஓர் உயர்தர வித்யாசாலையை (High School) ஸ்தாபித்து நடத்திவருவதே இவர்களது லோகோபகார குணத்தை நன்றாகக் காட்டுகின்றது. மேலும் தலைவர்கள் நம் சமூகச் சீர்திருத்தங்களில் மிகவும் கருத்துடையவர்களென்பதை இங்கு நாம் குறிப்பிட வேண்டுவதவசியமாகும். நமது குலத்தில் ஏற்பட்டிருக்கும் வகுப்புப் பிரிவினைகளையெல்லாம் அறவேயொழித்து நாம் யாவரும் ஒரே சமூகத்தினர் என்னும் ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கி நமக்குள் வகுப்பு வித்தியாசமின்றிக் கலப்பு விவாக முறையைப் பரவச் செய்ய வேண்டுமென்ற தீவிர முயற்சியுடையவர். இவர்கள் இச்சீர்திருத்தத்தைக் கேவலம் பேச்சளவில் நிறுத்தாது நடைமுறையிலும் செய்து காட்டியிருப்பதை நம்குலப் பிரமுகர்கள் நன்கறிவார்கள். சுருங்கக் கூறுமிடத்துத் தலைவரவர்கள் சமூக சீர்திருத்தத்துக்கு ஓர் முன் மாதிரியாகத் திகழ்கின்றார்கள் என்று தயங்காது கூறலாம். இத்தகைய அருங்குணங்கள் வாய்ந்த இவர்களை இம்மகாநாடு தலைவராகக்கொண்டது நமது பாக்கியமென்றே சொல்லலாம்.

### மகாநாடுகள்.

தற்காலத்தில் நாட்டில் ஒவ்வொரு வகுப்பினரும் மகாநாடுகள் கூட்டி வருகின்றனர். இத்தகைய மகா நாடுகள் ஒரு நாட்டின் பொதுவான முன்னேற்றத்திற்கு அநுகூலமாக இருக்குமென்பது பெரியோர் பலர் அபிப்பிராயமாகும். நமது சமூக முன்னேற்றங் கருதி இதுவரை நான்கு மகாநாடுகள் முக்கிய நகரங்களில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றிருக்கிறது. மகாநாட்டுக்கு விஜயமான பிரதிநிதிகளோ பல்லாயிரக் கணக்கினராவர். மகா நாடுகளில் நிறைவேற்றிய தீர்மானங்களோ நமக்கு மிகவும் அவசியமானவைகளாகும். இஃது இவ்வாறாக, நம்மவர்களுள் ஒரு சிலர் மகா நாடுகளால் இது வரை விளைந்த பயன் யாதென்று அடிக்கடி, கேட்கக் கேள்விப்படு

றோம். இம்மகா நாடுகள் அவர்கள் கருதுவதுபோல் விசேஷ பய
னைக் கொடுக்காவிடினும் நம் சமூக நிலைமை இவ்வாறிருக்கின்றதென்
பதை விளக்கி, சமூகம் முன்னேற்றமடைதற்குரிய உபாயங்களைக்
காட்டி, சகோதரத்துவ உணர்ச்சியைப் பெருக்கி ஒற்றுமையை உண்
டாக்கி ஒவ்வொருவர் உள்ளத்திலும் சமூகத்தொண்டு செய்யவேண்
டுமென்ற கிளர்ச்சியை நாட்டியிருக்கின்றனவென்று சந்தேகமின்
றிக் கூறலாம். எனினும் இவற்றின் பயன் இவ்வளவில் நில்லாது,
மகாநாடுகளில் ஆலோசித்துச் செய்யும் தீர்மானங்களை நடைமுறை
யில் கைக்கொள்ளச் செய்வதற்கு அந்தந்தச் ஜில்லா பிரதிநிதிகள்
தங்கள் உள்ளத்தில் குன்றாத முயற்சி கொள்ள வேண்டுவது அவசிய
மாகும். இதுவரை செய்துள்ள தீர்மானங்களெல்லாம் எழுத்து
வடிவத்திலேயே இருக்கின்றனவன்றி அவை அநுட்டானத்திற்கு
வந்துள்ளன வென்று சொல்ல முடியாது. மகாநாடுகளில் செய்யப்
படும் தீர்மானங்களைப் பயனுறச் செய்யாமல் வாசாகைங்கர்யமாகவே
இன்னும் செய்து வருவோமானால் இம் மகாநாடுகளின் பேரால் நாம்
வருஷம் ஒன்றுக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை நம் சமூகம்
இழக்கும்படி செய்தவர்களாவோமென்பதில் சந்தேகமில்லை.

## நமது சமூகம்.

நமது சமூகமோ உலகத்தில் பழமையிலும் சரித்திர சம்பந்தத்
திலும் மிகச் சிறந்ததாய் இமயாஜல முதல் குமரி முனை வரை இடை
விடாது பரவியிருக்கும் ஒரு பெரிய சமூகமென்பது யாவரும் அறிந்
ததே. நம் குலத்தின் பழைய சிறப்புக்களையும் பெருமைகளையும்
முன் நடந்த மகாநாடுகளில் தலைவர்கள் தகுந்த ஆதாரங்களுடன்
மிகவும் விரிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மீண்டும் நாம்
பழய பெருமைகளையே பாராட்டிக்கொண்டிருப்பதால் பயனொன்று
மில்லை. தற்காலத்தில் நாம் எந்நிலையிலிருக்கின்றோம் என்னும்
ஆராய்ச்சியே இப்போது செய்யவேண்டிய காரியமாகும். தற்காலத்
தில் நம் சமூகத்தின் பிற்போக்கை முற்போக்குள்ளதாகச் செய்வதே
நமது இப்போதய வேலையாகும். மகாநாட்டின் உயரிய லட்சியமும்
இதுவேயாகும்.

## கல்வியும் பொருளாதாரமும்.

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்றால் அது கல்
வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்த நிலையை அடைந்திருக்கும்



என்று அறிய வேண்டும். முன்னேற்றமென்பது இவ்விரண்டினையே
பொறுத்ததாகவிருக்கின்றது. நம் சமூகம் மனித வாழ்க்கைக்கு நற்
சாதனமாகிய கல்வி விஷயத்தில் எப்படியிருக்கின்றதென்று அறிய
விரும்பினால் அதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதனை
வெளிப்படையாகக் கூற விரும்பினால் கல்வியில்லாச் சமூகத்தினுள்
நம் சமூகம் அக்கிராசனம் வகிக்க மிகவும் யோக்கியதை யுடையதாய்
விளங்குகிறதென்று சொல்லலாம். நமது குலத்தில் பழைய பெரு
மையை ஒட்டிச் சர்க்கார் இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர்
வரை நம் சமூகத்தைப் படித்த சமூகமென்றே பாவித்து நம்மை
வின் பெருமையை மாத்திரங் கொள்ளச் செய்துவிட்டனர். நல்
வேளையாய்ச் சில வருடங்களுக்குமுன் நம் குலத்தலைவரில் சிலர் இது
விஷயமாய் விழித்து நம் சமூகத்தைப் படிப்பில் பிற்போக்குள்ள
சமூகத்துள் ஒன்றாகச் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டனர். அது
முதல் நம் சமூகம் கல்வியில் பிற்போக்குடைய சமூக ஜாப்தாவில்
சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதனால் நம் குலத்தில் கல்வி பயில
விரும்பும் மாணாக்கர்களுக்குப் பல சௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்
றன. இனி உண்மையாகவே கல்வியில் முற்போக்குடைய சமூகத்
தில் சேர்க்கத்தகுந்த யோக்கியதையை யடைய முயலுவது நம் கட
மையாகும். அநுபவத்தில் அறிந்த மட்டில் நம் குலச் சிறுவர்கள்
கூரிய மதியை யுடையவர்களேயன்றி மந்தப் புத்தியை யுடையவர்க
ளல்லர். அவர்களது கூரியமதி யொளியானது கல்வியில்லாப் பெற்
றோர்களின் அறியாமை எனும் அந்தகார நடுவில் நக்ஷத்திரங்களாய்
மழுங்கிக்கொண்டிருக்கின்றது. சிலர் தாம் அப்போதடையும் சிறிய
லாபத்திற்காக இளைஞர்களது பிற்கால வாழ்க்கை நலத்தைச் சிறிதும்
சிந்தியாது அவர்களைக் கெடுக்கின்றனர். குழந்தைகள் கல்வி கற்பது
அடாத காரியமென்று சொல்லும் பெற்றோர்களுக்கு நம் சமூகத்தில்
கணக்கில்லை. கல்வியைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்
களை விரித்துரைத்தால் அது ஒரு பெரிய விந்தையாயிருக்கும். கல்
வியே அக இருளை ஒட்டி, உயிருக்கு ஒளியைத் தந்து, இம்மை மறு
மைப் பயன்களை யடைதற்குரிய வழிகளை அறிவித்து, ஆண்மையை
யும் தைரியத்தையுங் கொடுக்கும் சிறந்த செல்வமென்பதனை அறி
யாதவர்களாயும் அதனை அடையாதவர்களாயும் நம்மவர்களுள் அநே
கர் நாகரிக வாழ்க்கையினின்றும் விலகி, தைரியங்குன்றி அடிமைப்
புத்தி மேலிட்டவர்களாய் இருக்கின்றனர்; இதனை யோசிக்குமிடத்து

இப்போது நம் சமூகத்தில் கல்வியைப் பரப்புதற்குரிய உபாயங்களைக் கண்டு பிடிப்பதைவிட இம்மகாநாட்டிற்கு வேறு சிறந்த வேலை இருக்கின்றதென்று தோன்றவில்லை. கிராமங்களில் வயது முதிர்ந்தவர்களுள் பலர் இளைஞர்களின் கல்விப் பயிற்சிக்கு முட்டுக்கட்டைகளாயிருந்து வருவதை இனியேனும் இங்கு வந்திருக்கும் வாலிபர்கள் அடியோடு ஒழிக்க வழிதேட வேண்டியது இன்றியமையாத காரியமாகும். நம் சிறுவர்களை 12 வயது வரையேனும் கல்விபயிலச் செய்யவேண்டுமென்னும் நிபந்தனையை இம்மகாநாடு அழுத்தமாக விதித்து அதனை மகாநாட்டுப் பிரதிநிதிகள் மூலம் பயன்படச் செய்ய வேண்டுவது முக்கியமானதாகும்.

நமது சமூகத்தின் செல்வ நிலைமையோ வெகு காலமாக வளர்ச்
சியில்லாது ஒரே நிலைமையிலிருந்து வருகின்றது. இதை யோசிக்கும்
போது பொருள் வருவாய்க்கு நம்மவர்கள் மேற்கொண்டிருக்கும்
பூர்விகமான தொழில் அனுகூலமாக விருக்கவில்லை என்று தெரி
ன்றது. நம்மவர்கள் பெரும்பாலும் ஆடுமாடுகளை வளர்த்தலையும்
டழுது பயிரிடுதலையுமே முக்கிய தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.
தனுள் ஆடுமாடுகளை வைத்துப் பரிபாலித்தல் என்பது தற்காலத்
தில் நமக்கு மாத்திரமல்லாமல் பிறவகுப்பினருங் கைக்கொள்ளுந்
தொழிலாக மாறியிருக்கின்றது. நம்தேசத்தில் இத்தொழிலினால்
ரும் ஊதியத்தையும் அமெரிக்கா முதலிய மேல் நாட்டில் வரும்
ஊதியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனையோ மடங்கு நம்
நாட்டு ஊதியம் தாழ்ந்ததென்று விளங்கும். காரணம் தற்காலத்தில்
ால் நடைகள் வளர்ப்பு முறை, விவசாயமுறை புதுமுறையில் கவனி
ாமல் பழைய முறையையே கைப்பற்றி வருவதாம். இனிமேல் இத்
தொழில் முறையால் நம் சமூகம் மிகுந்த பொருள் வருவாயை
அடையக்கருதினால் இத்தொழில் முறை சாஸ்திரீய முறையில் கை
யாளப்பட வேண்டும். அம்முறையை நம்குலத்துக் கூரிய அறிவுடைய
இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய சௌகரியங்களை நம்
பொதுஜன நிதிகளின் மூலமாய்ச் செய்வதற்கு நாம் முன் வரவேண்
டும். இரண்டாவதாக நம் சிறுவர்களுக்குப் போதிய கல்வி பயில்
வித்து அவர்களை அயல்நாடுகளுக்கும் உள் நாடுகளுக்கும் அனுப்பி
வியாபாரம் கைத் தொழில் துறைகளில் பழகும்படி செய்யப் பெற்
றோர்கள் முன் வருதல் பொருளாதார நிலைக்கு அவசியமாகும்.



## பலவகைச் சீர் திருத்தங்கள்.

தற்காலத்தில் நம்மவரது கிராமவாழ்க்கையில் சுகாதார முறை மிகவும் சீர்கேடான நிலைமையிலிருக்கிறது. அவர்கள் தங்கள் உடலைச் சுகமாகப் பேணுதற்கு உரிய சுகாதார முறைமையை அறியாமையினால் வாழும் வீடுகளையும், சுற்றுப் புறங்களையும் நாகரிகமாகவும் சுத்தமாகவும் வைக்கிற தில்லை. இவ்விஷயத்தில் நம் சமூகம் திருத்தமடைவது மிகவும் விரும்பத் தகுந்த விஷயமாகும். இச் சீர்திருத்தமானது உடற்சுகம் பயப்பதன்றி பிறர் மதிப்பதற்கும் ஏதுவாயிருக்கின்றதன்றோ?

நம் சமூகத்தில், படித்தறியும் கல்வியில்லாக் குறையால், மூடப் பழக்க வழக்கங்கள் அதிகமாக வேரூன்றியிருக்கின்றன. மதக் கொள்கைகளும், தெய்வ பூசனைகளும் அநாகரிக நிலையை யடைந்திருக்கின்றன. இஃதன்றியும் நம்மவர்களுள் சிலர் இன்னும் ஆங்காங்கு நம் குல இயற்கைக்கும் பெருமைக்கும் அடாத இழிவான செய்கைகளை வயிற்றுப் பிழைப்புக் காரணமாகச் செய்து வருகின்றார்கள். ஒருவன் உயர்ந்தவனென்பதனையும், தாழ்ந்தவனென்பதனையும் அவனவன் செய்துவரும் தொழில்களே மாத்திரைக் கல்லாகக்காட்டி நிற்கும் என்பது உறுதி. இங்ஙனமிருக்க இழிதொழில்களைச் செய்து கொண்டு ஜன சமூகத்தில் நன்மதிப்பைப்பெற ஒருவன் நாடுதல் இயலுவதாகுமோ?

சென்னை இராஜதானியில் இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களைச் சேர்ந்த கிராமங்களில் ஆடு மாடுகளை வளர்க்குந் தொழிலையுடைய நம்மவர்களிடத்தில் ஒரு சிலர் தங்களைப் பாடியப்பன் என்று சொல்லிக்கொண்டு சில வீறான முகாந்திரங்களைக் காண்பித்துத் தஸ்தாவேசுகள் மூலங் கட்டுப்படுத்திக் கடா, செய் முதலியவைகளைக் காணிக்கையாகப் பரம்பரையாய்த் தங்களுக்குச் செலுத்தி வரும்படி வற்புறுத்தி வருகின்றனர். இங்ஙனம் இவர்கள் எழுதிக் கொடுப்பது அநாகரிக காலத்தில் நிகழ்ந்து வந்த அடிமை ஓலையாகவே யிருக்கின்றதென்று கூறுவதன்றி வேறு என்னவென்று கூறலாம்? சுயமரியாதை இயக்கம் அதிதீவிரமாகப் பிரவிவரும் இக்காலத்தில் இத்தகைய அசீதத்தைப் பிறர் நம் சமூகத்திலிழைக்க நாம் பார்த்துக்கொண்டிருப்பது நம் சமூகப் பெருமைக்கோர் பெரிய களங்கமாகும். நியாயஸ்தலங்கள் மூலமாகவோ வேறு வகையாகவோ இந்த அநியாயத்தைத்

தடுக்க இம் மகாநாடு தக்க முயற்சியைத் தாமதமின்றி அதிவிரை
வில் மேற்கொள்ளவேண்டும்.

தற்காலத்தில் மதுவிலக்குப் பிரசாரத்தில் நாமும் கலந்து அத்
தீய வொழுக்கம் நம் சமூகத்திற் பரவவிடாது தடுப்பதும் நம்
கடமையாகும்.

இன்னும் நமது சமூகத்தினின்று ஒழிக்கவேண்டிய குறைவு
பாடுகளும், மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களும் எவ்வள
வோ இருக்கின்றன. அவற்றை யெல்லாம் பற்றி இப் பிரசங்கத்தில்
விவரித்துக்கொண்டிருந்தால் தலைவருடைய பிரசங்கத்தைக் கேட்க
ஆவலோடிருக்கும் உங்களது வெறுப்புக்கு ஆளாவேனென்று அஞ்சு
கின்றேன். எனினும் இன்னும் இரண்டொரு விஷயங்களோடு என்
உரையைப் பூர்த்திசெய்து விடுகின்றேன். வருஷத்திற் கொருமுறை
கூடும் இம்மகா நாடுகளைக் கொண்டு பல சீர்திருத்தங்களைச் செய்து
கொள்ளக் கருதுவதோடு நில்லாது ஒவ்வொரு பிரதான நகரங்களிலும்
ஒவ்வொரு பெரிய கிராமங்களிலும் யாதவ சமூக சங்கங்கள் நிறுவி
அவற்றின் மூலம் அவ்வப்பகுதிகளைச் சீர்திருத்த முயலுவதும் உசித
மாகும். நடந்த மகாநாடுகளில் தீர்மானித்த தீர்மானங்களுள் இவ்
வகையான சங்கங்களை ஸ்தாபிப்பதும் ஒன்றென்பதை இப்பொழுது
நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். இராமநாதபுரம் ஜில்
லாவில் அநேக சங்கங்களும் ஆரம்பப் பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்
படவேண்டியது அவசியமாகும். இந்த இராமநாதபுரம் ஜில்லா யாத
வர்களால் 1907-ஆல் யாதவகுல தர்ம பரிபாலன சங்கம் என்ற பெய
ரோடு ஓர் சங்கம் ஏற்பட்டு 10 வருடங்கள் நன்கு நடைபெற்று வந்
தது. அக்காலத்தில் இச் சங்கத்தாலுண்டான நன்மைகளும் திருத்
தங்களும் பெருமைகளும் அநேகம். இச்சங்கம் இப்போது அநேக
வருஷங்களாக யாதொரு வேலையும் செய்யாது ஆழ்ந்த நித்திரையி
லிருக்கிறது. இச்சங்கம் திரும்பவும் இச்சமயத்தில் கண்விழிக்குமா
னால் இந்த ஜில்லாவில் சமூக சீர்திருத்தங்கள் பல நல் முறையில் ஏற்
படும். சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பே சமுதாய சீர்திருத்தத்
திற்குச் சங்கங்கள் அவசியமென்று கருதிக்கொண்டே மேதாவிக
ளான இந்த ஜில்லா யாதவத் தலைவர்களை அச்சங்கத்தைத் திரும்பவும்
அபிவிருத்திக்குக் கொண்டுவர முயலவேண்டுமென்று இந்தப் பொது
ஜனங்களின் சார்பில் நான் கேட்டுக்கொள்கின்றேன் நிற்க.



இம்மகா நாட்டை இராமநாதபுரத்தில் நடைபெறச் செய்யும்
பொறுப்பு இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களுக்கே உரியதாக விருக்
கவும், "யாதவ மகாநாட்டு ஸ்தாபகர்" என்னும் பட்டத்துக்குரிய
சென்னை, புரசவாக்கம் திருவாளர் அப்பாத்துரைப் பிள்ளை அவர்களும்,
மதுரை முனிசிபல் கவுன்சிலரும் பிரபல புத்தக வர்த்தகருமாகிய
திருவாளர் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்களும் இராம
நாதபுரம் ஜில்லாவில், மகாநாட்டு விஷயங்களுக்காக நடந்த பிரசாரங்
களில் கலந்து, பலவகையிலும் எங்களுக்குப் பெரிதும் உதவிபுரிந்தார்
கள். இவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்தி
அவர்கள் பல்லாண்டு உடல் நலத்தோடும் வாழ இறைவனை வழுத்து
வதன்றி எங்களால் செய்யக்கூடிய கைம்மாறு வேறு யாதிருக்கின்
றது? அன்றியும் திருவாளர் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்
கள் சகோதரரும் பொதுக்காரியங்களில் ஈடுபாடுடையவருமான திரு
வாளர் இ. இராமசாமிக் கோனாரவர்களும், மதுரை முனிசிபல் வைஸ்
சேர்மனும், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வராள் தேவஸ்தான நிர்வாக
சபைத்தலைவருமான திருவாளர் P. பிச்சைமுத்துக் கோனாரவர்களும்,
மதுரை முனிசிபல் கவுன்சிலர் திருவாளர் வ. முருகக்கோனாரவர்களும்,
மதுரை பிரபல வாசனைத்திரவிய வியாபாரிகளான திருவாளர் மாலைக்
கோனார் அவர்களும் இம்மகாநாடு சம்பந்தமான காரியங்களில் கலந்து
சிறந்த உதவி புரிந்தார்கள். இவர்களுக்கும் எங்கள் வந்தனமும்
நன்றியறிதலும் உரியதாகுக.

கனவான்களே! எங்களது அயர்ச்சியினாலும், முடியாமையாலும்
உங்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய உபசரணையில், குறைவுகள்
ஏற்பட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் தங்களுக்கு இயற்கையா
யுள்ள பெருங்குணங்களால் பொறுத்து எங்கள் விஷயத்தில் அன்
புள்ளவர்களாக இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். இம்மகா
நாட்டில் பெண்களின் முன்னேற்றங்கருதிய தீர்மானங்களையும் நிறை
வேற்றுவீர்களென்று எதிர்பார்க்கின்றோம். தாங்களும் தலைவரவர்
களும் நம் மகாநாடும் நீடூழிவாழவும் நம் சமூகம் தழைத் தோங்கவும்
ஸ்ரீ கண்ணபிரான் திருவடித் தாமரைகளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் அன்புமிக்க

ஆ. கார்மேகக் கோன்,
வரவேற்புக் கழகத் தலைவர்.

இராமநாதபுரம்.
24—5—30

## சென்னைமாகாண

# யாதவ வாலிபர் மகாநாடு.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறிருக்க ஏன் நமது சுதந்திரங்களை இன்னும் கொடுக்காம
லிருக்கிறார்கள் என்று கேட்கின்றேன். நம்மவர்கள் பெரிய உத்தியோ
கத்தில் இல்லாததே காரணமாகும். கவர்ன்மெண்டு உத்தியோகத்தில்
நமது சமூகத்தார் இல்லாவிடில் பிற சமூகத்தார் இருக்கின்றார்களே!
அவர்களாவது கவனிக்கவில்லையா என்ற கேள்வி பிறக்கக்கூடும். எவ்
வாறு நாம் நமது சமூகம் முன்னேற வேண்டுமென இம்மாதிரி மகா
நாடுகளைக் கூட்டிப் பிரயத்தனப் படுகின்றோமோ அதேமாதிரி, ஒவ்
வொரு ஜாதியினரும் மதஸ்தர்களும் பிரயத்தனப்படுவதால் அந்தந்த
வகுப்பைச் சேர்ந்தவர்கள், தங்கள் தங்கள் சமூகத்தை உயர்த்த
அங்கங்கே பாடுபட்டு உதவுகின்றனர். ஆகையால் நமது சமூகத்
தவர்கள் எப்பொழுது பெரிய உத்தியோகங்களை அடைவது? நாம்
எப்பொழுது முன்னேறுவது? என்பது தெரியவில்லை. இவையெல்
லாம் கவனிக்க வேண்டியவர்கள் கவர்ன்மெண்டார் அல்லவோ! நா
மும் சர்க்காரிடம் இவ்வளவு நாள் முறையிட்டு நேர்வழியில் நமக்
கேற்பட்ட சுதந்திரங்களைக் கொடுக்கும்படி மன்றாடிக்கேட்டுங்கூட
ஒன்றும் முடியவில்லை. சட்டசபையேற்பட்டுச் சுமார் 9 வருடங்க
ளாகியும் நாளதுவரை நமது சமூகத்தவர் எவரையேனும் நியமனம்
செய்ய இந்தக்கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமில்லாதது என்னகாரண
மோ தெரியவில்லை. நம்மவர்கள் சுமார் எழுலக்ஷம பேர்கள் இருந்
துங்கூடப் பல்வேறு இடங்களில் சிதறுண்டு வாழ்வதாலும் பலர்
ஏழைகளாக இருப்பதாலும், சட்டசபை எலக்ஷனில் தேர்ந்தெடுக்க
முடியவில்லை. ஸ்தலஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் கொடுக்கும்படி
யும் நம்மவர்க்குள் வாசித்தவர்கள் வெகு சிலரேயாகையால் அவர்
களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கும்படியும், மேய்ச்சல் காடுகள்
தர்க்காஸுமூலம் கொடுக்கும்படியும் பலதீர்மானங்கள் ஒவ்வொரு மகா
நாட்டிலும் நிறைவேற்றி யனுப்பியும், பத்திரிகை வாயிலாக முறை
யிட்டும் பயனில்லாமல் போயிற்று. ஆகையால் அரசாங்கத்தார் நமக்
குள்ள சுதந்திரங்களைச் சரிவர அளிக்காவிடில் அவர்களுடன் ஒத்
துழைக்கக் கூடாதென நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



## தொழில் முயற்சி.

கால்நடை வளர்ப்பதே நமது சமூகத்தாரின் புராதனத் தொழி
லாக இருந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பால்,
தயிர், நெய் விற்பதே நம்மவர்க்குள் பெரும்பாலோர் செய்யும் வியா
பாரமாகவே யிருக்கிறது. இவ்வியாபாரத்தால் நம்மவர்கள் பெரிய
தனவந்தர்களாக முடியாமல், சாப்பாட்டிற்கு மாத்திரம் போதிய
அளவு சம்பாதிக்க முடிகிறது. ஆனால் நாட்டில் நால் நூற்றுப் பணம்
சம்பாதிப்பதைவிடப் பன்மடங்கு லாபமுள்ளதாக இருக்கின்றது.
இதனால்தான் ஏனைய ஜாதியினரும் கூடத் தற்காலம் நமது வியா
பாரத்தைச் செய்து வருகின்றனர். தற்கால நாகரிகத்திற் கேற்ப
ஐரோப்பியர்போல நவீனமுறையில் நடத்த வேண்டுமெனச் சிலர்
கூறுகின்றனர். இவ்வாறு செய்ய ஏராளமான திரவியமும், விசால
மான மேய்ச்சல் தரையும் வேண்டும். இவ்வாறு கிடைத்துச் செய்
தாலும்கூட நமது ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கே சொந்த
மாக, சுயேச்சையாகத் தங்கள் சக்திக் கேற்றவாறு சம்பாதித்து
வாழ்வதற்குக் கெடுதல் நேரிடுமென்றே நான் பயப்படுகின்றேன்.
ஆகையால் சொல்ப ஊதியத்தைக் கொடுக்கக்கூடிய இத்தொழிலைச்
செய்வதைவிட நம்மவர்களைக் கல்விகற்பித்து உத்தியோகத்திற்கோ,
வேறு வியாபாரங்களுக்கோ, வேறு தொழிலுக்கோ அனுப்புவது
சிறந்ததாகு மென்று நினைக்கிறேன்.

## தேகப் பயிற்சி.

நமது முன்னோர்கள் வீரர்களாகவும் திடகாத்திர முள்ளவர்
களாகவும் இருந்தார்களெனச் சரித்திர மூலம் தெரிகின்றது. ஆனால்
இப்பொழுதோ நாம் இருக்கக்கூடிய நிலைமை நமக்கே தெரியும். ஓர்
மனிதனுக்கு எவ்வித வசதிகள் இருந்தபோதிலும்கூட அவனது
உடல் வலிமையில்லாமலிருப்பின் அவன் எவ்வித சுகத்தையும் அனு
பவிக்கப்போவதில்லை. சரீரத்தைத் திடகாத்திரமாக வைத்துக்கொள்
ளத் தேகப்பயிற்சியே இன்றியமையாததாகும். இதற்கு முன்னிருந்த
நம் பெரியோர்கள் ஒவ்வொரு இடத்திலும் தேகப்பயிற்சி சாலைகள்
அமைத்து அதில் நம் வாலிபர்களைப் பயிற்சி செய்வித்து அதனால்
அவர்கள் வீரசூர, பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். ஆகையால்
நாம் இனிமேலாவது முன் போன்று ஆங்காங்கே தேகப்பயிற்சி
சாலைகள் அமைத்து, நம்மவர்களைத் திடகாத்திரர்களாக ஆக்கும்படி
கேட்டுக் கொள்கிறேன்.

## மதுவிலக்கு.

நம்குலத்தவரிடம் பெரும்பாலும் மதுவிலக்குப் பிரசாரம் தேவையில்லையென்றே சொல்லலாம். இருந்தபோதிலும், சிற்சில இடங்களில் சிலர் மதுவைக் கையாடி வருவதால் அவர்களுங்கூட நம் குலத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படாமலிருக்கும் பொருட்டு மதுவை அறவே ஒழித்துத் தங்கள் தீயவழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## சீர்திருத்தங்கள்.

நான் சொல்லப்போகும் சீர்திருத்தங்கள் நமது சமூகம் தற்காலம் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமையிலில்லாமல் இருந்தபோதிலும் கூட அவைகளை எடுத்துச் சொல்லவேண்டியது என் கடமையாகையால் அவைகளைச் சொல்கின்றேன். அவைகளில் சில சிலர் மனதுக்குப் பிடித்தமில்லாமலிருந்தபோதிலும் அதற்காக என்மேல் யாரும் வருத்தப்படக் கூடாதெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## கல்யாணங்கள்.

ஒருவன் தனது வாழ்க்கைத் துணைவியாக ஓர் பெண்ணை அடையவேண்டுமானால் அவனிஷ்டப்படி அவன் காதலித்த பெண்ணையே அடைய விட்டுவிடவேண்டும். பெற்றோர்கள் இதற்கு மாறாகத் தங்களுக்குச் சொந்தக் காரர்களென்றோ பணக்காரர்களென்றோ எண்ணி மணமகனுக்குப் பிரியமில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்விப்பதை அறவே ஒழிக்கவேண்டும். இதே மாதிரி பெண்களுக்கும் ஏற்படுகிறது. வயது முதிர்ந்தவர்களுக்குப் பெண்களைப் பணத்திற்காக ஆசைப்பட்டுக் கொடுப்பதைத் தடுத்தல் வேண்டும். நமக்குள் தாய்மாமன் எனப்பட்டவர்கள் தனது சகோதரியின் பெண்களையே தனக்குக் கல்யாணமாயிருந்தாலும் சரி, தான் வயோதிகமாயிருந்தபோதிலும் சரி எதையும் கவனியாமலும், முன் பின் யோசிக்காமலும் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் கெட்ட பழக்க வழக்கங்களை விட்டுவிட வேண்டும். ஒரே மணமகனுக்கு ஏககாலத்தில் இரண்டு பெண்களைக்கூடக் கல்யாணம் செய்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் பழைய மூடப் பழக்க வழக்கங்களும் பணஆசையுமே ஆகும். நம்முள் ஒருவன் தனது தாரம் திடகாத்திரமாயும் குழந்தைகளோடும் இருந்தபோதிலும் கூடப் போதாதென மேற்கொண்டு ஒன்றிரண்டு கல்யாணம் செய்வது சிலபாகங்களில்



வழக்கமாயிருக்கின்றது. இம்மாதிரி செய்வதால் தான் நமது குலப் பெருமை கெடுகின்றது. ஓர் ஆண்மகன் ஓர் தாரமிருக்க மற்றொரு தாரம் கல்யாணம் செய்வதில்லை என்ற ஓர் கட்டுப்பாடு நமக்குள் இருத்தல் வேண்டும். விதவா விவாகமானது நம்மவர்க்குள் பல பாகங்களில் நடந்து வருகின்றது. இதைச் சிலர் வெறுக்கின்றனர். சிலர் விரும்புகின்றனர். ஆனால் விதவா விவாகத்தை விட ஓர் சிறந்த சீர்திருத்தம் கிடையாதெனவே சொல்லலாம். ஓர் யௌவனமாது தனது கணவனை இழந்து மறு கல்யாணம் செய்யாது அவள் சாகும் வரை படும் துயரமும் பெற்றோர்கள் அவளை வைத்துக் காப்பாற்றும் கஷ்டமும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆண்மகன் தனது தாரத்தை இழந்து விட்டால் மறுகல்யாணம் செய்யக்கூடாது என்ற சட்டம் ஏற்படும்வரை விதவைகளும் மறுகல்யாணம் செய்து கொள்ளலாம் என்பதே என் நோக்கமாகும். ஆண்கள் மாத்திரம் எத்தனை கல்யாணம் வேண்டுமென்றாலும் செய்துகொள்ளலாம். பெண்கள் மாத்திரம் ஏன் செய்துகொள்ளக்கூடாது என்பது ஒரு முக்கிய கேள்வியே. ஆகையால் விதவா விவாகத்தை யாதரித்து நமது சகோதரிகளின் கஷ்டத்தை நிவர்த்திப்பது உசிதமென நினைக்கிறேன்.

நமக்குள்ள ஒவ்வொருவகுப்பும் ஒவ்வொரு விதமான தாலிகளைக் கட்டுகிறார்கள். இவைகள் வெளிப்படையாக நம்மிலுள்ள வேற்றுமைகளை விலக்கிக் காண்பிக்கக்கூடியனவாகவும் ஒற்றுமைக்குக் குறைவை உண்டாக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன. ஆகையால் நமது சமூகத்தவர்கள் இனி ஒரே விதமான தாலிகளை உபயோகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## அனாவசியச் செலவை அறவே ஒழிக்க வேண்டும்.

நம்மவருக்குள் நாகரிகத்தில் சிறந்தவர்களெனப்பெற்ற சிலர் கல்யாண காலங்களிற் செய்யும் செலவுகளுக்குக் கணக்கு வழக்கு இல்லை. வீண் ஆடம்பரச் செலவுகளில் ஏன் பணத்தை விரயம் செய்ய வேண்டும்! அதனால் நமக்குக் கிடைக்கக்கூடியதென்ன? ஒருவர் செய்தால் மற்றவரும் வீம்புக்காவது அதைவிட அதிகமாகக் கடன் வாங்கியாவது செலவு செய்து ஆடம்பரம் செய்கிறார்கள். இவ்வாறு நமது பணத்தை வீணாகச்செலவழிப்பதை விட்டுச் சிக்கன முறையில் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன், கல்யாணத்தில்தான் இம்மாதிரி

யோ என்றால், இறந்தவர்களுக்கும் கூட நூற்றுக்கணக்கான ரூபாய் களை வீண் ஆடம்பரமான செலவுகளில் செலவழிக்கின்றார்கள். முற் காலத்தில் இம்மாதிரி செலவுகளே கிடையாது. எதாவதொரு குடும் பத்தில் கல்யாணங்களும், துக்கங்களும் சேர்ந்து வருமேயானால் அவனுடைய ஐஸ்வர்யமுழுதும் செலவழிந்து போய்விடும். ஆகை யால் இம்மாதிரிச் செலவுகளை அறவே யொழித்துச் சிக்கண முறை யில் நடத்தவேண்டு மென்பதே என்னுடைய கருத்தாகும்.

நமது சமூகம் முன்னேற வாலிபர்களாகிய நாம் தான் பாடுபட வேண்டுமேயல்லாது வயது முதிர்ந்தவர்களை எதிர் பார்ப்பதில் பிர யோஜனமில்லை. நாம் இன்று முதற்கொண்டே வேலையைத் துவக்குவோமாக.

நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் அடிக்கடி சென்று கூட்டங் கள் கூட்டிப் பிரசங்கங்கள் மூலம் நம்மவர்கள் எப்படி நடக்கவேண்டு மென்பதைப் பன்முறை எடுத்துரைக்க வேண்டும். இம்மாதிரி பிர சாரம் செய்ய ஓர் சபை அமைத்து அதற்கோர் நிதியும் சேர்த்தல் வேண்டும். பிரசங்கங்கள் செய்யச் சில பிரசாரர்களை நியமித்தல் வேண்டும். இம்மாதிரி பிரசாரர்கள் ஊர் ஊராய்ச் சென்றால் தான் அந்தந்த இடங்களில் நம்மவர்களுக்குள் இருக்கும் துன்பங்களையும் குறைகளையும் தீர்க்க ஹேதுவாயிருக்கும். சில இடங்களில் சிற்சில ஜாதியினரால் நமது சமூகத்தார் படும்பாடு அனேகமுள. நம்மவர்கள் ஜனத் தொகையிலோ திடகாத்திரத்திலோ சிறந்தவர்களாயிருந்தும் கூடத் தங்கள் பலம் தங்களுக்குத் தெரியாமலும், தங்களை நடத்தத் தலைவர் இல்லாமையினாலும் ஏனைய ஜாதியினரால் துன்புறுத்தப் படு கிறார்கள். நமது பிரசாரர்கள் இம்மாதிரி இடங்களுக்குச்சென்று அவர்களை ஒருங்கே கூட்டி அவர்கள் நடக்கவேண்டிய வழிகளைப் பிரசங்கங்கள் வாயிலாகப் போதித்தாலொழிய நமது சமூகம் முன் னேற முடியாது. ஆகையால் வாலிபர்களாகிய நாம் ஒவ்வொரு நாளும் நமது சமூக முன்னேற்றத்திற்குச் சிறிது நேரம் பாடுபட வேண்டும். நாம் ஏனைய அனேக விஷயங்களுக்காக நமது காலத்தை வீணாகாலமாக்கவில்லையா? எவ்வாறு சிலர் ஒவ்வொரு நாளும் கடவுளைத் தியானிக்கவோ, பூஜை செய்யவோ, எக்காரியத்தையும் விடுத்துச் சிறிதுநேரம் செலவழிக்கிறார்களோ, அவ்வாறு, நாமும் நமது சமூகத்துக்குத் தொண்டுபுரியச் சிறிது நேரம் செலவழிக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

---

சென்னை மாகாண

# முதலாவது யாதவ வாலிபர் மகாநாடு.

இம்மகாநாடு நாளது வருஷம் மே-மீ 24ந்தேதி இராமநாதபுரம் பாரதகான நாடகக் கொட்டகையில் மதுரை நகரபரிபாலனசபை உபதலைவரும் தேவஸ்தானக் கமிட்டியின் தலைவருமாகிய திரு. P. பிச்சைமுத்துக் கோனார் அவர்கள் தலைமையில் கூடியது. சென்னை மாகாண மூன்றாவது யாதவ மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த யாதவகுலப் பிரமுகர்கள் யாவரும் வந்திருந்து இம்மகாநாட்டைச் சிறப்புறச் செய்தனர்.

வரவேற்புக் கழகத்தலைவர் தமது விரிவுரையை நிகழ்த்திய பின் னர், மகாநாட்டுத் தலைவர் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசனத் திலமர்ந்தனர். திரு. ஐயம்பெருமாள் கோனார் அவர்கள் திரிசிரபுர வாலிபசங்கத்தின் சார்பாகத் தலைவருக்கு உபசாரப் பத்திரம் வாசித் துக்கொடுத்துப் பூமாலையையும் சூட்டினர். பின்னர் மறுதினமாகிய 25ந்தேதி வாலிபர் மகாநாடு மீண்டும் கூடப்பட்டுப் பல பிரேரபனை கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறின.

---

## நிறைவேறிய தீர்மானங்கள்.

R. C. No. 1. (a) நமது யாதவகுல வாலிபர் மகாநாட்டைக் கூட்டு வதற்குப் பெரும்முயற்சி செய்து கூட்டுவித்த யாதவப் பிரமுகர் களுக்கும், சென்னை திருவாளர் M. அப்பாத்துரைப் பிள்ளை அவர் களுக்கும், வரவேற்புக் கழகத் தலைவர் திருவாளர் A. கார்மேகக் கோனார் அவர்களுக்கும் இம் மகாநாடு நன்றியைச் செலுத்துகிறது.

(பிரே) (ஆமோ) தலைவர்.

(b) மதுரை ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கள் சென்னை யதுகுல மகாசங்கத்திற்கு நம் குலமக்கள் உயர் தரக் கல்விக்காக நன்கொடையாகப் பெருநிதியைக் கொடுத்த பெருந் தகைமைக்கும், நம் குல யாதவமித்திரனை வெளியிட்டதற்காகவும் இம்மகாநாடு நன்றி செலுத்துகின்றது.

2. அனுதாபங்கள்.

1. Dr. அப்பாய் நாயுடு அவர்கள்.
முதலாவது யாதவமகாநாட்டின் தலைவர்.

2. ஷை முத்துசாமி பிள்ளை அவர்கள்
சென்னை யதுகுல சங்க உபதலைவர்

3. வேலாயுதக் கோனார் அவர்கள், முதுகுளத்தூர்.

(பிரே) (ஆமோ) தலைவர்

3. இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் போர்டில் தற்காலம் காலியாக இருக்கும் மெம்பர்ஸ் ஸ்தானத்திற்கு நம் குலமக்களில் ஒருவரை நியமனம் செய்யும்படி கவர்ன்மெண்டாரை இம் மகாநாடு வேண்டுகின்றது.

(பிரே) S. C. குப்புசாமி.

(ஆமோ) கூர்மாவதாரன்.

4. நமது மாகாண லோக்கல் போர்டு முனிசிபாலிடிகளில் கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலுக்குக் கொண்டுவரும்படி அரசியலாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

(பிரே) M. சுப்பிரமணிய கரையாளர், செங்கோட்டை.

(ஆமோ) இராமசுப்பிரமணிய கரையாளர், செங்கோட்டை.

5. தமிழ் மாகாணத்தில் நமது சமூக சீர்திருத்தத்திற்குப் பிரசாரம் செய்யவும் ஆங்காங்கு வாலிப யாதவசங்கங்களை நிறுவவும் ஓர் பிரசாரக் கமிட்டி நியமனம் செய்து அதற்கென ஓர் நிதி சேகரித்துப் பிரசாரகர்களை நியமித்துத் தினந்தோறும் நமது சமூகத்தினர் வசிக்கும் இடங்கள் தோறும் சென்று பிரசாரம் செய்யுமாறு இம்மகாநாடு கேட்டுக் கொள்கின்றது.

(பிரே) பொன்னையக் கோனார், சப்ரிஜிஸ்தரார்,
அலங்காநல்லூர்

(ஆமோ) அய்யம்பெருமாள் கோன்
தமிழ்ப்பண்டிதர், திருச்சி



6. இனி நடைபெறப் போகும் மாகாண மகாநாடுகளில் செலவிற்கு வசூலாகும் தொகையிலிருந்து ரூபாய் நூற்றுக்குப் பத்து விதம் ஒதுக்கி அம்மகாநாட்டை நடத்தும் சங்கத்திற்கு மூலதனமாக வைத்துக்கொள்ளுமாறு இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(பிரே) L. S. கரையாளர் செங்கோட்டை.

(ஆமோ) K. G. கிருஷ்ணன் இரங்கூன்

7. கலியாண காலத்திலும் துக்க காலங்களிலும் சுவாமி கும்பிடும் விசேஷங்களிலும் அதிகச் செலவில்லாமலும் ஆடம்பரமில்லாமலும் சிக்கனமாகச்செலவுசெய்யும்படி இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(பிரே) T. சூளியத்தைய்யா யாதவகுல வாலிபர் சங்கம் திருச்சி.

(ஆமோ) T. T. சுப்பிரமணியம் திருநெல்வேலி.

8. நமது குலப் பெண்மக்களுக்குச் சம சொத்துரிமை தரவேண்டுமென்று இம்மகாநாடு சிபார்சு செய்கின்றது.

(பிரே) A. S. அருணாசலக் கோனார்.
முனிசிபல் கவுன்சிலர் திருநெல்வேலி

(ஆமோ) P. கிருஷ்ணன்.

9. நமதுசமூகத்திற்குள் கலப்புமணம் செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(பிரே) P. கோபாலகிருஷ்ணன். ஸ்ரீவில்லிபுத்தூர்

(ஆமோ) R. அண்ணாமலை

10. சகல யாதவர்களும் பலவகைப்பட்ட பட்டப் பெயர்களை எடுத்துவிட்டுக் கோன் என்ற பெயரை வைத்துத் தீரவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(பிரே) வேணு நாதம் மதராஸ்.

(ஆத) இருளப்பன், இராமநாதபுரம்.

தலைவரவர்கள் முடிவுரை நிகழ்த்திய பின்னர் கூட்டம் இனிது கலைந்தது.

E. R. நாராயணக் கோன்,
செக்ரெடரி,

# கோகில கிருஷ்ணன்.

அல்லது

## இரு யாதவ மணிகள்.

(ஒரு சீர்திருத்த நாடகம்)

---

294 ம் பக்கத் தொடர்ச்சி.

அங்கம் 1. காட்சி 2.

காலம்:—நடுப்பகல்.

இடம்:—நவநீதக் கோனார் தனி வீடு.

[நவநீதக் கோனார் தன் மனைவி மகாலெக்ஷ்மியுடன் தங்கள் குழந்தைகளின் கலியாண விஷயமாக வாதாடிக்கொண்டிருக்கின்றனர்.]

நவ:—ஏன்ன! லெச்சுமாயி! நாம என்ன! சும்மா இப்படியே இருந்துகிட்டிருந்தா அப்பறம் மேலே என்னென்னுதான் நம்ப மச்சானுக்குப் பதில் சொல்லித் தொலைக்கிறது? இம்புட்டு நாளா வந்துகிட்டிருந்த பொண்ணையெல்லாம் பத்தி ஏதாச்சும், அது சொத்தே இது சொள்ளேண்ணு ஒச்சம் சொல்லிக்கிட்டிருக்கிறான் நம்ப கிருஷ்ணன்பய. இவுன்க்கு என்ன மவா படிப்பு, மவா மரியாதே நம்ப கோகிலத்தேவுட மவா பிரமாதமா? —ம்— இவேன் நம்ப மச்சான் மவளேக் கண்ணாலம் பண்ணிக்கிறத்துக்கென்னங்றேன்—

மகா.—என்னங்க! அப்படிச் சொல்லிட்டீங்க, ஏன் நம்ப மவேன் படிப்புக்கு என்ன? பெரிய பரீச்சை குடுத்துட்டு இப்பத்தானே சென்னப்பட்டணத்திலிருந்து வந்தான். நம்ப கோகிலம் போன வருசத்திலே பரிச்சை குடுத்திச்சு. இவேன் இந்த வாட்டி குடுத்திருக்கிறான். இவுக ரெண்டு பேத்துக்கும் ஒரே மதுவாரி தானு முல்ல எங்குனே போனாலும்?— நல்லா இருக்கு போங்க. அவேன் நம்ப மச்சான் மவளைக் கண்ணாலம் பண்ணிக்காட்டி அதுக்குன்னு அவனேப்பத்தி இப்படிப் பேசிட்றதாங்காட்டியும். நல்லாருக்கு போங்க—ம்— ஒங்களுக்கு, அவுக ரெண்டு பேரும் இன்னும் தயிர்பாலு கூடை



தூக்கி வியாபாரம் பண்ணலயேண்ணு வவுத் தெரியுதாங்காட்டியும்.

நவ:—(கடிந்து) இந்தா! நான் அப்பறம் கெட்டபயலா இருப்பேன் பாத்துக்க. தயிரும் பாலும் தூக்கி வியாபாரம் பண்ணுமேத்தான் இப்த்பா நீயி இம்புட்டு பேச்சு பேசறவளாங் காட்டியும். காசும் பணமும் நல்லா சேந்து போயிடுச்சு—மவனும் மவளும் படிச்சிக்கிட்டா இப்போ நீ தலைகீலே நிக்கறவ. ஏம், புள்ளே. நான் சொல்றேண்ணு மொவத்தே சுளுக்கிக்கிறியே- ஏன் மச்சான் மவளுக்கு என்னங்கறேன்—சொத்தில்லையா?—இல்லே, உரமுறையாருங்க இல்லியா?—வீடுவாசத்தான் இல்லையா? ரெதம், ரெதமாட்டம் கறக்குது ஏளெட்டு மாடுங்க.

மகா:—அதெல்லாம் இருந்து என்ன பண்றதுங்க—இந்தக் காலக் கோளாறே தெரியாதவராட்டமுல்ல பேசுறீங்க. நம்ப புள்ளேங்கள்ளே படிச்சவுங்களே ரொம்ப கொறச்சலா இருக்குது அப்படி இருக்கறத்துலியும் பாருங்க இந்தக்காலத்து இங்கிலீஸும் படிச்சுட்டானுங்காட்டியும்—படிச்சவளாத்தான் இருக்கணும் பொஞ்சாதிண்ணு வக்கணே பேச ஆரம்பிச்சிட்டாங்க. நம்ப மருவாதியே நாம்ப காப்பாத்திக்கிடவேணும்னு அவனுக போக்குலேதான் உட்டுத்திலுப்பணும்.

நவ:—அதுசரி! அந்தமாதிரி நம்ப கோகிலத்துக்கு மாத்திரம் பார்க்கத் தேவலியாங் காட்டியும். எம்புட்டோ சிரமப்பட்டு அவுளுக்கு ஒரு தினுசா நம்ப திருவேங்கடகோனரு மவனே நிச்சியப்படுத்தராத்துக்குள்ளாக நம்பாடே ஒளுஞ்சு தீத்திரும் போலே ஆயிடுச்சு.

மகா:—அதான் உங்க இஷ்டம்போலே அவேனேயே கட்டிக்கிட்றேன்னிட்டாளே. மறுவே என்ன?—அந்தப்பையன் படத்தேக் கொண்ணாந்து காட்டினத்துக்கும் பொறகேதான் ஒப்புக்கிடுச்சுப் போலேருக்குதே.

நவ:—ஆமா! ஆமா! ஆமா! அந்த கூத்துல்லே பெரிய கூத்தா இருக்குது இந்த நாளையிலே. நாம்ப கட்டிக்கிட்றப்போல்லாம் பொண்ணு மாப்பிள்ளைங்க நேரே பாத்துக் கண்ணாலம் பண்ணிக்கிட்டோம். இப்போ என்னடான்னா ஊட்டோட உட்டு இவுங்க ரெண்டு பேரும் நவராது கிடையாதாம். இவபடத்தே

அவன் பாத்திக்கிட்றதாம். மனசுக்கு புடிச்சிச்சுன்னு கட்டிக்கிட்றதாம்.

மகா:—ஆமா! அதுகெடக்குட்டுமுங்க. இந்தமாதிரி இவுக செஞ்சுகிட்றத்தினாலே எதாவது ஒரு கெடுதலு நேந்திச்சுன்னு எண்ணு பண்ணுவாக.

நவ.—நாமா பாத்து செஞ்சுவச்சமானு அதுலே மாத்திரம் கோளாறு நேராமே வாளுந்தாங்காட்டியும். (சலிப்புடன்) ஆமா! இத்தையெல்லாம் பாக்கப்போனா நம்ப ஒரோரு வளக்கத்துலே ஒரோரு கெடுதலு இருக்குது. நம்பளா கண்ணாலம் பண்ணி வச்சமினா நம்பளே கொறை சொல்லுவாங்க அவுகளா பாத்து கட்டிகிட்டா அலுப்பில்லாமலே பூட்டுடும். குத்தமோ கொறையோ அவுகளோடே போய்த்தீரும்.

மகா:—ஆமா! அப்போ! நம்ப கிருஷ்ணன் ஒங்க மச்சான்மவ, காமாச்சியே பார்த்திருக்கிறானா? இல்லாட்டி படத்துலியாச்சும் பாத்தானா? விசாரிச்சீங்களா?

நவ:—பின்னே! அவனே கேக்காமே இருந்துருவேனா! அவளேத்தானே அவன் கட்டிக்கிட்டேன்கறான்—நேருலேயே ஒருவாட்டி பாத்தானாம், தண்ணி கொண்டுகிட்டுப் போறத்துக்காவ கொளத்தாங்கரைக்கு வந்துச்சாம், அப்போ இவேன் பாத்தானாம்; யாரு—என்னான்னு, விசாரித்தான் அதைப்பத்தி இப்போ பேசிக்கிட்டிருந்ததுலே, இவனுக்கு—, அவளையே—கண்ணாலம் பண்ணிக்கிட்றத்துலே ஆச்சேபனையே இல்லேபோலே எங்கிட்ட பேச்சிக்கிட்டிருந்தான்.

அப்படின்னா சரிதான்—நமக்கென்ன. நாம கொலம் கோத்திரம் பாக்கணும்—மத்தபடி அவனுக்கு எந்தப் பொண்ணு பிரியமோ அந்தப் பொண்ணே கட்டிக்கிடட்டும்.—ஆனா ஒங்க மச்சானுக்கு இதுலே சம்மதந்தானே.

நவ:—ஓ! பின்னே இல்லே! அதுனாலேதானே ஒன்னே இது விசயமா தொண தொணன்னு இம்முனை பண்ணிக்கிட்டேயிருக்குறேன். மச்சான் கனதுடியால் இருக்குறாரு பரிசம் போட்றத்துக்கு.

மகா:—நம்ப கோகிலம், இவன் ரெண்டுபேத்துக்குமே கண்ணாலத்தே பண்ணி வெச்சு எப்படியாச்சும் அதுங்க சொகம்மா இருக்கறத்



தோயும் நாம்ப செத்தும்பூட்றத்துக்குள்ளாற கண்ணுற பாத்திட்டமானா கொறையில்லாமலே போய்ட்டிரும்

நவ:—இப்பனாச்சும் ஒனக்கு இதுலே சம்மதந்தானே? இனிமேலே என்னை நீயி குத்தம் சொல்லமாட்டியில்ல. மளமளன்னு அந்தப் புள்ளைங்களே கலந்துக்கிட்டு நம்ப பஞ்சாங்கக்கார அய்யரேக் கூட்டியாந்து பரிசம் போட்றத்துக்கு எண்ணைக்கு நாளு நல்லாருக்குதுன்னு பாத்துட்டு, ஒரு தேதியையும் வெச்சிட்டுன்னு கவலையில்லாமலே மூட்ரும் கணியால வேலையெப்பார்க்க ஆரம்பிச்சிறலாம்.

மகா:—அவுங்க வூட்டுக்கும் இந்தத்தகவலே சொல்லி அனுப்பிச்சிருங்க. வீணே கவலைப்பட்டுக்கிட்டு இருக்கப்போறாங்க.

நவ:—அதுல்லே பின்னே! இந்தோ ஒரு நொடியிலே ஆளனுப்பிச்சிரமாட்டேன்—(உள்ளே பார்த்து) எலேய்! எ! பெரியண்ணா! (அதைக் கேட்டுப் பெரியண்ணன் என்ற வேலைக்காரன் பிரவேசம்)

பெரி—ஏண்ணே!

நவ—இங்காரே! நம்ப வூட்டுலே கண்ணாலம் டா! தெரியுமா?

பெரி—தெரியுமுங்க! சொல்லுங்க!—

நவ—என்மச்சான் இருக்காருபாரு பெருமாளு அவக வீட்டுக்கு ரெண்டு தகவலு எளுதித்தாரேன் அங்குனியும் போய்த்து மறுவே, திருவேங்கடக்கோனார் வீட்டுக்கும்போயி நீங்க ஏதோ தகவலு சொல்லி உடனே பதில் சொல்லச் சொல்லி விசாரிச்சுக்கிட்டு ஓடியாரச் சொன்னீங்களாமுல்ல அதுவிசயம் சம்மதந்தானும் நம்ம கோகிலத்தே ரெங்கமலன் மணவாளனுக்கே கட்டிக்குடுத்திட்றேன்றும் சொல்லச் சொன்னாரு; எல்லாத்துக்கும் ஒங்களே ஒரு வாட்டி வூட்டுக்கு வந்திட்டுப் போகச் சொன்னாருன்னு தகவலையும் சொல்லிட்டு ஓடியா பாக்கலாம்.

பெரி—(கைகளை இருபுறத்திலும் அடித்துக்கொண்டு) அய்யாம்—கண்ணாலம் வந்திடுச்சு—நம்பபாடு வேட்டேதான் இன்னும் ஒரு மாசத்துக்கு—இதோ வந்துட்றேன்க—(ஓடுகிறான்)

(தொடரும்)

## வள்ளல் பாரி.

(296-ம் பக்கத் தொடர்ச்சி).

வானளாவி மஞ்சுதோய உயர்ந்துவிளங்கும் மலையின் பெருமையையும், அதன்கண் தெள்ளிய திரைகளோடு இலங்கி வழச் செல்வோராது கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த சுனைகளின் செம்மையையும் அச்சுனைகளினின் றிறங்கும் நீர் வீழ்ச்சியையும் யானைக் காதுபோன்று அணியணியாகத் தொங்கிக் கொண்டிருக்கும் தேன் கூடுகளையும், மலையைச் சுற்றி வளம் பொருந்திய முன்னூறு கிராமங்களையும் அதற்கு நடு நாயகமாக விளங்கிய பறம்புமலையையும் இராஜதானியாகக்கொண்ட பாரி மன்னன் புகழைப்பற்றி:—

"பிறங்குவெள்ளருவி வீழுஞ்சாரற்
பறம்பிற் கோமான்பாரி. (சிறுபாணாற்றுப்படை)

என்று பறம்பைப் பாராட்டிப் போந்தார் பாரியின் தோழர். இவன் கொடைக்கு மேலது "மாரி" ஒன்றே தவிர வேறில்லை என்பதைப் பின்வரும் செய்யுள் நிந்தாஸ்துதி முறையில் நன்கு விளக்கும்:—

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற்புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே"

என்பதாகும்.

முத்தமிழ் வேந்தராகிய "சேர, சோழ, பாண்டியராம் தமிழ்ப் பெரு மூவேந்தரும் ஒன்றுகூடிப் போர்க் கோலங்கொண்டு தமது நால்வகைப்படைகளுடன் வலியவந்தெதிர்த்து இவனது அறக்கீர்த்தியை மழுங்கவைக்கத் தலைப்பட்டு அபஜெயமடைந்தனரென்றால் இப் பெரியோனின் தெய்வபக்தியையும் மகிமை நிறைந்த கீர்த்தியையும் எவர் புகலுந்தரமுடையவர். தீந்தமிழ் ஔவைப் பிராட்டியாரும், செந்தமிழ் சுந்தரரும் தெய்வத்தமிழ்க் கவியரசர் "ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார்" முதலிய பெரியோர்களுமே இவனது புகழைப் புகலுந் தகுதியுடையவர்களாவார்கள்.

(தொடரும்)

காந்தி தாசன், பர்மா.



## அபிராமம்,
## யாதவ வாலிபர் சங்கம்.

நிகழும் பிரமோதூத ஆண்டு ஆனித்திங்கள் ஞாயிற்றுக்கிழமை (29-6-30) அபிராமம் (அகத்தாரிருப்பு) யாதவ வாலிபர்களின் பொதுக்கூட்டமொன்று திருவாளர் ஆ. வேணுகோபாலக் கோனாரவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அப்போது யாதவ வாலிபர் சங்கமொன்று நிறுவுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. சட்டதிட்டங்கள் வாசித்துக் காட்டப்பட்டு, சபையினரால் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன. அதன்பின், திருவாளர்களான ஆ. வேணுகோபாலக் கோனார், கி. ஆ. நாராயணக்கோனார், ஆ. வெ. ரா. ம. நாராயணக் கோனார் முதலியோர் முறையே தலைவர், உபதலைவர், காரியதரிசி, உபகாரியதரிசி, பொக்கிஷாதிபர்; உபபொக்கிஷாதிபர்களாகவும் திருவாளர்களான சி. முத்துக்கோனார் B. A., வெ. வே. ரா. ம. சேதுமாதவக்கோனார், ஆ. தெ. நா. பெருமாள் கோனார், கூ. கிருஷ்ணக் கோனார், வெ. மூ. சின்னையாக்கோனார், முதலியோர் நிருவாகசபை அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

பின்னர் சென்னைமாகாண 5வது யாதவ மகாநாட்டுக் காரியதரிசியான திருவாளர் சி. முத்துக்கோனார் B. A, சங்கம் என்னும் விஷயம் பற்றியும் இச்சபையின் காரியதரிசியான திருவாளர் நா. கு. இராமசாமிக்கோனார் சுகாதாரம் பற்றியும் பேசியபின், சந்தன புஷ்பம் கற்கண்டு தாம்பூலம் வழங்கப் பட்டுக் கூட்டம் இனிது பூர்த்தியாயிற்று.

நா. கு. இராமசாமிக்கோன்
காரியதரிசி.

## சென்னை யாதவ வாலிப சங்கம்.

29—6—30 ஞாயிற்றுக்கிழமை இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று புரசவாக்கம் பொன்னு அண்டு கம்பெனியில் ஸ்ரீ தி. சா. வேணு நாதக் கோன், எப். ஸி. ஐ., எம். ஆர். ஏ. எஸ்., அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. நகரின் பலவிடங்களிலிருந்தும் அநேக யாதவ வாலிபர்கள் வந்திருந்தனர். நெடுநேரம் விவாதம் நடந்த

பிறகு இச்சங்கத்தின் சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட்டன. கீழ்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்.-தி. சா. வேணுநாதக் கோன், எப். சி. ஐ., எம். ஆர். ஏ. எஸ்.,

உப தலைவர்கள்:-எம். கே. ஆராவமுது பிள்ளை.

டி. ஆர். சாரங்கபாணி பிள்ளை எம். ஏ.
பண்டிதர் எம். வி. வேணுகோபால பிள்ளை.

காரிய தரிசிகள்:-தி. சா. சரசு.

இ. ஆதிகேசவலு பிள்ளை பி. ஏ.

பொக்கிஷதார்:-ஏ. கே. வீரராகவப் பிள்ளை பி. ஏ.

மற்றும் இருபது பேர்கள் கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தம் நீண்ட உரையில் டி. ஆர். சாரங்கபாணி இச்சங்கத்தின் வரவை ஆதரித்துப் பேசி எல்லோரையும் அதில் மெம்பர்களாகச் சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்து நம்முடைய குலத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படி கேட்டுக் கொண்டார்.

தம் முடிவுரையில் ஸ்ரீ தி. சா. வேணுநாதக் கோன் தம்மை ஒரே மனதாகத் தலைவராய்த் தேர்ந்தெடுத்ததற்காக எல்லோருக்கும் வந்தனம் கூறித் தம்மாலானவரையில் தம் வேலையைச் சரிவர நடத்தி வருவதாக உறுதி கூறினார்.

பிறகு வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது முடிந்தது.

---

# ஆனாய நாயனார்.

காவிரி நதியாற் சிறப்புற்று விளங்கும் சோழ மண்டலத்திலே மேலை மழநாட்டிலே மங்கலம் என்னும் சிறந்த நகரத்திலே மான் கன்றோடு இளம்பசுக் கன்றுகள் குதித்து விளையாடுகின்ற பூஞ்சோலை நெருங்கிய முல்லைப்புறவு,

"ஒப்பில் பெருங்குடி மேவிய தன்மையி லோவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி யறம்புரி சால்போடும்
செப்ப வுயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவ ரானாயர்."

"ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாவில்
பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்."

என்றவாறு ஆயர் குலத்தை விளக்குதற்காக அவதாரம் செய்தவர், புண்ணியமிகுந்த திருநீறும் விபூதியை விரும்பும் தொண்டர் சொல், அவயவங்கள், மனம், தொழில்களில் சிவபிரானையன்றி, வழுத்தாதவர். ஆனாயர் என்னும் பெயரை உடையவரிருந்தார். அவர் முல்லை நிலத்தை யுடையவர்களாகிய கோனார்களுக்கு அரசனாக விளங்கினார். தமது நிலத்தில் சாமை, வரகு, சோளம், கம்பு, துவரை, உளுந்து, பச்சைப் பயறு, மொச்சை, தட்டைப் பயறு, கடலை, கொள், முதலிய தானியங்களைக் காலமறிந்து, விதைத்துக் காத்து, அறுத்துத் தூற்றிக் கொடும்பை சேர்ப்பவர்களும், விற்பவர்களும், விற்றுப் பொருள்கண்டு சேர்ப்பவர்களும், மூவின நிரைகளைத் தனித்தனி, காப்பவர்களும், அதனதன் பயன்களைத் திரட்டுபவர்களுமாகிய தொழில் செய்வோர்கள் பலர் காத்திருப்பார்கள். அகன்ற காட்டினிடத்து ஓட்டிக்கொண்டு போய் அவ்விடத்திலுள்ள கொடிய விலங்கினங்களால், துன்பம் நேராமல் காத்தும், சுத்தமான புல்களருந்தவும் தெளிவுற்ற நீரருந்தவும் செய்து நிழலில் கிடத்தியும் அசை வொட்டவும் செய்து சாயந்திரமானவுடன் தம் தம் நிரைகளைக் கணக்கிட்டு ஓட்டி வந்து தொழுவங்களில் சேர்ப்பவர்களும், தொழுவங்களைத் தினமும் குப்பை போக்கி,

மட்டிப்பால், அகில், சாம்பிராணி முதலிய நல்ல வாசனைப் புகையிடுபவர்களும், இளங்கன்றுகள், முதாரிகள், கடாரிகள், சினை, கறவை, சேங்கன்று, காளை, பொதிகாளை, எருது, கிழடு, நோயுற்றது முதலியவைகளைத் தனித்தனி கட்டி, அன்றையதினம் ஈன்ற கன்றுகளைக் கணக்கிட்டுக் கூறுவோர்களும் நிரை நிரையாக வருவார்கள். பால், தயிர், நெய்க் கணக்குகளும் சொல்வோர்களும், இனி நடக்கவேண்டிய காரியங்களைச் சொல்லிக் கேட்டுச் செல்வோர்களும் பலர். யாகத்துக்கும், ஆலயங்களுக்கும், ராஜமாளிகைக்கும் பசு, பால், நெய் முதலியன வேண்டுமென்பாரும், கறத்தற்கும், மேய்த்தற்கும் ஆள் வேண்டுமென்பாரும் சூழ்வார்கள். இன்னும் பற்பல காரியங்களை மேலிட்டு நெருங்குவோர் பலராகச் சூழ நிரைகளை ஒப்புவித்துத் தன் செல்வத்தைப் பெருக்கி வாழ்ந்து வந்தார்.

இசையில் மனஞ்சென்றது. காந்தருவ வேதத்திலே சொல்லியபடி முளைத்தெழுந்த மூங்கிற் கழியில் முறைப்படித் துளையிட்டுச் செய்த வேய்ங்குழல் வாசித்தலை இசைமரபு முறைப்படி நன்றாக வாசிக்க வல்லவரானார். தினமும் அங்குள்ளார் நாயனார் வாசிக்கும் வேணுகானத்தைக் கேட்டு மகிழ்ச்சியுற்று வாழ்வார்கள். நீல நிற மயிலினங்கள் எங்கவும் முல்லையரும்பவும் விளங்கா நின்ற கார்காலம் வந்தது. ஒரு நாள் காலிற் செருப்பும், கையில் கோலும் வேய்ங்குழலுங்கொண்டு நாயனார் புறப்பட்டார். கோல்களைக் கையிற்கொண்டு பல ஏவலாளர்கள், பசுக்களையும் கன்றுகளையும் வளைத்துக் கொண்டு அண்ணல் என்ன கட்டளையிடுகிறாரோ என நாயனாரது முகத்தைப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். மகிழ்ச்சி மிகுந்து வரும் நாயனார், தளிர்த்துப் பூத்துக் காய்த்துச் செழித்துள்ள ஒரு கொன்றை மரத்து அருகு சேர்ந்தார். அந்த மரத்தை உற்று நோக்கினார். அதில் நெருங்கிய மலர்த்துணர்கள் தொங்குதல், தொடுத்துச் சாத்திய பொன் போன்ற நிறமழகிய மலர் மாலையும், நீண்டு செவந்து கருத்துத் தொங்கும் அதன் காய்கள், புரி கொண்டு திரண்டு தாழ்ந்த சடையுமாகப் பரமசிவம் நிற்றல் போல, வெண்மை நிறமுள்ள கொன்றை மரம் தோன்றியது. எப்பொருளைக் காணினும் சிவவடிவாகக் கருதும் மாசற்ற மனமுடைய அந்நாயனார் கண்ணிமையாது அம்மரத்தை நோக்கினார். அன்பினாலே உருகி உருகி ஆராமை பெருகிக் கசிந்த மனமுடையவராய் "நற்றுணையாவது நமச்சிவாய" என்னும் புனிதமான பஞ்சாட்சரத்தை



உள்ளத்தே கருதினார். தம் கரத்தில் தாங்கியுள்ள வேய்ங்குழலை அதரத்தே வைத்தார். ஏழு சுரங்களையும் சோதித்தார். சத்தசுரங்களில் ஐந்தெழுத்தையும் உபதேச முறைப்படி பொருத்தி இசைமரபுக்கியையப் பரவசமுற்று வாசித்தார். அவர் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை அமைத்து வாசிக்கின்ற குழலிசையானது எல்லா உயிர்களின் செவிப்புலனிலும் தேவாமுதம் போல அதிமதுரமாகப் புகுந்தது. இந்த இனிய குழலோசையைக் கேட்ட பசுக் கூட்டங்கள் மேய்ந்து கொண்டிருந்த புற்களை அருந்தாது அவரையணுகி, முகத்தைப் பார்த்து உருகி மெய்ம்மறந்து நின்றன. பால்குடித்துக் கொண்டிருந்த கன்றுகள் பால்குடித்தலை மறந்து இசை கேட்டுக் கொண்டிருந்தன. எருதுகளும் மான் முதலிய விலங்கினங்களும் மயிர் சிலிர்த்து அவர் சமீபத்தில் வந்தன. ஆடுகின்ற மயிற் கூட்டங்கள் ஆடுதலொழிந்து அவர்பாலணுகின. மற்றைய பலவகைப் பட்சிகளும் தங்கள் காதின் வழியே புகும் கீதம் நிறைந்த அகத்தோடும் உருகி இருந்தன. மாடு மேய்த்துக் கொண்டிருந்த கோவலரெல்லோரும் தொழிலை மறந்து வேணுநாதத்தைக் கேட்டுக்கொண்டு நின்றார்கள். விஞ்சையர்களும் சாரணர்களும் கின்னரர்களும் கந்தருவர்களும் தேவர்களும் மெய்ம்மறந்து விமானங்களில் ஏறிக்கொண்டு வந்தார்கள். வருத்துகின்ற உயிர்களும் வருத்தப்படுகின்ற உயிர்களும் அந்த வேணுகானத்தைக் கேட்டு அதன் வசமானபடியால், சிங்கத்தின் மேல் யானை விழும். புலிமேற் பசு உராய்ந்து வரும், பாம்புகள் மயங்கி மயில்களின் மேலே விழும். மரக்கொம்புகளும் அசையாதிருந்தன. இவ்வாறாகச் சரம் அசரம் என்னும் உயிர் வகைகளெல்லாம் ஆனாய நாயனாரது வேய்ங்குழல் வாசனையைக் கேட்டு இசைமயமாயின. மெய்யன்பராகிய ஆனாய நாயனார் பஞ்சாட்சரத்தை உள்ளுறையாக்கி வாசிக்கும் வேய்ங்குழலோசையானது, பொய்யன்புக்ககப்படாத சிவபெருமானது திருச்செவியில் புகுந்தது. உமாதேவியாரோடு இடப வாகனத்தில் ஆகாயமார்க்கத்தே எழுந்தருளி வந்து நின்று அந்த ஆனாய நாயனார் மீது திருவருணோக்கம் செய்து "மெய்யன்பனே, நம்முடைய அடியார்கள் உம்முடைய வேய்ங்குழலிசையைக் கேட்கும் பொருட்டு நீ இப்பொழுது இவ்விடத்தில் நின்றபடியே நம்மிடத்துக்கு வருவாய்." என்று திருவாய் மலர்ந்தருளி அவ்வானாய நாயனார் வேய்ங்குழல் வாசித்துக் கொண்டு பக்கத்திலே செல்லத் திருக்கைலாசத்தை அடைந்தருளினார்.

விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலகை மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழா மிருக்குமொழி யெடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி யருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனு ரெழுந்தருளிப்பொற்பொது வினிடைப்புக்கார்

சிவ அடியார்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் இவர் ஒருவர். சிவாலயங்களில் நாயன்மார்களைப் பிரதிட்டித்துப் பூசிக்கும் மேன்மை பெற்றவர்கள், ஐப்பசி மாதம் அஸ்த நட்சத்திரத்தில் இந்நாயனுருக்குச் சைவப் பெரியோர்கள் குருபூசை நடத்தி வருகிறார்கள்.

இந்தச் சரித்திரம் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தே உள்ளது.

அஷ்டாவதானம் தி. அ. முத்துசாமிக் கோனர்.
தமிழ் வித்வான், திருச்செங்கோடு.

---

# சென்னை ஸ்ரீ யதுகுல சங்கத்தின் தீர்மானங்கள்.

---

திருவாளர் ஆ. கார்மேகக் கோனர் அவர்களுக்கு

அன்புள்ள ஐயா!

1930-ஆம் ஜூன்-மீ 15-உ கூடிய டைரெக்டர்கள் மீட்டிங்கில் நிறைவேற்றப்பட்ட அடியிற் கண்ட தீர்மானத்தைத் தங்களுக்கு அனுப்பப் பிரியமுள்ளவனு யிருக்கிறேன்.

தீர்மானம்.

மகாநாடு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ததற்காகவும், மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளுடைய சௌகரியங்களைக் கவனித்ததற்காகவும், ஸ்ரீ யதுகுல மகா சங்கம் 5-வது யாதவ மாகாண மகாநாட்டை நடத்திவைத்தவர்களுக்குத் தன்னுடைய நன்றியறிதலையும், வந்தனத்தையும் ரிக்கார்டு செய்து கொள்ளுகிறது என்று தீர்மானிக்கலாயிற்று.

தங்கள் விசுவாசமுள்ள
M. ஆராவமுதன்.
அசிஸ்டெண்டு செக்ரெடரி.



யாதவமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு
மதுரை.

சென்னை,
16 ஜூன் 1930.

அன்புள்ள ஐயா!

19 0-ஆம் ஜூன்-மீ 15-உ நடைபெற்ற டைரெக்டர்கள் மீட்டிங்கில் நிறைவேற்றப்பட்ட அடியிற் கண்ட தீர்மானத்தைத் தங்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தீர்மானம்.

1. யாதவமித்திரன் வெளியீடுகளில் மகாநாடு சம்பந்தமான நோட்டீஸ்களைப்பிரசுரம்செய்தற்காகயாதவமித்திரன் ஆசிரியருக்கு வந்தனம்செலுத்துவதாகத் தீர்மானிக்கலாயிற்று.

(2) ஆறாவது மகாநாட்டை அடுத்த வருஷம் செங்கோட்டையில் கூட்டுவதாகக் கேட்டுக்கொண்டதற்காக,செங்கோட்டை மிட்டாதார் மிஸ்டர் N. K. S. முத்துசாமிக் கரையாளர் அவர்களுக்குவந்தனம்செலுத்துவதாகத்தீர்மானம்.

---

# ஓர் நற்செய்தி.

---

அன்புடையீர்! கண்ணிய மிக்க புண்ணிய நகரமாய களந்தைப் பதியென்னும் களக்காட்டு நகரத்திலுள்ள நமது யாதவ மக்கள் தனிமையில் நடத்தி வந்த பாடசாலையானது சென்ற 3-வது சஞ்சிகையில் பாவத்தில் பேர்து எது? என்ற தலையங்கமிட்ட கட்டுரைப்படி நடந்த விஷயம் யாவரு மறிந்த உண்மையே.

ஆனால் எதற்கு மொரு நல்லகால முண்டல்லவா? ஆதியில் ஷை பாடசாலையை நடக்கவிடாது துஷ்கிருத்தியங்கள் செய்தகாலத்தே அங்கு அதைத் தடுத்து நடத்த எத்தனித்து வந்ததும் ஷை காரியங்களில் வந்த அநேக இடையூறுகளையும் பொறுத்து வந்தும் 'தலைகீழுறச் செய்யினும் தீபம் விண் தன்னையே நோக்கும்' என்றபடி எத்தனைத் துன்பம் வந்தாலும் அவற்றை யெல்லாம் ஒரு பொருட் படுத்தாது நல் காரியத்திலேயே நாட்டம் வைத்துத் தான் நினைத்த காரியத்தை நீடித்தாயினும் தவறுதலில்லாது முடித்த தனிப்பெரும்

வள்ளல்களில் ஒருவராகிய இந் நகர வாசியான திருவாளர் P. சுப்பிர
மணியக்கோனாரவர்களின் அரும்பெரு முயற்சியால் சிதறிக் கிடந்து
பதறித் தவித்த இவ்வூர் யாதவ மக்களை ஒரு சேரத் திரட்டி சுமார்
200 ரூபாய்வரை நிதி சேர்த்து உலைந்து நின்ற பாடசாலையின் கட்
டிட வகைக்குப் பொருளாக்கி வைத்து ஷை கட்டிடத்தைக் கட்டிப்
பாடசாலையைத் திறந்து வைக்க முயற்சித்திருக்கும் அரிய பெரிய
சேவையைப்பற்றி நமது சமூகம் அரிய அளவில்லாத ஆநந்த
மடைகிறது.

கல்வியால் பிற்போக்கு அடைந்த நமது சமூகத்தவர்களிடம்
காருண்ய கவர்ன்மெண்டாரும் கருணை பாலித்து ஷை பாடசாலை
முன்னேற்றத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்து நமது சமூ
கத்தை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

S. நாராயணக்கோன்,
களக்காடு.

---

நமது சந்தா நேயர்களுக்கோர்
## விஞ்ஞாபனம்.

---

சென்ற மாதம் இராமநாதபுரத்தில் கூடிய சென்னைமாகாண
ஐந்தாவது யாதவ மகாநாடு சம்பந்தமாக முன்னரும் பின்னரும்
வேண்டிய பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டதின் நிமித்தம் நமது
யாதவமித்திரன் தொகுதி 1 பகுதி 10 சென்ற மாதம் வெளியேறா
மல் இந்த மாதம் தொகுதி 1 பகுதி 11 உடன் சேர்ந்து வெளியா
கின்றது. சந்தா நேயர்கள் அன்புடன் ஆதரித்து மேலும் மேலும்
சந்தா மெம்பர்களைச் சேர்த்தனுப்பி நமது குல முன்னேற்றத்திற்குப்
பாடுபட முயலுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மானேஜர்:—
யாதவமித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
மதுரை.

# செய்தித்திரட்டு.

---

இங்க்லாந்தில் உள்ள யார்க்ஷையரைச் சேர்ந்த ஸ்கிப்டன் என்
னுமிடத்தில் ஒரு பெட்டைக்கோழி இருக்கின்றது. அதற்கு இப்
போது வயது 17 வருஷமென்று சொல்லப்படுகிறது. பதினொரு வரு
ஷங்களுக்குமுன் அது வாங்கப்பட்டது. அப்போது அது முட்டை
யிடாதென்றும் அடை காக்கவே பிரயோஜனப்படுமென்றும்
நினைத்து வாத்து முட்டைகளை அடைகாப்பதற்காகவும் வாங்கப்பட்
டது. ஆனால் ஒருமுறை அது வாத்துமுட்டைகளை அடைகாத்துக்
குஞ்சு பொரித்த பின்னர் தானே முட்டையிட ஆரம்பித்தது. இப்
போது ஆறு வருஷங்களாகத் தவறாமல் வாரத்துக்குக் குறைந்தது
மூன்று முட்டை வீதம் இட்டு வருகிறது.

பிரிட்டன் தீவைச் சேர்ந்த டோரி தீவைப் பார்த்தாற்போன்ற
சமுத்திரக்கரையில் மிஸ் மேரிமெக்கார்ட்டி என்னும் ஒரு மாது இருக்
கிறார். அவர் உயரம் 2 அடி 8 அங்குலம்தான். பிரிட்டன் தீவி
லேயே அம்மாதுதான் மிகக் குள்ளமானவரென்று கருதப்படுகிறது.

இங்க்லாந்தில் போர்த்மொத் என்னும் ஊரிலுள்ள ஓர் யந்திர
சாத்திர நிபுணனான கென்னட் லாயிட் என்பான் பறக்கும் மோட்
டார் வண்டிகள் செய்கின்றனனாம். இவைகள் மோட்டார் வண்டி
கள் போல் பாட்டைகளிலும் பிறகு இறக்கைகளுடன் ஆகாயத்தி
லும் பறந்து செல்லுமாம்.

லண்டனில் உள்ள விக்டோரியா ரயில்வேஸ்டேஷனில் ஓர்
இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த மதிப்புள்ள நாணயத்
தைப் போட்டாலும் 3 அணா விலையுள்ள ஒரு சீட்டைக் (டிக்கட்)
கொடுத்து மீதத்தொகையினையும் அளித்துவிடுகின்றது.

தென் அமெரிக்காவிலுள்ள புரேசிலில் ஒரு பெண் ஒரே முறை
யில் 6 ஆண் குழந்தைகளை ஈன்றிருக்கின்றாள். இதைப்போலவே
பாரிஸ் நகரத்திலும் ஒரு பெண் 4 ஆண்களைப் பெற்றாள். இவளுக்கு
வயது 23. ஏற்கனவே இவளுக்கு இரு குழந்தைகளும் உள.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் போக முடியாவிட்டால் பிள்ளைகள்
இருக்கும் இடத்திலேயே பள்ளிக்கூடங்களை அமைப்பதென்னும்

யோசனை அதிகரித்து வருகிறது. அதற்காகக் கானடாதேச நிர்வாகிகள் ஒரு புதிய ஏற்பாடு செய்து வருகின்றனர். அந்தேசத்தைச் சேர்ந்த ஆண்டோரியா என்னும் பாகத்தில் சதாகாலமும் ஓரிடத்தை விட்டு மற்றோரிடம் திரியும் சமூகத்தினரே அதிகமாக வசிப்பதால் அவர்கள் நிலையான பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப முடிவதில்லை. ஆதலின் அப்பிரதேசத்தில் ரயில்களில் பாடசாலைகளை அமைத்து அதில் அப்பிள்ளைகளுக்குக் கல்வியைப் போதிக்கின்றனர். இதனால் அச் சமூகத்தாரிடையே அதிகம் கல்வி பரவி வருவதாகத் தெரிகிறது.

சிலோன் அனுராதாபுரத்தில் மல்வத்தை ஓயா ஒழுங்கையிலுள்ள ஒரு செல்வர் வீட்டில் 7 மாதக் குழந்தை ஒன்று இருக்கிறதாம். பிரதிசோமவாரந்தோறும் அக்குழந்தை தொட்டிலிற் படுத்திருக்கும்போது ஒரு நாகம் பக்கத்தில் போய்ப் படுத்துக்கொண்டு குழந்தைக்கு முத்தமிடுகிறதாம். அப்போது எவரேனும் சமீபத்தில் போனால் சீறி விழுகிறதாம்.

---

## சந்தா நண்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

யாதவமித்திரன் ஆபீஸுக்குக் கடிதம் எழுதும் போதும் சமாசாரம் தெரிய விரும்பும்போதும் தங்கள் தங்கள் சந்தா நம்பரைக் குறித்தனுப்பவேண்டும். சந்தா நம்பரைக் குறிக்காத கடிதமும் பதில் வேண்டுவோர் தபால் பில்லை அனுப்பாத கடிதமும் கவனிக்கப்படமாட்டா. சந்தா நேயர்கள் பத்திரிகைகள் வந்துசேரவில்லை என்று தெரிவிக்கிறார்கள். இது விவரம் மித்ரன ஆபீஸுக்குத் தெரியப்படுத்துவதோடு கூடத் தபாலாபீஸுகளுக்கும் தெரிவிக்கக் கோருகிறோம்.

# யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்ட கால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

---

யாதவ சகோதரர்களே !

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரர்ச் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.

யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களி லும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித் திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.

இப்பொழுது விலாசந் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசந் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் ஆற்றலுள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ மித்திரன் ஆபீஸ்,**
ஸ்ரீ சோபால் மஹால்.
வடக்குச்சித்திரை வீதி, [redacted]

Printed & Published by E. M. GOPALAKRISHNA [redacted]
at the Excelsior Press, Madura.



# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.

| தொகுதி | பிரமோதூத ஆடி மாதம் 1930-ஜூலை-ஆகஸ்ட் | பகுதி |
|---|---|---|
| 1 | | 12 |

பொருள் அடக்கம்

| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 361 |
| கண்ணன் சரிதை | [illegible] |
| ஐவேல் அசதி | 365 |
| யாதவ வாலிபர் ச[illegible] | 367 |
| தசாவதாரங்கள் | 369 |
| பெண் கல்வி | 371 |
| நமது கிராம முன்னே[illegible] | 374 |
| சமூகமுன்னேற்றத்திற்கு[illegible] | 375 |
| வள்ளல் பாரி | 379 |
| சென்னை யாதவ வாலிப சங்கநிகழ்ச்சி | 382 |
| பெரியாருரை | 384 |
| ஆயர்குலச் சிறப்பு | 385 |
| கோகில கிருஷ்ணன் | 390 |
| இளைச்சங்கல்தாபனம் | 392 |

29 SEP 1930
MADRAS



Managing Editor,
இ. மு. கோபாலகிருஷ்ணக்கோன்,

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

ருவாளர், ஆ. கார்மேகக்கோனர் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

---

,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசிந்திரம்.

,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி

,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.

,, தி. அ. முத்துசாமிக் கோனரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.

,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை
திண்டுக்கல்

,, R. வேங்கடா சலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்.
S P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.

,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L M F ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.

,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சிறப்பள்ளி.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் நூலாஷணைகளின்றி
முவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அ
ளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுரு
கவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோ
டியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, ம...


OF THE REGISTRAR OF BOOKS
29 SEP 1930
MADRAS



காலஞ்சென்ற பிரபந்த வித்வான்,

ஸ்ரீமாந் தி. கொ. முத்துகிருஷ்ண பிள்ளை,

யாதவகுல உத்தமர்.

சென்னை ஸ்ரீயதுகுல சங்கஸ்தாபனத்திற்கு அடிகோலியவ

இவரது விரிவான சரித்திரம்

அடுத்த மித்திரனில் வெளிவரும்.

# யாதவமித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.

OF THE ...
29 SEP 19

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

தொகுதி 1 | பிரமோதூத ஸு ஆடி மீ 1930-ஸு ஜூலை-மீ | பகுதி 12

## கடவுள் வணக்கம்.

காசும் கறைபுடைக் கூறைக்கும் அங்கோர் கற்றைக்கும்
ஆசையினால் அங்கவத்தப் பேரிடும் ஆதர்காள்!
கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித் திருமினோ
நாயகன் நாரணன் தம் அன்னை நரகம் புகாள்.

மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு
எண்ணமொன்றின்றி இருக்கும் ஏழை மனிசர்காள்
கண்ணுக்கினிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் நாரணன் தம் அன்னை நரகம் புகாள்.

பெரியாழ்வார்.

## ஸ்ரீகண்ணன் சரிதை.

(நாமகரணம்)

(7-ம் பகுதி 202-பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் யதுகுல மன்னர்களுக்குப் புரோகிதரும் சிறந்த தபோதனருமாகிய கர்க்க முனிவர் வசுதேவனால் தூண்டப்பட்டு நந்தனது கோகுலத்துக்கு வந்தார். நந்த கோபர் அவரைக்கண்டு அகமிக மகிழ்ந்து எழுந்து எதிர்கொண்டு கைகூப்பி வணங்கி உபசரித்தார்.

முனிவரும் ஆசனத்தில் அமர்ந்தார். பின்பு அருகிலிருந்த நந்தகோபர் முனிவரைப் பார்த்து "முனிசிரேஷ்டரே! நீர் எங்களைப்போன்ற கிரகஸ்தர்களின்க்ஷேமத்தைக்கருதியே தங்கள் ஆச்சிரமத்தினின்றும் இவ்வாறு எழுந்தருள்கிறீர். இது நாங்கள் பண்ணிய புண்ணியத்தின் பயனாகும். தாம் இந்திரியங்களுக்கு விஷயமாகாத வஸ்துக்களின் சுவரூபத்தை அறிவதற்குச் சாதனமானதும் கிரகநக்ஷத்திரங்களின் சாரங்களைத் தெரியப்படுத்துவதுமாகிய ஜ்யோதிஸ் சாஸ்திரத்தினால் தான் மற்றவர்கள் நடந்ததையும் நடப்பதையும் அறிகிறார்கள். ஆகையால் சரித்திரவல்லுநராகிய தாங்களே இந்தப் பிள்ளைகளுக்கு நாமகரணம் (பெயரிடல்) முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்யத் தகுதியுடையவரா யிருக்கிறீர். ஆதலால் குழந்தைகளுக்கு நாமகரணம் இடவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அதனைக் கேட்ட கர்க்கமுனிவர் "நந்தகோபரே! நான் யதுகுலத்தார்க்கு ஆசார்யனென்பதை உலகமெல்லாம் அறியும். நான் இப்போது உன் பிள்ளைகளுக்கு நாமகரணாதி ஸம்ஸ்காரங்களைச் செய்வேனாயின் பாபிஷ்டனாகிய கம்சன் உன்பிள்ளையையும் தேவகி வசுதேவன் பிள்ளையென்றே நினைப்பான். தேவகியின் எட்டாவது கர்ப்பம் ஆண்குழந்தையாய் மறைந்து வளர்வதை அசரீரியாலும் மாயையாலும் அறிந்திருக்கிறான். இப்போது உன் குழந்தைகளுக்கு இச்சடங்கினை நான் செய்தால் நிச்சயமாக உன் புதல்வனை வசுதேவனது புதல்வனென்று கொன்றுவிடுவான். அது நமக்கு அநீதியாகும்" என்று சொன்னார்.

நந்தகோபர் பின்பு முனிவரைப் பார்த்து "இந்தக் கோகுலத்தில் என்னுடைய சுற்றத்தார்களுக்குத் தெரியாமல் ஏகாந்தமான இடத்தில் வாத்திய கோஷங்கள் முதலியன எவையும் இல்லாமல் அவசியம் நடத்தவேண்டிய ஸம்ஸ்காரங்களை மாத்திரம் நடத்தியருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். கர்க்கமுனிவர் நந்தரது வேண்டுகோட்படியே ஏகாந்தமான இடத்தில் ஒருவர்க்கும் தெரியாமல் ரோகிணியின் குழந்தைக்கும், அசோதையின் குழந்தைக்கும் நாமகரண ஸம்ஸ்காரங்களை நடத்திவைத்து நந்தகோபரைப்பார்த்துச் சில சொல்லத் தொடங்கினார்.

"நந்தகோபரே! இந்த ரோகிணியின் மகன், நண்பர்களைத் தன் இனிய குணங்களால் ரமிக்க(களிப்புற)ச் செய்வானாகையால் ராமனென்று கூறப்படுவான்; மிகுந்தபலமுடையவனாகையால் இவனைப்



'பலன்' என்றும் சொல்லுவார்கள்—யுகங்கள் தோறும் திருவுருவங்களை எடுக்கின்ற இந்த உன்புதல்வனுக்கு ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு வர்ணமாக வெளுப்பு, சிவப்பு, மஞ்சள் என்ற இம்மூன்று வர்ணங்கள் உண்டாயிருந்தன. இப்போது கறுப்பு வர்ணத்தை உடையவனாக இருக்கிறான். இவன் தன் குணஞ் செயல்களுக்கேற்ப ஆயிரம் ஆயிரம் திருநாமங்களை யுடையவனா யிருக்கிறான். அவற்றையெல்லாம் முனிவர்களே அறிவார்கள். இவன் உங்களுக்கு இம்மை மறுமை இருமை நலங்களையும் புரிவான். கோபாலர்களையும் கோகுலத்தையும் மகிழும்படி செய்வான். இப்புதல்வனால் நீங்கள் பல வருத்தங்களையும் சுலபமாய்க் கடப்பீர்கள். கோகுலநாதனே! முன்பு உலகமெல்லாம் ஆளும் செங்கோல் மன்னரில்லாமல் துஷ்டர்களால் பிடிக்கப்பட்டிருந்த சாதுக்கள் இவனால் பாதுகாக்கப்பெற்று மனக்கிளர்ச்சியுடன் வாழ்ந்து துஷ்டர்களை யெல்லாம் வென்றார்கள். பாக்கியமுடைய கோகுலத் தலைவரே! இந்த உன் குழந்தையிடம் அன்பு செய்யப் பெற்றவர்கள் சத்துருக்களால் பயமென்பதின்றி வாழ்வார்கள். நந்தரே! ஆகையால் இந்த உன் திருமகன் குணம், செல்வம், புகழ், பிரபாவம் இவைகளால் ஸ்ரீ நாராயணமூர்த்தியோடு சமானமாவான். இவனை மன ஊக்கத்துடன் பாதுகாத்து வருவாயாக" வென்று திருவாய் மலர்ந்தார். (தொடரும்)

ஆ. கார்மேகக் கோன்.

---

# ஐவேல் அசதி.

(ஓர் ஆயர்குலச்சிற்றரசன், கோங்குமன்ன சேனாபதி.)

---

சேலம்ஜில்லா திருச்செங்கோடு அடுத்த வடக்கில் சங்ககிரி துர்க்கம் எனனும் ஒரு நகர் உள்ளது. மலைமேற் கோட்டைகளுள்ளதால் அதற்குத் துர்க்கம் எனப்பெயராயிற்று. இது கொங்கு நாட்டுக் கடிஸ்தலங்களிலொன்று. இத்தேசத்தைக் கொங்கு அரசர் பல்லவர், சோழர், பாண்டியர் விஜயநகர ராயர்களின் நாயக்கர் மைசூர் அரசப் பிரதிகாவலர் ஆட்சிபுரிந்துளர். இதனையடுத்த சுற்றிலுமுள்ள நிலங்களெல்லாம் புன்செய், பசும்புற்றரையான முல்லைநிலம். இச்சங்ககிரிக்குக்கிழக்கே 2 மயிலில் ஐவேலிஎன்ற ஒருவளமான ஊர் உண்டு. அதில் அசதி என்னும் பெயர்கொண்ட ஒரு ஆயர்குலத்தலைவன்

வாழ்ந்தான். அக்காலத்தில் நாட்டுப்புறங்களில் வேளாளர்கள் குடியேறவில்லை. வேட்டுவர்கள் மிகுதி. அந்தப்புறவுகளெல்லாம் இந்த அசதி என்பாரின் சொந்தமாக இருந்தது. அந்தப்பூமிகளைப் பயிரிடற்கும், பசுவர்க்கங்களை ஓம்புதற்கும் அடை குடிகள்பல இருந்தன. காலத்தே பயிரிடுதலாலும் செய்யவேண்டிய தொழில்கள் நன்றாகச் செய்தலாலும் புன்செய்த் தானியவகைகள் நன்றாகப்பலன் கூடும். பசுக்களைக் காலமறிந்து செயத்தக்கனசெய்து காத்தலினால் கன்றீனுதலும், பால்தருதலும் மென்மேலும் பெருகும். இவ்வாறு நாளுக்குநாள் பல்கிப்பெருகும் செல்வமுடையவராக வாழ்ந்தார்.

அசதி அடைகுடிகளான தன்னினத்தவர்களும், காப்போராதியர்களும் குறைவின்றி இல்வாழ்வு பெறுமாறு உதவிசெய்துவந்தார்.

இந்தப் பாக்கியங்களெல்லாம் முன்செய்த நல்வினையால் கடவுள் இதனை வைத்து ஆளுமாறு நம்மை அமைத்திருக்கிறார். யோசித்தால் செல்வம் நிலையானது அன்று. உள்ளபொழுதே இல்லாது இரப்போர் முதலியவர்களுக்கு உதவி இதனைப்படைத்த பயனை அடையவேண்டும். குருடு, வடிவில்லாதபிண்டம், கூன், குள்ளம், ஊமை, செவிடு, விலங்குவடிவு, அறிவில்லது, ஆன எட்டுவகைக் குறைப்பிள்ளைகளை மகப்பேறு கொண்டதாகப் பெயரே அன்றி, தரியற்ற இவற்றால் எவ்வித நலத்தையும் பெறுதலில்லை. ஆதலால் நல்வினைக்கு உதவப் பெறாதபொருளை உடையார், பொருளுடையார் ஆகமாட்டார். உதவாரிடத்துள்ள பொருளைப் பொருளாக நல்லோர் மதியார்கள். என்னும் கருத்துடையவர்:

"காணார் கேளார், கான்முடப்பட்டோர், பேணுநரில்லோர், பிணிநடுக்குற்றோர், யாவரும் வருகவென் றிசைத்துடனூட்டி" என்றவாறு குருடர், செவிடர், முடவர், அநாதை, நோயாளர் முதலிய ஏழைகளைத் தேடியழைத்து உபசரித்து அன்னமளிப்பார். இரவலர் தடையின்றி வருதற்கு அடையா நெடுங்கதவு உள்ள இல்லத்தை யுடையார். கோயில்களுக்கும், துறவிகள் வசிக்கும் திருமடங்களுக்கும், பாற்பசு உதவுவர். பக்திமான்கள், வாசித்தறிந்த வித்வான்கள் கருத்தறிந்து உதவுவர். இன்னும் பல படித்தான தருமங்களைச் செய்து மனைவாழ்க்கை நடத்திவந்தார்.



இவ்வாறு நல்லிசையோங்க வாழ்ந்துவரும் காலத்து ஒரு நாள் இரவு நள்ளிருளில், கலைமகள் அவதாரமாகிய ஒளவைப்பிராட்டியார் வந்து சேர்ந்தார்.

ஒளவைப்பிராட்டியார் தூரத்தே வரும்பொழுதே அசதி நோக்கினார். உடனே எதிர் சென்று அளவளாவி உபசரித்து மகிழ்ச்சி ததும்ப இனிமையுறக் கனிமொழி இயம்பி மெதுவாக அழைத்துவந்து ஆசனத்து இருத்தித் தானுமிருந்து எங்கிருந்து புறப்பட்டீர்களென்பது முதலியன விசாரித்தனர். உடனே நீராடுதற்கு எழுந்தருளுங்கள் எனவே பணிப்பெண்கள், அம்மே எழுந்தருளுங்கள் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டனர். அழைத்துச் சென்று பச்சைப் பருப்பு மாவு திமிர்ந்து தேகமெல்லாம் தேய்த்துவிட்டு நீராட்டி, ஒத்தாடையால் உடல் ஈரம் போக்கி உயர்ந்த நல்லவெண் துகில் கொடுத்து உடுக்கச்செய்து, சந்திவினைக்கு வேண்டிய உபகரணங்கள் வைத்துப் பின்பு உணவு உண்ணும்படிக்கு அழைத்துச் சென்றனர். ஆசனத்திலிருத்தி முன்னமே வைத்திருந்த பொன்னிலையில் பாலமுது முதலியன பரிமாறப்பட்டிருந்தன. ஒவ்வொரு கவளந்தோறும் உபசார மொழிகள்கூறி உண்பித்த அசதியை ஒளவை நன்கு பாராட்டினர். இவ்வாறு சில நாள் அங்கு நன்னெறிப் பொழிவு இயற்றி இருந்தனர்.

ஒரு நாள் பசுத்தொழுவத்தைப் பார்க்கச் சென்றனர். அங்கே கறவைப் பசுக்களில் மயிலை, வெள்ளை, செவலை, காரி, புல்லை, செம்பூத்தன், மரை முதலிய நிறமுள்ள வற்றைப் பிரித்துத் தனித்தனி கட்டியிருந்தன. கன்றுகள் முதலியன வேறுவேறாகக்கட்டியிருந்தன. அப்பால் பொலிகாளையுள்ள பட்டியருகு சென்றனர். திமில் மிக உயர்ந்து அத்திமிலைச் சுற்றிலும் கழுத்திலும், கண்ணைச் சுற்றிலும் முகமும் கரம்பை நிறங்கொண்டு, செருக்குற்று முன்காலால் மண்ணைத் தோண்டிக் குன்று எழுந்ததுபோலப் பார்ப்பதைக் கண்டு ஒளவையார் மருட்சி கொண்டனர். பின்பு பல வெள்ளாட்டு வகைகளும், செம்மறி, குறும்பை வகைகளும், பலவகையான எருமைவகைகளுமாகியவற்றைக் கண்டு வியப்படைந்தனர். பின்பு கம்பு, சோளம், சாமை, வரகு, மொச்சை தட்டை வகைகளும் சேமித்துக் குத்தாரி குத்தாரியாக உள்ள குடும்பைகள் செய்குன்றுகள்போல இருப்பனவும் கண்டு மகிழ்ந்தனர். மேலும் வரதராஜப் பெருமான் மல்லராயப் பெருமான், சோமேசுரர், ஜர்ரதேவி (செல்லாண்டி)

யம்மன் கோவில்களும் கண்டு களித்தனர். அவ்வப்பொழுது பல பாடல்கள் பாடினர். அசதியியற்றிய பல உபகாரங்களையும் மெத்தவும் பாராட்டி மகிழ்ந்தனர். அசதிக்கோவையென ஒரு கோவைப் பிரபந்தம் சுவையுறப் பாடினர். அப்பிரபந்தம் முழுதும் இப்பொழுது அகப்படவில்லை. அவற்றுள் சில பாட்டுவருமாறு:—

ஆய்ப்பாடி யாயர்தமைவே லசதி யணிவரையிற்
கோப்பாவவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக்கோடிரண்டும்
சிப்பாய்ச் சிறுக்கரி யாய்ச்சிமி ழாய்ச்சின்ன மோதிரமாய்
காப்பாய்ச் சதுரங்க மாய்ப்பல்லக் காகிக்கடைபட்டதே.

ஆடுங் கடைமணி யைவே லசதி லணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யாடந்த வாசை நிகழ்த்தரிதால்
கோடுங் குளமுங் குளத்தரு கேநிற்குங் குன்றுகளும்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே

இக்கோவைச் செய்யுளில் "சேனைத்தலைவனைச் செங்கோலசதியை" எனக்குறிப்பிட்டிருப்பதால் சேனாதிபதிப் பதவி அதிகாரம் கொண்டவனென்றும், "ஆடுங்கடைமணி" என்றிருப்பதால் பெரிய அரண்மனையுடையவனென்றும் தெரிகிறது.

இந்தச் சரித்திரம், நந்தமண்டல சதகத்தாலும், கொங்குமண்டல சதகத்தாலும் இன்னும் சில சரித்திரங்களாலும் விளங்கலாகும்.

ஐவே லசதி யிரவினி லௌவைக் கமுதளித்து [றவம்
மெய்வேதம் போனிற்கும் கோவைகொண் டோன்புவி மீதிற்
செய்வோன் றனினும் பசுக்காவன் மிக்கெனச் செய்யுமன்பன்
மைவேலை வண்ணன் சதியுடன் வாழ்நந்த மண்டலமே
[நந்தமண்டல சதகம்]

தெய்வீக மான தமிழ்ப்புல வோர்கள் திறமுளங்கொள்
பொய்தீ ருரையெய்பி ராட்டியா ரௌவை புனைந்துபுகழ்
செய்கோவை யேற்ற திறலோ னசதி செழித்துலகார்
ரழ் பொழிறிக ழைவேலி யுங்கொங்கு மண்டலமே.
[கொங்கு மண்டல சதகம்.]

தி. அ. முத்துசாமிக் கோனார்,
தமிழ்வித்வான், திருச்செங்கோடு.

# யாதவ வாலிபர் சங்கங்கள்.

## சிந்தாதிரி பேட்டையில் கூட்டம்.

சென்னை யாதவ வாலிபர் சங்கத்தின் ஆதரவில் சிந்தாதிரி பேட்டை பஜனை மண்டபத்தில் (24—7—30) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திரு. டி. எஸ். வேணுநாதக் கோன் அவர்கள் தலைமையில் யாதவர் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் யாதவமக்களுக்கு இருக்கும் வித்தியாசங்களை ஒழித்துத் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்றும், அவர்களுக்குக் கல்விபோதித்தல் அவசியமென்றும், மற்ற சமூகத்தவர் கல்வியினால் முன்னேற்றம் அடைந்திருப்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார். மற்றும் கால்நடை ஆஸ்பத்திரிகள் ஒவ்வொரு டிவிஷனிலும் ஏற்படுத்தவேண்டுமென்றும், அதற்காகத் தகுந்த கிளர்ச்சிகள் செய்யவேண்டுமென்றும் பால் வியாபாரிகள் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், இவைகளுக்கெல்லாம் நமக்குள் ஒற்றுமை வேண்டுமென்றும் கூறினார்.

திருவாளர்கள் C. V. திருவேங்கடம், C. V. துரைசாமி ஆகியவர்கள் சங்கத்தின் கொள்கைகளைப்பற்றி விரிவாகப் பேசினார்கள்.

## சென்னை மூன்றாவது கிளைச்சங்க ஸ்தாபனம்.

யாதவ வாலிப சங்கத்தின் கிளைச்சங்கம் ஸ்தாபனம் செய்வதற்காக ஆகஸ்டுமாதம் 10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை சூளையில் கார்பொரேஷன் மாடல் ஸ்கூலில் திரு. டி. எஸ். வேணுநாதக் கோன் எப். வி. இ. எம். ஆர் எ. எஸ்., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது.

தலைவர் முன்னுரையில் கிளைச்சங்கங்களினால் ஏற்படும் நன்மைகளை விரிவாகக் கூறிவிட்டபிறகு, 1921-ம் வருட சென்ஸஸ் கணக்கில், தெலுங்கு யாதவர்கள் பலிஜர்களுடன் சேர்த்துக் கணக்கு எடுக்கப்பட்டதில் சென்னையில் உள்ள தெலுங்கு யாதவர்களின் ஜனத்தொகை அறிவது முடியாத காரியமானதாக இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டினார். வரும் சென்ஸஸில் தெலுங்கு யாதவர்கள் யாவரும் தம்மை நாயுடு அல்லது பலிஜாஸ் என்று சொல்லிக்கொள்ளா

மல் யாதவர் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமென வற்புறுத்திக் கூறினார். திருவாளர் கா. வே. திருவேங்கடம் பிள்ளை, வண்டலூர் அருகிலுள்ள புறம்போக்கு நிலத்தை, மாடுகளுக்கும், கன்றுகளுக்கும் மேய்வதற்காகக் கொடுக்கும்படி மேல் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளவேண்டுமெனவும் அதனால் பால் குறைவால் ஏற்படும் கஷ்டம் நிவர்த்தியாகுமெனவும் சொன்னார். சி தி. ராமலிங்கம் என்பவர் பால்வியாபாரம் செய்பவர்கள் படும் கஷ்டங்களை எடுத்துக் காட்டி யாவரும் ஒருங்குசேர்ந்து குல நன்மைக்காக உழைக்க முன்வர வேண்டுமெனவும் அப்பொழுதுதான் தாழ்ந்த நிலைமையிலிருக்கும் யாதவர்கள் முன்னேற்றமடைய ஏதுவுண்டு எனவும் சொன்னார்.

திருவாளர் எம்.என். லோகநாதக் கோன் கால்நடை ஆஸ்பத்திரிகள் மிக்க அத்யாவசியமானவை எனவும் அவைகள் ஒவ்வொரு டிவிஷனிலும் திறக்கப்பட்டாலன்றிக் கால் நடைகளின் வியாதிகளை விரைவாகவும் சுலபமாகவும் கவனிக்க முடியாதெனவும் சொன்னார்.

திருவாளர் தி. சா. சரஸ் யாதவமக்கள் கல்வியில் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் பின்னடைந்து இருக்கிறார்களெனவும், அதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான உதவி புரியாததே எனவும். இக்குறையைத் தீர்க்க முயற்சிகள் அதிசீக்கிரம் செய்யவேண்டுமெனவும் வற்புறுத்திக் கூறினார். திருவாளர்கள் இ. ஆதிகேசவலும், எம். கே. கண்ணபிரானும் எல்லா யாதவர்களும் சங்கத்திற் சேர்ந்து உழைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

பிறகு சூளையில் மூன்றாவது கிளைச்சங்கம் ஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருவாளர்கள் கி வீரராகவப் பிள்ளை பி. ஏ. அவர்களைத் தலைவராகவும், கன்னையப நாயுடு அவர்களை உபதலைவராகவும், ஏ. வெங்கடேசன், எஸ். கே. கண்ணபிரான் காரியதரிசிகளாகவும், சி. வி. ராமச்சந்திரன் பொக்கிஷதாரராகவும், பி. பலராமன், ஜெ. சுந்தரராஜன் ராஜகோபால் நாயுடு, எம். என். லோகநாதக்கோன் ஆகியவர்கள் கமிட்டியின் அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் முடிவுரையில் ஒவ்வொரு தகப்பனும், தன் குமாரனுக்கும், குமாரத்திக்கும் போதுமான கல்வி போதிக்க ஏற்பாடு செய்யவேண்டு மெனவும் கல்வி கற்றால்தான் நாம் முன்னேற்றமடைய வழி உண்டு எனவும் எடுத்துரைத்தார்.

திருவாளர் கி. வீரராகவ பிள்ளை பி ஏ. அவர்கள் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

---

# தசாவதாரங்கள்.

உலகத்தைப் பாதுகாத்தற் பொருட்டு, கடவுள் அவதரித்தாரென்ற கொள்கை எல்லா மதங்களிலும் இருக்கின்றது. ஆனால் ஒரு ஹிந்துவின் கொள்கையைப்போல ஏனையோருக்கு இல்லை. பரப்பிரம்மத்தின் உருவமே உலகமென்று எண்ணும் இயல்புடையவனாகிய ஹிந்துவுக்குக் கடவுளைப் பல உருவத்திலும் காண இயலும். ஏசுநாதர் தர்மத்தை நிலைநாட்ட வந்த அவதார புருஷரெனக் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். புத்த மதத்தவரும் இக்கொள்கையைத்தான் கொண்டிருக்கிறார்கள். தர்மத்தை நிலை நாட்டுவதிலும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன மென்ற கொள்கைதான் வற்புறுத்தப் படுகிறது.

தசாவதாரங்கள் என்ற மொழிக்குப் பத்து அவதாரங்கள் என்பது பொருள். இவை எல்லாம் பூமியின் பரிணாமங்களிலிருந்தே உண்டானதென்னலாம். மேனாட்டவரும் இக்கொள்கைகளை ஒப்புக் கொள்ளுகிறார்கள். சைவ நூல்களில் சிலவும் வைணவ நூல்களும் இக் கொள்கையை ஒப்புக்கொள்ளாமலில்லை. செவ்வாய் என்ற கிரகத்தில் இப்போது உயிர்கள் வாழ்கின்றன என உறுதியாகக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இச் செவ்வாய் பூமியிலிருந்து சிதறுண்ட ஒரு பிழம்பென எண்ணுகிறார்கள். ஹிந்துக்கள் இவ்விஷயத்தை வெகு காலத்திற்கு முன்பே அறிந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். செவ்வாயின் பெயர்களைக் கவனித்தால் இது புலனாகிறது. குஜன் என்ற செவ்வாயின் பெயர் கு-பூமி; ஜன்-பிறந்தவன். இதுபோலவே மஹிசுதன் என்ற மொழியும் பொருள்படுகிறது. பூமி, சூரியனைப் போல எரிந்துகொண்டிருந்த தென்றும் நாளடைவில் இம்மாற்றத்தை மேற்கொண்ட தென்றும் சாஸ்திர விற்பன்னர் எண்ணுகிறார்கள்.

உலகம் பிரகிருதி புருஷன் என்ற முறைப்படி நுட்பமான முறையில் பகுக்கப் பட்டிருக்கிறதென்றும் பிரகிருதி பெண் தன்மையும் புருஷன் ஆண் தன்மையும் உடையதெனவும் அறிஞர் அபிப்பிராயப் படுகிறார்கள். புருஷன் என்பது ஆன்ம சைதன்னியம். பிரகிருதி யென்பது மாயை, பெண். இவைகளை உயிர் உடல் எனக் கூறுகிறார்கள்.

பிரகிருதியின் மாற்றத்தால் நுட்பமானவைகளைவிட்டுக் கனமான
தன்மைகளைக் காணும்போது அது ஜல வடிவமாக இருந்தது. அதில்
புருஷன் ஜல ஜந்துவின் வடிவமாகச் சேர்ந்திருந்தான். அந்நிலையி
லிருந்து அவனை உயர்த்தக் கடவுள் ஜல ஜந்துவாகிய மச்சாவதார
மெடுத்தார். இதனை ஹயக்கிரீவாசுரனைக் கொன்று வேதங்களை மீட்
டுத் திருமால் அவதாரஞ் செய்தார் என்று புராணங் கூறும். பாபி
லோனியரும் இக்கதையைப் பர்ஷியன் குடாக்கடலிலிருந்து மச்ச
வடிவங்கொண்ட மனிதன் வேதங்களையுங்கொண்டு கரை யேறினான்
என்று நம்புகிறார்கள்.

ஜலம் சற்று வற்றிப் பூமியாக மாறியது. சிறிது நீரும் நிலனு
மாக விருந்தது. நீரும் நிலனும் கலந்த பூமியில் வாழத்தக்க கூர்ம
மாக இறைவன் அவதரித்தார். அடுத்தபடியாக மனிதனையும் மிருகத்
தையும் கலந்த உருவத்தைக் கொண்டார். அதுவே நரசிங்கவதாரம்.
பின் மிருகத்தன்மை நீங்கி மனிதத் தன்மை வந்தது. ஆனால் மனி
தத் தன்மை முதிரவில்லை. அதுவே வாமனவதாரம் எனப்படுவது.

கலைகளைக் கற்றுத்தேறிய மனிதன் அவற்றின் உதவியால் பொரு
ளும் போக்கியமும் பலமும் பெருமையும் படைத்தான். இவை
களைக் கொண்டு இறுமாந்திருந்தானே தவிர ஏழைகளைப் பாதுகாக்
கும் விஷயத்தில் அதை உபகாரப் படுத்தவில்லை. ஆகையால்
அவனை அமைதியும் அறிவும் அன்பும் உடையவனுக்கப் பரசுராமா
வதாரத்தைப் பகவான் மேற்கொண்டார்.

மனிதனின் தர்மங்களும் கடமைகளும் இன்னவென்று உல
கில் நிலைநிறுத்தி அறிவுறுத்தும் பொருட்டும் பெரியர், சிறியர்,
மாதா, பிதா, குரு, சகோதரர், நட்பாளர், பகைவர் முதலானவரிடம்
நடந்து கொள்ளவேண்டும் முறைகளைத் தெரிவித்தற்கும் திருமாலும்
திருமகளும் ஸ்ரீராமனாகவும் சீதா பிராட்டியாராகவும் அவதாரஞ்
செய்தார்கள்.

ஸ்ரீராமபிரானுடைய அவ்வதாரத்தால் அரச தருமமின்றிப் பொது
ஜனங்களுடைய கடமை அறிவிக்கப்படவில்லை. ஆகையால் கடவுள்
மனிதர் யாவரிடத்திலும் பழகக்கூடிய ஸ்ரீ கிருஷ்ணவதார மெடுத்
தார். அன்பே யாவற்றிற்கும் அடிப்படையென வெளியாயிற்று.

மேற்சொன்ன தருமங்கள் உலகில் குன்றி அதர்மம் மேலிடுங்
கால் கல்கி அவதாரம் நடைபெறும் என்பதாகத் தெரிகிறது. மேற்



னவை புராணக் கதை யாயினும் உலக பரிணமத்தின் இயல்
பிற்கு ஒத்தவாறு இருக்கிற தென்பது ஒப்பமுடிந்த விஷயம்.

(தொடரும்)

ச. செல்லம்.
சுசீந்திரம்.

---

# பெண் கல்வி.

நமது நாட்டில் கல்வி மிகக் குறைவு. பெண்கல்வி அதிலும்
குறைவு. பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றி எனக்கு எட்டிய
வரையில் அன்பர்களுக்குத் தெரிவிக்கத் துணிந்துள்ளேன். பெண்
கல்வி என்றால் பெண்கள் படிக்க வேண்டும் என்பதாகும். விருப்பு,
வெறுப்பு, உணர்ச்சி, அறிவு இவை ஆண்களுக்கு இருப்பது போல்
பெண்களுக்கும் உண்டு. ஆகவே கல்வியும் ஆண் மக்களைப் போல்
பெண் மக்களுக்கும் தேவையானது, விரும்பத்தகுந்தது, பொதுவா
னது. அப்படியிருக்கப் பெண்கள் படிக்கக்கூடாது என்ற கொள்கை
நமது நாட்டில் பேசப்பட்டும் செய்கையில் காட்டப்பட்டும் வந்த
தால் வருவதால் கோடிக் கணக்கான பெண்கள் படிக்க முடியாத
பரிதாப நிலைமையைக் கண்டுதான் பெண் கல்வி எனத் தனியாகப்
பேசவேண்டும் நிலைமையில் வந்திருக்கிறது. நமது நாட்டில் ஆண்
களில் 100க்கு 92 பேரும் பெண்களில் 100க்கு 98 பேர்களும் தங்க
ளுடைய தாய் மொழியை எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும்
நிலைமை எவ்வளவு வருந்தத் தக்கதென்று எண்ணிப் பாருங்கள்.

பெண்களுக்குப் படிப்பு வேண்டாம். படித்தால் கெட்டுப்
போய் விடுவார்கள். கணவனை மதிக்க மாட்டார்கள். உத்தியோ
கத்திற்காப் போகப்போகிறார்கள் என்றெல்லாம் சொல்லியும் கேள்வி
கேட்டும், நமது நாட்டிலுள்ளோர் பெண் கல்வியை மறுக்கிறார்கள்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் அவர்
மாதரறிவைக்கெடுத்தார்
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை யற்றிடும் காணீர்"

என்ற பாரதியாரின் சீரிய சொற்களைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஆண் மக்கள் தன்னலத்தினால் பெண்கள் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். படித்துவிட்டால் அடங்கி நடக்கமாட்டார்கள் ஆகவே படிக்கவிடக் கூடாதென்று பெண் கல்வியை மறுக்கிறார்கள். வெறுக்கிறார்கள். ஆனால் சுதந்திர உணர்ச்சியுடைய ஆண்கள் சீர்திருத்தத்தில் ஆவேச முடைய ஆண்மக்கள் வாழ்கையில் வெற்றி பெற வேண்டுமெனும் உத்தமர்கள் பெண்ணுக்குக் கல்வி கொடாமையினால் இந்தத் தேசத்து மக்கள் ஒரு சிறகொடிந்த பறவையைப் போல் ஏங்கித் தவிக்கிறார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்த்துப் பெண் கல்வியை வளர்க்கப் போராடி வருகிறார்கள். பெண்களுக்குப் படிப்புத் தெரியாததால் பிள்ளைகளை நாகரிகமாக வளர்க்கத் தெரியவில்லை. பிள்ளைகளைப் படிக்கவைக்கத் தெரியவில்லை. குடும்ப நிர்வாகத்தைத் திறமையாகக் கொள்ள முடியவில்லை. வீண் வம்புகளில் கலந்து கொள்ளுகிறார்கள். கண்மூடித்தனமாக வழக்க வொழுக்கங்களைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். இன்னும் ஆண்கள் முன்னேற்றத்திற்குச் சனியன்களாய் நிற்கிறார்கள்.

படியாதவர்களுக்கு, உலகத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளாதவர்களுக்கு அறிவு வளர்ச்சிபெற முடியாது. அறிவு பொருந்தாத வாழ்க்கை சுகம்பெற மாட்டாது. கல்வி அறிவு இல்லாத பெண்கள் சுகத்தைக் கொடுக்கும் அறிவான வாழ்க்கைக்குத் துணை செய்ய முடியாது. ஏதாவது ஒரு ஜோலியை எடுத்துக்கொண்டாலும்கூட அந்தந்தத் துறையில் நன்றாகப் படித்திருப்பவர்கள் தானே திறமையாகச் செய்ய முடியும்? ஒவ்வொரு வேலைக்கும் படித்தவர்களைத்தானே உலகத்தார் விரும்புகிறார்கள்? குடும்ப நிர்வாகம் முழுவதும் பெண் மக்களையல்லவா பொறுத்து நிற்கிறது. சிறப்பாகப் பிள்ளை வளர்ப்புப் பெண் மக்களையல்லவா சார்ந்து நிற்கிறது? ஆகவே பெண்களுக்குக் குடும்ப நிர்வாகத்தையும், பிள்ளை வளர்ப்பையும், நன்றாகச் செய்துமுடிக்கக் கல்வி வேண்டுமா; வேண்டாமா? யோசனை செய்து பாருங்கள். பெண் கல்வியின் தேவையை நன்றாக அறிந்து கொள்வீர்கள்.

நாகரிக மிகுந்த நாட்டிலெல்லாம் பெண் கல்வி வளர்ந்து ஓங்குகிறது. பெண்கள் படித்தவர்களாக விளங்குகிறார்கள். நமது நாடும் நாகரிகத்தில் சிறப்படைய வேண்டுமானால் பெண்கல்வி வளர்ச்சி



பெற வேண்டும். பொதுவாகப் பெண்கள் படித்தால் பெண்களுக்கும் நலமாம். பெண்களால் இன்பமடைய விரும்பும் ஆண்களுக்கும் நன்மையாம்.

ஆதலால் யாதவகுலப் பெண்மணிகளே!

நீங்கள் கல்வியில் அளவுகடந்த அக்கரை காட்டவேண்டும். படிப்பதே முக்கிய வேலையாகக் கொள்ளவேண்டும். நீங்கள் கல்வி கற்காது இருந்தால் நாகரிகம் அடைய முடியாது. நமது குலமும் முன்னேற்ற மடையாது. பெண்களாலேயே அடிமை நாடுகளெல்லாம் உரிமை பெற்று வாழ்கிறது. பெண் கல்வியை மறுப்பவர் காலம் மலையேறி வருகிறது. என்பதை மறவாதீர்கள்.

“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை
என்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தைமனிதர் தலை கவிழ்ந்தார்”

இச்சமயத்தில் நாம் படியாதிருந்தால் சரியன்று, நீங்கள் படித்தால் உங்களது பிள்ளைகளும் அறிவோடு வாழும். நாடும் முன்னேற்ற மடையும். இது திண்ணம் திண்ணம்.

யாதவகுல அன்பர்களே! நமது யாதவ குடும்பங்களெல்லாம் இன்பக்கடலாட, நாட்டுக் குறைபாடுக ளெல்லாம் சூரியன் முன் பனி போல் பறந்தோட, சீர்திருத்த இயக்கம் சிறப்புற்று விளங்க, சுதந்திரச் சூரியன் சுடர்விட்டொளிரப் பெண்ணடிமை யொழித்துப் பெண் கல்வியில் ஆணும், பெண்ணும் கருத்தைச் செலுத்தி வளர்க்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்

சு. ஆண்டியப்பா

பூதப்பாண்டி.

# நமது கிராம முன்னேற்றம்.

‘கிராமங்கள் கடவுளால் அமைக்கப் பட்டவை; நகரங்கள் மனிதரால் ஆக்கியவை’ என்பது ஓர் பழமொழி. ‘பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்று’ பொதுவாக உண்மையில் கிராமங்களில் காணப்படும் அமைதி, போற்றத்தக்க எளிமை, திருப்தி முதலிய நற்குணங்கள் பட்டணங்களில் பார்ப்பது மிகவும் அரிது. பட்டணத்தில் கிடைக்கும் அறிவுத்தோற்றம், பரந்தநோக்கம் முதலியவை நாட்டுப் புறங்களில் கிடையா. ஆனால் இவற்றுள் எது உயர்ந்தது? என்றும், எது தாழ்ந்தது என்றும் இப்போது நான் வாதிக்க விரும்பவில்லை. இங்கு நான் சொல்ல நினைப்பதெல்லாம் நமது நாட்டு முன்னேற்றம்; அதாவது கிராமங்களின் முன்னேற்றத்தின் அளவைப் பொறுத்து நிற்கிறது என்பதே யாகும்.

இந்தியாவின் நிலை, உயிர்நாடி, ஜீவசத்து, ஆத்மப் பிரகாசம் இவைகளெல்லாம் கிராமங்களிலேயே விளங்குகின்றன. இதை நகரவாசிகள் ஒப்பினும்சரி, ஒப்பாவிடினும்சரி இஃதோர் மறுக்கமுடியாத உண்மை. ஆனால் நமது மக்களின் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கிராமங்களிலேயே வசித்து வருகிறார்கள். எங்கேயாயினும் ஒரு நகரம் இருந்தால் அதைச் சுற்றி நூற்றுக்கணக்கான கிராமங்களும் இருக்கும். ஆகவே நமது முன்னேற்றம், சீர்திருத்தம் இவைகளெல்லாம் கிராமங்களிலிருந்துதான் ஆகவேண்டியதாயிருக்கிறது. அதைச் சீர்படுத்தாத விஷயத்தில் நாம் எண்ணிய எண்ணமெல்லாம் குதிரைக் கொம்பாகவே முடியும் என்று நாம் உறுதியாகக் கூறலாம். எத்தனையோ மேடை பிரசங்கங்களும், பெரிய மகாநாடுகளும் கூடி என்ன பயன்? இவைகளெல்லாம் நகரங்களிலேயே தான் நடைபெறுகின்றன.

“அப்படி நடைபெற்றதில் இது பரியந்தம் என்ன நடந்திருக்கிறது? இதெல்லாம் வெறும் பிரட்டல், இவர்களால் என்ன செய்ய முடியும்” என்று சொல்லிப் பிறர் இகழும்படி ஆகிவிட்டது. இவைகளுக் கெல்லாம் காரணம் கிராமங்களைக் கருதாமல் நடந்து கொண்டு போகிறதுதான் என்று நாம் ஒரு வார்த்தையில் கூறிவிடலாம். ஆனால் கிராமங்களில் பிரசங்கங்களும், மகாநாடுகளும் நடைபெறுகிறதில்லை. என்றைக்குக் கிராமங்களில் பிரசங்கக்காரர்கள் வந்து சீர்படுத்துகிறார்களோ அன்று தான் முன்னேற்றம் அடையும்.



நான் இவ்விடத்தில் மகாநாடுகள் நடைபெறுவதில் பயனில்லை என்று வாதிக்கவரவில்லை. அவைகள் ஜில்லாக்களில் நடைபெறுவது போலத் தாலூகாக்களிலும், கிராமங்களிலும் நடைபெற வேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். நமது கிராமங்களை நினைக்கின்ற பொழுது எனது கண்ணில் இரண்டு காட்சிகள் எழுகின்றன. அதாவது ஒன்றில் இன்பமும், பெருமையும் துள்ளுகின்றன. மற்றொன்றிலோ கண்ணீரும் துக்கமும் நெஞ்சை அடைக்கின்றன. இவைகளில் முதலில் சொல்லியது நமது முற்காலத்துக் கிராம நிலைமையையும், பின் சொல்லியது தற்காலத்துக் கிராம வீழ்ச்சியையும் ஞாபகம் ஊட்டுகின்றது. இவைகள் இரண்டைப்பற்றியும் கூறிய பின் கிராமத்தைப் பற்றிக் கவலை கொள்ளாதார் மக்கள் அல்லர் என்று உறுதியாய்க் கூறலாம். (தொடரும்)

க. ஆண்டியாதவன், பெருங்குளம்.

# சமூக முன்னேற்றத்திற்கு வேண்டியவை யாவை ?

நமது நாட்டிலுள்ள சகல இடங்களிலும் வெவ்வேறு பாஷைகள் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பாஷைகளுக்கு முரிய பெரியார்களால் அவரவர் தனிப் பாஷையில் உலகு, உயிர், கடவுள் என்னும் முப்பகுதி பற்றித் தத்தமது சமயத்துக் கேற்பப் பொதுமறைக் கிணங்கித் தமது அறிவினால் உலகானுபவங்களைச் சற்றுக் கூட்டியும் குறைத்தும் மதப்பிரசாரம் செய்ய ஏதுவாயும் பகர்ந்திருக்கின்றனர். ஒரு பாஷையிலேயே பற்பல சமய நூல்கள் காண்கின்றன. ஒவ்வொரு சமயத்தினரும் அவ்வச்சமயப் பெரியார்களின் கோட்பாடுகளையே முக்கிய கருத்தாகக் கொண்டு தழுவிவருகின்றனர். பொதுவாக நேத்திரமில்லாத நால்வர் யானையைக் கண்டு பிதற்றியதுபோல் அவரவர் சமய அறிவுக் கேற்பக் கடவுள் வணக்கம் காண்கின்றன. இவ்வுலகம் யாவற்றிற்கும் ஒரே கடவுளன்றி சமயத்துக்கொரு கடவுளும் சாதிக்கொரு கடவுளும் ஊருக்கொரு கடவுளும் நாட்டிற்கொரு கடவுளுமின்று. இதை யுணர்ந்து பார்த்தவர் பிற மத கண்டனம் புரியவாவது ஆலயமில்லை, கோவில் இல்லை, குளம்

இல்லை; உயர்வில்லை; தாழ்வில்லை; என்று சொல்லவாவது முன்வாரார். நமது சமயக் கடவுளாகிய ஸ்ரீகண்ணபிரானையும் குலப்பெருமானையும் அவரருள் பெற்றுயர்ந்த பெரியாரையும் அவர்கள் அருளிய திருப்பாசுரங்களையும் 'காமாலை நோய்கொண்ட கண்ணிற்குக் காண்பதெல்லாம் மஞ்சளே' என்பதற்கிணங்கப் பிறமதத்திலுள்ள மாசுகளாலும் தமது சொற்ப அறிவாலும் பிதற்றித் திரியும் புல்லறிவாளர்களின் சொல்லுக்கு நமது சமூகத் தலைவர்கள் இணங்காதிருப்பதே நமது கடமை. அவ்விதம் இணங்கினால் அல்லது நாம் சும்மாவிருந்தாலும் நமது சமய நூல்களும் சமய அறிவுகளும் காணாமற்போய் நமது சமூக மக்களும் தெருவில் நின்று கூத்தாட ஏற்படும். ஆகையால் நமது சமூக முன்னேற்றத்திற்கு வேண்டியவை தனிமுதற்பொருளாய ஸ்ரீகண்ணபிரான் திருச்சரிதையும் அவர் திருவிளையாடலும் அவரது பெருமை யுரைக்கும் ஆகமங்களும் அவரருள் பெற்றுய்ந்த அறப்பெருந் தகையார் அன்பு மொழிகளும், இன்னும் அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களையும் உலகானுபவத்தோடு மக்களுக்கு அறிவுறுத்தி வரும் நீதி நூல்களும் பிறவுமாம்.

உலகத்தில் பற்பல பாஷைகளும் பற்பல சமயங்களும் வழங்கி வருகின்றதென்றோம். சகல பாஷைக்கும் தாயாக நிற்பதும் தனக்கொரு நிகரிலாது எப்பாஷைகளிலும் எந்த நாட்டிலும் போய் அரசு கொள்வதும் நமது தாய்மொழியாய தமிழ் மொழியொன்றுதானென்பது வெளிப்படை. ஆகையால் நமது தமிழ்மொழியிலுள்ள புருஷார்த்தம் நான்கையும் ஒருங்கே யடைய நமது முன்னோர்களும் நாமும் அரும்பாடு பட்டு வருகிறோம். தமிழ் மொழியைக் கற்றுத் தமிழாராய்ச்சி செய்து தமிழறிவோடு பேசுபவர்களே தமிழர்கள் எனப்படுவர். நமது தாய்ப்பாஷையிலுள்ள சொற்சுவை பொருட்சுவை தெரியாதவரைக் கற்றவரெனவும் அறிஞர் எனவும் கூறவியலாது. தாய்மொழி அறிவுடன் கூடிய அறிவே பேரறிவெனப்படும். நாம் பேசவும் பழகவும் எழுதவுமிருப்பது நமது தமிழ் மொழியே. நல்லதின்னது தீயதின்னது என உலகப் பொருளை உணர்த்தி வைப்பது கல்வியறிவுதான். தமிழ்மொழியைக் கற்றதினால் தான் நமக்கு நல்லறிவு தோன்றிக் குணங் குற்றங் காண வியல்கின்றது. நாம் பிறக்கும் பொழுதே பேசவும் எழுதவும் கூட்டவும் குறைக்கவும் அழுத்தவுந் திருத்தவும் கொண்டு வந்ததில்லை. வறியனாயிருந்து நல்வினையினால் தனவந்தனானவொருவன்



தனம் படைத்தோமென்று கெர்வங்கொள்ளாது, அச்செல்வமானது மென்மேலும் விருத்தியடைய அச்செல்வத்தைப் போற்றி அறனுக்கொப்ப ஒழுகி வருவானாயின் அச் செல்வம் பெற்றதினால் பயனடைவான். செல்வமுண்டானவுடன் உலகம் எங்கிருக்கிறதென மார்பு தட்டி எழுவானாயின் அவன் கதி சகதிதான். அதுபோல நமது அறிவுக்கு அன்னையாயிருந்த ஆகமங்களைக் கண்டமட்டும் பிதற்றினால் நமது சமயமெங்கே, சமூகமென்பது எங்கே.

அறிவுடையன்பர்காள்.

நமது சமயமும் சமூகமும் சீர்கேடுற்றதை அறிந்த பல பெரியார்கள் சிறியார்கள் யாவரும் அதிதீவிர முயற்சியெடுத்து நமது சமூகத்தைச் சிறிது நாளையில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென உண்மைக் கருத்தோடு முயன்றிருக்கிறார்கள்.

ஆகையால் "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்குத் தொக்கச் சீர்த்தவிடத்து" என்ற தமிழ் மறைக்கிணங்க இது சமயத்தில் நமது யாதவ சகோதரர்கள் யாவரும் கிளர்ச்சித்துக் கண் விழித்துப் பார்ப்பார்களாயின் நமது தலைவர்களின் கோரிக்கை பழுதுறுதமையும். அவர்களெடுத்த கோரிக்கையை நிறைவேற்ற என்ன செய்வது என்றால் அவர்கள் சமயத்தையும் சமூகத்தையும்பொறுத்து வரைந்து வரும் கருத்துக்களை ஆராயவேண்டும். அவ்வித ஆராய்ச்சியை நமது சமூக மக்கள் யாவருக்கும் சொல்லி உணர்ச்சி வருவிக்கவேண்டும். அப்பப்போது சமூகக் குறைபாடுகளை விலக்குவதை விலக்கித் துவக்குவதைத் துவக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதுவகைக்கு முக்கிய ஆதாரமானது ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் நமது சமூகத்துக்கென்று சங்கம் எற்படுத்துவதே பெரும்பயனளிக்கும். சங்கமிருந்தால்தான் பலரும் வந்து பத்திரிகை பார்த்து அப்பப்போது உள்ள கருத்துக்களை மற்றையருடன் ஆலோசித்து உணர்ந்துவர ஏதுவாகும். அறிஞர்களுடைய கருத்துக்களும் அறிவுநூலொட்டிய கட்டுரைகளும் யாவரும் காண்பார்கள். ஆகையால் நமது சமய வளர்ப்புக்கும் சமூக வளர்ப்புக்கும சங்கமென்பதே பிரதானம்.

அன்பர்காள்!

இனி அச்சங்கத்தின் பயனென்ன என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். சமய வளர்ப்புக்கும் சமூக வளர்ப்புக்கும் சங்கமே. என்றுரைத்தனம் எவ்விதம் வளர்ப்பது அங்கு என்ன செய்வது

என ஆய்ந்தால் ஒவ்வோரிடங்களிலும் பல அறிஞர்களைத் தலைவராக்கி மற்றையர் அங்கத்தினராய் நின்று அச்சங்க வளர்ப்புக்கு வேண்டிய ,தங்கள் தங்களாலின்றளவு மாதந்தோறும் சந்தா வசூலித்து வார மொருமுறை அல்லது மாத மொருமுறை அறிஞர்களால் பேருரை யாற்றி மற்றையர் அப்பேருரைப் பொருளின் தன்மையை உணர்ந்து உணராதார்க்கறிவித்து ஊக்கமூட்டி வருவது பெரும்பணி. இன்னும் உலகத்திலுள்ள பற்பல பாகங்களிலும் மதப்பிரசாரம் கல்விப் பிரசாரம் செய்யும் அறிஞர்கள் கட்டுரையும் சொற்பொழிவும் அவ்வப்போது வரும் பத்திரிகையிற் காணலாம். அப் பெரியாரின் கருத்துக்களை அறிந்து நமது சமூக வளர்ப்புக்கு வேண்டிய வேண்டியபடி அமைக்கலாம். மற்றை நாடுகளின் முன்னேற்றம் கருவி, வணிகம், கல்வி, விளைபொருள், ஏற்றுமதி, இறக்குமதி, நிறைவிலை, குறைவிலை, சீதோஷ்ணம், தொத்துநோய், ஜெனனம், மரணம் முதலிய சகல விடயமும் அன்றன்றே கண்டு பெரும் பயனடையலாம். மேலும் அரசியலிலும் நகர பரிபாலனத்திலும் உரிமை பெறவோ உயர் பதவியடையவோ சங்கமே பிரதானம். நமது சமூகத்திலுள்ள சண்டை சச்சரவு குண்டுணி கோள் முதலிய கெடுதல்களைக் கண்டு அவ்வப்போதே அத்தகையாருக்கு அன்போடு கொண்ட இன்மொழி கூறி அறிவித்து வீண் வழக்குக் கொடுத்துப் பெரும் பொருள்களைக் கணக்கில்லாது வாரிபாரிச் செலவழிக்கும் வன்கொடுமையை விலக்கி நிற்பதும் சங்கமே. இன்னும் நமது சமூகத்தில் கள்குடி, சூது, வியபிசாரம் முதலிய துர்க்குணமிருந்தால் அவர்களை நாளடைவில் சீர்திருத்தி முன்னேற்றமடைய வைப்பதும் சங்கமே. மேலும் நமது சமூகத்தவருள் மணவிழா பிணவிழா முதலிய சடங்குகளில் ஒருவர்க்கொருவர் உபகாரம் செய்து ஒற்றுமையுண்டாக்குவது சங்கமே. இன்னும் நமதிளைஞர்கள் அடிக்கடி வந்து சங்கத்தை நோக்கி அங்கு நடக்கும் அரும்பெரும் பணிகளையும் அறிவுரைச் சொற்களையும் பொருள்களையும் கண்டு ஆவல் கொள்வதும் அது இயல்பாகக் காணும். ஆகையால் மேலே சொல்லிய நலம் யாவையும் அடையச் சங்கமொன்றுதான் சாதனமானதாகும். ஒவ்வோரிடத்திலும் நமது யாதவ நண்பர்களனைவரும் சங்கம் நிறுவி அதனால் நமது சமூகம் நாளுக்கு நாள் பெரும்பயன் பெறுமாறு செய்து குலத்தொண்டாற்றி வருவது இன்றியமையாததாகும்.

S. நாராயணக் கோன், களக்காடு.

# வள்ளல் பாரி.

—*:*—

(350-ம் பக்கம் தொடர்ச்சி.)

இத்தகைய பெருமை வாய்ந்த "பாரி மன்னன்" வசந்தகால அந்திப்போழ்தினில் ஓர் நாள் பொற்றேர் ஏறிப் பூங்கா புக்கனன். பூங்கா புக்கலும், மந்தமாருதம் வந்து வந்து உந்தி அந்தமில் இன்பம் அளித்திடக்கண்டு அகமிக மகிழ்ந்தான்.

ஆ! மிகுந்த ரமணியமான தபோவனம், சுற்றிலும் பலவிதமான அழகிய வாசனை தரும் விருக்ஷங்களும், காட்டு மரங்களும், வான் அளாவி ஆகாயத்தின் முகட்டைக் கிழித்துக்கொண்டு நிற்பனபோல் பல்லாயிரம் கிளைகளை விரித்துக் கொண்டு, சூரியகிரணங்களை உள் நுழைய விடாமல் மறைத்து நிழல் தந்துகொண்டிருக்க, சந்தனம், அகில், கோங்கு, புன்னை, குங்குமம், சரக்கொன்றை, அசோகு, பாதிரி மகிழம், மா, பாரிஜாதம், குருந்து, காயா, வேங்கை முதலிய மரங்களில் காமவல்லிக் கொடி படர்ந்து, தேவருலகையுந் தாண்டிப் பரமபதத்தில் ஸ்ரீ:யப்பதியாய், அவாப்த சமஸ்த காமனாய், சர்வலோகசரண்யனாய், முத்தேவிமார் சமேதராக எழுந்தருளியிருக்கும், ஸ்ரீமந்நாராயணனுக்குத், தமது பரிமள மிகுந்த நறுமணங் கமழும் புட்பங்களைக் கொண்டுபோய்க் கொடுத்து, சாமரை இரட்டுவதுபோல் தவழ்ந்து கொண்டிருப்பதும், "வனதேவதைகள்" அக்காமவல்லிக் கொடியைப் பற்றிக்கொண்டு ஊஞ்சலாடிக்கொண்டிருப்பதும், பால்போன்ற தண்ணீரால் நிறைந்திருக்கும் தாமரைப் பொய்கைகளில் அன்னப்பட்சிகள் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருப்பதும், அக்குளத்தில் புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் அருந்திக்கொண்டிருப்பதும், அப்பூங்காவனத்தின் ஓர் புறத்தில் நாக சர்ப்பங்கள் கீரிகளின் மடியில் பால் பீரிடக் குடித்துக்கொண் டிருப்பதும், மற்றோர் பக்கத்தில் பெண் யானைக் கூட்டங்கள், தமது மடிசுரந்து தம் கன்றுக ளருந்தியவுடனும் பால் குறையாமல், கங்காநதியின் பெருக்குப்போல் சுரக்கவும், அவ்விதம் சுரக்கும் வேதனை தாங்காமல் பால் சொட்டுவதைக் கண்டு, சிம்மத்தின் குட்டிகளைத் தேடிப் பலவந்தமாகப், பெண் யானைகள் பாலூட்டவும், மற்றோர் பக்கத்தில் ரிஷிகுமாரர்கள் தர்ப்பை, சமித்து, புஷ்பம் முதலானவைகளைச் சேக

ரித்துக்கொண்டிருப்பதும், மான் கூட்டங்கள் இளந் தளிர்களைத் தின்று, வரிசை வரிசையாக நீரருந்த வருவதும், இளங் குஞ்சுகளை விட்டு இரைதேடிச் சென்ற பறவைக் கூட்டங்கள், தமது வாயிலும் காலிலும் இரை கொண்டு திரும்பி வந்து, தம் குஞ்சுகளுக்கு இரை ஊட்டுவதும், தாய்ப் பறவை சீக்கிரம் இரை தரவில்லையென்று குஞ்சுகள் தமது அழகிய இளம் வாயால் தாய்ப் பறவையின் வாயைப் பார்த்துக் கத்துவதும், தாவித்தனது தாயின் வாயைக்கௌவுவதும் மந்திகள் தமது குட்டிகளை வயிற்றில் தாங்கிக் கொண்டு, பலா மரங்களை விட்டுப் பாக்கு மரங்களைத் தாவுகையில், வீழும் பலாப்பழத்தைக் குரங்குகள் பீறி தேனருவியில் தோய்த்துத் தின்று, பலா விதைகளை வீசி விளையாடுவதால், பலா விதைகளும் பாக்கு மரப் பாளைகளும் நீரில் விழ, அவ்வதிர்ச்சியால் வரால்மீன்களும், வாளைமீன்களும், துள்ளித் தென்னம் பழங்களைச் சிதறவடிக்க அவ்வதிர்ச்சியைப் பொருட்படுத்தாது தமது லட்சியமே குறியாகக் கொண்டு, குடத்திற்குள்ளிருக்கும் தீபம் போன்று அசையாமல் ரேசகமும், பூரகமும் தாண்டிக் கும்பகஞ்செய்துகொண்டு மகரிஷிகள் இருப்பதும், சில மான், மயில், கோகிலம் முதலிய பறவைக் கூட்டங்கள், முனிவர்களின் பர்ணசாலையைச் சுற்றிலும் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருப்பதும் பார்த்தவுடன், நாமும் அங்கே வசிக்கவேண்டுமென்ற ஆவல் கொள்ளும்படியானதுமான அந்தச் சிங்காரப் பூங்காவின் அழகை, வர்ணிக்க ஆதிசேடனாலு மாகாது என்றால், எம்மால் வர்ணிக்கச் சாத்தியமாமோ?

மலைபுச்சியில் மேகங் கவிந்ததைக் கண்டு, மஞ்ஞைக் குழாங்கள் தங்களது நீண்ட அழகிய தோகைகளை விரித்து, ஆநந்தமாக நர்த்தனஞ் செய்து கொண்டும், குயில்கள் திவ்யமான கானங்களைப் பாடிக் கொண்டுமிருக்கத் தரையிற் பசும் புற்கள் நீண்டு வளர்ந்து பச்சை இரத்தனக் கம்பளம் விரிக்கப்பட்டிருப்பதுபோல் மெத்தென்றிருக்க, பக்கத்திலுள்ள மலையிலிருந்து, (பிரான்மலை, இந்திரகிரி, பிரம்மகிரி, செங்கண்மாமலை) "ஹோ" என்ற சப்தத்துடன் தேனருவிகளின் மதுக்குழம்பு பூமியில் விழுந்து குறிஞ்சியின் வழியாய்ப் பல ஆறுகளாகச் சிதறி ஓடி, சிறிது தூரத்தில் ஒன்றுசேர்ந்து, மீண்டும் பல கிளை நதிகளாக ஓடிச் மருத நிலத்திலும், முல்லை நிலத்திலும், நெய்தல் நிலத்திலும் பாய்வதோடல்லாமல் பாலை நிலத்திலும் பாய்ந்து, அங்கு தண்ணீர் காணாது தவிக்கும் ஜீவர்களையும் தாகவிடாய் தணிக்கச்



செய்யும். கிளிகளும், நாகணவாய்களும்கூட, "ஸ்ரீ ஹரி" "ஓம் நமோ நாராயணாய" என்னும் "அஷ்டாக்ஷர"த்தையும், "ஆழ்வாராதிகளின் திருவாய் மொழி"யையும், "ஸ்ரீராம" நாமத்தையும் சதா சொல்லிக் கொண்டிருக்க, வைராக்ய மென்னும் வாளைப் பிடித்த மகரிஷிகள் அஷ்டாங்க யோகங்களைச்செய்துகொண்டும், மந்திரசாதனஞ்செய்துகொண்டும், திராவிட வேதத்தை ஓதிக்கொண்டும் இருப்பதோடல்லாமல், வேதாந்த விசாரணை செய்துகொண்டுமிருக்க, வசந்தகால மாகையால், குளிர்ந்த இளந் தென்றல் காற்று, பலவிதமன புஷ்பங்களின் வாசனைகளை வாரிக்கொண்டு மெல்லெனவீச, அஸ்தமிக்கும் சூரியனுடைய செங்கிரணங்கள் "பறம்புமலை"யின் மேற்பாகமாகிய செங்கண்மால் மலையின் பொற் சிகரங்களில் வீழ்ந்து பூங்காவிலுள்ள மரங்களின் உச்சியில், பலவித வர்ணங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கவும், அப்பசும்பொற் கிரணங்கள் பறம்பு மலையில் தாவுவதால், "பறம்புமலை"யானது சொர்ணமயமாய் ஜொலித்துக் கொண்டு பார்ப்போர் கண்களைக் கூசச்செய்வதைப் பகரவும் எழுதவும், "வால்மீகி காளிதாசன் கம்பன் புகழேந்தி பாரதி" முதலியவர்களுக்கே யன்றி, மற்றையோர்க் கெளிதாகுமோ? ஆ! என்ன ஜோதி! என்ன காந்தி! என்ன அழகு! தங்கமயமான மேருகிரியென ஏன் சொல்லக்கூடாது? இதுவே பரமபதமென ஏன் இயம்பக்கூடாது? ஒரு அன்பர்கூட இம்மலையைப்பற்றி "இதுவே கைலாயம், இம்மலையே மேருகிரி, இதுவே கொடுங்குன்றம்" எனத் தமது பாடலுக்கு முதற் கவியாக வர்ணிக்கின்றார். இவ்வாறாகவும் பூலோகத்தில் மற்றோரிடமுளதோ? இடமுண்டு. இடமில்லாமலா வர்ணிக்கின்றார். உவமை காட்டுகின்றார். அச்சோலையில் ஆ! ஆ! என்னே இயற்கை வனப்பு. மருதமும், நெய்தலும் மயங்கி, எங்கும் புரையறு செல்வம் நிலைபெற வளரும். ஆம்பல் பூத்து, தன் அமுத நிகர் குமுதவாய் விண்டு, அண்மையிலுள்ள அனைவரையும் அன்போடழைக்கும்.

குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
அரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருந்தியும் செண்பக மோங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகுந் தளவமும் கொழுங் கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமும்
குடசமும் வெதிரமும் கொடுங்கொடிப் பகன்றையும்,
பிடவமும் மயிலையும்,

அடர்ந்து படர்ந்த பூங்காவில், பொறுமையிற் பூமிதேவியை நிகர்த்த பூங்கொடிபோல்வாளாகிய தனது உயிர்த் துணைவியுடன் பொழுது போக்காக உலாவுவானாயினன். (தொடரும்.)

காந்திதாசன்,

பர்மா.

—:*:—

# சென்னை யாதவ வாலிப சங்க நிகழ்ச்சி.

ஸ்ரீ தி சா. வேணுநாதக்கோன் எப். ஸீ. ஐ., எம். ஆர். ஏ., எஸ். வேண்டுகோளுக்கிணங்கிப் பல யாதவ வாலிபர்கள் சனிக்கிழமை புரசவாக்கம் ஹை ரோட்டிலுள்ள பொன்னு அண்டு கம்பெனியில் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு வந்திருந்த யாதவர்களில் முக்கியமானவர் புரொபசர் வி. திருவேங்கடசாமி பிள்ளை B.A. ஸ்ரீமான்கள் கா. பொ. இராஜரத்தினம் பிள்ளை கி. வீரராகவப் பிள்ளை, பி, ஏ., எம். வரதராஜப் பிள்ளை. பி. ஏ., தி. சா. சரசபூஷணம் பிள்ளை, சி. டி. இராமலிங்கம் பிள்ளை, டி. ஆர். சாரங்கபாணி பிள்ளை. எம். ஏ., டி. ஆர். பக்தவத்சலம் பிள்ளை. பி. ஏ. முதலியோர் வந்திருந்தனர். சிற்றுண்டி முடிந்த பிறகு ஸ்ரீ. எம் கே. ஆராவமுது பிள்ளை அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

முதல் அவைத் தலைவர் அக்கூட்டத்தின் முக்கிய கொள்கைகளைப் பற்றி விரிவாகச் சொல்லி முடித்த பிறகு ஸ்ரீ. தி. சா. வேணுநாதக்கோன் அவ்வாலிபக் கழகத்தைக் கூட்டிய அவசரத்தைப் பேசினார். பின்பு இக்கழகம் ஸ்ரீ யதுகுல மகா சங்கத்தின் வேலைகளுக்கு உதவிபுரியுமென்றும் யாதவ வாலிபர்களின் எண்ணங்களை எடுத்தியம்புவதற்கு அனுகூலமாயிருக்குமென்றும் கூறினார். சென்ற மாதத்தில் ராமநாதபுரத்தில் நடைபெற்ற முதலாவது யாதவ வாலிப மகாநாட்டில்தான் முதல் முதலாக இவ்வெண்ணம் தோன்றியதென்றும் சொன்னார். இக்கழகத்தின் முக்கிய கொள்கையாவது ஏழை யாதவ வாலிபர்களைப் படிப்பிக்க உதவி புரிவது என்பதைக் குறிப்பிட்டு யாவரையும் கழகத்தின் மெம்பர்களாகச் சேர்ந்து உதவி புரியுமாறு கேட்டுக் கொண்டார்.



ஸ்ரீ. வி. திருவேங்கடசாமி பிள்ளை இக்கழகம் மிகவும் முக்கியமானதென்று கூறி ஸ்ரீ யதுகுல மகா சங்கத்தின் சில குற்றங்களை எடுத்துக்கூறி அக்குற்றங்களை இக்கழகம் செய்யக் கூடாதென்று எடுத்துக் காட்டினார் கடைசியாக இக்கழகம் நீடூழி நிலைத்திருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

ஸ்ரீமான்கள் வேணுகோபால பிள்ளை, வரதராஜன், திருவேங்கடம் பிள்ளை, ராஜமன்னார், துரைசாமி முதலியோரும் இக் கழகத்தின் ஸ்தாபனத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

பேசியவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார் யாதவர்களுக்கு ஒரு உதவியும் புரியவில்லையென்றும். ஆனால் யாதவர்கள் மாத்திரம் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்தது முதல் அதற்கு உண்மையாக இருந்து வந்திருக்கிறார்களென்றும் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ வேணுநாதக் கோன் உரிமையையும் சுதந்திரத்தையும் கொள்கைகளாகக் கொண்டு நடத்துவதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமென்றும், ஸ்ரீயதுகுல மகா சங்கத்தின் குற்றங்கள் அச்சங்கத்தில் இருப்பவர்களின் முயற்சி இல்லாமையால் உண்டானதென்றும் கூறித் தான் அக் குற்றங்களை அச்சங்கத்திற்கு எடுத்துரைப்பதாகவும் கூறி முடித்தார்.

கூட்டத்தின் தலைவர் ஸ்ரீ எம். கே. ஆராவமுது பிள்ளை தம் முடிவுரை நிகழ்த்தும்போது தாமும் அம்மகா சங்கத்தின் குற்றங்களை அதற்கு எடுத்துரைப்பதாகவும், அக்குற்றங்களில் சில உண்மையல்லவென மறுத்தும், எல்லோரும் மகா சங்கத்திற்கும் வாலிப சங்கத்திற்கும் உதவிபுரிய வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

ஸ்ரீ டி. ஆர். சாரங்கபாணி அக்கூட்டத்தைக் கூட்டிய ஸ்ரீ வேணுநாதக் கோனுக்கும், கூட்டத் தலைவர் ஸ்ரீ ஆராவமுது பிள்ளைக்கும் கூட்டத்தில் பேசியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறிய பிறகு சுமார் 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

# பெரியாருரை.

—:*:—

பேனா, வாட்படையினும் மிக வலிதாம். லிட்டன்.

தற்பெருமையே எல்லாத் தவற்றிற்கும் அடிப்படையாக இருக்கிறது. றஸ்கின்.

குருடனுக்கு ஒரு வைரத் துண்டும் ஒரு கூழாங் கல்லும் சமமாகவே தோன்றும். பழமொழி.

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு நாயனார்.

நாம் சந்தோஷத்தின் உச்சஸ்தானத்தில் எவ்வளவு உயருகின்றேமோ அவ்வளவு சிலகாலம் சந்தாபத்திலும் அழுந்துகிறோம். வெட்ஸ்வொர்த்து.

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை ஜாதியில்;
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே. பாரதியார்.

ஒருவனை நெருங்கி வந்து துன்பஞ் செய்பவனிலும், ஒருவனுக்கு ஒரு பொருளை ஈவார் முன் சென்று கொடேல் எனத் தடுப்பவரே பெரும் பகைவராவர். அத்தகையோர் தன்னையும் தானஞ் செய்வோரையும் கெடுத்துவிடுகின்றனர். கம்பன்.

நாம் எக்காலத்திலும் எம்மனிதரையும் ஒரே மாதிரியைக் கருவியாக வைத்து அளந்துவிடலாகாது.........நிலைமாறுங் காலத்து நாம் நமது கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டும். சமுதாயங்கள் யாவும் எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. சுவாமி விவேகாநந்தர்.

அழகிய தோளையுடைய வேசையினது இனிய சொற்களும், தூண்டிலினுள்ளே மீனுக்கு இரையாக அதன் முள்ளை மறைத்து வைக்கப்பட்ட தேரையும், வைரம்பற்றிய சத்துருக்களுடைய வணக்கமும் உயிர்களைத் தம்முள்ளே ஆழ்த்திக் கொல்லும் பள்ளத்தாக்குகளுக்கு ஒப்பாகும். நல்லாதனார்.

புத்திசாலிகள் கூர்ந்து கேட்டு அறிவை வளர்க்கும் இயல்புடையார்கள். ஆகவே அறியும் ஆற்றலுள்ளவர்கள் எப்பொழுதும் புத்திசாலிகளை நாடுவர். விவிலியம்.

இ. சிவம்,
அசிந்திரம்.

# "ஆயர் குலச் சிறப்பு."

"வாசகம் செய்வது நம்பரமே, தொல்லை வானவர்தம்
நாயகன், நாயகர் எல்லாம் தொழுமவன், ஞாலம் முற்றும்
வேயக மாயினும் சோராவகை இரண்டே யடியால்
தாயவன் ஆய்க்குலமாய் வந்து தோன்றிற்று நம்மிறையே"

திருவளர்ந்தோங்கிய இவ்வாரிய சீரிய நாட்டில், இன்று காணப்படும் எண்ணிறந்த சாதிகள் அனைத்தும் தொழிலால் வேறுபட்டு வருணங்கள் நான்கினின்றும் முளைத்துக் கிளைத்தனவேயாம். உணவுக்கு இன்றியமையாத வேளாண்மையில் ஈடுபட்டோர் 'வேளாளர்' எனவும், பொருள்களைச் சேகரித்துப் பலவிடங்களிலும் பரப்பும் தொழிலில் ஈடுபட்டோர் 'வணிகர்' எனவும், ஜன சமூகத்தினின்றும் ஆறில் ஒரு பங்கு வரி வசூலித்து சமூகத்தின் நன்மைக்கானவற்றைக் குறைவறச் செய்வித்துக் காத்து வருவோர் 'அரசர்' எனவும், ஏனைய மூவரது நலங்களையும் குறிக்கொண்டு பரோபகாரத்தையே என்றென்றும் முழுமுதல் நோக்கமாகக் கொண்டு அறிவு வளர்ச்சித் துறையில் 'ஈடுபட்டு நாட்டு நலத்தின் பொருட்டு ஆண்டவனை வேண்டி நிற்போர் அந்தணர்' எனவும் அழைக்கப்பட்டனர். எனவே, நான்கு வருணங்களும் அவரவர் தொழில் முறையால் அமைவனவேயன்றி, வெறும் பிறப்பினால் மட்டும் விளைந்துவிடுவன ஆகா. "சாதுர் வர்ணம் மயாச்ருஷ்டம் குணகர்ம விபாகச:— என்று யதுகுல நாயகனான கீதாசார்யன் அருளியவாறு குணங்களையும் கர்மங்களையும் முன்னிட்டு இறைவனால் வகுக்கப்பட்ட நான்கு வருணங்களுக்குள் ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வு கற்பிப்பது பேதமையேயாம். மனிதனது உடலின் உறுப்புகளுள் தலை, தோள்கள், வயிறு, கால்கள் முதலிய நான்கும் ஒன்றுக்கொன்று பிணங்கிக் கொண்டு ஒன்றுபட்டு உழையா தொழியின், அவற்றிற்கு உரிய மனிதனது நிலை எவ்வளவு சங்கடத்தில் வந்துவிடுமோ, அதுபோன்றே மேற்குறிப்பிட்ட நால் வருணத்தினருள் பிணக்கேற்பட்டுப் பரஸ்பரம் பகைமையும் பொறாமையும் தூற்றலும் பெருகுமாயின் மனித சமூகத்தின் நன்னிலை பெரிதும் குலைந்து படுமென்பதில் ஐயமில்லை. நிற்க.

அன்பும் ஒற்றுமையும் அருளும் நற்பொறையும் சமரசமும் எங்கணும் பரவியிருந்த இச்செந்தமிழ் நாட்டில், முற்காலத்தில் அந்த

ணர் அரசர் வணிகர் வேளாளர் என விளங்கிய நால் வகைச் சாதிகளும் நாளடைவில் நாற்பதுக்கு மேற்பட்ட சாதிகளாகப் பிரித்துவிட்டன. அம்மட்டோ! அவ்வாறு பிரித்த சில்லரைச் சாதிகளுள் ஒவ்வொன்றிலும், உட்பிரிவுகள் பற்பலவாகக் கிளைத்தன. சாதிகள் பெருகப் பெருகச் சச்சரவும் பொறாமையும் பெருகி வருகின்றனவேயன்றி, சகோதர பாவத்தையும் சமத்துவ நோக்கையும் பெரிதும் காண்கின்றோமில்லை.

ஆன்மாக்களின் மீதுள்ள அளப்பரும் கருணையால் தனது எல்லையில்லாத் தனிப்பெரும் பெருமையையும் கவனியாது, மானிட சாதியில் தோன்றிப் படாதன பட்டு அறநெறி விளக்கிக் காட்டி ஆருயிர்களை உய்வித்தருளத் திருவுளம்பற்றிய ஆண்டவன், பரந்த இப் பாரின்கண் சாதிகள் பற்பலவும் மலிந்துகிடப்ப, ஆயர் குலத்தையே தனது அவதாரத்திற் கேற்ற சிறந்த குலமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டருளியது பெரிதும் வியக்கத்தக்கதன்றோ! திருமாலின் திரு அவதாரங்கள் பத்தாயினும், அவற்றுள் அப்பெருமானின் சம்பூர்ண அவதாரங்களாகக் கூறத்தக்கன இராமாவதாரமும் கிருஷ்ணவதாரமுமே. ஏனைய எட்டும் அம்சாவதாரங்களும் ஆவேசாவதாரங்களுமாம். திருமாலின் கல்யாண குணங்கள் முழுவதையும் வெளிப்படுத்திநின்ற திருவவதாரங்களாய அவ்விரண்டிலும், கிருஷ்ணவதாரமே சம்பூர்ண அவதாரமென்பார் பெரியோர். இராமாயணத்தில் பலவிடங்களிலும், இராமபிரான் தன்னை ஒரு சாதாரண மனிதனாகவே காட்டிக் கொண்டு நடந்து கொண்டான் என்று தெரியவருகிறது. குழந்தைப் பருவத்தில் அரச குலச் சிறுவர்களைப் போன்றே நடித்தும், மனைவியைப் பிரிந்த விடத்தும் சாதாரண மனிதரைப் போன்றே பிரிவாற்றாது பெரிதும் வருந்துவது போல் நடித்தும், இலங்கைப் பதியில் இலக்குமணனை நாகபாசத்தினின்றும் விடுவிக்கத் தோன்றிய கருடன் தனது வாகனமாயினும் அதை அறியாதவனேபோல் அவனை 'நீ யார்' என வினவியும் மற்றும் பல சந்தர்ப்பங்களிலும் இராமபிரான் மாயையில் கட்டுப்பட்ட மனிதனே போல் நடித்தருளினன். ஆனால் கிருஷ்ணவதார காலத்தில் இராமவதாரத்திற்கு முற்றிலும் மாறாகத் திருவவதார காலத்திலேயே தான் முத்தொழில் நடத்தும் முழுமுதல் தலைவன் என்பதை விளக்கச் சங்குசக்கரங்களோடு பெற்றோர்க்குச் சேவை சாதித்தும், ஏனைய சிறுவர்கள் எண்ணமிடவும் இயலாத மானிட சக்தியை மீறிய அற்புதத் திருவிளையாடல்கள் அளவிலா



தன செய்தும், பல தடவைகளில் கருடனை வாகனமாகக் கொண்டும், மற்றும் பற்பல விதத்திலும் தான் மாயையில் கட்டுப்படாத பரம்பொருள் என்பதை வெளிப்படையாக விளக்கிக் காட்டியருளினன். ஆகவே, எண்ணவும் எழுதவும் பேசவும் இயலாத எல்லையற்ற தனது கல்யாண குணங்கள் பலவற்றையும் மனித சமூகத்தினர் கண்டுகளிக்கும் வண்ணம், இறைவன் திருவிளையாடல்கள் இயற்றத் திருவவதரிக்கத் திருவுள்ளம் பற்றிய திருக்குலம் எமது ஆயர் குலம் ஒன்றே என்பதை உன்னுந்தோறும் உரைக்குந்தோறும் 'யாம் பெற்ற பெருந்தவப் பேறு எம்மையன்றி இரு நிலத்தில் பிறந்தாரில் யார் பெற்றாரே' என வியந்து மகிழ்ச்சியடைகின்றோம். ஏனைய குலங்கள் பற்பலவும் கிடப்ப, அவையனைத்தையும் புறக்கணித்துத் தனது அவதாரத்திற்கும் திருவிளையாடல்கட்கும் ஏற்ற திருக்குலமாக ஆயர்குலத்தையே ஆதிகேசவன் தேர்ந்தெடுத்துக் கொண்டருளியது, எது பற்றியோ எனும் ஐயம் பிறத்தல் இயல்பேயன்றோ!

முல்லைநில மக்களாய ஆயர்கள் பெருஞ் செல்வமிருந்தும் பெரிதும் எளிய வாழ்வு மேற்கொண்டு வாழ்ந்துவந்ததாகவே தெரியவருகின்றது. ஆதலின், ஏனைய சாதியினரிடமிருந்த செல்வச் செருக்கும் பிணக்கும் பொறாமை முதலிய தீயகுணங்களும் ஆயர்கள் பால் பெரிதும் இல்லாதொழிந்தன. இறைவன் எளியவர்க்கு எளியவனும் ஏழைபங்காளனுமாதலின், அவன் திருவுள்ளம் எளிய வாழ்வுக்கு இலக்கியமாக அமைந்த கரவு அறியாத ஆயர்குலத்தை நாடியது இயல்பே. மேலும், இராமாவதார காலத்தில் அரச குலத்திற் பிறந்து அரசர்களுடனே உறவாடியதுபோல், எளிய மக்களிடையே உதித்து எளியவரோடு கலந்து உறவாடியருளத் திருவுள்ளம் பற்றியே போலும் ஆதிகேசவன் ஆயர்குலத்தில் அவதரித்தருளினன்! சில பசுக்கள், அவற்றின் கன்றுகள், பால், தயிர், வெண்ணெய் எளிய பொருள்கள் நிரம்பிய எளிய வீடு எளிய உடை இவையே ஆயர்களின் உரிமைப் பொருள்களாதலின். அவர்கள் மேற்கொண்ட வாழ்வும் எளிய இனிய வாழ்வாகவே இருந்ததென்பதை இயம்பவும் வேண்டுமோ? அத்தகைய எளிய வாழ்விலே, செல்வச் செருக்கால் விளையும் பிணக்குகட்கும் ஏனைய தீயசீர்மைகட்கும் இடமேது? வஞ்சக தந்திர சூழ்வினைகளில் ஏதுமறியாத ஆயர்குலத்தையே ஆண்டவன் பெரிதும் விரும்பியதில் ஆச்சரியம் என்னை? அத்தகைய எளியவர்களிடையே பிறந்து வளர்ந்து அவர்களது களங்கமற்ற உண்

மைப் பேரன்புக்குக் கட்டுப்பட்டு, அமரர்கட்கும் கிடைத்தற்கரிய தனது மெய்யன்பை அவர்களிடம் வைத்து, அவ்வாயர்களோடு கலந்து எம்பெருமான் எளியவர்க்கு எளியவனாகி இருந்து விளையாடியருளியதை எண்ணுந்தோறும் எம்மகத்தில் எழும் இன்பம் எழுதிக்காட்ட இயல்வதாகுமோ? ஆய்ப்பாடியில் வாழ்ந்த ஒவ்வொருவரிடத்தும்-ஏன்-ஒவ்வொரு பசுவினிடத்துங்கூட மெய்யன்பு பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது என்பது மிகையாகாது. அவ்வன்புக்கு ஆண்டவன் கட்டுப்படாதிருக்க முடியுமோ? அவன் அன்பு வலையிற் படுவோன் அல்லவோ? 'பூதேவரும் கனகப் பூங்கா நிழல் வைகும் மாதேவரும் தேடிக் காணா மலரடியோன்' ஆன மலர்மகள் வேந்தன், 'அறிவு ஒன்றுமில்லாத ஆய்க்குலத்து உன்றன்னைப்-பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்' என்று ஆயர் போற்றி உகக்கப் பிறந்து, அசோதையின் கட்டுக்கு உட்பட்டு உரலொடு பிணைக்கப்படவும் ஒருப்பட்டு நின்ற எளிமையை என்னென்பேம்!! 'எத்திறம்! உரலினொடு பிணைந்து இருந்து ஏங்கிய எளிவே!' என்று கூறி வியந்த நம்மாழ்வார், கண்ணனின் எளிமையை நினைந்தவராய் ஆறுமாதகாலமாக மோகித்துக் கிடந்தாராம். இறைவன் மெய்யன்பரது அன்புக்கு எவ்வளவு தூரம் கட்டுப்பட்டுளன் என்பது ஆயர்குலத்து அவதரித்து அவன் செய்தருளிய திருவிளையாடல்களால் செவ்விதின் புலனாகும்.

இனி, எண்பத்து நான்கு தேவர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதும், பெற்ற தாய்க்குப் பதிலாகப் பாலூட்டிப் பாலரை வளர்ப்பதும், பரிசுத்தப் படுத்துவதற்கேற்ற பஞ்சகவ்யங்களைப் பயப்பதும் சத்துவகுணம் மிக்கதுமான பசு, இறைவன் திருவுள்ளத்திற்கு மிகவும் இனியதென்பதை அறியாதார் எவர்? களைத்துவரும் பசுவுக்கு ஒருபிடி புல் அளிப்பது எவ்வளவோ புண்ணியம் தருவதாகுமென்று சொல்வர் பெரியோர். அத்தகைய கோமாதாவையே தங்களது அரும்பெறற் செல்வமாகக்கொண்டு போற்றும் ஆயர்குலத்தில், ஆண்டவன் அவதரிக்கத் திருவுள்ளம் பற்றியது ஆச்சரியமல்லவே! மூலப் பழமறைக்கு முன்னே செல்லும் முகுந்தன், காலிக்குப் பின்னே சென்றது எதுபற்றியோ? ஆவின்பாலுள்ள அன்புப் பெருக்கினாலும், தன் சிந்தைக்கினிய செல்வத்திருமகள் அதன் பின்புறத்தில் எழுந்தருளியிருப்பதாலும்; ஆன்மாக்களை உய்விக்கும் அன்னையே போன்று ஆவினம் ஒளிர்வதாலுமேயன்றோ? காடுகளூடுபோய்க்



கன்றுகள் மேய்த்து மறியோடிக் காரக்கோடம்பூச் சூடி' 'தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடை' நடந்து காலிப் பின்னேவரும் கண்ணபிரானைக் கண்டோர் கருத்தழிந்து தம்மை மறந்து நில்லாது வேறு என்செய்ய வல்லார்? இன்றும், விஷ்ணு சந்நிதிகள்தோறும் அதிகாலையில் முதன் முதலாகத் திருவாராதனம் செய்யப்படும் முன்னர் நடைபெறும் விச்வரூபதர்சனத்தின்போது, சந்நிதிக்கு எதிரில் வாற்புறம் இருக்குமாறு பசுவைத் திருப்பி நிறுத்திவருவது கவனிக்கத் தக்கது. மற்றும், தமிழ் நாட்டில் பரந்து கிடக்கும் பலவகைச் சாதிகளுள், எதனை எடுத்துக்கொண்டாலும் அவ்வச்சாதியில் வைணவ சமயத்தினரும் சைவ சமயத்தினரும் கலந்தே காணப்படுகின்றனர். ஆனால், நமது தொன்மை வாய்ந்த தூய ஆயர்குலத்தை எடுத்துக் கொண்டாலோ' திருநீறு அணியும் சைவர் சிலரெனவும் இல்லாதபடி 'யாதவர்' என்போர் ஒவ்வொருவரும் வைணவராகவே விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்' இதிலிருந்து, நமது தூய்மைமிக்க ஆயர் குலத்தினர் அனைவரும், தொன்றுதொட்டு திருமாமகள் கணவனாய திருநாராயணன் ஒருவனையே குலதெய்வமாகக் கொண்டு அன்னவன் அடிகட்கே அன்புபூண்டு அடிமைப்பட்டு வாழ்ந்து வந்தனரென்பது தெற்றனத் தெளியக்கிடக்கின்றது. நமது செந்தமிழ் நாட்டு நூல்களிலும், முல்லைநிலமக்களாய ஆயர்கட்கு வழிபடுகடவுள் திருமாலே என்று அறுதியிடப்பட்டிருப்பதும் கவனிக்கற்பாலது. முத்தொழில் நடாத்தும் முழுமுதற்பொருளாய முகுந்தன் ஒருவனையே தெய்வமாகக்கொண்டு, அவனுக்கே குடிகுடிவழிவந்து ஆட்செய்யும் ஆதிவைணவராய ஆயர்களது குலத்தில் கடவுள் கண்ணபிரானாக அவதரித்தருளியது சாலப் பொருத்த முடையதேயாம். ஆதிகேசவன் ஆயர்குலத்தில் அவதரித்து அருள்விளையாட்டுகள் ஆற்றியதனாலன்றோ, அந்தணகுலத்தினளாய ஆண்டாளும் இடைப் பேச்சும், இடை நடையும் இடைப் பழக்கமும் உடையவளாக நடந்துகொள்ளப் பேரார்வங்கொண்டு நின்றனள்! ஆழ்வார்களால் ஆயர்குலம் மகிழ்ந்து பாடப்பட்டிருப்பதுபோல், இராமன் தோன்றிய அரசகுலம் வியந்து பாடப்பட்டிருக்கக் காணோம். இன்னோரன்ன காரணங்களால் இறைவன் அவதரித்தருளிய ஆயர்குலத்தின் சிறப்பு, சிறிது விளங்கும். (தொடரும்)

ஆரியூர், வ. பதுமநாபபிள்ளை, (யாதவர்)
விழுப்புரம்.

# கோகில கிருஷ்ணன்

அல்லது

## இரு யாதவ மணிகள்

ஒரு சீர்திருத்த நாடகம்.

——*——

(349-ம் பக்கம் தொடர்ச்சி.)

(இதற்குள் வழக்கமாய் தயிர் பால் வாங்கும் வீட்டு அம்மாள் ஒருத்தி வந்து—நின்று)

அம்:—அடீ! லெச்சுமாயீ! லெச்சுமாயீ!

நவ:—(மனைவியைப்பார்த்து) இந்தா நம்ப பெரிய அய்யிரு வீட்டு அம்மா வந்து கூப்புடுது பாரு—என்னு விசாரி; இந்தா வந்துட்டேறேன். (நவநீதக்கோனார் மறைகிறார்)

மகா:—எம்மா! சும்மா உள்ளே வாங்க! அங்குனே ஏன் நின்னுக்கிட்டிருக்கீங்க.

அம்:—(உள்ளே நுழைந்து) என்னடீ லெச்சுமாயீ! நன்னாருக்கு ஒங்கிட்டே வியாபாரம் வெச்சிண்ட அழகு! ரெண்டாம் வேளெக்குப் பாலும் கொண்டறலே, தயிரையும் காணோம்—அய்யிரானா! ஒன் வியாபாரமே வேண்டா மேன்னு கத்தறாரு—நன்னாருக்குடீம்மா!

மகா:—ஒக்காருங்க அம்மா! நிக்கிறீங்களே! (பலகையை எடுத்துப் போடுகிறாள்.)

அம்:—(உட்கார்ந்துகொண்டே) நன்னாருக்குடீ உக்கார்ர அழகு. காரியமானா கெடக்கறது. இன்னும் காப்பியும் போடலே அது கெடக்கட்டும்! ஏன் இந்தப் பெரியண்ணன் பயலே இன்னிக்கு அனுப்பலே?

மகா:—அந்தப் பயலேத்தான் அனுப்பணும்னு இருந்தேன். அதுக்குள்ளர ஒரு கல்லாண விஷயமா வூட்டுக்காரு அவனே வெளியே போய்த்துவரச் சொன்னாரு.

அம்:—கலியாணமா! அடிதப்போடி!—தகவலே தெரியலியே!



மகா:—ஆமம்மா! இன்னும் பரிசம் போட்டு தேதி வெக்கலிங்க—இண்ணைக்கித்தான் நிச்சயமாச்சு. அது விஷயமாத்தான் வெளியே போனான். நம்ப பயலும். அவேன் வந்ததும் அனுப்பணும்னு இருந்தேன்—நீங்க வந்திட்டிங்க.

அம்:—கோகிலம், ஒன் மகன்; ரெண்டுபேருக்கும் சேந்தாப்பலேயா இல்லாட்டா:—

ா:—ஆமாங்க—ஒரே தடவேயா முடிச்சிட்லாம்னு தான்க இந்த கயிட்டம்.

ம்:—நல்ல காரியம் சுருக்க நடக்கட்டும். ஆமா! கோகிலத்துக்குத் தான் திருவேங்கடக் கோனார் மகன் மணவாளனேப் பாத்திருக்கின்னு சொன்னே! ஒன் மகனுக்கு?

கா:—எங்க வூட்டுக்காரரு மச்சான் இருக்காருல்லோ?

ம்:—ஆமா! ஆமா! பெருமாள் கோனன்.

கா:—அவரு மவ காமாச்சியே பாத்திருக்குங்க.

ம்:—போறதும்மா! ஒன் கண்ணுமுன்னே! சுருக்க கலியாணத்தேப் பண்ணிப் பாத்துப்பிடு; உனக்குத்தான் சதா அந்த வியாதி அரிச்சுப் புடுங்றது. திடீருன்னு வாயே விட்டு வச்சாலும் இந்தக் கொறை ஒண்ணு இல்லாமே போகட்டும்.

மகா:—ஏனங் கொண்டாறலீங்களா?

அம்:—நீ இருக்கியோ இல்லியோன்னு ஸந்தேகம். நான் பாத்துட்டுப் போவோம்னு வந்தேன்.

மகா:—கொண்டாரட்டி என்ன! நம்ப வீட்டிலேருந்து போவுணியிலே வாங்கிக்கிட்டுப் போங்க. அப்புறம் பெரியண்ணே பய வந்ததும் வீட்டுக்கு அனுப்பறேன். பாத்தரத்தேக் குடுத்தனுப்புங்களேன். உள்ளே வாங்க தாரேன்.

(இருவரும் மறைகிறார்கள்)

(தொடரும்)

S. குருசாமி அய்யர், திருச்சி.

சென்னை யாதவ வாலிப சங்கத்தின்

## கிளைச் சங்க ஸ்தாபனம்.

சென்னை யாதவ வாலிப சங்கத்தின் இரண்டாவது கிளைச்சங்கம் ஸ்தாபனம் செய்வதற்காக (20—7—30) மாலை 6 மணிக்கு கோமளீஸ்வரன் பேட்டை, காப்பொரேஷன் ஸ்கூலில் திரு. டி. எஸ். வேணுநாதக்கோன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடிற்று. தலைவர் முன்னுரை முடிந்த பிறகு திருவாளர்கள் சி. ப. திருவேங்கடம் பிள்ளையும் சி. துரைசாமிபிள்ளையும் முறையே யாதவ மக்களின் பரிதாபகரமான நிலைமையும் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் பேசி உயர்ந்த பதவியிலிருக்கும் யாதவர்கள் தாழ்ந்த நிலைமையிலிருக்கும் யாதவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். பிறகு கோமளீஸ்வரன் பேட்டையில் இரண்டாவது கிளைச் சங்கம் ஸ்தாபனம் செய்து திருவாளர்கள் எம். கே. ஆராமுதுபிள்ளை அவர்களைத் தலைவராகவும், டாக்டர் வி. சுப்பராயலு அவர்களை உபதலைவராகவும் என். சுந்தரபாஷ்யம் அவர்களைக் காரியதரிசியாகவும், எஸ். கண்ணபாபு அவர்களைப் பொக்கிஷதாரராகவும், எ. கோவிந்தபிள்ளை, எஸ். குப்புசாமி நாயுடு, என். சாரங்கபாணி நாயுடு, எஸ். சுந்தரபாபு, வி. ரங்கமன்னார் நாயுடு ஆகியவர்களைக் கமிட்டியின் அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

திரு. டி. ஆர் சாரங்கபாணி அவர்கள் அங்கு கூடிய யாதவ மக்களைச் சங்கத்தில் சந்தாதாரர்களாகும்படியாகவும், குடியினால் உண்டாகும் தீமைகளை எடுத்துரைத்துக் குடியை அறவே ஒழிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுபெற்றது.



| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அவ் விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## யாதவ மகா ஜனங்களுக்கு ஒரு

# வேண்டுகோள்.

யாதவ சகோதரர்களே!

நமது யாதவ மித்திரன் கல்வி, பொருளாதாரம், ஆசாரச் சீர்திருத்தம் முதலிய துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப் பெற்ற அருமையான கட்டுரைகளைக்கொண்டு யாதவ மக்களின் முன்னேற்றத்தையே முக்கியமாகக் கருதி மாதம் ஒருமுறை வெளி வருகின்றது.

எல்லா யாதவ மக்களும் உடனே சந்தாதாரர்களாய்ச் சேர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

எல்லா யாதவ மக்களிடமும் யாதவமித்திரனைப் பரவச் செய்தல் சமுதாயப் பற்றுடையவரின் முதற்கடமையாகும்.


யாதவமித்திரன் நம்மவர் வாழும் ஒவ்வொரு கிராமங்களி லும் உலாவவேண்டும். ஒவ்வொரு யாதவரிடத்திலும் யாதவமித் திரன் மாதாமாதம் சமுதாய விஷயங்களைத் தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அறிகுறி.


இப்பொழுது விலாசம் தெரிந்த சிலருக்கே பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோர் விலாசம் தெரிவித்துப் பத் திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகையால் யாவரும் பத்திரிகை படித்துப் பயன் பெறு மாறும், இப்பத்திரிகையை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகை படிக்கும் அன்புள்ள நமது யாதவ சகோதரர்களின் விலாசங்களைத் தயைசெய்து எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம்.

மானேஜர்,
**யாதவ மித்திரன் ஆபீஸ்,**
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura.





# யாதவ மித்திரன்


யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
**மாதப்பத்திரிகை.**

20 NOV 19..




| தொகுதி | பிரமோதூத ஆவணி-புரட்டாசி | பகுதி |
|---|---|---|
| 2 | 1930 ஹூ ஆகஸ்ட்-செப்டம் | 1,2 |






பொருள் அடக்கம்.


மித்திரன் வாழ்த்து 1, 2ம் ஆண்டு ஆரம்பம் 3
மின்சார உழவு 4
யாதவகுல முன்னேற்றம் 8, 62
நமது சமுதாயச் சீர்திருத்தம் 9
கடவுள் 12, நமது கிராம முன்னேற்றம் 15
இடையர் 17, 41 ஆயர் குலச் சிறப்பு 19
கோகில கிருஷ்ணன் 21, 44
பச்சைப் புல்லைப் பதம் செய்யும் முறை 25
பாரி 28, 42, யாதவ வாலிப சங்கம் 31
வேளாண்மையில் உரமிடுதல் 33
தசாவதாரங்கள் 37, இடைக்காட்டுச்சித்தர் 47
நமது கடமை 51
தி. மீ. கோ. முத்துகிருஷ்ணபிள்ளை 54
இராமநாதபுரம் யாதவர்க்கு வேண்டுகோள் 56
பொன்பரப்பி அம்மையார் 59



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி ஏ பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயப்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ்,
திருச்சினாப்பள்ளி.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

---

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

20 NOV 1930

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| | | |
|---|---|---|
| தொகுதி 2 | பிரமோதூத வருஷ ஆவணி மீ<br>1930-வருஷ ஆகஸ்டு-மீ | பகுதி 1 |


## கடவுள் வணக்கம்.

மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவிற் பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவிற் பூதமைந்தாய்
புனலுருவாய் அனலுருவில் திகழும்சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடிஎன் தலைமேலவே.

திருமங்கையாழ்வார்.

## யாதவமித்திரன் வாழ்த்து.

நேரிசையாசிரியப்பா.

உலகெலாமீன்ற வொருபெருந்தேவியும்
அன்னவட் கிடப்பா லளித்தருள் பரமனும்
குன்ற மெறிந்த குமர வேளும்
தடாதகைப் பிராட்டியாய்ச் சவுந்தர மாறனாய்
உக்கிர வழுதியா யுலகம் புரந்ததும்
முக்கட் பகவனு மூவிரு முகத்தனும்
சங்க மிருந்து தமிழாராய்ந்ததும்
துங்க மிகுந்த துவாத சாந்தப்
பதியென வான்றோர் துதியுறப் புகலும்

பாடல் சான்ற கூட லாலவாய்
தவராசர் போற்றுஞ் சிவராச தானி
ஆமிம் மதுரையி லாயர்தம் மரபிற்
கொருமணி என்ன உதித்தருள் பெரியோன்
செல்வக் குபேரன், திருமறு மார்பனை
அல்லும் பகலும் அருச்சனை புரிவோன்
எத்தலத் தவரு முத்தம மெனச்சொலும்
புத்தக வர்த்தகம் புரிந்திடு புனிதன்
பூபாலர் போற்றிடு கோபால கிருட்டின
நாமம் புனைந்த மாமன்ன வன்றன்
சமூகமுன் னேற்றந் தன்னைக் கருதி
மாண்புமிக் கோங்குமிம் மதுரைமா நகரில்
வித்தக உத்தர சித்திரை வீதியில்
குவலயம் புகழ் ஸ்ரீகோபால் மஹாலில்
விளங்குநல் யாதவ மித்திரன் ஆபீஸ்
ஒன்றனை நிறுவி யுவப்பொடு சுக்கில
ஆண்டினி லிரவி யாவணித் திங்களில்
தன்மர புயர்ச்சியுந் தகுமேம் பாடும்
தன்னுறு கிளையெலாந் தமிதமி யுளத்திடை
முன்னுற உணர்ந்து முன்னுறு பன்னெறி
மேதக விளக்கும் யாதவ மித்திரன்
என்னும் பெயரொடு பன்னிரு மதியும்
மாதந் தொறும்வெளி வரும்பத் திரிகையொன்
றிங்கில மதிக்கவிங் கீந்தன னெழிலார்
மதியென வளர்ந்து வயதொன் று நிறைந்து
வயதிரண் டுற்று வளர்ந்து வழங்கும்
இப்பத்திரிகையு மியன்மா னேசரும்
விசய தானம் விழைந்து செய்வோரும்
சந்தா நேயருந் தமிழபி மானரும்
ஆடக மாடக் கூடன் மதுரைக்
காட்சிசா லமெரிக் கன்கல் லூரியிற்
றண்டமிழ் பயிற்றும் பண்டித ஞானென்
மன்னர் மதிக்கு முன்னத நிலையோன்
கார்மேக மன்ன கார்மேக நாமன்



அமிழ்தினு மினிய தமிழ்மொழிக் கல்வி
வல்லோர் புகழும் நல்லா சிரிய
உரிமை யேற்ற பெருமை யுடனே
மிளிரும் யாதவ மித்திரன் வாழி
இன்ன மித்திரற் கியலாசிரியனும்
ஊழிதோ றூழி வாழி
எழுயர் கடல்வளை யிருநிலத் தினிதே

சு. நல்லசிவன் பிள்ளை
தமிழாசிரியர்,
மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை.

---

# மித்திரனின் 2ம் ஆண்டு ஆரம்பம்.

---

ஐயன்மீர் !

இப்போது நமது மித்திரன் ஓராண்டு நிரம்பி இரண்டாம் ஆண்டு தொடங்கித் திகழ்கின்றான்—இந்த ஓராண்டிலும் ஓராண்டுப் பருவமுடைய ஸ்ரீ கண்ணனுடன் தோன்றித் தவழ்ந்து நடைகற்று நம்மகத்துக்கு மதி தோறும் வந்து நம்மை மகிழ்வு பூக்குமாறு செய்தான்—மித்திரன் ஓராண்டுடைய இளஞ்சேயே ஆயினும்—தன்பால் தாங்கிவந்த அரிய பெரிய பொருள்களோ பல. சில நம் குல முன்னேற்றங்கருதியவை, சில நம் குலப் பெருமைகளைப் பற்றியவை, சில கோபரிபாலன முறைகளைப் பற்றியவை, சில கைத்தொழில் விவசாயங்களைக் குறித்தவை, சில நல்லறிவும் நற்குணமும் ஊட்டுவன, சில சமுதாய வாழ்க்கைகளைப் பற்றியன, சில நம் குலதெய்வமாகிய கண்ணபிரானது பால சரிதைகளைப் பற்றியன, சில நம் குலப்பெரியாரது வரலாறுகளைப் பற்றியன—மித்திரன் இவற்றையெல்லாம் வெள்ளிய கடிதத்தில் ஒள்ளிய எழுத்துக்களாற் பொதிந்து ஏந்தித் திகழ்ந்தான். இன்னும் வயது வளர வளர இனிய வனப்புமிகுந்த பொருள்களோடு நம்மை அணுகி அணுகி மகிழ் வூட்டுவானென்பதில் ஐயமில்லை.

நம் மித்திரனை 1 வருடகாலமாக வரவேற்றுப் போற்றிய கனவான்களது பெருந்தகைமை என்றும் பாராட்டற்குரியது. இன்னும்

இவர்கள் நம் மித்திரனை இவ்வாறே மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் குல உபகாரிகளாகத் திகழும்படி வேண்டிக் கொள்கிறோம்.

மித்திரனை ஆரம்பமுதல் வரப்பெற்றுக்கொண்டு கடைசியில் வி. பி. யில் அனுப்பியபோது மறுத்த கனவான்கள் சிலர் உண்டு. பெற்றுக்கொள்ள மறுத்தமைபற்றி எங்கட்கு வருத்தமில்லையாயினும் ஆரம்பத்திலேயே தங்கள் கருத்தைத் தெரியப்படுத்தாமலிருந்துவிட்டமையை நாம் பெரிதும் கண்டிக்கிறோம்.

இவர்களது செயலை ஏனையோர் பின்பற்றாது உண்மையான குலாபிமானத்தோடு நமதுமித்திரனை மேலும் மேலும் அபிமானித்துவரும்படி ஒவ்வொரு யாதவ கனவான்களையும் வேண்டுகிறோம்.

மித்திரனுக்குத் தங்கள் அரிய கட்டுரைகளை வழங்கி ஊக்கிவந்த பேரறிஞர்களுக்கும் பல்வகையிலும் இதன் வளர்ச்சியைக் கருதிய உபகாரிகளுக்கும் எங்கள் நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.

ஆசிரியர்.

# மின்சார உழவு.

மற்றெல்லா வேலைகளைவிட ஓர் நிலத்தை உழுது பண்படுத்துவது மிகக்கஷ்டமான வேலையாயினும் அது நலந்தரத் தக்கதான வேலையாம். மேனாடுகளில் மிருகங்களுக்குப் பதிலாகப் "பெட்ரோல்" இயந்திரங்களைக்கொண்டு உழவு நடந்து வருகிறது. இதனால் பலகஷ்டங்களுண்டு. ஏனெனில் இவ்வியந்திரங்கள் வெகு கனமாயிருப்பதால் உழுதுகொண்டு போகும்போதே உழுதபாகங்களை அவைகளின் சக்கரங்கள் அழுத்தி மறுபடியும் கடினமாக்கி விடுகின்றன. மேலும் எண்ணெயில் அதிகச்செலவும், திடீரென்று தீப்பற்றும் விபத்துக்களும் அதிக நஷ்டத்தைத் தருகிறது.

சிலதேசங்களில், உழவேண்டிய நிலத்தின் இருபுறங்களில் இரண்டு இயந்திர வண்டிகளை நிறுத்தி நீண்ட, கூர்மையும், உறுதியும், கனமுமுடையதான ஓர் கலப்பையை இரு இயந்திரங்களுக்கிடையில் வடத்தால் பிணித்துவிட்டு ஒருபுற இயந்திரத்தால் கலப்பையை நிலத்தில் நன்றாய்ப்பதிந்து வரும்படியாய் ஒரு புறத்தில் இழுத்துப் பின்பு மறுபுற இயந்திரத்தால் கலப்பையை மறுபுறம் இழுக்கப்படுகிறது. இப்படிக்கலப்பை அங்குமிங்குமோடி நிலத்தை ஆழமாக வெட்டும்போதே இரு இயந்திர வண்டிகளும் மெதுவாக நகர்ந்து செல்லுகின்றன. இப்படியாக நிலங்கள் பலமுறை உழுது பண்படுத்தப் படுகின்றன.



இதில் இயந்திரங்களை "பெட்ரோல்" முதலிய எண்ணெய்களால் நடத்துவதைப் பார்க்கிலும் மின்சாரத்தால் நடத்துவது வெகுசுலபம். முதலாவது அதிகச்செலவில்லை. தண்ணீர் முதலியவைகள் தேவையின்றி அதிகச் சிரமமில்லாமல் உழுதுவிடலாம். இத்தாலி தேசத்தில் (1914) குதிரை உழவில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு * 24 ஷிலிங்கும், நீராவி இயந்திர உழவில் 18 ஷிலிங்கும், மின்சார இயந்திர உழவில் $12\frac{1}{2}$ ஷிலிங்கும் (மற்றெல்லாச் செலவும் உள்பட) செலவாகிறது. ஆனால் மகாயுத்தத்திற்குப் பிறகு (1920) சகலசெலவும் உள்பட மின்சார இயந்திர உழவுக்கு $10\frac{1}{2}$ ஷிலிங்கும், "பெட்ரோல்" இயந்திர உழவுக்கு 26 ஷிலிங்கும் செலவாகிறதென்றால் மின்சார இயந்திர உழவின் அநுகூலத்தை அதிகமாக விரித்துரைக்க வேண்டியதில்லை.

சிலசமயம் இரண்டு மின்சார இயந்திரங்களைக் கொண்டு கலப்பையை அங்குமிங்கும் இழுப்பதற்குப் பதிலாக ஒரே இயந்திரத்தை உபயோகப்படுத்தலாம். இங்கே இயந்திர வண்டியிலிருந்து வடம் புறப்பட்டு மறுபக்கத்திலிருக்கும் சாதாரணமானதோர் வண்டியின் மேலுள்ள ஓர் சக்கரத்தில் சென்று மறுபடியும் மின்சார இயந்திர வண்டியை வந்தடைகிறது. ஆகவே ஒரே இயந்திரம் வடத்தின் ஒரு பக்கத்தை இழுத்து மறுபக்கத்தைச் சோரவிட்டு மறுபடியும் சோரவிட்ட பக்கத்தை இழுத்து, இழுத்த பக்கத்தைச் சோரவிட்டு இப்படியாகக் கலப்பையை அங்குமிங்கும் ஓடச்செய்கிறது.

விவசாயப் பெருக்கையும், விவசாயச் சிறப்பையுமே இந்தியாவின் பிரகாசம் பெரும்பாலும் தழுவி நிற்கிறது. தற்போது கிராமங்களில் வேலைகள் செய்ய ஆட்கள் அகப் படாததால், அதிகக் கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் அதிகப் பயனடைய முடியாததால் அநேக நிலங்கள் தரிசுகளாயிருக்க ஏற்படுகிறது. ஆதலால் மனிதராலாகும் வேலையை மாற்றி இயந்திரங்களால் செய்து முடிக்க

* ஒரு ஷிலிங் முக்கால் ரூபாய்.

வேண்டியதாயிருக்கிறது. மேனாடுகளில் நீராவி, எண்ணெய் முதலியவைகளால் ஓடும் சாதாரண இயந்திரங்களைக் கொண்டு விவசாய முதலிய வேலைகளை நடத்தி வருகின்றனர்.

விவசாயக் கைத்தொழில், மற்ற பல கைத்தொழில்களைப் போலல்ல. இத்தொழிலின் விருத்திக்குக் காலங்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு பெரிய ஜமீன்தார் தனக்குள்ள ஏராளமான நிலங்களை வருஷத்தில் ஒரு சில மாதங்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்தி மற்ற காலங்களில் உபயோகப்படுத்த முடியாமல் போகிறது. ஆகவே செலவுக்குத் தனக்குக் கிடைக்கும் தானியம் முதலிய உணவுப் பொருட்களை அதிகமாக விற்று இலாபம் பெற முடியாமல் பெரும்பாலும் தன் உபயோகத்துக்குச் சேர்த்து வைக்க வேண்டியிருக்கிறது. அப்படியல்லாமல் வருஷ முழுவதும் பலவித விவசாயங்களைச் செய்துகொள்ள முடியுமானால் செலவுக்குக் கொஞ்சம் போக மீதியான அதிகபாகத்தை விற்று இலாபமடையலாமல்லவா? மேலும் தன் தொழிலாளர்களுக்கும் மற்ற ஆடுமாடுகளுக்கும் விவசாயமில்லாக் காலங்களில் வீண் செலவுகள் செய்துகொண்டிருக்கவும் ஏற்படுகிறது. ஆதலால் வருஷமுழுதும் எளிதில் விவசாய விருத்தி ஏற்பட்டால் எவ்வளவோ அனுகூலங்களுண்டு என்பது பிரத்தியட்சம். இதற்காக மேனாடுகளைப்போல இயந்திரங்களை உபயோகப்படுத்தவேண்டும். இவ்வியந்திரங்களுக்கு மின்சார சக்தியை உபயோகித்தால் காரியங்கள் வெகு சீக்கிரத்தில் அதிகச் செலவின்றி நடைபெறுகின்றன. மின்சாரம், விவசாய இயந்திரங்களுக்காவதன்றியும், விளக்குகளுக்கும், உஷ்ணப்படுத்துவதற்கும், சமைப்பதற்கும் இன்னும் ஏராளமான வகைகளில் உபயோகப்படுகிறது. விவசாயக் கைத்தொழில்களில் மின்சார இயந்திர உபயோகத்தைவிட எண்ணெய், நீராவி இயந்திர உபயோகம் $2\frac{1}{4}$ பங்கு அதிகமாயும், குதிரை முதலியவைகள் உபயோகம் 6 பங்கு அதிகமாயும், மனிதர்களின் உபயோகம் 17 பங்கு அதிகமாயும் செலவாகிறதென்று காணப்படுகிறது. ஆதலால் வேளாண்மையில் மின்சார உபயோகத்தால் குறைந்த செலவில் 'மிகுந்த பிரயாசையின்றி, சின்னாட்களில் தகுந்த இலாபம் கிடைக்கும் என்பதை நிரூபித்திருக்கின்றனர்.



## மின்சாரம் பெறுவதெப்படி?

மின்சாரசக்தி வெகு சுலபமாக அருகிலிருந்து கிடைக்காவிட்டால் சொந்தமாக "டைனமோ"* வென்ற மின்சாரம் உண்டாக்கும் இயந்திரத்தைத் தங்கள் நிலங்களுக்கருகில் அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த டைனமோவைச் சுழலச் செய்வதற்கு நிலக்கரி, எண்ணெய் (பெட்ரோல்) நீர் வீழ்ச்சி, காற்று முதலியவைகளிலொன்று முக்கியமாய் வேண்டியதாயிருக்கிறது. 'பெட்ரோல்' எண்ணெய்க்கு அதிகச் செலவு ஏற்படுவதால் அதை உபயோகப்படுத்துவதில் கஷ்டம் ஏற்படும். ஒரு உயரமான விடத்தில் (இரண்டு இலேசான, நீண்ட, உறுதியான தகடுகளைக் குறுக்காக அமைத்துத் தானாகக் காற்றினால் சுழலும்) பெரிய காற்றாடியைக் கொண்டு டைனமோவைச் சுழலச்செய்யலாம். ஆனால் நாம் எப்பொழுதும் காற்றை எதிர்பார்த்த வண்ணமாயிருக்கவேண்டி வரும். மேலும் காற்று ஒரே விதமான விரைவுடன் வீசிக்கொண்டிராது. நீர் வீழ்ச்சிமிகவும் உபயோகமானது. மைசூர் இராஜ்ஜியத்தில் காவேரி நதியின் நீர் வீழ்ச்சியால், சுழலும் சக்கரங்களைக்கொண்டு அநேக டைனமோக்கள் நடத்தப்பட்டு வேண்டிய அளவு மின்சாரம் கிரகிக்கப்படுகிறது. ஆனால் நமது வேலைக்கு (வேளாண்மைக்கு) டைனமோவை நடத்த எக்காலத்திலும் நீர் வீழ்ச்சி தேவையாயிருக்கிறது. இது முடியாத காரியம். கோடைகாலத்தில் ஆற்றுநீர் வற்றிப்போம், ஆகவே நீர் வீழ்ச்சியாலும் அதிக சௌகரியமில்லை. நிலக்கரி, மரக்கட்டைகளைக்கொண்டு நீராவி இயந்திரத்தால் டைனமோவைச் சுற்ற மேலே குறித்த கஷ்டங்களேற்படாது. ஆதலால் நிலக்கரி, மரக்கட்டைகளை உபயோகித்து எக்காலத்திலும் வேண்டிய அளவு டைனமோவிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தால் அநேக இயந்திரங்களை நடத்தி வேளாண்மைக்குரிய பல வேலைகளைச் செய்துகொள்ளலாம். (தொடரும்)

K. G. கிருஷ்ணன், B. Sc. (Hons.)

---

* K. G. கிருஷ்ணன், "மின்சாரம்" 'பாரதி' பிப்ரவரி 1930ல் விவரம்பார்க்க.

# யாதவகுல முன்னேற்றம்.

புகழ் மிகுந்த பரதகண்டமென விளங்கும் நமது தாய் நாடாகிய இந்தியாவில் வதியும் சிறந்த புராதன வகுப்பினருள் நமது யாதவ குலத்தோரும் உயரிய மாண்புடையோராவர். இனிய தமிழ்மணங் கமழும் அழகிய தமிழ் நாட்டில் கோவைசியர்களாகவும் கலை விற்பனர்களாகவும் வீரர்களாகவும் ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்களாகவும் இன்னும் பலவித மேலான அம்சங்களுடன் திகழ்ந்தவர்கள். யாதவப் பெருமக்களின் தொன்மையின் சிறப்பை ஸ்ரீமத் பாகவதம் முதலிய நூல்களிலே இனிது காணலாம்.

இத்துணைச் சாலச்சிறந்த முன்னோர் வழிவந்தவர்கள்; நாகரிகமெனும் தொனியோடு சுழலும் காலச் சக்கரத்தின் வன்மையை உணர்ந்த ஏனைய வகுப்பினர் கல்வியிலும் வியாபாரத்திலும் தேகபலத்திலும் சுகத்திலும் வியக்கத்தக்க மேன்மையும் முன்னேற்றமும் அடைந்து கொண்டிருக்க ஒரு சிறிதும் உணராதவர்களாய் அநேக வருடங்கள் கோபரிபாலனம் என்னும் ஒரே தொழிலிலேயே அமர்ந்து அயர்ந்த நித்திரையிலாழ்ந்திருந்தமை யோசிக்கப் புகின் சிந்திக்கத்தக்க ஒன்றாம்.

சற்றேறக் குறைய நாற்பது வருடங்களுக்கு முன்பதாகவே தமிழும் ஆங்கிலமும் பயின்று ரங்கோனில் பல வருடங்கள் உத்யோக ஜீவனம் புரிந்த எனது தந்தையார் மதுரையில் வாழ்ந்த நமது மரபினரொருவரிடத்தில் நமது யாதவமக்களின் முன்னேற்றங் கருதி ஆங்கிலம் தமிழ்க் கல்விப் பயிற்சி நமது யாதவமக்களுக்குக் கொடுத்தால் நலமென விளம்பியதற்கு 'அஃது தகுதியில்லை அவ்விதமான படிப்புத் தீய விஷயங்களுக் கிழுக்கும்; செல்வத்தைக் குறைவுறச் செய்யும்' என்று பதிலளித்தனராம். கல்வியின் சுவை யறிந்தோர் யார்தான் இக்குறுகிய கருத்தை யேற்றுக் கொள்வர். அநுபவம் ஆற்றல் கல்வியுணர்வு இவைகளின்மை இதற்குக் காரணமென்றுரைப்பது பொருத்த முடையது. விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியிலும் பலப்பல நூதன கலை வளர்ச்சியிலும் வெகு வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கின்ற மேனாட்டினர் பெருந்திரளான பொருளைக் கல்வியின் பொருட்டுச் செலவிடுகின்றனர். கலை பயிலும்

இதன் தொடர்ச்சி புரட்டாசி மாதத்தில் பார்க்க.

# நமது சமுதாயச் சீர்திருத்தம்.

## பால் தயிர் விற்பனை.

நமது யாதவ சமுதாயம் சீர்திருந்த வேண்டிய துறைகள் பலவாக இருக்கின்றன. அவைகள் யாவையென ஆராய்ந்து அறிந்து கொள்வதே சீர்திருத்தக்காரரது முதற் கடனாகும். நல்லவற்றை நாடித் தீயவற்றை வெறுப்பதே சீர்திருத்தத்தின் நோக்கம். தற்போது நமது யாதவசமுதாயத்தில் இருந்து வரும் பழக்க வழக்கங்களில் நன்மையைத் தரத்தக்கன எவை, தீமையைத் தரத்தக்கன எவை என்பதே நாம் செய்ய வேண்டிய ஆராய்ச்சியாகும். இவ்வாராய்ச்சியில் முதலில் என் நினைவுக்கு வரும் விஷயம் பால், தயிர் விற்பனையைப் பற்றியதே. யாதவ சமுதாய சீர்திருத்தத்தில் சிந்தை செலுத்திய எவருக்கும் 'இது புலனாகாமற் போகாது. யாதவ இளைஞர் பலருக்கு இவ்விஷயத்தில் மிக உணர்ச்சி உதித்திருப்பதை நான் அறிவேன். சில முதியவர்கள் நான் கூறப்போகும் விஷயங்களில் மனங் கசப்பார்களென்பதும் தெரிந்த விஷயமே.

நான் அடியில் கூறப்போகும் விஷயத்தைப்பற்றி அநேகருக்கு எழுத எண்ணமுண்டு. ஏனோ அவைகள் இன்னும் வெளியாகவில்லை. நமது குலத்தில் இருந்து வரும் இழிநிலையைப் பிற குலத்தவரும் அறிந்து கொள்ளுமாறு பத்திரிகையில் வெளிப்படையாக எழுதுவது எவ்வாறு எனவே பலர் சும்மா இருக்கின்றனர் என்னலாம். எனக்கும் இவ்வெண்ணம் உண்டாகாமலில்லை. உடலின் உள்ளே அழுகிவரும் புண்ணைக் கருவி கொண்டு குடைந்து சீசலங்களை வெளிப்படுத்துவது போலவும் பாசியும் சேறும், நிறைந்த குளத்தை கலக்கி அவைகளை அப்புறப்படுத்தி வேறு நீர் பாய்ச்சுவது போலவும் ஒரு சமுதாயத்தின் இழிந்த தன்மையை வெளிப்படுத்தி அதைச் சற்றும் இல்லாமற் செய்யவேண்டுவதே நலமென்பது ஆன்றோர் கொள்கை. ஆகையால் நமது சமுதாயத்தில் பால், தயிர் விற்பனையில் காணப்படும் இழிந்த தன்மை யெவையென விளக்கி அவற்றை அறவே விலக்க நாம் முயலவேண்டும்.

யாதவர்களாகிய நமக்கு முக்கிய தொழில் பசு பரிபாலனம். அதனால் வரும் பயனை உலகம் அநுபவிக்கும்படியாகச் செய்வது நமது குலதர்மம். அதைச் செய்ய வேண்டும் முறையில் செய்துவர

வேண்டும். தேவையானதற்குத் தகுந்ததைச் சேகரிப்பதென்ற முறையை விட்டு விட்டு, பால் தயிர், வியாபார முறையென்ற நிலையில் விற்பனையாகி வருகிறது. ஒரு கிராமத்திற்குத் தகுந்த மந்தைகளை விட அதிகமான மந்தைகளை வைத்துக் கொண்டிருப்பதினால் அவைகளில் கிடைக்கும் பால் தயிர் முதலியவற்றை அடுத்த பட்டணங்களுக்குக் கொண்டு போகவேண்டிய தேற்படுகிறது. பட்டணங்களில் சென்று பால் விற்றுக் காலக்ஷேபம் செய்வதே தமது வாழ்வில் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் யாதவக் குடிகள் எத்தனையோ இருக்கின்றன. பட்டணங்களில் வியாபார நிலை, மாற்றம் அடைந்து கொண்டே வருகிறதென்பதை யாவரும் அறிவர். ஒரு நகரத்திற்குத் தேவைக்கு அதிகமான பாற்குடங்கள் வருமானால் அவைகளின் விலை குறைவடையுமென்பதைக் கூறவும் வேண்டுமோ? இதனால் எதிர் பார்த்த தொகை கிடையாமல் ஏமாறுபவர் பலர். பால் கிடையாமல் கிராக்கி விலைக்கு வாங்குவதை இவர்கள் அறிவதில்லை.

இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு "இடையன் கொடுமை" யென்ற தலைப்பின் கீழ் ஒரு பெரியார் இயற்றிய பாடல்கள் சில வெளிவரக் கண்டேன். யாதவன் உலகஉபகாரியாயிற்றே. அவனுக்குப் புனிதமான தொழிலன்றோ என்றும் ஏற்பட்டிருக்கிறது. அவனிடம் என்ன கொடுமையைக் காண்பது. எல்லா நூல்களும் அவனைத் தர்மரூபி! தயாளகுணமுடையவன் என்று புகழுகின்றதே இச்செய்யுள்கள் எதனால் கொடுமை யெனக் கூறுகிறதென்பதை அறிவோமென ஆராயும்போது நானும் ஒருவாறு கொடுமைதான் எனக் கண்டேன். ஆவினத்தின் ஆருயிரினும் ஆர்வம் மிக்க * கன்றுகளைக் கொன்று அவைகளின் தோலால் ஆவினங்களை ஏமாற்றிப் பால் பறிக்கும் தன்மையைக் கவி கனிந்து பாடுகிறார். அந்தோ! "காசினியைக் காக்கும் காமதேனுக்களின் கருவையா அறுப்பது." ஜீவாதாரமான செல்வத்தையா தோன்றியபோதே தொலைப்பது. எத்தனை பேர்க்கு இன்னமுதம் தந்து உதவவிருந்ததோ அக்கன்று, தாயற்ற சேய் எத்தனைக்குத் தாயாக விளங்கவிருந்ததோ தெரியவில்லை. தனக்குத் தற்காலம் ஹோட்டல் காரன் தரும் 4-அணா காசிற்காக இக்கொடிய செய்கைகளைச் செய்யச் சிலர் கூசுவதில்லை. எலும்பும், தோலும் கூடுமாகச் சில கன்றுகளைக் காணலாம், பால் விற்பனையுள்ள பட்டணங்களில் இக்கொடிய தன்மையை அதிகமாகக் காணலாம் நிற்க.

* கன்றுகளைக் கொன்று என்றது கன்றுகளுக்குப் பால் விடாது கறந்து வேறு தீனியைத்தின்னச்செய்து நோய்கொண்டிறக்கச்செய்வதையே குறிக்கும்.



நான் அடுத்ததாகக் கூறப்போகும் விஷயத்தில் சிறிது சிந்தை செலுத்தவேண்டும். நமது பெண்களை நாம் பால் தயிர் வியாபாரத்தின் பொருட்டு நமது கிராமங்களிலிருந்து சுமார் 4-5-மைல் தூரமுள்ளதும் போய்வர வெகு நேரமாகிறதுமான நகரங்களுக்குத் தனியாகப் போகச் சொல்லுவது ஒழுங்கா? என்பது ஆலோசிக்கத் தகுந்தது. யாதவ மக்கள் யாவரும் செல்வந்தராகச் சிறந்து விளங்கவில்லை. ஆடவர் விவசாயம் அல்லது வேறு தொழில் செய்யப் பெண்கள் பால் தயிர் வியாபாரஞ் செய்தால்தான் தங்கள் குடும்பத்தைச் சரியாக நிர்வகித்துக் கொண்டு போகவியலும் என்பதை நான் அறிவேன். ஆனால் அதனால் நிகழும் இழிநிலைமையை எண்ணினால் இக்கேவலமான வாழ்க்கை வாழவேண்டாமெனச் சொல்லத் தைரிய முண்டாகிறது. நமது யாதவப்பெண்கள் வியாபாரத்திற்காகச் சாதாரணமாகப்போகுமிடங்கள் பட்டணங்களில் எவை யெனில், காப்பி சாப்பாட்டு விடுதிகள், உத்தியோகஸ்தர்கள், தொழிலாளிகள் முதலியவர் வீடுகள் என்பவைகளாம். இவைகளில் பெண்கள் இல்லாத வீடுகள் பல இருக்கலாம். அவைகளில் வாழும் இளைஞர் முன்பாக அழகிய இளமை வாய்ந்த அலங்காரமான ஒரு பெண் தனியே வரச் சௌகரியமானால் அவர்கள் மனோநிலை என்னவாகும் என்பதைச் சிறிது மனமார யோசனை செய்தால் தெரியும். இந்தக் கேவலத்துக்கிடமான செய்கையை அகற்ற வேண்டுவது யாருடைய கடமை? யாதவ சீர்திருத்தத்திற்காக முனைந்து உழைக்கும் நம்மவருக்கு இதைவிட வேறு என்ன கடமை இருக்கிறது? யாதவப் பெண்கள் தமது கிராமத்தை விட்டு அயலூருக்குப் பால் தயிர் விற்பனைக்காகப் போகவேண்டாம். அவர்களுக்காகப் புருஷர்கள் போகட்டும். அல்லது வயோதிகமான பெண்கள் போகட்டும். அவர்களுக்கும் காலக்ஷேபத்திற்கு நல்வழி கிடைக்கிறது. சிறு பெண்கள் அயலூருகளுக்குச் சென்று பொருள் திரட்டிக்கொண்டு வந்ததனாலாகும் பெருமையைக் குறைத்துக்கொள்வது நலம். இல்லையானால் நிலமைமிஞ்சிவிடும். பெரும் பழிக்கு ஆளாக வேண்டியவர்களாவோம். யாதவர்கள் உலக க்ஷேமத்திற்காக உதித்த வகுப்பார் என்ற கொள்கை மாறி, உலக நாசத்திற்காக உதித்தவர்கள் என்ற பெயர் ஏற்பட்டு விடும். ஆகையால் யாதவ கனவான்களே! நமது யாதவச் சிறுபெண்களை அயலூருக்குப் போக விட்டு அவர்களை வெகு நேரமாக விலகி இருக்கச் செய்யவேண்டாம். அவர்கள தற்போது செய்து வரும் வேலையை ஆடவரேனும் வயது முதிர்ந்த பெண்பாலரேனும் செய்துவரச் செய்வோம். பிறர் ஏளனஞ் செய்யாதபடி நடந்து கொள்வதே ஒவ்வொரு யாதவ முதியோர் இளையோரது கடமையாகும்.

# கடவுள்.

சர்வேஸ்வரனது படைப்புக்குட்பட்ட எல்லா ஜீவராசிகளும் ஒரே நிலைமையில் உள்ள வஸ்து ஒன்றுண்டென்று ஒப்புக்கொள்ளக் கூடிய வஸ்து ஒன்றுண்டு என்பது யாவரும் அறிந்த விஷயமே. அதைத்தான் கடவுள் என்று சொல்கின்றோம். ஆனால் தற்காலத்தில் அனேகர் கடவுள் என்று ஒரு பொருள் இல்லை; அவ்வாறு இருக்குமாயின் அதை நேரில்கண்டவர் யார் என்று இவ்வாறு விதண்டாவாதம் பேசி நாஸ்திகராய்த் திரிவதும் யாவருக்கும் தெரியும்.

இன்னும் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொரு ஜீவனும் கடவுள் என்பது என்ன; அது எப்பேர்ப்பட்ட பொருள்; அதன் தன்மையாது; அதை அடைவதால் பயனென்? அதை அடையும் விதம் என்ன; என்னும் வகைகளை ஆராயவேண்டுவது அவசியமன்றோ? இவ்விதமாக உள்ள பல கேள்விகளையும் நாமே கேட்டுக்கொண்டு நமக்குள்ளே அதைப்பற்றி ஆராய்ந்துகொள்ளல் அவசியமன்றோ? இவைகளுக்குச் சிறியேனின் புல்லறிவுக் கேற்றவாறு ஒருவாறு சமாதானம் கூறுவதைப் பெரியோர்கள் குற்றத்தை எல்லாம் நீத்து குணத்தை எல்லாம் கைக்கொண்டு என்னை ஆட்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. கடவுள் என்பது ‘கட’ என்னும் வினை ‘வுள்’ என்னும் விகுதி பெற்று கடந்து நிற்கும் பொருளை உணர்த்தும் பெயராக இருக்கிறது. கடந்து நிற்றல் என்பது மன, மொழி, மெய்களால் அறியக்கூடாமல் கடந்து நிற்பதாம். அதாவது ஆறு அறிவுபடைத்து அரும் பிறவிபெற்ற மானிடரின் சாமானிய அறிவில் தென்படாத பொருள் என்பதாம். இப்பொருளைச் சிலர் அது என்றும், அவனென்றும், அவரென்றும் கூறுவார்கள். அவ்விதம் கூறுவது எல்லாம் தந்தையினிடத்தில் அதிகப் பிரியமுள்ளவர்கள் அது என்றும் (உ-ம். அப்பா அதோ வருகிறது) அவன் என்றும் (உ-ம். அப்பா நீ வருகிறாயா) பெரும்பான்மையோர் அவர் என்றும் கூறுவது இயல்பு. இவ்விதம் கூறுவதால் அந்தந்தத் தாய் தந்தையர்க்கு அக்குழந்தையினிடத்தில் ஒரு சிறிதும் அன்பு குன்றாமல் அதை எவ்விதம் ஆதரிக்கின்றாரோ அதேவிதமாக இப்பூவுலகிலுள்ள ஜீவகோடிகளுக்கெல்லாம் மாதா, பிதா நிலைமையிலிருந்து ரக்ஷித்துவரு



கிற கடவுளை நாம் முழு அன்போடு எவ்விதமாகக் கூறினாலும் அவர் சிறிதும் நம்மீது வருத்தங் கொள்ளாதவர்.

2. அவரைப் பூலோகவாசிகளாகிய நாம் அவரவர்கள் நினைத்த பிரகாரம் விஷ்ணு என்றும், சிவனென்றும், அல்லாஹ் வென்றும், புத்தர் என்றும், இயேசுவென்றும் இன்னும் பலவகையாகக் கூறிக் கூத்தாடுகின்றனம். அவையெல்லாம் பேதமையே யாகும். கடவுள் அப்படி எந்தவிதமான பெயரோடும் ரூபத்தோடும் கூடியிருப்பதாகத் தெரியவில்லை என்பது கற்றறிந்தார் கருத்து. அவர் ரூபத்தோடு அன்றி அரூபியாய் எங்கும் வியாபகராய் நிறைந்திருக்கிறார் என்ற உண்மையை யாவரும் சாஸ்திர மூலமாய்த் தெரிந்திருக்கக் கூடும். உதாரணமாக இரண்யன் தனது மகனை எவ்வளவோ இம்சைக்கு ஆளாக்கியும் அவன் சாகாமை கண்டு மனச்சலிப்போடும் கோபாவேசத்தோடும் பிரஹலாதனை நோக்கி ‘நீ சொல்கின்ற ஹரி என்பவன் எங்கே இருக்கிறான்’ என்று கேட்டபோழ்து அவன் ‘அந்தக் கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார், அவர் இல்லாத இடம் கிடையாது இந்தத் தூணிலும் உளன் என்று பதிலளிக்க உடனே அதிக கோபாவேசத்துடன் அவன் தன்கையால் தூணில் அறைய உடனே அந்த ஹரி அவன் நினைத்த பிரகாரம் அந்தத் தூணினின்றும் நரசிம்மமூர்த்தியாய் வெளிவந்தது இதிகாச மூலமாய் நன்கு அறிகிறோம். இவ்வுண்மையை இன்றும் கற்றறிந்த நமது தமிழ் வல்லார்கள் சில பாடல்களால் நமக்கு நன்குணர்த்திப் போந்தனர். அவைகளில் ஒரு சிறிது ஈண்டு எடுத்துரைப்போம்:—

‘கடவுள் எங்கும் நிறைந்தவர்’

‘மனமுமாகியு மொழியுமாகியு மருவியே வனரூபமாய்
இனனுமாகியுஞ் சசியுமாகியு மெறிதிரைக் கடன் மேருவாய்
தனயனாகியுந் தந்தையாகியுந் தாயுமாகியுந் தமருமாய்,
அனையுமாகியபொருள்.

‘எள்ளிலேயுறை எண்ணெய்போல் ஈரேழுலோக மிசைந்துதான்
உள்ளுமாகிப் புறம்புமாகிய ஒருவன்.

என்றும், நாம் எவ்வகையிலும் பிறருக்குத் தெரியாமல் ஒரு காரியத்தை மறைத்துக்கொள்ளலாம் என்றால் அது முடியாது என்பதை,

'வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்-வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு' என்றும்

உணர்த்தியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் அறிந்தாவது நாம் நல்லறிவுகொண்டு கடவுளை வழிபடவேண்டும். இப்பரம் பொருளை ஆன்றோர் 'கருணைத் தடங் கடல்' என்றும், 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே' என்றும், 'நிரதிசயானந்தப்பொருள்' என்றும். 'எல்லையில் பரம் பொருள்' என்றும் சிறப்பாகக் கூறுவர்.

3. இப்பரம்பொருளாகிய கடவுள் ஒருவர் உண்டு என்பதை அறிந்து அவரை வழிபட்டு, என்றும் அழியாத நிரதிசயானந்தப் பெரு வாழ்வாகிய மோட்சத்தை அடையவேண்டிய வழிகளைத் தேடவேண்டியதே கடவுளிடத்தில் நாம் காட்டும் அன்புக்குக் குறிப்பு. அவருக்குத்தான் ரூபம் கிடையாதே, அப்படியிருக்க நாம் அவரை எப்படித்தான் காணமுடியும் என்று கேட்கலாம். அன்பர்களே! நாம் அந்தப் பரம்பொருளைக் காட்சிப் பிரமாணத்தால் அன்றி (கண்ணுக்கு முன்பாக ஒரு உருவமாக அல்லது) அனுமானப் பிரமாணத்தால் (ஒரு இடத்தில் இருந்து புகை கிளம்பினால் அந்த இடத்தில் நெருப்பு இருக்கும் என்று எவ்வாறு ஊகித்து அறிகிறோமோ அதேவிதமாகக்) கண்டுகொள்ளுதல் கூடும். அவ்வாறு கண்டபின்னர் அப் பரம்பொருளை நமது ஊனக் கண்ணாலன்றி ஞானக் கண்களால் கண்டு பேரானந்தமடைந்து அப்பொருளோடு ஈடுபட்டு நித்தியமுமுட்சுவத்தை அடையலாம். அவ்விதம் நாம் அவரை எவ்வாறு அனுமானித்தல் கூடும் என்பதைச் சிறிது ஆராய்வாம்:-

தற்போது ஒரு எஜமானனை எடுத்துக்கொள்வோம், அவனிடத்தில் எத்தனையோ விதமான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவரவர்களுடைய வேலையை அந்த எஜமானுக்குப் பயந்து சரிவர முடிக்கிறார்கள். அதேவிதமாய் இவ்வேலையுலகில் நடப்பவைகளைக் கவனித்துப் பாருங்கள். (தொடரும்)

T. R. அழகிய மணவாள தாஸ் (யாதவன்)
Managing Foreman
Sri Meenambikai Press,
Tinnevelly Town.

# நமது கிராம முன்னேற்றம்.

375-ம் பக்கத் தொடர்ச்சி.

முற்காலத்தில் நமது கிராமங்கள் பழமையிலும், நாகரிகத்திலும், கல்வி முதலிய மற்றைய சிறப்புக்களிலும் உயர்ந்து விளங்கின. இப்பொழுது அவைகளெல்லாம் அங்கும் இங்குமாகத் தத்தளிக்கின்றன. அக்காலத்தில் நீர்வளமும், நிலவளமும் மிகுந்து நல்ல நிலைமையில் இருந்ததினால் நம்முடைய முன்னோர்கள் பஞ்சத்தினால் பஞ்சாகப் பறக்கவில்லை. அதோடு கூட அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆடைகளையும் தாங்களே செய்து கொள்ளுவார்கள். இவர்கள் கிருஷ்ண பகவான் செய்த தொழிலாகிய ஆடுமாடுகளை மேய்ப்பதும், அவைகளிலிருந்து அநேகவிதமான கைத்தொழில்கள் செய்வதுமாக வாழ்ந்து வந்தார்கள். அதோடு அவர்களுக்கு மேய்ப்பதற்குப் போதுமான இடங்களிருந்தன.

இதோடு நம்முள் கட்சிச் சண்டைகள், வியாஜ்யம், கலகம், வீண் செலவு ஊர்புறத்தே என்ன குறைந்தாலும், இரண்டு கள், சாராயக் கடைகள் இதுதான் அநேகமாக நமது தற்காலக் கிராமங்களி லிருக்கின்றன. ஐயோ! இவைகளெல்லாம் நினைக்குங்கால் உங்கள் மனம் துடிக்கவில்லையா? உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா? அவர்கள் மனம் துடைப்பேன் அல்லவெனில் என் உயிர் துறப்பேன்? என்னும் பேருணர்ச்சி உண்டாகவில்லையா? இல்லையெனில் நீங்கள் செய்யும் சீர்திருத்தங்களெல்லாம் பொய், பேசும் வாதங்களெல்லாம் வீண், போடும் திட்டங்களெல்லாம் குப்பைக் காகிதங்கள், என மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

'அது ஒரு காலம். அன்று கிராமங்கள் நன்றாயிருந்தன. இப்பொழுது கலிகாலம் நம்மால் என்ன செய்யமுடியும் என்று தூங்கிக் கொண்டிருப்பவர்களெல்லாம் சோம்பேறிகள். அவர்கள் கிடக்கட்டும். சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு வார்த்தை. கிராம முன்னேற்றத்திற்குக் கங்கணம் கட்டினாலொழிய தேச முன்னேற்றத்தைக் கணவிலுங் காண முடியாது.

இவைகளுக்கெல்லாம் முதல்பொருளா யிருப்பது 'கல்வி'. இதற்கு அநேக வாலிபர்கள் தேவை, இவர்களால்தான் இந்தக் கல்வி விஷயத்தைச் சீர்படுத்த முடியும். ஆகையினால் யாதவ வாலிபர்களெல்லாம் சேர்ந்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள சிறிய மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்பும்படி அவர்களுடைய பெற்றோர்களுக்கு அறிவு ஊட்டிக்கொண்டே வரவேண்டியது யாதவ வாலிபர்களுடைய கடமை. இதற்கு உதவியாயிருந்து பிரயாசப்படவேண்டியது யாதவப் பெரியவர்களுடைய கடமை.

இவைகளோடு பத்திரிகை படிக்கத் தெரிந்தவர்களெல்லாம் உடனே யாதவமித்திரனுக்குச் சந்தாதார்களாய்ச் சேரவேண்டும். ஏனென்றால் மற்றும் சமூகமெல்லாம் பத்திரிகையின் மூலமாகவே முன்னுக்கு வந்திருக்கின்றன. ஆகையினால் ஒவ்வொருவரும் இதை வாங்கித் தெரியாதவர்களுக்கும் தெரிந்தவர்கள் வாசித்துக் காண்பிக்க வேண்டும். பத்திரிகையில்லாத விஷயத்தில் ஒரு சமூகம் ஒரு காரியமும் செய்ய முடியாது.

இதோடு, "வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி"யாக நமது கிராமங்கள் விளங்கவேண்டும். இந்த நோக்கமில்லாத முன்னேற்றப் பேச்செல்லாம் பயனில் சொல்லாகவே முடியும்.

அறிவிற் சிறந்த யாதவப் பெரியோர்களே! மேற் சொல்லியவைகளை ஆராய்ந்து பார்த்துக் குற்றங்குறைகளிருக்கின் பொறுக்குமாறு வயதில் சிறியவனாகிய அடியேன் மிகவும் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்துடன் மேலே சொல்லிய காரியத்திற்காக மீண்டும் எனது நண்பர்களையும் அதிக முயற்சி எடுத்து வரும்படி மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறேன்.

இப்படிக்கு, உண்மை ஊழியன்,
க. ஆண்டி யாதவன்,
பெருங்குளம்.

# இடையர்.

உலகில் வன்பாலான குறிஞ்சிக்கும், மென்பாலான மருதத்துக்கும் இடை நிலத்தவர்களை இடையர்-பொதுவர் என அழைக்கிறார்கள். இவர்கள் ஆயர், கோபாலர், கோவலர், யாதவர் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

சில வகுப்பினர் சில நூறு, ஆயிரம் வருஷங்களில் தோன்றியவர்களாகச்சில நாடுகளில், தேசங்களில் மாத்திரம் இருப்பவர்களாய்க் காணப்படுபவர்கள் போலன்றி, வடதேசத்தும், தென்தேசத்தும், மற்றும் எத்தேசத்தும் வெகு காலமாக விளங்குபவர்களாக உள்ளவர்கள் இடையர்கள். ஊன்றி நன்றாக விசாரித்தால் இவர்கள் இதிகாச காலம் புராணகாலத்துக்கும் முந்தி வேத காலத்துக்கும் முந்தியே இருந்திருக்கிறார்கள். வேதகாலம் என்பதிலும் முதல் வேதமாகிய ருக் வேதத்திலேயே இவர்கள் புகழ்ந்து பேசப்பட்டவர்களாக இருப்பதால் எத்தனைப் பழமையானவர்களென்று கூறவேண்டும்? இடையர்கள் வேதத்தில் -"கோப" (கோபர்) என்றழைக்கப்படுகிறார்கள். பசுக்களை அடைத்து வைக்கும் இடத்துக்கு "கோத்ரம்" (ருக்வேதம். 11-23-8) என்றும், "வ்ரஜம்" (அதர்வண வேதம். (3-11-5) கோஷ்டம் (அதர்வணவேதம்-4-21) என்றும், பசு நீர் அருந்துந் தொட்டிக்கு "ப்ரயா" (ருக்-4-21-27) என்றும், த்ரோணம் (ருக்-4-50-4), "ப்ரயாண" (அத-5-75-1) என்றும் பெயர்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் பசு மேய்த்தல், பால்கறத்தல் முதலிய கோரக்ஷகத் தொழிலை இழிவானதாகச் சிலர் எண்ணுகிறார்கள். முற்காலத்தில் மஹரிஷிகளும் அவர்கள் குமாரர்களும் தங்கள் கையால் பசுக்களைக் காடுகளுக்கு ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்தார்கள். ரிஷி பத்தினிமார்கள் பால் கறந்தார்கள். தங்களுக்குள்ள செல்வங்கள் பசுக்களே எனக் கொண்டிருந்தார்கள் என வேதங்கள் பாடுகின்றன. மேலும் மாடு மேய்த்தல் தொழிலை உபமான உபமேயங்களாகக் கொண்டு வெகு அழகாக வேதங்கள் வருணிக்கின்றன. கோபர்கள் பிரதினம் மாடுகளை மேய்க்கக் கொண்டுபோவார்கள்" (ருக்வே-X

19-4-5) "இந்திரனைப் பூஜை செய்வதற்கு மனிதர் கூடி இருக்கும் இடங்களுக்கு, இந்திரன் தன் இரதத்தை ஓட்டிக்கொண்டு போவது போல, பசுக்களை மைதானத்திற்கு ஓட்டிக்கொண்டு போவார்கள்" (ருக்வே-V-31-1) "போர்க்களத்தில் இந்திரன் தன் சைனியத்தைக் காப்பாற்ற அதைச் சுற்றிச் சுற்றி வருமாறு, மாட்டு மந்தையைக் கோபன் சுற்றிச் சுற்றி நடந்து பார்த்துப் பாதுகாப்பான்." (ருக்வே-VI-19-3) "பாகம் செய்பவர் இந்திரனைப் பாகசாலைக்குக் கூப்பிடுவதுபோல, மந்தையைவிட்டுத் தூரமாய்ச் சிதறிப்போன பசுக்களைக் கூப்பிடுவான்." (ருக்வே X-23-6) சூரியன் பூமியையும் அதிலிருக்கும் ஜந்துக்களையும் தன் கண்ணாற் பார்த்துக்கொண்டிருப்பது போலப் பசு மந்தையைக் கோபன் பார்த்துக்கொண் டிருப்பான்.' ருக்வே-VI-60-3) என விதந்து கூறுகிறது.

இதுவே அன்றி வேளாளரில் "உழுதுண்போர், உழுவித்துண்போர்" என இரு பிரிவினரென்று தொல்காப்பியப் பொருளதிகார உரையிற் காணப்படுதல்போல, இடையருள் "மேய்த்துண்போர், மேய்ப்பித்துண்போர்" என இருவகையினருண்டு. அவருள்ளே மேய்ப்பித்துண்போன் தலைவனாவான். அவனுக்குத்தான் பெருமையிற் சிறந்தோன் என்னும் பொருளுள்ள "அண்ணல்" என்று திவாகர முதலிய நிகண்டுகளிற் கூறப்படுகிறது. கோபாலர்களுக்கு மேன்மை கூறப்படும் கொள்கைகளை, உயர்ந்தோரான மேய்ப்பித்துண்போர்பாலும், புன்மை கூறப்படுங் கொள்கைகளைத் தாழ்ந்தோரான மேய்த்துண்போர்பாலும் பொருத்திக் கூறவேண்டும். அப்படிக்கில்லாது சில சரித்திரக்காரர்கள் ஆயன் என்ற ஜாதிப்பெயர் கேட்டவுடன் அக்கதா நாயகன் எவ்வளவு வீரதீரம், படைவன்மை, கொடைவன்மை, கல்விவன்மை யுடைத்தானவனாக இருப்பினும் புன்மைபுகக் கூறுவோர் பலர். பழிப்புக்கூற வகையின்றி அதிமேன்மையோடு மேலோர் வாழ்த்த வாழ்ந்தோர் இருப்பின், அவர் மேனி ஒரு கோபிகையின் கற்பத்திருந்து வந்தது, அல்லது, ஆன்மா அம்மேனியோடு கூடிவந்தது, என்று கூற மனஞ் சிறிதுஞ் சகியாது, வேறு வேறு வகையான கற்பிதஞ் செய்துள்ளார்கள். இக்கோபாலர்கள் பசுக்காத்தலன்றி உழவுத் தொழில் மிக்குடையவர்கள். நிலங்களை உழுது துவரை, அவரை, கொள், கடலை, மொச்சை, தட்டை, பச்சைப்பயறு, குங்குமப்பயறு, கொட்டைமுத்து முதலிய தாய தானியங்களையும், கம்பு, சோளம், சாமை, கேழ்வரகு, நெ



முதலியவற்றையும் புன்செய் நிலங்களை உழுது விதைத்துக் காத்து அறுத்துத் தூற்றி ராசிகண்டு ஏற்போர்க்குக் கொடுத்துக் குடம்பை சேர்ப்பர் போரிடுவர் "கோவலரேவல் புரிந்திடவாயர் குலம் பேணும் காவலர்" என ஆனாய நாயனார் புராணத்துக்கூறியவாறு மேய்ப்பித்துண்போர் தலைவனான "அண்ணல்"

(தொடரும்.)

தி. அ. முத்துசாமிக் கோனார்,
திருச்செங்கோடு.

# ஆயர்குலச் சிறப்பு.

(389-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தகைய நிகரற்ற பெருமைவாய்ந்த ஆயர் குலத்தினர்க்குப் பலதிறப்பட்ட பட்டங்கள் உள. ஆவின் பாலை அனைவர்க்கும் அளிப்பதால் 'ஆயர்' எனவும்; 'அண்டர்' எனும் அமரரைத் தன்னகத்திற் கொண்டு விளங்கும் ஆவினங்களைக் காப்போர் ஆதலால் 'அண்டர்' எனவும்; அன்னையைப்போலும் பால் முதலியன அளித்துக் குழந்தைப் பருவந்தொட்டே மக்களைப் போஷித்துவரும் பசுக்களை உடையோராதலால் 'ஆயர்' எனவும்; நான்கு வருணத்தினர்கட்கும் நடுவில் இருப்போர் ஆதலாலும், பசுவின் இடையாகிய மடியிலுள்ள பாலை அளிப்போராதலாலும் 'இடையர்' எனவும்; பங்கு ஆள்பவராதலின் 'கரையாளர்' எனவும்; பசுக்களை உடையவராதலால் 'கோன்' எனவும்; பசுக்களைக் காப்போர் ஆதலின் 'கோபாலர்' எனவும்; பசுவினின்றும் பெறும் பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றை விற்போராதலின் 'கோவைசியர்' எனவும்; பசுக்கூட்டங்களைக் காப்பவராகையால் 'கோகுலர்' எனவும்; 'திருமாலுக்கு அடிமை செய்' என்ற ஒளவையின் அமுதமொழியை மேற்கொண்டு ஒழுகுவோராதலின் 'நம்பி' எனவும்; ஆருயிர்கட்கு அன்னையே போன்ற கோமாதாவுக்கு அரிய பிள்ளைகள் போன்றிருந்து அதனைப் பேணுவோர் ஆதலாலும், நந்தகோன் கண்ணபிரானைப் பிள்ளை என அழைத்த வழக்காலும் 'பிள்ளை' எனவும்; நடுநிலைமை தவறாது நன்னெறி பேசுவோர் ஆதலாலும், பொது நிலத்து இருப்போராதலாலும் 'பொதுவர்' எனவும்; யதுமரபில் உதித்த கண்ணன் வழித்தோன்றியவர்களாதலின் 'யாதவர்' எனவும் பின்னும் பலவித பட்டங்களும் நமது ஆயர்குலத்திற்கு உளவென்றால் அதன் பெருமையை அளவிட்டுரைப்பது அசாத்தியமன்றோ! இத்தகைய பட்டங்கள் பலவற்றுள் நம்மவர்க்கு இதுபோழ்து 'கோன்' 'பிள்ளை' என்பன பெரும்பான்மையும், 'யாதவன்' 'நம்பி' என்பன சிறுபான்மையும் வழங்கப்பட்டுவரக் காண்கின்றோம்.

விரிந்த நோக்கமும் பரந்த கொள்கையும் ஐக்கிய சுபாவமும் இல்லாத காரணத்தினால், நமது யாதவகுலம் ஒன்றினுள்ளே ஐந்நூறு உட்பிரிவுகட்குமேல் உண்டாகி, 'எங்கள் குலமே உயர்ந்தது' என்பாரும், 'அல்ல, எங்க்ள் குலமே சிறந்தது' என்பாருமாக ஒவ்வொரு பிரிவினரும் திருமணச் சம்பந்தத்திற்கும் பந்தி போஜனத்திற்குங்கூட இடையூறு ஏற்படும் வண்ணம் தற்பெருமை யடித்துக்கொண்டு கிணற்று ஆமைகள்போல் வாழ்ந்துவருவதை உன்னுந்தோறும் நம்மவர் அறியாமைபற்றி நகைப்பு ஒருபுறமும்; அன்னார் ஒற்றுமைப்பட்டு குலமுன்னேற்றம் குறிக்கொண்டு தளராது உழைக்க முன்வருவது எக்காலம் என்ற விசனம் மற்றொருபுறமும்; கண்ணபிரான் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளிய பின் துவாரகையிலிருந்த நமது முன்னோருள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு ஒருங்கே மடிந்தொழிந்த துக்ககரமான சம்பவங்கூட நம்மவர்க்கு இன்னும் நற்புத்தி கற்பிக்கவில்லையே எனும் கவலை ஒருபாலும் சிறியேனது அகத்தில் தோன்றுகின்றன. ஏனைய குலத்தினர் தத்தம் குலமுன்னேற்றம் கருதிப் பெரிதும் உழைத்துவரும் இக்காலத்திலே, தொன்மையிற் சிறந்த தூயவைணவ குலத்தினராய நம்மவர் மட்டும் உறங்கிக்கிடப்பது முறைதானோ! வடமதுரையில் தோன்றிய கண்ணபிரான் முற்காலத்தில் நம்மவரை உய்வித்ததேபோல், முச்சங்கங் கண்டு முத்தமிழ் வளர்த்த தென்மதுரைப்பதியில் திருவாளர். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள் தற்காலத்தில் "யாதவமித்திரன்" எனும் இச்சீரிய பத்திரிகை வாயிலாக நமது ஆயர்குல முன்னேற்றத்தின் பொருட்டுப் பயன் கருதாது உழைக்க முன்வந்திருப்பது நம்மவர் செய்த நற்பெருந்தவமே என்பதில் ஐயமில்லை. கருத்திற்கினிய பொருள்களைப்புகட்டிக் கண்ணுக்கினிய வண்ணத்தினனாய் வெளிவந்துலவும் நமது மித்திரனாய இச்செல்வனும், இவனது ஆசிரியர்களும் எல்லா நலங்களும் பெற்று மேன்மேலும் சிறந்திடும்வண்ணம் திருவருள் பொழியுமாறு வேண்டுவோர் வேண்டுவனவற்றை விரைந்தளிக்கும் விமலனை கண்ணபிரானை நாமனைவரும் போற்றுவோமாக. கோகுலம் வாழ்க. கோபாலர் சிறந்திடுக.

ஆரியூர் ம. பதுமநாப பிள்ளை, (யாதவர்)
"திருமகள் நிலையம்"; ஆரியூர்;
விழுப்புரம் தாலூகா.

# கோகில கிருஷ்ணன்

அல்லது

## இரு யாதவ மணிகள்.

ஒரு சீர்திருத்த நாடகம்.

—*—

(391-ம் பக்கம் தொடர்ச்சி.)

அங்கம் 1] [காட்சி 3.

காலம்—காலை

இடம்—நவநீதக்கோனார் தனிவீடு.

[நவநீதக் கோனார்—மகாலெக்ஷ்மி யம்மாள்—கோகிலம்—கிருஷ்ணன் கலிதிருவேங்கடக்கோனார்—அவர் மகன் ராமகிருஷ்ணன்—பெருமாள் கோனார், அவர் மகள் காமாக்ஷி—இவர்கள் அனைவரும் கூடியிருக்கின்றனர்—கலியாணப் பந்தல் ஜோடிக்கப்பட்டிருக்கிறது—தோரணங்கள் முதலியவை கட்டப்பட்டிருக்கின்றன. மேளவாத்தியம் முழங்கிக்கொண்டிருக்கிறது. பஞ்சாங்கக்கார அய்யர் அவர்கள் தன்னுடன் இன்னும் சில பிராமணருடன் வந்திருக்கின்றனர்—சம்மந்திகளும் கூடியிருக்கின்றனர். அய்யர் மாமூல்படி மந்திரோக்தமாக, கோகிலத்திற்கும் ராமகிருஷ்ணனுக்கும்,—கிருஷ்ணனுக்கும் காமாக்ஷிக்குமாகக் கலியாணத்தை முடித்து வைக்கிறார். மணமக்கள், அனைவருடைய ஆசீர்வாதமும் பெற்று மறைகின்றனர்.]

அங்கம் 1] [காட்சி 4.

காலம்—மாலை

இடம்—ஆற்றங்கரையோரம்.

[கோனார்கள் சிலர் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்]

1. கோ—அடா! டா! கண்ணாலம்னாலும் இதல்லகண்ணாலம். நவநீதக்கோனாரும் கண்ணாலம் பண்ரது, இன்னொரு பயலும் கண்ணாலம் பண்ணிடவா! ம்-பேஷ்! பேஷ்!! (தலையை யசைக்கிறான்).

2. கோ—அந்த மனுசனோடே சொத்து சொதந்தரமென்னு—! கவுரவமென்னு? மதுவாரியென்னு?—அவுருக்கும் சமதையாக யாரையாச்சும் சொல்லக்கூடுமா?

3. கோ—(திக்குவாயன்) எ-எ-எ-என்னு இ-இ-இ-ருந்தாலும்—ந-ந-ந-ந-நல்ல—செய்யரத்துக்கு ம-ம-ம-ம-மனசு வே-வே-வே-வே-வேண்டாம்?

4. கோ—ஆம்! நீ சொல்லிதும் நெஜந்தான்—இப்போ எங்க வூட்டுலே எவ்வளவோ செய்யணும்னு எனக்கு ஆசைதான். அதுக்கு சரிப்புட்டால்ல.?

3. கோ—ஒ-ஒ-ஒ-ஒ-ஒங்க பொ-பொ-பொ-பொஞ்சாதி, கொ-கொ-கொ-கொன்னு தொ-தொ-தொ-தொரத்திடமாட்டாளா?

5. கோ—அதான்னே! பின்னேஇல்லே! இப்போ நம்ப நவநீதக்கோனுரு இருக்காரு இவுருக்குன்னு அந்த லச்சுமாயி அம்மா பொஞ்சாதியா அமைஞ்சுச்சே. அத்தே சொல்லு. அந்த அம்மாளுக்கும் கண்ணாலத்தே நால்லா செய்து வைக்கணும்னுதான் ஆசே.

1. கோ—அவுக இம்புட்டுச் செலவு செய்து கண்ணாலத்தே நடத்தினதுகூட ஆச்சரியமில்லே. இதுலே செய்திருந்த ஏற்பாடு, சமையல் ஸொகுஸு சந்தனம் வெத்திலேபாக்கு குடுக்க ஏற்பாடு செய்திருந்தது, பாட்டுக்கச்சேரிங்க நடந்த, ஜோக்கு இம்புட்டுந்தான் கன ஜெரப்பா இருந்துச்சு.

2. கோ—சாப்பாட்டுலேதான், காய் கறிங்க எவ்வளவு தினுஸு, என்ன அழகானபக்குவம், என்னு தோரணையா சாப்பாடு போட்டு அனுப்பினது, நம்மளும்தான் கொண்டு குடுத்து சம்மந்தம் போட்டிருக்கிறோம்.

4. கோ—இதுக்கெல்லாம் காரணம் அவக மகளும், மவனும் தாண்டா!

3. கோ—ஆ-ஆ-ஆ-ஆமா நம்ப ம-ம-ம்-மவனேயும் ந-ந-ந-நல்ல—ப-ப-ப-படிக்க வெச்சிருந்தா ந-ந-ந-நமக்கும் பு-பு-பு-புத்திசொல்லிருக்கும்.



5. கோ—நம்ப சாதியிலே கோகிலத்தையும் கிருஷ்ணனேயும் தவிர இந்த கோண எளுத்து படிச்சவுங்களே ஒருத்தரும் கிடையாதுண்ணு தோணுது.

3. கோ—அ-அ-அ-அதுக்கென்னு! நா-நா-நா-நான் கூடத்தான் மூ-மூ-மூ-மூ மூணு கிளாஸு ப-ப-ப-படிச்சேன்.

1. கோ—அடேபோடா! இவேன் யார்ராவன். மூணு கிளாஸும் நாலு கிளாஸும், படிச்சா சரியாப்பூடுச்சாங்காட்டியும்—அல்லாரும்தான் அவ்வளவு படிச்சிருக்கிறுவ.

2. கோ—என்னு இருந்தாலும், இன்னுமேலியாவது நம்ப புள்ளேங்களே கொஞ்சம் கொஞ்சம் கௌரவமா படிக்கவச்சாத்தான் பெருமையா யிருக்கும்னு தோணுது.

3. கோ—க-க-க-க-கட்டாயமாத்தான் செ-செ-செ-செ-செய்யணும். அ-அ-அ-அந்த காலத்துலே, நா-நா-நா-நான் ப-ப-ப-படிக்காததினுலே இ-இ-இ-இ-இப்போ ந-ந-ந-ந-நம்ப யா-யா-யா-யா-யாதவமித்ரனே வா-வா-வா-வாசிக்கமுடியாமே க-க-க-க-கஷ்டப்பட்டேறன். வெ-வெ-வெ-வெளியே சொ-சொ-சொ-சொல்லவும் அ-அ-அ-அவுமானமாயிருக்குது.

4. கோ—இதோடே இவுங்களுக்கு சம்மந்தியா வந்திருக்காகளே அவுகளும் சரியான புள்ளிங்கதான்.

2. கோ—ஆமா! இந்தக்காலத்து இங்கிலீஷ் பாஸை அவுங்களுக்குத்தெரியாதே ஒளிய சொத்துலே நவநீதக்கோனுருக்கு மேலேயே சொல்லப்புடாது?

5. கோ—அய்வேசியோட மாத்திரமில்லே! கொணமும், தங்கம், தங்கம்தான்.

2. கோ—த-த-த-தட்டான் க-க-க-கண்டா இ-இ-இ-இழுத்துண்டு போ-போ-போய்டுவான்.

1. கோ—எலே! சீ! சீ! இதானே காலித்தனமா குறுக்கே பேசறியே.

2. கோ—வாய் திக்கறத்துலேயே இப்படி இருக்கியே? இன்னும் எங்கமாதிரி இருந்தே ஆலாபியே கண்டேபுடிக்க முடியாதுபோலே இருக்குதே.

4. கோ—ஆமா! மடையறிஞ்சுதான் மண்ணைப் போட்டிருக்காரு பெருமாளு.

5. கோ—ஆட்டுக்கு வாலு அளந்துதான் வப்பாரு. பின்னே இல்லே!

1. கோ—ஆமா! எண்டா! பெருமாளுக் கோனார் மவ காமாச்சிக்கு எளுதப்படிக்கத் தெரியுமா?

2. கோ—திருவேங்கடக்கோனார் மவேன் மாத்திரம் கிளிச்சுப்புட்டானுக்கும் அங்கே.

4. கோ—ஆனா! ரெண்டு பேத்துக்குமே இங்லீஷானுங்கறது கொஞ்சமும் (என்று உதட்டைப்பிதுக்கி கையை விரித்து ஆட்டுகிறான்)

5. கோ—அடே! அப்பா! என்னமோ பெரிய ரெகசியமாட்டமால்ல முணுமுணுங்கறே. இத்தையெல்லாம் விசாரிக்காமேத் தான் பொண்ணு கட்டிருப்பாங்களாட்டியும்—

3. கோ—எ-எ-எ-எ-எண்டா ஒ-ஒ-ஒ-ஒரு மு-மு-மு-மு-முக்கியமான கா-கா-கா-கா-காரியம் கே-கே-கே-கேக்கலையே.

1. கோ—என்னடாப்பா அது?

2. கோ—ஆமா! (3. கோனனிடம் மெதுவாகப் பேசிக்கொண்டு) ஒஹோ! சரிதான்! அந்த அய்யிரு விஷயமா? தவறாறு வாலே?—

1. கோ—ஸ்—ஒஹோ!—சரிதான்—அந்தக் கதையே கேட்டியா நீயி—ஒண்ணுமில்லே பாரு—நவநீதக்கோனாரு ஊட்டுலே வேலை செய்றானே, பெரியண்ணேன் இந்தப்பய செய்த கூத்துல்ல.

2. கோ—ஆமா! கௌப்பினது அந்தப்பய அது யாரெல்லாம் சேத்து இளுத்திட்டுது பார்த்துக்கிட்டியா.

3. கோ—கு-கு-கு-கு-குறும்புக்கார ப-ப-ப-பயல்.

4. கோ—எவ்வளவோ நாளா நாம்ப பஞ்சாங்கக்கார அய்யிரு இல்லாமே கண்ணாலமோ, திதியோ செய்ததல்லே. இப்போ நடுவாந்தரத்துலே இப்புடி தலைசுட்டித்தனமா பேச ஆரம்பிச்சா, நிக்குமா?

(தொடரும்)

S. குருசாமி அய்யர், திருச்சி.

## பச்சைப்புல்லை மாடுகளுக்குத் தீவனத்திற்காகக் காயாமல் பதம் செய்யுமுறை.

பச்சைப் புல் அல்லது பச்சைத்தாள் (பயிர்) இவைகளை பள்ளந் தோண்டியோ அல்லது பூமிக்கு மேலோ அடுக்கிப் பத்திரப்படுத்தி வைத்துப் பின்னால் உபயோகிப்பதற்கு என்ஸிலேஜ் என்று சொல்லப்படுகிறது. முக்கியமாய் அப்படிச் செய்வதெதற்காகவென்றால், மாட்டுத் தீனி ஏராளமாயிருக்கும் காலங்களில் பத்திரமாய் வைத்துப் பின்னால் இல்லாத காலங்களில் உபயோகிக்கவேண்டியே. இது இந்தியாவுக்கு ரொம்பவும் உபயோகப்படும். ஏனென்றால், இந்தியாவில்தான் மாட்டுத்தீனிப் பஞ்சம் அதிகம். டயரிப் பண்ணைகளில் கோடை மாதங்களில் புல் எங்கும் வறண்டுபோன சமயம் சைலேஜ் (பதம் செய்த) தீனியை உபயோகப்படுத்தலாம். அப்படிச் செய்தால் கறவைப் பசுக்கள் பால் குறையாமல் கொடுத்துக்கொண்டேயிருக்கும். மழை காலங்களில் சில ஜில்லாக்களில் புல் ஏராளமாய் உண்டு. அதை அறுத்துக் காயப்போட்டு மாட்டுக்காகப்போர்போட்டு வைக்கிறார்கள், அல்லது விடு மேய்கிறார்கள். புல் பூக்குஞ் சமயம் அறுத்துச் சைலேஜாகப் பத்திரப்படுத்தவேண்டும்.

அதன் நன்மைகள்:—சைலேஜ் செய்வதில் போர் போடுவதைப் பார்க்கிலும் செலவு சொற்பம். தீக்கோளுக்காவது திருடர்கள் பயமாவது அதில் கிடையாது. பின்னால் அது குறையவுமில்லை இப்படிச் செய்வதனால் களைப்புற்கள் மாடு தின்னும் பக்குவமாக ஏற்பட்டுவிடுகிறது. அதனால் களை எடுபட்டுப் போகிறது இந்தச் சைலேஜ் தீனி மாட்டுக்கு ருசியாகவுமிருக்கிறது. இலகுவில் ஜீர்ணமுமாகிறது.

சைலேஜ் செய்யுங் காலம்:—புல் அல்லது தாள் பச்சையாயிருக்கும் எந்தக் காலங்களிலும் செய்யலாம். மழை பெய்துகொண்டிருந்தாலும் செய்யலாம். பச்சையாய் தரையில் நிற்கும்போது மாடு மேயாத எவ்வித களைப் பயிரையும் சைலேஜில் போட்டுப் பின் மாட்டுக்குக் கொடுத்தால் மாடு தின்றுவிடும். புல்லையும் தாள்

பயிரையும் புஷ்பிக்கும்பொழுது அறுக்கவேண்டும். புல் முற்றிக்
கதிர் வாங்கிவிட்டால் சைலேஜுக்கு லாயக்கில்லை. போர்தான்
போடவேண்டும். புல் அறுத்துப் பள்ளத்தில் போடுகிறபொழுது
காய்ந்துவிட்டால் தண்ணீர் கொஞ்சம் தெளித்துக்கொள்ளவேண்டும்.

எந்தெந்தப் பயிர்களை உபயோகப்படுத்தலாமென்பது:—புல்,
பச்சைச் சோளப்பயிர், காராமணிப் பயிர், கினியாப்புல், சூரிய
காந்திச்செடி, மக்காச்சோளப்பயிர், பச்சை ஓட்டு (Oats) பயிர்கள்
ஆகிய இவைகள் சைலேஜுக்கு உதவும். மக்காச் சோளப் பயிர்
தான் மற்றவைகளைப் பார்க்கிலும் சிலாக்கியம். சோளம், காரா
மணி, சூரியகாந்தி இவைகள் கலந்துபோட்டதில் ஹோசூரில்
நன்றாயிருந்தது. சூரிய காந்தி அதிகம் தீனி கொடுக்கிறது. அதைப்
பூக்கும் சமயம் அறுக்கவேண்டும்.

சைலேஜ் பள்ளம் எந்த இடத்தில் தோண்டவேண்டுமேன்
பது:—பயிரிடப்படுகிற பூமியின் ஒரு மூலையில்தான் சைலோப் பள்
ளமிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் காளை வண்டிகொண்டு
அடிக்கிற செலவு மிச்சம். அதிலும் கொஞ்சம் உயர்ந்த மூலையா
யிருக்கவேண்டும் அல்லது மழை காலங்களில் தண்ணீர் (ஊற்று)
ஊறாத இடமாயிருக்கவேண்டும்.

சைலோ எவ்வளவு நாள்வரை இருக்கலாமென்பது:—எவ்வளவு
காலம்வரை சைலோ இருக்கலாமென்பதற்கு ஒரு ரிக்கார்டுகளு
மில்லை. ஆனால், ஹோசூரில் பத்து மாதம்வரை வைக்கப்பட்டிருந்
தது. இங்கிலாந்தில் இரண்டு வருஷம் வரை சைலேஜில் வைத்
திருக்கிறார்கள். அது சிலாக்கியமாகவேயிருந்திருக்கிறது.

சைலோப் பள்ளத்தின் அளவு:—பள்ளங்கள் வட்டமாகவுமிருக்
கலாம். சதுரமாகவுமிருக்கலாம். ஹோசூரில் இரண்டுமுண்டு
சதுரமாயிருப்பதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.
அப்படியிருப்பது பச்சைத்தாளை அந்தப்படியே தரித்துப்போடாத
கேஸ்களுக்கு நயம். அப்படியிருப்பதனால் பின்னால் எடுக்கும்
பொழுது போரில் எடுப்பதுபோல் ஒழுங்காய் சதுரப்பட எடுத்துக்
கொண்டே வரலாம். பள்ளங்கள் அதிகவும் ஆழமாயிருக்கக்
கூடாது. அப்படியிருந்தால் பின்னால் அடிக்கடி எடுக்கும்பொழுது
வேலை அதிகப்படும் அத்துடன் கீழ்வரிசையில் தண்ணீர் ஊற்று
ஏற்பட்டுக் கெட்டுப்போய்விடும்.



சிலர் பள்ளத்தின் சுற்றுப்பக்கங்களில் காரையினால் கட்டிடம்
கட்டுகிறார்கள். அது வேண்டுவதில்லையென்று எனக்குத் தோன்
றுகிறது. ஏனென்றால் முதலில் செலவு அதிகம். இரண்டாவது
அப்படிக் கட்டிவிடுவதினால் சைலோவிலுள்ள அதிக ஈரத்தைப் பக்
கத்திலுள்ள பூமி வாங்குகிறதற்கு ஏதுவில்லாமல் போய்விடுகிறது.
சைலோப் பக்கங்களில் நேர்குத்தாயிருக்கவேண்டும். அப்படியிருந்
தால்தான் எங்கும் ஒரே மாதிரியாய்ப் பாரம் ஏறி ஒன்றுபோலிருக்க
வேண்டும். பூமி மணல்சாரியாகப் பொலபொலத்து மண்ணாயிருந்தால்
சுற்றுப்பக்கங்களுக்குச் சரியாமல் இரும்பு வலையாவது அல்லது தக்க
வேறு ஏற்பாடாவது செய்யவேண்டும்.

மத்திய மாகாணத்தில் சோளம் அல்லது மக்காச்சோளப்
பயிரை அப்படியே துண்டாக்காமல் சைலோ பள்ளத்தில் போட்டு
மறுபடி எடுத்து நிறுத்துப் பார்க்கும்பொழுது, ஒருகன அடி பள்ளத்
தில் இருபது ராத்தல் நிறை இருந்தது. இதிலிருந்து சைலோப் பள்
ளம் ஒரு பூமிப் பயிருக்கு எவ்வளவு வேண்டுமென்பதாகத் தெரிந்து
கொள்ளலாம். உதாரணமாக, மூன்று ஏக்கரில் சோளப் பயிர்
சுமாராக முன்னூறு மணங்கு ஆகுமென்றால் அதற்கு 1,200 கன
அடியுள்ள பள்ளம் வேண்டும். அடியிற் குறிப்பிட்டுள்ள அளவுப்
படி ஒரு சைலோப் பள்ளமிருந்தால் போதும்: அதாவது—

15 அடி நீளம், 10 அடி அகலம், 8 அடி ஆழம்.

மேற்கண்ட அளவுப்படி ஒரு பள்ளம் உண்டுபண்ணுவதற்கு
இச்சென்னை இராஜதானியில் பல இடங்களில் பலவிதமான ரேட்டு
களிருந்தாலும் சுமார் பத்து ரூபாய் அடங்கும்.

பயிர்களை அறுத்துப் பள்ளத்திலிடும் சமயம் புல்லையும் பச்சை
நாத்தையும் பூவாயிருக்கும் சமயம் அறுக்கவேண்டும். அதற்கு
பிந்தக்கூடாது. மக்காச்சோளம் பயிரை மணிப்பிடிச் சமயம் அறுக்
கவேண்டும். பச்சைச்சோளநாத்தை அறுத்தவுடன் அட்டி
யண்ணியில் காய்ந்துபோகவிடாமல் பள்ளத்தில் சேர்க்கவேண்டும்.
சில பயிர்கள் அறுக்குமுன்னமே முதிர்ந்து காய்ந்து போயிருந்
தால் பள்ளத்தில் போடும்பொழுது தண்ணீர் தெளித்துக்கொள்ள
லாம். அல்லது வேறு ஒரு ஈரச்சத்துள்ள பயிர் கிடைத்தால்
அதைக் கலந்து போடலாம். பள்ளத்தில் பயிர்கள் நெருங்கிச்
சேர்ந்து இறுகச் செய்வதற்கு ஒரு ஜதை மாடுகொண்டு மிதிக்க

விடலாம், அல்லது கூலி ஆள்கொண்டு மிதிக்கவிடவேண்டும். பள்ளத்தின் பக்கங்களிலும் மூலைகளிலும் நன்றாய் மிதிக்கவேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் எடுக்கும்பொழுது சேதம் அதிகமிருக்கும். ஒரு தட்டை வெட்டும் மிஷின் கொண்டு தரித்துப்போட்டால் அடை சேர்ந்து விடுமாதலால் ரொம்பவும் நல்லது. ஆனால் அது அவ்வளவு அத்திய அவசியமில்லை. பள்ளம் பூராவும் நிரம்பித் தரைமட்டத்துக்கு 2 அல்லது 3 அடிக்கு மேலே வரும் வரையும் பயிரைப்போட்டு நிரப்பி மிதித்து வைக்கவேண்டும்.

---

## வள்ளல்பாரி.

(382-ம் பக்கத் தொடர்ச்சி)

### பூங்கொடியின் ஏங்கல்.

---

இரப்போர்க் கீந்து, என்றும் வாடாத செஞ்சொற்பாமாலை பெற்று, அழியாப்புகழ் எய்திய பறம்புநகர்க் கோமானாகிய பாரி மன்னன் முன் நடக்கவும், மணாளனைத் தவிர மற்றொருவரை மனத்திலும் நாடாத ருக்மணியையும், நமனிடமிருந்து நாயகன் உயிரை, மீட்டுவந்த சாவித்திரியையும், காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த சீதாதேவியையும், தந்தை வீட்டில் எல்லாச்சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவும், எண்ணிக் காலங் கழித்துவந்த தமயந்தியையும், கள்ளம் என்பதை எள்ளளவும் உணராத தன்னைக்கூடிப் பிரிந்து ஆண்டுகளாயும், கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்ட சகுந்தலையையும், மாதவிக்குத் தானளித்த வாக்குறுதி தவறிவிட்டதே என்று வருந்தி மெலிந்து, வட்டித்த அன்னத்தை உண்ணாமல் வைத்தெழுந்த மணாளனது வருத்தந்தீர, மங்கைப் பிராயத்தையும் மறந்து, அலங்காரத்தையுந் துறந்து, துன்பத்தைக் கருதாது, கொண்டவனுடன் சென்று, காற்சிலம்பைக் கழற்றிக் கையிற் கொடுத்து இதை விற்றுத் தங்கள் காதற் கிழத்தியின் கடனை யகற்றுவீர்! என்று கனிமொழி புகன்று, கண்ணாளன் துயரகற்றிய கண்ணகி முதலிய புண்ணிய வதிகளையும் நிகர்த்த ஸ்திரீ ரத்னமாகிய, குலமகளாம் கோம



கள், மங்கையற்கரசி, வள்ளலின்பாரி, பொன்னம்பூங்கொடியாள், கற்பரசியர் புகழுங்காந்தை, நந்தகோன்நங்கை, கமலமலரைநிகர்த்தகால்கள் நோவ, பொற்பதுமையோ! பூமகளோ! வென' அன்னமும், அரம்பையரும்நாண, கந்தருவமாதரும் இவளழகைக்கண்டு காதல்கொள்ள, கண்ணுக்குட்கண்மணிபோல், கண்மணிக்குட்பாவையைப்போல், பெண்ணுக்குப்பெண் ஆசைகொள்ளும் பெண்ணரசி! தோழிப்பெண்கள் இருமங்கும் கைகோர்த்துக்கொண்டு மான் கூட்டம் போல சூழ்ந்துவர, இளநடையுடனும் வீணை தாங்கிய கரத்துடனும் மன்னர் பிரான் பின்நடக்கவும், மாலைக்காலத்துமல்லிகையுடன் முல்லைத்தென்றல் ஜில்லென்று வீச, இயற்கையழகும் செயற்கையழகும் நிறைந்து, தேவருலகத்திருக்கும் சிங்காரப்பூங்காவைப் பழிக்கும் மாமலர்க்காவில் உல்லாசமாகச்சுற்றினார்கள்.

சுற்றி வருங்கால் சுற்றிச் சுற்று நோக்கவும் அப்பூம்பொழிலில் விண்மீன்களைப் போன்று மலர்கள் வரிசை வரிசையாக மலர்ந்திருக்கவும், அதிலுள்ள மகரந்தங்களாகிய பூந்தாதுக்களை அம்மலையிலுள்ள தேனீக்களும் பிறமலைகளிலும் வனங்களிலுமுள்ள தேனீக்களும் வாரிவாரிச்செல்லவும், மலராத மொக்குகள் கொத்துக் கொத்தாய்த் தூக்கணாங்குருவியின் கூடுபோன்று தொங்கிக்கொண்டிருப்பதும். அதைத்தாங்கும் ஆற்றலில்லாமலும், கொழுகொம்பில்லாமலும், மன்றல் கமழுந்தென்றல் மொத்துண்டு அலைக்கப்பெற்றுத் துவண்டு துவண்டு வீழ்ந்து வீழ்ந்து ஊஞ்சலாடுவது போலாடி, மீண்டும் நிமிர்வதும் வீழ்வதுமாகிய, ஓர் முல்லைக்கொடி வருந்துவதை எமது வள்ளற்பிரான் கண்ணுறக்கண்டான்.

துவண்டு துவண்டு ஊசலாடும் முல்லைக்கொடியைக்காண்டலும், கனவோ நனவோவெனத்திகைத்தான், உடல்சிலிர்த்து மயிர்க்கூச்செறிய மனங்குழைந்தான், மெய்மறந்தான், மங்கையர்தேற்ற மன்னன் மனந்தேறினான், அஷ்டாக்ஷரத்தை உச்சரித்தான், ஹரி கரி! என்றான், தாரகமந்திரமாகிய ராமநாமத்தை ஒரு முறையல்ல பலமுறை உச்சரித்தான், அதன் துயரை அடுத்தறிகுவோமென்றெண்ணி அண்டையிற் சென்று நின்றான்.

அங்ஙனஞ்சென்ற இறைவனைப் பார்த்து முல்லைக்கொடியானது யாசிப்போரைப்போன்று ஆ! ஆ! வருந்தினோரை யாதரிக்கும் வள்ளால்! ஆ மங்கையே! கோபாலன்குல திலகமே! ஓ யாதவேந்திரா!

அந்தோ! பறம்பாளும் ஏ பாரி! நானோ ஏற்பாரின்றி இறங்குகின்றேன்! காப்பாரின்றிக் கலங்குகின்றேன்! ஐயகோ துணையற்ற பாவியானேன்! ஓ யதுகுல தீபமே! முல்லைத்துறையே! ஏ முருகா! களங்கமற்ற சந்திரவம்சத்துக் கண்ணா! சக்கரத்தார் புவி முழுதும் ஆண்டவளன் சந்ததியில் வந்த மன்னா! என் துயர்களை இது தவிராய்! வந்தென்னைக் காவாய்! மூவுலகமும் புகழும் முதல்வா! தேவருளமகிழும் செல்வா! பூவுலகையாளும் புண்ணியா! காவலர்கள் கைதொழும் கண்ணியா! நாவலர்கள் விரும்பும் நண்பனே! பாவலர்கட்கருளும் அன்பனே! நின் ஆட்சியில் யான் கவலுதல் நன்றோ? கார்மேகமும் வியக்கும் மையோனே! பூமியைப்போன்று பிரதிபயன் கருதாத பூமானே! ஆநிரை காத்தோன்றன் அன்பே! அண்டினோரைக்காக்கும் அரசே! கோகுலத்துதித்த கோமானே! பூபாலர்கள் மெச்சும் பூமானே! பாற்குடி விளங்க வந்த சீமானே! பாராயோ என்னை நீ பார்த்திபா!

என் கவலையை யகற்றாய் கண்ணா! உன்னைக்காண என்ன தவஞ் செய்தேனோ அண்ணா! நான்முகனானவன் எனக்குற்ற துயரம் நீக்கவே நின்னைச்சிருஷ்டித்து இங்கனுப்பினனோ! யான் என்னென்றியம்புவேன்! தேற்றுவாரில்லாது தியங்குகின்றேன்! ஆற்றுவாரில்லாது அழுகின்றேன்! ஐயையோ! அலமருகின்றேன்! ஆ அண்ணலே! உன்னையன்றி இக்குற்றதுணையேது! நேயரே! நீர் தர்மசிந்தையுள்ளவரா? ஆமெனின் தாம் செய்யவேண்டிய முற்காரியம் இச்சமயம் என்னைக்காத்தலே! நானுன் அடைக்கலம்! நானுன் அடைக்கலம்! தஞ்சமடைந்தோரை அஞ்சேல் என்று தரிப்பது நின்போன்ற தகுதியுள்ளோர்கடமையன்றோ? அன்பின் உருவே! ஆயர்தங்கொழுந்தே! ஐயா! என் அல்லல் அகற்றுவாய் வள்ளால்! என முறையிடல் போற்றோன்றவே, ஔவைப் பிராட்டியாரின் அருந்தமிழாலும், அடியார்க்கடியாராகிய பரவை நாச்சியாரின் பாகனார் பைந்தமிழாலும், பாரதியின் வீரத்தமிழாலும் பாராட்டப் பட்டதன்றி அருணையம் பதியில் அருட்கவியாகியும், வரப்பிரசாதியுமாக எழுந்தருளியிரா நின்ற அருணகிரிநாதரால் தமது திருப்புகழில் 'வண்புகழ்ப்பாரி சாரி என்றிசைவாது கூறி' மென்னும்,

(தொடரும்)

காந்திதாசன், பர்மா.

# யாதவ வாலிப சங்கம்.

## நான்காவது கிளைச்சங்கஸ்தாபனம்.

---

யாதவ வாலிப சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை ஜார்ஜ்டவுன் ப்ராக்ரஸிவ் யூனியன் ஸ்கூலில் நான்காவது கிளைச்சங்கஸ்தாபனம் செய்ய ஒரு யாதவப் பொதுக்கூட்டம் ஸ்ரீமான் டி. எஸ். வேணுநாதக்கோன் எப். ஸி. ஐ. எம். ஆர். ஏ. எஸ். அவர்களின் தலைமையின் கீழ்க்கூடியது.

தலைவர் முன்னுரையில் இம்மாதிரி கிளைச்சங்கங்கள் ஸ்தாபனம் செய்யப்படுவதால் யாதவமக்களிடம் ஓர் புதிய உணர்ச்சி ஏற்பட்டு தூங்கிக்கொண்டிருந்த அவர்கள் பரபரப்புடன் வேலைசெய்யத் தொடங்கிவிட்டதைப்பற்றி மகிழ்வதாகச்சொன்னார். பின்னும் பதினாறரைலக்ஷம் மக்கள் உள்ள யாதவசமூகத்தில் 5000 பேர்கள் ஆங்கிலேயம் படித்திருப்பதைப்பற்றியும் இந்தச் சொல்ப நபர்களுக்கும் தகுந்த உத்தியோகங்கள் கிடைக்காமலிருப்பதைப்பற்றியும் குறிப்பிட்டுவிட்டு இம்மாதிரி சங்கங்கள் இந்த ராஜதானியில் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டு யாதவர்களை படிக்கச்செய்தாலன்றி நம் சமூகம் முன்னேற்றமடையவழியில்லை என்று சொன்னார்.

டி. எஸ். சரஸ் ஒவ்வொரு கிளைச் சங்கமும் உடனே வாசகசாலை திறக்கவேண்டுமென்றும் அதனால் யாதவர்கள் ஒருவரையொருவர் சீக்கிரத்தில் அறிமுகம் செய்துகொள்ளமுடியுமென்றும் ஒவ்வொரு கிளைச்சங்கத்திலும் வாரம் ஓர்முறை கூட்டம் கூடிப் படிக்காத மக்களுக்குப் படிப்பின் அவசியத்தையும் இக்குலஸ்திதியையும் அறிவிக்கவேண்டுமென்றும் சொன்னார்.

ஸ்ரீமான் பண்டிதர் எம். வி. வேணுகோபால் பிள்ளை தமது நீண்ட உரையில் இச்சங்கத்தின் கொள்கைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார்.

ஸ்ரீமான் ஸி. வி. முனுசாமி பிள்ளை யாதவகுலத்தின் பெருமையைப் பற்றியும் அக்குலத்தின் மக்கள் இடையர் அல்லது யாதவர் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுவதைப் பற்றியும் விசனித்து அவ்வாறு கருதுவதற்கு யாதொரு காரணமும் இல்லையென்றும் கூசாமல் வெளியில் கூறலாம் என்றும் தெளிவாக உரைத்தார்.

ஸ்ரீமான், பி. பட்டாபிராம் பிள்ளை பி. ஏ. சில வாரங்களுக்கு முன் ஜார்ஜ் டவுனில் ஏற்படுத்தப்பட்ட ஓர் சங்கத்தில் அங்கத்தினராய் இருந்தனரென்றும் ஆனால் அச்சங்கத்தின் கொள்கைகள் யாதவ மக்களுக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கவில்லை யாகையால் அதை விட்டுப் பெரிதும் ஊக்கத்துடன் வேலை செய்யும் இச் சங்கத்தில் சேரத்தான் வந்ததாகவும் மற்றவர்கள் யாவரும் இச்சங்கத்திற்கு உதவி புரிய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமான், சி. வி. திருவேங்கடம் பிள்ளை அவர்கள் நம் யாதவ குல மக்களுக்காகக் கூட்டுறவு பாங்குகள் ஸ்தாபனம் செய்து தற்போது பால்மறுத்த பசுக்களை அடிமாட்டுக்குச் சொற்பவிலைக்கு விற்பதை ஒழித்து புதுப் பசுமாடுகளை வாங்க உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான், சி. டி. ராமலிங்கம் பிள்ளை யாதவர்களெல்லாம் ஒத்துழைத்து தங்களாலான தேகச்சகாயமும், பணச்சகாயமும் செய்தாலன்றி நம் குலம் முன்னேற்றமடைய வேறு எந்தவகையிலும் வழி இல்லை என்றும் சொன்னார்.

பிறகு ஜார்ஜ் டவுனில் இச்சங்கத்தின் நான்காவது கிளைச் சங்கம் ஸ்தாபனம் செய்யப்பட்டுக் கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்:—ஸ்ரீமான், ஸி. வி. முனுசாமி பிள்ளை.

உபதலைவர்:—பி. ராமகிருஷ்ணப் பிள்ளை. [பி.ஏ

காரியதரிசிகள்.—ஸ்ரீமான்கள், எம். பாலசுப்பிரமணியம்பிள்ளை சி. ராஜமன்னார்.

பொக்கிஷதார்:—ஏ. துரைசாமி பிள்ளை.

கமிட்டி அங்கத்தினர்கள்:—ஸ்ரீமான்கள், பி. பட்டாபிராம் பிள்ளை, பி. ஏ. பி. ஜெனார்தனம் நாயுடு, ஆர். என். சுப்பு கிருஷ்ணப் பிள்ளை, பி. நவனீதம்.

தலைவர் முடிவுரையில் இடையன் என்ற பெயரின் வரலாற்றையும் சிறப்பையும் பற்றி விவரித்துப்பேசப் பெயராகப்பட்டது.

பிறகு ஸ்ரீமான், ஸி. ராஜமன்னார் அவர்கள் குழுமிய அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

---

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 2 | பிரமோதூத௵ புரட்டாசி௴<br>1930-௵ செப்டம்பர்-௴ | பகுதி 2 |
|---|---|---|

### கடவுள் வணக்கம்.

மஞ்சாடு வரை யேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த வீசன்றன்னை,
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத்தென்பால்
தூயநான்மறை யாளர் சோமுச் செய்ய,
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே

---

## வேளாண்மையில் உரமிடுதல்.

(Fertilizers in agriculture.)

### முகவுரை.

உலகத்தின் கண் வசிக்கும் மானிடவர்க்கங்களின் வாழ்க்கைக்கு உணவுப்பொருள்கள் மிகவும் அத்யாவசியமாயிருக்கின்றன. இவ்வுணவுப் பொருள்கள் எப்பொழுதும், அதிகமாய் விளைவதற்கு நிலம் மிகவும் செழிப்பாயிருப்பதவசியமல்லவா? உலகத்தில் வாழும் ஜனங்களின் தொகை மென்மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. 1913-ல் உலக ஜனத்தொகை 1,786,000,000; ஆனால் 1924-ல ஜனத்தொகை 1,853,000,000 இப்படி அதிகரித்துக் கொண்டேபோகும் ஜனத்தொகைக்கு உணவுப் பொருள்களும் அதிகமாய் விளைந்துகொண்டே போவதவசியமாயிருக்கிறது. நமது

புண்ணிய பூமியின்கண் வாழும் மக்கள் செழித்து மிக்க சந்தோ
ஷமாய் வாழ்வதற்குப் பூமிதேவி மிகவும் செழிப்படைந்து
வேளாண்மையில் முன்னேற்றமடைய வேண்டியது மிகவும் அவ
சியமாயிருப்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தியாவில் நிலங்
களைச் செழிப்பாக்கத் தெரியாமல் அநேக நிலங்கள் விளைவின்றித்
தரிசுகளாயிருப்பது யாவரும் தெரிந்த விஷயம். நிலத்திற்குத்
தகுந்த உரங்களை அளவுடன் காலாகாலங்களில் சேர்க்காமல் நிலங்
கள் விளைவில் க்ஷீண திசையடைந்து பாழாய்க்கிடக்க நேரிடுகிறது.
இந்தியாவில் அநேகர் தங்கள் நிலங்களில் ஏதாவதொரு பயிரை
விளைப்பதும் அதனால் உண்டாகும் வெகு சொற்பமான விளை
வைப்பெற்று, "கடந்தவருஷம் அதிகம் கண்டது, இவ்வருஷம்
விளைவு மிகவும் குறைந்து விட்டதே" என்று மாத்திரம் சொல்
லிக்கொள்வார்கள். ஆனால் நிலத்தைச் செழிப்பாக்கும் வழி தெரி
யாமல் மென்மேலும் நிலத்தைப் பயிர் செய்துகொண்டேபோய்க்
கடைசியாக நிலம் உபயோகமற்றுக்கிடக்க நேரிடுகிறது.

வெகு காலத்திலிருந்தே நம் தேசத்தில் நிலங்களைச் செழிப்
பாக்குவதற்கு ஆடுமாடுகளின் உரங்களைச் சேர்த்து வந்திருக்கின்
றனர். இவ்வுரம் நிலத்தின் மண்ணை இலேசாக்கிக் காற்று, தண்
ணீர் முதலியவைகள் போக்குவரத்துக்கான துவாரங்களையமைத்து
விடுகிறது. இவ்விதமாய் மண்ணைச் செம்மைப் படுத்துவதல்லாமல்
மண்ணின்சாரத்தையும்அதிகரிக்கச்செய்கிறது.பயிர்கள்விளையவிளைய
நிலத்தின்சாரம் அல்லது உணவு குறைந்துபோய் விடுகிறது. ஆத
லால் பயிர்களுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுக்கத் தகுந்த
உரங்களை நிலத்தில் சேர்க்கவேண்டும். தகுந்த உரங்களைச் சேர்த்துப்
பயிர்களுக்குவேண்டிய உணவுகளை உண்டாக்கா விட்டால் விளைவு
குறைந்துகொண்டே போகுமென்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.
பயிர்கள் நன்றாய் விளைவதற்கு முக்கியமாய் உப்புவாயு (?)
(Nitrogen), ஜலவாயு (Hydrogen), பிராணவாயு (Oxygen),
கரியமிலவாயு (Carbon dioxide), கந்தகம் (Sulphur), மரஉப்பு
(Potash), எரியும் கந்தகம் (Phosphorus), ஓர்வித காந்தமண்
(Magnesium), 'கால்சியம்' (Calcium), இரும்புகலந்தமண் முத
லியவைகள் அவசியமாய் வேண்டியதாக ஆராயப்பட்டிருக்கிறது.
இவைகள் மண்ணில் பலவித அளவுடன் கலந்திருக்கின்றன. பிரா
ணவாயு, கரியமிலவாயு, உப்புவாயு, (?) இவைகள் ஆகாயத்திலும்



காணப்படுகின்றன. ஆனால் பயிர்களின் இலைகள் வெளிச்சத்தின்
உதவியால் கரியமிலவாயுவை மாத்திரம் இலேசாய் கிரகித்துக்
கொள்கிறது. நிலத்தின் இயற்கையான செழிப்பையும், விளை
வையும் நிலைநிறுத்துவதற்குப் பயிர்கள் செலவழிக்கும் உணவுப்
பொருள்களை நாம் பலவித உரங்களால் நிலத்திற்குச் சேர்த்துவர
வேண்டிய தவசியமல்லவா?

## உரங்களின் வகை.

உரங்கள் இயற்கை உரம், செயற்கை உரம் என இருவகை
யாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை உரம் அநேகமாய்
மிருகம், பட்சி, செடி முதலிய இனங்களால் உதவப்படுகின்றன.
இவைகளின் முக்கியவேலை நிலத்தின் மண்ணைச் சீர்படுத்திக்
கொஞ்சம் உணவளிப்பதே. இந்த உரம் நிலத்தைச் சேர்ந்த உடன்
அழுகிக் கரியமிலவாயு உண்டாகின்றது. இந்த வாயு நிலத்தில்
தண்ணீரோடு கலவாமல் கிடக்கும் உலோக உணவுகளை தண்ணீ
ரோடுகலந்து கொள்ளும்படி செய்து, பயிர்கள் இவ்வுணவுகளை
இலேசாகக் கிரகித்துக்கொள்ளும்படி உதவுகிறது. இரண்டாவ
தாக இயற்கை உரங்கள், நிலத்தின் மண் தண்ணீரைத் தன்னுள்
ளடக்கி வைத்துக்கொள்ளுஞ் சக்தியை அதிகரிக்கச்செய்கிறது.
கடைசியாகக் களிமண்ணின் கனத்தையும், ஒட்டும் தன்மையையும்
போக்கிக் காற்று உட்செல்லுமாறு சிற்சிறு துவாரங்களை ஏற்படுத்தி
விடுகிறது. ஆதலால் இயற்கை உரங்கள் சிறிது உணவளிப்பதல்லாம
லும் நிலத்தின் மண்ணையுமிருதுவாக்கி விடுகிறது.

செயற்கைஉரம் அநேகமாய் உப்புவகையைச் சேர்ந்தது;
இவைகள் மேனாடுகளில் அதிகமாய்ச் செய்யப் படுகின்றன. சில
சமயம் பூமியிலிருந்தும் வெட்டியெடுத்துச் சுத்தமாக்கப் படுகின்றன.
இவைகள் பயிர்களுக்கு நல்ல உணவாகி அவைகள் ஆகாயத்திலி
ருந்து, இலேசாய் அதிகமாய் உட்கொள்ள முடியாத உப்புவாயு
(?) முதலிய காற்றுகளை வேர்களின் மூலமாய் உதவுகின்றன. சல்
லிவேர்களை உறுதிப்படுத்துகிறது. இளம்பயிர்களைச் சீக்கிரம் பக்கு
வப்படுத்துகிறது. பயிர்களின் விளைவை உயர்வாகவும், அதிகமாக
வும் உண்டாக்குகிறது.

## இயற்கை உரம்.

மந்தை உரம்:—இவ்வுரம் ஆடு, மாடு, எருமை, குதிரை முதலிய வீட்டு மிருகங்களின் சாணம் சிறு நீர் முதலிய கழிவான வஸ்துக்களடங்கியது. இவ்வுரத்தின் உயர்ந்த தன்மை மிருகங்களின் வயதைப் பொறுத்ததாயிருக்கிறது. மந்தை உரத்தில் உப்பு வாயு (Nitrogen) அதிகமுளது. இந்த வாயுவை வயது முதிர்ந்த மிருகங்கள் தங்கள் ஆகாரத்திலிருந்து வெகு கொஞ்சம் கிரகித்துக் கொள்வதால் அவைகளின் சாணம் உப்பு வாயுவில் நிறைந்ததாயிருக்கிறது. இரண்டாவதாக இவ்வுரம் மிருகங்கள் உண்ணும் உணவையும் தாங்கி நிற்கிறது. பிண்ணாக்கு உண்ணும் மிருகங்களின் சாணம் மிகவும் உயர்ந்தது. மாட்டுச் சாணத்தைவிட அதின் சிறு நீரே மிகச் சிறந்தது. இவ்வுண்மையை அறியாத அநேகர் சிறுநீரை வீணாக்கிவிடுகின்றனர். மாட்டுச் சாணத்தைவிடக் குதிரைச் சாணம் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. குதிரைச் சாணத்தில் தண்ணீர் அதிகமிராது. சீக்கிரம் உலர்ந்து அழுகிவிடுகிறது. இது கூழாயிராமல் பொலுபொலுப்பாயிருக்கிறது. குதிரை அல்லது ஆடு மாடுகளின் சிறுநீர் ஒருவிதப் புளிப்பு திராவக (Hippuric acid) த்தை மிகுதியாயுடையது. இதில் பயிர்களுக்கு வேண்டிய உப்புவாயு அதிகமாகக் கிடைக்கிறது. பறவைகளின் கழிவுகளும் நல்ல உரமாகிறது. மாட்டுச் சாணத்தை அநேகவிடங்களில் நெருப்புக்காக உபயோகித்து எரிந்த சாம்பலை உரமாகச் சேர்த்து வைக்கிறார்கள். இப்படிச் செய்வதில் உரமாக உள்ள முக்கிய பாகத்தைப் போக்கடித்துவிடுவதை யறிகிறார்களில்லை.

மந்தைஉரம் காற்று, வெளிச்சம் முதலியவைகளால் சாரத்தை அதிகம் இழந்து விடுகிறதில்லை. ஆனால் மழைத் தண்ணீரால் குவிந்திருக்கும் மந்தை உரத்தின் சாரம் அடித்துக்கொண்டு போகப்படுகிறது. குவிந்திருக்கும் மந்தை உரத்தில் சில சமயம் கருமையான நீர் பக்கங்களில் வடிந்தோடுவதைக் காணலாம். இந்நீர் உப்புவாயு (Nitrogen) எரியும் கந்தகத்திராவகம் (Phosphoric acid) மர உப்பு (Potash) முதலிய பயிர்களுக்கு அத்யாவசியமான உணவுகளடங்கியது. இந்நீரைக் கவனமாய்ச் சேர்த்துவைக்காமல் மண்ணில் வீணாகக் கலந்து கொள்ளும்படி செய்கின்றனர். மந்தை உரத்தை வெகுகாலம் குவியலாக மழை, காற்று முதலியவைகளின் செய்கைகளுக்காளாக்கி வைத்திருப்பதைப் பார்க்கிலும் உடனே



கொண்டுபோய் நிலத்தின் மண்ணோடு கலந்து விடுவது உத்தமமாகும். இப்படிச் சேர்த்தவுடன் மழைபெய்து உரத்தின் சாரம் கீழ் சென்று மண்ணோடு நன்றாய்க் கலந்துகொண்டு பத்திரமாய்ப் பயிர்களுக்காகத் தங்கியிருக்கிறது. களிமண் தரையில் உழுவதற்குச் சுமார் ஆறு மாதங்கள்வரை உரத்தைப் பரப்பிவரலாம். ஆனால் மணல் பூமிகளில் உரம் நன்றாய் அழுகினபிறகு பயிரிடப் போகும்போது மாத்திரம் சேர்த்து விடுவது நலம்.

ஒரு ஆழமான பள்ளம் வெட்டி நன்றாய் உலர்ந்த மண்ணில் தழைகளை நன்றாய்ப் பரப்பி அவைகளின் மேல் மந்தை உரத்தைச் சேர்த்துவர வேண்டும். கொஞ்சம் சேர்ந்தவுடன் மண்ணை மேலே பரப்பி மூடிவிடவேண்டும். பிறகு அடுத்தநாள் அதற்குமேல் சேர்த்து வரவேண்டும். இப்படி அடுக்கடுக்காய்ச் சேர்த்துப் பள்ளம் நிறைந்ததன் மேலே மண்ணை நன்றாய்ப்பரப்பி மழை அதன் மீது விழாமல் சிறுபந்தல் கட்டிவிட வேண்டும். மந்தை உரம் எல்லாப் பயிர்களுக்கும் உபயோகமாகிறது. (தொடரும்.)

K. G. கிருஷ்ணன், B. Sc. (Hons), M.R.A.S.

---

## தசாவதாரங்கள்.

(371-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனிதனுடைய இயல்பைப் பற்றியும் தசாவதாரத்தைப்பற்றியும் ஆராயுமிடத்து ஒற்றுமை உண்டென்பது சிலர் கூற்று. அதையும் ஒருவாறு சுருக்கித் தெரிவிக்கலாமென்று எண்ணுகிறேன். தசாவதாரங்களில் முதன்மையான மச்சாவதாரம் மனிதனுடைய சிசுப்பிராயத்திற்கு ஒத்ததாக இருக்கிறது என்பது சிலர்கொள்கை. ஒற்றுமையென்னவெனில் சிசு தனது பஞ்சேந்திரியங்களின் வழி ஐயமே அச்சமோ இல்லாமல் செல்லுகிறது. அதுபோல மச்சமும் வெள்ளம் போகும் வழியாகத் தனக்கு ஆபத்துவிளைவிக்கும் வழியையும் அறிந்துகொள்ளாமல் போகிறது. தன் நாக்கிற்கு இனியதெனஎண்ணித் தூண்டிற் புழுவை விழுங்கிச்சாகிறது. இங்ஙனம் மனிதன் அச்சமின்றி வாழ்வு நடத்தினதால் பல ஆபத்துக் குள்ளாகி அச்

சத்தை மேற்கொள்ளத் தொடங்கினான். சிசுப்பிராயங்கழிந்து
பாலப்பருவம் அச்சத்தோடு காணப்படுகிறது. அச்சத்தால் சிறுவர்
கள் தமது புலன்களை அடக்கி ஒடுக்கி இருப்பதுபோலவே கூர்மமும்
தனது தலையையும் கால்களையும் ஓட்டிற்குள் ஒடுக்கி வைத்துக்கொண்
டிருக்கிறது. இது கூர்மாவதாரத்தைப் பற்றிய கொள்கையாகும்.
அச்சத்தைக் கொண்டு வாழ்ந்து வரும் சிறுவன் தனது பாலபருவம்
தாண்டி குமாரபருவத்திலே ஏனைய சிறுவர்களோடு அடிக்கடி சண்
டையிட்டுக்கொள்வது வழக்கம். இது வராகாவதாரத்தின் தன்மை
யோடு ஒத்ததென எண்ணப்பட்டுவருகிறது. பன்றிக்கு எப்போ
தும் போரிடும் இயல்புண்டு. கௌமாரப்பருவம் நீங்கி யௌவன பரு
வம் ஆன உடன் பகையை வெல்லும் சக்தி உண்டாகிறது. நரசிங்க
அவதாரம் அதை உணர்த்துகிறது. பகைவெல்லப் போர் செய்
யும் முறையைவிட்டுப் புத்தியால் வெல்லும் இயல்பைக் காட்டு
வதே வாமனாவதாரம். வாமனன் தனது புத்தி கூர்மையால் மூவடி
யாக உலகை எல்லாம் அடக்கினது இதற்குச் சான்றாகிறது.
இது தனது சக்தியால் எதிர்க்கமுடியாத பெரிய சக்தியையும் எதிர்க்
கத்திறமை உண்டென வெளியாக்குகிறது. இங்ஙனம் முதிர்ச்சி
பெற்ற புத்தி சக்தி கழிந்தகாலத்தைப் பற்றியும் வருங்காலத்தைப்
பற்றியு முள்ள தமது பகையைப் பொருது கெடுக்க மனிதன் எண்
ணுகிறான் என்பதினைப் பரசுராமவதாரம் புலப்படுத்துகிறது. பரசுரா
மன் க்ஷத்திரிய குலத்தை வேரறுத்த வரலாறு இதனை விளக்கு
கிறது. உலகில் இங்ஙனம் பகைவரை அவரவர்கள் கெடுக்க முயலும்
வேளைகளில் நல்லவர்களுக்கு நன்மையும் கெட்டவர்களுக்குக் கேடும்
செய்ய எண்ணுவது மனிதனியல்பு என்பதினை ஸ்ரீ இராமாவதாரம்
எடுத்துக் காட்டுகிறது. இதன் வரலாற்றை விளக்கவேண்டுவதில்லை.
அதர்மம் ஓங்கி வளரும்போது அதை நசுக்க உற்றார் உறவினர் என்ப
தைக் கூட நினையாமல் தமது கடமையைச் செய்ய வேண்டுமென்
பதை ஸ்ரீகிருஷ்ணாவதாரம் சிறப்பாக நமக்கு அறிவிக்கிறது. பாரபக்ஷ
மில்லாமல் நீதிசெலுத்துவதே இதன் கருத்து. ஸ்ரீராமாவதாரம் வரை
யிலும் கூறின கொள்கைகளை உலகில் மானிடர்கள் செய்து வருகி
றார்கள், ஸ்ரீகிருஷ்ணாவதாரச் செய்கைகளைச் செய்பவர் இல்லை அடுத்
தபடியாக கூறப்போகும் அவதாரங்களின் நலங்களையும் ஒத்து ஒழு
குபவர்கள் ஒருவருமில்லை எனலாம். புத்தாவதாரம் போர் செய்து
பகை வெல்வதைவிட அன்பு நெறியால் வெல்லலாம் என்பதைக்



காட்டியது. எவ்வுயிர்களிடத்திலும் அன்பும் சமத்துவமும் நிலவ
வேண்டுமென ஏற்பட்டது. பத்தாவது அவதாரமாகிய கல்கியோ
எனில் எவ்வுயிரும் அன்புமயமாகவே இருக்கின்றன என்ற கொள்
கையை உடையது. இது இனிமேல்தான் உண்டாகப்போவதாகக்
கூறுவதால் அதைப்பற்றிச் சிந்திக்கப் போகவேண்டாம். இங்ஙனம்
தசாவதாரங்கள் சிசுப்பிராயத்திலிருந்து மனிதனுடைய வாழ்க்
கையை விளக்குகிறது என்பதை ஒருவாறு அறிந்து கொண்டோம்.

கீதையில் கண்ணன் "அறம் அருகி மறம் மலியும்போது நான்
அவதாரஞ் செய்கிறேன்." என்று கூறியுள்ளார். அறமாவது ஜீவாத்
மா தனது பெரும் பேறாகிய முக்திக்கு (இரண்டறக் கலத்தல்) செய்
யும் முயற்சிக்கு அனுகூலமாக விருப்பது அறம். பிரதிகூலமாக
இருப்பது மறம். பிறப்பு இறப்புக்களில் ஆழ்ந்து அறியாமையைக்
கொண்ட ஜீவாத்மா சிறிதுசிறிதாக அறிவுவாய்ந்து பூரணஞான
முடையதாகிப் பிரம்மத்தோடு இரண்டறக்கலந்து பிரம்மமாக
விளங்குவதே முத்தி. சூட்சுமத்திலிருந்து தூலத்திற்குப் போவதும்
பின் தூலத்திலிருந்து சூட்சுமத்திற்குப் போவதுமாகி மாறி வரும்
உலகியலில் ஜீவாத்மா தள்ளுண்டு தூலமே பெருகி வருகிறது. இத
னால் பிரகிருதி பலப்படுகிறது. புருஷன் அதற்கு வசமாகிறான். இத
னால் ஆன்மசக்தி நெருக்குண்டு குன்றுகிறது. இதிலிருந்து ஜீவாத்மா
தமது கதியை திருப்பிக் கொள்ளுகிறது. ஜீவாத்மா தூலமாகிய பிர
கிருதித்தன்மையை விட்டுச் சூட்சுமமாகிய ஆன்மத் தன்மையை
வளர்த்துக்கொள்ள வழிதேடுகிறது. இவ்வேளையில் தூலமாகிய பிர
கிருதி பெருந்தடை செய்கிறது. தன் முன்னேற்றத்திற்கு முயலும்
ஜீவாத்மா பிரகிருதியால் தடைப்பட்டு தத்தளிக்கிறது. இந்த நெருக்
கடியான காலத்திலேதான் அவதாரம் உண்டாகிறது. ஜீவாத்மா
அவதாரத்தால் தன் குறிக் கோளை நாடி முன் செல்லுகிறது. சுழ
லும் சக்கரத்தில் சுற்றுண்டு கிடக்கும் பதருபோல் ஸ்தூல பிரகிரு
தியை அவதாரமென்னும் வாள் துண்டித்தெறிகிறது. ஆதியில்
தோன்றின ஜீவாத்மாவிற்கும் இரண்டாவது பிரகிருதியோடு கலந்த
ஜீவாத்மாவிற்கும் பேதம் என்னவென்றால் அறிவு இரண்டாவதற்குப்
பெருகி இருப்பதே. பரப் பிரம்மத்தோடு ஒன்றாக விருந்து ஒரு
அறிவுங் கொள்ளாத ஜீவாத்மா உலகில் உழன்று பல அறிவுகளைக்
கொண்டு தன்னைத்தானே அறிந்து கொள்ளுகிறது.

திருமாலின் சீர் பெற்ற திரு அவதாரங்கள் இவ் வுண்மைகளை
விளக்குகின்றன. ஜீவாத்மா இங்கே தூலப் பிரகிருதியில் கலந்து
கொள்ள முயலுகிறது. முதலில் தூலத்தில் கலந்து கொள்ள சக்தி
இல்லாமல் மிகவும் இலகுவான ஜலத்தில் மச்சமாக வடிவங் கொண்
டது இதுவே மச்சாவதார மெனப்படுவது. மச்சத்தால் ஜலத்தை
விட்டு வெளியே வர இயலாமையால் அதை விடச் சற்று உயர்ந்த
சக்தியுடைய ஒரு ஜன்மம் தேவையாயிற்று. அது கூர்மாவதாரமாம்.
கூர்மாவதாரத்தால் ஜீவாத்மா உயரிய நிலையை அடைகிறது. கூர்
மத்திற்கு ஜலத்தின் தேவை அதிகமில்லை. பின் வராக அவதாரம்
தோன்றிற்று. இதனால் மனிதனின் மனோ நிலை அழுக்கடைந்த
தன்மையைக் கொள்ளுகிறது, அதை நீக்க நரசிங்க அவதாரமுண்
டாயிற்று. நரசிங்கமென்றால் சிங்கம் போன்ற மனிதன் சிங்கத்தோடு
சேர்ந்த மனிதன் என்பன பொருள்களாம். மனிதனது அபிவிர்த்
திக்குத் தடைபட்டு நிற்கும் பிரகிருதியே பிரகலாதன். அதிலிருந்து
நரசிங்கமூர்த்தி விடுவித்தாராயினும் நானெனும் மமதை போக
வில்லை. அதைத் தொலைக்க வாமனாவதாரம் உண்டாயிற்று. பலிச்
சக்கரவர்த்தி நானெனும் மமதைக்கு அறிகுறியானவன். அவனை
வாமனன் அடக்கினான். பின்னுள்ளது பரசுராமாவதாரம். இது
குடிகளைக் காக்கும் கொற்றவன் அதர்மமாக ஆட்சி புரிவதை அடக்
கினது. ராஜசத்தன்மை மிகுந்ததை ஒழித்தது. க்ஷத்திரியர்களால்
ராஜசத்தன்மை ஒடுங்கிற்று. பின் இராமாவதார முண்டாயிற்று.
நான் எனும் அகம் பத்துத்தலைகளோடு சூட்சுமத்தோடு தோன்று
கிறது. அதனை இராமாவதாரம் ஒழித்தது. ஸ்ரீ இராமாவதாரத்
தால் ஜீவாத்மா தமது யாத்திரையை ஒருவாறு முடித்துக் கொண்
டது. பின்னர் அதற்கு பிரம்மத்தோடு லயப்படுவதே முக்கிய
கொள்கை. இதற்காகத்தான் திருக்கண்ண பிரான் தோன்றினார்.
ஸ்ரீ கிருஷ்ணாவதாரமே பிரம்மாண்டம் முழுதும் வியாபித்திருக்
கிறது. ஏனைய எல்லா அவதாரங்களும் ஓய்ந்து இடை வழியில்
கிடக்கின்றன. அடுத்தாற் போல் வருகிற கல்கி பெயரிட்டுச் சொல்ல
முடியாத பரவெளியில் கலக்கிறது. இங்ஙனம் ஜீவாத்மா பரவெளி
யில் இரண்டறக் கலக்கும் வரை சில அவதாரங்கள் தேவை. ஸ்ரீ
கிருஷ்ணாவதாரம் சத்தான இடத்திற்கும் புத்தாவதாரம் சித்தான
இடத்திற்கும் கல்கி ஆனந்தமான இடத்திற்கும் கொண்டு விடுகிற
தென்பது அறிஞர் கொள்கை. தசாவதாரங்களின் சிறப்பை இங்
ஙனம் அறிஞர் சிந்தித்து முடிவு செய்திருக்கிறார்கள்.

ச. செல்லம்,

சுசீந்திரம்.

# இடையர்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

இடத்து,"கூலம் வித்திவிளைப்பவர் காத்து அறுத்து அடித்துத் தூற்
றிக் குடம்பைசேர்ப்போர்,வாலியமூவின நிரைகாக்குனரோம்புநரும்
பயன்கொள் வகையர் மற்றைக், காலிவர காதிய வாணிகம்புரிகு
நருமுள்ளக் கனிவாலவ்வக், காலமறிந்தேவல் செயக் காத்திருப்ப
ரண்ணல் சொலுங்கருமம் நோக்கி." (வெஞ்சமாக் கூடற்புராணம்)
என்றபடி பல வினையாளர்கள் ஏவல்தொழில் செய்யப் புன்செய்த்
தானியங்களை விளைவிப்பார்கள். இந்தப் புன்செய் நிலத்து உண்
டாம் பொருள்கள் இல்லாது மனிதர் உணவருந்துதலும் பிறவும்
நடவா. கால் நடைகளும் தானிய வகைகளும் வாணிகஞ் செய்தே
ஆகவேண்டும். இது பற்றியே "கோபாலரிலும் வாணிகஞ்செய்
வோர் உளர்" என்று கோவிந்தையர் இலம்பகத்தின் உரையில்
நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இதனால் உழவுத்தொழிலால் தானி
யவகைகளிலும், பசுவோம்பலால் பால் தயிர் நெய் முதலியவற்
றாலும் பொருளைப்பெருக்கித் தேவாராதனம், யாக காரியம் புரி
வோரும் தங்களை எதிர்பார்க்கும் படியான வாழ்வுபெற்றுள்ளார்
கள். "ஆகாத்தோம்பி ஆப்பயனளிக்குங் கோவலர் வாழ்க்கையோர்
கொடும்பாடில்லை" எனச்சிலப்பதிகாரத்திற் கூறியபடி இவர்கள்
தொழிலில் ஒரு சிறு பாவமும் பொருந்துவதில்லாது புண்ணியம்
பெருகும் தொழிலாகவே செய்து வாழ்வார்கள்.

ஒவ்வொரு அங்கங்களிலும் தேவர்கள் வசிக்கப்பெற்றதும்,
மல மூத்திரங்களும் தேவதாயோக்கியமாக உள்ளதும், தருமசொ
ரூபமானதும் பசு; ஆதலினன்றோ? ஸ்ரீமந் நாராயணன் கிருஷ்ணா
வதாரத்தில் பசு ஓம்பற்றொழிலை மேற்கொண்டார். பாவம் சிறி
தும் அணுகாத தொழிலையும், பொய் வஞ்சகம் முதலியன இன்றிப்
புனிதமான மனமும் உள்ளவர்கள் கோவலர் என்பது கருதி
யன்றோ? கிருஷ்ணபகவான் கோபாலருடன் கூடிக்குலவி மகிழ்ச்சி
யோடு கலந்திருந்தனர். தேவர்களும் முனிவர்களும் தவசிரேஷ்
டர்களும் இரவு பகல் அகலாது ஆசையோடு கோகுலத்தில் வாழ்ந்
திருந்தார்கள். கோபாலர்களாகவோ, கோபிகைகளாகவோ பிறக்க
வேண்டுமென விரும்பினார்கள். ஆதலின் இடையர்கள் சிறந்தவர்
களே ஆவர், சுபம்.

தி. அ. முத்துசாமிக் கோனார்.

# வள்ளல் பாரி.

(30 ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டல புருடனார் தாமியற்றிய சூடாமணி நிகண்டில் "பாரியா யெழிலி நள்ளி" என்றும், முதன்மையாகப் புகழ்ந்துரைக்கப் பட்ட எமது வள்ளற்பெருந் தகை, "பரோபகாரம் ஹிதம் சரீரம்" என்பதை யுணர்ந்தவனாகிய பாரி மன்னன்: அப்பூங்கொடியை நோக்கி, "நன்றேல் கவலேல் கண்ணின்மணியே கவினார்கொடியே கன்றேல்! கன்றேல்! பொன்னாப் பொலிவொடு" என்றும் நீ நின்று, என் தேரையே துணை கொடுவாழ்ந்துன் துயர்தனைக்களை! எனக் கூறுவான் போன்று தன்உயர்ந்த அழகியதேரை அக்கொடியின்பக்கலில் கொழுகொம்பாக நிறுத்திப் பஞ்சின் மெல்லடிகளையுடைய தம் தர்மபத்தினியின் பாததாமரைகள் கன்ற, பாங்கியரோடு பாதசாரியாகப் பறம்புநகரையடைந்து, தமதிருக்கையாகிய இராஜமாளிகையில் அமர்ந்தான்.

பழந்தமிழ் நாட்டில் வரையாது பொருள் வழங்கி, அழியாது புகழெய்திய வள்ளல்கள் பலரில், தலை சிறந்த பாரியானவன், முல்லை நிலத்தின் வழியாய்ச் செல்லுகையில், தழைத்துச் செழித்து வளர்தற்குக் கொழுகொம்பின்றிக் குழைந்து, மண்மேற் கிடந்த புல்லிய அறிவுவாய்ந்த அம்முல்லைக் கொடியின் துவண்ட நிலை கண்டு மனம் நெகிழ்ந்து, அருள் சுரந்து, அக்கொடி படருமாறு தனது அழகிய தேரை அதனருகே விட்டுச் சென்ற வரலாறு புலவர் பாடும் புகழமைந்ததாகும். முல்லை நிலத்தில் வாழ்ந்த கொடியும் ஓர் உயிர் என்று உணர்ந்து அவ்வுயிர்க்கு உற்றகுறையைக் குறிப்பால் அறிந்து, உள்ளம் நெகிழ்ந்து தேரளித்த வள்ளலின் பெருமையை,

"பூத்தலையறாப் புனைக்கொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக்கொடுத்த
பரந் தோங்குஞ் சிறப்பிற் பாரி"

என்று கபிலர் பெருமான் போற்றிப் புகழ்ந்தார். "குறிப்பறிந் தீதலே கொடை" என்னும் முதுமொழிக்குப் பாரியே தலையாய



சான்றாயமைந்தான். பாடிவந்த பாவலர்க்கும், பாடாதிருந்த படர் கொடிக்கும், பால் நினைந்தூட்டும் "தாயினும் சாலப்பரிந்து பரி சளித்த பாரியின் பெருமை" தமிழ் நாடெங்கும் (பாரத தேசம் முழுமையும்) பரவிற்று. சொல்வளம் நிறைந்த செஞ்சொற் புலவர், பாரியை மாரியோடு உவமித்து மகிழ்ந்தார்கள். கைமாறு கருதாது மழை பொழிந்து, உலகம் தழைத்தோங்கக் கண்டு உளம் களிக்கும் மேகம்போல் பயன் கருதாது வறியார்க்குப் பொருள் வழங்கி அவர் இன்முகங் கண்டு இன்புற்ற பாரியை,

"பாரி பாரி என்றுபலர் ஏத்தி
ஒருவர்ப்புகழ்வர் செந்நாப்புலவர்
பாரிஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

என்று ஓர் புலவர் போற்றிப் புகழ்ந்தார். இவ்வுலகைப் பாதுகாத்தற்கு மாரியும் உண்டென்பதை மறந்து பாரி ஒருவனையே போற்றிப் புகழ்கின்றார்களென்று அவ்வள்ளலைப் பழிப்பதுபோல் புகழ்ந்துள்ள நயம் பாராட்டத்தக்கதாகும்:—

மன்னு உலகத்து மன்னிய மன்னரில் பறம்புமலைக் கோமானாகிய பாரி தலை சிறந்து திகழ்கின்றான்; வானளாவி விளங்கும் பாரிமலையும் அம்மலையில் அமைந்துள்ள வளங்கொழுசுனையும் வழிச்செல்வோரது கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்து விளங்கும். மஞ்சு தோய்ந்துறையும். அதன்கண் தெள்ளிய திரைகளோடு அலைகொள் புனல் அருவிகள் சுனைகளின் வழியாய் ஒழுகி மலையினின்றும் மாண்புற இலங்கும் கோலமும், நீர்வளம் நிறைந்து, களையின் நெல்லும், பலவின் கனியும், வள்ளிக்கிழங்கும், வண்டரையுந் தேனும், எஞ்ஞான்றும் குன்றாது, இயல்பாகவே சுரக்கும் குன்றும், மயில்கள் எழுந்து ஆலவும், அரிகள் எழுந்து அருங்கனி சிதரவும் அமைந்த சோலையும்,

"வான்கண் அற்றவன் மலையே வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே
பயில் பூஞ்சோலை மயில் எழுந் தாலவும்
பயில் இருஞ்சிலம்பில் கலைபாய்ந் துகளவும்
கலையும் கொள்ளா வாகிப்பலவும்
காலமன்றியும் மரம் பயன் தரும்
பாணர் அறுஅ வியன் மலையற்றே"

( )

என்று பொய்யாக் கபிலரால் போற்றியுரைக்கப் பெற்றதும், இரவலர்க்கு எளியதாய், வேலுடைய வேந்தர்க்கு வெல்லுதற் கரியதாய்,

"அளிதோ தானே பேரிருங்குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே ( )

என்று இனிதுபெருமைபெற்று என்றும் விளங்கும் குன்றும், இயற்கைவளம் மிகுந்து உண்பொருள்களாய செஞ்சாலி நெல்லும், தீங்கனியும், செந்தேனும், கிழங்கும், தழையும் நிறைந்து இலங்கிப்பசியால் வருந்தித் தளராது, பகைவரது படைவலியைப் பாழாக்கும் இயல்பும், வாளேந்திய பகைவரால் பெறலாகாத வளம் பொருந்திய மலைநாடாகிய முந்நூறு கிராமங்கட்கும் தலைநகராகப் பறம்புநகரைப் பெற்று, யாழேந்திய பாவலர்கள் சூழ,

சமன்செய்து சீர்தூக்குங்கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி (குறள்)

என்னும் தலையாயபுலவர் தமிழ்மொழிக்கோர் தாயகமாய்த் தராசு முனைபோன்று ஆட்சிபுரிந்து வந்தான்:—

காந்திதாசன், பர்மா.

---

# கோகிலகிருஷ்ணன்.

அல்லது.

## இரு யாதவமணிகள்.

(ஒரு சீர்திருத்த நாடகம்.)

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

1. கோ:-ஸ்—ஓஹோ! சரிதான்—அந்தக் கதையே கேட்டியா நீயீ—ஒண்ணுமில்லே பாரு—நவநீதக் கோனாரு ஊட்டுலே வேலை செய்றானே, பெரியண்ணேன், அந்தப்பய செய்த கூத்துல்ல!

2. கோ:-ஆமா! கௌப்பினது அந்தப்பய. அது ஆரெல்லாம் சேத்து இளுத்துட்டுது பாத்துக் கிட்டியா?

3. கோ:-கு—கு—கு—கு—குறும்புக்கார ப—ப—ப—பயல்.

4. கோ:-எவ்வுளவு நாளா நாம்ப பஞ்சாங்கக்கார அய்யிரு இல்லாமே கண்ணாலமோ, திதியோ செய்ததில்லே. இப்போ



நடுவாந்தரத்திலே இப்புடி தலைசுட்டித்தனமா பேச ஆரம்பிச்சா, நிக்குமா?

5. கோ:-நவநீதக் கோனாருதான் அதுக்குக் கொஞ்சமும் எடங்குடுக்கலியே—மறுவே என்ன?

2. கோ:-அது கெடக்குது! கோகிலம், கிருஷ்னென் இவுங்களெளாம் அதுக்கு என்ன சொன்னாங்களாம்?

4. கோ:-சீ சீ! இவுங்க படிப்பென்ன! கொணமென்ன? இல்லாட்டியும், நம்ப கோபாலகிருஷ்ணக் கோனாரு செனெகிதம் என்ன! இப்புடி இருக்குறவுங்க இதுக்கல்லாம் சரின்னுடுவாங்களோ.

1 கோ:-இந்தப்பேச்சே, யாராலே மூந்திச்சோ அவுங்களுக்கே ஏண்டாப்பா இந்த சமாசாரத்துலே பூந்தோம்னு தோணும்படியா, நம்ப கார்மேகக் கோனாரும் படிச்சு, படிச்சுச் சொல்ல ஆரம்பிச்சிட்டாருல்ல.

3. கோ:-இ—இ—இ—இம்புட்டு த—த—த—த—தகாரும்—ந—ந—ந—ந—நவநீதக்கோனார் ஊ—ஊ—ஊ—ஊட்டுக்கு வாராரே ஒ—ஒ—ஒ—ஒரு மொ—மொ—மொ—மொ—மொதலியாரு அ—அ—அ—அ—அவுராலேதா.

5. கோ:-ஆமா—மொதலில்ல கேப்பானே. தெரியாமையா, ஆறு கெட நாணலிடு, ஊரு கெட நூலே விடு. மூணும் கெட முதலியே விடுன்னு சொல்றாங்க பெரியவுங்க.

1. கோ:-அடே! இவுங்க இதுக்குச் சம்மதிச்சாலும் இவுங்க ஊட்டு பொம்பளைங்கல்லாம் கஜா முஜான்னு கூக்குரப் போடல்ல ஆரம்பிச்சுட்டுதும்.

2. கோ:-ஆமா! பின்னே என்ன! மேங்கொலம் என்ன கெட்டாலும் மேங்கொலந்தான். அதுக்குண்ணு நம்ப வளமேயே உட்டுத் தொலைச்சுப்புட்றதோ! பேஷ்! நல்லாருக்கு!

3. கோ:-ந—ந—ந—ந—நம்ப அ—அ—அ—அப்போ கி—கி—கி—கி— கிருஷ்ணனையே — கு — கு—கு— கும்படப் படாது—ச—ச—ச—சரிதானுல்ல.

4. கோ:-பேஷ்! திக்குவாயன் சொல்றதும் ஞாயந்தான். நல்லா சொன்னான். போனாலும் பொவுதுண்ணு ஒரு பேச்சு.

5. கோ:-(ஏப்பம் விடுகிறான்.)

2. கோ:-ஏதுப்பா! இன்னும் நம்ப கோகிலத்தும் கண்ணாலச் சோறு செரிக்கல்லியோ ?

4. கோ:-இனிமேலே இந்த கலியாணம்போல எப்போ நடத்தப் போறாங்களோ, யாருதான் நடத்தப் போராங்களோ!

1. கோ:-அந்த மனுசனோட, கொணத்துக்கும், புள்ளைங்க படிப்புக்கும், அடக்கத்துக்கும், பெருந்தம்மைக்குமேல்ல, அவ்வளவு தடபுடலா நடந்திச்சு!

2. கோ:-பிராமணப்பயன்க பந்தி மாத்திரம் மூணு வாட்டில்ல நடந்திச்சு.

4. கோ:-ஏன்!பெரிய ஐயமாருங்க அம்புட்டுப்பேரு வந்தாங்களே!

3. கோ:-இ—இ—இ— இதைத்தவிர—ந—ந—ந—ந— நம்ப சனங்க ஒ—ஒ—ஒ—ஒரு நா—நா—நா—நாலஞ்சு வாட்டி—திண்ணுருப்பாங்க.

5. கோ:-என்னமொ! போ! கொட்டி கொட்டி எம்புட்டு அளந்து என்ன—

(உள்ளே 7 மணி அடிக்கும் சப்தம் கேட்கிறது.)

1. கோ:-ஓஹோ! ஹோ! இந்த போலீஸ்டேஷனுலே ஏழுமணி அடிச்சுட்டானே.

2. கோ:-ஆமா! அப்போ ஊருக்குள்ளாபோய் மாடுகளைக் கறந்து குடுக்குற நேரமாயிருச்சே.

3. கோ. 4. கோ, 5. கோ—சரி—சரி—வாங்க போவலாம்:—

(எல்லோரும் மறைதல்.)

(தொடரும்.)

S. குருசாமி அய்யர், திருச்சி.

# இடைக்காட்டுச்சித்தர்.

தெய்வச் செந்தமிழ்ப் பாண்டி நன்னாட்டிலே பொதிகைமலை என ஒரு தெய்வீகமலை இருக்கின்றது. அது அகஸ்தியர் வசிக்கின்றமலை. இன்னும் பல தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் முத்தர்களும் தங்கித் தங்கள் மன இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுதற்கு ஏற்ற தானமாக உள்ளது. அந்த மலைச்சார்பிலே ஒரு வாலிபர் உலவினார். அவர் கோன் வழிவந்தவர். பசுவோம்பி உண்ணும் வகையைச் சார்ந்தவர். பசுக்களைக்கொண்டுபோய்த் தினமும் மேயப்பார்த்து அந்திக்குமுன் தம் தொழுவத்துக்கொண்டு வந்துசேர்ப்பார். பசுக்களைக் காப்பவராதலால் மற்றை உயிர்களிடத்து மிகுந்த இரக்கம் தானாகவே விளைந்து வளருமெனச்சொல்ல வேண்டுவதில்லை. பல நிரைகள் மேய்ச்சலுக்குப்போனதில் ஏதேனும் ஒன்று எவ்விதமான இடுக்கணில் அகப்படினும், உடனே அதனை யாராய்ந்து அது தீர்ந்து குணமாகும் வகையைக் கைபாடவேண்டியது கடமையாகிறது. சற்று நோக்காதிருந்தால் நோயுற்றதை மலைச்சாரலிலேயே விடுத்துவரவேண்டி நேரும். ஆதலின் இடுக்கணுற்றதைக் கண்டவுடன் பரிகாரஞ்செய்து தீரவேண்டிய கொள்கையாகிறது ஒன்று தயங்கினால் கையிலே புல் முதலியன கொண்டு சென்று தின்னச்செய்ய வேண்டும். இதனால் பிறவுயிர் வருந்துதல் கண்டால் உடனே அவ்வருத்தந்தீர வேண்டுமே என்ற வருத்தந் தன்னைத் தொடர்கிறது. பல உயிர்களைக் கவனிக்கவேண்டியது தொழிற்பழக்கமாக ஆகிறது. இதனால் எவ்வுயிரேனும் தயங்கினால் மூலமறிந்து உதவி புரிய வேண்டுமென்ற எண்ணமே பெருந்தொழிலாகக் கொண்டவராக உள்ளவர் அந்த மலைச்சார்பில் தாகமோ பசியோ கொண்டோர் யாரையேனுங் கண்டமாத்திரத்தே ஏனையா தயங்குகின்றீர்கள்? என்ன வேண்டுமென்று வலிந்துகேட்டுத் தண்ணீரோ பாலோ கொடுக்கும் தலைசிறந்த அன்புடையவர். தண்ணளியோடு நிரை காத்துக்கொண்டு வந்தார். ஒரு நாள் மத்தியானம் நிரைகளைப் பெரிய மரநிழலிற்கிடத்தி அங்கு ஓர்புறமாக உட்கார்ந்திருந்தனர். அங்கு ஒருவர் வந்து ஓர் புடை உட்கார்ந்தனர். இதனைக்கண்ட இவர் அவரிடத்துச்சென்று வணங்கி ஐயா! தாங்கள் தாகங்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பால் வேண்டுமானால் கொடுக்கி

றேன் என்றார், பேசவில்லை. சற்று நேரஞ்சென்றபின் மறுபடியும் வணங்கிக்கேட்டார்; ஏது வைத்திருக்கிறீர்களா? என்றனர். இதோ கறந்து தருகிறேன் என்றனர், மறுமொழி கொடுக்கவில்லை. உடனே ஒரு காராம்பசுவைக் கறந்து நுரையுடன் பாலைக் கொணர்ந்து வணக்கத்துடன் ஈந்தார்; ஏற்று அருந்தினர்; சற்று மௌனமாக இருந்து பின் ஏதோசில கேட்டனர். பின்பு சிறிது நேரந்தங்கியிருந்து புறப்பட்டுப் போய்விட்டனர். மறுநாள் அந்நேரம் வந்தனர். அன்றும் அவ்வாறே வணங்கிக்கேட்டுப் பால் கறந்துகொடுத்தார்; மூன்றும் நாளும் அவ்வாறே பின்னும் பேரன்புடன் சில பழங்களுடன் பாலும் கொடுத்தனர். அருந்தி மனமுவந்து, சில சொல்லினர். காண்பித்தனர். தினமும் இதனைப் பழகிக்கொண்டு வருக என்று உபதேஞ்செய்து சென்றனர். அது முதலாகவே, மனமாசுகள் கழிந்து பேரறிவு வளர்ந்து வந்தது. வந்து பால் அருந்தினவர், பெருமை வாய்ந்த சித்தர் எனத்தெளிந்தார். உலகத்தோடு ஒட்டி-வாழினும் உட்பற்றற்றவராக விளங்கினார்; சம்பாஷணை முறையா ஒரு சிறு நூல் சொல்லியிருக்கிறார்.. அதை இடைக்காட்டுச் சித்தர் பாடல் என உலகம் கொண்டாடுகின்றது. அந்நூல் தாண்டவராயக் கோன் கூறுதல், நாராயணக் கோன் கூறுதல் என்றும், பசுவை முன்னிலைப் படுத்தியும், பலரொடுகிளத்தல், நெஞ்சொடுகிளத்தல், அறிவொடுகிளத்தல், குயிலொடுகிளத்தல், மயிலொடுகிளத்தல், அன்னத்தொடுகிளத்தல், புல்லாங்குழலூதல், பால் கறத்தல், கிடைகட்டுதலான பாகுபாடாகச்சிந்து, தரு வெண்பா கலித்துறைப் பாட்டுகளாக வேதாந்த தத்வங்களை எளிய சொல்லால் கூறப்பட்டிருக்கிறது. சொற்கள் வெளிப்படையானதாக இருக்கினும் பொருள் மிகு ஆழமாக விளங்குகிறது. ஒவ்வொன்றினும் இரண்டொருபாட்டுக்களை அங்கு மிங்கும் எடுத்து எழுதுகிறேன்.

ஆதியந்த மிலாத வநாதியை
தீதுறும்பவந் தீப்படு பஞ்சுபோல்
மோதுறும்படி முப்பொறி யொத்துற
காதலாகக் கருத்திற் கருதுவாம்.

தாண்டவராயக் கோன்.

எல்லா வுலகமும் எல்லா வுயிர்களும்
எல்லாப் பொருள்களு மெண்ணரிய
வல்லா னநாதி பரம சிவனது
சொல்லா லாகுமே கோனாரே.



வாணியன்போல வயங்கும் பிரமமே
சூனிய மென்றறிந் தேத்தாக்கால்
ஊனியலாவிக் கொருகதியில்லையென்
றோர்ந்து கொள்ளுவீர் கோனாரே.

நாராயணக் கோன்.

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சதருவான வொன்றைப்
போரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக வெந்நாளும் நெஞ்சிறுத்தி வாழ்வேனே.

மனமெனு மாடடங்கிற்றாண்டவக் கோனே—முத்தி
வாய்த்ததென்றெண்ணேடா தாண்டவக் கோனே
சினமெனும் பாம்பிறந்தாற் றாண்டவக்கோனே யாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே

பசு.

ஆதிபகவனையே பசுவே
 யன்பாய் நினைப்பாயேல்
சோதிபரகதிதான் பசுவே
 சொந்தம தாகாதோ
எங்கும் நிறைபொருளைப்—பசுவே
 எண்ணியணி வாயேல்
தங்கும் பரகதியில்—பசுவே
 சந்ததஞ் சாருவையே
சந்திர சேகரன்றாள் பசுவே
 தாழ்ந்து பணிவாயேல்
இந்திரன்றன் முதலோர்—பசுவே
 ஏவல் புரிவாரே.

தும்பி பறத்தல்.

அஞ்ஞானம் போயிற்றென்று தும்பிபற
 ஆனந்தங் கொண்டோமென்று தும்பிபற
மெய்ஞ்ஞானம் வாய்த்ததென்று தும்பிபற
 மேலேறிக் கொண்டோமென்றும் தும்பிபற.

அல்லலலை யில்லையென்றே தும்பீபற
ஆணவங்க ளற்றதென்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற்றென்றே தும்பீபற
பரஞ்சோதியைக் கண்டோமென்றுந் தும்பீபற

### குயிலொடு கிளத்தல்.

கரணங்க ளொருநான்கு மடங்கினவே—கெட்ட
காமமுத லோராறு மொடுங்கினவே
சரணங்க ளொருநான்கு மொடுங்கினவே
சந்தோஷமாகவே கூவு குயிலே.
கற்றாணைப் போன்மனதைக் காட்டுமயிலே—வருங்
காலனையுந் தூரத்தி லோட்டுமயிலே
பற்றாடுருவவே பாடுமயிலே—அகப்
பற்றுச்சற் றில்லாமற் பண்ணுமயிலே.

### அன்னத்தோடு கிளத்தல்.

சிறுதவளை தான்கலக்கிற் சிந்தூரத்தி நிழல்மறையும்
மறுமாயை தான்கலக்கில் மதிமயங்கு மடவனமே.
காற்றின் மாமுறியுங் காட்சியைப்போல் நல்லறிவு
தூற்றிவிடி லஞ்ஞானந் தூரப்போ மடவனமே.

### குழலூதல்.

தொல்லைப்பிறவி தொலைக்கார்க்கு முத்திதான்
இல்லையென் றூதுகுழல்—கோனே
இல்லையென் றூதுகுழல்.
இந்திரபோகங்க ளெய்தினுந் தொல்லையென்
றந்தமா யூதுகுழல்—கோனே
அந்தமா யூதுகுழல்.

### கிடை கட்டுதல்.

இருவினையா மாடுகளை யேகவிடு கோனே—உன்
இடக்குமட மாடொன்றை யடக்கிவிடு கோனே
சாற்றரிய சிரேட்டிகரே தற்பரத்தைச் சார்வார்—நாளு
தவமவமாக் கழிப்பவரே சனனமதில் வருவார்.



சத்தியும் பாமுந் தன்னுட்கலந்ததே கோனே—நிட்டை
சாதிக்கிலிரண்டும் தன்னுள்ளே காணலாங் கோனே.
மூகைபோலிருந்து மோனத்தைச் சாதியெங்கள் கோனே-பர
மோன நிலைகண்டு முட்டுப்பிறப்பறு கோனே.

இன்னும் யோகவைத்திய ஞான நூல்கள் பல இவர் அருளிச் செய்திருப்பதாகத் தெரிகிறது. பிரபவ முதலிய அறுபது வருஷத்திய பலனை வெண்பாவில் இவர் செய்ததாக வழங்கி வருகிறது. பல அற்புதங்கள் பொருந்த இவர் சரித்திரம் கூறுகிறார்கள்.

தி. அ. முத்துச்சாமிக் கோனார்,
தமிழ் வித்வான்,
திருச்செங்கோடு.

---

## நமது கடமை.

---

நாம் நமது சமூகத்துக்குச் செய்ய வேண்டிய பணி என்ன என்பதைப் பற்றிச் சிறிது ஆராயவேண்டி யிருக்கின்றது. நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகங்களும் உயர்வடைந்து நமது சமூக மாத்திரம் தளர்ச்சியுறக் காரணமென்ன என்பதை முதலாவது ஆராய்வோம்.

நமது சமூகத்திலுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் கடின உழைப்பு அதிகம் என்பது வெளிப்படை. அவ்வித கடின உழைப் பெடுத்தும் சொற்ப ஊதிய மடைகிறார்களேயன்றி உழைப்புக்குத் தக்க ஊதியமில்லை. நமது கடின உழைப்பிலுள்ள ஊதியம் யாவும் மற்றவர்களே அடைகிறார்கள். நமது மக்களைப்போல் இரவிலும் பகலிலும் மழையிலும் வெயிலிலும், மிருகமடர்ந்த வனத் திலும் பயமில்லாது காலிமேய்த்துக் காப்பாற்றுந் தன்மை யைப்போல் உலகத்தில் வேறெந்தச் சமூகமாவது இவ்வித உழைப் பெடுத்து நிற்பதைக் கண்டிலோம். ஆனால் உழைப்புக்குத் தக்க ஊதிய மடைகிறாரென்று சொல்லமாத்திரம் இயலாது. நாம் வளர்த் துக் கொடுத்த ஆண்காலியை விலைக்கு வாங்கி அறுத்துத் தின்று ருசிபார்த்து உவக்குமொருவர் ஒருநாள் மழையில் நனைந்தாராயின் உயிர் போய்விடும். சாதாரணமாக நம்மிடம் கிரயத்துக்கு வாங்கி

அறுத்து விற்று ஜீவனம் செய்யும் கசாய்க்கடைக்காரர் ஒரு உருப்படியால் அடையும் லாபம் நம்மவர் ஒரு மாசச் சம்பளத்துக்கு மேல்நிற்கும். அக் கசாய்க்கடைக்காரரிடம் தோல்வாங்கி விற்று ஊதியமடைவதை நோக்கினால் அவர்கள் ஒரு தோலினாலடையும் லாபம் நம்மவர்க்கு ஒரு மாசச் சம்பளம் கிடையா. ஆகையால் நமது கடின உழைப்பிலுள்ள லாபம் மற்றவரே அடைகிறார்கள். அதனால் காலிமேய்ப்பதனால் நன்மையும் லாபமும் இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும்.

இன்னும் நமது பெண்மக்கள் செய்துவரும் வணிகமோ மிகக் கேவலமானது. பொதுவாக ஒரு ஹோட்டலில் பால்கொண்டு விற்று வயிறு வளர்ப்பதைப் பார்க்கிலும் பட்டினியிருந்து சாவது நலம். நம்மவர் பால்விற்கும் பாவனை மிகப்பெரியது. அதனாலிவர்கள் அடையும் ஊதியம் மிகச்சிறியது. கால்படிப்பாலில் சரியாகத் தண்ணீர் விடுவது ஊதியமென இவர்கள் கருதுகிறார்கள். ஆனால் ஒன்றுக்கு நாலுபாகம் நீர்விட்டுக் காய்ச்சி ஊதியமடைவது ஹோட்டல்காரன். நீர்விடாது விலையைக்கூட்டி நமது வீட்டில் வைத்து விற்பதால் இவர்களுக்கென்ன கெடுதலோ அறியோம். பால் வாங்கிப் பருக மனமுள்ளவர் நமது வீட்டில் வந்து வாங்கிப்போகாரா. கடையிலுள்ள சமான்களைக் கடையில்போய் வாங்கவில்லையா. அல்லது ஆண்மகன் கொண்டு கொடுத்துவரக் கூடாதா. ஆண்மகன், பால் செம்புகொண்டு கடைவீதி போனால் இழிவு ஏற்பட்டுவிடுமா, பெண்களைக்கொண்டு விற்றுவரச்சொல்லி அதனால் வரும் இழிவை அடைவதைப் பார்க்கிலும் வேறு என்ன மதியீனம் வேண்டும். இது விஷயத்தைக் கவனிப்பது ஒவ்வொரு யாதவ சகோதரர்களும் முக்கியகடமையெனக் கருதி விலக்க முன் வரவேண்டுமென்று விரும்பி நிற்கின்றது நமது சமூகம். அநேகமாகப் பெண்டிர்கள் வணிகம் செய்வது பெருமையில்லை என்பதே எமது கருத்து. நாமிருக்கப் பெண்களை வியாபாரம் செய்யச் செய்து அவ் வருவாயால் நாம் வயிறு வளர்த்துப் பொருள் தேடி மகிழ்ந்திருப்பதைப் பார்க்கிலும் வேறு இழிவு என்ன? நமது குடும்பச் செலவோடு பெண்டீர்களுக்கு வேண்டிய உண்டி யுடை முதலிய சகல நன்மையையும் தேடுவது நமது கடமை. மனையாள் என்பது மனைவாழ்க்கையைச் செய்வதற்காகவே அல்லது அவர்களால் நாம் ஊதியம் அடைவதற்கில்லை. அவ்விதமொரு ஆகமங்களும் கூறவும் இல்லை.



அவர்களைக்கொண்டு வணிகம் செய்து வரச்சொல்லி நாம் மகிழ்ந்தனுபவிப்பதைக் கண்டு ரிஜிஸ்தராபீஸில் பெண்களுக் கெழுதும் பிரமாணங்களெல்லாம் 'சுகவாசி ஜீவனம்' எனவரைய வேண்டாம். பால் விற்பனை, மோர் விற்பனை, நெய் விற்பனை கதிரறுப்பு, குழையறுப்பு முதலிய ஒவ்வொரு தொழிலையும் கண்டு பிரமாணம் வரையலாம். அவ்விதமெழுதினால் இழிவென்று நினைப்பவர் அவர்களைக் கொண்டு பொருள் தேட விடுவதெங்ஙனம். பெண்களுக்கு வேண்டும் சௌகரியம் செய்து வைப்பது நமது கடமையே யன்றி வேறில்லை. அவர்களால் நாம் ஊதியமடைவது தவறு, என்று ஒவ்வொரு யாதவ சகோதரர்களும் நன்கு கவனித்து நடத்துவது கடமை. தமது குடும்பத்திலுள்ள மற்றைச் செலவுகளோடு பெண்டிர்களுக்கும் வேண்டிய சௌகரியம் தேடி நடத்தாத ஒரு ஆண்மகனுக்குத் திருமணமே வேண்டாம். மணம் செய்த நாலாம் நாள் 'மலையேறிக் குழை அறுக்கப்போ' என்று விரட்டுபவர், கல்யாண மங்களப் பத்திரிகைகளில் சௌபாக்கியவதி, செல்லம்மாளை என்று வரையவேண்டாம். நித்ய தொழில் கல்லம்மாளை, என்று எழுதிவரலாம். மங்கையர்கள் பால்யத்தில் தந்தை பாதுகாப்பிலும், மங்கைப்பருவத்தில் புருடனாதீனத்திலும் வயோதிகத்தில் புருடனல்லது புத்திரர் பாதுகாப்பிலு மிருக்கவேண்டுமேயன்றிச் சுதந்திர வாழ்வுகூடி நடக்க ஏதுவில்லை என்பதை ஒவ்வொரு சகோதரர்களும் முக்கியமானதாய்க் கருதிப் பெண்களுக்கேற்பட்ட வெளியபிவிர்த்தி வியாபாரத்தை அவசியம் விலக்கி நாம் முன்னேற்றமடைய முயலுவீர்களென எதிர் பார்த்து நிற்கின்றது நமது சமூகம்.

(தொடரும்)

S. நாராயணக் கோன்,

களக்காடு.

### ப்ரபந்த வித்வான் ஸ்ரீமான்

# தி. கோ. முத்துகிருஷ்ணபிள்ளை

### அவர்கள் சரித்திரச் சுருக்கம்.

பலவருணத்தவரும் தம் தமது குலாபிவிருத்திக்கான காரியங்களைச் செய்து வருவது கண்கூடு. நம்மில் பல கல்விமான்களும், செல்வவான்களும் தத்தம் சுயநலத்தையேபெரிதும் பாராட்டி, குலப்பொது நன்மையைக்கவனித்து, அதன் அபிவிர்த்திக்குரிய விஷயங்களில் ஈடுபடாமையால், நம்குலப் பெருமையையும், மதப்பெருமையையும் நம்மவரில் அனேகர் உணராது தம்மைத் தாமே தாழ்த்திக்கொண்டு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். இதை அறிந்த யான் 1916 வருஷத்தில் நமது யாதவகுடும்பத்தில் விசேஷ காலங்களில், சுபாசுபப் பிரயோஜனங்களிலும், தலையிட்டு நின்ற ஸ்ரீமான் முத்து கிருஷ்ணபிள்ளை அவர்களைக் கண்டு நமது குலாபிவிருத்தி விஷயமாகப் பேசினேன். அதற்குப் பின்னரும் சில மாதங்களாக இவ்விஷயத்தை அவரிடம் வற்புறுத்தி வந்தேன். இவர் உபய வேதாந்தாதிகளில் சிறந்த பண்டிதர். தென் இந்தியாவில் மதவிஷயமான பிரசாரத்தில் கீர்த்தி வாய்ந்தவர். பகவத் பாகவத கோஷ்டியில் புகழ்பெற்றவர். ஆங்கிலம் தெலுங்கு ஸமஸ்கிருதம் தமிழ் இவற்றை நன்கு அறிந்தவர், ஒழுக்கத்திலும் உயர்ந்தவர். இத்தகைய அருங்குணங்கள் வாய்ந்த இப்பெரியாரை நான் அடிக்கடி அடுத்து இவரிடம் வார்த்தையாடிவருவதுண்டு. மேலும்எனது பாட்டனார் ஸ்ரீமான் மெய்யூர். சந்திர சேகரப்பிள்ளை யவர்களும், இவர் தகப்பனார் ஜஞ்ஜாமாருதம் ஸ்ரீமான் தி. இராஜ கோபாலபிள்ளை அவர்களும் சகல கலைகளிலும் பாண்டித்யம் பெற்று ஞானமுற்றுப் பகவத் பாகவத கோஷ்டியில் ஈடுபட்டவர்கள். நான் ஸ்ரீமான் தி. கோ. முத்துகிருஷ்ண பிள்ளை யவர்களைப் பலவந்தப்படுத்தி, நமது சமூகம் முன்னேற்ற மடையவும், அவ்விஷயமாயுள்ள எனது மனக்குறையை அகற்றும் பொருட்டும் ஓர் சங்கம் அவருடைய உதவியினாலும், ஆதரவினாலும் ஏற்படுத்த வேண்டும் என்றும் பல இடங்களில் சந்திக்கும்போதெல்லாம் மன்றாடிக் கேட்டு வணங்கி வந்தேன். இப்பெரியார் பல பொதுவிஷயங்களில் ஈடுபட்டிருந்தபடியால் என் அபிப்பிராயத்திற்குக் கொஞ்சமும் இடம்தரவில்லை. ஏன் எனில் அநேக சங்கங்களை ஏற்படுத்த முன் வருபவர்களில் பலர் அச்சங்கங்களைச் சில நாள் நடைபெற வைத்துப் பிறகு கவனியாமல் விட்டு விடுவது சகஜம். அதனால் சங்கங்கள் ஓங்காமல் மங்கிவிடுகின்றன. ஒருவருடைய முயற்சி மாத்திரம் போதாது. பலர் ஒருமித்தமனதுடன் ஒன்று கூடியுழைத்தால் தான், அவ்வுழைப்புப் பலன் தரும் என்பதே அவரெண்ணம். ஆனால் எனது விடாமுயற்சியினால் எனது உண்மையான நோக்கத்தைக்கண்ட பிறகு அப்பெரியார் ஸ்ரீயதுகுல மகாசங்கமொன்று சென்னையம் பதியில் 12—7—1917ல் ஸ்தாபித்தார். இந்த விஷயத்தில் இன்னும் பலகுலாபிமானிகட்கும் ஊக்கமளித்த இப்பெரியார் பிறகு அதிக முயற்சி எடுத்துக்கொண்டு நமது சங்கத்தினர், மூன்று கூட்டங்கள் செவ்வையாய் நடந்ததைக்கண்டு ஆனந்தித்து நான்காவது கூட்டத்தில் 4—11—1917ல் தாமே அக்கிராசனாதிபதிப் பதவியை வகித்தார். ஆனால் நாடகத்தில் பின் சீன்களில் நின்று ஆட்டம் ஆடி நடத்தி வைக்கிறவர்போல் நடந்த மூன்று மீட்டிங்கிக்கும் வராமலே என் உள்ளத்தில் இருந்த கருத்தைப் பூர்த்திசெய்தார். பிறகு சங்கவிதி, நிபந்தனைகள் இவர் உதவியினாலும் ஸ்ரீமான்கள் T. R. அரங்கநாதம் பிள்ளை B. A. ராவ் சாகிப் தோட்டக்காடு. இராமகிருஷ்ணபிள்ளை B. A. இவர்கள் உதவியினாலும் அங்கீகரிக்கப்பட்டன. இவர் புகழ் வாய்ந்த யாதவகுல திலகராய்ச் சென்னையம் பதியில் ஸ்ரீமான் ஜஞ்ஜாமாருதம் தி. இராஜகோபால்பிள்ளை அவர்களின் தவப்புதல்வராய்த் தோன்றியவர். இவர் முயற்சியாலே பெரும்பாலும் நமது ஹிந்துப் பிள்ளைகள் அநேகர் கிறிஸ்தவமதத்தில் பிரவேசிக்காமல் தடுக்கப்பட்டனர். இவர் எட்கிளார்க் ஆக D. L. O. ஆபீசில் யாவராலும கொண்டாடப்பட்டு உபகார ஊதியங்கொண்டு சென்னையில் சுகஜீவியாய் வாழும்போது, பைசாணி மாதவ செட்டியார் தர்மத்தில் காரியதரிசியாகவும் இருந்து விசிஷ்டாத்வைத சித்தாந்தப் பிரபோத சங்கத்தை ஸ்தாபனஞ் செய்தார்.



ஸ்ரீ பெரும்பூதூரில் ஆதி ராமாநுஜ கூடத்தில், ததியாராதன காரியதரிசியா யிருந்தார். சங்கீதத்திலும், நாலாயிரப் பிரபந்தப் பண்ணிசையிலும் விமரிசையாய்ப் பாடும் வல்லமையுள்ளவர். அநேக புஸ்தகங்களை மத விஷயமாய் வெளிப் படுத்தியவர். ஸ்ரீமத் வெங்கடாத்ரி ஸ்வாமி மடத்து அக்ராஸனாதிபரும், பிரபன்னகுல திலகரும், ஸ்ரீமத் யதுகுல மஹா சங்கஸ்தாபன உதவியாளரும் ஆக இருந்தவர்; ப்ரபந்த வித்வான் ஸ்ரீமான் தி. கோ. முத்துகிருஷ்ண

பிள்ளை அவர்களே. இத்தகைய குலாபிமானியேதான் நாம் ஒவ்வொரு வருஷமும் யாதவ மகாநாடுகள் கூட்டிப் பொதுவான முன்னேற்றத்திற்கு வர நேர்ந்திருக்கிறதற்கும் காரணம் என்னலாம். இவர் தமது 68-வது வயதில் சென்ற காளயுக்தி வருஷம் மாசி மாதம் 10ந் தேதி (21—2—1930) சுக்ரவாரம் மாலை சுமார் 1 மணிக்கு ஆசாரியர் திருவடி அடைந்தார்.

எம். கே. ஆராவமுதன்,
சென்னை.

---

# இராமநாதபுரம் யாதவர்களுக்கோர் வேண்டுகோள்.

ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவர்க்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழம் 'முதலே!' என அழைப்ப
என் என்றான் எங்கட் கிறை,

என்று, புகழேந்தியால் அறிக்கப்பட்ட துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன சீலனாகிய ஸ்ரீகண்ணபிரான் திருவுருவா யவதரித்த குலம் நமது யாதவ குலம். யாதவ குலத்தின் பெருமைகளையும் சிறப்பையும் அன்னோரின் வீரச் செயல்களையும் புராணேதிகாசங்களில் பரக்கக் காணலாம். அதுவுமன்றி ஒளி வீசும் கிரணங்களையுடைய யாதவ மித்திரனில் மாதந்தோறும் பல அறிஞர்களால் எழுதப்படுகிற கட்டுரைகளில் வெள்ளிடை மலை போன்று விளக்கியிருக்கின்றனர். எனினும் அறிவிற் சிறந்த பெரியோர்கள் கல்விமான்களுக்கேயன்றி ஏனையோர்கள் அறிந்து களிப்புறுந் திறமையில்லையென்று துணிபாகக் கூறலாம். இதற்குக் காரணம் கல்வியில்லாக் குறை ஒன்றே. இக்குறையை நிவர்த்திப்பதற் கெனவே நமது சமூகத்தில் ஸ்ரீகண்ணன் கடாக்ஷத்தால் அறிவுமிக்க பெரியோர்கள் பலர் உற்பவித்துச் சங்கங்கள் ஸ்தாபித்தும் மகாநாடுகள் நடத்தியும் மன வெழுச்சியை உண்டுபண்ணிச் சமூக சீர்திருத்தம் செய்து வருகிறார்கள். சமீபத்தில் நிகழ்ந்த சென்னை மாகாண 5வது யாதவ மகாநாட்டிற்கு இராமநாதபுரம் ஜில்லா யாதவர்களிற்



பெரும்பாலானவர்களும் கொண்ட பிடிவாதத்தை நிறைவேற்றுவதில் நிகரற்று விளங்குபவர்களுமான யாதவ சகோதரரிற் பலர் வந்திருந்தனர். அவர்களும் தங்களுக்கியன்றவரை நாகரிகத்தில் கலந்து மகாநாட்டை யலங்கரிப்பதற்காகவே விஜயஞ் செய்து அவ்விடத்தி லமைக்கப்பட்ட ஆசனப் பலகைகளிலமர்ந்து பிரசங்கத்தைக் கேட்டும், கைகளைத் தட்டியும், தலையை யசைத்தும், சிரித்தும், கவலைப்பட்டும், தங்களைத் தாமே திருப்திப் படுத்திக் கொண்டார்கள். வீட்டிற்கு வந்ததும், மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் யாதென்று பிறசமூகத்தினர்கள் கேட்டால் அதற்குத் தக்க பதில்சொல்லுந் திறமை அவர்களுக்கில்லாமையால், 'பிரசங்கம் நன்றாயிருந்தது. தலைவர்கள் நல்ல உடை அணிந்து வந்திருந்தார்கள். சாப்பாடு ரொம்ப சேர்த்தியாயிருந்தது. அவர்கள் சொல்வதைக் கேட்கும்போது மனம் உருகினது' என்று சொல்வதில் சமர்த்தர்களா யிருக்கிறார்கள். இதைக் கேட்பவர்கள் இனிமேலாகிலும் உங்கள் சிறுவர்களைப் பள்ளிக்கூடத்துக் கனுப்பிக் கல்வி கற்கச் செய்யுங்களென்று சொன்னால் பட்டணங்களிலுள்ளவர்களுக்குப் படிப்பு வேண்டியது. நாங்கள் படித்து எந்தக் கணக்கை எழுதப் போகிறோம் என்று விபரீத விடையளித்து விடுகிறார்கள். இச் செய்கைகளைக் குறித்து மனவருத்தத்துடன் எழுதத் துணிந்தேனே யல்லாமல் இகழ்ச்சிக்காக வொன்றும் கூறுதற்கில்லை. நமது குலத்துக்குரிய ஓதல், நாட்டல், வேளாண்மை, வாணிகம், பசுக் காத்தல், உழவு ஆகிய அறுவகைத் தொழில்கள் இருக்க அவைகளை ஒரு புறத்தே விடுத்து 'என் தகப்பன் முட்டி உடைத்து கும்பிட்ட கோவிலில் நானும் முட்டி உடைத்துதான் கும்பிடுவேன்' என்ற மாதிரி செம்மறியாடுகளை ஓட்டிக் கொண்டு சிறுவர்களையும் பெண்மக்களையும் உடனழைத்துக் கொண்டு தஞ்சாவூர் ஜில்லா முதலிய விடங்களுக்குப் போகும் வழக்கத்தை விடுதல் குலத்திற்கீன மென்று நினைக்கிறார்கள். இவ்விதம் செய்வதை நிவர்த்திக்கும் பொருட்டு மதுரை நகரசபையின் உபதலைவரும் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானக் கமிட்டியின் தலைவரும் யாதவகுல வாலிப சிரேஷ்டர்களில் தலைமை பூண்டவருமான திருவாளர் பி. பிச்சைமுத்துக் கோனாரவர்கள் எடுத்துக்கொண்ட அரும் பெரும் பிரயாசையினால், 'ஆட்டுக்கிடைக்குப் போகும் யாதவர்கள், சிறுவர்களையும் பெண்மக்களையும் உடன்கூட்டிச் செல்லுவதில்லை' என்ற

ஒப்பந்தம் செய்து கொண்டது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி
பொழிந்தாற்போ லிருக்கிறது. இவ் வொப்பந்தத்திற் கலந்த சில
பேருக்கு இவ்விஷயம் வேப்பங்காயே. எனினும்,

> மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
> என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

என்ற நாயனார் வாக்கின்படி, மகனால் தனக்குப் பெரும் புகழும்
உண்டாவதை இனியேனும் பெற்றோர்கள் அறிந்து, போதுமென்ற
மனமே பொன் செய்யும் மருந்து என்பதற்கிணங்க உள்ளதைக்
கொண்டு திருப்தி யடைந்து இனியேனும் தம் சிறுவர்களை உடன்
கூட்டிச் செல்லாது கல்வி கற்பிக்கச் செய்வார்களாயின், இதைவிட
குலாபிமானம், பரோபகாரம், ஈகை, இரக்கம், வேறு கிடையா
தென்றே உறுதியாகக் கூறலாம். தூண்டாமணி விளக்குக்கும் ஒரு
தூண்டுகோல் வேண்டும் என்றிருக்கிறபடியால் கல்வியபிவிர்த்திக்
கெனவே பிரச்சாரக் கமிட்டி யொன்று அவசியம் வேண்டப்படு
கிறது. அவ்விதக் கமிட்டியை நிர்வகிப்பதற்கு இராமநாதபுரம்
ஜில்லா கோவைசிய யாதவகுல தர்மபரிபாலன சபைக்கு வல்லமை
யுண்டு. அச்சபை 20 வருஷகாலம் வரை நீங்காத நித்திரையிலாழ்ந்
திருந்ததை மகாநாட்டிற்கு விஜயஞ் செய்திருந்த புனித சிரோன்
மணிகளால் எழுப்பப்பட்டு விழித்துக் கொண்டது. ஆனால் நித்திரை
மயக்கம் இன்னும் தீரவில்லை போலும். நித்திரை முற்றும் நீங்கி
முன்போல வீராவேசத்துடன் ஜொலிக்குமாயின் சகல சீர்திருத்தங்
களும் நடைபெறக் கல்வியில் சிறப்புற்றிலங்கு மென்பதில் ஐய
மில்லை. உலகமே கல்வி மயமாக இலங்கிக்கொண் டிருக்கிற இக்
காலத்தில் நமது சமூகத்தினரில் பெரும்பான்மையோர் கல்வி கற்கா
திருப்பது மிகவும் பரிதாபம்! பரிதாபம்!! இனியேனும் சபைத்
தலைவர்கள் விடாமுயற்சியுடன் யாதவ நாட்டில் கல்வியை நிலை
நிறுத்தக் கருணை புரியுமாறு அனந்தகுண கல்யாணனாகிய ஸ்ரீபரந்
தாமனை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றனம்.

> தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன்
> மெய்வருந்தக் கூலிதரும்.

S. சாத்தையாக் கோன்,
புதூர்,
இராமநாதபுரம் ஜில்லா.

# பொன்பரப்பி அம்மையார்.

கொங்கு மண்டலத்திலே வெங்கால நாட்டிலே வெஞ்சமாக்
கூடல் என ஒரு சிவதலம் இருக்கிறது. அது சிற்றாற்றின்கரை
யிலுள்ளது. கருவூருக்குத்தெற்கே சுமார் காதவழியிலுள்ளது. நீர்
வளம் நிலவளம் குடிவளங்களிற் சிறந்தது. அவ்வூரில் ஆயர்குலத்
தில் மேய்ப்பித்துண்போர் வகையில் பொன்பரப்பி என்னும் பெய
ரால் ஒருமாது இருந்தனர். தம் நிலத்தின் விளைவினும், பசு முத
லிய மூவின கிரையால் உண்டாம் பயனாலும் பெருஞ் சம்பத்தாற்
சிறந்து விளங்கினர். வந்தவர்களுக்கு இல்லை என்னாது பால் தயிர்
மோர் உணவு முதலியன அளித்து ஆதரிப்பதும், ஆலயங்களுக்குப்
பால் தயிர் நெய் முதலியன குடங்குடமாக அபிஷேகாதிகளுக்கு
அனுப்புவதும் தினந்தோறும் நெய் விளக்குப்பல இட்டு ஆலய
சேவை செய்வதும், அடியார்களிடத்து மிகுந்த அன்பு செலுத்தி
வணங்குவது மாகிய கடப்பாடுடையவர். விகிருதேசுரர் ஆலயத்
தில் வாயில், படி முதலியவைகளுக்கும் பொற்றகடு வேய்வித்த
மையால் பொன்பரப்பியம்மை எனக்காரணப்பெயர் பெற்றனர்.

வன்றொண்டர் என்னும் சுந்தர மூர்த்தி நாயனார் பேரூர் முத
லிய தல தரிசனம் செய்து கொண்டு திருக்கூட்டத்தாருடன் வெஞ்
சமாக் கூடலுக்கு வருவாராயினர். வந்த வன்றொண்டருக்குப்
பொன் கொடுக்கவும், பொன் பரப்பியம்மாளின் உள்ளன்பை உலகி
னர்க்கு வெளியர்க்கவும் விகிருதலிங்கர் திருவுளங்கொண்டருளினர்.

விநாயகர். சுப்பிரமணியர், வீரபத்திரர், பைரவர், ஐயனார்,
மஹாகாளர். சண்டிகேசுரர், ஞானசம்பந்தரான அஷ்டகுமாரர்களும்
சிறுவர்களாய் வரத் தாம் அக்கோயில் பூஜகரான, ஆதிசைவக்குருக்
களாகத் திருவுருத்தாங்கிக் கிழத்தன்மைக்கேற்ற மெல்லிய தளர்
நடையாக நடந்து அவ்வூர் பொன்பரப்பினாள் இல்லத்துக்கு எழுந்
தருளினார். சிறுவர்கள் முன்னும் பின்னுஞ் சூழவரும் குருக்களைப்
பொன்பரப்பியம்மையார் கண்டார். மிகுந்த உபசாரமாக முன்
சென்று வணங்கி உள்ளே அழைத்துச்சென்று ஆசனத் திருத்தி
உபசார மொழிகள் கூறினர். இக்குழந்தைகள் தங்கள் திருக்குமா
ரர்களோ என வினவுமுன், ஒரு குழந்தை அவ்விருத்தை மடிமீது
விழுந்து புரண்டது. மற்றொன்று கன்னத்தைக் கடித்துக்களித்

தது. பின்னுமொரு குழந்தை முதுகிற் சாய்ந்து இறுகப்பிடித்தது. இவ்வாறு எட்டுச்சிறுவர்களும் களித்து விளையாடினர். கிருஷ்ணன் பலராமர் என்னும் இருதேவ குமாரர்களிடத்துத்தான் யசோதைப்பிராட்டியார் விளையாடி மகிழ்ந்தனர். இந்த அம்மாளோ எட்டுத்தேவகுமாரர்களின் விளையாட்டுக் கொஞ்சுதலை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றனர். ஒன்று பால் வேண்டு மென்றது. ஒன்று தயிர் வேண்டு மென்றது. மற்றொன்று வெண்ணெய் வேண்டு மென்றது. கேளாளத பழம் முதலியவைகளையும் கொடுத்துக் குழந்தைகளை மகிழ்வூட்டினர்.

இத்தகைய பெரும்பாக்கியத்தை அநுபவித்த அவ்வம்மையார் அங்கு வந்த அந்தணரை உபசரித்து வணங்கித் தேவரீர் அருமைவாய்ந்த இச்சிறு குமாரர்களை அழைத்துக்கொண்டு அடியாள் இல்லத்துக்கு எழுந்தருளிய காரணத்தைத்தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன் என்றிறைஞ்சிக் கேட்டனர்.

பக்தசிரோமணியே, தெய்வீக மகிமை வாய்ந்த வன்றொண்டப்பெருமான் திருக்கூட்டத்தாருடன் நம் தலத்துக்கு எழுந்தருளியுள்ளார். அவருக்கு ஐயாயிரம் பொன்னாவது ஈந்தருளல் வேண்டும். அப்படிச் செய்யாவிடில் நம் தலத்துக்கு மேன்மையில்லை. அவ்வாறு சமர்ப்பிக்கு மனமுடையார் இவ்வூரில் ஒருவருமில்லை. ஆதலால் இந்த எட்டுக் குழந்தைகளையும் (ஈடாக) அடமானமாக வைத்துக்கொண்டு கொடுத்தால் உனக்குப் பெரும் புண்ணிய முண்டு என்றனர். இந்த மேன்மையுற்ற மொழி காதில் பட்டவுடன், சுவாமிகளே, அடியாருக்குதவாத பொருள் இருந்தென் செய்ய? என்று முகமலர்ந்து கேட்ட பொருளை ஐயர் முன் வைத்து வணங்கினர். முகமலர்ச்சியோடு பணப்பையை எடுத்துக் கொண்டு ஐயர் புறப்பட்டு வெளியே சென்றனர்.

சற்று தூரம் அவர் கடந்தவுடன் மூத்த குழந்தை கடைக்குழந்தையை கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினர். அழுதுக்கொண்டு அக்குழந்தை யோடிற்று. தமயன் அடித்தானென்று மற்றொருவன் ஓடினன். இப்படியே எட்டுப் பேரும் ஒருவர் பின் ஒருவராக ஓடிவிட்டார்கள். இதனைக் கண்ட அவ்வம்மையார் மெத்த மனவருத்த முற்றுச் சிவபெருமானே என்ன செய்வேன். நானே, இப்பிள்ளைகளை என்னிடத்து ஒப்பிவித்த ஐயர் வந்த



கொடும்பாடிலாத வாழ்க்கைக் கோவிந்தை
யாயநின்பால்
விடும்பால ரெங்கே யென்றவ் வேதியர்
கேட்கினேழை
படும்பாடு பெரிதா மென்னப் பயந்துமென்
னடையா லோடி
அடும்பாலின் மொழித்தாய் பங்கனாலயத்
தவர்பின் சென்றாள்.

“பாவமற்ற வாழ்க்கையை யுடைய கோவிந்தையாரே! உலகத்திலே ஏதேனுங் காரணத்தால் மனைவி மக்களை ஓரிடத்து விட்டுவைக்க வேண்டுமானால், களங்கமின்றி (யாதவர்) ஆயர் இல்லத்தேதான் விட்டு வைப்பது தொன்று தொட்டுள்ள அனுபவம். பரிசுத்த மனமுள்ள பெரியோர்கள் சூழ்ந்த புண்ணிய பூமியென்று யானும் அவ்வாறே நினைந்து விட்டேனே அக்குழந்தைகளெங்கே என்று கேட்டால் என்ன விடை கூறுவேன்? இதனால் என் மரபுக்குள்ள நம்பிக்கை போமே” என்று புலம்பிக்கொண்டு அவர்களைப் பின்றொடர்ந்து ஆலயத்தை இக் கோவிந்தையாரணுகினர்.

அப்பொழுது திருக்கூட்டத்தார் நடுவிலிருந்து, சிவபிரானை வேண்டி ஏபரபதியே! இன்னும் என்மீது மனது இரங்காத காரணமென்ன என்னுங் கருத்தால் சுந்தரமூர்த்தி பதிகம் ஓதும் ஓசையைத் தன் இரு செவியாரக் கேட்டனர் கோவிந்தையார். அப்பொழுது பிள்ளையை அடகு வைத்துப் பெற்ற பொன் முடிப்பை ஆரூரர் முன் கிழவேதியர் வைத்தார். சுந்தரர் மகிழ்ச்சிகொண்டு கையாற்றொட்டார். பொன் கொண்டுவந்த வேதியரும் பின்றொடர்ந்து ஓடிவந்த சிறுவர்களும் மறைந்துவிட்டனர். ஆகாயத்தில் பார்வதி சமேதராய் விருஷபாரூடராய்ச் சிவபிரான் சேவை சாதித்தனர்.

அரகாமுழக்க மாயிற் றந்தரத் தடலேற்றெந்தை
சுரிகுழற் பாவையோடுந் தோன்றின ராயர் மாதும்
பரிவுள வடியாரெல்லாம் பார்த்தடி பணிந்தார் சைவப்
பெரியரா ருடையநம்பி பிரானருளினைப் புகழ்ந்தார்.

இந்த ஆயர்குல மணியும் அடியார்களும் சுந்தரமூர்த்தியும் எல்லோரும் ஹரஹர முழக்கம் செய்து ஆநந்த பரவசரானார்கள். இந்தப் பொன்பரப்பி யம்மையாரின் அன்பின் திறத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பின்பு அந்த அம்மையார் பல திருப்பணிகள்

வெஞ்சமாக் கூடலிற் செய்து தெய்வீக பதவியைப் பெற்றனர். இன்னும் பொன்பரப்பி யம்மையென அவ்வூரில் பூசிக்கிறார்கள்.

இக்கதை திருவெஞ்சமாக் கூடற்புராணம், கொங்குமண்டல சதகங்களிற் கண்டது.

கிழவே தியவ்டி வாகி விருத்தையைக் கிட்டியெந்தன்
அழகாகு மக்க ளடகுகொண் டம்பொ னருடியென்றேற்
றெழுகாத லாற்றமிழ் பாடிய சுந்தரற் கீந்தவொரு
மழுவேந் தியவிகிர் தேசுரன் வாழ்கொங்கு மண்டலமே.

தி. அ. முத்துசாமிக் கோனார்.

---

## யாதவகுல முன்னேற்றம்.

(ஆவணி மீ 8-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாணவர் முன்னேற்றங்கருதி பெருத்த பரிசுகள் அளிக்கின்றனர். நாகரிகமுள்ள ஜாதியினரனைவரும் கல்வி, கல்வி யென்றே ஓலமிடு கின்றனர். கல்வியே கற்பகக் கனியாகவும் காமதேனுவாகவும் பெரிதும் போற்றுகின்ற இக்காலத்தில் நம்மவர்கள் எவ்வளவு முற் போக்கடைந்திருக்கின்றன ரென்பது கருதுந்தோறும் கவலைக்கிட மான காரியமாயிருக்கின்றது.

கல்வியறிவின்மையாலும் தேகபலம் தைரியம் முதலியவை களின் குறைவினாலும் நம்மவரி லனேகர் ஏனைய வகுப்பினரைச் சாமி சாமி யென்று கரங்கூப்பி நமஸ்கரிக்கின்றனர். இக் கார ணங்கள் பற்றியே ஜாதிப் பிரிவில் மிக மிகத் தாழ்ந்தவர்களும் இடையரென்ற சொல்லை இழிவுபடுத்த முற்படுகின்றனர். யாதவ ரென்ற இன்பச்சொல்லின் பொருளுணராதவ ரனேகருளர். என்னே நம்மவர் நிலை. கல்வி கற்றல் வயிற்றுப் பிழைப்புக்கென்றே கருதி, முன்னோர் பாடுபட்டுத் தேடிவைத்து விட்டுப்போன பொருளை டாம்பீகமான வழிகளில் துர் விநியோகம் செய்து திண்ணை காக்கும் சோம்பேறிகளாய்த் தம் அரிய வாழ்நாட்களைப் பாழ்படுத்துகின்ற னர். அந்தோ! இதென்ன மடமை! மலையளவு செல்வமிருந் தாலும் இணையளவு கலைமண மில்லாவிடில் என்ன சிறப்பு உண்டு!



எச்சிறப்புகளேற்படினும் அவையனைத்தும் வாசமற்ற மலர்கள் போன்றவைகளே. அம்பிகை சரஸ்வதி தேவியின் ஒளி உலகெங் கணும் பிரகாசிக்கிறது. தேவியின் அருளாலல்லவோ கம்பர் பெரு மானின் புகழ் இறவாது என்றும் நிலவுகின்றது.

ஆகையால் நம் யாதவரனைவரும் அவசியம் கல்வி ஞானம் பெற் றிடவேண்டும். இடையரென்ற சொல்லுக்கிழுக்குப் பேசுவோரை இடித்துரைக்கும் சொற்றிறன் வாய்த்திடவேண்டும். ஒரு சில வக் கீல்களும் ஒரு சில வித்வான்களும் ஆசிரியர்களும் வியாபாரிகளும் உத்யோகஸ்தர்களும் கவுன்சிலர்களும் சேர்மென்களும் போதாது. யாதவ சமூகமானது பிரமாண்டமானது. பல லட்சக் கணக்கான மக்களையுடையது. கல்வி, வியாபாரம், உத்யோகம் முதலிய நானு வித திவ்ய துறைகளிலே சிறந்தவர்களாக இன்னும் ஆயிரக்கணக் காக நம் யாதவ மக்கள் முன்னேற்றமடைந்து விளங்கிடவேண்டும்.

(தொடரும்)

மு. நாராயணசாமி,
போஸ்டு மாஸ்டர் இன்டான்
F. M. S. பினங்கு சமீபம்.

---

## செய்தித் திரட்டு.

ஜர்மானியில் புதிதாக ஒருமுறை கண்டு பிடித்திருக்கிறார்கள். டைப் அடிக்கும் யந்திரம் ஒன்றை டெலிபோனோடு சேர்த்துவிட் டால் டெலிபோனில் பேசவேண்டியதை அவ்வியந்திரம் எழுதிக் காட்டுகிறது. இது ஊருக்குப் பெரிய நன்மையை யளிக்குமென்று தபால்இலாகா அதிகாரிகள் இம்முறையை ஆராயத்தொடங்கி விட் டார்கள்.

ஒரு வீட்டில் வீட்டுக்காரர் இல்லாதபோது டெலிபோனில் யாராவது பேசினால் அவர் பேசிய செய்தியை டைப்அடிக்கும் யந்தி ரம் எழுதிவைத்துவிடும் அதனால் வெளியேபோனவர் வீட்டுக்குவந் ததும் விஷயம் தெரிந்துகொள்ள அனுகூலமா யிருக்குமென்று தெரிகிறது.

ஒருவருக்கு இருக்கும் நோயைக் கண்டுபிடிப்பதற்குப் புதிய முறையில் ஜர்மனியில் ஒரு டாக்டர் அல்ட்ரா வயலட் என்ற விளக்

சொளியைக் கண்டுபிடித்திருக்கிறார். அவ்விளக்கொளியால் நோய் பிடிக்கப் பட்டிருக்கும்பாகம் நன்றாகப்புலப்படுகிறது. இம்முறையை அதிகமாகப் பரீக்ஷை செய்கின்றனர்.

ஆமாதாபாத்துக்கு அருகில் சில மரங்களில் தாவரவர்க்கம் இயற்கைக்கு விரோதமாக ராட்டினத்தில் கையால் நூற்ற நூலைப் போன்ற நூல் தொங்குகின்றது. அதைப்பார்க்கத் திரளானமக்கள் கூடிவருகின்றனர். அரசாங்கத் தாவரவர்க்கம் இலாகா அதிகாரிகளுக்குப் பரீட்சைக்காக அந்நூல் அனுப்பப்பட்டிருக்கிறது.

தேநீர் அருந்துவதனால் அஜீரணக்கோளாறுகளும் சிடு சிடுத்த குணமும் ஓய்ச்சலும் மயக்கமும் உண்டாகின்றன. என்று கனடா பிரிட்டிஷ் மெடிக்கல் சங்க டாக்டர் டிக்ஸன் எழுதுகிறார்.

மெக்சிகோ ஜலசந்தியில் ஒரு தீவு இருக்கிறது. அதன் கடற்கரை சிவப்பு நிறமாயிருக்கிறது. அலைவந்தபின் அதன் நிறம் மஞ்சளாகி விடும்.

ருசியாவில் வெலிஜெப் என்னும் ஓர் இஞ்சினியர் "கடற்களை" என்னும் ஓர் வகைச் செடியிலிருந்து காகிதம், அட்டை முதலியன செய்யும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். மிகக் குறைந்த விலையில் ஏராளமாகக் களையிலிருந்து காகிதம் செய்யலாமென அவர் கூறுகிறார். சைபீரியாவில் பெரும் தொழிற்சாலை இதற்கென கட்டப்படுகிறதாம். ஆண்டுக்கொருமுறை ஒரு லக்ஷம் டன் கடற்களை ஆங்குத் தயார் செய்யப்படுமாம் இதிலிருந்து ½ மணிநேரத்தில் 16 விதமான காகிதங்கள் செய்யலாம் அதில் விழுங்கழிவுப் பொருள்களைக்கொண்டு வீட்டுக் கூரைக்கு நல்ல ஓடுகள் தயார் செய்யலாமாம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவருடைய கண்ணில் கடிகாரத்தில் இருப்பதுபோன்ற இலக்கங்கள் இருக்கின்றன. அதன் காரணத்தைக் கண்டு பிடிக்கப் பிரபலவைத்திய நிபுணர்கள் முயன்றும் முடியவில்லை.

தஞ்சை ஜில்லாவைச்சார்ந்த வலங்கைமானுக்கு ஏழுமைல் தூரத்திலுள்ள நாரிகுடி என்னும் கிராமத்தில் சென்ற மாதம் 22ந்தேதியன்று ஒரு ஹிந்துமாது இரட்டைக்குழந்தைகளைப் பெற்றாள். முதவில் பிறந்த குழந்தைக்கு எவ்விதகுறைவுமில்லை. இரண்டாவதாகப் பிறந்த குழந்தை தோற்றத்தில் குரங்கைப்போலவே இருக்கின்றது. அதற்குமுகத்தில் கண்களும் மூக்குமில்லையாம்.

---

64A



இந்தியா, சிலோன், …
உள்நாட்டிற்கு …
பினங்கு சிங்கப்பூர், …
வெளிநாட்டிற்கு ரூ 1-

தனிப்பிரதி விலை …

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடை…

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம், சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம் மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

; கால் நடை டரிபால
ாழு தொழில்கள் முதலிய சிரு
ு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி
மாதமும் வெளிவரும். மாதிரி பிரதி இனம்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

## இல்லற வாழ்க்கையில் இன்பம் வேண்டுமோ?

1. இல்லற வாழ்க்கையில் இடையரு இன்பமடைய வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா?

2. காமக்கிரீடையினால் உண்டாகும் இணையற்ற இன்பத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா?

3. சரீரத்தில் ரத்தத்தையும் மாமிசத்தையும் தாதுவையும் விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா?

4. புஷ்டியும் பலமும் அழகும் ஆயுளும் உள்ள குழந்தைகளைப் பெறவேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இல்லையா?

இருக்குமாகில்

எங்கள் ரதிராம ரசாயனத்தை ஒரு முறை உபயோகித்தால் இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தும் ஒருங்கே பெறுவீர் என்பது திண்ணம். ஒருமாத உபயோகத்துக்கான டப்பி 1-க்கு ரூ 2.

இது தவிர இன்னும் வேண்டிய மருந்துகள் எங்கள் கம்பெனியிலிருக்கின்றன. நோய் விபரத்தை எழுதினால் வியாதிக்குத் தக்க ஔஷதம் V. P. யில் அனுப்பப்படும்.

விலாசம்:—யாதவமெடிகல் ஹால்,
பட்டாளம், திருச்சூர்.


Printed & Published by E. M. GO AKRISHNA KONE
at the Excelsior Pres ura.

1246 eg., No. M-2527.

64C



# யாதவமித்திரன்.






யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | பிரமோதூத வருஷம் ஐப்பசி மாதம் | பகுதி |
|---|---|---|
| 2 | 1930 வருஷம் அக்டோபர் மாதம் | 3 |


பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 65 |
| சென்னை சட்டசபை நாமினேஷன் | 65 |
| வேளாண்மையில் உரமிடுதல் | 68 |
| பசு | 73 |
| யாதவகுல முன்னேற்றம் | 76 |
| கடவுள் | 77 |
| நமது கடமை | 81 |
| பெண் மக்கள் வாழ்வு | 84 |
| கல்விப்பொருள் | 87 |
| யாதவ வாலிப சங்கம், சென்னை | 89 |
| ஷை தீர்மானம் | 94 |
| செய்தித் திரட்டு | 95 |


11 DEC 1930



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

64 V

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு,
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
,, R. வெங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

64F
65

11 DEC 1930

# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| தொகுதி | பிரமோதூதஸு ஐப்பசிமீ | பகுதி |
|---|---|---|
| 2 | 1930-ஸு அக்டோபர்-மீ | 3 |


## கடவுள் வணக்கம்.

தோயாவின் தயிர்நெய் அமுதுண்ணச்
சொன்னார் சொல்லி நகும்பரிசே பெற்ற
தாயால் ஆப்புண்டிருந்து அழுதேங்கும்
தாடாளா தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்! கிரேத திரேத துவாபர
கலியுகம் இவை நான்கும் முனனாய்
ஆயா! நின் அடியன்றி மற்றறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே

திருமங்கையாழ்வார்.

# சென்னை சட்டசபை நாமினேஷன்.

---

சமீபத்தில் சென்னை மாகாண புதிய சட்டசபை நிர்மாணமாகி நடந்து வருவது யாவரும் அறிந்ததே. அதற்குத் தேர்தல் (Election) மூலமாக வந்த அங்கத்தினர்கள் போக, கவர்ன்மெண்டாரால் நாமினேஷன் செய்யப்பட்டவர்களது ஜாப்தாவும் கெஜட்டு மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் பிற்போக்கான வகுப்புகளில் கம்மாளர், ஆதிதிராவிடர், வன்னியர், நாடார் முதலிய சில வகுப்புகளுக்கு நாமினேஷன் கிடைத்திருக்கிறது. அதுபோல யாதவ சமூகத்திற்கும் இச் சட்டசபையில் ஓர் நாமினேஷன் கிடைக்குமென்னும் நம்பிக்கை பலமாக இருந்துவந்தது. ஆனால் கடைசியாக அது ஏமாற்

றத்தை விளைவித்துவிட்டது. புதிய சட்டசபை தோன்றிய சுமார் ஒன்பது வருஷகாலமாகவே நம் வகுப்பைப்பற்றி நாமினேஷன் விஷயமாகக் கவனிக்கும்படி நமது சங்கங்கள், மகாநாடுகள் மூலமாகப்பல வேண்டுகோள்கள் மாட்சிமிக்க கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிப் பல வருஷங்களாக முயன்று வந்தும் அவ்வேண்டுகோளை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்தச் சென்னை ராஜதானியில் யாதவ வகுப்பினர்கள் இல்லாத கிராமங்கள் நகரங்கள் இல்லை எனவே சொல்லலாம்; சுமார் 17 லக்ஷம் யாதவ மக்கள் இம்மாகாணத்தில் வாழ்ந்து வருகிறார்கள். நம் சமூகம் இவ்வளவு பெருந்தொகையை யுடையதாயிருந்தும் தொகுதியாக இல்லாமல், இடங்கள் தோறும் பாவியிருந்துவருகிற படியாலும், பொருளாதார நிலையில் குறைவுடையதாக இருப்பதாலும், தொகுதி எலக்ஷன் மூலமாகவோ சாதாரண எலக்ஷன் மூலமாகவோ சட்டசபைக்கு வருவதற்கு சாத்தியமில்லாமல் இருந்துவருகிறது. அல்லாமலும் 17 லக்ஷம் யாதவ மக்களில் சுமார் 5000ம் பேர்களே ஆங்கிலம் படித்தவர்களாக இருக்கிறார்கள். சுயபாஷை தெரிந்தவர்கள் இதனைவிட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக இருக்கலாம். இவற்றை எல்லாம் அறிந்தே கவர்ன்மெண்டார் சில வருஷங்களுக்கு முன்பாக நம் வகுப்பைக் கல்வியில் பிற்போக்குடைய சமூக ஜாப்தாவில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இவற்றை நோக்குமிடத்து நமது சமூகம் பலவகையிலும் பிற்போக்குடையதாக இருக்கிறதென்பதனை வெளிப்படையாக அறியலாம். இவைகளை உத்தேசித்துத்தான் நாம் நம் வகுப்பிற்குச் சட்ட சபையில் நாமினேஷன் கிடைக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக முயற்சி செய்து வந்திருக்கிறோம். நமது சமூகம் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக்கொண்ட தேசமாகிய இந்தியாவின் கிருஷித் தொழிலுக்குப் பலவகையிலும் உதவி செய்துவரும் ஒரு முக்கியமான சமூகமாகும். இதனை உலக அறிவும் பொருளாதார ஆராய்ச்சி அறிவும் உடைய யாவரும் நன்கறிவார்கள். கிருஷித் தொழிலுக்கு முக்கியமாக வேண்டிய இயற்கை உரங்களும் பசு, காளை, ஆடுகளாகிய கால் நடைகளின் அபிவிருத்தியும், யாதவ சமூகத்தினது கையிலேயே இருக்கிறதென்று சொன்னால் அதனை மறுப்பார் ஒருவருமில்லை என்பது திண்ணம். யாதவ சமூகத்தினருடைய இத்தொழிலுக்கு எத்தனையோ அசௌகரியங்களும் இடைஞ்சல்களும் குறைபாடுகளும் இப்போது இருந்துவருகின்றன. அல்லாமலும்



யாதவர்களுடைய தொழிலில் நவீன முறையில் சாஸ்திரீகமாக மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் அநேகமுள்ளன. இவைகளில் சில விமோசனங்கள் கவர்ன்மெண்டாராலேயே ஆகவேண்டியவைகளாகவிருக்கின்றன. இவைகளை எல்லாம் கருதியே யாதவ சமூகப் பிரதிநிதியாக நம்மவர் ஒருவர் சட்டசபையில் ஸ்தானம் பெறவேண்டியது அவசியமென்று வற்புறுத்தி வருகின்றோம். இச்சமயத்திலும் கவர்ன்மெண்டார் நம் வகுப்பிற்குச் சட்டசபையில் ஒரு ஸ்தானம் கொடுக்காமல் போனதுபற்றி நாம் மிகவும் விசனிக்கின்றோம்.

தற்சமயம் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டு நடத்தி வருபவர்கள் ஜஸ்டிஸ் கட்சியாரே. இதற்குமுன் இரண்டு முறை இக்கட்சியே மந்திரிசபையை அமைத்து நடத்தி வந்திருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது முதலாக அதனையே யாதவ சமூகம் பெரும்பாலும் தழுவி ஒத்துழைத்து வந்திருக்கிறது. அப்படியிருந்தும் பழய மந்திரிகள் காலத்தில் எப்படி நாம் புறக்கணிக்கப் பட்டோமோ அது போலவே இப்போதைய மந்திரிகள் காலத்திலும் கவனிக்கப்படாமலிருக்கிறோம். நம் சமூகத்தின் தொழில் முறைமையையும் பிற்போக்கான நிலைமையையும் புதிய மந்திரிகள் சிறிது கவனித்திருந்தால் நமது சமூகத்திற்கு நாமினேஷன் கிடைப்பது துர்லபமாகாது. ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் வந்த கால முதலாகப் பிராமணர்கள் அல்லாத சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒரு சில நன்மைகள் கிடைத்திருப்பினும் அவையும் செல்வாக்கும் பரம்பரை உத்யோகமுமுடைய சில பிராமணர்களல்லாதார்க்கே பெரும்பாலும் கிடைத்தனவென்று சொல்லலாமேயன்றிப் பிற்போக்கான சமூகத்தினருக்கு அத்தகைய நலங்கள் அதிகமாகக் கிடைத்தனவென்று ஒருவராலும் சொல்லமுடியாது. அதிலும் யாதவ சமூகத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர்க்கு ஏதேனும் உயர்ந்த உத்யோகம் கிடைத்திருக்கிறதா வென்று வினவினால் 'ஆம்' என்று சொல்ல ஒருவரும் முன்வர முடியாது. யாதவ சமூகத்தினருள் பி. ஏ, எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் சிலராவது இல்லாமல் போகவில்லை. அவர்கள் ஏதேனும் உத்யோகத்தை நாடிச்சென்றால் அவர்களைக் கவனிக்கும் பெரியார் ஒருவரும் கிடையாது. இவ்வாறு ஜஸ்டிஸ்கட்சிப் பிரமுகர்கள் நெடுநாளாக யாதவசமூகத்தின் முற்போக்கில் கவனமில்லாமல் இருந்து வருவதுபற்றி வருத்தமுற்றேதான் இராமநாதபுரத்தில் சென்ற மேயீ நடைபெற்ற சென்னைமாகாண 5-வது யாதவமாகாநாட்டிலும் "வகுப்புவாரிப்பிரதி

நிதித்துவ விஷயமாய் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை இந்த மகா நாடு ஒப்புக்கொண்டு ஜனத்தொகைக்குத் தகுந்தபடி யாதவர்களுக்கு இதுவரை உதவி செய்யாததற்கு மேற்படி கட்சியின் தலைவர்களை வன்மையாகக் கண்டிப்பதோடல்லாமல், இவ்விஷயத்தில் இன்னும் அபிவிருத்தி ஏற்படாவிட்டால் டிைகட்சியானது யாதவர்கள் ஆதரவை இழக்க நேரிடும் என்று தெரிவித்துக்கொள்கிறது.'' என ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆதலால் இவற்றை எல்லாம் கருதி, இப்பொழுது வந்திருக்கும் கனம் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் இனிமேலாவது யாதவ சமூகத்தினது அபிவிருத்தியைக் கவனித்து இச்சமூகத்தின் கல்வி அபிவிருத்தியிலும் உத்யோகம், டிஸ்டிரிக்ட் போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களிலும், தேவஸ்தான கமிட்டி முதலியவைகளிலும் யாதவர்களைத் தேர்ந்தெடுத்தலிலும் வேண்டிய உதவிகளைச்செய்ய முற்படும்படி கனம்பொருந்திய மந்திரி சபையாரையும் விநயத்துடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

---

# வேளாண்மையில் உரமிடுதல்.

(37 ம் பக்கத் தொடர்ச்சி)

---

மீன் முள், எலும்பு:—இவைகளில் உப்புவாயு (Nitrogen) ம் எரியும் கந்தகத் திராவகமும் (Phosphoric acid) அதிகமாயுண்டு. மேனுடுகளில் எலும்புகளைச் சேகரித்துக் கந்தகத் திராவகம் (Sulphuric acid), 'பென்ஜேன்' (Benzene) முதலியவைகளை ஊற்றி எலும்பிலுள்ள கொழுப்பு எண்ணெய் முதலியவைகளை நீக்கிப் பிறகு தூளாக்கிச் சேர்க்கின்றனர். இங்கே அநேகவிடங்களில் மீன் கழிவுகளைச் சேர்த்து வையாது வீணுக்கி விடுகின்றனர். இந்த உரம் எல்லா நிலத்திற்கும், எவ்வித பயிர்களுக்கும் உபயோகமாகிறது.

கடல் பூடுகள்:—(Sea weeds): கடலிலும், கடலோரங்களிலும் படர்ந்து வளரும் செடிகொடிகள் நல்ல உரமாகிறது. இச்செடிகளைச் சேர்த்துவைத்து நிலத்தில் பரப்பிவிட்டால் நன்றாய் அழுகி நவசாரமும் (Ammonia), உப்பான வஸ்துக்களையும் (Saline matters) அபரிமிதமாய் வெளியிடுகின்றன. இதில் மர உப்பு



(Potash) அதிகம். இந்த உரத்தால் பயிர்கள் சீக்கிரத்தில் பெருந்தூருடன் வளர்ந்து பயனளிக்கின்றன.

மரக்கரி:—மரக்கரியை மந்தை உரத்தோடு கலந்துகொண்டால் அது ஆகாயத்திலும் நிலத்திலுமுள்ள செடிகளுக்கு உதவாத வாயுக்களைக் கிரகித்துக்கொள்ளுவதோடும் உண்டான பயிர்களுக்குக் கொஞ்சம் உணவையுமளிக்கிறது. ஈரமான மரக்கரித் தூளால் விதைகள் சீக்கிரம் முளைத்து விடுகின்றன. ஆனால் உண்டான பிறகு மரக்கரியால் மாத்திரம் பயிர்கள் சீக்கிரம் வளரா. ஆகவே மற்ற உரமும் சேர்ப்பதவசியம்; கோதுமை விதையோடு மரக்கரித் தூளை நன்றாய்க் கலந்து விதைத்தால் வெகு நன்றாய் உண்டாகும்.

புகைத்தூள்:—இதில் உப்புவாயு (Nitrogen) உண்டு. கோதுமை, நெல் முதலிய விளைவுகளுக்கு நல்ல உபயோகமாகிறது. பயிர்களை அழிக்கும் முயல் முதலிய பிராணிகளை வரவொட்டாமல் தடுப்பதற்குப் புகைத்தூள் மிகவும் அவசியமாயிருக்கிறது. ஆதலால், புகைத்தூளால் இரண்டு முக்கிய உபயோகங்களிருக்கின்றன. இதை வீட்டில் அடுப்புள்ள அறைகளில் சுவர்களிலிருந்து வேண்டிய அளவு சுரண்டி, யெடுக்கலாம்.

மரத்தூள்:—மர இயந்திரமுள்ள இடங்களில் குவியும் மரத்தூளை அநேகர் தெரியாமல் ஆறு முதலிய விடங்களில் கொண்டு போய்ப் போட்டு விடுகின்றனர். மிகவும் மோசமாயுள்ள நிலங்களுக்கு மரத்தூள் நல்ல உரமாகிறது. மரத்தூளைச் சுண்ணும்போடு சேர்த்து ஆடுமாடுகளின் சிறு நீரில் ஊறவைத்திருந்தால் சில மாதங்களுக்குப் பிறகு அது நல்ல உரமாகிவிடுமென்பது அநேகருக்குத் தெரியாது.

நெல் உமி:—அநேக கிராமங்களில் நெல் உமிகளை உபயோகமின்றிப் போட்டு விடுகின்றனர். சிலர் அதை நெருப்புக்காக மாத்திரம் சாணத்தோடு உபயோகித்துக் கொள்கின்றனர். நெல் உமியை எரித்து மந்தை உரத்தோடு சேர்த்து வைக்கவேண்டும். இதில் "பாஸ்பேட்" (Phosphate) என்ற எரியும் கந்த உப்பு அதிகம் உண்டு. 3 பங்கு நெல் உமிச் சாம்பலோடு 6 அல்லது 8 பங்கு மந்தை உரத்தைச் சேர்க்கவேண்டும். இந்த உரத்தைக் கோதுமை, நெல், சோளம் முதலிய பயிர்களுக்கு உபயோகித்தால் பலன் நல்கும்.

(வெங்காயம்,
சமுத்திரக் காற்று வந்தடையாத நிலங்களுக்கு
முட்டைக்கோஸ் முதலிய பயிர்களுக்கு)ச் சாதாரண உப்பை நல்ல

உரமாக உபயோகிக்கலாம். சில விடங்களில் அதிகப் புளிப்பான் சாரத்தை நிலத்திலிருந்து நீக்குவதற்குப் பலவித சுண்ணும்புகளை உபயோகப் படுத்திக் கொள்ளுகின்றனர்.

## செயற்கை உரம்.

சாதாரணமாய் நிலத்தைச் சுமார் 9 அங்குல ஆழமாய் உழுகிறார்கள். அவ்வளவு ஆழமுள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 1000 டன் மண்ணுண்டு. இவ்வளவு மண்ணில் பயிருக்கு நல்ல உணவாகிய "பாஸ் பேட்" (Phosphate) என்றதோர் கந்தக உப்புச் சுமார் 2 டன் உண்டு. இதில் வெகு கொஞ்சமே உபயோகமாகிறது. இரண்டு மூன்று வேளாண்மைகளுக்குப் பிறகு அந்த நிலத்தில் 'பாஸ் பேட்' உணவு இல்லாமலே போய்விடுகிறது. ஆதலால் "பாஸ் பேட்" என்ற ஓர் விதக் கந்தக உப்பை நிலத்திற்கும் சேர்க்க வேண்டும். இந்த உப்புச் சல்லி வேர்களுக்கு நல்ல உறுதியையும் பயிர்கள் சீக்கிரம் நல்ல விளைவாகும் மார்க்கத்தையும் தேடி வைக்கிறது.

'பாஸ்பாரிக்' புளித்திராவகத்தோடு (Phosphoric acid) சுண்ணும்பு, அலுமினியம், அல்லது இரும்புத்தூள் முதலிய உலோக வகைகளைக் கலந்து காய்ச்சினால் "பாஸ்பேட்" என்ற உப்பு உண்டாகும். இந்த உப்பை முதன் முதலாகப் பிரான்சு தேசத்தில் உபயோகப்படுத்தினர். இந்த உப்பு அமெரிக்காவிலும், வட ஆபிரிக்காவிலும் இயற்கையாகப் பாறையோடுகலந்து விளைகிறது. இவ் உப்பு சிலசமயம் நிலத்தில் மண், தண்ணீரோடு கலந்துகொள்ளாமல் தங்கியிருக்கிறது. இதற்காகக் கந்தகத் திராவகத்தோடு (Sulphuric acid) 'பாஸ்பேட்' உப்பைக் கலந்து உண்டாகும் உப்பை (Super phosphate) உபயோகப் படுத்துகின்றனர்.

நாம் முன்கூறியபடி பயிர்களுக்கு "நைட்ரோஜன் (Nitrogen) என்ற உப்புவாயு மிகவும் அத்யாவசியமாயிருக்கிறது. ஆகாயத்திலிருந்து பயிர்களின் இலைகள்மேல் குதித்தவாயுவைக் கிரகித்துக் கொள்ளுவது வெகு கொஞ்சம். ஆதலால் அந்தவாயுவைத் தரத்தக்க உப்பு உரங்களை நிலத்தில் சேர்த்துப் பயிர்களுக்கு வேர் மூலம் உதவவேண்டும். இந்தவாயு பயிர்களின் வளர்ப்பை அதிகரிக்கிறது. இதற்காகப் பலவித "நைட்ரேட்" உப்புகளை (Nitrate of Soda, Nitrate of Lime, Nitrate of Potash) உபயோகப் படுத்துகின்றனர். "அம்மோனியம் சல்பேட்" (நவசார கந்தகஉப்பு)



என்ற உப்பை நிலத்தில் சேர்த்தால் அது "நைட்ரேட்" டாக மாறிப் பயிர்களுக்கு வேண்டிய வாயுவை அளிக்கிறது.

"சோடா நைட்ரேட்" (Sodium Nitrate) என்ற உப்பு தென்னமெரிக்காவில் ஏராளமாக வெட்டியெடுக்கின்றனர். இவ் விடங்களில் மின்சார சக்தியால் ஆகாயத்திலுள்ள உப்புவாயுவை வேண்டுமளவு (Nitrogen) கிரகித்து 'நைட்ரேட்' உப்பாக்கிப் பயிர்களுக்கு உதவுகின்றனர்.

"பொட்டாஷ்" (Potash) என்ற மரஉப்புப் பயிர்களுக்கு நல்ல உபயோகமாகிறது. முக்கியமாய் மணற்பாங்கான பூமிக்கு அவசியமாய் வேண்டியது. இந்த உரத்தால் பயிரின் உயர்ந்ததன்மையும், வியாதிகளைத் தடுக்கும் தன்மையும் அதிகமாய் உண்டாகிறது. முக்கியமாய் உருளை முதலிய கிழங்குவேர்களையுடைய பயிர்களுக்கு அதிகமாய் உபயோகமாகிறது. இந்த உப்புப் பல விடங்களில் காய்ச்சிச் சேர்க்கப்படுவதல்லாமல் ஜெர்மனி, ஸ்பேயின் முதலிய தேசங்களில் பூமியிலிருந்து எடுக்கப் படுகின்றன.

எந்த நிலத்தில் எந்த உப்பை உபயோகப்படுத்துவதென்று, முதலாவது தெரிந்துகொள்ளுவது மிகவும் அவசியமாயிருக்கிறது. இதற்காக நிலத்தின்மண்ணைக் கொஞ்சமெடுத்து அதில் பயிர்களுக்கு இல்லாத உணவை ரஸாயன சாஸ்திரியைக்கொண்டு தெரிந்து அந்த உணவை அளிக்கும் உப்புஉரத்தை நிலத்தில் சேர்க்கவேண்டும். மற்றோர் நல்லவழியுமுண்டு. நிலத்தின் ஓர் சிறு பாகத்தை 10 சிறுசிறு நீளமான பாகங்களாக்கி ஒரேவிதையை ஏககாலத்தில் விதைத்துக்கீழ் வருமாறு உரங்கள் சேர்க்கவேண்டும்.

1. உரம் போடாத பாகம்.
2. "சோடா நைட்ரேட்" அல்லது நவசாரகந்தகம்.
3. "சூப்பர் பாஸ்பேட்" (Super phosphate)
4. கந்தகமரஉப்பு (Potassium Sulphate)
5. உரம்போடாத பாகம்.
6. "சோடா நைட்ரேட்டும் சூப்பர் பாஸ்பேட்டு" கலந்து.
7. "சோடா நைட்ரேட்டும்," மரஉப்பும் கலந்து.
8. "சூப்பர் பாஸ்பேட்டும்" மரஉப்பும் கலந்து.
9. "சோடா நைட்ரேட்டும், சூப்பர் பாஸ்பேட்டும்," கலந்து.
10. உரம்போடாத பாகம்.

இப்படி உரங்களைக் கலந்துபோட்டு எந்தப்பாகம் செழிப்படைகிறதென்று தெரிந்துகொண்டு பிறகு அந்த உரத்தை நிலம் முழுவதிலும் சேர்க்கவேண்டும்.

செயற்கை அல்லது உப்புஉரங்களைச் சாதாரண ஏழை வேளாளர் உபயோகப்படுத்த முடியாது. இந்தஉரங்கள் நல்ல செழிப்பைத்

தாத்தக்கதாயிருப்பது போலவே விலையிலும் உயர்ந்ததாயிருக்கின்றன. ஆகவே ஜமீன்தார்களும், ஏராளமான ஏக்கர் நிலமுள்ளவர்களும் வாங்கி உபயோகப்படுத்தி வந்தால் இலாபம் பெறுவார்களென்பது திண்ணம்.

## உரம் சீக்கிரம் செலவழியா முறை.

நிலத்தின் உரங்கள் சீக்கிரம் செலவழிந்து போகாமல் பார்க்க வேண்டுமானால் வருஷா வருஷம் வெவ்வேறு விதமான வேளாண்மை செய்யவேண்டும். ஒருவிதப்பயிர் தனக்கு மிகவும் அத்யாவசியமான உணவைமாத்திரம் கிரகித்து மற்றவைகளை நிலத்திலேயே விட்டுவிடுகிறது. பிறகு வேறொரு பயிருண்டாக்கினால் அது தனக்கு வேண்டிய உணவைமாத்திரம் அதிகம் உட்கொள்ளுகிறது. இப்படியாக உரம் அதிகம் செலவழியாமல் பலவித விளைவுகளைப் பெற்று நல்ல இலாபம்பெறலாம். ஆனால் நெற்பயிர் செய்யும் நிலங்களில் இவ்விதம் செய்வதில்லை. நெல்நிலம் (நன்செய்) செழிப்பில் குறைந்து விட்டால் சிலகாலம் தரிசாகப்போட்டு வைதது பிறகு தக்க உரம் சேர்த்துப் பின்வருமாறு வேளாண்மை செய்தால் நன்மையுண்டாகும்.

(1) ஆற்றோரமுள்ள மேடான பூமிகளில்:—
முதல் வருஷம்:-மழையில் எள், கோடையில் புகையிலை அல்லது தானிய வகைகள்.
இரண்டாம் வருஷம்:-மழையில் இந்திய சோளம், கோடையில் சணல் அல்லது நிலக்கடலை.

(2) பள்ளத்தாக்கான இடங்களில்:—
முதல் வருஷம்:-மழையில் இஞ்சி, கோடையில் பருத்தி அல்லது வெங்காயம் அல்லது இரண்டும் சேர்த்து.
இரண்டாம் வருஷம்:-மழையில் இந்திய சோளம், கோடையில் புகையிலை.

(3) புதிய புல் தரையில்.—
முதல் வருஷம்:-மழையில் எள், கோடையில் கோதுமை அல்லது புகையிலை.
இரண்டாம் வருஷம்:-மழையில் இந்திய சோளம், கோடையில் பருத்தி அல்லது புகையிலை.

(4) குன்றான பாகங்களில்:—
முதல் வருஷம்:-மழையில் எள், கோடையில் உருளைக் கிழங்கு
இரண்டாம் வருஷம்:-மழையில் இஞ்சி, கோடையில் புகையிலை அல்லது மொச்சை.

(தொடரும்)

K. G. கிருஷ்ணன் B. Sc. (Hons.)
M. R. A. S., பர்மா.

பசு.

## பஞ்ச கவ்வியங்கள்.

---

உலகத்தில் மாந்தர்க்கு உபகாரத்தில் சிறந்த ஜந்து பசுவினும் மற்றொன்றில்லை. கனியுங் கிழங்கும் கண்டபோதுண்டு மர இலைகளையும் பட்டைகளையும் வகிர்ந்து கட்டி ஆடையாக அணிந்து வீடும் நாடும் நிலையாக இல்லாமல் மாந்தர் வனங்களில் திரிந்த காலத்திலே பஞ்ச கவ்வியங்களுள் சிலவற்றைத் தங்கள் உணவிற்கு ஏற்ற பொருளெனக் கண்டுகொண்டார்கள். முதலில் காட்டுப்பசுக்கள் கரும்பாறைகளில் பெய்துவைத்த பாலாடைகளை மனிதர்கள் தங்கள் உணவுப் பொருளாகக் கொண்டார்கள் நாளடைவில் பஞ்ச கவ்வியங்களின் குணங்களை அறிந்தார்கள். இவ்வியல்பினாலேயே இந்துக்களும் ஏனையோரும் பசுவைத் தெய்வமெனப் போற்றி வருகின்றனர். பஞ்ச கவ்வியங்களின் அரிய குணாதிசயங்களே பசுவை இப்பெருமைக்குக் கொண்டு வந்ததெனலாம். பதார்த்தகுண சிந்தாமணியென்ற வைத்திய நூற்படி பஞ்ச கவ்வியங்களின் பெருமைகளை அறிவோமாக.

### பால்.

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணாளி
சூலையவர் மேகத்தோர் துர்பலத்தோர்—ஏனுமிவர்
எல்லார்க்கு மாகும் இளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின் பால் நாட்டு.

பாலருக்கும் விருத்தருக்கும் பூரணசுரம், விரணம், சூலை, பிரமேகம், துர்பலம், அதிசுட்கரோகம் முதலியனபோகும்.

தயிரால் பசியுண்டாகும் தாகம் ஆயாசம் காசம் சரீர எரிச்சல் முதலானவைகளைப்போக்கும்.

### மோர்.

வீக்கம் மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தம்
தாக்குமருச் திட்டதி சாரமொடு—கூக்குரலே
மாறா திரிதோஷம் மந்தமனல் தாகம்போம்
வீறுவின் மோருக்கு மெய்.

வீக்கம், மகோதரம், வயிற்றுவலி, பாண்டுரோகம், இடுமருந்தால் வருநோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம், தாகம் இவைகளை மோர் நீக்கும்.

## வெண்ணெய்.

கண்ணிலெழு நோயுங் கண்ணெரிச்சல் பீழையும்போம்
எண்ணும் பசியு மெழுப்புங்காண்—நண்ணரிய
ஆவிநறு வெண்ணெய்க் ககலுமே மேகமெல்லாம்
பூவினர்க் கெல்லாம் புகல்

கண்ணோவு, கண்ணெரிச்சல், பீழைசாரல், பிரமேகம் முதலியவற்றை வெண்ணெய் நீக்கும்.

## நெய்.

தாகமுழ லைச்சுட்கம் சத்திபித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல்—மாகாசங்
குன்ம மெனுநோய் குடல் புரட்டல் அத்திசுரம்
சொன்மூலம் போகும் நிரைத் துப்பு.

தாகம், உழலைப்பிணி, அதிசுட்கரோகம், வாந்தி, பித்தாதிக்கியம், வாதவிஷமம், விரணப்பிரமேகம், வயிற்றுவலி, சிலைப்பு, குடல் நெளிதல், அஸ்திகும்பல், மூலரோகம் ஆகியவைகளை நெய் நீக்கும்.

## சாணம்.

ஆவினது சாண மடிபடு வீக்கம் உதிரம்
தாவி வருகிருமி சார்ந்தகப—மேவுசுரம்
தங்குந் தாகம் போக்கும் சாற்றின் மெய்ச் சுத்தியாம்
தெங்கின் பாலுக் கொக்குந் தேர்.

கல் முதலியவற்றால் அடிக்கப்பட்ட வீக்கம், ஒழுகுகிற உதிரம், கிருமிரோகம், கபசுரதாகம் இவைகளைச் சாணம் நீக்கும் தேக சுத்தியுண்டாக்கும்.

## மூத்திரம்.

விடபாண்டு சோபைபல வீக்கஞ் சகல
விடமுதிர மாலையொடுமெத்த—புடவிதனில்
பேசலக்க ணோடுதந்த பீடையுமக ற்றிடுமே
கோசலத்தால் ஆரணங்கே கூறு.



விஷபாண்டு, சோபை, பல வீக்கம், சகல விஷம், அர்ச்சி, காமாலை, பண்ணோய், (நமட்டுச் சொறி) முதலிய பிணிகள் நீங்கும்.

இன்னும் பஞ்ச கவ்வியங்களின் பெருமைகளைக் குறிப்பிடுகின்ற பாடல்கள் தமிழ் மொழியில் பலபடக் காணலாம். ஆங்கில வைத்திய நூல் வல்லாரும் பஞ்ச கவ்வியங்களின் பெருமைகளை விளக்கியுள்ளார்கள்.

இவ்வளவு மேலான குணங்கள் அமைந்த பஞ்ச கவ்வியங்களைத் தமிழ் நாட்டவர் மிகப் புகழ்ந்துள்ளார்கள். அவைகளில் சில அடியில் வருமாறு.

"ஆவினிலைந் தமர்ந்தாய் நீயே" (தேவாரம்)
"கறந்த பால்நெய்யே நெய்யின் சுவையே"
"தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுது மொத்தே"
"நறுநெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார்" (திவ்வியப்பிரபந்தம்)
"பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்ட பிரான்" (திருவாசகம்)
"பாலொத்த நீற்றம்பலவன்" (திருக்கோவையார்)
"பாலு மமுதமுந் தேனுமா யானந்தந் தந்துள்ளே பாலிப்பான்
(திருவிசைப்பா)
"பானலங் கலந்த தீஞ் சொல்" (தாயுமானவர்)
"பாலொடு தேனும் பழத்துளி ரதமும்" (திருமந்திரம்)

வடமொழி இலக்கியங்களில் பஞ்ச கவ்வியங்களின் மேன்மை விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. வடமொழியில் முதல் நூலான இருக்கு வேதம் 9-வது மண்டிலம் முதற் பதிகம் சோம பவமானம் 9-வது பாட்டில் சோமரஸத்தின் மகிமையைப் பற்றிக் கூறும் போது— "இந்திரன் பருகுதற் பொருட்டு ஊறு செய்யப்படாத பால் பசுக்கள் அவன் சுற்றிலுங் கூடியிருந்து புதிய இளஞ் சோமரஸத்தில் தமது பாலைக் கலப்பித்திருக்கின்றன" என்று கூறியுளது. இம்மொழிகளால் பஞ்ச கவ்வியத்திற்கு ஏற்பட்டிருக்கும் பெருமையை உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய பெருமை வாய்ந்த பஞ்ச கவ்வியங்களைக் கொண்டே பசுக்களுக்குப் பெருமை ஏற்பட்டதெனலாம்.

ச. செல்லம்,
சுசீந்திரம்.

# யாதவகுல முன்னேற்றம்.

(63ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வருடம் நடைபெற்றுள்ள சென்னை மாகாண ஐந்தாவது யாதவ மகாநாட்டின் தீர்மானங்கள் பொன்னே போல் போற்றத் தக்கன. முக்கியமாய்க் கல்வியைப்பற்றிய தீர்மானங்கள் இறைவனருளால் யாதவகுலத்தினரின் அனுபவத்திலும் அனுஷ்டானத்திலும் நடைபெற்றோங்கிட வேண்டும். பாரத நாட்டிலுள்ள சகல யாதவர்களும் இம்மகாநாட்டிற் கலந்து அரிய பெரிய விஷயங்களை நிகழ்த்தி அறிவு வளர்ச்சிக்குரிய சொற்பெருக்கிட்டு இம்மகாநாடுதனை அகில இந்திய யாதவ மகாநாடாக விரிவுறும்படி உழைத்திடவேண்டும். கண்யமிக்க யாதவசீலர்களே! நம் யாதவப் பெண்மணிகளின் நிலைமை மிகுந்த கேவலமாகவும் துக்ககரமாகவுமிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் வசிக்கும் நமது யாதவப் பெண்மணிகளைக் கண்ணுற்றால் வறுமைவாய்ப்பட்டு உடலுக்குப் போதிய உணவிலாக் குறைவுற்றும், காதுகளைப் பல அங்குலம் வளர்த்தும் தூசிபடிந்த ஆடை உடுத்தியும் கல்வியறிவின்றியும் கீழ்மக்களைப்போல் ஜீவிக்கின்ற காட்சி நம் இயக்கத்தை நடுக்குறச் செய்யும். ஒரு சமூகம் உண்மையில் முன்னேற்றமடைய வேண்டுமானால் ஆடவரும் பெண்களும் ஒருங்கே நாகரிகம் அமையப் பெற வேண்டும். இஃதுண்மை.

அந்தோ! இத்தகைய நிலைமையில் நமது பெண்ணினமிருக்கையில் நாம் எவ்வாறு முன்னேற்றமடையக் கூடும். வீரஞ்செறிந்த நமது யாதவ வாலிப சிங்கங்கள் கிராமங்கள்தோறும் சென்று, பழைமை பழைமையென்னும் பண்டைய மூடப்பழக்க வழக்கங்களையொழிக்கச் செய்து 'தற்கால நாகரிகத்திற்கேற்ற வண்ணம் கம்மல், தோடு, ரவிக்கை முதலிய ஆபரணம் உடையணியும்படிக்கும் சோம்பல் நீக்கித் தொழில் புரியும்படிக்கும், கல்வி கற்கும்படிக்கும், துண்டுப் பிரசுரங்களாலும் உபந்நியாசங்களாலும் பிரசாரம் செய்திட வேண்டும். விரைவில் நமது யாதவ வனிதாரத்னங்கள் (பெண்கள்) நமது மகாநாட்டில் தலைமை வகித்திடவேண்டும். இந்திய கோகிலமென உலகமெங்கும் விளங்கும் கவியரசி சரோஜினி யம்மையாரைப் போன்றவர்கள் நமது குலத்திலுதித்திடவேண்டும்.



"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல்வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை!"

என்னும் ஸ்ரீபாரதியார் கீதத்திற் கேற்ப நம்குலத்தில் உயரிய நூல்களை இயற்றும் வித்வமணிகளை அடையவேண்டும்.

பல்லாண்டுகள் இருளிலிருந்த யாதவ சமூகத்தின் மகிமையை யாதவமித்திரன் என்னும் ஞானபானுவின் திவ்ய சொரூபத்தின் ஒளியானது உலகம்புகழ விளங்கச் செய்துகொண்டிருக்கின்றது. யாதவமித்திரன் யதுகுலத்திற்கு ஒப்பற்ற கலாநிலயம். பொருள் நிறைந்த பொக்கிஷம். யாதவகுல முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. ஒவ்வொரு யாதவ இல்லத்திற்கும் சென்று நமது குலமித்திரன் இன்பம நல்கிடவேண்டும்.

உலக சரித்திரத்திலே நமது யாதவ சமூகம் விரைவில் உயர்ந்த நன்னிலைபெற்று மிளிருமென நமது யாதவமித்திரன் முரசறைகின்றான். யாதவ சமுதாயம் ஓங்குக! சுபம்! சுபம்!

மு. நாராயணசாமி,
போஸ்டு மாஸ்டர், இண்டான்,
F. M. S. பினங்கு சமீபம்.

# கடவுள்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொருநாளும் காலையில் சூரியன் உதித்து மாலையில் அஸ்தமிக்கிறது. சந்திரனும் அவ்விதமாய் இரவில் ஒளிகொடுக்கிறது. இன்னும் ஒருவருஷகால அளவை நிதானித்துப் பாருங்கள். அந்தப் பன்னிரண்டு மாதங்களும் ஆறு பருவ காலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை: இளவேனில், முதிர்வேனில், முன்பனி, பின்பனி, கார், கூதிர், என்பன. இக்காலங்களில் என்னென்ன நடைபெற வேண்டுமோ அவைகள் சரிவர நடந்தேறி வருவதை யாவரும் அறிவீர்கள். இவைகளெல்லாம் தங்கள் வேலைகளைச் சரிவரச்

செய்யவேண்டுமானால் இவைகளை நடத்த ஒரு தலைவன் இருக்க வேண்டுவது அவசியமன்றோ? அவரைத்தான் நாம் கடவுள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாக நாம் அனுமானித்துத் தெரிந்து கொண்ட பின்னர் நாம் அவரை வழிபட வேண்டுவது அவசியம்.

4. நாம் கடவுளை வழிபடவேண்டிய வகையாவது: அவருக்கு நாம் ஒன்றும் கொடுக்கவேண்டுவது இல்லை. அவருடைய சன்னிதியில் அவருக்கு நல்லபிள்ளையாய் நடந்துகொள்வதேயாகும். அவருக்கு நல்லபிள்ளையாய் நடப்பது எவ்விதம்: அவரால் நல்லவை என்று நமக்குக் காட்டப்பட்டதைச் செய்தும், தீயவை என்று விலக்கப்பட்டதைத் தள்ளியும் வைத்தலேயாம். ஆனால் அவர் நமக்கு நல்லவை, தீயவை என்பதை எவ்வாறு காட்டுகிறார் என்றால், முன் கூறியவண்ணம் அவர் எங்கும் நிறைந்தவர் என்ற இடத்து அவர் ஒவ்வொரு ஜீவனிடத்திலும் ஒரு ஒளிபோல் பொருந்தி யிருக்கிறார். அதுபோல் ஒவ்வொரு மனிதனிடத்தும் அவர் கலந்து இருப்பதை யாவரும் அறியலாம். அதாவது நாம் ஒரு காரியத்தைச் செய்யப்புகின் அது நன்மையாயிருந்தால் நமக்கு மன ஊக்கமும் உற்சாகமும் உண்டாகிறது. இல்லை, அது தீமையாயிருந்தால் நம்முடைய மனமே! அதைச்செய்ய வொட்டாமல் தடுக்கிறது. இந்தவிதமான ஒருவஸ்துவை நாம் மனச்சாட்சி என்று கூறுகிறோம். இந்த மனச்சாட்சியானது எல்லாரிடத்தும் ஒன்று போலிருக்கிறது: அது சொல்லும் பிரகாரம் நாம் நடந்தால் நமக்கு நன்மையுண்டு. அப்பொழுதுதான் கடவுள் நம்மிடம் பிரியம் கொள்ளுகிறார். இத்தன்மைவாய்ந்த கடவுளை நாம் துதிசெய்ய வேண்டுமென்பது அவ்வளவு அவசியமன்று என்பதை,

“விலகரும் அருளின் மீக்கூர்
விமலனை வாழ்த்த வேண்டின்
அலகில்பல் யுகங்களேனும்
ஆயுளாய் மும்மைத்தாய
உலகமோ ருடம்பாய் அந்த
உடம்பெலாம் வாயாய் நித்தம்
பலர்கவி மாலை சூடிப்
பாவினும் முடியுங் கொல்



என்றதனாலும், பகவான் நம்மிடத்தினின்றும் யாதொரு வகையிலும் பிரதியுபகாரத்தை எதிர்பாராதவனென்பதையும் நம்மால் அவருக்குப் பிரதியுபகாரம் செய்ய முடியாதென்பதையும்:

“பொன்னால் பிரயோசனம் பொன்
படைத் தார்க்குண்டு பொன் படைத்தார்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங்
கேதுண்டத் தன்மையேபோல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல்லா
முண்டு உன்றனக்கிங்
கென்னாற் பிரயோசனம் ஏதுண்டுகாண்
இறைவா கச்சியே கம்பனே”

என்ற வாற்றானும் உணர்க.

5. கடவுளை வழிபடுவோமானால் நாம் இகபர சாதகங்களை அடைந்து என்றும் அழியாத பேரின்ப வாழ்வைப் பெற்றுக் கடைசியில் பூலோக வாழ்க்கையை நீத்துப் பரலோகம் என்று சொல்லப்பட்ட நித்திய முமுட்சுவத்தை அடைவோம் என்பது திண்ணம். அவரை எவ்வாறு வழிபடுவது என்பதை ஆராயுங்கால் நாம் அவருக்கு ஒரு உருக்கொடுத்து அதைக் கல்லினாலேயோ அல்லது தங்கம் வெள்ளி முதலான உலோகங்களினாலேயோ செய்து அதற்கு அபிஷேக நைவேத்திய முதலானவைகள் செய்யவேண்டுமென்பது பாமர ஜனங்களுக்காகவே யாகும். மற்றும் கற்று வல்லார்க்கு அவ்வாறின்றி காலையில் எழுந்ததும் நித்திய கடனை முடித்துவிட்டு அப்பொழுது தனது மனதை ஒரு நிலைப்படுத்திக் கடவுளை நினைத்து அவரிடம் நல்லாசி தரும்படி வேண்டிக்கொண்டு பின்னர் உண்டி முடித்து வேலைக்குப் போகவேண்டும். பகற் காலங்களில் அவரை நினைப்பதற்கு எத்தனையோ ஏதுக்கள் ஏற்படுமாதலின் அவ்வேளைகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொண்டு நம்முடைய குற்றங் குறைகளை நீக்கிக்கொள்ள வகைதேடவேண்டும். அவர் நம்மிடம் நலங்காணுந்தோறும் மகிழ்கின்றார். அதுவே அவருக்குப் பிரீதி, அதுவே நாம் அவரை வழிபடுவது ஆகும். இவ்வாறு நாம் அவரை வழிபடாவிட்டால் மானிட ஜென்மம் எடுத்ததன் பயன்

ஒரு சிறிதும் இல்லை. அவ்வாறில்லை என்றால், தான் கற்றுக் கொண்ட கல்வியின் பயன்தான் என்ன?

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்"

இன்னும் இப்பிறவித் துன்பத்தை நீக்கவேண்டுமானால் அவரது பாதாரவிந்தமே ஏதுவாகும்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தவர்"

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்றவற்றால் கண்டு சற்குருவை நாடி நற்பதம் அடையக் கடவுளை வழிபட்டு நற்பதவி பெறவும் நமது சமூகம் முன்னேற்ற மடையவும் வழிதேடும்படி நமது யாதவ மக்களனைவரையும் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

T. R. அழகிய மணவாள தாஸ் (யாதவர்)
Managing Foreman, Sri Meenambikai Press,
Tinnevelly Town. (திருநெல்வேலி டவுன்)

---

குலாபிமானிகளே!

யாதவ மித்திரன் உங்களை மித்திரர்களாகத் தேடி வருகிறான். அவனுக்கு நீங்கள் அளிப்பது ஒரு ரூபாய். அவன் அளிக்கும் பொருளுக்கும் பலனுக்கும் அளவில்லை. மித்திரனை அநாதரவு செய்தலால் அடையும் லாபத்தைவிட ஆதரவு செய்தலால் அடையும் லாபம் எத்தனையோ அதிகம். சிந்தியுங்கள். குலாபிமானத்தைக் கைப்பற்றுங்கள்.

# நமது கடமை.

(53ம் பக்கம் தொடர்ச்சி.)

விலக்கப்பட்டதை விலக்கிக்கொள்ளப் படுவதைக் கொள்ளவே நமது சமூகக் கிளர்ச்சி யேற்பட்டதேயன்றி வேறில்லை. நமது பழமையை மறந்து நமது குலத்தில் புதுப்பழக்கம் கொள்ளவா என நினைக்காதீர்கள். நமது குலத்திலுள்ள அனாசாரக் கொள்கையையும் மூட நம்பிக்கையையும் அடியோடு நெருப்பிலிட்டுக் கொளுத்துவதே யாதவ மக்களின் அறிவுடைமையாகும். எந்தத் தொழிலாயினும் குற்றமுள்ளதை நீக்கிக் குணமுள்ளதை நிறுவுதலே அறிவுடைமையாகும். ஆகையால், ஒவ்வொருவருக்கும் அறிவடையக் கல்வியே தாயாயிருக்கிறதென்று அடிக்கடி நமது குலப் பெரியார்களும் ஏனையோரும் வரைந்து வருகிறார்கள். ஆகவே நமது குலத்திற்குக் கல்வி அவசியம் என்பதைப் பற்றிக் கவனித்துச் செயலில் நடத்த ஒவ்வொருவரும் முன் வரவேண்டும். கல்வியினாலறிவும் அவ்வறிவினா லொழுக்கமும் அடையலாமென்பது திண்ணம். அறிவினாலடையாதது ஒன்றுண்டோ. ஒழுக்கத்தினால் சகல விழுப்பமும் பெறலாம். "ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்" என்றார் நாயனார். சகல செல்வத்தையுந் தருவது ஒழுக்கமாகையால் தனது உயிரைப் பார்க்கினும் பெரிதாகக் கருதப்பட வேண்டியது அது. ஒழுக்கத்திலும் அகவொழுக்கம், புறவொழுக்கம் என இரண்டுண்டு. ஒழுக்கமென்பது தூய்மை யென்பதே. புறந்தூய்மைகொள்ளக்கூழாலும் குளித்துக்குடித்தலும் கந்தையாயினுங் கசக்கிக்கட்டுதலும் ஆம். புறந்தூய்மை கொண்டால், அகந்தூய்மை பிறக்கும். அகந்தூய்மை வாய்ந்தால் அவர்கள் அடையும் பெரும்பேறுக் களவில்லை. தினசரி நீரில்மூழ்கிச் சுத்த வஸ்திரந்தரித்தால் மனத்தெளிவுண்டாகும். மனந்தெளிவடையத் திருவருள் பாலிக்கும். உயர் பொருளிலிச்சை யுண்டாகும். பசியின்மை, சோம்பல் பொறாமை முதலிய தீயகுணங்களெல்லாம் ஒளியைக்கண்ட இருள்போல் ஓடிவிடும். ஆகையால் நாள்தோறும் நம்மவர் எந்தத் தொழில் செய்தபோதிலும் காலையில் அல்லது அவசியத்தொழில் முடிந்தவுடனாவது நீரில் நனைந்து கிழிந்ததாயினும் அழுக்கில்லாத ஆடைதரித்து வெளிப்போவதே ஆண்மையாகும். ஆடையுடையா

னவைக் கஞ்சான். என்பதுபோல் ஆடைமாத்திரம் சுத்தமாயிருக்குமாயின் கூசாது பேச எவருமஞ்சா ரென்பது திண்ணம். ஒழுக்கமொன்றே உயர்குலம். ஆசாரமே மேன்மையடையச் செய்வது. ஆகவே ஒவ்வொருவரும் சுத்தமாயிருந்து நித்தனை வணங்கிவருவோமாக. இன்னும், நமது யாதவ சகோதரர்கள் தெய்வ வணக்கம் செய்வதை நோக்கினல் கண்ணிலான் கண்டகாட்சிபோலாகும். அன்பர்காள்! நமது சமூக முன்னேற்றமடைய முதலாவது கல்வி வேண்டும். இரண்டாவதாகப் பெண்கள் பால் விற்றல் நிறுத்துதல். பிறகு அனுசாரத்தை அடியோடு விலக்கி ஆசாரமா யிருப்பது. இவ்வித முயற்சி எடுப்பதில் இனியொரு பெருங்குறையானது நமது சமூகத்தில் எப்படியோ வந்து நுழைந்து விட்டதே. அந்தோ! அதைப் பற்றி நினைக்கவும் எழுதவும் பார்க்கவுங் கூடாததாயுமிருக்கிறது. நம்மவர்களில் பல பாகங்களிலுள்ள யாதவர்கள், அதிலும் முக்கியமாக நமது பாண்டி நாட்டில் வசிப்பவர்கள், நமது குலப்பெருமானுகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய திருக்கோயில் சந்நிதியைக் கனவிலும் பார்த்திரார்கள். பின்னெது தெரியுமென்பீர்களாகில், நம்மவர் வசிக்கும் தோட்டங்களிலும்,துரவுகளிலும் மூலை முடுக்குச் சந்து பொந்து முதலிய துஷ்கிருத்தியமான இடங்களிலும் வசிக்கும் துஷ்ட தெய்வங்களையே பிரதானமாய்க் கொண்டு அவைகளைக் குலதெய்வமென்றும் வீட்டுத்தெய்வமென்றும், இவ்வித மூடநம்பிக்கை கொண்டு பிதற்றித் திரிகிறார்கள். அந்தோ! இவர்களறியாமை என்ன. நம்மவர்க்குக் குலதெய்வம் மாடனு, காளியா, கருப்பனு, தளவாயா, பட்டரையானு, பொம்மனு, திம்மனு, ஈனனு, சோணனு, ஆஹா! எத்தனையப்பா ஒரு குலத்திற்கு? 64 குலதெய்வமா வேண்டியது? மேலும் இத்தெய்வங்களை நமது குடும்பத்திலுள்ள ஒரு மனிதனிடமா பழக்கி வைப்பது. மனிதனு பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பேய் விரட்டுவது? பேய்தானே பேயை விரட்டிவிடுமா. சிறு தெய்வங்களை வணங்கி நாமடையும் பயனென்ன? மேலும் இவர்கள் கடின உழைப்போடு கொண்ட ஊதியத்தில் பேர்பாதி பேய்க் கூட்டத்திற்குச் சூறையிடுகிறார்கள். ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள நமது சமூகத்தார் காளி, மாடனென்ற சிறு தெய்வங்களுக்கு வருஷத்திலொரு பெரிய திருவிழா நடாத்த மஞ்சளிட்டுக் காப்பிட்டு வரியெழுதிப் பணம் சேகரித்து நடத்துவதைப் பார்த்தால் வெகு வியப்பாக இருக்கிறது. நமது குலத்தவர் சிலர் மாதர்



களும் ஆடவரும் குளித்து முழுகி நல்லுடையுடுத்தி மஞ்சள் பூசி மயிர்வாரிக் கட்டி வில்லடிப் பாட்டும், மாடன், கருப்பன் வேடமிட்டு ஆடும் ஆட்டமும் பார்த்து மகிழ்வது பெருவழக்கமாயிற்று. அன்றுதான் நம்மவர் வீட்டில் விருந்து, நல்லறம், குளிப்பு, மெழுகல் முதலிய ஒழுக்க நடையைக் காணலாம். மற்றை நாள்களில் இவர்கள் குளிக்க நீரில்லைபோலும். மெழுகச் சாணமில்லைபோலும். பூச மஞ்சளில்லை போலும். வெளுக்க வண்ணனில்லை போலும். தேய்க்க எண்ணெய் இல்லைபோலும். அந்தோ இதுவொரு வியப்பு. மேலும், நாம் மந்தை மந்தையாய்த் திரட்டி, நமது மக்களைப்போல மிக்க கருணையோடு வளர்த்ததும்,நமக்குச் சகல குடும்பச் செலவிற்கும் ஊதியமளிப்பதும், நாம் கூப்பிட்டால் பின்னோடு ஓடி வருவது மாய அருமையான உயிர்ப்பொருளை, மனந்துணிந்து, வெட்டிக் கீறி மலை மலையாய்க் குவிக்கக் கொடுக்க மனம் வருமா. அப்படி வெட்டிக் கீறிக் குவிக்கிறதைப் பார்ப்பது மேன்மையா. தெய்வங்கள் அப்படியும், 'தா' என்று நம்மிடம் கேட்கிறதா.

"அம்மாவென அலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுட ரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா னிரைய மென்றால் புசித்தவர்க் கென் சொல்வதே.

என்றபடி நாம் வெட்டும்போது அம்மா! வென்று அலறுமேயொழிய வேறு வெட்டாதே யென்று சொல்ல முடியுமா. ஒரு பாடத்தில் தெய்வ அருள்கொண்ட ஒரு பிராணியானது சொன்னதாகக் கேள்வியுண்டு.

உங்கள் மக்களும் நீங்களும் பேய் கொள்ள
எங்கள் மக்களும் யாங்களு மென் செய்தோம்.

என்றதாம். அதன்படி நமது (மக்களும் நாமும்) பேய்பிடித்தலைந்தால் ஆடு கோழியா பழியாயிற்று. அன்பர்காள்! இக்கொடிய வழக்கத்தை முதன் முதலாக நமது நாட்டில் வழக்கத்திற்குக் கொண்டுவந்த புண்ணியனெவனே அறியோம். அவனிருந்தால் அவனையே வெட்டி நமது குறையை முடிக்கலாமெனத் தோன்றுகிறது. அந்தோ! எந்த ஆகமத்திலாவது ஆடு கோழி வெட்டி ஆண்டவனருள் தேடச் சொல்லி இருக்கிறதா. இக்கொடிய வழக்கத்தை நிறுத்த முன் வரமாட்டீர்களா. அதனால் உங்களுக் கிவ்வளவு

கீர்த்தியென்று அளவிட்டுச் சொல்லி முடியுமா. ஒவ்வொரு அறிவாளிகளும் இக்கொடிய வழக்கத்தை நிறுத்த முற்படுவதே ‘நமது கடமை’ யென ஏற்றுக் கொள்ளுங்கள். பொதுவாக நமது சமூகம் முன்னேற்றமடையச் சிறு தெய்வ வழிபாடு நீக்கினாலன்றி உயர்வடையக்காண்ப தெங்ஙனம். ஆகையால் நமது சமூகம் பெரியார் சிறியார்கள் யாவரும் இக்கொடிய வழக்கத்தைச் சொல்லாலும் செயலாலும் அங்கங்குள்ள அவரவர்களே நிறுத்திவர அதி தீவிர முயற்சி யெடுக்கவேண்டி நிற்கின்றது நமது சமூகம். ஒவ்வொரு சகோதரர்களும் அவ்வப்போது கண்டித்து நல்வழியடைய முற்படுவீராகில் முயற்சி வீணாய் விடாது. ஆகையால், அன்பார்ந்த சகோதரர்களே! நமதுகுல முன்னேற்றத்திற்குக் கல்வி, ஆசாரம், தெய்வ சிந்தனை முதலிய சகல நன்மையும் வேண்டுமென்பது அவசியம். நமது சமூகத்திலுள்ள குற்றங்களையும் அறவே நீக்கி மற்றைச் சமூகங்களைப் போல் நமது சமூகமும் எல்லா நலங்களும் தாழ்விலாதடைய ஒவ்வொருவரும் தமது சொல்லாலும் செயலாலும் நடத்தி மேன்மை யடைவதே நமது முக்கிய கடமையென வேண்டி வற்புறுத்தி நிற்கின்றது நமது சமூகம். சுபம்!

S. நாராயணக் கோன்,
களக்காடு.

---

# பெண்மக்கள் வாழ்வு.

---

அன்பர்களே! சென்ற வியாசத்தில் பெண் கல்வியின் தேவையைப்பற்றி எனக்குத் தெரிந்தவரையில் எழுதியிருந்தேன். அதோடு பெண்மக்கள் வாழ்வு என்னிலையில் இருக்கிறது என்பதுபற்றி நாம் அறியவேண்டிய ஆவசியத்தை முன்னிட்டுத் தற்பொழுது எழுத வந்துளேன். இவைகளைத் தாங்கள் நன்றாக ஆராய்ந்தறிந்து ஏற்றபடி நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றுள்ள எண்ணத்தையே பெரிதும் விரும்புகிறேன்.

நமது நாட்டில் பெண்மக்கள் வாழ்வு பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஆண்மக்களால் பெண்மக்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். நெடுநாள் பழக்கத்தால் பெண்ம



களும் தம்மைத்தாமே தாழ்ந்தவர்களென்று நினைத்துக்கொண்டு தாழ்ந்திருக்கிறார்கள். இதனாலேயே ‘பெண்பிறவியே பாவமான பிறவி’ என்ற மாற்றமான உணர்ச்சியும் வேரூன்றி யிருக்கின்றது. பெண்ணைப் பாவமென்று பழித்தல் பேதைமையாகும். பெண்மணிகளே நாட்டின் கண்மணிகள். பெண்ணின்றேல் மண்வளமுறாது. பெண்மையே உலகை வாழ்விப்பது. பெண்மக்களே நாட்டின் பெருஞ் செல்வம். பெண்மக்கள் வாழ்வே நாட்டின் வாழ்வு. பெண்மக்கள் விடுதலையே நாட்டின் விடுதலை. பெண்மக்களும் ஆண்மக்களோடு சரிசமான மானவர்களே. இருபாலரும் நாட்டிற்கு இரு கண்கள் போன்றவர். ஒரு கண்ணைப் போற்றி ஒரு கண்ணைப் பழித்தல் குறைவுடையதே. பெண்மக்களும் மக்களினத்தைச் சேர்ந்தவர்களே என்ற உணர்ச்சியே நாட்டில் இல்லை. எல்லாவித உரிமைகளும் மறுக்கப்பட்டுப் பெண்மக்கள் மூடக்கட்டுப்பாடுகளால் தளையிடப்பட்டிருக்கிறார்கள். பெண்மக்கள் அடிமைகளாகவே கருதப்படுகிறார்கள். கூலிகளைப்போல் வீட்டு வேலை பார்க்கும் உரிமை ஒன்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. படிப்புரிமையும், சொத்துரிமையும், திருமண உரிமையும், பிற நல்லுரிமைகள் பலவும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

உலக வாழ்வில் பெண்மக்கள் அறிவு வேலைகளிலும், பொது நன்மையான காரியங்களிலும், தலையிட்டுத் தொண்டுபுரிந்து பேரும் புகழும் நற்பதவியும் பெற முடியாதபடி சமூகக் கட்டுப்பாடுகள் தடை செய்கின்றன. படிப்புரிமை இழந்தபடியால் பெண்கள் மிகவும் பாமர நிலையிலேயே இருக்க வேண்டியவர்களாகச் சபிக்கப்பட்டிருக்கிறார்கள். பொருளுரிமை யிழந்தபடியால் அடிமைகளாகவேயிருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். திருமண உரிமை இழந்தபடியால் வாழ்க்கைத் துணையைத்தேடி எடுத்துக்கொள்ளும் பொறுப்பிழந்து வாடித் தவித்தலோடு விலைப்பொருளாகவும் விளங்குகின்றனர். திருமணம், வியாபாரமானதே. பெண்களை அடிமைகளாக்கியதற்குப் போதிய சான்றாகும். மணத்தல், காதலித்தல், கைப்பிடித்தல், வாழ்க்கைத் துணைதேர்தல் என்ற சொற்களின் பொருள் மணமக்களிருவரும் ஒருவரை யொருவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறையையே விளக்குகின்றன. கட்டுதல், தாரை வார்த்தல், விற்றல் என்ற சொற்கள் அடிமைத் தனத்தையும் பெண்ணை கட்டுப்பாட்டு முறையையுமே புலப்படுத்துகின்றன.

உரிமையுள்ள ஒரு கண்மலராக நினையாது சொத்துரிமைகளில் ஒன்றாகமதித்து விற்றலும், கோடலும், முற்றவும் விந்தையே யாகும். இப்பொருந்த முறைகள் நீங்கி அறிவும் உரிமையும் பெற்றாலன்றிப் பெண்மக்கள் ஒரு நாளும் முன்னேற முடியாது. ஆண்மக்களும் பெண்மக்களும் ஒருசேர அறிவுபெற்று ஒற்றுமையோடு உரிமையுடன் வாழ்ந்தால்தான் இன்பவாழ்வு திகழும். இவ்வுண்மையை நம் மக்கள் இன்னும் நன்கு தெரிந்துகொள்ள வில்லை. பெண்மக்கள் வாழ்வு பாழ்பட்டிருக்கும் நாட்டில் என்ன நன்மைகள் பிரகாசிக்கும்? படிப்பில்லாத, உரிமையில்லாத பாமர மனைவி பகுத்தறிவு விளக்கமில்லாத மரஞ் செடி கொடிகளுக்கு ஒப்பே தவிர எந்த விஷயத்திலாவது முன்னேறி வாழ்க்கையில் துணை செய்ய முடியுமா? பாமரத் தாய்க்குப் பிறக்கும் குழந்தைகளும் தாயைப்போல் பாமரமாய்த்தானே பிறக்கும். பாமரப் பிள்ளைகளால் நாட்டிற்குப் பயனுண்டா? பெண்ணைப் பாமரமாக வைத்திருத்தல் பெரும் பாதகமல்லவா? சரஸ்வதி தேவி, லெக்ஷிமி தேவிபோல் விளங்கவேண்டிய பெண்மக்களைப் பாமரர்களாக, அடிமைகளாக வைத்திருப்பது அழகாகுமா? பெண் மக்களுக்குப் படிப்பும், சம உரிமையும் வழங்க வேண்டுவது அவசியமல்லவா? பெண்மக்கள் வாழ்வைப் பண்படுத்தலே நாட்டின் நல்வாழ்விற்கு அடிப்படையான சீர்திருத்தமாகும்.

பெரியோர்களே!

பெண்மக்கள் வாழ்வை நலமுறச் செய்யுங்கள். அப்படிச் செய்யின்

சாத்திரங்கள் பலபல கற்பராம்
    சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள்யாவு மழிப்பராம்
    மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
    கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தியாண் மக்கள் போற்றிட வாழ்வராம்
    இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ!

ஆதலால்,

பெண்ணே! நீ பெருமை பெற்றுப் பொலிவாய். பெண்ணே! நீ ஆள்வாய் வாழ்வாய். பெண்ணே! நீ படித்தும் மிளிர்வாய். பெண்ணே! உனக்கு விடுதலை விடுதலை. பெண்ணே! உன்னை அடிமை என்று நினையாதே. பெண்ணே! நீ நிமிர்ந்து உரிமையோடு உலவுவாய். பெண்ணே! வெல்க. பெண்ணினம் வாழ்க.



அன்பர்களே! பிறநாட்டைப் போல் நமது நாடும் உரிமை பெற்று வாழப் பெண் அடிமை யொழித்துப் பெண்ணுரிமை போற்றி வாழவேண்டுமென்றும் அதற்கு வேண்டியன செய்யும் பொருட்டும் எல்லோர்களையும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சு. ஆண்டியப்பா, பூதப்பாண்டி.

---

## கல்விப் பொருள்.

---

### (மானிடமர்ம பொக்கிஷம்.)

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்கு மாற் றூழுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோன்
மம்மரறுக்கு மருந்து."

உலகின் கண்ணே மனிதர்கள் தேடற்பாலன வாகிய செல்வம் இரண்டுண்டு. அதாவது கல்விப் பொருள். செல்வப் பொருளாம். செல்வப் பொருள் பங்காளிகளாலும், கள்வர்களாலும், வலியவர்களாலும், அரசர்களாலும், கவரப்படும். வெள்ளத்தினாலும் அக்கினியினாலு மழிக்கப்படும்.

கல்விப் பொருள் அப்படியல்ல, ஒன்றாலும் அழிய மாட்டாது. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்கில் குறையும், கல்விப் பொருள் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகும். செல்வப் பொருள் சம்பாதிக்கும் போதும், அதனைப் பாதுகாக்கும் போதும், அதனை இழக்கும்போதுந் துன்பமுண்டாகி யாவரையும் பகையாக்கும். கல்விப் பொருளை யுடையவர்கள், இம்மையில், சொற்சுவை,

பொருட்சுவை அடைதற்கும், விவேக விசாலத்திற்கும், புகழுங் கீர்த்தியும் பெறுதற்கும் உரியவர்களாவதோடு, மறுமையில் மோக்ஷத்திற்கும் பாத்திரர்க ளாவார்கள்.

கற்குங் கல்வியானது இளமையிற் கற்பது, ஆயுள் பரியந்தம் மறவாது. கற்பது குற்றமறக் கற்கவேண்டும். கற்றற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களையே கற்கவேண்டும். கற்றபிறகு அதன்வழியே நிற்க வேண்டும். இதுவே கல்விக்கு அழகு.

அரசனுக்குத் தன் தேசத்தில் மாத்திரம் சிறப்புண்டாகும். கல்வி கற்றவனுக்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்புண்டாகும். உயர்ந்த குலத்திற் பிறந்து அழகும், செல்வமும் உடைத்தா யிருப்பினும் சபையின் கண்ணே செல்வில்,

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனல் மரம்."

என்று பழிப்புண்டாகும். இழிகுலத்திற் பிறந்தாலுங் கல்வியைக் கற்றுத் தேர்ந்திருக்கில்,

"கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்."

என்றபடி பெருமைப் படுத்துவதாகும். நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்பதால், கல்வி யில்லாதவனுக்கு அறிவு விளங்காது. கல்வி எவ்வளவு கற்கின்றானோ அவ்வளவுதான் விவேகமும் இருக்கும். இளமையிற் கற்றபிறகு நாம் எல்லாங்கற்று விட்டோமென்று விட்டுவிடப் படாது. இறைக்கச் சுரக்குங்கேணி, என்பதாய் எஞ்ஞான்றுஞ் சிந்தித்தே யிருக்கவேண்டும். கல்வியில் பண்டிதனாகி, நல்ல நூல்களைச் செய்யில், அவனிறக்கினும் அந்நூலால் அவன் பெயர் இறவாமல் பிரகாசிக்கும். கல்வியைப் பயிலும்போது,

"ஒருமுறை கேட்போன் இருகால் கேட்கில்
பெருக நூலிற் பிழை பாடிலனே
முக்கால் கேட்கில் முறையறிந் துரைக்கும்"

என, ஒரு முறைக்கு மும்முறை ஐயந்திரிபறக் கேட்டுத் தெளிய வேண்டும்.



சிலர், புருஷர்கள் மாத்திரமே படிக்க வேண்டும். ஸ்திரீகள் படிக்கக்கூடாது. ஸ்திரீகள் படித்தால் உத்தியோகஞ் செய்யப் போகிறார்களா. என்று அபிப்பிராயப் படுகிறார்கள். அது ஓர் அபிப்பிராயமே.

(தொடரும்.)

T. R. கருப்பையாக் கோன்,
திண்டுக்கல்.

---

# யாதவ வாலிப சங்கம், சென்னை.

---

சென்னை யாதவ வாலிப சங்கத்தின் ஆதரவில் 1930௵ ஆகஸ்டு௴ 27௳ ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது.

சென்னை கவர்ன்மெண்டு லா மெம்பர் கனம். திவான்பகதூர் சர். எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் தலைமை வகித்தார்கள். இவ் விசேஷ நாளில் திருவாளர்கள் ராவ் சாஹிப் T. C. ஆதிகேசவலு பிள்ளை, B. A., B. L. டாக்டர் P. விஜயராகவலு B. A., M. B. & C. M., C. ஆதிகேசவலு நாயுடு ஆனரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட், T. R. சாரங்கபாணி M. A. T. R. பக்தவத்சலு B. A. M. பாலசுப்ரமணியம் B. A. P. பட்டாபிராமன் B. A. K. வீரராகவன் B. A. E. ஆதிகேசவலு B. A. தீனதயாளு நாயுடு B A., B. L, M. K. ஆராவமுது பிள்ளை, பண்டிதர் வேணுகோபாலபிள்ளை முதலிய பிரமுகர்கள் சுமார் முன்னூறுபேர் வந்திருந்தார்கள். அவர்களுக்கு டீ பார்டி கொடுத்த பிறகு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

திருவாளர் T. R. சாரங்கபாணி M. A. ஸ்ரீகண்ணபிரான் சரித்திரமும் பகவத்கீதையும் என்னும் விஷயத்தை ஆங்கிலத்தில் விமரிசையாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். பிறகு மேற்படி சங்கத்தின் தலைவராகிய திருவாளர் T. S. வேணுநாதக் கோன், F. C. I., M. R. A. S. பின்வருமாறு ஆங்கிலத்தில் பேசினார்.

தலைவர் அவர்களே! கனவான்களே! இக்கூட்டத்திற்குத் தம்முடைய பல அலுவல்களையும் விடுத்துத் தலைமை வகிக்க வந்திருக்கும் கனம். திவான்பகதூர் சர். M. கிருஷ்ணன் நாயர் அவர்

களுக்கு நான் வந்தனம் அளிக்கும்போது நீங்கள் யாவரும் மகா மகிழ்ச்சி கொள்வீர்களென்றே நிச்சயமாகச் சொல்லுவேன். யாதவ மக்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்க மெம்பர் கலந்து கொள்வது இதுதான் முதல் தடவை. அவர் இதற்குச் சம்மதித்தது ஸ்ரீகண்ணபிரான் பேரில் அவருக்கிருக்கும் உள்ளன்பு ஒருபுறமிருக்க நம்குலம் இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு அவர் அடைந்துள்ள அனுதாபத்தையும் காட்டுகின்றது.

எனது நண்பர் திருவாளர் T. R. சாரங்கபாணி ஸ்ரீ கண்ணன் சரிதையைப்பற்றி விரிவாகவும் தெளிவாகவும் பேசினார். ஆனால் பகவக்கீதையிலிருக்கும் ஜாதிப் பிரிவினையைப்பற்றி ஒரு சிறிது பேச விரும்புகிறேன். ஜாதிப் பிரிவினையினால்தான் இந்தியாவிலிருக்கும் இந்துக்கள் பல நூற்றாண்டுகளாக ஒற்றுமையுடனிருந்தார்கள் என்பது எனது அபிப்பிராயம். ஒருவன் தனது ஜாதிக்கேற்ற தொழிலைச் சரிவரச் செய்வானேயாகில் அவன் மோக்ஷத்தை அடைவான் என்ற நம்பிக்கை இருந்ததினால்தான் அவரவர்கள் தத்தம் தொழிலைச் செய்து கொண்டு சண்டை சச்சரவில்லாமல் இருந்தார்கள். ஆனால் மேல்நாட்டுப் படிப்பும் நாகரிகமும் இந்தியாவுக்கு வரவும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நாவலர் இயற்கையாகையால் சில ஜாதி மக்கள் தங்கள் புராதீனத் தொழிலை விடுத்து அதிக சம்பாதனைக்காக வேறு தொழில்களையும் கைக்கொண்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் தற்காலம் தொழிலாளர்கள் கையில் இருக்கும் போதும் நம்முடைய இராஜதானியில் பல மனிதர் ஜாதியிலோ வித்தையிலோ அருகரல்லாதவர்களாக இருந்தும் பெரிய உத்தியோகங்களை வகிக்கும்போதும் இம்மாதிரி மாறுதல்கள் ஏன் உண்டாகாமலிருக்கும்? நான் ஜாதி விஷயத்தைப்பற்றி விவரமாகப் பேச இஷ்டப்படவில்லை. ஆயினும் பகவத்கீதையின் உண்மை தாத்பரியங்கள் மேல் நாட்டில் முன்காலத்தில் கட்டாயப்படுத்தப் பட்டிருந்தால் உலகம் பணத்தையே கடவுளாகவும் ருஷ்யா இப்போது இருக்கும் சீர்கேடடைந்த நிலைமையிலும் இராது. பழமையான ஜாதிப் பிரிவினைகள் இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தது. இப்போதும் புராதீனமக்கள் அதைக் கையாண்டு வருகின்றார்கள். இப்பேர்ப்பட்ட உயர்ந்த கொள்கைகளை ஸ்தாபனம் செய்த ஸ்ரீகிருஷ்ண பகவான் நம் குலத்தில் கலந்திருந்தமையால் நம் குலம் மிகப் புராதீன குலமென்று சொல்வதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. நம் குலத்



தவர் தயை, தாட்சணியம், காருண்யம், விருந்தோம்பல் இவைகளால் நிரம்பப் பெற்றவர்கள். நம் குலத்திலிருந்து பல அரசர்களும், மந்திரிகளும், வீரர்களும் தோன்றியிருந்தனர். ஆனால் இப்போது நாம் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றோம். ஆகையால் இன்று ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் அவர் பெயர் கொண்டவரும் மைனர் அவதாரம் என்று சொல்லப்படுபவருமாகிய கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களின் ஆதரவையும் கோரி இக்கூட்டம் கூடி இருக்கின்றோம். நமது தற்கால நிலைமையைப்பற்றிப் பார்க்கும்போது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. சில நாளைக்கு முன் இராமநாதபுரத்தில் யாதவ மக்களின் கஷ்டங்களையும் மற்ற ஜாதி மக்களால் அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களையும் கேட்டு மிக வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் கல்வி இல்லாமையே. அரசாங்கத்தார் நம்குல மக்களைக் கல்வியில் பிற்போக்கடைந்த குல மக்களுடன் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் உத்தியோக விஷயங்களில் நம்மை அவர்களுடன் சேர்க்கவில்லை. வகுப்புவாரி உத்தியோகக் கவர்ன்மெண்டு உத்தரவு மிகவும் நல்லது. ஆனால் அவ்விடத்தும் அரசாங்கத்தார் நம்மைக் கவனிக்கவில்லை. நம் குலத்தவரைப் படிப்பில் மாத்திரம் மற்ற பிற்போக்கடைந்த குலத்தவருடன் சேர்த்துவிட்டு உத்தியோகத்திற்கு மாத்திரம் மற்ற முற்போக்கடைந்த குலத்தவருடன் சேர்த்திருப்பது ஆச்சரியமே. ஒருகால் இம்மாதிரி செய்தது நமக்கு ஒரு கௌரவம் கொடுப்பதாக அரசாங்கத்தார் நினைக்கிறார்கள் போலும். பகவத்கீதையின் கொள் கைப்படி நாங்கள் திரிகரண சுத்தியாகச் செய்து கொண்டிருந்தோம். என்றாலும் மற்ற குலத்தவர் பல ஆண்டுகளுக்கு முன்பே வித்தையில் இறங்கி அதிகம்பேர் படித்துப் பல உத்தியோகங்களில் அமர்ந்து கொண்டார்கள். ஆனால் நாம் கடைசியில் வந்தோம். அதனால் இப்போது அவஸ்தைப் படுகிறோம். 1921ம் வருஷத்தில் ஜன சங்கைக் கணக்குப்படி இச் சென்னை ராஜதானியில் $16\frac{1}{2}$ லக்ஷம் பேரில் 4636 பேரே ஆங்கிலம் பயின்றிருக்கிறார்கள். இவர்களுக்கும் சரியான உத்தியோகம் கிடைக்கவில்லை. ஆகையால் மகம்மதியர்கட்கும் கிறிஸ்தவர்கட்கும் ஆதிதிராவிடர்களுக்கும் உத்தியோகங்கள் ஒதுக்கி வைத்திருப்பது போல நமக்கும் தனியாக ஏற்படுத்த வண்டுமென்று நாம் நியாயவழியில் முயற்சிக்க வேண்டும்.

கிண்டி, ஸ்ரீரங்கம், மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய இவ்விடங்களில் நம் யாதவ மகாநாடுகள் கூடியது உங்களுக்குத் தெரிந்தவிஷயமே. அவ்விடங்களில் பல தீர்மானங்கள் நிறைவேறின. அவைகள் கவர்ன்மெண்டாருக்கும் தெரிவிக்கப்பட்டன. ஆனால் நம்மக்கள் அடிக்கடி அவைகளைப்பற்றிக் கவர்ன்மெண்டாரிடம் அணுகிப்பேச இடம் ஏற்படவில்லை. சட்ட சபைக்காவது கார்ப்பொரேஷன் சபைக்காவது ஒரு யாதவனாவது இதுவரையில் நியமிக்கப் படாதிருப்பது எனக்கு மிகுந்த வருத்தத்தைத்தருகிறது. கவர்ன்மெண்டாருக்கு நாம் இருப்பது தெரியாதென்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு வருஷமும் நம் குலத்தவரான ஆனந்தரங்க பிள்ளையின் சரித்திரத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டார் பிரசுரித்து வருகிறார்கள். ஆனால் நாம் யாவரும் ஆனந்தரங்கபிள்ளைகள் என்று தப்பான எண்ணம் கொண்டிருக்கின்றார்கள்போலும். நம்குலம் ஸ்ரீ கிருஷ்ண பகவானையும், ஆனந்தரங்கபிள்ளையையும் தன்னுள் கொள்ளாமலிருந்தாலே ஒரு விதத்தில் நமக்கு நன்மையாயிருந்திருக்கும் என்பது சில சமயங்களில் எனக்குத்தோன்றும் எண்ணம். ஏனெனில் நாம் அப்போது தாழ்ந்தஜாதியாரோடு சேர்க்கப்பட்டு நமக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் நமக்குத் தற்சமயம் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

நாம் பழையகாலத்திலிருந்த உயர்ந்த நிலைமையும் தற்சமயம் இருக்கும் தாழ்ந்த நிலைமையும் எண்ணி நம்முடைய தேசாபிமானத்தையும், குலாபிமானத்தையும் உயர்ந்து வளரச்செய்வமாக! ஸ்ரீகிருஷ்ண பகவான் உதவியாலும், சர். கிருஷ்ணன் நாயர் உதவியாலும் நாம் முற்போக் கடைவோமாக! ஆனால் நான் எல்லோரையும் வேண்டிக்கொள்வ தென்னவென்றால் ஒவ்வொருவரும் தாம் செய்யும் வேலையைச் சுயநலம் கருதாது செய்யவேண்டுமென்பதும் எல்லா வித சிறிய வித்தியாசங்களையும் ஒழிக்கவேண்டுமென்பதுமேயாம்.

நாம் எல்லோரும் தலைவராகவும், உபதலைவராகவும், காரியதரிசியாகவும் இருக்கமுடியாது. இன்று நான் உங்களுடைய பெருமையுள்ள தலைவராக நின்று பேசுகிறேன். ஆனால் நாளையதினமே நான் ஒரு சாதாரண மெம்பராக ஆகக்கூடும். ஆனால் யார் எப்படிப் பட்ட நிலைமையிலிருந்தாலும் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவியைச் சங்கத்திற்குச் செய்தே தீரவேண்டும். நம் சங்கத்தின் நன்மைக்



காக ஒவ்வொருவரும் உழைக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி ஓர் உதாரணம் வேண்டுமாயினும் காட்டுகின்றேன்.

நீங்கள் யாவரும் நாகசுரவாத்தியத்தைப் பார்த்தும் கேட்டுமிருக்கின்றீர்கள். வாத்தியம் வாசிக்கப்படும்போது அங்கிருக்கும் ஒவ்வொருவரின் கவனமும் முதல் நாகசுரக்காரனிடமும், இரண்டாவது நாகசுரக்காரனிடமும் மேளக்காரனிடமும் செல்கின்றது. ஆனால் அவர்களுக்குப் பின்னால் ஓயாமல் சுருதி ஊதுகின்றவனை யாரும் கவனிக்கிறதில்லை. ஆனால் அந்தச் சுருதி இல்லாவிட்டால் அந்த நாக சுரக்கச்சேரி பிரயோஜனமற்றுவிடும். இவ்வளவு பெருமையில் அந்தச் சுருதிக்காரனுக்கு ஒரு சிறிதும் இல்லாததுபற்றி அவன் மனத்தாங்கல் அடைகின்றானா? இல்லையே அதுபோல் நம் சமூகத்தவர் ஒவ்வொருவரும் உண்மையாக ஒத்து உழைத்தாலன்றி நம்குலம் முன்னேறாது. ஆகையால் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

பிறகு, கனம் திவான் பகதூர் ஸர். எம். கிருஷ்ணன் நாயர் பின் வருமாறு பேசினார்.

"கனவான்களே!

நான் இவ்விடம் வந்து இவ் விசேஷதினத்தில் கலந்துகொள்ள மிகச் சந்தோஷப் படுகின்றேன். இந்த வாலிப சங்கம் சில மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டிருந்தும் இந்தச் சொல்ப காலத்திற்குள் சென்னையில் ஐந்து கிளைச் சங்கங்களும் பெல்லாரியில் ஓர் கிளைச் சங்கமும் ஸ்தாபிக்கப் பட்டதானது உங்கள் ஒவ்வொருவரின் ஊக்கத்தைக் காட்டுவதோடு உங்கள் சங்கமும் அதன் தலைவரும் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியையும் தெரிவிக்கின்றது. பதினாறு லக்ஷம் யாதவர்களில் சுமார் 5000 பேர்களே ஆங்கிலந் தெரிந்திருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது; ஆயினும் உங்கள் தலைச்சங்கம் இவ்வருஷம் மதுரையிலிருக்கும் ஓர் *பிரபல கனவானின் உதவியால் 500 ரூபாய் வரையில் இலவச சம்பளமாகக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது பெரிதும் மெச்சத் தக்கது. இவ்விதம் பிறகனவான்களும் செய்தால் கூடிய சீக்கிரத்திலேயே உங்கள் சமூகத்தில் படிப்பு விருத்தியாகும். உங்கள் குறைகள் யாவையென இப்போது அறிந்து கொண்டேன். என்னாலான உதவியை உங்களுக்குச் செய்கின்றேன்

* இவர் மதுரை ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கள்.

உங்கள் சங்கம் மேலும் மேலும் விருத்தியாகவும் அது உங்கள் குலநலத்திற்காகப் பாடுபடவும் வேண்டுமென்று கோருகின்றேன்.''

பிறகு ஸ்ரீமான். T. S. சரஸ் தன் வந்தனோபசாரத்தில், சபையோர் யாவருக்கும் அரசாங்க மெம்பர் வந்திருப்பதாகத் தோன்றினாலும் தனக்கு ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே நம்குல முன்னேற்றத்திற்காக நம்மை வேலைசெய்யுமாறு தூண்டலர். கிருஷ்ணன் நாயர் உருவுடன் வந்தமர்ந் திருப்பதாகத் தெரிவதாகவும், இப்போதே நாம் யாவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் சொன்னார்.

பிறகு புகைப்படம் பிடிக்கப்பட்டு ''ஸ்ரீ கிருஷ்ணன் நாயருக்கு ஜே'' என்னும் ஆரவாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

## யாதவ வாலிப சங்கம், சென்னை.

---

யாதவ வாலிப சங்கத்தின் காரியகமிட்டிக் கூட்டமொன்று 1930 நவம்பர்மீ 9உ காலை ஸ்ரீT.S. வேணுநாதக் கோன் F.C.I., M. R. A. S. அவர்களின் தலைமையின்கீழ் கூடிப் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ''பதினாறரை லக்ஷம் யாதவ மக்களில் சுமார் 4500 பேர்களே ஆங்கிலம் படித்தவர்களாயிருக்கிறார்கள். இது முதலான பிற்போக்கை உத்தேசித்து மகஜர் மூலமாகவும், கிண்டி, சீரங்கம், மதுரை, திருநெல்வேலி ராமநாதபுரம் முதலிய இடங்களில் நடந்த சென்னை மாகாண யாதவ மகாநாட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் யாதவர்களைச் சென்னை சட்ட சபைக்கு நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தும் அரசாங்கத்தார் யாதவர்களை இச்சமயமும் நியமனம் செய்யாததால் யாதவ வாலிப சங்க காரிய கமிட்டி அங்கத்தினர்கள் அரசாங்கத்தாருக்குத் தங்களுடைய வருத்தத்தையும், அதிருப்தியையும், தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

2. ''இத் தீர்மானத்தைக் கனம் பொருந்திய கவர்னர் பெருமானுக்கு அனுப்பத் தலைவரவர்க்கு இக் கமிட்டி உத்திரவளிக்கின்றது''.

---

## செய்தித் திரட்டு.

---

குளிர்காலங்களில் வட துருவத்திலுள்ள காடி பனிக்கட்டியால் பல மாதங்களாக மூடப்பட்டிருந்து குளிர்காலம் நீங்கியபின் மறுபடியும் உயிரோடு வெளிவந்து ஜீவித்து வருகின்றதாம்.

ஆப்பிரிக்காவில் நைல் நதியில் உள்ள ஒரு அணைக்கு 6500 அடி நீளமும் 152 அடி உயரமும் உண்டு. இது பூலோகத்திலுள்ள பெரிய அணைகளில் ஒன்றாம்.

காட்லீவர் ஆயில் என்னும் மீன் எண்ணெயை உபயோகிப்பவர்கள் தேங்காயைத் தங்கள் சாப்பாட்டில் அதிகமாகச் சேர்த்து வந்தால் அந்த எண்ணெயினால் அடையக்கூடிய முழுப்பலனையும் அடைவார்களென ஒரு அனுபோகஸ்தர் கூறுகின்றார்.

பெருஞ்சத்தத்துடன் குறட்டைவிட்டுத் தூங்குகிறவர் செவியில் அவர் தூங்குகையில் செவிக்கருகே சீட்டி அடித்துவந்தால் ஒருவாரத்திற்குள் அக்குறட்டை விடுவதை நிறுத்தி விடுவாரென ஓர் ஆங்கிலேய டாக்டர் அபிப்பிராயப் படுகிறார்.

கிராமபோன் பிளேட்டிற்குப் போடுகிற பின் என்னும் ஊசிக்குப் பதிலாகச் சப்பாத்துக் கள்ளி முள்ளை வெட்டிப்போட்டால் பிளேட் நன்றாக வாசிக்கிறதென்று ஒருவர் தம் அனுபோகத்தைக் கொண்டு சொல்லுகிறார். இதனை நண்பர்கள் பரீட்சித்துப் பார்ப்பார்களாக.

அமெரிக்காவில் ஒரு விநோதமான கடிகாரம் செய்துள்ளார்கள் இதனோடு ரேடியோவும் போனகிராப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் பயனாக அக்கடிகாரம் மனிதன் பேசுவதுபோலப் பேசுகிறதாம் அதாவது காலை வந்தனம் மணி ஆறெனச் சொல்லுகிறதாம் அவ்வப்போது அந்தந்த மணிநேரத்தைச் சொல்லுவதோடு வந்தனம் என்றும் சொல்லுகிறதாம்.

ஈ இடும்முட்டை 24 மணி நேரத்தில் குஞ்சாகிறது. அக்குஞ்சு 8 நாளில் தாயாகி விடுகிறது

சில தினங்களுக்கு முன் அத்திகுன்னஸ்டேட் நெல்லியாள உப்பிடு சோலை என்ற ஒரு கிராமத்தில் மாப்பிள்ளை ஜாதியைச் சார்ந்த ஒருபெண் ஒரே முறையில் மூன்று மக்களைப் பிரசவித்தாள் அம்மூன்றில் இரண்டு ஆண் ஒன்று பெண். பெண்குழந்தை இறந்துவிட்டது மற்றிரு குழந்தைகளும் சௌக்கியமாயிருக்கின்றன.

இதுவரையில் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் குடிவெறியேறிய மோட்டார்வண்டி ஒட்டிகளின் அஜாக்கிரதையால் 15000 பேர் கொல்லப்பட்டனர். 5 லக்ஷம் பேர்வரை காயமடைந்தனர்.

தேள் கடித்தால் ஒரு மருந்திருக்கிறது. கடித்த இடத்தில் க்வைனு என்னும் ஜ்வரப் பொடியை வைத்துத் தேய்த்தால் இரண்டு நிமிஷத்துக்குள் நோய் பரிகாரமாய்விடும்.

மனிதர்களுக்கு 21 வயது ஆகிவிட்டால் அவர்களுடைய எலும்புகள் நீளமாகாமல் நின்று விடுகிறதென்றும் ஆதலின் 21 வயதில் எவ்வளவு உயரமாக இருப்பார்களோ அப்படியே ஆயுள் முழுவதும் இருப்பார்களென்றும் வைத்தியர் கூறுகின்றனர். ஆனால் சமீபத்தில் 30 வயதுடைய ஒருமாது இன்னும் வளர்ந்துகொண்டே இருப்பதாகத் தெரிகிறது. அம்மாது ஆறுவாரம் காயலாவாய் இருந்து பிறகு சொஸ்த மடைந்தபோது பார்த்ததில் முன்பு இருந்ததைவிட ஒன்றரை அங்குலம் உயரமானதாகத் தெரிந்தது. மற்றும் ஒரு மாதத்தில் அரை அங்குலம் உயரம் தெரிந்தது இவ்வாறு வளர்வதைக் கண்டு வைத்திய சாஸ்திரிகள் ஆச்சர்யப் படுகின்றனர்.

பாம்பின் கண்களுக்கு வசீகர சக்தி இருக்கிறதெனக் கூறப்படுவது தவறும். அவைகளுக்குக் கண்களே சரிவரத் தெரியாதாம். சில சமயம் இரையாக அகப்படும் ஒரு பிராணியை இரண்டு பாம்புகள் ஒவ்வொரு நுனியிலிருந்தும் விழுங்கிக் கொண்டே போகுமாம்

---

## ஓர் விசேஷக் குறிப்பு.

மதுரைஜில்லா மேலூர் தாலூகா சொக்கலிங்கபுரம் என்னும் கிராமத்திலுள்ள யாதவர்களில் ஒரு சார்பார் சிங்கம் பிடாரி அம்பிபுக்கான்கோன் பாண்டாங்குடி ச. சக்கரைப்பிரவான்கோன் சொக்கலிங்கபுரம் வெ. கருப்பக்கோன் ஆகிய இம்மூவர்களின் முயற்சியால் ஷை கிராமத்திலுள்ள துவாரபதியம்மன் கோயில் கும்பாபிஷேகம் ஐப்பசிமீ 18௳ திங்கட்கிழமை யன்று சிறப்பாக நடைபெற்றது.



## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்

இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.

வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ. 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

# இந்தியவிவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1.

இதில் கமத்தொழில், கால் நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாதமும் வெளிவரும். மாதிரிப் பிரதி இனாம்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

# "Young Yadava"

**An English Monthly.**

Annual Subscription Rupee One.

Will be published by the YADAVA YOUTH LEAGUE, MADRAS. Sample copies will be sent on request. All educated yadavas are requested to send the addresses of their English educated relatives and friends so that an attempt can be made to enrol them as subscribers.

Yadavas who send their subscriptions in ADVANCE will go a long way in helping the Community.

APPLY TO:—

**T. S. Venunadha Kone,** F. C. I., M. R. A. S.,
*Kilpauk P. O. Madras*



**Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE**
**at the Excelsior Press. Madras**








# யாதவ மித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | பிரமோதூத ௵ கார்த்திகை ௴ | பகுதி |
|---|---|---|
| 2 | 1930 ௵ நவம்பர் ௴ | 4 |


பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | 97 |
| இந்தியாவின் கல்வி நிலைமை | 100 |
| சென்னை மாகாண கவர்ன்மெண்ட் | 103 |
| மதிப்புரை | 104 |
| மின்சார உழவு | 105 |
| பரதன் பண்பு | 108 |
| பசுக் காத்தல் | 112 |
| பூங்கோதையார் | 115 |
| ரங்கநாயகியின் எதிர் நிரூபம் | 119 |
| பத்திரிகைகளின் முன்னேற்றம் | 122 |
| கோகில கிருஷ்ணன் | 123 |





Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

# யாதவமித்திரன்.

## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்

(Editorial Board Members.)

தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. எ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வேங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிறுப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டுகோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியுட் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.


# யாதவமித்திரன்.

ஒரு மாதப்பத்திரிகை.


15 JAN 1931

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


| தொகுதி | பிரமோதூதஹு கார்த்திகை மீ | பகுதி |
| --- | --- | --- |
| 2 | 1930-ஹு நவம்பர்-மீ | 4 |


## கடவுள் வணக்கம்.

தாய்நினைந்த கன்றேயொக்க என்னையும்
தன்னையே நினைக்கச்செய்து தான்எனக்
காய்நினைந் தருள்செய்யும் அப்பனை
அன்றுஇவ் வையகமுண்டு மிழ்ந்திட்ட
வாயனை மகரக் குழைக்காதனை
மைந்தனைமதிட் கோவலிடைகழி
யாயனை அமரர்க்கரி யேற்றை என்
அன்பனையன்றி ஆதரியேனே.

திருமங்கையாழ்வார்.

## ஆசிரியர் குறிப்பு.

கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும் இந்திய ஜனசங்கியைக்
கணக்கில் நமது மரபுக்குரிய பெயர்களாக அவ்வவ்விடங்களில் வழங்
கப்படும் பெயர்களுக்குப் பதிலாக யாத்வர் என்ற பெயரையே
பொதுவாகப் பதிவு செய்ய வேண்டுமென்று இராமநாதபுரத்தில்
நடந்த நமது மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய
வேண்டுகோட்படியும் சென்னை ஸ்ரீயதுகுலசங்க வேண்டுகோட்படி
யும் கவர்ன்மெண்டாரவர்கள் சில மாதங்களுக்கு முன் கெஜட்
டில் பிரசுரம் செய்து அந்தப்படியே பதிவு செய்வதென உறுதிப்
படுத்தியிருக்கிறார்கள். ஆதலால் சமீபத்தில் நடக்கப்போகிற ஜன
சங்கியைக் கணக்கில் நமது மரபினர்கள் யாவரும் தங்களது ஜாதிப்

பெயரைக் குறிப்பிடும்போது யாதவர் என்றபெயரையே குறிப்பிடும்படி வேண்டிக் கொள்கிறோம். மித்திரன் வாசகர்கள் தங்கள் பக்கங்களிலுள்ள நம் வகுப்பினர்க்கு இவ்விஷயத்தை நன்கு விளம்பரம் செய்ய முயற்சி யெடுத்துக்கொள்வது உசிதமான காரியமாகும். யாதவர்கள் என்றபெயர் நம் மரபினர்க்குத் தொன்றுதொட்டே உரிமையுடையதென்பது உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் அறியப்படுவது. இப்பெயர் ஆராய்ச்சி தனியாக மித்திரனில் வெளிவரும்.

* * * * * * * *
* * * *

மதுரையில் 18-7-30ல் நடந்த கூட்டத்தில் இராமநாதபுரம் ஜில்லாவாசிகளான யாதவர்களுள் சிலர் வட நாடுகளுக்கு ஆட்டு மந்தைகள் கொண்டுபோகிறவர்கள் பெண்பால்களை உடன் கூட்டிக்கொண்டு போவதால் குழந்தைகளுக்குப் படிப்புக்கெட்டுப்போகிறதென்றும் இதனால் சமூகத்தே பெரிய இழிவு ஏற்படுகிறதென்றும் பலர் எடுத்துப் பேசி இனிமேல் அவ்வாறு செய்வதில்லையெனக் கூட்டத்துக்கு வந்த பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் இராமநாதபுரம்ஜில்லா கோவைசிய யாதவகுல தர்மபரிபாலன சபைக்கு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு செய்திருந்தும் இப்போது சிலர் அந்த ஒப்பந்தத்துக்கு மீறுதலாகக் கிடைகள் கொண்டுபோக எத்தனிப்பதாகக் கேள்விப்படுகிறோம். குல ஆசாரத்துக்கு எவ்வளவோ மேன்மை தரக்கூடிய இந்த ஒப்பந்தத்தை மீறுகிறவர்கள் ஒப்பந்த நஷ்டிக்குக் கட்டுப்படுவதோடு மகாநாட்டினரால் மிகவும் கண்டிக்கப் படுவார்களென்பது திண்ணம். குலாபிவிர்த்திக்குத் தடையாயுள்ள இந்த விஷயத்தைச் சீர்திருத்த ஒவ்வொரு ஊரிலுமுள்ள யாதவ வாலிப சங்கத்தார்களும், ஷை சபை சர்கிள்தார்களும், தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

* * * * * * * *
* * * *

நமது வகுப்பினர் வாழ்கின்ற சில இடங்களில் பெண்கள், மூக்குத்தி, ஒன்னப்பூ முதலிய நகைகளை அணிவது சாதி ஆசாரத்துக்குக் குறைவென்று சொல்லி அவைகளை அணியவொட்டாது நம்மவருக்குள் சிலர் தடுத்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். காலத்துக்குத் தக்கபடி நவீன ஆடை ஆபரணங்களை அணிவதனால் குலாசாரம் கெட்டுப் போகமாட்டாது. ஆதலால் அப்படிப்பட்ட சீர்திருத்தம் அநாவசியமாகும். இனி இம்முயற்சியில் தலையிடாமல் பெண்களை அறி



விலும் நம்நாட்டுக்குரியநவீன ஆடையாபரண அலங்காரத்திலும் முன்னேற்றமடைய வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்வார்களாக.

* * * * * * * *
* * * *

நகரங்களில் நம் வகுப்பினருள் இளமையான பெண்கள், பசுக்களை வீடுகள்தோறும் கொண்டுபோய்ப் பால் கறந்து கொடுக்கும்படி செய்தல், பால் விற்றல் இவைகளால் விளையும் குறைகளை நமது மித்திரன் வாயிலாக அறிவாளிகள் பலர் பலமுறை எடுத்துக் காட்டியும் நம் குலத்திலுள்ள ஆண்மக்கள் இன்னும் கவனித்ததாகத் தெரியவில்லை, மானத்திலும் பணமே பெரிதென்று நினைக்கும் இவர்களது அறியாமைக்கு நாம் பெரிதும் வருந்துகிறோம். இவ்விஷயத்தைச் சீர்திருத்த முதியோர்கள் மூலம் எதிர்பார்ப்பதனால் ஒன்றும் பலிக்கமாட்டாது. ஆதலால் இனிமேல் வாலிபர்கள் இதில் முனைந்து உழைக்க வேண்டும்.

* * * * * * * *
* * * *

சமீபத்தில் நமது மித்திரன் மானேஜிங் பத்திரிகாசிரியரும் மதுரைத்தமிழ்சங்க அங்கத்தினரும்செனட்மெம்பரும் மதுரை முனிசிபல் கவுன்சிலரும் மதுரைத் தாலூகா போர்டு மெம்பரும் புத்தக வர்த்தகருமாகிய ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களுக்கு மதுரை டிஸ்டிரிக்ட் போர்டுமெம்பர் ஸ்தானமும், திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்போர்டு வைஸ்பிரஸிடெண்ட்டும் ஐந்தாவதுயாதவ மகாநாட்டுத் தலைவர் செங்கோட்டை ஸ்ரீமான் S. முத்துச்சாமிக் கரையாளரவர்கள் மருகருமாகிய ஸ்ரீமான் சக்கரபாணிநம்பியாரவர்கள் B A. B. L. அட்வோகேட் அவர்களுக்குச் சென்னை யூனிவர்சிடியில் செனேட்மெம்பர்ஸ்தானமும் கிடைத்திருப்பது தெரிந்து மிகவும் மகிழ்ச்சியுறுகின்றோம். அவ்வாறே நம்மவருள் ஒவ்வொருவரும் முன்னேற்றம் அடைதற்குரிய அந்தஸ்தைப்பெற முயல்வது குலம் அபிவிருத்தி யடைவதற்குரிய நல்ல வழியாகும்.

* * * * * * * *
* * * *

நம்குலத்தினருள் சர்வகலா சங்கத்து (University B.A.M.A. Degree) பட்டம் பெற்றவர்கள் தங்கள் பெயர், உத்யோகம், விலாசம் இவற்றை எழுதியனுப்பினால் அவற்றை நமது மித்திரனில் வெளியிடப்படும். உத்யோகம் இல்லாதவர்கள் அதனைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு வெளியிடுவது நமது வகுப்பினருள் மற்றவர்களது கல்வி விருத்திக்கு ஓர் தூண்டுகோலாகும்.

---

# இந்தியாவின் கல்வி நிலைமை.

ஆர்தர் ஐ. மேயூ. C. I. E., I. E. S.
(லண்டன் டைம்ஸில் எழுதியதின் மொழி பெயர்ப்பு.)

---

1921ம் ஆண்டில் மாகாண மந்திரிகளிடம் மாற்றப்பட்ட கல்வி முறை 1835ல் மெக்காலேயும் பெண்டிங்கும் என்ன நோக்கத்துடன் இதை ஆரம்பித்தனரோ அந்நோக்கங்களில் சிலவற்றை பூர்த்தி செய்துள்ளது. இந்திய ஆட்சிமுறையில் இது அழிக்கமுடியாத சில அடையாளங்களை உண்டுபண்ணி யிருக்கிறது; வைத்தியர், வழக்கறிஞர், வக்கீல் ஆசிரியர்கள்போன்ற பலரை உற்பத்தி செய்திருக்கிறது. மேல்நாட்டாரோடு நெருங்கிப்பழகியதினாலும், தற்காலக்கல்விமுறையோடு சேர்க்கப்பட்டுள்ள கிறிஸ்துமதப்பிரசார கலாசாலைகளின் பலனும் இந்தியசமூகம் புத்துயிர் பெற்றுள்ளது. இராஜீயத்துறையில், இந்தியாவிற்குத் தன் நினைவு பிறந்துள்ளது; தனது மக்களுக்குள் ஒற்றுமை அத்தியாவசியமானதென்பதைத் தெளிவாக அறிந்துள்ளது; இப்போது குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டுமெனவும் அவாவுகின்றது. கல்வியை மாகாண மந்திரிகளிடம் மாற்றுவதற்கு 20 வருஷங்களுக்கு முன்னிருந்து ஏற்பட்ட பெருஞ்செலவின் பயனாகக் கல்வி பெரிதும் விசாலமடைந்திருப்பதோடு உயர்வுமடைந்துள்ளது. பொதுஜனங்கள் கல்வி சம்பந்தமான விஷயங்களில் அதிக அக்கரை காட்டலாயினர். இக்கல்வி முறையின் தாரதம்மியங்களைப் பாரபக்ஷமின்றி ஆராய்ந்தவர்கள் இம்முறை விவசாயிகளுக்கும் இந்திய மாதர்களுக்கும் சிறந்த பயனொன்றையும் விளைவிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர். இஃதல்லாமலும், நடுத்தரக்கல்வி மிகக்குறுகிய நோக்கமுடையதாக இருக்கிறது; சுதேசக்கலைகளை விருத்திபண்ணாது புறக்கணித்ததானது ஒருதேசம் தனது ஆத்மார்த்த வாழ்க்கையின் பயனைப்பெற்றிருக்கும் ஆனந்தத்தை அழித்துவிட்டது.

அடிப்படையான இக்குறைகளை நிவர்த்திக்க 1921வரை சரியான முயற்சியொன்றும் செய்யப்படவில்லை. இந்திய அரசாங்கத்தார், தங்களது நிபுணர்களும் பலவருடங்களாகச் செய்துமுடிக்காத காரியங்களை யோசனைகூறுவதற்குப் போதுமான ஆட்களில்லாதிருக்கும் மந்திரிகள் சாதித்துவிடமுடியுமா என்பதை உணரவில்லை. சிறிதுகாலத்திற்குமுன் சிக்கனத்தின் பெயரால் மத்தியகல்விச்



சபையும் (Central Board of Education), அகில இந்திய யோ
சனைகூறும் உட்சபையும் (All India Advisory Committee.)
எடுத்துவிடப்பட்டன. இராஜீய அமைதியின்மையும், பணமுடை
யும் மிகுந்தகாலத்தில் சிறிது காலமாத்திரம் உத்தியோகம் வகித்து
வந்த மந்திரிகள் கல்விமுறையில் அடிப்படையான மாறுதல்களைச்
செய்து முடிப்பார்களென்று நாம் எதிர்பார்க்கமுடியாது. இவர்களை
ஆதரிப்பவர்கள் எவ்வித மாறுதல்களையும் செய்யும்படி வற்புறுத்தா
திருந்ததிலிருந்து இக்கல்விமுறையைப் பொதுஜனங்களும் விரும்
பினார்களென்று ஏற்படுகிறது. இந்தியமக்களை மேல்நாட்டாராக்
கும் கொள்கைகளுக்கு எதிர்ப்பு உண்டாகவில்லை. சுயபாஷைமூலம்
கல்வி போதிப்பது நாளுக்குநாள் அதிகரித்தது.

1921முதல் ஸ்திரமான வழியில் அபிவிருத்தி உண்டாயது.
1922-27 வருஷங்களுக்கிடையில் முன்னிலும் பன்மடங்கு மாண
வர்கள் பள்ளியில் சேர்ந்தனர். அதிகம்பேருக்கு நல்லவிதமான
கல்விபோதிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் பய
னாகத், தற்போதைய பரீக்ஷாதிகாரிகள் தொகை போதாதாயிற்று.
மாகாணக்கல்வியின் பரீக்ஷாதிகார முறையைத் திருத்தி அமைக்க
வேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது.

## ஆரம்பக்கல்வி.

தற்போதுள்ள ஆரம்பக்கல்வி முறையானது கல்வியின் குறை
வைப் போக்குவதற்குப் பிரயோஜனமற்றதா யிருக்கிறதென்பது
இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. ஒவ்வொரு மாணவனுக்
கும் செய்யப்படும் செலவு அதிகரித்திருக்கிறதென்றாலும்,1891-க்கும்
1921க்கு மிடையில் படித்தவர்கள் 1000க்கு 14 பெயரே அதிகரித்
துள்ளனர். வரப்போகும் ஜனசங்கையின்போது படித்தவர்கள்
தொகை இப்போதைப் பார்க்கிலும் அதிகமாகுமென நினைப்பதற்கு
இடமில்லை. 1921ல் 5 வயதிற்கு மேற்பட்ட ஆடவரில் 100க்கு 14
பெயரே படிக்கத்தெரிந்தவர்கள்.

பையன்களுக்கென ஏற்பட்டுள்ள பள்ளிக்கூடங்களுக்குச் செல
வழிக்கப்படும் தொகையில் பாதிக்குமேல் வீணாக்கப்படுகிறது. ஏனெ
னில், பெரும்பாலான மாணக்கர் ஆரம்பக் கல்வியைமுற்றும் கற்ப
தில்லை; அப்படி முழுதும் கற்பவர்களும் அக்கல்வியிலிருந்து எவ்
விதப் பயனும் அடைந்துள்ளதாக அவர்களது பரீக்ஷை முடிவி

யிருந்து தெரியவில்லை. கிரமமாகப் பள்ளிக்கூடத்திற்கு வராமலிருப்பதும், சிறிது காலமாத்திரம் பயில்வதும், ஒரு உபாத்தியாயரால் மாத்திரம் நடத்தப்பட்டுவரும் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்படும் பல கஷ்டங்களும், விவசாயிகள் கல்வி பயில்வதில் சிரத்தை யில்லாதிருப்பதுமே ஆரம்பக்கல்விக்குப் பெரும் தடைகளாக இருக்கின்றன. இந்த வகுப்பினர்களுக்கும், நகரங்களில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு மிடையில்தான் இக்கஷ்டம் ஏற்படுகிறது. அதிக ஜனங்கள் வசிக்குமிடங்களில் ‘படித்த ஜாதியினரும், கல்வி மூலமாகவே ஜீவனஞ்செய்கிற வகுப்பினரும் பெருந்தொகையாகச் சேர்ந்து கல்வி பெறுகின்றனர். ஆனால், 100க்கு 74 பேர் விவசாயிகளாயிருக்கிறார்கள். 70,000,000 ஜனங்கள் நல்லகல்வி போதிப்பதற்கான வசதிகளில்லாத கிரமாந்தரங்களில் வசிக்கிறார்கள்.

1911ல் கோகலே என்பவர் செய்த கிளர்ச்சியின் பயனாய் மாகாணங்களில் ஆண்களுக்கு மாத்திரம் கட்டாயப்படிப்பு அறைகுறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூன்று முக்கிய மாகாணங்களில் 119 நகரபரிபாலன சபைகளில் கட்டாயப் படிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வி ஏற்படுத்தப்பட்டுள்ள முற்போக்கான பாகங்களில் கல்வி அதிகச்செலவில்லாததாகவும் திறமை வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஆனால் இன்னும், விசாலமாகவும் முன்னிலும் அதிகப்பயன் விளையக்கூடிய விதமாகவும் இருக்கவேண்டுமாயின், மாகாண அரசாங்கத்தார் பணப்பொறுப்பை யேற்றுக்கொள்ளவும் கட்டாயக் கல்வியை வற்புறுத்துவதற்கும் சித்தமாயிருக்கவேண்டும். இந்தியாவில் உள்நாட்டு உத்தியோகஸ்தர்கள், இங்கிலாந்து வேல்ஸ் முதலிய இடங்களில் உள்ளவர்களைப் பார்க்கிலும் அதிக சுவாதீனமுடையவர்களா யிருப்பினும், அவர்களுக்குள்ள மத்திய கல்விச்சபை (Board of Education) யின் நிபுணர்களின் ஆலோசனையும் அனுபவமும் இவர்களுக்கில்லை.

## சர்வகலா சாலைகள்.

பையன்களுக்கு நடுத்தரக் கல்விபோதிக்கும் பள்ளிக்கூடங்களில் உயர்ந்த சம்பளமும் அதிகப் பயிற்சியும், நவீன சாஸ்திரப் படிப்பிற்கான வசதிகளும், தொழிற்கல்வியும், மாணவர் விடுதிகளும், விளையாட்டுகளும், வேலைத்திறனை அதிகரித்துள்ளன. பள்ளிக்கூட வாழ்க்கையும் பெரிதும் மாறியுள்ளது. ஆனால் இப்



போது வழங்கப்படும் கல்வியைப்பயிலுதற்குப் பெரும்பாலான மாண
வர்கள் தகுதியுடையவர்களன்று என்பது பரீக்ஷை முடிவுகளினின்
றும் அறியக்கிடக்கின்றது. இப்போது வேண்டப்படுவதென்னவெ
னில், தற்காலக் கலைகளுக்கு அஸ்திவாரம் போடும்படியான பள்ளிக்
கூடங்களைக் கைத்தொழிற் பள்ளிக்கூடங்களாக முழுதும் மாற்றி
விடுவதல்ல; ஆனால்பொதுக்கலையைத்தொழிற் கல்வியுடன் சேர்த்துப்
போதிப்பதோடு நானாவிதப் பள்ளிகளை உண்டுபண்ணிக் கல்விகற்போ
ரின் மனதை அரசாங்க உத்தியோகத்திற்கும் வைத்தியர், வக்கீல்
முதலிய உத்தியோகங்களுக்கும் செல்லாதவாறு தடுத்து, இவை
களைப்போல சமகண்ணியம் வாய்ந்த வேறு தொழில்களில்
இறங்கும்படி செய்வதேயாகும். (தொடரும்)

---

# சென்னை மாகாண கவர்ன்மெண்ட்.

## சட்ட இலாகா (பொது) பகுதி.

---

கவர்ன்மெண்ட் அறிக்கை நெம்பர். 3631.29-ம் தேதி, ஆகஸ்டு
மாதம், 1930 வெளிவந்த பிரசித்தம்.

எல்லாவித உத்தியோகத்துக்கும் பொருத்தமான சாதனத்தில்,
‘யாதவாள்’’ என்ற பொதுப் பெயரை உபயோகிக்க வேண்டும்
என்று சென்னை ஸ்ரீயதுகுலமகா சங்கம் வேண்டிக் கொள்ளுகிறது.

இதன் விஷயமாய் சென்னை ஸ்ரீயதுகுலமகா சங்கத்தின் காரிய
தரிசி சென்னை கவர்ன்மெண்டுக்கு 19—3—1930, 16—6—1930
களில் இரண்டு வேண்டுகோட்கள் அனுப்பினார். சென்னை கவர்ன்
மெண்ட், போர்ட் சென்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரமான அறிக்கை
நெம்பர் 3631. 29, ஆகஸ்ட், 1930:—

இதனால் யாவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது
யாதெனில்:—

இடையர், கொல்லர், கோபர், கௌடர் என்னும் பல பெயர்
களுக்குப் பதிலாக “யாதவர்’’ என்னும் பொது வார்த்தையை
உபயோகிக்க வேண்டும் என்ற சென்னை ஸ்ரீயதுகுலமகா சங்கத்தின்
வேண்டுகோளை, மேற்படி சங்கம் கவர்ன்மெண்டாரிடை அதனு
டைய அறிக்கையில் அவசியமான திருத்தங்கள் செய்யவேண்டு
மென்று கேட்டுக் கொள்ளுகிறது. கவர்ன்மெண்ட் முடிவான
கட்டளை செய்கிறதற்குள் எந்த யாதவராவது, இதற்கு வேண்டிய
அங்கீகாரமாவது, ஆட்சேபனையாவது 1930ம் வருஷம் டிசம்பர்மீ
1-ந் தேதிக்குள் அனுப்பலாம்.

எம். கே. ஆராவமுது பிள்ளை.

# மதிப்புரை.

"அமிர்தகானம்" என்னும் ஒரு பக்தி சம்பந்தமான கீர்த்தன நூலொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். அதனைப் பார்க்குமிடத்து அந்நூல் பக்தி ரசமலிந்து நவீன வர்ணமெட்டுகளோடு அமைந்து சொல்லினிமையும் பொருள் ஆழமும் பொருந்தி இலக்கண வழுக்கள் இன்றித் திகழ்கின்றது. இதனை இயற்றிய திருவாளர் V. S. வீரணக் கோனாரவர்களது அரிய புலமைத் திறத்தைப் பெரிதும் வியக்கின்றோம். சங்கீதப் பிரியமுள்ள பக்திமான்கள் இந்நூலை ஆதரித்து மேலும் இத்தகைய இசைநூல்களைக் கோனாரவர்கள் ஆக்கும்படி ஊக்குவார்களாக. இதன்விலை அணா 0—5—0. வேண்டுவோர் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

வீ. எஸ். வீரணக்கோனாரவர்கள்,
வித்வானந்தபாலியம் அம்பலத்தாடி, சமயநல்லூர் P. O. மதுரை Do.

புதுவைமுரசு என்னும் வாரப் பத்திரிகையின் முழக்கம் 1. ஓச்சு 4. நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இப்பத்திரிகை புதுச்சேரி திருவாளர் க. ராமகிருஷ்ணன் என்பவரே ஆசிரியராகக் கொண்டு திங்கட் கிழமைதோறும் வெளிவருவது. இதில் அமைந்துள்ள கட்டுரைகளை ஆராயுமிடத்து இப் பத்திரிகை சாதி சமயப் பிணக்குகளையும், தீண்டாமையையும் புராணக் கதைகளால் உண்டாக்கும் மூட நம்பிக்கைகளையும் போக்கிச் சுயமரியாதை என்னும் இயக்கத்தை நாட்டுதலே இதன் முக்கிய கருத்தென்று தெரிகிறது. கட்டுரைகள் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இனிமை பயக்கும் நடையில் அமைந்துள்ளது.

இதன் வருட சந்தா உள்நாட்டிற்கு 3—0—0
" வெளிநாட்டிற்கு 5—0—0

"தனவைசியன்" இது ஓர் உயர்தர மாதப் பத்திரிகை. இதன் முதவிதழ் வரப்பெற்றோம். இதனுள் தமிழ் இலக்கியம், கைத்தொழில், வியாபாரம், பெரியோர் சரிதம் பல உலகியல் நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றைப் பற்றிய அரிய கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. இத்தகைய மாதச் சஞ்சிகைகள் நமது நாட்டின்கண் சொற்பமாகவே உலாவி வருகிறபடியால் தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் இதனை ஆதரிப்பது அவசியமாகும். திரு K. ராமநாதன் செட்டியார் B. A. B. L. அட்வோகேட் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஆசிரியக் கழகத்தாரால் வெளிவருவது. நல்ல கடிதத்தில் அழகிய தோற்றமுடையது. இதன் நிர்வாக ஆசிரியர் கோட்டையூர் திரு. கருப்பஞ் செட்டியார்.

இதன் வருட சந்தா உள்நாட்டிற்கு 2—0—0
வெளிநாட்டிற்கு 2—8—0

---


# மின்சார உழவு.

## (வேளாண்மையில் மின்சார உபயோகம்.)

K. G. கிருஷ்ணன் B. Sc. (Hons.) M. R. A. S.

(7வது பக்கத் தொடர்ச்சி)

சென்ற மாதப் பகுதியில் மின்சாரம் பெறும் முக்கிய வழியைப் பற்றியும் நிலத்தை உழுது பண்படுத்துவதற்குச் சில சமயம் இரண்டு மின்சார இயந்திரங்களைக் கொண்டு கலப்பையை அங்குமிங்கும் இழுப்பதற்குப் பதிலாக ஒரே இயந்திரத்தை உபயோகப் படுத்தலாமென்பதைப் பற்றியும் ஆராய்ந்தோம்.




1. கலப்பையை இழுக்கும் மின்சார இயந்திர வண்டிகள், 2. கலப்பை. 3. சாதாரணவண்டி.

இரண்டு இயந்திரங்களையுடைய கலப்பைக்கு வடம் அதிகம் தேவையில்லை. எவ்வித கரடுமுரடான நிலத்திலும் உபயோகப் படுத்தலாம். சுமார் 650 கெஜ தூரம் கலப்பையை இழுத்து உழுகலாம். ஆனால் இரண்டு இயந்திரங்களுக்கு அதிகச் செலவாகிறது. ஒரே இயந்திரத்தையுடைய கலப்பையில் செலவு கொஞ்சமானாலும் வடம் அதிகம் வேண்டும். மேலும் மேட்டுப் பாகங்களில் உபயோகப்படுத்த முடியாது.

மின்சார இயந்திரக் கலப்பையை ஓய்வில்லாமல் உபயோகப் படுத்த வேண்டும். தனக்கு வேலை முடிந்து விட்டாலும் மற்ற சில்லரைக் குடியானவர்களுக்கு வாடகைக்கு வேலை செய்துவா விட

வேண்டும். அப்படியில்லாவிட்டால் இயந்திரத்தாலடையும் இலாபம் குறைந்துவிடும். மின்சார இயந்திரத்தை மற்ற வேலைகளுக்கும், கதிர்களறுக்கவும், அடிக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

| உழவின் ஆழம். | | ஒரு மணிக்கு உழவாகும் நிலம். | | ஒரு ஏக்கருக்கு மணிக்குச் செலவாகும் மின்சாரம் | |
|---|---|---|---|---|---|
| 6 | அங்குலம் | $2\frac{1}{2}$—3 | ஏக்கர் | 14 | "கிலோவாட்" |
| 10 | ,, | $1\frac{3}{4}$ | ,, | 18 | ,, |
| 13 | ,, | $1\frac{1}{4}$ | ,, | 24 | ,, |

ஒரு மணிக்கு ஒரு "கிலோவாட்" (Kilowatt) மின்சாரத்திற்கு 1 பென்ஸிலிருந்து 3 பென்ஸ் வரை செலவாகும். ஒரு மணிக்கு 3 மைல் அங்குமிங்கும் இழுக்கப்படும். 3 அடி அகலக் கலப்பையால் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரத்தில் குறைந்தது 8 ஏக்கர் நிலத்தை இலேசாய் உழுது பண்படுத்தி விடலாம்.

## மின்சாரத்தால் தாவர விருத்தி.

பயிர்ப் பூண்டுகள் முளைத்திருக்கும் நிலத்திற்கு மேலே உலாவும் வாயுவில் * மின்சார அலைகளைச் செலுத்தினால் விளைவு அதிகப்படுவதாகக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பயிர்களுக்கு மேலே சுமார் 2 அடி உயரத்தில் மின்சாரம் அங்குமிங்கும் ஓடுவதற்கு நெடுநீளமாகக் கம்பிகளைச் சமதூரங்களில் அமைத்துப்பார்வைக்கு ஓர் பந்தலைப்போலிருக்க வேண்டும். கம்பிகளைத் தாங்கி நிற்க நிலத்தின் சுற்றுப்புறங்களில் பருத்த இருப்புக் கம்பிகளை நிறுத்தவேண்டும். குறுக்காகக்கம்பிகள் செல்லக்கூடா. இக்கம்பிகளை வேண்டும்போது உயர்த்தவும், தாழ்த்தவும் பிரிக்கவும் கூடியதாயமைத்திருத்தல் வேண்டும். இப்பொழுது, பலமான (அதிகமான) மின்சாரத்தைக் காலை மாலை இருவேளையும் சில மணிநேரம் வரை இக்கம்பிகளில் செலுத்திவரவேண்டும்; இவ்விதம் அமைக்கப்படும் கம்பிகளுக்கு அதிகச் செலவில்லை. இவைகளை வருஷா வருஷம் உபயோகித்து விளைவை அதிகப்படுத்தலாம். கம்பிகளிலிருந்து மின்

*மின்சாரத்தை (alternating current) வெட்டவெளியில் செலுத்தினால் தண்ணீரில் உண்டாவதுபோல் அலைகளுண்டாகிப்பறந்தோடுகிறது.



சார ஒழுக்கு, காற்றைக்கடைந்து பயிர்களில் தாக்கிப் பூமியை நாடி ஓடுவதால் காற்றில் கலந்திருக்கும் உப்புவாயுவைப் பயிர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதல்லாமல் மண், பயிர்களுக்காகப் பண்படுத்தப்பட்டுக் காற்று, தண்ணீர் முதலியவை இலகுவில் கிரகிக்க நல்ல வசதிகளேற்படுகின்றன.

வெண்கலக்கம்பிகளை $4\frac{1}{2}$ கெஜம் சமதூரமாகப் பூமிக்குமேல் 7 அடி தூரமாக அமைத்து 3 "ஆம்பியர்" அளவான மின்சாரத்தை மொத்தம் 848 மணிநேரங்களுக்கு உபயோகப்படுத்தியதில் தானியத்தில் 100க்கு 88 வீதம் அதிகமாகத் தானியம் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. மேலும் வருஷா வருஷம் விளைவு அதிகமாவதாகவும் தெரிகிறது. இவ்விதமாக வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு முதலிய தோட்டங்களிலும் மின்சாரத்தை உபயோகித்துப் பலனடைகின்றனர்.

விதைப்பதற்குமுன் விதைகளை உப்புத்தண்ணீரில் ஊறவைத்து மின்சாரத்தை அவைகளுக்குள் செலுத்திப் பின்பு காயவைத்து விதைப்பதினால் விளைவு அதிகப்படுவதாகக்கூறுகின்றனர். ஆனால் இம்முறையை அதிகமாக இன்னும் உபயோகப்படுத்தவில்லை.

மின்சார வெளிச்சத்தைச் சூரிய வெளிச்சத்திற்குப்பதிலாகப் பயிர்களுக்கு உதவி விளைவை இரண்டு பங்கு அதிகப்படுத்தியிருக்கின்றனர். சில (தோட்டப்) பயிர்களை மின்சார வெளிச்சத்தால் அதின் சரியான காலத்திற்கு முன்னதாகவே புஷ்பிக்கச் செய்து அதிக விலைக்கு விற்று இலாபம் பெறுகின்றனர். ஏனெனில் காலந்தவறி விளையும் விளைவுக்கு அருமையானால் அதிக விலைகொடுக்க வேண்டுமல்லவா?

இரசாயன சாஸ்திரப்படி நிலங்களுக்கு "நைட்ரேட்" என்ற ஓர் உப்பு நல்ல உரமாகிறது. இது தென்னமெரிக்காவிலிருந்து அதிகமாய் வரவேண்டும். இதற்குப்பதிலாக "அம்மோனியாசல்பேட்" என்ற உப்பை உபயோகப்படுத்தலாம். இதற்காக உப்புவாயுவும் வேண்டும். இந்தவாயுவை ஆகாயத்திலிருந்து மின்சாரத்தால் வெகு இலகுவில் பிரித்துக்கிரகிக்கக்கூடும். ஆகவே நிலங்களுக்கு உப்புவாயுவினலான உரத்தை உபயோகப்படுத்தலாம்.

முன்பு கூறியபடி உழவுக்கு வேண்டிய மின்சார இயந்திர வண்டியைக்கொண்டு கதிர்களை வெகு எளிதில் அறுத்துச்சேர்த்து அடித்துத்தானியங்களைக்குவித்து விடலாம். நீராவி இயந்திரங்களைவிட மூன்றிலொரு பங்கு அதிகமாக மின்சார இயந்திரம் வேலை

செய்யும். கதிர்களை அடித்து வைக்கோலையும், தானியங்களையும் பிரித்துக் குவிக்க மின்சார இயந்திரங்களை வெகு சுலபமாக உபயோகப் படுத்தலாம். மழையில்லாக்காலங்களிலும் ஊற்றுகளிலிருந்து மின்சாரத் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தால் வேண்டிய தண்ணீரை 25 அடி ஆழத்திலிருந்து 100 அடி உயரம் வரை வேண்டும்போது தண்ணீர் இறைத்து வேளாண்மை செய்யலாம். மனிதரையும், மற்ற இயந்திரங்களையும் உபயோகப்படுத்துவதில் காலதாமதமும், வீண் செலவும் ஏற்படுகிறது.

## மின்சாரத்தால் பால்கறத்தல்.

ஓர் சிறிய மின்சார "மோட்டரை"க் கொண்டு பசுக்கள் வெகு சுலபமாகப் பால் கறக்கப்படுகின்றன. இந்த இயந்திரங்களால் பால் கறந்தவுடன் அந்தப்பால் சுத்தமாக அதற்கான பாத்திரத்தில் சென்று விழவும் அசுத்தம் சேராதவண்ணம் செவ்வையாக மூடவும் படுகிறது. கொசு முதலிய பூச்சிகள் விழுந்து கெடுக்க இடமில்லை. ஒரு குதிரைப்பவரை * (சக்தியை) யுடைய மின்சார இயந்திரத்தால் 10 பசுக்களை வெகுவிரைவில் பால்கறந்து விடலாம். $8\frac{1}{2}$ குதிரைப் பவரையுடைய ஒரு இயந்திரத்தால் 70 பசுக்களை ஒரு நாளைக்கு இரண்டுதடவை பால் கறந்து வருகின்றனர். இப்படிக் கறப்பதற்கு மேல்பார்க்க ஒரே மனிதன் போதுமானது. கணக்குப்பார்க்கும் போது பால்கறக்கும் இயந்திரச்செலவு ஒரு பசுவுக்கு $\frac{1}{18}$ பென்ஸ—தாகுகிறது. சுமார் ஒரு பைசா வென்று கூறலாம். வெண்ணெய் கடைந்தெடுக்கையில் இழுத்துக் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் மின்சாரயந்திரத்தால் வெகு சீக்கிரத்தில் பாலைக்கடைந்து விடலாம்.

(தொடரும்.)

---

# பரதன் பண்பு.

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் பீ. ஏ)

உண்மையாய் நடந்த சரித்திரம் என்று பலரும், அன்று என்று சிலரும் கூறி இராமகாதையை ஆராய்ச்சி அறிஞர் ஆராய்வது ஒருபுறமிருக்க, இவ்வுலகம் போற்றும் உயரிய நூலாம் இராமகாதையில் அரும் பெரும் நீதிகள் பலபொதிந்து வைக்கப்பட்டிருக்கின்றதென்பதை மறுப்பவர் ஒருவருமிலர். நீதிகள் பலவற்றினும், சகோதர ஒற்றுமைக்குத் தலை சிறந்த சான்றாய் அமைந்த சரித்திரம் இது ஒன்றேயென்று யான் கூறுவேனேயானால் அது ஒரு சிறிதும்

* குதிரைப்பவர் = 500 பவுண்டை ஒரு விநாடியில் ஒரு அடி தூரம் உயர்த்தும் ஒன்றின் சக்தி. = 746 "வாட்ஸ்" (மின்சார அளவில்)



பிழையாகாது. இச்சகோதர ஒற்றுமை என்னும் பயிரை வித்திடாது விளைத்த பெருமகன் பரதன் என்பதும் வெள்ளிடைமலை.

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் இராமனையும் பார்"

என்னுஞ் செய்யுளில் இவ்வுலகில் வாழ்ந்த பெருமக்கள் பலருள்ளும் சகோதர ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்த பெருமக்கள் இராமனும் பரதனுமேயாவர் என்பது விளக்கமுறும். இவ்வாறு உலகம் போற்றும் உத்தமனும் பரதனது பண்பை, கம்பரது கவி நலத்தில் யானறிந்தமட்டில் எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இராமகாதையில் பரதனைப் போற்றாத பாத்திரங்கள் ஒருவருமிலர். முதன் முதல் பரதனை நமக்கு அறிமுகப் படுத்தும் இடத்திலேயே கவியரசர் கம்பர், பரதன், நீதியின் நிலையமாக விளங்குகின்ற தன்மையை அழகாக எடுத்துரைக்கின்றார். நீதி என்னும் பெருவெள்ளம், தடுத்தற்கரிய வேகத்துடன் ஓடியும், கடையிசில் பாய்ந்து பெருகுதற்குரிய பள்ளமாய் விளங்குபவன் நம் பரதனே என்று, முனிவன் மிதிலைமன்னனிடம் எடுத்துரைக்கும் நயம் கற்றோர் உளத்திற்குக் களிபேருவகை தருவதாகும்.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ள மெனும் தகையானை, பரதனென்னும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள் பயந்தாள்"

என்பது நல்லியல் கவிஞரின் நலமுடை வாக்காகும்.

அறத்தின் வழி நின்ற ஆரியர் கோனுக்கு, முடிசூட்ட விரைகின்றான் மன்னர் மன்னன். இன்னல் செய் இராவணன் இழைத்த தீமையெல்லாம் திரண்டுரு வெடுத்த கிழக் கூனியின் மாற்றத்தால் மனம் திரும்பி கேகயர் கோமகள், "ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே யாளவும், இராமன் தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம் மேற்கொண்டு" பதினான்காண்டு கானகத்தில் அலையவும் வேண்டும் என்னும் வரங்களை மன்னனிடம் பெறுகின்றான். இவ்வாணையைத் தலைமேற் கொண்ட காகுத்தன், தன் காதல் தாயாம் கோசலையையடுத்துச் சொல்லும் மொழிகளில் பரதனது பண்பு பரந்து விளங்கக் காணலாம்.

"நின் காதல் திருமகன்
பங்கமில் குணத்து எம்பி பரதனே
துங்கமாமுடி சூடு கின்றான்"

என்று தன்னைப்பெற்ற தாய்—தனது முடிசூட்டு விழாவை எதிர்பார்த்து நிற்கின்ற தாயிடம், தனக்கு முடிசூட்டப் பெறும் என்று கருதிய இராமன் கூறுஞ் செம்மொழி பரதனது பங்கமில் குணத்தைப் பெரிதும் விளக்குகின்ற தன்றோ. இம்மட்டோ இராமன்தான் இவ்விதம் கூறினான் என்றால், அவனைப் பெற்ற தாயும்,

"முறைமை யன்றென்ப தொன் றுண்டு மும்மையின்
நிறை குணத்தவன் நின்னினும் நல்லன்"

என்றே பரதனைப் போற்றி யுரைக்கின்றாள்.

"கேகயர் கோமகள் இழைத்த கைதவம்" பரதனுக்கு ஒரு சிறிதும் உடன்பாடன்று என்பதைக் கவியரசர் கம்பர் வலியுறுத்தும் இடங்கள் காவியத்தில் பலவுள. கைகேசியின் சூழ்வினையால் சோக முற்ற மன்னவனும், "கொள்ளான் நின்சேய் இவ்வரசு" என்றே பரதனது உயரிய பண்பைப் பாராட்டுகின்றான்: பரதன் தன் தாயாம் கைகேசியின் சூழ்வினையால் தம் முன்னவன் நாடிழந்து காடு போகவும், அதனால் மன்னர் மன்னவன் உயிர் துறக்கவும் நேர்ந்தது என்பதை உணர்ந்த காலத்து,

"கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலும் நின் பெரிய கண்களால்"

என்று தன் தாதை தயரதனுக்காக இரங்கியும்,

"சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத்தாய் வரும் மரபை மாய்த் தொரு
பழியுடைத் தாக்கினன் பரதன் பண்டென்னும்
மொழியுடைத் தாக்கலின் முறைமை வேறுண்டோ"

எனத் தன் தாயின் செயலைக் கடிந்தும், அவள் தன் செயலால் தனக்குற்ற பெரும்பழியை நினைந்து நினைந்து உருகுகின்றனன் இன்னும்

"உந்தையோ இறந்தனன் உம்முன் நீத்தனன்
வந்தது மன்னைதன் வரத்தினால் மைந்த நீ
அந்தமில் பேரரசு அளித்தி"





என்று வசிட்ட முனிவர் பரதனை வேண்ட இவ்வுரை கேட்ட பரதன் "நஞ்சினை நுகரென நடுங்குவாரினும் அஞ்சினன், அயர்ந்தனன்" என்று கம்பர் தீட்டுஞ் சித்திரம் பரதனது மனப் பான்மையைப் பெரிதும் விளக்குவதாகும்.

தந்தையும் இறந்துபடத் தமையனையும் துறந்து வருந்திய தம்பி அண்ணலன்றித் தான் அரசாள்வது முறைமையன்று என்பதை உணர்ந்தவனாய்த் தமையனை அழைத்துவந்து, ஆட்சியை ஏற்படுத்திக் கொள்ளுமாறு வேண்ட நினைத்து நகரமக்களோடும் நால்வகைச் சேனையொடும் நாடிறந்து காடு நோக்கிச் செல்கின்றான்.

"வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதி யென்ன நகை யிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்ற"

கங்கையிருகரை யுடைய நாவாய் வேந்தன்,

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற்றேக்கிப்
போயினை யென்றபோது புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கே ழாவரோ தெரியல் அம்மா"

என்று பரதனது பண்பைப் புகழ்ந்து கூறும் உரை சாலவும் அழகியதாக அமைந்துள்ளது.

"மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளாய்"

என்று வேடர் வேந்தனும் குகன், பரதனது புகழ் குன்றாத பெருஞ் செயலைப் போற்றியுரைக்கும் மாற்றம் கம்பர் கவி நலத்தால் அமைந்த ஒரு பொருளாகும்.

இன்னும் கங்கையைக் கடந்து இராமன் தங்கியிருக்கும் இடத்தினையே நினைந்து வருகின்ற இவனையும் இவனது சேனையையும் கண்ட இலக்குவன், பரதன் படையுடன் போர் செய்ய வருகின்றான் என்று தன் அண்ணனிடம் எடுத்துரைத்துச் சீறி நிற்கும் பொழுது, இராமன் பரதனது பண்பைப் பாங்குற அறிந்து

"சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமே"

என்று செம்மைசான்ற சொற்களால் பரதனது பெருமையை எடுத்துரைக்கும் நயம் சாலவும் அழகியதாகும். இம்மட்டன்று

"எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்களெல்லாம்
ஒத்தார் பெரிதும் பரதன் உத்தம னாதலுண்டே"

என்று இராமன் இலக்குவனிடம் கூறும் நயஞ்சான்ற மொழிகளில் பரதனது பண்பை, இலக்குவனது தன்னலமற்ற தொண்டைவிட இராமன் பெரிதும் மதித்துள்ள தன்மை புலனாகும்.

(தொடரும்)

---

# * பசுக் காத்தல்.

ரா. தேசிகன் B. Sc. (யாதவர்)
புதுவை.

தாயின் மடியினிடம் விடப்பட்டு, மடியில் பால் சுரக்கவாரம்பிக்கும்போதே அப்புறப் படுத்தப்பட்டும், நிற்கவும் சக்தியின்றியும், விலா ஒட்டியும் இருக்கும் கன்றுகளை நம் நகரங்களின் தெருக்களிலே காணும் காட்சியைவிடப் பரிதாபகரமானது வேறொன்றுமில்லை. அக்கன்றுகள் தாயினிடம் விடப்பட்டவுடனே, தம்மை வாட்டும் பசிப்பிணியைத் தணித்துக்கொள்ளலாம் என்று கருதி, பால் அருந்தப பேராவலோடு எத்தனிக்கும்போதே, அவ்வாறு செய்யாவண்ணம் அவைகளைத் தடுப்பது எவ்வளவு கொடுமை! அந்தோ! அவை பசியால் எப்போதும் துயருற வேண்டியதே. என்னெனின் பின்பேனும் அவைகளுக்குப் பால் கிடைப்பதில்லை. தாயினிடத்திலுள்ள பால் அனைத்தையும் கறந்துகொண்ட பிறகே அவைகள் ஊட்டவிடப் படுகின்றன.

நம் கண்ணுக்கு அதிகம் தோன்றாத வேறொரு கொடுமையும் உண்டு. அது பசுக்களுக்கு உணவளிக்கும் வகையே. போதுமான பால் தரும் வரையில் பசுக்களுக்கு இலேசான உணவு கொடுக்கப்படுகிறது. பால் வற்றினதும் அவைகள் சொற்ப விலைக்கு விற்கப்பட்டு, புல் அரிதாயிருக்கும் நிலங்களிலேயே மந்தையாகச் சேர்க்கப்

*இது புதுவை விவசாய சங்கத்துக்கு அக்கிராசனராயிருந்த ஸ்ரீ. புதிஷோல்கி என்பாரின் அபிப்பிராயங்களைத் தழுவி எழுதியது.



பட்டு, மேயவிடப்படுகின்றன. அங்கு இடமற்ற சிறு காளைகளோடு சம்பந்தப்பட்டு கேவலமான ஜீவன்களைத் தம் வயிற்றகத்தே சுமந்து வருவதோடு, அந்நிலைமைக்கேற்ற உணவின்றியும் கிடக்கின்றன. நம் நாட்டில் பசுக்கள் நல்ல விதமாக வளர்க்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

பாற்காரர்கள் வேறுவிதஞ் செய்வதற் கில்லையென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அடியிற்கண்டபடி கணக்கிடுகிறார்கள். "60 ரூபாய்க்கு ஒருபசு வாங்கினால் அது பால் மறுத்துப் போகுங்காலத்தில் பசுவையுங் கன்றையுஞ் சேர்த்து 35 ரூபாய்க்குத்தான் விற்க முடியும். விற்கும் நாள்வரையில், அதாவது சுமார் ஆறுமாத காலம், அது தினம் ஒன்றுக்கு 5 அல்லது $5\frac{1}{2}$ சேர் ஆக, 1000 சேர் பால் தரலாம். சேர் 2 அணா விற்குமானால் 125 ரூபாய் கிடைக்கும். இந்தத்தொகையில் முதலாவது பசுவை விற்பதனால் ஏற்படும் நஷ்டம் 25 ரூபாயையும், இரண்டாவது பால்வியாபாரத்தினால் வரவேண்டிய இலாபத்தையும், மூன்றாவது பசுவின் உணவின் செலவையும் எடுக்கவேண்டும். நல்லுணவு தருவதாயிருந்தால் இலாபம் இல்லை. எனவே, வியாபாரம் குன்றிப்போகும்" என்கிறார்கள்.

பசு தெய்வத்தன்மை பொருந்திய மிருகமாயிருப்பினும் பாற்காரர்கள் தங்களுடைய இலாபத்தை மாத்திரம் கவனிக்கிறார்களே தவிர அம்மிருகத்துக்கு வேண்டியதைக் கவனிக்கிறார்களில்லை. பசுவுக்கு வேண்டுவனவற்றைக் கொடுக்காதிருந்தும் பால்வியாபாரம் தலைமுறை தலைமுறையாய் நடந்து வருவதனால் அவ்வியாபாரத்தில் ஏதோ அனுகூலம் இருப்பதாகப் பிறர் கருதவேண்டியிருக்கிறது. பசுவுக்கு வேண்டிய நல்லுணவு தந்து, அதைச் சௌக்கியமாக வைத்திருப்பின், பிறர் நினைக்கும் வண்ணம் நல்லஇலாபம் சம்பாதிக்கலாம் என்பதைப் பாற்காரர்கள் அறிதல் வேண்டும்.

பால்வியாபாரிகள் தாங்கள் அனுட்டித்துவரும் முறையை மாற்றக் கூடுமாயிராதென்று கூறுகிறார்கள். ஆகவே, பசுவின் தெய்வீகத்தன்மையைக் குறித்தும், அதனிடம் அன்புகொண்டும், அது நமக்குச் செய்யும் உபகாரங்களுக்காகவும், அதைக் காத்துவரும் பிரத்தியேக மனிதர்களுக்குச் சொல்லிக்கொள்ள வேண்டியதாகிறது. இப்போது பசு பரிபாலனத்தில் காணப்படும் முறைகள் ஜீவகாருண்ணிய முள்ளவர்களுக்கு வெட்கத்தைத் தரக்கூடியனவாக

விருக்கின்றன. அம்முறைகளை மாற்றுவதற்குச் சிறிது முயற்சிக்க வேண்டும். அங்ஙனம் முயற்சித்தால் தாம் வளர்த்து வரும் பிராணியினிடத்தில் நியாயமாக நடந்து கொண்டதனால் ஏற்படும் மனோதிருப்தியோடு நல்ல ஊதியமும் பெறலாம். மேலும், ஜனசமூகத்தின் நன்மைக்காக உழைத்ததாகவும் பெருமை பேசிக்கொள்ளலாம். என் பசுக்களுக்கு நல்ல உணவு கொடுத்தால் எப்படி நான் ஜனசமூகத்தின் நன்மையைத் தேடினவனாவேன் என்று வினவக்கூடும். ஜனசமூகத்தின் நன்மையைத் தேடுவது நிச்சயம். தனிப்பட்ட பேர்வழிகள் தங்கள் பசுக்களுக்கு நல்ல சௌக்கியங் கொடுத்து அதனால் மிகுந்த ஊதியம் அடைகிறார்கள் என்று அறிந்த பாற்காரர்கள் தாங்களும் அவ்வாறு செய்ய முற்படுவார்கள். அப்போது அப்பாற்காரர்களிடமிருந்து பால்வாங்கி உபயோகிக்கும் ஜனங்களுக்குச் சுத்த சத்துள்ள பால் கிடைக்கும். எப்படியெனில் அப் பால் நன்றாய் போஷிக்கப்பட்டு சௌக்கியமாயிருக்கும் பசுக்களிடமிருந்து வருவதினாலே.

பாற்காரர்களால் பசுக்கள் எவ்விதம் வாங்கப்படுகின்றன வென்பதையும், எப்படிக் காக்கப்பட்டுப் பின் விற்கப்படுகின்றன வென்பதையும் மேலே பார்த்தோம். அம்முறையினால் பசுக்கள் க்ஷீணித்துப்போகின்றன வென்பதையும், கன்றுகள் வன்மை கெட்டு வருகின்றன என்பதையும் அறிந்து கொள்ள பெருமுயற்சி வேண்டியதில்லை. வரவர ஆவினங்கள் மெலிந்து போவதோடு அவைகளுக்குள்ள விலை மதிப்பும் குன்றிவிடுகிறது. பசுக்களைச் சரிவரப்பார்த்துவராவிட்டால் அவைகளுக்கு இன்றுள்ள விலை மதிப்பு இன்னும் ஒருவருடத்தில் குறைவுபடும். அப்படியே வருடந்தோறும் குறைந்துகொண்டே கடைசியில் ஒன்றுமில்லாமற் போய்விடும். விவசாய பூமியாகிய நம் நாட்டில் அந்நிலைமை ஏற்படுமா என்று ஐயுறலாம். அந்நிலைமை ஏற்படாதிருக்கப் போஷிப்பின்றிப் பசியால் மாண்டுபோகும் பசுக்களுக்குப் பதிலாக, அயல் நாடுகளிலிருந்து வேறு பசுக்கள் வாங்கவேண்டியதே. ஆயின், நம் நாட்டில் ஏற்படும் விலை மதிப்புக் குறைவு அந்நியர் அனுகூலத்திற்கு ஏதுவாகும். நம் நாட்டில் இருக்கக்கூடிய ஒரு பெருந்தொகையை வீணில் விரயஞ்செய்ததாகும்.

வெறுக்கத்தக்கதாகிய கொடுமை செய்வதினின்று விலகவும், கோக்களின் விலையாகிய மூலதனத்தைக் கெட்டிப்படுத்தவும், நமது பலனை மேலும் மேலும் விர்த்திசெய்து கொள்ளவும் எப்படி முடியும் என்பதைப் பற்றி இனிக் கவனிப்போம்.

(தொடரும்)

---

# பூங்கோதையார்

## என்னும் யாதவ மாது.

### கி. அ. முத்துச்சாமிக் கோனார் அவர்கள்.

---

தென்மதுரைமா நகரிலே ஆயர் (யாதவர்) மரபிலே தோன்றியவரும், தக்கை ராமாயணம் என்னும் காவிய மியற்றியவரும் பத்தர்பாடி எம்பெருமான் கவிராயரென்னும், புலவர் பெருமானுக்கு வாழ்க்கைத்துணைவியருமாகிய நல்லிசைப் புலமை மெல்லியலார் பூங்கோதையாரென்னும் பெயரினர். இவர் தம் காதலரோடு தேனும்பாலும் போலக்கலந்து இல்லறம் நடாத்தி வாழ்ந்தார். தாம் கல்வி கற்றது போலவே மற்றைய பெண்பாலாரும் ஓதி உணர்வு கொள்ளவேண்டு மென்னும் பேராவல் கொண்டவர். பல நற்குடிமகளிரைக் கூட்டிக் "கல்வி யென்னும் செல்வமே மகளிற்கழிவையுங் கற்பையும், அன்பையும் வாழ்க்கை நலனையும் உதவ வல்லது. படிப்பில்லாதவர்கள் முருக்கம் பூப் போன்றவர்கள். கணவர், அல்லது குடும்பத்தைச்சார்ந்தோர், மக்கள் முதலானவர்களின் நிலையறிந்து வாழ்க்கையை நடத்துதற்குக் கல்வி அறிவு பெருந்துணையானது" என்பர். அத்திசையிலுள்ள பெண்மணிகளைத்திருத்திப் பெரு நேயம்பூண்டு வாழ்வார். சமீபத்தில் தாரமங்கலம் பாளயகாரர் கட்டிமுதலியார் என்னும் தொண்டைமண்டல வேளாளகுல குடிமன்னர் குடும்பம் உண்டு. அவர்களில் பலர் ஆத்தூர், சேலம், அமரகுன்றி, பெரும்பாலை, அந்தியூர், நெருஞ்சிப்பேட்டை முதலிய இடங்களில் கோட்டைகளும், மாளிகைகளும், ஏரிகளும், அணைகளும் கோயில்களும் கட்டியும் வாசித்த பத்தியுள்ள பெரியோர்களுக்கு மானியங்களும் கோயில்களுக்குப் பலவகை மானியங்களும் விட்டுத் தருமத்தை வளர்த்துவரும் பெரும் பாக்கியமே சிலாக்கியமாகக்கொண்டுள்ள உபகாரிகள். அவர்களுள்ளே இம் முடிகட்டி முதலியாரின் உத்தம பத்தினியார் *சின்னம்மாள் என்னும் நல்லம்

*பவானிகூடல் அம்பிகை சந்நிதி நிருத்த மண்டபத்தின் மேற்பாகத்துள்ள சாசனம்.

"பார்த்திப வருஷம் தை மீ 10உ திருவாணி கூடல் பண்ணார் மொழியம்மை முன் நிருத்தமண்டபம் இம்முடி செட்டி முதலியார் சின்னம்மாள் உபயம்.

மாள். அந்த அம்மாள் வானிநதி காவேரியுடன் கூடும் வானிகூடல் (திருநணு) என்னும் தலத்தில் கைங்கரியம் செய்துள்ளார். இன்னும் பலஇடத்துப் பல தருமங்கள் செய்துள்ளார். தமிழில் மிகுந்த பாண்டித்திய முள்ளவராவர். இவரிடத்து இந்தப் பூங்கோதையாருக்குப்பேரன்பு. அது போலவே அந்த அம்மையாருக்கும் பூங்கோதையாருக்கு மிகுநேயம். இவர்களிருவரும் சேர்ந்து சில பாடல்கள் பாடியுளரென்பதன்றி, 2 சிறு பிரபந்தங்கள் கூறியிருப்பதாகவும் தெரிகிறது. இவைகளுள் "கண்ணொளிகதிரொளி" எனச் சீவான்மபரமான்மா இயல்பான சுவைமுதிர்ந்த பிரபந்தமும் ஒன்று என்று கூறுகிறார்கள்.

பாளயகாரர் மனைவியாராகிய அந்தச் சின்னம்மாளும் பெண்கள் கல்விபெறுதல் வேண்டுமென ஊக்கங் கொண்டவராவர்.

இவ்வாறு வாழும் நாளில் பார்க்க வேண்டுமெனச் சில புலவர்கள் கவிராயர் இல்லத்துக்கு வந்தனர். அப்போது கவிராயர் வெளியிற் சென்றிருந்தமையால் முன்னுள்ளார் உபசரிக்க, முன்றிலிலிருந்து சம்பாஷித்துக்கொண் டிருந்தனர். நமது கவிராயரின் மனைவியார் கல்வி யறிவிற் சிறந்தவரெனக் கேள்வி என்று ஒருவர் கூறினர். மற்றொருவர் "பெண்பாலார் கல்வி அறிவு எவ்வளவு சிறப்புடைத்தாக இருக்கும்? பேதைகள் தானே" என்று இழித்தும் கூறினர். இதை உள்ளிருந்து கேட்டிருந்த கோதையுறுத பூங்கோதையார் ஒரு சிறு சீட்டு ஒரு சிறுமியிடம் கொடுத்தனுப்பினர். அதில் எழுதப்பட்டிருந்த வெண்பாவாவது,

அறிவி லிளைஞரே ஆண்மக்கள் மாதர்
அறிவின் முதிபரே ஆவர்—அறிகரியோ
தான் கொண்ட சூலறிவர் தத்தைய ராண்மக்கள்
தான் கொண்ட சூலறியார் தான்.

என எழுதப்பட்டுள்ளதை வாசித்து வியப்புற்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பேச நாணங்கொண்டு திகைத்திருந்தனர். கவிராயர் வந்தனர். புலவர்களை வரவேற்று நல்வரவு கூறிப் பேசிக்கொண்டிருந்தனர். சீட்டைப் புலவர்கள் கவிராயரிடத்துக் காட்டினார்கள். முறுவலித்து ஆண்மக்களை இழித்துக் கூறலாகுமோ என மனைவியை வினவினர். ஐயா! ஆண் மக்களை நான் இழித்துக் கூறவில்லை. இயல்பு கூறினேன். அதுவும் பெண்பாலர் எல்லா



ரையும் கூறினதால், சொன்மடந்தையாகிய கலைமகளையும் கூட்டியிருந்தது; அன்றி, "பேதமை யென்பது மாதர்க்கணிகலம்" என்பது பெண்களெல்லாம் அறியாதவர் என்பதல்ல, எவ்வளவு தெரிந்தவர்களாக இருப்பினும் அறியார் போன்று அடங்கியிருப்பதைத்தான் மடம் என்று கூறுவது; காக்கைபாடினியார், காவற்பெண்டு, பாரி மகளிர், பெருங்கோப்பெண்டு, இளவெயினி, நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், காமக்கண்ணியர், ஔவையார் முதலிய அகப்பொருள்—புறப்பொருள் பாடிய மெல்லியலார்களும்; சூடிக் கொடுத்த நாச்சியார், காரைக்காலம்மையார் முதலிய தென்மொழிவேதப் பெரியோர்களும் சிறப்பில்லாதவர்களா? ஷசி, சிரத்தை, கோரவி, வாக்கு, லோபாமுத்திரை, ருகாஷ முதலான பெண்மணிகள் வடமொழி வேத கிரந்த கர்த்தாக்களாச்சுதே அவர்களுமப்படித்தானு? அல்லாமலும், முன்காலத்து ஒரு நாள் துவாரகை அரண்மனையுள் ஏகாநங்கை வருதலும், உப்பரிகைமேலிருந்து நோக்கி விரைந்து அந்தப்புரஞ் சென்று ருக்மணி சத்தியபாமை முதலியோரைக் கிருஷ்ணபகவான் அழைத்து வந்து, வந்த அம்மையாரை எதிர்கொண்டழைத்துப் பீடத்து இருத்திப் பலவகையாக உபசரித்து எனது பிரியநாயகிகளே! இவர் எனது சகோதரியார், எப்பொழுதும் கன்னிகையாக இருப்பவர், நினைத்த உருவம் எடுக்கவல்லவர், எனக் கண்ணபிரான் புகழ்ந்தேத்திய' என்குலமணியான ஏகாநங்கை ...ன ...ம் யசோதை புத்திரியின் கல்வி முதலிய திற... பாரதம் சபா பருவம் ஆய்ந்த வடமொழிப் பேரறிஞ...யான்றோ? அவரும் பெண்பாலராதலின் சிறப்பிலாதவரா? மேலும் உலகத்தில் ஸ்திரீகளில்லாப் புருஷர்கள், ...குடியில்லாத கன்றுகளுக்குச் சமமாவர். தந்தையைப் பார்க்கிலும் எவ்வளவோ அதிகமாய்த் தாயானவள் குழந்தையின் செய்கையையும் நடத்தையையும் வசப்படுத்துகிறாள். ஓர் நல்ல தாய் நூறு ஆசிரியருக்கு நிகர் ஆவள். வீடானது ஸ்திரீகளுடைய ராஜ்ஜியமாகிறது. அங்கே அவளுடைய முழு அதிகாரத்தையும் செலுத்துகின்றனள். அவளுடைய சிறிய குடிகளாகிய குழந்தைகளின் மீது செலுத்துகிற அதிகாரமானது சுவாதீனமாக உள்ளது. அவர்கள் எல்லாவற்றிற்கும் அவளையே நோக்குகின்றனர். குழந்தைகள் இளமையிலே தாயாரிடத்துத்தான் பழகுகின்றன. தாயார் நடக்கும் செய்கைகளை இளமையிற் பார்த்ததும் மனதிற்பதிந்து குழந்தை பின் செய்யும். தாயார் நல்லொழுக்கம்

உடையவளாக இருக்கவேண்டும். நல்லொழுக்கம் படிப்பினாலும் சகவாசத்தாலும் உண்டாகும். தீய ஒழுக்கமுள்ளவள் பிள்ளை, தூயகுணமுள்ளவனாவது அரிது. ஏனென்றால் குழந்தையின் இளமைப் பழக்கம் தாய்மார்களிடத்தது. பெண்ணானவள் கருணையும் அன்பும் உள்ளவளாக இருத்தல் வேண்டும். பெண்களின் கல்வி, ஒழுக்கச் சிறப்பு சந்ததியைச் சிறப்புறச் செய்யும் தரத்ததாகும். ஆதலின் பெண்களின் கல்வி ஒழுக்க நலன் சிறப்புத்தரும் இயல்புடைத்தாம். மாந்தர்கள் சிறப்புறுதல் வளர்க்கும் நற்றாய்மார்களின் குணத்ததாக இருப்பதால் பெண்பாலாரின் கல்வி மிக்கச் சிறப்புடைத்ததே. நிற்க,

"ஆண்மக்கள் தான்கொண்ட சூலறியார்" எனக் கூறினேன். அதற்குச் சிசு புருஷ கற்பத்தில் 2 மாதமும், பின் ஸ்திரீ கற்பத்தில் 10 மாதமும் ஆகப் பனிரண்டு மாத காலம் கர்பவாசம் எனப் பூர்வ நூல்கள் கூறுகின்றன. ஆன்மாவானது நீர்த்துளி வழி பூமியிற் சேர்ந்து உணவு வழியாகப் புருஷ கற்பத்துத் தங்கிப் பெண்ணின் கருப்பையுற்றுக் கற்பமுற்றிச் சிசு பிறக்கிறது; என்பதற்கு உபநிஷதம் முதலிய பேராதரவுகளிருக்கின்றன. ஆதலின் பெண்கள் தாங்கள் கருக்கொண்டதை அறிந்துகொள்வது போல ஆண்மக்கள் தாங்கள் கருப்ப முற்றத்தை அறிந்து கொள்வதில்லை.

உயிர்கள் பக்குவமாறிப் பிறத்தலை பிரம சூத்திரம், 2-ம் அத்தியாயம், 1-ம் பாதம், 1-ம் சூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரிய சுவாமிகள் அருளிய பாஷியத்தும், சிவஞான போதம் 2-ம் சூத்திரத்தும் விளக்கப்பட்டுளது. மேலுலகம் சென்ற உயிர் திரும்பும் பொழுது முறையே துறக்கம், மேகமண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்திடத்துப் புகுந்து வருவதைத் தியானித்தலே பஞ்சாக்கினிவித்தை யெனக் கூறுவது.

சொர்க்கம் சென்ற ஆன்மா, மேகத்து அடைந்து மழைத் துளியாய்ப் பூமிக்கு வந்து உணவுப் பொருளாய்ப் புருஷதேகத்தையடைந்து இந்திரிய மயமாய்ப் பெண்ணை அடைகின்றான். என இருத்தலால் புருஷ கர்ப்பத்தில் 2 மாதங்கள் தங்குகின்றன. இந்த இரண்டுமாதம், தன்னிடத்துத் தங்குதலான கர்ப்பத்தை ஆண்மக்களறிவதில்லை. என்பது கொண்டே "ஆண்மக்கள் அறிவிலிகளோர்" என்றேனென்க,



குறுமுனி நேர்தமி ழாழியுண் வாணர் குழாம் வியப்ப
அறிவி லிகளோரே யாண்மக்க ளென்ன வறுதியிட்ட
சிறிய விடைச்சி யெம் பெம்மான் மனைவி சிறந்துவளர்
மறுவறு சங்க கிரிநேர் வதுகொங்கு மண்டலமே.

(இக்கதை இக்கொங்கு மண்டல சதகச் செய்யுளிற் கண்டது)

---

## ரங்கநாயகியின் எதிர் நிருபம்.

அல்லது.

(வறுமையின் கொடுமை.)

C. இராஜரத்தினம்.

---

என் உயிரினும் சிறந்த அக்காள் அவர்களுக்கு க்ஷேமப்ராப்தி சய னன் அருள் சுரக்கவேண்டுகிறேன். தங்களுடைய எழுத்துக் கிடைக்க விபரம் அறிந்துகொண்டேன். நீங்கள் கூறியுள்ளவைகள் யாவும் மேன்மக்கள் கொண்டொழுகுபவைகளாதலால் நான் அவற் றினின்று அணுவளவேனும் பிசகாமல் நடந்துவருகிறேன். தற்கால நாகரீக உலகில் நம்மவர்க்கு நாயகனே கண்கண்ட தெய்வம் என் பது உண்மையே எனினும், இதற்கு ஏதோ என் அனுபவத்திற் குள் பார்த்தவொன்றை உங்களுக்குத் தெரிவிக்கத் துணிகிறேன்.

நான் என் நாயகனுடன் சிலமாதங்களுக்கு முன் சேர நாடா கிய திருவாங்கூரில் ஒரு கல்யாணத்திற்காகச் சென்றிருந்தேன். கல் யாணமும் வெகு விமரிசையாய் நடந்தது. அப்பொழுது, அங்கு ஓர் அம்மையார் காவி வஸ்திரமுடுத்துக் கழுத்தில் மணிகள் அணிந்து தெய்வ உருவம்போல் தோன்றினார்கள். நான் அவ்வம்மையார் யார் என்று வினவியபொழுது, அவ்வம்மை காலம் சென்ற ஸ்ரீமான். முத்துசாமி பிள்ளை (யாதவர்) தந்தி மாஸ்டர் (திருவனந்தபுரம்) அவர்களின் சேஷ்ட புத்திரியாம். அவர் தன் மகளுக்குச் சிறு வயதிலேயே மணவினையும் முடித்தனர். ஆனால் "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" என்பதுபோல் அவ்வம்மையும் சிறு வயதிலேயே விதவையாயினர். அதுமுதற் றன்னுடைய மாங்கல் லியத்தைக் கோதண்டபாணியின் உருவமாகச்செய்து, அதற்குள்ள பணிவிடைகளைச் செய்து வருகின்றனர். அனுதினம் அதிகாலையில் எழுந்து பலவிதமலர்களைக் கொண்டுவந்து தன்னுடைய கணவன்

பாதத்தில் இட்டுத் தொழுவதையே மிக்க உவப்புடைய செய்கையாகக் கொண்டவர்கள் கல்வி, கேள்விகளில் மிக்க அறிவுடைய அவ்வம்மை தன்னுடைய தற்கால வயோதிக திசையிலும் தன் கணவனுக்குப் புரியும் அச்சிரிய தொண்டை விட்டிலர்.

ராமா, என்ற ஓர் சொல் அவர்கள் காதில் கேட்குமானால் ஆனந்த பரவசராவார். எப்பொழுதும் அச்செங்கண்மாலைத் துதிக்கும் பாக்களையும், அன்னவரைப் புகழும் பாடல்களைப் படிப்பதே தம் பொழுதுபோக்காகக் கொண்டவர்கள். அங்ஙனம் ஓர் காலம் சென்ற கணவனைத் தொழுவார்களாகில் நாம் நம்முடைய பர்த்தாக்களை எங்ஙனம் போற்றவேண்டும் என்பது புலனாகின்றதல்லவா?

ஆனால் இப்பொழுது என்னுடைய நிலைமையைப் பற்றிச் சிறிது கூறுகிறேன். நம்மிருவரையும் நம் தந்தை போதுமான கல்வி கற்பித்து மணவினையும் செய்து முடித்தனர். எப்பொழுதும் பெண் பேசும் காலையில் பிதா கல்வியிற்சிறந்த மருகனையும் தாயானவள் மிகுந்தபொருளை உடையவனையும், சுற்றத்தார்கள் நற்குடியில் பிறந்தவனையும்' பெண்ணானவள் ,ரூபலாவண்ணிய முடையவனையும், "கை நிறைந்த பொருளினும் கண் நிறைந்த கணவனேமேல்" என்றபடி வேண்டுமென்றெண்ணுவது உலக வழக்கம்.

சிலர் "குலத்தில் குரங்கெடு" என்னும் முதுமொழிக் கேற்பத் தன் குலத்தில் குரூர ரூபியான ஒருவனுக்குத் தங்களுடைய இலக்குமிபோன்ற மகளைக் கொடுப்பார்கள். மற்றும் சிலர் பொருள் இருந்தால் போதுமென்று தனவந்தனான ஒரு குஷ்டரோகிக்குத் தங்கள் அருமைச்செல்வியைக் கொடுப்பார்கள். சிலர் மாப்பிளை எப்படி இருந்தாலும் சரி, வித்தையிருந்தால் போதுமென்றெண்ணி நித்திய தரித்திரனும் விகார சொரூபமுள்ள ஒருவனைத் தம் செல்லப் புதல்விக்கு மணவாளனாகத் தேர்ந்தெடுப்பார்கள். ஆடுமாடுகளை விற்றமாதிரி, அதிகப் பணம் பரியமாகக் கொடுப்பவர்களுக்கு அவர்கள் எத்தன்மை உடையவர்களாய் இருந்தபோதிலும்,

தேனுகர்வண்டு மதுதனையுண்டு தியங்கியே
கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்பு வின்கனியென்று தடங்கையா
லெடுத்துமுன் பார்த்தாள்



வானுறு மதியம் வந்ததென் றெண்ணி மலர்க்கரம்
குவியுமென் றஞ்சிப்
போனது வண்டோ, பறந்தது, பழமோ புதுமையோ
விதுவெனப் புகன்றாள்.

என்னும்படியான அழகுவாய்ந்த தங்கள் புதல்வியைக் கொடுப்பவரும் உண்டு சிலர். இன்னும் குலச்சுத்தம் ஒன்றையே பெரிதாகக் கொண்ட சிலர், தங்கள் குடும்பத்தில் உள்ள மாப்பிள்ளை படியா நிர் மூடனும் ஈயாத உலோபியுமான ஒருவனுக்கு அதிகப் பணத்தையும் வரதக்ஷிணையாகக் கொடுத்துத் தம் பெண்ணையும் மணமுடித்துக் கொடுக்கிறார்கள். இங்ஙனம் செய்வதால் பெண்களை அதிகமாகக் கொண்ட சில குடும்பங்கள் இலம்பாடடைக்கின்றன.

பருப்பதங்கள் போனிறைந்திடு நவமணி
பல கற்களைக் கொடுத்தாலும்
விருப்ப நீங்கிய கணவரைத் தழுவுதல்
வீணதாம்.

என்றதுபோல் நம் மனதிற்குகந்த மணவாளர்களுக்கே வாழ்கைப் பட்டோம். ஊழ்வினையானது எப்படித் தன்னைத்தொடர்கின்ற நிழலை யொத்ததே போல், என் மணவினை முடியும்பொழுது என் நாதர் எல்லாவித ஐஸ்வரியங்களோடு இருந்தார்; ஆனால் இப்போது உள்ள கால விசேஷத்தால் வறியனானார்.

ஆலிலை பூவுங்காயும் அளிதரு பழமுமுண்டேல்
சாலவே பட்சிஎல்லாம் தங்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்துதேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதிபோனா லாங்கு வந்திருப்பா ருண்டோ

என்றபடி இப்பொழுது நாங்கள் வறியரானபின் எம்மை அண்டியிருந்த சுற்றம், உறவினர் ஆகியவர் ஒருவரையும் காணோம். கொடிது, கொடிது வறுமை கொடிது என்பதுபோல், எனது கணவர் இப் பிணியைப் பொறுக்க மாட்டாதவராய், ஒரு துரோகியால் தூண்டப் பட்டு, ஒரு பாதகத் தொழிலைத் தன் ஜீவன உபாயத்திற்காகக் கொண்டார் என்ன செய்வது இதுவும் என் தலைவிதி யென்றே நோகவேண்டும்.

(தொடரும்)

# பத்திரிகைகளின் முன்னேற்றம்.

தா. ந. கோபால், (பூதப்பாண்டி.)

பத்திரிகைகள் பல வகைப்படும். அவை தாம் வெளிவரும் காலத்தைக் குறித்துத் தினப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் என வழங்கும். அவைகளில் சில தம்மை வெளியிடுபவர் நோக்கங்களையும் தம்மில் வெளியாகும் விஷயங்களை ஒட்டி, வர்த்தமானப் பத்திரிகைகள், இராஜாங்க விஷயங்களைக் குறித்து எழுதும் பத்திரிகைகள், சீர்திருத்தங்களையுன்னும் பத்திரிகைகள், வைத்தியம், மதம், குலம், பூதபௌதிக ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி முதலிய விஷயங்களுக்குரிய பத்திரிகைகள், தொழிலாளர் பத்திரிகைகள், இலக்கிய விருத்திக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய பத்திரிகைகள் எனப் பல வகைப்படும். மேல் குறித்த நோக்கங்கள் எல்லாவற்றையும் உடையனவாய், ஞான விருத்திக்கே உழைப்பனவாகும் பத்திரிகைகள். இவைகளெல்லாம் நாகரீகமுள்ள சமுதாயங்களுக்கு இன்றியமையாதவை.

நாகரீக முதிர்ந்த மக்கள் கூட்டங்கள் எவற்றுள்ளும் இங்கிலாந்திலாகட்டும், பிரான்சிலாகட்டும், ஜெர்மனியிலாகட்டும் பத்திரிகைகள் எண்ணிக்கையின்றி உலாவி வருகின்றன. அவைகளால், யாதொரு பயனும் இல்லாவிட்டால் அவை அவ்வளவு விருத்தியடைந்திருக்கமாட்டா. ஆகவே தற்காலத்தில் பத்திரிகைகள் அபரிமிதமாகப் பெருகி வருவதற்குத் தக்க காரணம் யாதேனும் ஒன்று இருத்தல் வேண்டும். அக்காரணம் யாது?

தற்காலத்தவர்களின் வாழ்க்கையே அதற்கு முக்கிய காரணமாகும். நாளுக்கு நாள் மனிதர்கள் நாகரீக மிகுந்து விருத்தியடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. நாகரீகம் பெருகப் பெருக மக்களுள் ஞானவேட்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்னும் கொள்கையோடு வாழ்ந்தனர் முற்காலத்தவர். இக்காலத்தவரோ அரசாங்கத்தில் . தமக்குள்ள உரிமைகளைப் பற்றியும் சமுதாயத்தின் குறைகளைப் பற்றியும் குறித்துச் சிந்தித்து அவைகளை நிலைநாட்ட முயல்கின்றனர்.



அங்ஙனம் முயன்று வரும் பத்திரிகைகளில் யாதவ மித்திரன் ஒன்றென்பது நன்கு விளங்கும். மித்திரனை ஓராண்டு வாசித்து வந்தேன். இவ்வினிய பத்திரிகையினால் சிறுவர்களும், பெரியவர்களும், கற்றோரும், மற்றோரும், ஆடவரும், பெண்டிரும், ஏழைகளும், தனவந்தர்களும் ஆகிய எல்லோரும் பயனைப் பெற்று புத்தி விசாலமடைவது திண்ணம். யாதெனில் இவ் உயரிய பத்திரிகையில் சமுதாய முன்னேற்றத்தில் அனைவர்க்கும் தேவையான அரிய விஷயங்கள் அடங்கி வெளி வருவதுதான் காரணம். மித்திரனின் செழுமையை நோக்குங்கால் காயிதத்தின் விலையும் அச்சுக் கூலியும் அச்சுச் சாமான்களும் நாடோறும் விலை யேற்றமடைந்து வந்த போதிலும் சற்றும் பின்வாங்காது அரிய பெரிய அறிஞர்கள் கட்டுரைகளுடனும் மித்திரன் தேக கஷ்டத்தினையும் யாதவ மக்களின் ஊக்கக் குறைவினையும் பொருட்படுத்தாது பொது நன்மையை நாடி உலாவும் பத்திரிகை என்பதை கூசாமல் கூறி எழுதுகிறேன்.

இம்மித்திரன் செழிப்புடன் நம் நடுவே உலாவ விரும்பும் சந்தாதாரர்களாகிய சகோதரர்கள் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உளது. அஃது என்னவெனில் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற சந்தாதார்களைச் சேர்த்து அனுப்ப வேண்டியது. சகோதரர்களே பத்திரிகை முன்னேற்ற விஷயத்தில் ஈடுபட்டு உழைத்தால் மித்திரன் சலியாது தளிர்ந்து வளர்ந்து எவ்வகையிலும் தாழ்ந்து கிடக்கும் நம் யாதவமக்களைத் தட்டி எழுப்புவான் என்பது திண்ணம்.

---

# கோகிலகிருஷ்ணன்

S. குருசாமி அய்யர், திருச்சி.

(46ம் பக்கத் தொடர்ச்சி)

[காட்சி 1

அங்கம் 2]

காலம்—காலை இடம்—யாதவப்பெண் பாடசாலை.

கோகிலம்:-[கடவுள்மீது உருக்கமான ஒரு பாட்டுப் பாடிக்கொண்டு வருகிறாள்.] ஆஹா! இதுவோ நமது கதி. பெண்கள் எவ்வளவு படித்தவர்களா யிருப்பினும் பின்புத்தி யுடையவர்களெனக் கூறுவதும் தவறாகாதுபோலும். நான் கல்வி கற்றுக்கொண்ட காலத்தில் என் பிற்காலத்து எனக்குகந்த கணவனைத்தேட வேண்டியதைப் பற்றிய தோற்றங்கள் எவ்வெவ்விதம் ஏற்பட்

டனவோ அவையனைத்திற்கும் மாறுபாடாகவன்றோ முடிந்
தது இப்போது. ஏ! கிருஷ்ணா! வாஸுதேவா! இதுவும்
உன் சோதனையா! ஐயனே (யோசித்து) ஆதி நாளையில் பெரி
யோர்கள் மாப்பிள்ளை தேடவோ பெண் தேடவோ சென்றால்
அவர்களை நேரில் கண்டு அவர்களுடன் பேசிப்பார்த்து அவர்
களது நடை நொடிகளைக் கவனித்துப் பல தடவைகளும் தீர
ஆலோசித்து, அவர்களைக் கொள்வதென வழக்கம் உளதே.
அது எவ்வளவோ மேலானதென்று இப்போதுதான் புலப்படு
கிறது. அடடா! என் கணவன் Photoவில் இருக்கும் கம்பீர
மென்ன! உடுத்தியிருக்கும் ஆடைகளின் நாகரீகமென்ன!
(பெருமூச்செறிந்து) ஐயோ! வெளித்தோற்றத்தைக் கண்
டல்லவோ வீணே மயங்கினேன். அதனாலன்றோ மதிமோசம்
போனேன். ஹரி என்ற அக்ஷரமும் தெரியாத நிரக்ஷர
குக்ஷியை யன்றோ கணவனாகத் தேடிக்கொண்டேன். யானை
தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வது
போல என் மனவருத்தத்தை நானே தேடிக்கொண்டேனே.
(யோசித்து) ஆம்! இனி இவற்றைப்பற்றி நாம் எவ்வளவும்
வருந்திப் பயனில்லை. ஆயினும் கொண்ட புருஷனது குறைவு
களை வெளிக்காட்டாமல் மறைத்துப் பழகும் தன்மையே உத்
தம ஸ்திரீகளின் லக்ஷணமாகும். வெளிக்காட்டினால் அது
எனக்கே அவமானத்தையும் அகௌரவத்தையும் கொடுக்கும்.
சந்தேகமில்லை. நடந்தது நடந்தேறிவிட்டது. இனி அவரை
எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டுவந்து கல்வியறிவு ஏற்
படும்படிக்கும் செய்ய முயற்சிப்பதே உத்தமம். எனக்குத்
தான் இவ்விதம் நேர்ந்ததெனில், என் சகோதரன் கிருஷ்ண
னுக்குமா, அடுப்பூதி அசடாக ஒன்று வாய்க்கவேண்டும். அவ
னும் இந்த Photoவைப் பார்த்து மணம்செய்து கொண்டதனா
லன்றோ மோசம் போனான். அவனுடைய சிநேகிதர்கள் தங்க
ளுக் கேற்ற விதரணையான மனைவியருடன் இருக்கும் உற்
சாகத்தை நினைத்து நினைத்து அவன் சதா துக்கிக்கிறான்.
ஆனால் எங்களுக்கு மணமாகு முன்னரே, எங்கள் தந்தை
பழைய வழக்கப்படி நடந்தால் சிலாக்கியமா யிருக்குமென்
றாரே. கேட்டிருந்தால் இவ்வளவு கவலைக்கிடமா யிராதல்லவா!
இந்த மேநாட்டுப் படிப்பு எங்களுள் புகவே, அதிகப் பிரசங்



கத்தனம் முதிர்ந்து ஸ்வய ஆங்கிலேயர்போலவே நடந்து
கொள்ள ஆசைகொண்டோம். இதோ அதன் பலனை அநுப
விக்கிறோம். இதனால்தான் ஆங்கில வழக்கத்தில் divorce
ஸகஜமாக இருக்கிறதுபோலும். எத்தகைய கல்வி கற்றாலும்
நமது பெரியோர்களுடைய வழக்கத்தை நழுவவிடுவாரின் கதி
இப்படித்தான் முடியும். "அறவடித்த முன்சோறு கழுநீர்ப்
பானையில் விழுந்ததாம்" என்று முடிந்தது. ஆயினும் கிருஷ்ண
னாவது பாதகமில்லை. கோபித்துக் கொள்ளலாம். தள்ளிவைக்
கலாம். ஆண்பிள்ளையாய்ப் பிறந்தவன். யான் அவ்விதம் செய்வ
தற் கில்லையே. அவ்வாறாயின் எங்கள் குலத்திற்கே என்னால்
பெரிய அபவாதமன்றோ ஏற்படும், ஆகவே நான் தீர்மானித்
துள்ளபடி நமது புருஷனுக்கு எழுத்துவாசனை யுண்டாகச்
செய்து அவரைத்தகுந்த நிலைமைக்குக் கொண்டுவரச் சிறிது
சிறிதாகப் பிரயாசைப் படுவோம். பிறகு பகவான் திருவுளப்படி
நடக்கட்டும். கொஞ்சகாலமாக இப்பெண்பாடசாலை யொன்
றை அமைத்துக்கொண்டு, பொழுது போக்காவிடில் ஆறுத
லென்பதே எவ்வகையிலும் இருந்திராது. இத்தகைய பாடுபடு
வது ஒருவித தேசசேவையா யிருப்பதுடன் என் மனோ சாந்
திக்கும் இடமாயிருக்கிறது. இதோ குழந்தைகள் கூடும் நேர
மாகிவிட்டது. கடைக்குப்போய்ச் சில ஏழைக் குழந்தைக
ளுக்குப் புஸ்தகம் வாங்கிவரவேண்டும். சென்று விரைவில்
திரும்புகிறேன். (நிஷ்கிரமித்தல்.)

[லக்ஷ்மி, காமாக்ஷி, பிரகதம், மரகதம், விசா
லம், மீனாக்ஷி, ருக்மணி என்ற பெண்களும்
இன்னும் சிலருமாக வெளியே ஓடிவந்து.]

லக்ஷ்:—அடி மீனா! எங்கே இன்றைக்கு நமது உபாத்தியாரம்மாளைக்
காணோம்?

மீனா:—என்னிடம் சொல்லிக்கொண்டுதான் போனார்களோ நீ தான்
சொல்லேன்?

காமா:—அதுதானே! நீ கூறுவதும் மெய்தான்.

ருக்:—ஆனால் இன்று அவர்கள் வர நேரமாகும்போலிருக்கிறது.

மரக:—ஆம்! நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

விசா:—ஆனால் ஒருகாரியம் செய்யலாமா?

ருக்:—என்ன? சொல்லு கேட்போம்.

விசா:—அம்மாள் வரும்வரையில் கண்ணாம்பூச்சி விளையாடலாம் என்று தோன்றுகிறது.

எல்லாரும்:—சரி! சரி!

மரக:—ஆனால் முதலில் யார் கட்டிக் கொள்ளுகிறது?

பிரக:—அரக்கிரே செங்கிரே, வைத்துப்பார்த்தால் தெரிகிறது.

காமா:—ஆனால் நீயே வைத்துவிடு.

பிரக:—அரைக்கீரே—செங்கீரே—வெள்ளிய—ராமச்ச—கிண்ணிய தோ—மா—பூ—மலே—தலே—இலே—[என்று குழந்தைகள் சொல்லிப் பொறுக்கி யெடுக்கும் வழக்கம்போல ருக்மணி தேர்ந்தெடுக்கப் படுகிறாள்.] எல்லாரும் (கை கொட்டிச் சிரிக்கின்றனர்.)

ருக்ம:—ஸரி! உங்கள் இஷ்டம்போலக் கட்டுங்கள் அம்மா.

(முன்வருகிறாள்)

பிரக:—(ருக்மணியைக் கண்களைக்கட்டிச் சுழற்றி நிறுத்திவைக்கிறாள்.)

காமா:—(மூன்று விரலைக்காட்டி) அடி! ருக்கு! இது எத்தனை விரல்?

ருக்ம:—(யோசித்து) ஒன்று!

எல்லாரும்:—(சிரிக்கிறார்கள்.)

பிரக:—(ஒன்றையும் காட்டாமல்) இது எத்தனை விரல்? சொல்லு பார்க்கலாம்.

ருக்ம:—(யோசித்து) ஐந்து விரல்

எல்லாரும்:—(கைகொட்டிச் சிரிக்கிறார்கள்)

காமா:—ஸரி! இப்போது எல்லாம் ஸரியாகப்போய் விட்டது. எங்கே பிடி பார்க்கலாம்! நேற்று கோமு செய்ததுபோல் தப்பாட்டம் ஆடக்கூடாதம்மா. பார்த்துக்கொள் [எல்லாருமாக ஓடி விளையாடி, சற்று மறையும் சமயம் கோகிலம் உள்ளே வர, ருக்மணி அவளைக் கட்டிக்கொண்டு "அகப்பட்டுக் கொண்டாள்! அகப்பட்டுக் கொண்டாள்" என்று சத்தம் போடுகிறாள். ஓரே நிசப்தமா யிருக்கிறது. உடனே ருக்மணி திடுக்கிட்டுத் துணியைக் கழற்றவே, உபாத்தியாரம்மாளைக் கண்டு திடுக்கிட்டு நிற்கிறாள்.]



கோகி:—(சிரித்து) ருக்மணி! பயப்படாதே! போனால் போகிறது! உங்களைக் கோபித்துக்கொள்ள மாட்டேன். இப்படி வாருங்கள். குழந்தைகாள் உங்களுக்கு விளையாட வேண்டும் எனப் பிரியமிருக்கிறதுபோலத் தோன்றுகிறது. ஆனால் எல்லோருமாகச் சிறிது நேரம் நேற்று நான் கற்றுக்கொடுத்த கோலாட்டத்தைப் போட்டுக் காண்பியுங்கள் பார்ப்போம்.

[குழந்தைகள் கோலுடன் பிரவேசித்து, சுற்றிநின்று.]

## கோலாட்டப் பாட்டு.

கோலுகோ லெண்ணு கோலே
கோலெண்ணு கோலே
கோலு சாரங்கனுக்குச் செங்கோலுக் கோலே
வாடா கிருஷ்ணு ஒருமுத்தம் தாடா குழந்தாய்
தாடா குழந்தாய்
வஜ்ஜிரமுடி சாய்த்தோர் முத்தம்தாடா கண்மணி
(கோலு)

கண்மணியே நீபிறக்கச் செய்த தவங்கள்
செய்த தவங்கள்
ஒருகோடி லக்ஷத்திற்கதிகமே யுண்டு. (கோலு)
கங்கையோடு ராமேசுவரம் துங்கபத்திராவும்
துங்கபத்திராவும்
இங்குமங்கும் திவ்விய தீர்த்தம் ஆடியே வந்தோம்
(கோலு)

நேற்றுவந்து சோதை மகன் பாலைக்கறந்து
பாலைக்கறந்து
நின்றவிடம் தெரியாமல் உண்டோடி வந்தான்
(கோலு)

கோகி:—(கையை உயர்த்தி) ஸரி! போதும் நிறுத்துங்கள். ருக்மணி! நீ, தட்டு, ஸரியாகத் தட்டவேண்டும். அடி மீனாக்ஷி, நீ காலடி, ஸரியாகப் போடவேண்டும். கோமு, சேர்ந்து பாடி, சேர்ந்து முடிக்கவேண்டும் நீ. நாளைக்குக் கவனிப்பேன். திருப்தியா யிருக்கவேண்டும். காமாக்ஷி! நேற்றையதினம் குழந்தை சட்டைக்கு அளவுகொடுத்து வெட்டச் சொன்னேனே. அதை முடித்தனையா? இன்னும் தொடாமலே வைத்திருக்கிறாயோ?

காமா:—இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. நாளை முடித்து விடுவேன் அம்மணி.

கோகி:—ஸரி! மீனாக்ஷி! கழுத்துப் பட்டைக்கு அடி எடுத்துக் கொடுத்தேனே. அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?

மீனு:—அம்மா! சிவப்புநூல் போட்டேன். பிறகு எந்த வர்ணம் போடலாமெனப் பிடிபடவில்லை.

விசா:—பச்சையாவது, மஞ்சளாவது போடலாமம்மா.

கோகி:—வாஸ்தவம்! ஆனால் மஞ்சள் நூலேபோடு. மரகதம் உனக்கு, போளி, குழக்கட்டை, முறுக்கு இவைகள் செய்யக் கற்றுக்கொடுத்தேனே. நீ இப்போது செய்து காட்டுவாயா? மறக்காமல் நினைவில் வைத்துக்கொள்வாயா?

மரக:—செய்வேன் அம்மணி!

கோகி:—கோமு! அப்பளம் இட நன்றாய்த் தெரிந்து விட்டதல்லவா உனக்கு.

கோமு:—ஆம்! அம்மணி!

கோகி:—ஸரி! குழந்தைகாள் நேற்றுவரையில் உங்களுக்கு ஸ்திரீகளின் கடமைகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். அதே விஷயத்தைப் பற்றி நமது யாதவ மித்திரனில் லீலாவதி எழுதிய, நிரூபங்களையும் படித்துக்காட்டினேன். நீங்கள் கூட உங்கள் பெற்றோரிடம் தெரிவித்து யாதவமித்திரன் பத்திரிகை வருவிக்கும்படி சொல்லுங்கள். அதில் யாவர்க்கும் நன்மை பயக்கத்தகும் பல விஷயங்கள் அடங்கியுள்ளன. நான் கூறியதாகவே சொல்லுங்கள். இது நிற்க, பெண்களுக்கு வேண்டிய சமையல், சித்திரவேலை, நூல் வேலை, தையல் வேலை, ஸங்கீதம், இத்தகைய காரியங்களைத்தவிர, சிற்சில மருந்துச் செடிகளையும் அவற்றின் பிரயோஜனத்தையும் ஒருவாறு நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். பிற்காலத்து அது மிகவும் பயன் தரத் தக்கதாகும். ஆகவே இன்று உங்களை இராஜாத் தோட்டத்திற்கு இட்டுக்கொண்டுபோய் அங்கு சிற்சில செடிகளைப்பற்றிக் கூறப்போகிறேன்.

எல்லாரும்:—(சந்தோஷமாக ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்கின்றனர்.)

கோகி:—வாருங்கள், நாம் அத்தோட்டத்திற்குச் சென்று விரைவில் திரும்புவோம், [எல்லோரும் நிஷ்கிரமித்தல்.]

(தொடரும்)

---

## யாதவ மித்திரன் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள்நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—0—0 |
| பினாங்கு சிங்கப்பூர், முதலிய வெளிநாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ | 1—8—0 |

தனிப்பிரதி விலை அணா 2.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

மாதிரிப் பிரதி வேண்டுவோர்
இரண்டரையணா, தபால் தலை அனுப்பவேண்டும்.

1. சந்தாதாரராய்ச் சேர்கின்றவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

2. எப்பொழுதும் சந்தாத் தொகையை முன் பணமாகச் செலுத்தவேண்டும். வி. பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம், சந்தாத்தொகையை முன்பணமாக மணியார்டர் செய்தால் 2-அணாத்தான் செலவாகும். வி. பி. மூலம் பத்திரிகையை வரவழைப்பதில் 3-அணா அதிகச் செலவாகும், ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருஷ ஆவணி மாதம்முதல் கணக்கு வைக்கப்பட்டு ஆவணி மாதப் பத்திரிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

4. யாருக்கேனும் சஞ்சிகை வந்து சேராவிட்டால் அம்மாதமுடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் தெரிவித்தால் விலை செலுத்தியே பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்கள் புது விலாசத்தைத் தெரிவித்து, அது விபரத்தைத் தபாலாபீஸாரிடமும் அறிவித்துவிட வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்களைக் கவனிக்க முடியாது. பதில் விரும்புவோர் தபால் தலை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | ரூ | 10—0—0 |
| ½-பக்கத்திற்கு | ரூ | 5—8—0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு யாதவ மித்திரன் ஆபீஸிற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

---

ஐந்தாவது யாதவமகாநாடு போட்டோ படங்கள்.
வேண்டியவர்கள் யாதவமித்திரன் ஆபீஸுக்கு விபரமாகத் தெரியப்படுத்துவதுடன் முன் பணமாக ரூ 1—5—0 மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கவும்.

# இந்தியவிவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1.

இதில் கமத்தொழில், கால் நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய சிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாதமும் வெளிவரும். மாதிரிப் பிரதி இனும்.

மானேஜர்,
இந்திய விவசாய ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

# "Young Yadava"

**An English Monthly.**

Annual Subscription Rupee One.

Will be published by the YADAVA YOUTH LEAGUE, MADRAS. Sample copies will be sent on request. All educated yadavas are requested to send the addresses of their English educated relatives and friends so that an attempt can be made to enrol them as subscribers.

Yadavas who send their subscriptions in ADVANCE will go a long way in helping the Community.

APPLY TO:—

**T. S. Venunadha Kone,** F. C. I, M. R. A. S.,
*Kilpauk P. O. Madras.*




Printed & Published by E. M. GOPALAKRISHNA KONE
at the Excelsior Press, Madura.




# யாதவமித்திரன்.

யாதவமக்களின்
முன்னேற்றங்கருதிவெளிவரும்
மாதப்பத்திரிகை.


| தொகுதி | பிரமோதூத ஸூ மார்கழி தைமீ 1930 ஸூ டிச. 31 ஜன. மீ | பகுதி |
|---|---|---|
| 2 | | 5, 6 |


பொருள் அடக்கம்.


கடவுள்வணக்கம் 129,161, பசுக்காத்தல் 158
கருமாணிக்கன் ,, மாதர் பரிசு 136
இந்தியாவின் கல்வி நிலைமை 133
மின்சார உழவு 137 மத ஆராய்ச்சி 152
வேளாண்மையில் உரமிடுதல் 139
கிராமங்களில் நமது முதல் வேலை 141
ஸ்ரீ குசேலர்சரித்திரம் 148 பரதன்பக்தி 155
ஞானகலா விலாசம் 171
ரங்கநாயகியின் கிருபம் 180
வள்ளள்பாரி 183
பத்திரிகாபிமானமும் யாதவரும் 186
கோகிலகிருஷ்ணன்


OFFICE OF THE ... 16 MAR 1931



Managing Editor.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தகவியாபாரம், மதுரை.

# யாதவமித்திரன்.


## ஆசிரியர் கூட்டத்து அங்கத்தினர்கள்
## (Editorial Board Members.)

### தலைவர்.

1. திருவாளர், ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
தலைமைத்தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

---

2. ,, ச. செல்லம் அவர்கள் (யாதவர்) சுசீந்திரம்.
3. ,, J. சக்கரபாணி நம்பியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வைஸ் பிரசிடெண்டு.
ஜில்லாபோர்டு, திருநெல்வேலி.
4. ,, V. கிருஷ்ணரெட்டியார் அவர்கள் (யாதவர்) பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், வேலூர்.
5. ,, தி. அ. முத்துசாமிக் கோனாரவர்கள், வித்வான்,
திருச்செங்கோடு.
6. ,, K. வீராசாமிப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தர கலாசாலை,
திண்டுக்கல்.
7. ,, R. வெங்கடா சலம்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்தரக் கலாசாலை, தஞ்சாவூர்.
8. ,, M. V. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், (யாதவர்)
தலைமைத் தமிழாசிரியர், E. L. M. F. ஹைஸ்கூல்
புரசபாக்கம், சென்னை.
9. ,, ஐயம்பெருமாள் கோன் அவர்கள், தமிழாசிரியர்,
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10. ,, K. கோபால கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)
M. R. A. S. பர்மா.


## வேண்டு கோள்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும் தூஷணைகளின்றியும் முழுவிலாசத்துடன் சமூக முன்னேற்றத்திற்குரியனவும் அறிவு வளர்ச்சிக்குரியனவுமாகிய பொது விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், நடை எளிதாகவும் எழுதியனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங் கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற் கெழுதுக.

யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச் சித்திரைவீதி, மதுரை.

128 E

## நேயர்களுக்கோர் வேண்டுகோள்.

இவ்வாண்டுச் சந்தாப்பணம் செலுத்தாத மித்ரன் நேயர்கள் இம்மாதக்கடைசிக்குள் சந்தாத் தொகையை அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம். அடுத்தமாதப்பத்திரிகையை வீபியில் அனுப்பப் படுமாதலால் முன்னதாகவே மணியார்டர் மூலம் அனுப்பினால் 0—3—0 அணா லாபம் ஆகும்.

ப-ர்

# யாதவமித்திரன்

ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 2 | பிரமோதூதஸ்ரீ மார்கழிமீ 1930-ஸ்ரீ டிசம்பர்-மீ | பகுதி 5 |
| --- | --- | --- |



OFFICE OF THE REGIS... No. 16 MAR


## கடவுள் வணக்கம்.

நீரகத்தாய் நெடுவரையி னுச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்தகச்சி
யூரகத்தாய் ஒண்துறை நீர் வெஃகாவுள்ளாய்
உள்ளுவா ருள்ளத்தாய் உலக மேத்தும்
காரகத்தாய் கார்வானத் துள்ளாய் கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் பேராது என்னெஞ்சி னுள்ளாய்
பெருமான் உன் திருவடியே பேணினேனே

திருமங்கையாழ்வார்.

# பாண்டியன் தளபதியும் மந்திரியும் ஆயர்குல திலகனுமான கருமாணிக்கன்.

இவன், நம் நாட்டில் நாற்பது வருடங்களுக்குமுன்வரை மிகவும் பிரபலமாய் வழங்கிய 'கப்பல்கோவை' என்னும் பிரபந்தத்துக்குத் தலைவன். இவன் இக்கோவை பாடிய புலவர்க்குத் தன்னூரிலிருந்து புலவர் ஊராகிய மதுரைவரை இடை இல்லாமல் பொதி மாடுகளில் தானியத்தை ஏற்றி அனுப்பிப் பெரும் பரிசில் நல்கினானென்று தெரிகிறது. இச்செய்தியை

"தெரிபுல வோர்தம் மதுரைமட் டாச்சொலச் சென்றபொதி
எருதினில் ஏற்றிப் பொறித்தலம் சென்றதற் கேயஞ்சலாய்ப்
பெருமுரா சார்த்திடக் கப்பல்நற் கோவைப்ர பந்தங்கொண்ட
வருகரு மாணிக்கன் வாழ்வான பாண்டியன் மண்டலமே"

என்று பாண்டிமண்டல சதகச் செய்யுள் குறிப்பிடுதல் காண்க.

இக் கோவை தஞ்சைவாணன் கோவைபோல் வாக்குவளஞ் சிறந்திருப்பதால் அக் காலத்தில் கற்றோரையும் மற்றோரையும் மனப்பாடம் பண்ணும்படி அவர்தம் உள்ளத்தைப் பிணித்து விளங்கிற்று. இதுபற்றியே சில அகப்பொருள் துறைக்கு இலக்கியமாக இலக்கண விளக்கத்தில் அதன் ஆசிரியர் இக்கோவையிலிருந்து எட்டுச் செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளார். இக்கோவை காலந்தரத்துள் வழக்கு அருகி, பிரதிகளும் அருமையாகி ஒருபிரதி மாத்திரம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலையி லிருந்தது. அதுவும் சில வருடங்கட்குமுன் தீவாய்ப்பட்டு இறந்தொழிந்தது. பின்னர் அரிதின் முயன்று ஒரு பிரதி திருநெல்வேலியிலிருந்து கிடைத்திருக்கிறது. இதனொடொப்பு நோக்குதற்கு மற்றொரு பிரதி கிடைத்தபின் இக் கோவை நம் மித்திரன் வாயிலாக வெளிவரும்.

இக்கோவைப் பாடல்களிலிருந்து கருமாணிக்கனது குலம், அவன் அரசுசெய்த ஊர், வீரம், கொடை, போர்ச் செயல் முதலியன தெரியவருகின்றன. அவற்றைக் கொண்டு இவனது வரலாற்றைச் சுருக்கமாய் இங்குக் குறிப்பிடுவோம்.

இவன் நமது யாதவகுலம் விளக்கம் அடையும்படி தோன்றிய குரிசில் என்பது, அக் கோவை "வலம்புரிச் சங்கம்போன்ற தூய நிறமுடைய பலராமனுடைய வழியிலும் பதினாறுயிரங் கோபஸ்திரீகளது உள்ளத்தைக் கவர்ந்த கண்ணபிரான் வழியிலும் வந்தவனென்றுகொண்டு 11-ம் பாட்டிலும், 379-ம் பாட்டிலும் முறையே

"சேயோ னெனுந்திற லான்திரு மேனி வலம்புரிபோல்
தூயோன் வழிவந்த தொண்டையர் கோன் கப்பல்" எனவும்

"உலகம் புகழ் பதினாறுயிரவர் உளங்கவர்ந்த
கலக்கன் குல திலகன்" எனவும் குறிப்பிடுதலால் நன்றாக அறியப் படுகிறது.



இவன் தன் வமிசத்தின் பெருமைக்கேற்ப இளம்பருவ முதலே வீரத்திலும் புத்தி விசாலத்திலும் சிறந்து விளங்கியபடியால் அக் காலத்தில் பாண்டிய நாட்டை அரசு செய்த பாண்டியன் இவனைத் தனது மந்திரியாகவும் சேனாதிபதியாகவும் ஆக்கி இவனுக்கு "வீரநாராயணன்" என்னும் பட்டப் பெயரையும் ஈந்தான் என்று தெரிகிறது. இது ஷை கப்பற் கோவை

"கருமாணிக்கன் கைதவற்குப், பாராளும் வீரப்
பரிவீர நாரணன்" எனவும்

"கருமாணிக்கன் கைதவர்தம் தளத்துக் கொருவன்"

எனவும் கூறிச் செல்லுவதால் அறியலாம்.

இவன் பாண்டியன் தளபதியாய் விளங்கியதற்கேற்ப வடக்கே கங்கை வரை சென்று கன்னடர், காடவர் ஆரிய மன்னர்களை வென்று அவர்தம் நாடுகளைக் கவர்ந்தனன்; இதனை,

"கன்னடர் மண்கவரும் கருமாணிக்கன்",

"அடல்மான் நடவிக்காடவர் மண் கவரும் கருமாணிக்கன்"

"வங்கரும் கொங்கரும் வந்து நின்றேத்த வடவரசர்
கங்கைகொண்டான் தொண்டைமான்" என

இவ்வாறு அக்கோவை குறிப்பிடுதலால் அறியலாம்.

இவன் ஒரு சமயம் கலிங்கமன்னனுக்குப் பெருந்துணைவனாய்ச்சென்று, போரில் நின்று, பகைவரை வென்று பேருதவி புரிந்தனன் என்று அக்கோவை கூறுகின்றது "கலிங்கர் கோன் இருந்துணைவன் தொண்டைமான்" என்பது அக்கோவையின் கூற்று.

பாண்டியன் சேனாதிபதியாய் வடமன்னரை வணக்கிய கருமாணிக்கன் இருந்து அரசுசெய்தது கப்பலூர், துவரங்குறிச்சி என்னும் ஊர்களாம். இவ்வூர்களே இவனுக்குரியனவென்பதை அவன்மீது பாடிய கோவை கப்பல்கோவை என வழங்கியதும் 'துவரையர்கோன்' எனக் கோவையில் பல இடங்களில் இவனை வழங்கிவருவதும் நன்றாய் விளக்குகின்றது. கருமாணிக்கன் என்னும் பெயர் புதுக்கோட்டை சமஸ்தான தலங்களில் காணப்படும் சாஸனங்களில் அடிக்கடி வரு

கிறபடியால் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குத் தென்மேற்கிலும் மதுரைக்கு வடகிழக்கிலும் இப்போதுள்ள துவரங்குறிச்சி, கப்பலூர் என்னும் ஊர்களே இவன் ஆட்சிசெய்த ஊர்களாகும் என ஊகிக்கப் படுகிறது. அந்நாடு இப்பொழுதும் துவராபதிநாடு எனப் பெயர் வழங்குவதும் அங்கு யாதவர்கள் வசித்து வருவதும் இதனை வலி யுறுத்தும். இவனை "சுறவுயர் கொடியுயர்த்தோன்" என, கோவை கூறுதலால் பாண்டியன் இவனைப் பிரதிநிதியாகக்கொண்டு தனக் குரிய மீனக்கொடியை இவன் உயர்த்த உரிமை தந்தான் எனத் தெரிகின்றது. இவன் செங்கழுனீர் மாலையைப் * போர்ப்பூவாகவும் துளபமாலையைத் † தார்ப்பூவாகவும் கொண்டவன். அரசியலுக்கு வேண்டிய பல கலைகளையும் தேர்ந்தவன் என்றும் கொடையில் சிறந்தவனென்றும் கப்பல் கோவை சிறப்பித்துக் கூறுகின்றது.

"எண்ணெண் கலைதேர் கருமாணிக்கன்",

"கொண்டலன்ன கைத்தாமரைத் தொண்டைமான்" என வருதல் காண்க.

கண்ணபிரான் உபயகுலோத்தமனாக (பிறந்த குலமும் வளர்ந்த குலமும் உடையவன்) விளங்கியவனாதலால் கண்ணன் வழிவந்த கருமாணிக்கனையும் இக்கோவை உபயகுலோத்தமன் எனக்கூறுகின்றது.

இவன் ஒருபெரியாரை (ஜீயர்) திருக்கோவலூரிலிருந்து தன தூர்க்கெழுந்தருள்வித்துப் பணிந்து வந்தானென்றுதெரிகிறது. இது "கோவலமர்முனி கொண்டுவந்தேத்தும் முத்தூர்த் துவரைக் காவலன்" என்ற கோவை அடியால் தெரிகின்றது.

மதுரை ஸ்ரீமீனாட்சிகோயில் சுவாமி சந்நிதி உட்பிரகாரத்தில் வடபாகத்தில் கருமாணிக்கப் பெருமாள் என்ற ஓர் விஷ்ணுகோயிலை இவன் பிரதிஷ்டை பண்ணியிருந்தானென்றும் பிற்காலத்தில் அது எடுக்கப்பட்டுப் போய்விட்டதென்றும் சொல்லுகின்றனர். இதற் கேற்ப அப்பிரகாரத்தின் வடகோபுரத்திலும், விக்கிரஹம் இருந்த தென்று சொல்லும் மண்டபத்துள்ளும் விஷ்ணுபுராண ஐதீக சிற்ப உருவங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலை மீண்டும் பிரதிஷ்டை பண்ண வேண்டுமென்று சில கனவான்கள் வழக்குத் தொடங்கின தாகக் கேள்வியா லறியப்படுகிறது.

இவனது போர்ச் செய்தியைக் கொண்டு இவன் கி. பி. 13-ம் நூற்றாண்டிலிருந்த ஜடாவர்மசுந்தரபாண்டியன் காலத்தவனென்று கருதலாகும். ஆகவே சுமார் 700 வருஷங்களுக்கு முன்னரே இத் தகைய பெருமை வாய்ந்த கருமாணிக்கனையீன்ற நமது குலத்தின் தற்காலத்திய நிலைமையை நினைந்து நம்குலத்தின் பழைய பெருமையை நாட்ட முன்வருவது ஒவ்வொரு யாதவ வாலிபர்களது கடமை யாகும்.

தலைமை ஆசிரியர்.

* யுத்தத்தில் அணியும் மாலை † சாதாரணமாலை

# இந்தியாவின் கல்வி நிலைமை.

(ஆர்தர் ஐ. மேயூ C. I. E., I. E. S.)

(103-ம் பக்கத் தொடர்ச்சி)

1900ம் வருஷ முதல் சர்வகலாசாலைகள் 5லிருந்து 15 ஆக எண்ணிக்கையில் மிகுந்துவிட்டன. இவற்றில் சில புதிய சர்வ கலா சாலைகள் தங்கள் எல்லைகளுக்குட்பட்ட மாணவர்களுக்குக் கல்வி போதித்துப் பரீக்ஷிப்பதே தங்கள் கடமையாகக் கொண்டுள்ளன. மற்றவைகளில் ஆராய்ச்சிக்கான சாதனங்களெல்லாம் தேடிக் கொடுக்கப்படுகின்றன. கல்கத்தா சர்வகலாசாலைக் கமிஷனின் சிபார்சு களை அனுசரித்து நிருவாக சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. ஆனால் இத்தகைய அநுகூலங்களையெல்லாம் கலை பயில்வதற்கு இயற்கையில் சிறிதும் விருப்பமில்லாதவர்களும் கல் விப் பயனை யடைய நம்பிக்கையற்றவர்களும் கல்லூரிகளுக்குக் கூட் டங்கூட்டமாகச் சென்று கெடுத்து விடுகிறார்கள். நடுத்தரக் கல்வி யைப் பூர்த்திபண்ணுகிறவர்களில் பொதுவாக நூற்றுக்கு 59 பேரும் வங்காளத்தில் 100க்கு 80 பேரும் சர்வகலா சாலைகளுக்குச் செல்லு கின்றனர். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் இவ்வாறாகக் கல்வி பயில் வோரின் தொகை நூற்றுக்கு எட்டேயாகும்.

உத்தியோகப் படிப்பிற்கும் அரசாங்கக் கைத்தொழிலுக்கும் வேண்டிய விசேஷப் பயிற்சிக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயக் கல்லூரிகளில் இப்போது முன் னிலும் அதிகம்பேர் சேர்ந்திருப்பதிலிருந்து பெரிய நிலச் சுவான் தார்கள் தங்களது பண்ணைகளைக் கவனிக்க விவசாய நிபுணர்கள் அவசியமெனக் கருதுகிறார்களெனத் தெரிகிறது.

இன்னும் இந்திய கைத்தொழில் விர்த்திக்கு அவசியமான உத்தியோகஸ்தர்களைப் பயில்விக்க அரசாங்கத்தார் சித்தமாயிருக் கின்றனர். ஆனால், பல கமிஷன்கள் கூறியதுபோல, புதிய கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படும்போதே இவர்களையும் பயில்விக்க வேண்டும்; கைத்தொழில் ஆரம்பிக்கப் படுதற்கு முன்னரே, இவர் களைப் பயிற்சிபெறச் செய்வதென்பது முடியாதகாரியம். தற்போது கல்வி நிபுணர்களுக்கும் அதிக ஆள்வைத்து வேலைவாங்கும் முத லாளிகளுக்குமிடையில் நெருங்கிய சம்பந்தம் (கூட்டுறவு) ஏற்பட்

டிருக்கிறது. பம்பாயில் வியாபாரக் கல்வி வெகு விரைவாய் விருத்தி
யடைந்துள்ளது. இக்கல்வி விவசாயக் கல்வியைப்போல் கலா
சாலைகளில், நல்ல அந்தஸ்து பெற்றுள்ளது. சுரங்கத் தொழில்,
காடு பரிபாலனம் முதலிய உயர்தரத் தொழில்களின் முன்னேற்றம்
பணத்தையும் இந்திய சர்க்கார், மாகாணங்களின் தேவைகளை
ஒன்றுசேர்த்துச் சீர்படுத்தும் சாமர்த்தியத்தையும் பொறுத்திருக்
கிறது. பூஸாவிலுள்ள விவசாயக் கல்லூரியிலும், பங்களூரிலுள்ள
டாட்டா இன்ஸ்டிடூட்டிலும் இத்துறையில் அரிய முயற்சிகள் செய்
யப்பட்டு வருகின்றன. பஞ்சாப்பில் பொதுக் கல்வியையும் தொழிற்
கல்வியையும் ஒன்றுசேர்த்துப் போதிக்கும் உயர்தர விவசாயக்
கல்லூரிகளை ஸ்தாபித்து இப்புதிய முயற்சியின் பயனைச் சோதித்து
வருகின்றனர். சுமார் 66 நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் கீழ்வகுப்பு
களில் தொழிற் கல்வியோடு தாய்ப்பாஷையையும் சேர்த்துப்
போதிப்பதைக்கண்டு சமீபத்தில் இந்திய விவசாய நிலைமையை
ஆராயவந்த விவசாயக் கமிஷனும் சிலாகித்தது.

## இந்தியமாதர்களின் நிலைமை.

1921-ல், ஆயிரத்துக்கு 982 மாதர்கள் எழுத்துவாசனை அறியா
தவர்கள். பள்ளிக்கூடங்களில் அதிகமாணவிகள் சேர்க்கப்பட்டி
ருந்தபோதிலும் இதன் பலனாக அதிகச்செலவு ஏற்பட்டபோதி
லும், அடுத்த ஜனசங்கையின்போது அதிக முன்னேற்றத்தை நாம்
காணமுடியாது. எந்த மாகாணத்திலும் ஐந்து பெண்களுக்கு ஒரு
பெண்ணுக்குமேல் பள்ளிக்கூடம் போவதில்லை. ஆரம்பப் பள்ளி
யில் படிப்பவர்கள் மூன்றில் இரண்டு பங்கினர் ஒருவருஷமே
படிக்கிறார்கள். உயர்தர வகுப்பில் பயில்வோர்களின் சராசரி எண்
ணிக்கைத் தொகை இரண்டுதான். குறுகிய காலப் பள்ளிக்கூடவாழ்
வும், ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்லாமையும், தகுதியான உபாத்
தியாயர்களின்மையும் படிப்பவர்களுக்கு நிரந்தரமான பயன் விளைப்ப
தில்லை. உயர்தரப் பள்ளிக்கூடங்களில் 7000 மாணவிகளும் கலாசாலை
களிலுள்ள இரண்டாயிரத்திற்குகுறைந்த தொகையினரும் இருக்கை
யில், பள்ளிக்குச்செல்லும் மொத்த தொகையினராகிய 18,000,000
பேர்களில் ஒரு சிறிய பகுதியினருக்கு உபாத்தியாயர்களைப் பயிற்
றுவிப்பதென்பது மிகக் கடினமான காரியமே. உயர்தரக் கல்வியின்
தன்மை நாடோறும் அதிகரித்து வருகிறது. தைரியம் வாய்ந்த



சில இந்தியப் பெண்மணிகள் பொதுஜன அபிப்பிராயத்தை மாற்றி
வருகிறார்கள். ஆனால், இந்தியர்களது கலியாண வழக்க ஒழுக்
கங்கள் மாத்திரமல்ல, இந்திய சமுதாய அமைப்பு முழுவதும்
மாறி, மாதர்கள்பால் இந்திய சமுதாயம் கொண்டுள்ள மனப்
பான்மை இந்தியாவை இப்போது இயக்கும் ஆத்மார்த்த சக்திகளை
அநுசரித்து அடியோடு மாற்றினாலொழிய இத்துறையில் எவ்வித
முன்னேற்றத்தையும் நாம் காணமுடியாது. முகமதியர்களுக்கும்
ஆங்கிலோ இந்தியர்களுக்கும் உயர்தரக் கல்விபோதிப்பதற்குப்
போதிய முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்தார் உண்மையாகப் பிரயத்தனப்பட்டும் தாழ்த்தப்
பட்ட வகுப்பினரின் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய தொகையி
னரில் 100க்கு 3 பேரே பள்ளியில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்
களுக்குஉயர்தரக் கல்வி என்பது வெறும் பெயரே. இவர்கள் பள்ளி
களுக்குள் செல்லும் உரிமையை வற்புறுத்துவதற்கு அடிக்கடி
முயன்றும் இன்னும் ஏற்படவில்லை. இவ்வகுப்பினருக்கெனத்
தனிப்பள்ளிகள் ஏற்படுத்துவதென்றால் ஜாதித்துவேஷத்தைக்
கிளப்பி விடுவதாகும். கிறிஸ்தவமதப் பிரசாரசபையார் இவ்வகுப்
பினருக்களிக்கும் சிறந்த சௌகரியங்களைப்போல் சர்க்காராவது
மற்றெவராவது செய்ய முடியாதென்பது இன்னும் உண்மையெனி
னும், இவர்களது சிறந்த நோக்கங்களிற் சிலவற்றை நிறைவேற்றி
வைக்க இப்போது புதிய சபைகள் சில இந்துக்களால் உண்டாக்
கப்பட்டுள்ளன.

1854 முதல் இந்தியக்கல்வியில் கிறிஸ்துமதப்பிரசாரப் பள்ளிக்
கூடங்கள் முக்கிய அம்சமாகும். சென்னை இராஜதானியில் 1921ல்
சுமார் 100க்கு 20 மாணவர்கள் கிறிஸ்துமதப் பிரசாரப் பள்ளி
களில் வாசித்தனர். கல்விக்குச் செலவிடப்பட்ட மொத்தத்தொகை
யில் 100க்கு 14 வீதம் கிறிஸ்தவப் பிரசாரநிதியிலிருந்து செலவிடப்
பட்டது. விவசாயக் கல்வியை இவர்களே முதன்முதல் ஆரம்பித்
தார்கள். மதவிஷயத்தில் நடுநிலைமை வகிக்கும் இந்திய சர்க்காரும்
மதத்தை அஸ்திவாரமாகக்கொண்டு கல்வி போதிப்பது குறித்து
அவர்களது நன்மதிப்பையும் அறிவித்துள்ளார்கள். இந்தியாவின்
கல்வி அபிவிருத்திக்கான வழிகளில் இவர்கள் இந்திய மக்களின் நம்
பிக்கைக்குப் பாத்திரராகியுள்ளனர். முன்போலவே, இப்போதும்

மந்திரிகளது ஆதிக்கத்தின்கீழ் அந்நம்பிக்கையை இழந்து விடுவார்களென்று நினைக்க எவ்வித அறிகுறியுமில்லை. அரசாங்க உதவி பெற்ற பலஸ்தாபனங்கள் தோன்றி மிகப் பிரயோஜனமான வேலை செய்து வருகின்றன. ஆனால் இவைகளில் பல சர்க்கார் உதவியையும் பள்ளிக்கூடச் சம்பளத்தையும் முழுதும் நம்பிக்கொண்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள தனவந்தர்கள் தயாளகுணத்துடன் முன் வந்து மூலதனம் தேடிக்கொடுத்தா லொழிய இப்பள்ளிக் கூடங்கள் மிஷன் பள்ளிக்கூடங்களைப் போல நிலைபெற்றிருக்க முடியாது.

---

ஸ்ரீ

## மாதர் பரிசு!

(1) மாதர் கடமை!
(2) பெண்மக்கள் நிலை!
(3) மாதர்கள் முன்னேற்றம்!
(4) பெண்கல்வி அவசியமா?
(5) விதவா விவாகம் வேண்டியதா?
(6) கலப்பு மணம்!
(7) யாதவர்களும் பெண்மக்களும்!
(8) பெண்ணுரிமை!

என்னும் எட்டுக் கட்டுரைகளையும் பெண்ணுலகு என்னுந் தலைப்பில் யாதவ சமூகப் பெண்மக்கள் "யாதவ மித்திரன்" பத்திரிகையில் எழுதி யனுப்புவோர்க்கு எட்டுப் பரிசு வழங்கப்படும். கட்டுரை உதவுவோர் இருபது வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டும். முதற்பரிசு மித்திரன் மூன்றும் ஆண்டு ஆரம்ப தினத்தன்று "ஸ்ரீ கோபால்மஹாலில்" வழங்கப்படும். மற்ற பரிசுகளும் மாதாமாதம் கொடுக்கப்படும். கட்டுரை வழங்குவோர் இவ் எட்டனுள் எதை வேண்டுமானாலும் முதலில் எழுதியனுப்பலாம். ஆண்மக்கள் இதில் கலக்கக் கூடாது. பின்பு ஆடவர்களுக்குத் தனியாக இடமளிக்கப்படும். இது சம்பந்தமாய் எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. சந்தா நம்பரையும் குறிப்பிடுக.

M. K. காந்திதாஸ், பர்மா.

---

OFFICE OF THE REGISTRAR No. 16 MAR 1931

# மின்சார உழவு.

## (வேளாண்மையில் மின்சார உபயோகம்.)

(108-ம் பக்கத் தொடர்ச்சி)

( K. G. கிருஷ்ணன் Bsc. Hons. M. R. A. S. (Lond)

### மின்சாரக் குஞ்சு பரிபாலனம்.

முட்டைகள் குஞ்சு பொரிப்பதற்கு உஷ்ணம் அத்யாவசியமாயிருக்கிறது. மின்சார சக்திக்கு, உஷ்ணங் கொடுத்துத் தகிக்குங் குணமிருப்பதால், மின்சாரத்தால் முட்டைகளினின்று குஞ்சு பொரிக்கச் செய்யலாம். மரக்கட்டைகளால் இரண்டு அறைகள் ஒன்றின்மே லொன்றுயமைத்துக் கீழறையில் முட்டைகளைப் பரப்பி மேலறையில் மின்சார இயந்திரங்களை வைத்து உஷ்ணமுண்டாக்கி முட்டைகளைத் தகிக்கின்றனர். சுமார் 50 அல்லது 60 அளவு (Degrees) உஷ்ணம் போதுமென்கின்றனர். நியூயார்க் பட்டணத்தில் ஒரே தடவையில் 20,000 முதல் 25,000 வாத்துக் குஞ்சுகளைப் பொரிக்கச் செய்கின்றனர். இந்த வாத்துக் குஞ்சுகளுக்கு ஆகாரங்களை மின்சார இயந்திரத்தாலேயே ஒன்று சேர்த்துப் பாகுபடுத்திக் கொடுக்கின்றனர். தண்ணீர் இறைக்கவும், வெளிச்சம் கொடுக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

பகலை அதிகப்படுத்தினால் பறவைகள் அதிக உணவு உண்டு தேகாப்பியாச மெடுத்து அதிக முட்டைகளிடுகின்றன. ஆதலால் பகலை அதிகப்படுத்துவதற்கு மின்சார விளக்குகளை ஆங்காங்கு அமைத்து இரவைப் பகல்போலாக்கி மேனாடுகளில் அதிக முட்டைகளைப் பெற்று வருகின்றனர். ஒரு வருஷத்துக்கு ஒரு பறவைக்கு ¾ பென்ஸ் மின்சார விளக்குக்காகச் செலவிட்டு 100க்கு குறைந்தது 25 முட்டைகள் அதிகமாகப் பெறுகின்றனர். முட்டைகளைப் பரிசோதிப்பதற்கு ஒரு துவாரமுடைய பெட்டிக்குள் மின்சார விளக்கிட்டு அத்துவாரத்தில் முட்டையை வைத்து நோக்கினால் முட்டையின் உள்பாகம் தெளிவாகக் காணப்படுகிறது. ... அதிலிருந்து நல்ல முட்டைகளைத் தேர்ந்தெடுக்கலாம். ... காலத்தில் வீட்டை உஷ்ணப்படுத்தவும், துணிகளைக் கசக்கி வெளுக்கவும் இதுபோன்ற பலவித வேலைகளுக்கும் மின்சாரம் உபயோகமாகிறது. வேளாண்மை விருத்திக்கான பலவித சாஸ்திரீக முறைகளில் மின்சார உபயோகத்தை மாத்திரம் இங்காராய்ந்தோம்.

## முடிவுரை.

மின்சாரத்தை உபயோகப் படுத்தாத நம் இந்தியாவில் திடீரென்று ஓர் எளிய வேளாளரை உபயோகப்படுத்தச் சொல்லுவது கூடாத காரியம். ஏனெனினில் அவர்களுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தும் வழி தெரியாமலும், மின்சார இயந்திரம் முதலியவைகளை வாங்கச் சக்தியற்றுமிருப்பது யாவரும் தெரிந்த விஷயம். ஆகவே மேனாடுகளைப்போல கவர்ன்மெண்டாரின் உதவியாக இதற்காக ஓர் சங்கம் (Electric Agricultural Board) ஏற்படவேண்டும். இச்சங்கத்தின் பொறுப்பால் மின்சாரம் உண்டுபண்ணி வேளாண்மை செய்வோர்களுக்கு விற்றுவர வேண்டும். அன்றியும் அப்பொழுதுக் கப்பொழுது இயந்திரங்களை உதவி அவைகளின் உபயோகங்களைப்பற்றிக் கிராமவாசிகளுக்குப் போதிக்க வேண்டும். ஆனால் நம் இந்தியக் குடியானவர்கள் இவ்வழியில் கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெறமுடியுமா? வென்பதுதான் கேள்வி. சுதந்தரமுடைய நாடுகளில் இவைபோன்ற காரியங்கள் பல நடைபெற்று வருகின்றனவென்பது யாவரும் தெரிந்த விஷயம். சுதந்தரமற்ற நாட்டிலிருக்கும் எளிய குடியானவர்களுக்குப் பெரிய ஜமீன்தார்களே உதவி செய்ய வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு ஏராளமான நிலங்களிருப்பதால் மின்சார வேளாண்மையைக் கைக்கொண்டால் தங்கள் வேலைகளை எளிதில் முடித்துக் கொள்ளுவதன்றியும் மற்ற எளிய வேளாண்மை செய்வோர்களுக்கும் குறைந்த வாடகைக்கு இயந்திரங்களையுதவி அவற்றால் இருபாலரும் தக்கபடி இலாபம் பெறுவார்களென்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 32 கோடி. இதில் விவசாயிகள் 28 கோடி. மொத்த ஜனங்களில் 2865 லட்சம் கிராமங்களிலும், 325 லட்சம் பட்டணங்களிலும் வசித்து வருகின்றனர் இப்பொழுது பயிராகும் நிலம் $22\frac{1}{2}$ கோடி ஏக்கர். இன்னும் பயிர் செய்யக்கூடியது 15 கோடி ஏக்கர் நிலம். இப்படி விவசாயங்கள் செ[illegible] லங்கள் ஏராளமாயிருந்தும் இவைகளை வெகு இலகு வில் [illegible] செலவை[illegible] [illegible]யில்லாமல் அநேகர் வேளாண்மையை விட்டு வியாபாரம் முதலிய [illegible]ம்சியும் ஆற்றலு மற்ற துறைகளைநாடி யோடிவிடுகிறார்கள். இவர்கள் தங்களுக்கும் தங்கள் தேசத்திற்கு முண்டாகும் கெடுதிகளையும் கஷ்டங்களையும் பற்றிச் சற்றேனும் சிந்திப்பார்களாக.

# வேளாண்மையில் உரமிடுதல்.

திரு.( K. G. கிருஷ்ணன், Bsc. Hons. )

(72-ம் பக்கம் தொடர்ச்சி.)

இந்தியாவில் கவர்ன்மெண்ட் விவசாய நிலங்களிலும், ஐரோப்பியர்கள் மேல்பார்க்கும் (முக்கியமாய் இந்திய அரசர்களின் இராஜ்ஜியங்களிலுள்ள) நிலங்களிலும் தவிர மற்ற விடங்களில் செயற்கை உரம் சேர்ப்பதேயில்லை. இந்தியாவின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நவச்சாரகந்தக உப்புகள் (Ammonia Sulphate) ஏராளமாய்க் கிடைக்கின்றன. இதை உரமாக உபயோகப்படுத்தாமல் ஜாவா முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதன் காரணத்தை ஆராய்ந்ததில் இந்தியாவிலுள்ள நிலங்கள் மேனாட்டைப் போல் செயற்கை உரத்தால் செழிப்படையுந் தன்மையுடையனவல்ல வெனத் தெரிகிறது. இந்திய நிலங்களுக்கு அழுகிப் புளிப்பான உயிருக்குரியவைகளடங்கிய சுத்தக்கரி, உப்புவாயு, பிராணவாயு, ஜலவாயு (organic matters) வஸ்துக்களைப் பஸ்பமாக்கி உதவ வேண்டியதாயிருக்கிறது. மாட்டுச்சாணத்தை முன்கூறியபடி சேர்த்து வைத்து நன்றாய்ப் பஸ்பமானவுடன் நிலத்திற்குதவலாம். சாணத்தை அதிகமாய் நெருப்பு எரிக்கவும் மற்றும் பல வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுவதால் புல், பூடுகளில் நமக்கு உணவுக்குபயோகமாகும் பாகம் போக மீதியானவைகளை நல்ல உரமாக்கலாம். கடல் பூடுகள் மேன்மையானவை. இப்புல் பூடுகளை முதலாவது பிராணவாயுவையும் தண்ணீரையும் கிரகிக்கத்தக்கனவாய்ச் சிறிய துண்டுகளாக்க வேண்டும். இவைகளை மண், மாட்டுச்சாணத்தோடும், சிறுநீர், மரத்தூள், தண்ணீர் முதலியவைகளோடும் நன்றாய்ச் சேர்க்கவேண்டும். இப்படிச் சேர்த்து வைத்த கொஞ்ச நாட்களுக்குள் "செலுலோஸ்" (Cellulose) என்றதோர் மரப்பாகத்தைப் போக்கடிக்கும் சிறிய புழுக்கள் (organisms) உண்டாகிச் சேர்த்து வைத்த உரத்தை நன்றாய்[illegible]பமாக்கி உப்புவாயு வெளிக்கிளம்பக்கூடிய தன்மைக்குக் கொண்டு வந்து விடுகிறது. இவ்[illegible] பயனளிக்கத்தக்க விதமான உரமே இந்தி[illegible] அத்யாவசியமாவும் காணப்படுகிறது. உரமாகவும் [illegible]

இரண்டு முக்கிய விதிகளை ஒவ்வொரு விவசாயஞ் செய்வோ
ரும் கருத்திலமைப்பதவசியம். முதலாவதாக நிலங்களுக்கு அதிக
வேலை கொடுக்கக்கூடாது. முன் கூறியபடி புல், பூடு உரங்களைப்
புளிப்பாக்கித் தூள்மயமாக்காது அவைகளை அப்படியே அறியாமை
யாய் நிலங்களில் சிதறிவிட்டால் அந்நிலங்களும் இப்புல்களைப்பாகு
படுத்தும் அரியவேலையும் பயிர்களைவளர்க்கும் வேலையுமான இரண்டு
பெரிய வேலைகளேற்பட்டு நிலம் அல்லல்படுகிறது. நிலத்திற்குப்
பயிர்களை வளர்க்கும் வேலையன்றி மற்ற வேலைகளொன்றுங் கொடுக்
கக்கூடாது. உரத்தை வெளியில் பக்குவப்படுத்தி நிலத்திற் குதவ
வேண்டும். இரண்டாவதாக வெளியில் பக்குவப் படுத்திய உரம் அழு
கிப்புளிப்படைந்து பஸ்பமாகி உப்புவாயு உண்டாகுந்தன்மையில்
இருக்கவேண்டிய தவசியம். இவ்விதிகளை முதலாவதாகச் சீனுதேசத்
தார்களே உணர்ந்தவர்கள். உரங்களில் நல்ல காற்றுப்பட்ட மாத்தி
ரத்தில் உப்புவாயு உண்டாகத் தொடங்குகிறது. ஆனால் இந்தியா
வில் மழைகால இறுதியிலும், குளிர்காலத்துவக்கத்திலுமே உரங்க
ளிலிருந்து உப்புவாயு அதிகமாய் உண்டாகிறது. இக்காலங்களில்
தகுந்த விதைகளைப் பயிரிட்டால் நல்ல விளைவுகிடைக்கும். இப்படி
உரங்களைத்தகுந்தபடி உதவாமல் கும்பல் கும்பலாய் உரங்களைக்
கொட்டிவைத்தாலும் செடி, கொடி, மேனுட்டு உப்புவகை முதலிய
வைகளைக் கொட்டிவைத்தாலும் அவ்வளவு பிரயோஜனமில்லை
யென்று ஆராய்ச்சிகள் முறையிடுகின்றன.

## மழையின் கெடுதிகள் யாவை?

இதுவரை நாம் உரங்களைப்பற்றி ஆராய்ந்தோம். இப்பொழுது
நிலத்தின் செழிப்பும், நல்ல தன்மையுங் குறைந்து போகும் ஓர்
முக்கியவழியை ஆராய்வோம். பயிர்கள் நிலத்திலுள்ள தங்கள் உண
வுகளைக்கிரகித்து நிலத்தின் செழிப்பைக்குறைப்ப தொன்று. ஆனால்
அனுவசியமாய்ச் செழிப்புக் குன்றிப் போகுங்காரணம் யாதென
இனி இங்குக் கவனிப்போம்.

இந்தி[illegible]ாவுக்கு மழை ஏராளமாய்த் தென்மேற்குக் காற்றால்
(South west mo[illegible]on) கொண்டுவரப்படுகிறது. ஏராளமாய்
மழை பெய்தவுடன் நிலங்க[illegible]ள்ள மண்ணை மழைத் தண்ணீர்
[illegible]க்கொண்டு [illegible]போகிறது. இந்தியாவில் இப்படி வழித்
துக்கொண்டு போகப்படும் நிலங்களின ம[illegible] அளவை அறி



தல் அரிதாகும். எவ்வளவுக்கு நிலத்தின் மண் குறைந்து விடுகிறதோ
அவ்வளவுக்கு அந்நிலத்தின் விளைவும் குறைந்துவிடுகிறது. நெல்
விளையும் நிலங்கள் தவிர (நன்செய்) மற்ற எல்லா நிலங்களிலும் இவ்
வித நஷ்டம் ஏற்பட்டே வருகிறது. சிறிது மேட்டு நிலங்களில்
அதிகமாய் மண்கொண்டு போகப்படுகிறது நிலத்தில் மிகவும் பஸ்ப
மயமாய்க் கலந்திருக்கும் மிருதுவான மண்ணையும், அதில் சார்ந்
திருக்கும் பக்குவமான உரங்களையும் மழைத்தண்ணீர் அடித்துச்
செல்லுகிறது. சிலசமயம் மேட்டு நிலங்களிலிருந்து வழிந்தோடி
வரும் தண்ணீர் அங்குள்ள அந்நிலத்தின் மண்ணைக்கெடுத்துவிடு
கிறது. சிலசமயம் மழைத்தண்ணீர் நிலங்களில் கொஞ்சமும் சார்ந்து
கொள்ளாமல் விரைவிலோடி விடுகிறது. ஆகவே மழை பேய்ந்த
வுடன் மழைத்தண்ணீர் (1) நிலத்தின் மண்ணை வழித்துச்செல்லு
கிறது. (2) அல்லது தண்ணீர் நின்று, நிலத்தின் நல்ல தன்மையைக்
கெடுத்துவிடுகிறது. அல்லது (3) தண்ணீர், மண்ணில் சார்ந்து
கொள்ளாமல் பாய்ந்தோடிவிடுகிறது.

முதல் செய்கையில் நன்றாய் உழுது பண்படுத்தப்பட்டிருக்
கும் உரமடங்கிய நிலத்தின் மிருதுவான மண் செலவழிந்து போகி
றது. இரண்டாவது செய்கையால் நிலத்தின் உட்பாகங்களின் துவா
ரங்கள் தண்ணீரால் வெகுகாலம் மூடப்பட்டு உப்புவாயு நாசமாக்கப்
படுகிறது. மேலும் பயிர்கள் உடனே ஆழத்தில் வேரூன்ற முடியா
மல் நிலத்தின் கீழுள்ள ஆகாரங்களைக் கிரகிக்க முடியாமல் போய்
விடுகிறது. திருஷ்டாந்தமாகக் கருப்பு மண்ணில் உண்டாகும் பருத்
திச் செடிகளுக்கு மழை பெய்து தண்ணீர் நின்று விட்டால்
வளர்ச்சி தடைப்பட்டு புஷ்பிக்க வெகுகாலஞ் செல்லுகிறது. இப்
படி ஏற்பட்டு விடும் நிலங்களுக்கு உரத்தாலான பயனேதுமில்லை.
மூன்றாவதான செய்கையால் பயிர்கள் நிலத்தில் தகுந்த உரச்சத்து
இல்லாமல் வாடிவிடுகின்றன. மழை இலேசாய்ப் பெய்து நிலத்தில்
சார்ந்து கொண்டால் குறையொன்று மில்லை. ஆனால் ஏராளமான
மழைபெய்து விட்டால் முன் கூறிய குறைவுகளை நீக்கத்தகுந்த
அணைகளுண்டாக்கித் தண்ணீர் நிலத்தில் நன்றாய்ச்சார்ந்தவுடன் மீதி
யான தண்ணீரைச் சிறிய கால்வாய் வழியாக ஓர் நன்செய் நிலத்
திற்காவது, குளங்குட்டைகளுக்காவது கடத்தி விடவேண்டும்.
மழைத்தண்ணீரை அடக்கி ஆளாதகாலம்வரை நிலங்களின் செழிப்பு
குன்றி லட்சக்கணக்கான நஷ்டம் ஏற்படு மென்பதில் ஐயமில்லை.

## செழிப்புவிருத்தியில் சமூக ஒற்றுமை.

இப்பொழுது சமூக ஒற்றுமை எவ்வழியில் நிலத்தின் செழிப்புக்கு உதவியாயிருக்கிற தென்பதைக்கவனிப்போம், இந்தியாவில் பலபாகங்களில் நிலங்கள் ஒருவருக்கு ஏராளமான ஏக்கர்க்கணக்காய் இருக்கின்றனவென்று வைத்துக்கொள்ளுவோம். அவருக்கு அனேக ஆண் குழந்தைகளேற்பட்டால் அவர் கடைசி காலத்தில் ஒவ்வொரு பிள்ளையும் நிலங்களைப் பிரித்துக் கொள்ளுகின்றனர். ஒருவருக்கு ஒரே இடத்தில் ஏராளமான நிலமிருந்ததுபோக இப்பொழுது அதே நிலம் பலருக்குப் பலவிடங்களில் சிறுசிறுபாகங்களாகி விட்டன. முன்பு ஒருவர் எல்லா நிலங்களையும் பழுதுபார்க்க ஒரே செலவில் வெகுசுலபமாய் உரமிடுதல் முதலிய சீர்திருத்தங்கள் செய்து கொள்ள முடிந்தது. ஆனால் இப்பொழுது ஒவ்வொருவரும், சொந்தமாக ஆங்காங்குள்ள சிறிய நிலங்களைச் சிறப்பிக்க அநேக வசதிகளை ஏற்படுத்த அதிக நாளும் அதிகச் செலவும் ஏற்படுகிறது. இப்படி இரண்டு மூன்று சந்ததிகளுண்டானவுடன் முன்பு ஒரே இடத்திலிருந்த நிலங்கள் தற்போது ஆங்காங்கு வெகு தூரங்களில் வெகு சிறிய பாகங்களாகி விடுகிறது. இப்படி நிலங்கள் பாகப் பட்டுப் போவதனால் நிலங்களைப் பழுதுபார்க்க நல்ல உரம், மழைத் தண்ணீரை அடக்கியாளும் வசதி முதலியவைகள் ஏற்படாமல் நிலம் கொஞ்சங் கொஞ்சமாய் க்ஷீணதிசையடைகிறது, சொந்தமாக வைத்துப் பரிபாலனஞ் செய்வோரிடத்தில் நிலங்கள் பாழானால், நிலங்களைக்கொஞ்சகாலத்திற்கு அடமானமாக வைத்துக்கொண்டு பழுது பார்ப்பார்களென்பதைக் கூறவேண்டியதில்லை. தங்களுக்குப் பணம் சேரும்வரை நிலத்தில் கிடைக்கும் சொற்ப விளைவைப் பெற்று நிலத்திற்குக் காலா காலங்களில் வேண்டிய உரங்களைச் சரியான முறைகளில் உதவாமல் பாழாக்கித் திரும்பவும் சொந்தக்காரர்களிடம் ஒப்புவிக்கின்றனர்.

ஒருமனிதனுக்கு நிலங்கள் சிறியபாகங்களாய்ச் சுமார் குறைந்தது 15, 20 இடங்களில் காணலாம். அப்படி ஆங்காங்கிருக்கும் சிறிய பாகங்களுக்குத் தண்ணீர்பாய்ச்சவும், மழைத்தண்ணீரோடி விடாது அணைகளை உடனே சென்று போடவும், சரியான காலங்களில் ஒவ்வொரு நிலத்திற்குந் தகுந்த உரம் போடவும் இன்னும் பல சீர்திருத்தங்கள் செய்யவும் முடியாமல் அநேக பாகங்கள் தரி



சாய்க் கிடப்பதுடன் அநேக பாகங்கள் சிரத்தையற்ற பிறம்னிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இதனை உரிமையுடனும் உருக்கத்துடனும் ஆராய்ந்து அதனாலுண்டாகும் நஷ்டங்களைக் கணக்கிட்டுக் கவனித்துப் பார்ப்பார் எவரும் உளரா?

சிதறிப்போன நிலங்களை எவ்வாறு நெருங்கவைத்து நிலச்சீர்திருத்தத்திற்கு வெகு சுலபமாக வசதிகளேற்படுத்துவது என்று யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. கிராமங்களில் கல்விகேள்விகளில் அவ்வளவு முன்னேற்ற மடைந்தவர்கள் அரிதாயிருப்பர். அவர்கள் தங்கள் நிலங்களை ஒன்றுக்கொன்று மாற்றி ஒவ்வொருவருடைய நிலங்கள் ஒரே பாகத்தில் அமையும்படி தகுந்த ஏற்பாடுகள் செய்துகொள்ள முன்வரவேண்டிய தவசியமாயிருக்கிறது. பாஞ்சால நாட்டில் (Punjal) சுமார் 126 கிராமங்களிலுள்ள 20,000 ஏக்கர் நிலங்கள் 35,000 சிறிய பாகங்களாக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகள் 4,500 பாகங்களாக்கப் பட்டுவிட்டதாய்க் கூறுகின்றனர். இன்னும் அதிகமாய் ஒன்று சேர்க்கச் சிரத்தையெடுத்து வருகின்றனராம். இப்படி ஒன்றாக்கிய பிறகு முன்பு சீர்திருத்தங்களுக்குக் கஷ்டங்களேற்பட்டதுபோக இப்பொழுது வெகு சுலபமாய் நிலங்களைச் செழிப்பாக்கி வருகின்றனராம்.

ஒரே இடத்தில் அதிக நிலங்களிருந்தால் அந்நிலங்களில் அதிகச் செலவின்றி சாஸ்திர முறையால் ஒரே வகையான உயர்தர தானியத்தை உற்பத்தியாக்கினால் விலைக்கு வாங்குவோர் ஓடிவருவார்கள். அதே தானியத்தை ஓர் கிராமத்தார் ஒற்றுமையுடன் கூடி விளைவித்தால் மற்ற ஊர்களோடு தங்கள் உயர்தர தானியத்தில் போட்டி வியாபாரம் ஏற்பட்டுத் தானிய விலை உயரும். அப்படி உயர்ந்தால் பயிரிடுவோர்களுக்கு ஏற்படும் நன்மையைக்கூறவும் வேண்டுமோ? இப்படி இந்தியாவில் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு உயர்தரமான தானியத்திற்கும் பேரானால் வியாபார விருத்தி ஏற்பட்டுப் பயிரிடுவோர்கள் தகுந்த இலாபமடைவார்கள். இதேவிதமாகவே கானடா தேசம் கோதுமையிலும், அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள் புகையிலையிலும், பருத்தியிலும், டென்மார்க் தேசம் வெண்ணெயிலும் இப்படியே பல தேசங்கள் ஒவ்வொரு விளைவிலும் பேர் பெற்று வேளாண்மை செய்வோர்களுக்கு ஏராளமான இலாபம் உண்டாகி வருவது கண்கூடு. சென்னைமாகாணத்தில் குண்டூரில் (Gunture)

புகையிலை விருத்தியில் ஒற்றுமை ஏற்பட்டு முன்னேற்ற மடைந்து
வருவதாகத் தெரிகிறது. எல்லாவிவசாய முன்னேற்றங்களுக்கும்
கிராமவாசிகளுக்குப் போதிய அறிவு ஏற்படக் கல்வியைப் பெருக்கி
வரவேண்டியதே கிராம சீர்திருத்தக்காரர்களின் முதல் வேலையாம்.

—(*)—

# கிராமங்களில் நமது முதல் வேலை.

(ச. செல்லம் சுசீந்திரம்.)

மனிதர்கள், கூட்டுறவு வாழ்வு கொண்டு நடாத்தும் தன்மையர்.
எவனுக்கும் பிறனின் உதவியை எதிர்பார்த்தே ஆகவேண்டியதிருக்
கிறது. ஆகையால்தான் சமூக வாழ்வை எவரும் மேற்கொண்டு
நடாத்திவருகின்றனர். ஒருவர்க்கொருவர் அன்பு உணர்வுகொண்டு
ஆதரித்து வரும் சமூக வாழ்வின் இன்பத்தை எடுத்தோத எவ
ரால் இயலும்? யாதவ குலத்தவன் ஒருவன் அறிமுகமில்லா அய
லூரில் சென்று நான் யாதவன், என இயம்பும்போது அவனை
அங்கு ஆதரிக்க அவாக்கொண்டு எழுகின்றவர் எவர் என்று எண்ணு
கிறீர்கள். அவன் குலத்தில் உதித்த யாதவரன்றி வேறு எவர்?
இச் செயலுக்குத்தான் சமுதாயாபிமான மெனப் பெயர். சமுதாய
அபிமானம் சகலத்திற்கும் அடிப்படை.

யாதவ மக்களின் சமுதாய அபிமானத்தை உண்டுபண்ணவே
யாதவ சபைகள் கிராமங்கள் தோறும் தோற்றுவிக்க வேண்டு
மெனப் பலர் அபிப்பிராயப்பட்டு அதன்படி சபைகளைக் கூட்டி
வருகின்றனர். அவைகளைப்பற்றிய அபிப்பிராய விஷயங்களை எடுத்
துரைக்கப் படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்நாட்டு யாதவ மக்களுக்கு முற்காலத்தில் சீர்திருத்தம்
அமைந்த சபைகள், கிராமங்கள்தோறும் அமைக்கப் பெற்றிருந்
தன. ஒவ்வொரு சபைகளும் அக்கிராமத்தவருக்குத் தேவையான
எல்லா வசதிகளையும் உண்டுபண்ணி வந்தன. அவைகளைத் தற்
போது எவை எனவும் ஆய்ந்து உணர ஒண்ணாதபடி இருக்கின்றன.
அவை எவை என எடுத்தோதின் நண்பர்கள் வியப்படைந்து ஒரு
வாறு ஒப்புக்கொள்ளுவார்களென எண்ணுகிறேன். யாதவ கன



வான்களே! கிராமங்களில் வாழும் யாதவ மக்களுக்குத் *தனியாக
மாரியம்மன் கோவில் இருக்கிறதைக் காணுகிறோமல்லவா? இவை
களே முற்கால யாதவமக்களின் கிராமச் சபைகளின் எஞ்சிய
அடையாளங்கள். இது சமூகத்திற்கு நன்மை செய்யும் பல
கடமைகளை விட்டு மாரி வணக்கம் ஒன்றையே மேற்கொண்டு வரு
கிறது. கல்வி, சுகாதாரம், தண்ணீர், விளக்கு, முதலிய தற்கால
நகர சபைகள் மேற்கொண்டிருக்கும் அரிய வேலைகளை இக் கிராம
சபைகள் மேற்கொண்டிருந்தன. பல கிராமங்களில் அழிவு
கொண்ட திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருப்பதை இதுகாறும்
காணலாகும். கிராமத்திற்குப் பொதுவாக அண்ணாவி ஒருவர் கிராமப்
பொதுப் பொருளால் சம்பளம் பெற்றுப் பொது இடத்தில் கட்டப்
பட்ட திண்ணைப் பள்ளிக்கூடத்தி லமர்ந்து கிராம மாணவர்களைக்
கட்டாயமாகக் கற்பித்து வந்தார். பள்ளிக்கு வராத சிறு மாணவனை
அண்ணாவியும் வேறு மாணவர்களும் சென்று சதுர்வித உபாயங்
களால் (சாமம், தானம், பேதம், தண்டம்) அழைத்து அவனைக்
கற்கச் செய்யும் தன்மையைச் சிறிது உன்னுங்கள். ஏட்டுச்சுவ
டிகளைப் பாராமல் ஒப்புவித்தலே அவர்கள் கலைப்பயிற்சியின் குறிப்
பாக இருந்து வந்தது. உலக வாழ்விற்கு இன்றியமையாக் கலைகளில்
எல்லாம் அக்கால மாணவர்கள் எல்லோரும் பயிற்சி பெற்றிருந்
தார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இது போலவே நோய்
களைக் கவனித்து, வேண்டிய சிகிச்சை செய்ய மருத்துவரும் காலக்
கணக்கைக் குறிக்கவல்ல சோதிடரும் பொதுச் சம்பளம் பெற்று
வாழ்ந்து வந்தனர். கொல்லர், தச்சர், வண்ணார், நாவிதர் முதலிய
தொழிலாளர்களும் அவ்விதமே. இவைகள் பழய காலக் கிராமங்
களில் கணக்குகளைப் பரிசோதிக்கப் புகின் புலனாகாமல் போகாது.
கிணறுகளும் நீர்த் துறைகளும் சந்திகளில் விளக் கேற்றுவதும்
கிராமப் பொதுப் பணத்தைக் கொண்டுதான் கவனிக்கப்பட்டன.
மதிப்பு வாய்ந்த பெரியோர்கள் வரின் அவர்களின் உபசாரத்
திற்காக உதவுவதும் கிராமப் பொதுப் பணத்திலிருந்தே.
இதுவன்றி கிராமங்களில் வழக்குகள் தோன்றுவது மிக அருமை.
அங்ஙனம் உண்டாயினும் கிராமப் பிரமுகர்கள் சேர்ந்து அதைத்
தீர்த்து விடுவார்கள். ஆகவே புராதனக் கிராமங்கள் இங்ஙனம்
மிகச் சீரும் சிறப்பும் பெற்றனவாக விளங்கி வந்தன. இவை

* இவ்வாறு எல்லா ஊர்களிலும் இல்லை. ப-ர்.

களுக்குக் காரணமாக இருந்தது கிராமச் சபைகளாம். அவைகள் தன்னலம், பொறாமை முதலிய பொல்லாக் குணங்களால் ஒழிந்து போயின. அவைகளுக்கு அறிகுறியாக மாரி கோவில்கள் ஆங்காங்குக் கிராமப் பொதுவிற் காணப்படுகின்றன. அவைகளைச் சீர்திருத்த வேண்டுமென்பதே நமது கொள்கை.

அன்பர்களே! நமது யாதவ மக்கள் வாழும் எல்லாக் கிராமங்களிலும் கிராமப் பொதுப் பணமும் அதற்கான நிலங்களும் கோவில்களும் காணப்படுகின்றன. சில கிராமங்களுக்கு மிதமான பொருளும் சிலவற்றிற்குப் பெருவாரியான வருவாயும் இருந்து வருகிறது. சிறு வருவாய் கொண்டவர்கள் தலை வரி வசூல் செய்தும் பெரும் வருவாய் கொண்டவர்கள் மிச்சமில்லாது வருவாய் முழுவதுவும் மாரியம்மன் கோவில் நன்கொடைக்காக மட்டிலும் செலவுசெய்தும் வருகிறார்களே தவிர வேறு ஒரு விஷயத்திற்காகவும் செலவு செய்யவில்லை. கிராமப் பொதுப் பணம் நமது முன்னோர்களால் எதற்காகக் கையாடப்பட்டது. தற்போது எதற்காகக் கையாடப்பட்டு வருகிறதென்பதை நண்பர்கள் ஆழ்ந்து சிந்திப்பார்களாக. முற்கால கிராம அமைப்பு முறைப்படி நடைபெற்று வருமானால் தற்காலம் நமக்குக் கிராம சபைகள் தேவை இல்லை.

யாதவ மக்கள் கிராமந்தோறும் சபைகளை அமைக்க வேண்டுமென இப்போது எங்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதை அமைத்துக்கொள்ள ஒரு சிறந்த வழி இருக்கிறதென்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நமது கிராமத்தில் அமைத்திருக்கும் பொதுப் பணத்தைக் கிராம சபைப் பணமாகவும் கிராமத்தவர் யாவரையும் அங்கத்தினராகவும் கருதுவோம். அதை நமது கிராம சபைகளின் கொள்கைப்படி திருப்பிக் கொள்வதே சிறப்பு. அதற்கெனவே ஒரு அமைப்பு இருக்கும்போது வேறு அமைப்புகளைப் புதிதாக உண்டுபண்ண வேண்டுவதில்லை. மாரி கோவில் கொடைக்காகவே கிராமப் பணம் அமைக்கப் பட்டுள்ளது என்ற கொள்கையை அடியுடன் மாற்ற வேண்டும்.

புத்தக ஆலயங்கள், எல்லாக் கிராமங்களிலும் பொதுவாக ஓங்கி வளரச் செய்ய வேண்டுவதே நமது முதல் வேலை. அதில் பத்திரிகை பல வரவழைத்துவந்தால் கிராமத்தவர் தாமே சீர்திருத்தத்தை மேற்கொள்ளுவார்கள். அதன் பிறகு எக்காரியமும்



செய்துகொள்ள ஏற்றதாகும். கிராமங்களுக்குத் தகுந்த சீர்திருத்தங்களைச் செய்து நாம் விரும்பும் கிராம சபைகளின் கொள்கைகளை மிக எளிதில் நிறைவேற்றலாம்.

எனது அருமை யாதவ இளஞ் சகோதரர்களே ! இதற்குத் தங்கள் அரிய தொண்டே தேவை. உங்கள் ஊக்கம் இல்லையேல் ஒரு காரியமும் செய்ய இயலாது. நமது சமூக வாழ்வை சீர் செய்ய உங்கள் முயற்சியைச் சில காலம் செலவு செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் கடமைப் பட்டவர்கள் என்பதனை ஞாபகமூட்டுகிறேன். இன்றே உங்கள் கிராமப் பொதுப் பணத்தில் கருத்தைச் செலுத்துங்கள். அது எதற்காகச் செலவு செய்யப்படுகிறதென்பதை அறிந்து கிராமப் பிரமுகர்களிடம் நமது முன்னோர்கள் எதற்காக அதைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதனையும் நாம் செலவு செய்யவேண்டிய விதத்தையும் மிகவும் தெளிவாகவும் சாந்தமாகவும் கூறி அவரைத் தெளிவிக்க வேண்டும். இக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர் எவரும் இரார். அக் கிராமத்திலுள்ள இளைஞர்கள் யாவரும் இதில் ஈடுபட்டுத் தங்கள் கொள்கைகளை வெளியிட்டு அதற்காக வேலை செய்ய முன்வரும்போது முடியாதது எது? முதலில் புத்தகசாலை நிறுவும் விஷயம் ஒன்றே முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும். பழய வழக்கத்தில் ஈடுபட்ட சில வயோதிகர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு வெறுப்புண்டாகுமாறு நடவாதிருப்பின் நலம். எவருக்கும் இதமாக நடந்துகொள்ளும் முறையே எதையும் சாதிக்கவல்லது என்பதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். புத்தகசாலை நிறுவும் நோக்கத்தை முதலில் கொண்டு வேலை செய்ய முயற்சி எழ வேண்டும். தமது சமூக முன்னேற்றத்திற்கான முயற்சியில் யாதவ இளைஞர்கள் ஈடுபடுவார்களாக. யாதவ மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் வித்தகர் போற்றும் புத்தகாலயங்கள் ஓங்கி வளருக.

---

# ஸ்ரீ குசேலர் சரித்திரம்.

(பண்டிதர் திரு. வீராசாமி பிள்ளை)

---

அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி துவாரகை, என்னும் முத்திதரும் தலங்களுள் ஸ்ரீகண்ணபிரான் அவதரித்துப் பற்பல அற்புதத் திருவிளையாடல்களைப் புரிந்தவை வடமதுரை, அவந்தி, துவாரகை என்னும் தலங்களாகும். இவற்றுள் வடமதுரைக்கு அருகில் அவந்தி என்னும் நகரைச் சார்ந்த முல்லை நிலத்தில் (காட்டில்) குறவரும் மருளும் ஒரு குன்றின் சிகரத்தில் முனிவர்கள் தவச்சேரி ஒன்றுண்டு. அதில் முனிவர் குலமாகிய சிறந்த பாற்கடலின்கண் உதித்த பூரணச் சந்திரன்போல அவதரித்து, பரம சாந்தராய் ஸ்ரீமந் நாராயணன் திருவடியன்றி வேறு தெய்வங்களைத் தொழாமலும் மனதைப் பஞ்சேந்திரியங்களில் செல்லவிடாமலும் அடக்கும் தவசிரேஷ்டராய்க் குசேலர் என்னும் திருநாமம் உடைய முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தனர். இவர் அடக்கம், பொறை, அருள், பெரியோர்நட்பு இவைகளைப் பெற்று, காமம் வெகுளி, மயக்கம், அழுக்காறு தீயோர் நட்பு இவைகளைத் தன்னிடம் அணுகவிடாது பரிசுத்தமான எண்ணமுள்ள தூயர்க்கும் தூயராய் ஒழுகி வந்தார். இவர் சகல கலைகளையும் முற்றுணர்ந்து தன்னையடுத்த மாணவர்களின் பக்குவமறிந்து சரியை கிரியை யோக ஞானங்களைப் போதிக்கும் ஆற்றல் வாய்ந்த சாந்திப முனிவரிடம் ஆயர்குலத்திற்றோன்றும் அணிவிளக்கும், காயாம்பூவண்ணனும், கார்மேகனுமாகிய கண்ணபிரானோடு அருமையாகிய கலைகளை முக்குற்றங்களும் நீங்கக் கற்றுவந்தார்.

இங்ஙனம் கல்வி கற்று அதற்குத்தக்க ஒழுக்கங்களைக் கைவிடாமல் பேருணவு, பெருந்தூக்கம் இவைகளை ஒழித்து சாந்திராயணம் ஏகாதசி முதலிய விரதங்களை அநுஷ்டித்து இதனால் செழுந்தசைவற்றி எலும்பு நரம்பு தோன்றும் யாக்கை உடையவராய்க் கீர்த்திமிக்க அந்தணாளர் என்று யாவரும் போற்ற யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றற்று மெல்லிய கிழிந்த தைத்த கந்தையையே ஆடையாக உடையவராய் வாழ்ந்து வந்தார்.



“இல்லறமல்லது நல்லறமன்று”, “அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை” என்னும் ஆன்றோர் உறுதி;மொழிகளை எண்ணித் தன்னுடைய தவத்துக்கும் வாழ்க்கைக்கும் துணைவியாக ஓர் அழகிய மடந்தையை மணம் புரிந்து வாழக் கருதினர்.

இக் கன்னிகை நல்லொழுக்கமுடையவள் என்னும் பொருள்படும் சுசீலை என்னும் பெயருடையாள். இவளோடு இவர், இல்லற தர்மங்களைச் சிறிதும் வழுவாமல் பாதுகாத்து வாழும் நாளில் இவர்களுக்கு வறுமை நோய் அதிகரித்துப் பெருந் துன்பத்திற்கு இலக்காயினர்.

முதியோர் தேடிவைத்த பொருள் எவ்வளவு நாளைக்குத்தான் வரும், வேறு முயற்சியால் பொருள் தேடும் வழிகளை நம் குசேலர் அறியார். லௌகிகம் என்னும் உலக ஒழுக்கம் அறியாமல் வைதீகம் என்னும் வேத ஒழுக்கமே நன்கு கடைப் பிடித்தவர். பக்கத்திலுள்ள நகர மாந்தர்களிடம் சென்று முப்பத்திரண்டு பற்களும் வெளியே தோன்ற மனதிலுள்ள வறுமைத் துன்பத்தை முகத்தாற் காட்டித் தன்னுடைய குறைகளைக்கூறி இரண்டு கரங்களையுமேந்தி நின்றுஉடம்பை ஒடுக்கி மானமென்பதை, அறவே ஒழித்து வீடுகள்தோறும் இரத்தல் “அந்தோ இழிவிழிவு” என்றுநினைத்துத் தன் மனைவியோடு வாழும் காட்டின்கண் உதிர்ந்து கொள்வாரற்றுச் சேற்றில் பதிந்திருக்கும் அற்பமான நீவாரம் என்னும் புல் தானியத்தை அரிதாகத் தேடி நகத்தாற் கிள்ளி எடுத்துச் சேர்த்துக் கொண்டுவந்து தன் மனைவி சுசீலையிடம் களைப்புடன் கொடுப்பார். அக் கற்பரசி தன் கணவன் களைப்பை மாற்றி இரு கையாலும் ஏற்று அதனோடு கலந்துள்ள மண், சேறு போக்கிப் பாகம் செய்து அதிதிகள் யாரேனும் வந்தால் அவர்களுக்காக ஒருபாகம் எடுத்து வைத்துவிட்டு மற்றபாகத்தை இருவரும் உண்டு, களிப்புடன் வேத புராணங்கள் அறிய வொண்ணாத திருமாலின் சரணாரவிந்தங்களில் ஈடுபட்ட சிந்தையராய் வாழ்ந்து வந்தார்கள்.

வறுமையால் மெலிந்திருக்கும் இவர்கள் மகப் பேறில்லார்க்கு நற்கதியில்லை என்று புராணங்கள் கூறுவதை யுணர்ந்தும் குலவிருத்திக்குப் புத்திரப்பேறு வேண்டுமென்றும் பலநாள் நோன்பு புரிந்து அதின் பயனால் இருபத்தேழு புத்திரர்களை ஒருங்கே ஈன்றனர். உலக இன்பத்தைப் பெரிதும் விழையாத இவர்கட்கு இவ்வாறு இருபத்தேழு புதல்வர்கள் பிறந்தனர்.

சந்தான விர்த்தி நூல்களைக்கற்று அவற்றில் கூறியாங்கு பருவமறிந்து கூடிப் பல நோன்புகளைப் புரிந்தும் தலயாத்திரை செய்தும் செல்வத்தைத் தாராளமாகச் செலவு செய்தும் மனமகிழப் புத்திரப் பேறின்றி ஏமாந்திருப்பவர் பலரை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். அல்லவா? வருவாயில்லாத ஏழை மாந்தருக்குப்பல மைந்தர்களைத் தந்து அவர்கள் வருந்துவதைப் பார்க்கும் தீனதயாளனாகிய திருமாலுக்கு இஃதொரு திருவிளையாடல் போலும்!

இருபத்தேழு புதல்வர்களைப் பெற்ற சுசீலை என் செய்வள்! தன் கணவன் அரிதின் முயன்று கொண்டுவரும் புல் தானியத்தாலாகிய கஞ்சி யாருக்குத்தான் வயிறு நிரம்பும்! மண் பானையில் உள்ள அப் புல்தானியக் கஞ்சியில் நிரம்ப நீர் பெய்து விளாவி ஒரு சிறிய அகப்பையால் முகந்து ஒரு மகவுக்கு அளிக்கும் போது ஒரு மகவு கை நீட்டும். மற்றொன்று உந்தித் தள்ளி மேல் விழுந்து கை நீட்டும். மற்றொன்று அங்ஙனம் உண்ணும் குழந்தையின் முழங்கை வழியே ஒழுகுகின்ற கஞ்சிக்கு வாய் திறக்கும். மற்றது பொருமிக் கண்ணீர் விடும். மற்றொரு மகவு பூமியிற் புரண்டழும். மற்றொன்று அந்தோ! என் பசிக்குக் கஞ்சியில்லையா? என்று தாயின் முகத்தை அண்ணாந்து பார்க்கும். எனக்கு ஏனம்மா கஞ்சி வார்க்கவில்லை என்று பொய் சொல்லி ஒரு மகவு கதறும். ஒரு குழந்தை உண்ணும்போது மற்றொன்று பிடித்து இழுக்கும். அப்போது நடுவிற் சிதறுகின்றதை ஒரு மகவு ஏற்று உண்ணும். இங்ஙனம் கலகம் விளைக்கும் மக்களை இரக்கத்தோடு பார்த்து ஏக்கமுடையவளாய்ச்சுசீலை செவ்வண்ணக் காதலத்தாலணைத்து மடியின் மீது உட்காரவைத்துக் கண்ணைத் துடைத்துக் கழுவி மூக்குச்சிந்தி முகம், முதுகு, பக்கங்களைத் தடவிக்கொடுத்துக் குமுதமலர் போன்ற வாயால் முத்தந்தந்து இனியமொழி கூறி ஒருவிதத்தில் ஆற்றுவாள். அடுத்த வீட்டிலுள்ள சிறுவன் 'இன்று உன் வீட்டில் என்ன கறி சமைத்தார்கள்' என்று கேட்டால் கறி யென்றால் என்ன? அதுதான் என்ன சுவையுடையது சொல்லம்மா என்று கேட்கு மகவுக்கு இன்னதுதான் இன்ன சுவையது என்று சொன்னால் அதைச் சமைத்துக்கொடு என்றால் என்ன செய்வது என்று எண்ணி மற்றொன்று கூறி மறக்கச் செய்வாள். மற்றொரு மனைச் சிறுவன் தின்றுகொண்டிருந்த பக்ஷணத்தைப் பார்த்து ஓடித் தன் அன்னையிடம் இன்னான் இன்னது தின்றான் என் வாய் ஊறுகின்



றது. இப்பொழுதே அப் பக்ஷணத்தைச் செய்துகொடு என்று கட்டியிருக்கும் புடவையைப் பிடித்து இழுத்து அழுது கொண்டிருக்கும் சிறு குழந்தையை எடுத்து மார்போடணைத்து மனம் வருந்துவாள். குண்டலம் மோதிரம் சுட்டி முதலிய ஆபரணங்களைப் பக்கத்து வீட்டிலுள்ள சிறுபிள்ளை அணிந்திருக்கிறது. எனக்கு ஏனம்மா ஒரு நகையும் போடுவதில்லை உன்னிடம் அவைகளில் ஒன்றும் இல்லாவிட்டால் எங்காவது கண்டெடுத்து இப்போதே போடு என்று கேட்கும் மகவுக்குச் சுசீலை, கடன் வாங்கினவன் கொடுத்தவனுக்குத் தவணை கூறுவதுபோல நாளைக்கு நாளைக்கு என்று இயம்பிச் சோர்வாள். பால் வெண்ணெய் பருப்பு வெல்லம் இவைகளைக் கொடு என்று பிள்ளைகள் அழும்போது ஒன்றுஞ் சொல்லாள். நாருரிதான் ஆடை. அக்காட்டில் உள்ள தழையே உண்கலம். இவர்கள் இருக்கும் குடிசையில் எறும்புக்கும் உணவு அரிது. அன்னப்பால் தவிர வேறு ஆன்பால் மருந்துக்கும் கிட்டாது. கண்ணால் நோக்கற்கரிய இவர்கள் வறுமையைக் கண்டு குசேலர் மனங்கவல்வதில்லை. இந்தக் கீர்த்திவாய்ந்த மகானுடைய செயலைக் கண்டு சுசீலை கணவனிடத்துச் சிறிதும் அன்பு நீங்கினாளில்லை.

அந்தோ நிகரில்லாத கொடிய கூற்றுவனாய் விஷமாகி வடவா முகாக்கினியினும் கொடியதாகி இவர்களிடம் புகுந்து துன்பத்தில் ஆழ்த்துகின்ற வறுமைக் காலத்தில் பல புத்திரர்களை ஈன்று வாழும் இச்சுசீலையின் செய்கையை என்னென்று கூறுவது! வறுமையாகிய பெரிய சமுத்திரத்தில் மூழ்கிக் கரை காணாது தத்தளிக்கும் காலத்திலும் தன் புத்திரர்கள் மனம் வருந்தக் கூறாள். பிறரிடம் இப் பழியைப்பற்றிப் பேசாள். இவளுடைய சுகுணம் இருந்தவாறு என்னே! என்னே!

(தொடரும்)

# மத ஆராய்ச்சி.

(தமிழ் வித்வான் திரு. தி. அ. முத்துசாமிக் கோனார்)

இப்பூவுலகில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவராகவே இருக்கின்றனர். மதம் என்பது உள்மதம் புறமதம் என்று பிரிகிறது. உள் மதம் என்பது சைவத்தில் உட்பிரிவு, வைஷ்ணவத்தில் உட்பிரிவு எனவாம். அல்லது வேதாகமங்களைப் பிரமாணமாகக் கொள்வது. அவற்றைச் சாராது பிறிதோர் வழி வந்தது என்றுமாகும். மேலுலகே ஒன்றில்லை எனக்கூறும் சார்வாகமதமும் ஓர் மதமேயாம். மகமதிய மதமும் மதமேயாம், கிறிஸ்து மதமும் மதமேயாம், மதம் என்பது வடமொழிச் சொல். "மந அவபோதநே" என்கிற தாதுவின் பேரில் "க்த்" என்ற பிரத்தியயம் வந்து "மதம்" என்றாயிற்று என்பர். மதம் என்ற பதத்துக்குக் கருத்து என்பதே சரியான பொருள் என்று பல பெரியோர்கள் ஒப்புகிறார்கள். ஆனதால் அகச்சமயம் வேதாகமங்களின் கருத்து என்றும், புறச்சமயம் மஹமதின் கருத்து என்றும் முடிகிறது. உலகத்தில் எத்தனையோ மதங்களிருக்கின்றன. இன்னும் ஏற்படப் போகின்றன. ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் மதமே சிறந்தது என்பதன்றி 'எம்மதம் தாழ்வுற்றது, அல்லது முடிபொருள் இல்லாதது' என்று கூறுவது ஒன்றுமில்லை. என்றாலும் எந்த மதமானாலும் அம்மதம் சிறிதும் உண்மையற்றதாக இராது என்பது உண்மை.

ஒவ்வொருவரும் தங்கள் மதத்தைப் பெரிதாகக் கொள்வது சரி. பிறமதங்களை நிந்திப்பது நியாயமாகாது. ஆனால் தன் மத நூல்களைத் தெரிந்துகொள்வது போலவே பிறமத நூல்களையும் நன்கு தெரிதல் வேண்டும். அப்படித் தெரிந்ததோடமையாது ஒவ்வொரு பாகங்களிலும் நம் மதத்துடன் பிறமதங்களையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தல் வேண்டும். அவ்வாறு ஆராய்ச்சி செய்யுங்காலத்தில் பல நீதி அநீதிகள் தெரிபடும். சில அபிப்பிராய பேதமும் தோன்றும். ஆதலின் நம் மதத்தைப்பற்றிப் பிறமத ஆராய்ச்சிவல்லார் எவ்வகையான அபிப்பிராயங் கொண்டுள்ளார்கள் என்பதைக் கவனித்தல் வேண்டும். எனவே நமது வேதாகம மதத்தைப்பற்றி மஹமதிய



மத ஆராய்ச்சியாளரான மஹமதியப் பெரியார் கொண்ட கருத்தை உதாரணமாக இங்கே எடுத்துக் கூறுகின்றேன்.

அக்பர் சக்கிரவர்த்தியின் சகாவும், சபா பூஷணமுமான அபுல் பஜலை அறியாதார் இல்லை. இவர் பாரஸீக முகமதியர், ஆனால் சம்ஸ்க்கிருத பாஷையை ஆழமாகக் கற்று அதிலுள்ள வேத சாஸ்திரங்களையும் நன்கு ஆராய்ந்து இந்து தருமத்தின் பெருமைகளை நன்றாக உணர்ந்து கொண்டிருந்தார். அவருடைய அயின்-இ-அக்பரி என்னும் நூலில் இந்து தருமத்தின் புகழ் அநேக இடங்களில் காணப்படும். அதினின்று ஓரிரண்டு வார்த்தைகள் ஈண்டு எடுத்துக் காட்டுவாம். அவை பின்வருமாறு:— "இந்து நூல்களில் அநேகம் உயர்ந்த, விலை மதிப்புக்கு அடங்காத தா[illegible] காணப்படுகின்றன. தங்கள் பிராணனைக் கூடக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய ஹிந்துக்கள் எப்பொழுதும் சன்னத்தமாயிருக்கிறார்கள். கடவுள் ஒருவன் என்பதே அவர்களுடைய மதம், தனிப் பெருங்கடவுள் ஒருவனே; திரிமூர்த்திமதம் போன்றதோர் மதம் அவர்களில் இன்னொரு சாரார் பக்தியினாலும் ஆத்ம சுத்தியினாலும் நேமநியமங்களாலும் மனிதன் மேன்மையை அடைகின்றான் என்பர். ஆனால் எது எவ்வாறு இருப்பினும் இவர்களிடம் காணப்படும் ஒழுக்கமும் தவமும் உலகத்தில் வேறு எங்குங் காணமுடியாது.

கஜினிமாமூதின் காலத்தில் பாரதகண்டத்துக்கு வந்து இந்நாட்டு நாகரிகமனைத்தையும் ஆராய்ந்து பார்த்திருக்கும் அல்பருனி என்பவர் நம்மைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

"கடவுளைப்பற்றி இந்துக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் இதுவாகும். அவன் ஏகன், ஆதியும் அந்தமும் இல்லாதவன், சாசுவதன், எதனாலும் கட்டுப்படாத சுயேச்சா சங்கல்பன், சர்வசக்தன். சர்வஞ்ஞன், உயிருக்கெல்லாம் உயிராய் நிற்கிறான், அவனே உயிர்க்கடல், நேதா, ரக்ஷிதா உவமைக்கும் அநுவமைக்கும் அதீதமாக நின்று சர்வத்தையும் ஆளுகிறவன். அவனுக்கு எதையும் ஒப்பிட முடியாது, அவனையும் எதற்கும் ஒப்பிடுதல் முடியாது."

மிர்ஜாமஜேர் என்று ஒரு மகான் இருந்தார். அவருடைய பாதரக்ஷையை அவர் காலத்துப் பெரிய ஆலிமான காஜி ஸனு உல்லா கையில் தூக்கிச் செல்வார் என்றால் அவருடைய பெருமை ஒருவாறு படிப்போரால் ஊகிக்கப்படும். அவர் ஓர் கடிதத்தில்

ஹிந்துக்களைப்பற்றி எழுதுகிறார். அக்கடிதம் இன்னும் பாது காக்கப்பட்டிருக்கிறது. அதன் முக்கியமான பாகம் பின்வருமாறு:—

“ஹிந்துக்களுள்ளே உள்ள ஒவ்வோர் சமயத்தவரும் கடவுள் ஒருவனே என்று பூரணமாய் உணருகிறார்கள், அவர்கள் விக்கிர கங்களை ஆராதிக்கிறார்கள் என்பது தவறு. விக்கிரகங்களில் கடவுளை ஆவாஹனம் செய்து அவ்வாறு ஆவாஹனஞ் செய்யப்பட்ட கடவுளைத்தான் அவர்கள் வணங்குகிறார்கள்” இதினின்று இந்த தர்மம் தெய்வீகமான ஓர் தர்மம் என்றும், யூததருமத்தைப் போலவும், கிறிஸ்தவ தருமத்தைப் போலவும் தற்பொழுதுதான் (இஸ்லாம் தர்மம் தோன்றிய பிறகு) சுத்த செய்யப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. நம்முடைய வேதநூல்கள் ஹிந்துக்களைப் பற்றிப் பேசாததால் அவர்கள் காபிரிகள் என்று கூறுதல் சரியாகாது. ஈசுரனுடைய குணங்களை உருவமாக்கி விக்கிரகங்கள் செய்து அக்குணங்களைத் தாங்கள் பெறுவதற்காக அவ்விக்கிரகங் களுக்கு முன்னே நின்று அவர்கள் தியானம் செய்கிறார்கள். உண் மையில் முஸ்லீம் ஸூபிகள் சாதனைபுரிகின்ற ஜிகர்-இ-ராப்தா என்கிற மார்க்கத்துக்கும் இதற்கும் யாதொரு பேதமுமில்லை. அசத் தருமத்தில் வீழ்ந்திருந்த அரபியர்களின் விக்கிரக ஆராதனைக் கும் இந்துக்களின் விக்கிரக ஆராதனைக்கும் சம்பந்தமே இல்லை”.

எனச் சில மதங்களை நன்கு ஆராய்ந்த பிறமதத்தினரான பெரி யோரால் கூறப்பட்டிருக்கிறது. மேற்கூறிய பெரியோர்கள் எவ்வித மான தாக்ஷிணியத்துக்கு உட்பட்டாவது மற்றும் வேறுகாரணங் களை எண்ணியாவது மேலேகாட்டிய வார்த்தைகளைச் சொன்னவர்க ளல்லர். அவர்கள் கண்ட சத்தியத்தையே கூறியிருக்கிறார்கள். வேத சாஸ்திர ஆராய்ச்சி கடைபோகக்கண்டு நுண்ணிய அறிவால் சீர்தூக்கிக் கூறிய முடிபே முடிபாகும். ஆயினும் எம்மதமானாலும் தம் தம் மதம் ஒன்றைக் கொண்டே முடிவடைதல் நலமன்று. அஃதன்றி நம் மதத்தை நாம் ஆராய்ச்சி செய்து நாம் கொள்ளுங் கருத்தைக் காட்டிலும், நம் மதத்தைப் பிறர் ஆராய்ச்சி செய்து கண்ட மேன்மையே ஒப்பற்ற மேன்மையாகும்.

ஆன சமய மதுவிது இன்றெனு
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே—திருமந்திரம்.

# பரதன் பண்பு.

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான். பி. ஏ.

(112-ம் பக்கம் தொடர்ச்சி)

பரதனது குன்றாத புகழைப் போற்றாதார் ஒருவருமிலர் என்று யான் முன்னர் எடுத்துக்கூறியதை ஒட்டி இன்னுஞ் சில சான்றுகள் தரவிரைகின்றேன். கிஷ்கிந்தை நாட்டின் வானரவீரனாய் விளங்கிய வாலி இராமனது அம்பிற்கு இலக்காகி, மருமத்திடை ஊறுதாங்கி அமர்க்களத்திடையே கிடக்கின்றான். அறநெறிக்குமாறாக மறைந்து நின்று அம்பெய்த ஆரியர்கோன் நீதியின் நிலையமாய் விளங்கும் பர தனுக்குத்தமயனாய் அமையும் தகுதியற்றவன் என்று கடல்கடைந்த வெங்கரதலங்களையுடைய வானர வீரன் கூறும் மொழிகள் பரதனது நெறிதவறா நீர்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றது.

“வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்தவள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன் முன் தோன்றினையே”

என்று வாலியின் கூற்றாகக் கம்பர் கவிகூறும் நலம் நாம்போற்றத் தக்கதொரு இடமாகும்.

இனி இப் “பள்ளநீர் வெள்ள மன்னபரதன்” நந்தியம் பதி யிடை ராதனது பாதுகத்தையே அரியாசனத்திருத்தித் தனது ஐம் பொறிகளையும் அடக்கி அந்தியும் பகலும் நீராறுதகண்ணினனாய்ச் செலுத்திய முறையைப் போற்றும் கவிநலம் அழகுடையதாகவே அமைந்துள்ளது. பரதன் கொண்டுள்ள தவவேடத்தைப் பரத்துவ முனிவரும்

“வெயர்த்த மேனியன் விழி பொழி மழையன் மூவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமரல் உழந்து உழந்து இழிவான்
அயர்த்து நோக்கினும் தென்திசையன்றி வேறறியான்
பயத்ததுன்பமே உருவு கொண்டால் என்னும் படியான்”

என்று போற்றி உரைக்கின்றார்.

துன்பமெல்லாம் திரண்டுரு வெடுத்த தென்னும்படியாக, திசை நோக்கித் தொழுத கையனாய் இருந்த நிறைகுணத்தவனது தவக் கோலம் அவனது பண்புடை உள்ளத்தைப்பெரிதும் விளக்குவதாகும்

"மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதன்"

என்னும் பழிச்சொல் இவ்வுலகில் நின்று நிலவாது காத்து வளநகரின் புறத்திருந்தே அருந்தவந் தொடங்கிய பரதனது மனப் பான்மையை யாரே கணிக்கவல்லார்.

இன்னும் சிறையிருந்த செல்வியாம் சீதையும் பரதனது பண்பை ஏற்ற இடந்தோறும் போற்றியுரைக்கின்றாள். அமரர் தம் புகழ் விழுங்கிய அரக்கர்கோன் அவளை வஞ்சனையால் கவர்ந்து எடுத்துச் சென்றபோது, அச் செயலால் இரவி குலத்திற்கே நேர்ந்த அரும் பெரும்பழியை நினைந்து வருந்திய சீதை.

"வரதா இளையோய் மறு ஏது மிலாய்
பரதா இளையோய் பழிபூணுதிரோ"

என்று பன்னிப்பன்னிப் பரதனது பழிபூணா உள்ளத்தை வியந் தோதுகின்றாள். தான் அரக்கோன் சிறையடைந்து பலநாளாகியும், தன் தலைவனான இராமன் தன்னை இதுரை சிறை மீட்காததைக் கண்ட தலைவியினது உள்ளத்தில்.

தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும், பரதன் அங்காற்றும்
இன்னல் நோய்க்கும் அங்கு ஏகுவதன்றியே
என்னை நோக்கி இங்கு எவ்வனம் எய்துமோ"

என்னும் ஐயமே நின்று நிலவுகின்றது. சீதையின் சிறை மீட் சியை விடப் பரதனது தவத்திற்கு அருள் செய்தலே தன் முதற் கடன் எனக்குறிப்பான் தன் தலைவன் என்று இரங்குகின்ற சீதை யின் உள்ளம் பரதனது மாசற்ற உள்ளத்தையும் தவப்பெருமை யினையும் அழகாக எடுத்துரைக்கின்றது.

தவமே உருவெடுத்தன்ன தலைமகனான பரதன் பதினான் காண்டு அருந்தவஞ் செய்தும் அண்ணல் அருள்செய்யாதது கண்டும் எரியில் விழுந்து இறக்கத்துணிகின்றான். "தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையை" உடைய இவனது மனப் பான்மையை உணர்ந்த கோசலை.

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்காளாவரோ
புண்ணியம் எனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ"



என்று வாய்விட்டுக்கதறுகின்றாள். இந்த நிலையில் அண்ணனும் தன்வரவை அனுமன் மூலம் அறிவித்துப் பண்புமிக்க அரியாசனத் தடர்ந்து அரசு செய்வானாயினான்.

இதுவரை பரதனது பண்பு, இராமகாதையில் எவ்விதம் இலங்கு கின்றதென்பதையும், பரதனை இராமாயண பாத்திரங்கள் பலரும் எவ்வாறு போற்றிப் புகழ்கின்றார்கள் என்பதையும் எடுத்துக்கூறி னோம். இனிக் கவியரசர் கம்பர் இவனைப்பற்றிக்கொண்டுள்ள கருத் துத்தான் என்னை யென்பதை ஒன்றிரண்டு குறிப்புகளால் விளக்கி இக்கட்டுரையை முடிக்க விரைகின்றேன். நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையமாகினான்" பரதன் என்பதே இவனைப்பற்றிக் கம்பர் கொண்டுள்ள கருத்து என்று சுருக்கமாகக் கூறுவதே மிகவும் பொருத்தமுடைத்து, இன்னும்,

"எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர் கோன் மகள் பயந்தாள்"

என்று செம்மைசான்ற சொற்களால், குணத்திலும் எழிலி லும் இராமனை ஒத்த நிலையில் முனிவனால் வைக்கப்பெற்ற பரதனே பின்னர் வேடர் வேந்தனும் குகனால்.

"ஆயிரம் இராமர்நின் *கேழாவரோ தெரியில் அம்மா"

என்று ஆயிரம் இராமனும் பரதனுக்கு இணையான புகழ் படைக்கும் தகுதி புடையவர் அல்லர் என்று போற்றப்படுகின்றான் இதே பரதனை

"எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் உன் அருளுக் காளாவரோ"

என்று கோசலை எண்ணில் கோடி இராமரும் ஒரு பரதனுக்கு உவமையாகார் என்று கூறுவது, கம்பரது மனப்பான்மையையும் பரதனைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தையும் தெள்ளிதில் விளக்கும். எவ்விதமாய் ஆய்ந்தாலும், இராமகாதையில், இராமனை விடப் புகழ்படைத்த பெருமகன் ஒருவன் உண்டெனில் அவன் பரதனே யாகவேண்டும் என்பதே கம்பர்தம் கொள்கையாய்க் காவிய முழுதும் இலங்கக்காண்கின்றோம்.

* கேழ்-ஒப்புமை

"கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினையுரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்கேயது"

என்று கூனிவாய்ப்பெய்து கூறுவதே பரதனைப்பற்றிச் சுருக்கமாகக் கூறும் கம்பர் தம் கருத்தாகும். இராமகாதை யென்னும் பெருநாலில் இலங்கிடும் பாத்திரங்கள் பலருள்ளும், "தன் பெருங் குணத்தால் தன்னில் தானலது ஒப்பிலாதவனாய் இலகிய பெருமை" பரதன் ஒருவனுக்கே உரியது, என்பதே எமது தாழ்மையான கருத்தாகும் என்று கூறி என்பணி முடிக்கின்றேன்—திருவருள் முன்னிற்க—சுபம்.

——:O: ——

# பசுக்காத்தல்.

(114-ம் பக்கத் தொடர்ச்சி)

(ரா. தேசிகன் யாதவன் புதுவை)

---

பசு வாங்குதல்:—கொஞ்சம் பால் தரும் பசுவை வாங்கவேண்டுமா அல்லது அதிகம் பால் தரும் பசுவை வாங்கவேண்டுமா? இக் கேள்வி பசுக்களை நன்றாய்ப் பராமரிப்பவர்களைப் பொறுத்ததாகும். அதிகமாகப் பால் தரும் பசு மற்றதைக் காட்டிலும் அதிக விலையுள்ளதாயிருக்கும். ஆனால் அது நன்றாய் சம்ரக்ஷணை செய்யப்பட்டால் அதன் விலை மதிப்பு குறைபடாது. அதற்காகச் செலவிடப்படும் தொகையும் வீண் போகாது.

ஒரு பசுவுக்குக் கொடுக்கப்படும் உணவானது முதலாவது அது ஜீவிப்பதற்கான பலத்தை அது காப்பாற்றிக் கொள்ளுதற்கும், இரண்டாவது அது பால் தருதற்கும் உபயோகப்படுகிறது. ஒரு பசு கொஞ்சம் பால் தருவதாயிருந்தாலும் அல்லது அதிகமான பால் தருவதாயிருந்தாலும் அது ஜீவிப்பதற்கான பலத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு வேண்டிய உணவு ஒன்றே. அவ்வுணவின் செலவும் ஒன்றே. அச்செலவு மாறுதது, பசுவுக்கு அது அவசியமானது, நமக்கு அது பலன் தராதது.



பால் இவ்வளவுதான் தருகிறது என்று நமக்குத் தெரிந்த
ஒரு பசுவை வாங்குவது நன்று. சில சமயம் நமக்கு அவ்விதம்
தெரியாததையும் வாங்க நேரிடலாம். அப்போது நல்ல பசுவுக்
குள்ள அடியிற்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும். மெல்லிய
மிருதுவான தோல், நுனியில் அடர்ந்த மயிருள்ள, தடித்திராத,
மடங்கக்கூடிய நீண்டவால், குறுகின கால்கள், அகன்ற இடை,
நன்றாய்ப் பிரிந்த துடைகள், வயிற்றுக்குக் கீழ் ஓடும் பெரிய
இரத்தத்தாரை, நீண்டு பெருத்துச் சமதூரத்திலிருக்கும் காம்புகள்,
மெதுவான நடையும், வாத்சல்லியமான பார்வையும் உள்ள பசு
நல்லது. அது தன் கன்று பயந்தாலொழிய ஆத்திர மடைவதில்லை.
நன்றாய்ப் பால் தரக்கூடிய ஒரு பசுவின் தசைகள் கெட்டியாக இல்
லாமல் தொங்குவனவாக இருத்தல் வேண்டும். ஒரு பசுவின்
தசைகள் கெட்டியாயும், அங்கங்கள் உருண்டு மிருந்தால் அப் பசு
வர வரக் கொழுக்கும் என்பதையும், பால் அதிகம் தராதென்பதை
யும் அறிதல் வேண்டும். எப்போதும் இரண்டாம் ஈற்றுப் பசு
வாங்குவதே நன்று. அக் காலத்தில்தான் அது எவ்வளவு அதிக
மான பால் தரக்கூடுமோ அவ்வளவு பாலையும் தரும்.

கோக்களுக்குச் செய்யவேண்டிய சிசுருஷை:—மாட்டுக் கொட்
டில் காற்றோட்டமானதா யிருத்தல் வேண்டும். ஆண்டு தோறும்
அவைகள் சுண்ணாம்பு அடிக்கப்படுதல் வேண்டும். தரையானது
வழுக்காவண்ணம் கருங்கல் போட்டாகிலும், அல்லது சுண்ணாம்புச்
சிட்டம் போட்டாகிலும் இருத்தல் வேண்டும். கோசலம் முதலி
யவை தங்காதிருக்க அத் தரை சிறிது சருவலாக இருத்தல் நன்று.
பசுக்கள் படுக்கும்போது அவைகளின் தேகத்தில் கருங்கல்லின்
குளிர்ச்சி படாதிருப்பதற்குக் கீழே வைக்கோல் தெளித்து வைத்தல்
வேண்டும். வாரந்தோறும் பசுக்களையும் கன்றுகளையும் குளிர்ந்த
நீரில் வைக்கோலால் தேய்த்துக் கழுவல் வேண்டும். வெள்ளிக்
கிழமை தோறும் அங்ஙனம் செய்து அவைகட்கு மஞ்சள் பூசி,
பொட்டிட்டு ,வைப்பது மிக நன்று. ஆறு மாதம் ஆகாமுன் கன்று
களை குளிப்பாட்டுதல் கூடாது. பசுக்கள், கன்றுகள் இவைகளின்
இரத்தத்தை உறிஞ்சவரும் ஈக்களைத் துரத்தல் வேண்டும். கறவை
மாடுகளிடமிருந்து நல்ல பலனை எதிர்பார்ப்பதாயிருந்தால் அவை
களுக்குத் தொந்தரவு இருத்தல் கூடாதென்பதை மறத்தல் கூடாது.
ஈக்களும் உண் உணிகளும் விலங்குகளை வருத்துவதால் அவைகள்

அனுகாவண்ணஞ்செய்தல் வேண்டும். மாட்டுக்கொட்டில் நன்னிலையிலிருக்குமானால் மாடுகளுக்கு உண் உணி அதிகம் பிடிக்காது. அப்படியும் ஒன்றிரண்டு இருக்குமானால் உணி உள்ள இடத்தில் கொஞ்சம் மீன் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் தடவல் வேண்டும். மீன் எண்ணெய்தான் சிறந்தது. தோட்டம் ஒன்றிருக்குங்கால் கோக்களை எதேச்சையாக விட்டுவைத்தல் வேண்டும். ஆனால் அத்தோட்டத்தில் நிழலிடம் ஒன்று இருத்தல் வேண்டும்.

உணவு.—ஆவினங்களுக்கு அடியிற்கண்டவைகளை அவசியம் அன்றாடம் கொடுத்து வருதல் வேண்டும். 1. வேண்டுமட்டும் குளிர்ந்த நீர், 2. நீனியோடு கலந்து கால் அவுன்ஸ் கெந்தகம், 3. நீனியோடு கலந்து ஒரு அவுன்ஸ் கடலுப்பு, எட்டக்கூடிய ஓரிடத்தில் கடலுப்பை ஒரு கோணியில் மூட்டையாகக் கட்டிப் போட்டுவைத்தால் பசுக்கள் வேண்டியபோது அம்மூட்டையை நக்கிக் குறைபடும் உப்பை உட்கொள்ளும். அவைகளுக்கு உப்பு அவசியம் வேண்டியிருப்பதால்தான் அவை ஒரோர் சமயம் உப்புப் பூத்த சுவர் முதலியதை நக்குகின்றன. நாள்தோறும் பசுக்களுக்கு முப்பது பவுண்டு பசும்புல் தரவேண்டும். பசும் புல்லின் மேல் அவைகளுக்கு ஆவல் அதிகம். பசும்புல் இயற்கை உணவாயிருப்பதோடு மலச்சிக்கலையும் நிவர்த்திக்கிறது. வேண்டுமட்டும் வைக்கோலும் கொடுத்தல் வேண்டும். ஆனால் சாணம் மூத்திரங்களால் அசுத்தப்பட்ட வைக்கோல் கூடாது.

மரத்துப்போன பசுக்கள்:—அதிகமாக நல்ல பாலைக் கொடுத்துக் கொண்டுவந்த பசு மறத்துப்போயின் அதை அக் காரணத்துக்காக விற்றுவிடுதல் கூடாது. நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வந்த ஒரு மாடு வறுமைக் காளாகப்படுவதை எண்ணுந்தோறும் மனவருத்தமடைய வேண்டியிருக்கிறது. இந்தப் பரிதாப விஷயத்தைக் கருதாமற் போயினும், அத்தகைய மாட்டை வைத்திருத்தலால் அனுகூலமே. அதன் குணம், தன்மை முதலியவை நமக்குத் தெரிந்திருப்பது ஒரு விசேடம். நல்ல பாலைக் கொடுத்துக்கொண்டு வந்த அது அடுத்த கன்றுக்கும் அவ்வாறே தரும் என்பது உண்மை. ஒரு சினை மாட்டை நன்றாகப் போஷித்தல் வேண்டும். அதற்குச் செலவு அதிகஞ் செய்ய வேண்டியிருக்கும். அதனால் அதின் விலைமதிப்புக் குறைந்துவிடாது. அது திடமுள்ள கன்றை ஈனுவதோடு ஏராளமான பாலையுந்தரும். முன்பின் அறியாமல் புதிதாக வாங்கப்படும் ஒரு பசுவானது, அதற்கு நல்ல குறிகளிருப்பினும், நாம் எதிர் பார்க்கிறபடி பால் தரும் என்று எவர் உறுதி கூற முடியும்?

(தொடரும்.)

# குலச்சீர்திருத்தக் குறிப்பு.

(S. வேலாயுத தாஸ்.)

நம் யாதவமித்திரன் என்னும் மாதச் சஞ்சிவி மாதமொரு தடவை பத்திராதிபரின் கைப்பண நஷ்டத்தாலும், அங்கத்தினர்களின், சிரமத்தினாலும், சில யாதவ அறிஞர்களின் பிரயாசங்களாலும் வெளிவந்துலாவுகிறது கண்கூடு. இச் சஞ்சீவியின் நோக்கம் நம் மக்களின் முன்னேற்றத்தைக் கவனித்தும், அறிவு வளர்ச்சிக்கு உரியனவுமாகிய பொது விஷயங்களுக்காகவும் வெளியிடப்பட்டு வருகிறது.

முக்கியமாக எடுத்துக்கூறின் நம் மக்கள் சில இடங்களில் நம் குலத்தின் மேன்மையைக் கவனியாது பார்ப்பனர்கள் வீடுகளில் அடிமை புரிந்து வருவதையும் அப்பார்ப்பனர்கள் அம்மக்களை மிகக் கேவலமாக நடத்தி வருவதையும் எடுத்து உரைக்கின் 'பன்னியுரைத்திடிலோ பாரதமாம்' என்பதாக விரியும்.

சகோதரர்களே! விஷயங்களைக் கவனியாது திடீரென, என்னைப் பார்ப்பனத் துரோகி எனச் சிந்தித்துவிடக் கூடாது.

நான் போனமாதம் திருநெல்வேலி ஜங்ஷனில் எனது நண்பர் ஒருவரோடு, ஒரு பார்ப்பனர் ஹோட்டலின்முன் நின்று பேசிக் கொண்டிருக்கையில் சுமார் 18 வயதுள்ள ஓர் யாதவப் பெண்மணி பால் கொண்டு அந்த ஹோட்டலுக்கு வந்தாள். ஆஹா! எனக்கெழுந்த ஆத்திரமிகுதியை எழுதவும் வேண்டுமா! இதுமட்டுமா! 2 நிமிடங்களுக்குள் அந்த ஹோட்டலில் வயிறு வளர்த்துவரும் சில வாலிபப் பார்ப்பனர்கள் அப் பெண்ணிடம் பரிகாச வார்த்தை பேச ஆரம்பித்துவிட்டார்கள். சகோதரர்களே! என் மனம் எவ்வாறு சகித்துக் கொண்டிருக்கும்! சுருக்கமாக உரைக்கின், எனது நண்பர் அவ்விட மிருந்திராவிடின், அப் பார்ப்பனர்களுக்கும் எனக்கும் நேரிட்ட சச்சரவு எவ்வாறு முடிவு பெற்றிருக்குமோ வென்று எனக்கே புலப்படவில்லை. தெய்வாதீனமாக அம்மங்கையும் அவ்விடத்தை விட்டு மறைந்து விட்டாள்.

இளம் பெண்கள் தெருத் தெருவாய் பால், மோர், தயிர் கொண்டுபோய் விற்கக்கூடாதென்றும், ஆண்களும், பெண்களும் பார்ப்பனர்கள் வீடுகளில் போய் அடிமைபுரியக் கூடாதென்றும்,

நம் மித்திரன் மறுபடியும் வற்புறுத்திக் கூறுகிறான். முக்கியமாக இக்கொடுமைகள் திருநெல்வேலி ஜில்லாவில்தான் அதிகம். இத்தகைய மூடப் பழக்கங்களால் நம் மக்களுக்கு எவ்வளவு கேவலத்தை உண்டு பண்ணுகிறதென ஆராயின், என்னைப் பார்ப்பன துரோகியென ஒரு பொழுதும் கூற முடியாது. நிற்க. மேற்கூறிய கொடுமைகள் திருநெல்வேலி ஜில்லாவில் அதிகம் என்பதற்குக் காரணம், மித்திரனின் சந்தாதார்கள் சொற்பமே. மேலும் பெரும்பான்மையோர், நம்மித்திரன் வீடுதேடி வந்திருக்கும் பொழுது வி. பி. யில் அனுப்பப்பட்டிருக்குமோ என்ற நோக்கத்துடன், கதவைத் தாழிட்டுக்கொண்டு, கொல்லைப்புறமாக வெளியேறி விடுகிறார்கள். அந்தோ! என்ன பரிதாபம்!! மித்திரன் எவ்வளவு நேரம் தான் வாசலில் காத்துக்கொண்டிருப்பான், எவ்வளவு தடவைதான் கதவைத் தட்டுவான். கூவிக் கூவிப் பார்த்துவிட்டு, மனச்சஞ்சலத்தோடு திரும்பிப் போய்விடுகிறான். மக்களே! வி. பி. யில் அனுப்பு மட்டும் பெற்றுக்கொண்டு, அப்புறம் இவ்வாறு கொடுமைகள் செய்வானேன்?

நிற்க, ஒவ்வொரு கிராமங்களிலும் மித்திரன் சந்தாதார்கள் சிரமத்தைக் கவனியாது ஏனைய சகோதரர்களையும் சந்தாதார்களாகச் சேர்ப்பித்து, நம்மித்திரனை ஒவ்வொரு வீடுகளிலும் உபசரணை செய்துவருவாராயின் மேற்கூறிய மூடப் பழக்கங்களை அறவேயொழித்துவிடலாம். அம் மூடப்பழக்கங்கள் ஒழிந்தாலொழிய நம் குலமுன்னேற்றமடைய ஏதுவில்லை. ஆகையால் ஒவ்வொரு சகோதரர்களும் முதலாவது நம் மித்திரனை ஆங்காங்கு பரவச்செய்ய முயற்சி யெடுக்குமாறு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

---

இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த பரமக்குடியில் 17-1-31௳ சனிக்கிழமையன்று பகல் 2-மணிக்கு ஓர் சீர்திருத்த ஜில்லா யாதவ மகாநாடு இராமநாதபுரம் ஜில்லா கோவைசிய யாதவ குல தர்மபரிபாலன சபையின் ஆதரவில் கூடியது. 500 பிரதிநிதிக்கு மேல் விஜயம் செய்தார்கள்.

முன்பு மதுரையில் நடந்த கூட்டத்தின் தீர்மானத்தை யனுசரித்து ஆட்டுக்கிடைக்குப் பெண்கள் போகக்கூடாதென்று ஏகோபித்த தீர்மானம் நிறைவேறிற்று.

ப-ர்.

---

162 A


# யாதவமித்திரன்.

## ஒரு மாதப்பத்திரிகை.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

| தொகுதி 2 | பிரமோதூத ௵ தை ௴ 1931-௵ ஜனவரி-௴ | பகுதி 6 |
|---|---|---|


### கடவுள் வணக்கம்.

திருவுக்கும் திருவாகிய செல்வா
    தெய்வத்துக் கரசே செய்ய கண்ணா
உருவச் செஞ்சுடராழி வல்லானே
    உலகுண்ட ஒருவா திருமார்பா
ஒருவர்க் காற்றி யுய்யும் வகையின்றால்
    உடன் நின்று ஐவர் என்னுள் புகுந்து ஒழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்
    அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே.

திருமங்கையாழ்வார்.

## சமூக முன்னேற்றம்.

(திருவாளர் தி. அ. முத்துசாமிக் கோனார்.)

---

தங்கள் தங்கள் மரபினர் முன்னேற வேண்டுமென்று ஒவ்வொரு அறிவாளிகளும் எண்ணுதலுண்டு. எவ்வளவு உயர்ந்த நிலை பெற்றுள்ளாருக்கும் இன்னும் உயரவேண்டுமென்ற அவாவிருக்கும். ஆனால் 'நமக்கு ஒப்ப அடுத்தவன் வரக் கூடாது' என்ற இழிந்த எண்ணங் கொண்டவர்களு மிருக்கிறார்கள். இந்த எண்ணங் கொண்டவர்கள் மிக்க இழிந்த மக்களேயாவார்கள்.

சமீபத்திலே மிக அநாசாரமும், இழி தொழிலும் ஏழ்மையும் உடைத்தா யிருந்தவர்கள் ஆசார முடையவர்களாயும், உயர் தொழில் புரிபவராயும், தனவந்தராயும் இருக்கிறார்கள். ஏறக்குறைய அந்த சமூகமே உயர்வு பெறுகிறது. 'இதற்குக் கல்வி வேண்டும். ஜாதி ஒற்றுமை வேண்டும். அந்த மரபில் கல்வியாலோ, செல்வத்தாலோ, சொல் வன்மையாலோ மதிக்கத் தக்கவராக உள்ளவர்கள், "மற்ற மரபினர் பல வகையிலும் முன்னேற்றமடைந்து விளங்குவதையும், அதனால் தம் மரபினரைப் பிறர் மதித்து உபசரிக்கப் படுவதையும் கண்டு நம் மரபினர் எல்லோரும் முன்னேற்றமடைந்தால் நம் மனதுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் மற்றையோர் எவ்வளவு சிலாக்கியமாகக் கொள்வார்கள்" என்று கருதுதல் வேண்டும். இதற்காகப் பச்சாதாபப்பட வேண்டும். மேல் நிலைமையிலுள்ள கனவான்கள், தாழ்வுற்றிருப்பவர்களுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட வேண்டும். சில மரபினர், ஏதேனும் ஒரு கம்பெனியிலோ, ஆபீசிலோ இருந்து அந்த இடத்துக்கு ஒரு ஆசாமி வேண்டியிருந்தால், தன் வகுப்பான் எவ்வளவு தூரத்து இருப்பினும் தெரிவித்து அந்த ஸ்தானத்தைப் பெறுமாறு முயற்சிக்கிறார்கள். ஒரு தொழிலில் லாபம் வரக்கூடியதாகத் தெரிந்தால் தம்மவரை அழைத்து அதனைப் பெறுமாறு செய்கிறார்கள். தம் மரபினருள் ஒருவருக்கு நஷ்டம் கஷ்டம் நேர்வதாகத் தெரிந்தால், உடனே அதற்கு வேண்டிய சகாயங்களைச் செய்கிறார்கள். 'இவ்விதம் செய்து நிவர்த்தித்துக் கொள்' என்று அறிவிக்கிறார்கள். ஒரு சிறிய எறும்பு ஒரு பொருளைக் கொண்டு போவதற்கு வருந்துமேல் எதிர்ப்பட்ட மற்றோர் எறும்பு தானும் அதனைக் கவ்விப் பிடித்து இழுத்துக்கொண்டு போதலான சகாயம் செய்வதைப் பார்த்திருக்கிறோம். பகுத்தறிவு இல்லாத ஒரு சிற்றெறும்பு ஜாதி அபிமானம் பற்றி இவ்வளவு உதவி புரிந்தால் பகுத்தறிவுள்ள மனிதனாகப் பிறந்த நாம் எவ்வளவு உதவி செய்து சமூகத்தவர்களை முன்னேறச் செய்ய வேண்டும்? குலாபிமானமுள்ள கனவான்களே, சுமார் ஒரு நூறு, எண்பது வருஷங்களின் முன் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகள் எந்த நிலையிலிருந்தார்கள்? அவர்கள் உலகமே புகழக் கோடீசுரர்களாய், தேசமன்னர்களும் தயங்கத்தக்கவாறு, ஆலயங்களும், தருமஸ்தாபனங்களும் செய்து பெருஞ் சிறப்பு அடைந்து வாழ்கிறார்களல்லவா? அதற்குக் காரணம் சாதி அபிமானமும், ஒற்றுமையுமல்லவா? சொற்ப வருஷங்களின் முன், திருவநந்தபுரம்



பத்மநாபசுவாமி ஆலயத்துள் செட்டிப்பிள்ளைகள் புகுதல் கூடாது என்று ஒரு நிபந்தனை இருந்தது. அதற்காக எத்தனையோ பாடும் பொருட் செலவும் செய்து முயற்சித்து ஆலயத்துச் சென்று தரிசிக்குமாறு உத்திரவு பெற்றார்கள். இது எதன் பொருட்டு? தன் மரபு, சிறப்புறும் பொருட்டல்லவா? அதுபோல உயர்ந்த நிலையிலுள்ளவர்கள் தம்மினத்தவர் நலமடைய வேண்டுமென்று பல வழியினும் முயற்சிசெய்யவேண்டும்.

முன்னேற்ற மடைதற்குச் சாதி ஒற்றுமை வேண்டு மென்றோம். ஒற்றுமையாதற்கு அவ்வவ்வூரிலுள்ள பெரியார் கவலை கொள்ள வேண்டும். அதில் நாமெல்லாம் ஒரு மரபினர் எனக் கருதுதல் வேண்டும். ஒரு ஏழை வீட்டில் ஒரு விவாகம், அல்லது தீமையான காரியங்கள் நேர்ந்தால் முன்னின்று பெரியார் நடத்தவேண்டும். அப்பொழுது குறிப்பானவர்கள் பிரசன்னமாக இருத்தல் வேண்டும். அப்படி இருந்தால்தான் சிறிதும் தவறுகள் நடவாது. நடந்தாலும் பரிகாரமாகும். தவறு செய்யவும் கூசுவார்கள். நம்முடைய அந்தஸ்துக்கு நாம் அவ்வீட்டுக்குப் போதல் தகுமோ என்று அலட்சியமாக எண்ணுதல் கூடாது.

இது மாத்திரமன்று 'நாங்கள் வேறு ஜாதி அவர்கள் தாழ்ந்த வகுப்பினர்' எனச் சிலர் ஒதுக்குகிறார்கள். எவ்வாறு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றால், 'நாங்கள் பெரிய திருமங்கிலியம் போடுகிறோம், திருமங்கிலியம் மார்பளவு தொங்கக் கட்டுகிறோம், நாங்கள் ஒரு பெருஞ் சரட்டில் மாங்கலியத்தைக் கோர்த்துக் கட்டுகிறோம். என்றும், அவர்கள் சிறு தாலி போடுபவர்கள், அவர்கள் உட்கழுத்தில் கட்டுகிறார்கள், மாங்கலியத்துடன் சில பவளம் முதலிய உருக்களைச் சேர்க்கிறார்கள், சிறு சிறு சரடாக நான்கு ஐந்து சேர்த்துக் கோர்க்கிறார்கள்' என்பனவாதி குறை கூறுகிறார்களன்றி வேறு வகையான இழிவு வித்தியாசம் சொல்லக் கேட்க வில்லை. கல்லாத பழய காலத்துப் பாட்டிமார்கள்தான் இப் பாட்டுப் பாடுகிறார்கள் என்றால் கல்வி சிறிது பயின்று நாகரிகம் அடைய வேண்டுமென்று எண்ணும் மாதரசிகளும் இதற்கு இசை கூட்டுகிறார்கள். இம்மட்டோ படித்துப் பெரும் நிலைமையுற்ற பூமான்களும்கூட, (விவாகாதி சுபகாரியங்களில் ஒரு சுமங்கலை கலியாணப் பாட்டுச் சொன்ன முடிவில் எல்லா சுமங்கலிகளும் ஏகோபித்து "கௌரி கலியாணமே வைபோகமே" என்று கூறுவதுபோலும், வைதீக

காரியங்களில் ஒருவர் ஸ்வஸ்திவாசனம் சொன்னவுடன், "ததாஸ்து" என்பது போலும், மங்களகரமான சபையில் நாட்டுப் புலவர் ஒருவர் வாழி முதலிய மங்கலப் பாட்டுச் சொன்னவுடன் மற்ற புலவர்களெல்லாம் "கேடி கேடி" என்பதுபோலவும் அவர்கள் வார்த்தையை ஆம் ஆம் என்று ஆதரிக்கிறார்கள்.

சுமார் 20, 25 வருஷத்தியபோது மலரும் பருவத்துள்ள ஆவரம்பூ மொட்டு அளவாகத் தாலி கட்டியிருந்த ஒரு வைதீகப் பார்ப்பனர் வீட்டில், இப்பொழுது நன்கு மலர்ந்த பீர்க்கம்பெரும்பூ அளவினும் பெரிதான தகட்டுவடிவாய் முக்கொம்புள்ள தாலி போட்டிருக்கிறார்கள். மாங்கலியம் இவ்வளவில் இவ்வடிவினதாக இருக்கவேண்டுமென்ற பிரமாணமுண்டோ, அஃதில்லை. அன்றியும் எல்லாச் சடங்குகளுக்கும் இருக்கும் வேதமந்திரம் தாலிக்கு மாத்திரம் இல்லை. இவ்வியல்பினதான தாலியைப் பார்த்து வித்தியாசம் கற்பிக்கிறார்களே! இது பாவம் பாவம்.

ஒரு சமயம் ஒரு பெரிய நகரில் பிரபலமான முயற்சியாளரும் நம்மவர்கள் முன்னேற்றத்தில் கருத்துள்ளவராக இருப்பவருமான கனவானொருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னார். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுகிறதா? வேற்றார் சம்பந்தஞ் செய்ய நாம் விரும்பினும் பெண்கள் ஒத்துவருவதில்லையே என்றார். இப்படியிருந்தால் நாம் எக்காலத்துக்கு முன்னுக்கு வருவோம். இதுவன்றிக் கல்வி யோக்கியதை முதலிய நலத்தையும் அவசியமான சில தகுதியையும் விசாரித்து ஆற்காட்டினர், கோயமுத்தூரினும், திருநெல்வேலியார் காஞ்சிபுரத்தினும் போலத் தூரமான இடங்களில் கொண்டும் கொடுத்தும், அவ்வளவு தூரம் போய் வரும் செலவுக்கு அஞ்சினால் சமீபத்திலேயே உள்ள பந்துக்களிடத்துக் கொண்டு கொடுத்துச் சொந்தமாக்க வேண்டும். வேதியர்கள் இவ்வாறு நடப்பதாலன்றோ அவர்களுக்குள் ஒற்றுமையும் பரஸ்பர அபிமானமும் வளர்ந்து வருகிறது.

இதற்கு அடிக்கடி ஒருவரோடொருவர் சந்திக்க வேண்டும். அதனால் நட்பு அதிகரிக்கும். ஆனால் இப்பொழுது சென்னையில் அடிக்கடி கூட்டம் கூடுகிறார்கள். இன்னும் சில நாடுகளில் சபை கூடுகிறார்கள். இதுபோல ஒவ்வொரு ஊரிலும் கூடிப் பழகினால் சமூக முன்னேற்றமடையும். நமக்கென்றே ஏற்பட்டுள்ள "யாதவமித்திர"னில் அங்கங்கு நடந்தேறும் விஷயங்களை விளக்கத்துக்காக



வெளிப்படுத்த வேண்டும். அந்த மித்திரனை நம்மவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் தருவிக்க வேண்டும். பெண்களையும் வாசிக்கச் செய்ய வேண்டும். நமது குலமுன்னேற்றத்துக் கென்றுள்ள மித்திரனுக்கு வருஷசந்தா ஒரு ரூபாயை அந்த அந்த வருஷம் அனுப்பி விடுதல் வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் "எறும்புஊரக் கல்லும் தேயும்" என்றவாறு வன்மையான மனம் தேய்ந்து மென்மையாய், நன்மை பெருகும். சுபம்.

---

## பசுக்காத்தல்.

( 160-ம் பக்கத் தொடர்ச்சி )

( திரு. ரா. தேசிகன் யாதவன். )

கன்றுகள்:—சில பாற்காரர்கள் தங்கள் கன்றுகளைக் கவனிப்பதில்லை. அப்படிச் செய்வது அவர்களுக்குத்தான் நஷ்டம். பாக்கி ஒரு துளியும் விடாமல் கறந்து விற்றால் இலாபம் என்று கருதுகிறார்கள். அங்ஙனம் எண்ணுவதுதான் பிசகு. கறக்கும்போது பசுவானது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் பால் தருகிறது. மற்றது வீணாகாமல் கன்று அருந்துமாயின் அதற்கு விலைமதிப்பு ஏறும். முதல் மாதத்தில் கன்று தன் தாய்ப்பாலை மாத்திரம் உண்டு வளரவேண்டும். அதுவும் எதேச்சையாய்த் தனக்கு இஷ்டமுள்ளபோது குடித்தல் வேண்டும். இரண்டு மாதம் வரையில் கன்றுக்குட்டியைப் பால் கறந்தபின் மூன்று மணி நேரத்திற்குத் தனியே கட்டிவைத்தல் வேண்டும். அதன் பின் அவிழ்த்து எதேச்சையாய்ப் பாலூட்டும்படி விட்டுவிடுதல் வேண்டும். இரண்டு மாதத்திற்குப் பின் தாய் தரும் பாலில் கால்பாகம் கன்றுக்கென நிறுத்திவைத்தல் வேண்டும். தாய்க்குக் கொடுக்கப்படும் உணவில் கொஞ்சம் உண்ணும்படி பழக்குதல் வேண்டும். அதுபோலவே கொஞ்சங் கொஞ்சமாகப் பாலைக் குறைத்துச் சாதாரண உணவை அதிகரித்துக்கொண்டு வருதல் வேண்டும். இப்படிச் செய்துவரின் கன்று திடமுள்ளதாயும், கெம்பீரமானதாயும் ஓங்கி வளரும். வளர்ந்தக்கால் அதுவே ஒரு மூலதனம்.

இப்போது சொல்லிவந்ததெல்லாம் ஒரு சட்டமல்ல. மனிதர்களைப் போலவே மிருகங்களுக்கும் பசியில் பேதம் உண்டு. பாற்காரர்கள் தங்கள் பசுக்களின் அவா, தேவை முதலியதை நன்றாய் அறிந்து அதற்கேற்றவாறு அவைகளைத் திருப்தி செய்தும், பிறர் தம் மாடுகளை அடித்துத் துன்புறுத்தாவண்ணம் பார்த்துக்கொண்டும் வருவார்களானால் அவர்களுடைய பிரயாசைக் கேற்ற பிரயோஜனம் உண்டென்பதில் சந்தேகமில்லை.

---

# கல்வி.

## (திருவாளர் சு. ஆண்டியப்பா)

கல்வி என்பது உலகத்தை நன்கறிந்த பெரியோர்களால் ஆக்கப்பட்ட அறிவைப் பெருக்கும் அறநூல்களையும், நுட்பத்தை மிகுக்கும் கணித நூல்களையும் உணர்ச்சியை விளக்கும் காவிய நூல்களையும், படித்தலேயாகும். சுருக்கமாக விளக்கமாகச் சொல்லப் புகுந்தால் கண், காது, வாய், மூக்கு, உடம்பு, இவற்றால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உணர்ந்து, மனத்தாலும், அறிவாலும், பெறும் அனுபவத்தால் உடம்பு, உள்ளம், ஒழுக்கம் இவற்றை வளர்ப்பதே கல்வி என்னலாம். இத்தகைய உண்மையான கல்வியைப் பெறுவதாலேயே மனிதன் தன்னை உண்மையான மனிதனுக்கிக் கொள்ள முடியும். ஆகையால் இத்தகைய மெய்க் கல்வியைக் கற்றலே ஒவ்வொருவர் கடமை.

கல்வி என்பது ஒருவாறு தொழிற் பெயராயினும், அதனைச் செல்வப் பொருளோடு ஒப்புமையாகக் கல்விப் பொருள் என்பது தமிழ் வழக்காக இருக்கின்றது. "கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வ மெனப்படும்" "கைப் பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி" ஏனெனில் கைப் பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது. கைப் பொருள் அறமும், இன்பமும் பயக்கும். கல்விப்பொருள் அறம், பொருள், இன்பம் வீடும் பயக்கும். "வித்வான் தனவான்" புத்திமான் பலமான். கல்வி கற்றவர் தம்மளவில் சொற்சுவை, பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூஜையும் பெறுவதாலும் இடையறா இன்பம் பெறுவாராவர்.

நமது நாட்டிலே ,இந்நாளிலே பலர் நினைப்பிலே கல்வி என்பது பொருள் தேடுதற்காகக் கொஞ்சம் கணக்குப் போடவும் எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டு மென்பதோடு முடிந்துவிடுகிறது. இது மிகவும் வருந்தத் தக்கதாகும். எல்லாப் பிறப்பிலும் சிறந்த பிறப்பென மதிக்கத் தகுந்த மனிதப் பிறப்பை யுடைந்தோர் பொருள் தேடமட்டுமா பிறந்தார்கள்? கேவலம் வாழ்க்கையை எப்படியாவது கழித்துவிட மட்டுமா இருக்கின்றார்கள்?



எண்ணுவதும், சொல்லுவதும் அப்படி நடந்து கொள்ளுவதும் மனிதப் பிறப்பை இழிவு படுத்துவதாகும். ஆகவே குறுகிய நோக்கத்தோடு கல்வியை எண்ணாது உயர்ந்த பரந்த நோக்கத்தோடு கல்வியை மதிக்க வேண்டும்.

செல்வம் உலக வாழ்க்கையின் உயிர் என்று கூறலாமென்றாலும்கூடக் கல்வியோடு கல்வியறிவோடு கலந்து கையாளப்படாத செல்வம் சிறந்து விளங்கமாட்டாது என்னும்உண்மையை "கல்வியில்லாச் செல்வம் கற்பில்லா அழகே" என்னும் மூதுரையால் நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

கல்லாதார் எக்காலத்தும் செல்வமுடையரா யிருத்தலரிது. ஏனெனிற் கல்லாதவரது பொருள் பிறராற் கவரப்படினும் வேறு வழிகளிற் கேடுறினும் அப்பொருளை அவர் மீண்டும் பெறலரிது. கற்றார் செல்வத்தை இழப்பினும் மீண்டும் கல்வியினுதவியால் அதனை எளிதாகப் பெறுவர். இதனைக் குறித்தே,

"கைப் பொருள் கொடுத்துங் கற்றல் கற்ற
பின் கண்ணு மாகும்
மெய்ப் பொருள் விளைக்கும் நெஞ்சின்
மெலிவிற் கோர் துணையு மாகும்
பொய்ப் பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம்
துணைவி யாக்கும்
இப் பொருள் எய்தி நின்றீர இரங்குவ
தென்னை யென்றான்"

என்று சீவக சிந்தாமணி கூறுகிறது.

நாம் கல்வியில் தேர்ச்சி யுடையவராக வேண்டுமானால் நூல்களைக் கற்காமல் ஒன்றும் செய்ய முடியாது. நூல்களைக் கற்குமிடத்து ஒழுங்கான சில முறைகளை அனுசரிக்க வேண்டும். வழிதுறை இல்லாமல் "கண்டது கற்கப் பண்டித னாவான்" என்று நம்பிக் கண்ட கண்ட நூல்களை யெல்லாம் கற்பவர் "பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்" என்பது போல உபயோகமான யாதொரு காரியமும் செய்ய உதவமாட்டான். இதனைக் குறித்தே,

"நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்"

என நல்னூலாசிரியரும் கூறியுள்ள பலபல நூற்களைப் படித்துப் பயனில்லாது போவதைவிடக் கழகங்களில் அறிவுடையோர் கூறும் அறிவு மொழிகளைக் கேட்டல் மிகவும் நன்று.

"உணற் கினிய இன்னீர் பிறிதுழி இல் லென்னும்
கிணற் றகத்துத் தேரைபோல் ஆகார் கணக்கினை
முற்றப் பகலும் முறியா தினி தோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று".

எனப் பழமொழி நானூற்றில் கூறியுள்ளது. இதுவுமன்றி,

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை.

எனத் திருவள்ளுவ நாயனாரும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

ஆதலான் அன்பர்களே! நாம் அவசியம் படிக்க வேண்டும். நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியை வளர்க்க வேண்டும். தமிழில் அரிய நூல்கள் பல இருக்கின்றன. பெரிய பொக்கிஷம் போன்ற அந்த நூல்களைக் கல்லாது வேறு நூல்களைக் கற்பது கையிற் கிடைத்த திரவியத்தை எறிந்துவிட்டு வேறுபொருள் அரிப்பரித்துத் தேடுதலை நிகர்க்கும். கல்விப் பொருள் ஒருவருக்கு ஒரு பிறவியளவில் மாத்திரமன்றி எழு பிறவியிலும் சென்று இன்பம் தரும். பொருள் தேடுதல், பாதுகாத்தல், குறைதல் என்ற இவற்றால் துன்பம் உண்டாக்கும். கல்வியோ ஒருவித துன்பமும் உண்டாகாமல் காக்கும் இன்னும் கல்வியானது வெள்ளத்தா லழியாது. கள்வர் வலியவர்களால் கவரப்படவும் மாட்டாது. கல்வி கொடுக்கும்போது வளர்ச்சியடைந்து கொண்டே வரும். இதனால் கல்வி மேலானது. அழிவு இல்லாதது. கல்வி இல்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமானமானவரே.



குலம், அழகு, அதிகாரம், பொருளுடைமை ஆகிய யாவும் கல்வி என்ற ஒன்றினாலே விளக்கமடையும். தாழ்ந்த நிலையிலுள்ளோரைக் கல்வி உயர்ந்தோராகச் செய்யும். எழுதப் படிக்கத் தெரிந்தால் கல்வி, வந்துவிட்டதாகப் பலர் நினைக்கின்றனர். இது சரியான எண்ணமன்று. இறக்கும்வரை கல்வி கற்கலாம். நமக்குள்ள பல முயற்சி காரணமாக எப்போதும் படித்துக்கொண்டே இருக்க முடியவில்லை. "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்பது முன்னோர் கருத்து. முதுமைப் பருவமடைந்தோர் கல்வியைக் கற்க அவகாசம் இல்லாதவர்களாக இருக்கலாம். அவர்கள் கற்றோர் சொல்லும் நூற் பொருள்களைக் கேட்டால் மிகவும் மேலான வழிகளில் செல்வார்கள். மனிதப் பிறவியின் பயன் இன்னது என்பது கல்லாதவர்களுக்குத் தெரியவும் மாட்டாது.

பிள்ளைகளுக்கு நல்லறிவு தரும் நீதி நூல்களையும், ஒழுக்க நூல்களையும், ஊக்கத்தை மிகுக்கும் பல நூல்களையும், நல்லாசிரியரைக் கொண்டு கற்பித்தல் வேண்டும். பிள்ளைகளும் படிப்பதே வேலையாகக் கொண்டு ஊக்கத்தோடு படித்து நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி உழைக்க வேண்டும்.

இதுவரையும் கூறியவற்றால் கல்வி அதிக மேம்பாடுடையது என்பதும், சிறுவர், சிறுமியர் ஆகிய யாவரும் இளம் பருவத்திலே தொடங்கித் தவறாது கல்வி கற்கவேண்டும் என்பதும், கல்வி கற்றால் பெருமையடைந்து நல்லொழுக்கத்தினாலே புகழ் பெறலாம் என்பதும் புலப்படும். இவைகளை நன்கறிந்த பெரியோர்களும்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக"
கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் (திருக்குறள்)
"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" (தேவாரம்)
"கல்லா மூடர் கருத் தறியாரே" (திருமந்திரம்)
"தொடங்குங் காற் றுன்பமா யின்பம் பயக்கும்"
மடங் கொன்றறி வகற்றுங் கல்வி (நீதி வி-ம்)
"கண் ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்று விழி"
(நீதி வெண்பா)

இவ்வித பெருமையுடைய கல்வியைப், பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டிய கடமையாம். ஒரு பிதா தன்னுடைய கோடி திரவியத்தினும் கல்வியே பத்து மடங்கு அதிகமானது என்று எண்ணிப் புத்திரனைக் கல்வியினாலே மேன்மையடையச் செய்தல் வேண்டும். "தந்தை மகற் காற்று நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்றார் திருவள்ளுவரும். கல்வி என்ன பிரயோஜனத்தைத் தருமென்றால் அடக்கம், ஒழுக்கம், திரவியம், அறம், சௌக்கியம் என்பவற்றைச் சிறுவர்கள் பெற்று நல் வாழ்வைப் பெறச் செய்யும். ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பல்லாயிரம் இருக்கின்றன. அவைகளினும் ஒரு சந்திரன் மிக்கப் பிரகாசத்தைத் தருகின்றான். இதுபோல ஒரு குடும்பத்தில் பல பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருள்ளே கற்ற ஒருவன் மட்டும் இருந்தால் அக்குலம் முழுதும் கீர்த்தியடையும். ஆகவே கல்வி [illegible]பதும் கல்வி கற்கும்படி கலாசாலைகளை ஸ்தாபிப்பதும் அரும் புண்ணியச் செயல்களாகும்.

அன்பர்களே! இப் பெருமைவாய்ந்த கல்வியைக் கற்கும்படி உங்களது ஒவ்வொரு குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்பி நல்வழியில் கொண்டு வாருங்கள். நமக்குப் படிப்பு எதற்கு? நம் முன்னோர்களெல்லாம் படித்துக் கொண்டுதான் இருந்தார்களா? படிக்கப் போய்விட்டால் ஆடுமாடுகளை மேய்ப்பது யார்? என்று சொல்லி உங்கள் பிள்ளைகளைக் கெடுத்து விடாதீர்கள் நாமும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள் தாம். நமக்கும் அறிவு உண்டு. சில பெரியோர்கள் சொல்லுவது போல "ஆடுமாடுகளை மேய்த்துப் பால் வியாபாரம் செய்து கொண்டுதான் இருக்கவேண்டும்; அப்படி இருந்தால்தான் நமது குலத்திற்கு இழிவு வராது. படித்துவிட்டால் நமது யாதவகுலத்திற்குப் பெருமை கிடையாது" என்று நினையாமல் உங்களது பிள்ளைகளையாவது எதிர் காலத்தில் அறிவோடு, ஆண்மையோடு, வீர உணர்ச்சியோடு குல முன்னேற்றத்தைக் கருதி உழைக்கும் நன்னிலையிலே ஆக்குவீர்களென்று பலமுறையும் வேண்டிக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனும் அதற்குத் துணை புரிவாரென நம்பி இத்துடன் முடிக்கிறேன்.

---

# ஞான கலா விலாசம்.

(திரு. ஐயன்பெருமாள் கோன்.)

"எல்லாமறிந்தவரும் ஏதுமறியாதவரு மில்லை" உலகில் அநேகர் தாமே எல்லாம் அறிந்தவரென்றும் மற்றையோர் ஏதுமறியாதவரென்றும் மனதில் கர்வங்கொண்டு அகங்கார முடையவராய்ப் பிறரை அவமதிக்கின்றனர். அது பெரும் பேதமையே. வாலறிவனாகிய கடவுள் ஒருவரே முற்றுமுணர்வர் என்றும் அவரது சிருஷ்டிகளாய மாந்தர் அனைவரும் சிற்றறிவினர் என்றும் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றினாலும் மூதறிஞர் நிச்சயித்திருக்கின்றனர். ஆகையால் நாம் எவ்வளவு கற்றிருந்த போதிலும் அவை யெல்லாம் பிடிமண்ணளவுதானென்றும், கல்லாதவை உலகளவென்றுங் கொள்வது அறிஞர் துணிபு. கல்விக்கு அதிதெய்வமாகக் கருதி நம் முன்னோர் தொன்றுதொட்டு வழிபட்டுவரும் கலைமகள் திருக்கரத்தில் சுவடிகள் உள்ளதை ஆராயுமிடத்து அக்கலைமகள் இன்னும் கலைகளில் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகின்றாள் என்பது உசிதமாய் விளங்குகின்றது. ஆதலால் எவ்வெவ் விஷயங்களில் எவரெவர் தேர்ச்சி யடைந்திருக்கின்றாரோ, அவரவரை, அவ்வவ் விஷயங்களில் புகழலும், எவ்வெவ் விஷயத்தில் எவரெவர் அறியாதிருக்கின்றாரோ, அவரவரை, அந்தந்த விஷயத்தில் இகழ்தலும் தக்கதேயன்றிப் பொதுவாக, ஒருவரைப் புகழ்தலும், இகழ்தலும் தகாது. அஃறிணைப் பொருள்களில் ஒன்றாயுள்ள ஊர்க்குருவி கோலினாலும், செத்தைகளாலும் கட்டும் கூண்டைப் போல, மானிடன், எவ்வளவு தேர்ச்சியுள்ளவனாய் இருந்தாலுங்கூடக் கட்ட இயலுமா! கறையான் புற்றுவைப்பது போல் வைக்கவேண்டு மெனச் சிற்பநூல் முழுதும் ஓதியுணர்ந்தாலும் ஆகுமா!. சிலந்தி நூல் நூற்பதுபோல் நூற்க வெண்ணில், எவ்வளவு சாமர்த்தியவானுக்கும் அமையுமா? அமையாது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிதாயிருப்பதும், ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று அருமையாருப்பதும் உலக இயற்கை. இதனால் நாமே யாவற்றிலும் வல்லவரென்று கொள்ளலாகாது என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றது.

எவரையும் அறிவுண்மையால் விவேகி என்றும், அறிவின்மையால் அவிவேகி என்றும் நிச்சயிக்க வேண்டுமேயன்றி, அழகினாலும், ஆடையாபரண அலங்காரத்தினாலும், கெம்பீரத்தினாலும், செல்வத்தினாலும், முதுமையாலும், முற்றுணர்ந்தவ ரென்றும், அவை இல்லாமையினாலே ஒன்றுப், அறியாதவ ரென்றும், எண்ணுதல் எவ்வளவுங் கூடாது. பெரும்பாலும், வெளி மயக்குடையவர் அவிவேகிகளாகவும், இவைகளில் எல்லாம் குறைந்தவர்கள் விவேகிகளாகவும் இருப்பது அனுபவசித்தம். உருவத்தில் மிகப் பெரியதோர் தேரினைச் செலுத்தவல்லது, அதன் உருவத்தில் அனந்தகோடி அமிசத்தில் ஓர் அமிசமும் பெறாத அவ்வளவு சிறிய அச்சாணியல்லவா? ஆதலால் உருவத்தில் மதிப்பது அவமதிப்புக்கே இடமாம். உருவில் சிறியவரா யிருத்தலைக்கண்டு அவமதித்து, அச் சிறுவர்களாலே அவமான மடைந்தவர்களது வரலாற்றை அடியிற்கண்ட சிறு கதைகளால் உணரலாம்.

1. ஓர் இடையர் ஊரில் மாடு மேய்த்துக் கொண்டே கையில் புத்தகத்துடன் வாசித்துக் கொண்டிருக்கும் யாதவகுலச் சிறுவனைச் சகலகலாவல்லப னென்னும் வித்வான் கண்டு, மாடு மேய்க்கும் பையனும் வாசிக்கின்றதா? எனப் பொறாமையோடு கலகல வென்று நகைத்துச் செருக்கினோர், அடா! இடைப்பயலே உனக்கு எல்லா எழுத்துக்களும் தெரியுமோ? என்றான். அதைக் கேட்ட சிறுவன், இவன் மகா அகங்காரி என உணர்ந்து, 'ஐயா! அடியேனுக்கு ஒரே ஒரு எழுத்துதான் தெரியவில்லை; இதற்கு என்ன பெயர், தயை செய்து தேவரீர் தெரிவித்தருளல் வேண்டும்' என்று தன் கையிலிருந்த கோலினால் தரையில் தோன்றியவண்ணம் கிழித்தான். அதுகண்ட வித்வான் தான் கற்றுள்ள சகல பாஷைகளின் எழுத்துக்களை எல்லாம், ஒவ்வொன்றாய் ஞாபகப்படுத்தி வெகு நேரமட்டும் அப் பையன் கீறிய கீற்றுக்கு ஒப்பிட்டுப் பார்த்தும், ஒன்றும் புலப்படாமல், ஆலோசித்துக் கொண்டிருக்கும் போது, அச் சிறான் ஐயா! வித்வசிகாமணியே! கையால் எழுதிய எழுத்துக் கையெழுத்தல்லவா? அதுபோல, கோலினால் எழுதிய எழுத்துக் கோலெழுத்தல்லவா? என்றான். அது கேட்டு வித்வான் மதிமோசம் போனேனே, இருப்புப் பாரைக்குநெக்கு விடாப் பாறை பசு மரத்தின் வேருக்கு நெக்குவிடும் என்ற ஔவையார் அமுத வாக்கிற்கு யானே இலக்காகினேன் என்று வெட்கித் திரும்பினன்.



2. ஒரு கிராமத்தின் அயலில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கையில், அவ்வழியே செல்லும், வித்வான் ஒருவர், அடா! பயல்காள்! உங்களூர் இங்கிருந்து எத்தனை மைல்கள் இருக்கும்? என்று கேட்டார். இதற்கு அப் பிள்ளைகளில் ஒருவன் அவருடைய செருக்கை அறிந்து அதனை அடக்க வேண்டுமென்று கருதி, நகைத்து, ஐயா! பால்மண மாறாத வாயினையுடைய நாங்கள் இவ்விடத்தில் விளையாடிக்கொண் டிருப்பதனாலேயே, எங்களூர் அதிசமீபத்திலிருப்பதாகத் தாங்கள் தெரிந்துகொள்ளக் கூடாதா? என்றான். அதுகேட்ட வித்வான் நாணமுற்று இவ்வளவு சிறியோரிடத்து நாம் அவமானமடையும் வண்ணம் நேரிட்டதே, இதனை முன்னுணர்ந்தன்றோ நம் வள்ளுவப் பெருந்தகையும், ஒரு சொல்லைச் சொல்லும் போதும் வேறு சொல் அச் சொல்லை வெல்லக் கூடாமை அறிந்து சொல்ல வேண்டும் என்னும் பொருள்பட,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து"

எனக் கூறியுள்ளார், எனப் பலவாறு யோசித்துத் திரும்பினர்.

ஆகையால் இவ்விஷயங்களுக்குத் தலைப்பாக அமைக்கப்பட்டிருக்கும் "எல்லா மறிந்தவரும் ஏதுமறியாதவருமில்லை" எனும் தாயுமானவருடைய தெய்வ வாக்கின் உண்மையை மேற்கண்ட திருட்டாந்தங்களால் யாவரும் உணரலாம்.

---

## ஒரு வேண்டுகோள்.

வியாசங்கள் எழுத விரும்புவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன் தூஷணை பிறதூஷணை துரைத்தன விரோதம் முதலியனவின்றியும் ஜனங்கள் விரும்பக் கூடியனவாகவும் எழுதவேண்டும்.

# ரங்கநாயகியின் எதிர் நிரூபம்.

(திரு. C. ராஜரத்தினம்)

(முன் பாகத்தின் தொடர்ச்சி)

முற்காலத்தில் ஜீவகாருண்ணியம், பரோபகாரம், ஈகை, இரக்கம், தயாளகுணம் முதலிய நற்குணங்கள் நம்மிடையே மலிந்து கிடந்தன வென்றும் பல நூல்களிலும் நாம் வாசித்திருக்கிறோம். ஆனால் இப்பொழுதோ ஜீவகாருண்ணியம், ஜீவஹிம்சையாய் மாறிற்று, ஆட்டு மந்தையை ரக்ஷிப்பது போக அவைகளை பக்ஷிப்பிக்க ஆரம்பித்தனர். அஹிம்சா தர்மம், ஹிம்சா தர்மமாயிற்று என்ற இவ்வித பல விஷயங்கள் என் மனத்துப் புகுந்து அதிக துன்பத்தை உண்டுபண்ணுகிறது.

ஒரு காலத்தில் இவர் தாமே கை நிறையக் கொண்டுவந்த பொருளைச் செலவழித்து மகிழ்ந்ததும் நாமன்றோ; அப்பொழுது அன்னவரைப் புகழ்ந்ததும் இந்நாவன்றோ, இந்நாவினாலே இகழ்வதாகாது என்று இவ்வித தேறுதல் கூறி என் மனதை திருப்தி செய்து கொள்வது வழக்கம். பெண்கள் தமது இனிய குரலால் ஆடவர்களது மனதைத் தம்மிஷ்டம்போல் நடக்கச் செய்யலாம். நீங்கள் கூறினவாறே அவர் சாவதானமாய் இருக்கும் வேளையில் சென்று புகழ்மொழிகள் பலவற்றைக்கூறி, நாள்தோறும் பாதகமே செய்வதால் நேரும் கெடுதல்களையும், இத்தொழில் நம் யாதவ மக்கள் ஒருவரேனும் கொண்டொழுகாத தொழில் ஆகையால் அதை அறவே ஒழிக்கவேண்டும் என்றும் சொன்னால் உடனே என்னை நன்கு புடைத்து இன்னும் மறுமுறை கூறுவாயேல் என் கத்திக்கு இரையாக்குவேன் என்கிறார்.

பொறுமையே பூஷணமாகக் கொண்ட அவர் முன்கோபியாயும், இரக்க சித்தமுடையவர், சற்றேனும் இரக்கமில்லாமல் முரட்டுத் தனத்தைக் காண்பிப்பதும், ஒரு வேளை நான் சொல்லும்போது, அவர் முன்னிருந்த செல்வாக்குக்கும் தற்போது இருக்கும் இழிவுக்கும் காரணம், தம்முடைய மனைவியே என்று எண்ணி தன்னறிவில்லாமல் செய்கிறாரோ அல்லது அவர்கொண்ட தொழில் அவரை முரடனாக்கினதோ என்றும் எண்ணும்படி இருக்கிறது.



அங்ஙனமிருப்பினும் "பயிரிடைப் புற்களைந்து நெற்பயன் கொள்ளு மொருவன் போல்", நான் அதை யெல்லாம் பொருட்படுத்தாது மிக்க வணக்க ஒடுக்கமாய் நடந்து வருகிறேன்.

தாங்கொணா வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கை போல் வீரம் குன்றும் விருந்தினர்க் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சம் புல்லருக் கிணக்கஞ் செய்யும்
ஓங்கிய வறிவுகுன்று முலகெலாம் பழிக்குந் தானே.

என்பதுபோல இவ்வறுமை அவருடைய வீரம், அறிவு முதலியவற்றைப் போக்கி அற்பர்களோடு கூட்டுறவுண்டாகும்படியும் செய்துவிட்டது, என் செய்வது. இதற்கு என் தலைவிதியை நோவாது வேறு யாரை நோவது?

இப்பொழுது என்னுடைய நாயகனது நிலைமையை ஒருவாறு சொல்லிமுடித்து விட்டேன். இனிமேல் என் வீட்டு வேலைகளைக் குறித்துச் சிறிது சொல்லத் துணிகிறேன்.

நகரத்தில் வளர்ந்து வந்த எனக்கு இந் நாட்டுப்புறத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்று இருந்ததோ என் ஊழ்வினை. ஏ ஜகதீசா! ஆபத் பாந்தவா! அனாதரக்ஷகா! ஏழை படும்பாட்டை நீயறியாயோ? அக்கா சொல்லுகிறேன் கேள். காலையில் எழுந்த உடன் மாட்டுக்கொட்டத்தைச் சுத்தி செய்ய வேண்டும். பிறகு தான் என் கணவருக்கு வேண்டும் உபசரணைகள் செய்ய முடியும். இப்பொழுது என் மாமிக்கு வயது எழுபது ஆகிறது, இரவில் நன்கு தூங்குவதில்லை. ஆகையால் வெள்ளி உதயமாவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே வந்து என் அறைக் கதவைத் தட்டிக்கொண்டு ஏசுவதற்கு ஆரம்பித்து விடுவாள். பின் வேலைகள் செய்யும்பொழுது ஏதாகிலும் சிறிது தாமதித்துவிடில், உடனே "என்னடி? உன்னுடைய மினுக்கித்தனமெல்லாம் இங்கு நடவாது; அதெல்லாம் உன் வீட்டில் வைத்துக்கொள். ஏதோ பிள்ளையாண்டான் சும்மா இருப்பதுதான் இவளுக்கு இவ்வளவு ஆண்மை; அவன் வரட்டும், உன் முதுகுத்தோலை உரிக்கச் சொல்லுகிறேன் என்கிறார்கள். ஏதோ, நான் செய்த நோன்போ, அல்லது என் மூதாதையர் செய்த தவமோ, என் பெரியார் எனக் கனுக்கிரகித்த நன்மையோ, என் மாமனார் முன்னதாகவே ஐயன் அடி நிழலைச் சார்ந்தார். இல்லாவிடில் இக் கிழவிக்கும் அக் கிழவனுக்கும் பதில் சொல்லி முடியாது.

நிற்க என்னுடைய ஓய்வு நேரங்களில் ஏதாவது சில வார்த்தைகள் படிப்போம் என்று திங்கள்தோறும் நம் வீடு நோக்கி வரும், யாதவமித்திரனை எடுத்து வாசிப்பதை என் மாமி பார்ப்பார்களாகில் அன்றையதினமே என்னைத் தொலைத்துவிடுவாள். "இது என்னடா அதிசயமாய் இருக்கிறது, பி. ஏ. பரீக்ஷை தேறின முண்டங்கள் எல்லாம் வீட்டிலே குந்திகினு இருக்கிறது. இவள் என்னவென்றால் படித்துச் சம்பாதிக்கப் போகிறாளோ? அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்குஎன நாம் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். எனக்கும் இவ்வளவு வயதாச்சு அந்த அரி என்ற எழுத்தை என் கண் கொண்டும் பார்த்துமிரேன். இப்பொழுது என்ன நாகரிகம் என்றால் பெண்களைப் படிக்கவிட்டு மாடுபோல் வெளியில் திரியவிட வேண்டுமாம்". என்று சொல்லுவார்கள். பின் காலையில் மஞ்சள் தேய்த்து முழுகி, தலையை சிக்கறுத்து முடித்து, நெற்றியில் திலகமும் இடுவதைப் பார்த்தால், "இவள் வேசைகள் அலங்காரம் செய்வதுபோல் செய்கிறாளே" என்பார். இங்ஙனம் பேசியதிலிருந்து நான் முழுகுவது, தலைவாரி முடிப்பது, திலகமிடுவது முதலியவற்றை அறவே நீக்கிவிட்டேன். இப்படி இருப்போம் என்றால் எனது கணவர் மாலை வெளியில் போய் வந்தவுடன் என்னைப்பார்த்து மிருகங்களில் தாழ்வானது பன்றியன்றோ அதுவும் தன் உடலைச் சேற்றிலேனும் அனுதினம் நனைத்துக் கொள்கிறது. இந்த மிருகத்தின் திரேகத்தில் தண்ணீர் பட்டு வருடம் ஐந்து இருக்கும், இவளைக் கல்யாணம் செய்ததைவிட ஒரு கழுதையைக் கொண்டுவந்தால் எவ்வளவோ நலமாய் இருக்கும் என்பார். இவ்விதமாக நான் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கிறேன்.

எனக்கு இவ்வித துன்பங்கள் போதாதென்று இரண்டு நாத்திமார்கள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் ஒரு வேளை அவர்களுடைய பெயரை மறந்துபோய் இருக்கலாம். ஆகையால் அதை ஞாபகமூட்டுகிறேன். சுடலாயி, ராக்காயி. ராக்காயிதான் இளையவள். சுடலாயி பால்யத்திலேயே விதவையாயினள் என்பதையும் நீ யறிவாய். இவ்விருவர்க்கும் என்னைப் பார்த்தால் அவ்விடத்திலேயே கொன்று தின்றுவிடுவது போல் பார்ப்பார்கள். இதற்கு யாது காரணமோ அறிகிலேன். அவர்களில் சுடலாயியை என் சீரிய தொண்டினால் எவ்வளவோ திருப்தி செய்தும் அவை யெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் ஆயிற்று. வீட்-



டிற்குச் சுத்தஜலம் கொண்டுவர ஆற்றங்கரைக்குச் செல்லவேண்டும். அங்ஙனம் ஒரு நாள் தண்ணீர் கொண்டு வருகையில், வீட்டு வாயிலில் என் மாமி கோபத்தோடு நிற்கக் கண்டேன். நான் உள்ளே வந்ததும் என் கணவர் ஓடிவந்து என்னைப் புறட்டிக் கீழேயிட்டு நன்றாய்ப் புடைத்து விட்டார். யாது காரணமோ யானறியேன். பின் சில தினங்களுக்குப் பிறகு என் இளைய நாத்தனார் சொல்ல நான் அறிந்து கொண்டேன். அதாவது அன்றையதினம் ஜலம் கொண்டுவரச் சென்றிருந்த போது சுடலாயி என்னை மறைவாய் நின்று கவனித்ததில் என்மீது வேற்று எண்ணம் கொண்டு அதனை என் கணவரிடமும், மாமியிடமும் சொல்ல, அதுதான் அன்றைய தினம் நான் அடைந்த துன்பத்திற்குக் காரணம்.

"குண்டுணி யிருந்திடிற் கோள்கள் மிஞ்சிடும்
பெண்டுக ளிருந்திடிற் பெரிய சண்டையாம்"

என்பது என் விஷயத்தில் பொய்யாகவில்லை.

மேலும் உங்களுடைய நிரூபத்தில் கற்பைக் குறித்துச்சொல்லும்பொழுது, பெண்களை மட்டும் கவனிக்கின்றீர்களே யன்றி புருஷரைப் புறக்கணித்து விட்டிருக்கிறது. பெண்களெல்லாம் சீதைகளாகவும், சந்திரமதிகளாகவும், தமயந்திகளாகவும் இருக்கவேண்டும். ஆனால் புருஷர்கள் எல்லாம் ராமர்களாகவும், அரிச்சந்திரர்களாகவும், நளராகவும் இருக்கவேண்டுமென்று கூறுவதைக் காணோம். நான் இப்போது கூறவந்தது என்னவெனில் பெண்கள் மற்றொரு புருஷனை நேசியாது இருப்பது கற்பென்பது போல, புருஷர்களும் ஏகபத்தினியோடிருப்பதே அவர்களுடைய முறையாகும். ஆடவர்கள் தன் மனைவியைத் தவிர்த்து மற்றொரு மங்கையைக் கவர எண்ணுவதால் எண்ணிறந்த துன்பங்களுக் கிரையாகின்றனர். தேவர்களைத் தோற்பித்து இந்திரனைச் சிறையில் வைத்து இந்திரபோகத்தை அனுபவித்த இலங்கையிலே செங்கோல் செலுத்திய ஈஸ்வரனுக்கு, பிரதி ஈஸ்வரனான இராவணேஸ்வரன் அழிந்ததும் ஒரு பெண்ணாலன்றோ. இந்திரன் ஆயிரம் கண்ணடைந்ததும் ஒரு பெண்ணாலன்றோ, இன்னும் இவ்வுலகில் நடக்கின்ற அனேகம் கொலை, சண்டை முதலியனவும் முற்கூறிய ஆடவர்கள் தங்கள் மனோ நிலைமையைக் காப்பாற்றாத காரணமென்பது திண்ணமன்றோ.

இது இவ்வாறு நிற்க. நாம் மணவினை செய்வது புத்திர பேறடைவதற்கல்லவா. அவ்விதம் நம்மவரே சந்தான விர்த்திக்குக் காரண மாகிறோம். மனைவி, புருஷனிடமிருந்து புத்திரப்பேற்றை அடைகிறாள். ஆனால் உலகில் அவ்விதம் அடைந்த புதல்வரில், எத்தனை பேர்களோ நல்ல புத்தி சாதுர்யம், சாமர்த்தியம், வீரம், ஒழுக்கம் முதலிய நற்குணங்களோடு புவியில் அவதார புருஷராயும், மற்றும் பலவிதத்திலும் தோன்றுகிறார்கள். பின்னும் சிலர் மூடர்களாயும், அறிவே சற்றும் இல்லாமலும் அவதரிக்கிறார்கள். இவைகளுக்குக் காரணம் தாயானவள் தன் கணவரிடம் நடந்து கொள்ளும் மனோ பாவனையைப் போலாகும் என்றும், உவமையாக. அம்பிகை, அம்பாலிகை சந்தனுவம்சம் அற்றுப்போகாமல் இருப்பதற்காக வியாசமுனிவரது அனுக்கிரகம்பெற்ற பொழுது அம்பிகை கண்ணை மூடியதுபற்றி அந்தகனாகிய பிள்ளையை அடைந்ததும் (திருதராஷ்டிரன்) அம்பாலிகை முனிவரது தரிசனத்தால் வெட்கம் அடைந்து தன் வெள்ளை வஸ்திரத்தால் தன் திரேகத்தை மூடிக்கொண்டது பற்றி, உடம்பெல்லாம் வெளுத்த ஒரு தனயனை யடைந்ததும் (பாண்டு), அம்பிகையினுடைய தோழி அங்ஙனமொன்றும் செய்யாமல் முனிசிரேஷ்டரின் கிருபா கடாட்சத்தை அடைந்ததால் நற்குணசிலனை ஓர் புதல்வனை ஈன்றதும் (விதுரர்) பெண்கள் கணவரிடத்து நடந்துகொள்வது போலேயாம்" என்று நமது தாய் சொல்லக்கேட்டிருக்கின்றோம் அல்லவா! அவ்விதமே, அவர் எங்ஙனம் நடந்து கொண்டபோதிலும் நான் பின் வருவனவற்றை முன் ஆராய்ந்து பெண்களுக்குகந்த ஒழுக்க வழக்கப்படி நடந்து வருகிறேன்.

அக்காள்! நான் கூறவந்தது ஒருவாறு முடிந்து விட்டது. எனினும் நான் என் கணவர், மாமனார், மாமி, நாத்தனார் முதலியோரை இழிவாகவோ, அல்லது ஏளனம் செய்ததாகவோ நீ நினைத்துக்கொள்ள வேண்டாம். அவைகள் எல்லாம் துன்பத்தை விவரிக்கையில் அவைகளைக் கூறாது விடுக்க இயலவில்லை. மேலும் இப்பொழுது நமது "யாதவ மித்திரனை" நான் வாசிக்கக் கேட்பதாலும் மாமி நாத்தனார் முதலியோர் முன்போலில்லை. ஏதோ சிறிது பக்ஷமாய்த்தான் இருக்கிறார்கள். என் ஆருயிர் பர்த்தாவையும் நமது மித்திரன் சீர்படுத்திக் கொண்டே வருவதையும் நான் நன்கு ஓர்ந்து



மாதுலனாகிய மேதுல னாகியும்
வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலை பொழி பாலொடு
போதரவுண்ட புயல் வண்ணா
மாதவ, யாதவ, வாசவ, கேசவ
மாயா, ஆயா, மதுஸூதா
ஆதியு மந்தமு மாகிய நின் புகழ்
அல்லா துரையே னடி யேனே.

என அவர் புகழைப் பாடி அன்னவரை முன்போல் நற்குண, நற்சிலனாகச் செய்யும்படி அவனடிக் கமலங்களை இறைஞ்சுகிறேன். மேலும் நமது தலைவனார் மகா-ா-ா-ஸ்ரீ. R. முத்துரத்தினம் அவர்கள் இங்கு வரும்பொழுது பக்தவிஜயமும், பதிவிரதைகளின் சரிதையும் வாங்கி அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். வேறு விசேடம் ஒன்றுமில்லை. இங்ஙனம், உன் அன்பார்ந்த சகோதரி

ரங்கநாயகி,

---

## நமது சந்தா நேயர்களுக்கு ஒரு விசேட அறிக்கை.

1931-ம் வருஷம் ஜனவரி௴ முதல் தேதியிலிருந்து வி. பி-யில் அனுப்பப்படும் கடிதங்கள், பார்சல்கள், புத்தகப் பத்திரிகைகள் அவை அனுப்பப்பட்ட அல்லது அவற்றைத் தருவித்தவர்களுக்கு அனுப்பப்பட்ட அல்லது அவற்றைத் தருவித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டபின் மூன்று நாட்களுக்கு மேல் தபாலாபீஸில் வைத்திருக்க முடியாதென்றும் அப்படி வைத்திருக்க விரும்புவோர் அதற்கு நாள் ஒன்றுக்கு இரண்டணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி மனுச் செய்துகொள்ள வேண்டுமென்றும் 10 நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாதென்றும் மனுச்செய்து கொள்ளாவிட்டால் சாமான்களை நான்காவது தினமே அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பிவிடப்படுமென்றும் தபால் இலாகா டைரக்டர் ஜனரல் அறிவித்திருக்கிறார்கள். இவ்வுத்தரவை ஞாபகத்திற்கொண்டு தங்களுக்கு இன்டிமேஷன் (தபால்) வீ. பி. வந்திருக்கிறதென்று தகவல் கிடைத்ததினமே அல்லது 3 நாட்களுக்குள்ளாகவே வீ. பி. யைப் பெற்றுக்கொண்டு விடவேண்டுமெனக் கோருகிறோம். இப்படி இருப்பதனால் பத்திரிகைச் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பி மித்திரனை ஆதரிக்க விரும்புகிறோம்.

மானேஜர்.

| | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| தொகுதி-2. பகுதி-4. | 119 | 16 | மகனுக்கு | மகளுக்கு |

# வள்ளல்பாரி.

## பாவலர் விருந்து.

( திரு. காந்திதாசன். )

(44ம் பக்கம் தொடர்ச்சி)

அன்பே ஆபரணமாகவும், அறஞ்செய்தலே வெற்றிமாலையாகவும், சாந்தம், பொறுமை, தயை, கருணை ஆகிய இவைகளே நால்வகைச் சேனையாகவும், இன்மொழியே ஆக்ஞை சக்கரமாகவும், புன்முறுவலே அரணாகவும், பிறருக்கு ஹிதம்புரிதலே வில்லாகவும், தனது ஆளுகைக்குட்பட்ட பிரஜைகளைப் பாதுகாத்தலே அம்பாகவும், பிறர் துன்பங்கண்டு [illegible]தலே கீர்த்தியாகவும் கொண்டு பறம்பு [illegible]யாளும் பாரி வேந்தன் ஆட்சியில் ஏழையென்பார்களும் பசியால் வருந்துபவர்களும் பிணியால் துன்புறுவோர்களும் இல்லை எனலாம். கல்வியில்லா மக்களைக் காண்பதே அரிது. ஆண்மக்களன்றிப் பெண் மக்களும் கல்வி கற்றுத் தேர்ந்து சிறந்த பண்டிதைகளாகப் பிரகாசித்தார்கள். ஆண் புலவர்களன்றிப் பெண் புலவர்களும் அவனது அவைக்களத்துப் புலவர்களாக அமர்ந்து மன்னவன் சபை விளக்கமுறும்படி விளங்கினார்கள். பண்டிதர்களிடத்திலிருக்கும் பிரமையைக் காட்டிலும் பண்டிதைகளிடத்திலிருக்கும் மனப்பூர்வமான பிரமைகாந்தத்தினால் பறம்பு நாடு என்னாட்டிலும் சிறந்த நன்னாடாகிப் பொன்னாடும் போற்றிப்புகழப் பிரகாசிக்கும்படி செய்தான். பண்டிதர் பண்டிதைகளைத் தமது இரு கண்ணும் உயிருமென மதித்து அன்புடன் ஆதரித்து வந்தான். சிறந்த கவியரசிகளும் கவிராஜர்களும் சூழப் பாராளு மன்றத்திலிருந்து பன்னூற்கேள்விப் பயனுகர்வதில் இடைவிடாத ஆவலதிகங்கொண்டிருந்தான் பாரி மன்னன்.

கற்றோர், கல்லார், மேலோர், கீழோரெனப் பாகுபாடு பாராட்டாப் பாரி மன்னனிடத்தில், பரிசு பெற்று வாழாப் பாவலர்கள் அக் காலத்திலில்லை எனக் கூறுவது மிகையாகாது. அவனிடம் பரிசு பெற வரும் பாவலர் யாவரும் பரிசில் பெற்ற பின்பு சிறிது நேரமாவது அங்கு தங்குவதற்கு மனஞ் சம்மதிப்பதில்லை. ஏனெனில் தமது மனைவிமக்களைப் பிரிந்து வாழ



மனமில்லாமையாலேயே தம்மூர்கட்குப் புறப்பட்டுப்போக ஆயத்தப்படுவார்கள். பாரி மன்னனுக்கோ தன்பால் வந்த கவிவல்லோர் யாவராயினும், வெகு நாள்வரை தன்னுடனுறையவேண்டுமென்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. அவ்வெண்ணத்தினால் தன்னை விட்டுப் பிரியும் கவிவல்லோர்களைத்தடுக்க என்ன செய்யலாம் என ஆலோசித்து, முடிவில் வழிப்பறி செய்தேனும் தன்பால் வசிக்கச் செய்யவேண்டும், என எண்ணி வழிப்பறி செய்ய மனந்துணிந்தான். அதனாலவன் சிறந்த புலவர்கள் யாரேனும் வரின் அன்னவர்கட்கு வேண்டிய உபகாரம் புரிந்து, அன்பால் பலநாளும் தன்பால் வசித்திருக்க வேண்டுமென்று பன்முறை வேண்டுவான். அங்ஙனம் வேண்டியும் புலவர்கள் ஊருக்குச் செல்லவேண்டும், மனைவி மக்கள் பசியால் வருந்துவார்கள், எனத் தங்குறைபாடுகளைக் கூறினால், உமது மனைவி, மக்கள், சுற்றத்தார்கட்கு வேண்டிய பொருள்கள் யாவும் நும்மூர்க்குக் கொடுத்தனுப்புகின்றேன். நீவிர் இங்கு சில நாள் தங்கியிருப்பீர் என மீண்டும் மீண்டும் வேண்டுவான். "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்" என்ற ஆன்றோரின் அமுதவாக்குக்கோ ரணிகலமான புலவர் பெருமக்கள் வேண்டுவனவற்றை விரும்பிய வண்ணம் ஏவலாளர் மூலம் கொடுத்தனுப்புவான். கொடுத்தனுப்புவதைப் பெற்றுக் கொண்டதற்கும், சுகமாகவே இருக்கின்றோமென்பதற்கும் தெரிவிக்கும்படியாய் ஏவலாளரை, அவர்களிடமிருந்து க்ஷேமசமாச்சாரக் கடிதங்கள், சீட்டுக்கள், வாங்கிவரும்படி செய்து அதைப் பாவலர்கட்குப் பரிவுடன் தெரிவிப்பான் பாரி வேந்தன்.

அப்படித்தெரிவித்தும் புலவர்கள் இணங்காது விடைகேட்கின், முன் மனைவி மக்கட்குக் கொடுத்தனுப்பிய பரிசில் போதாதெனப் புலவர் குழாம் விரும்பிய வண்ணம் மீண்டும் பரிசில் கொடுத்து அனுப்பிவிடுவான். பின் அவர்கள் செல்லுந்திசைக்குத் தன் ஏவலாளரை அனுப்பி அப் புலவர்களை ஒரு தீங்குஞ் செய்யாமல் இன்மொழி கூறிப் பொருளைமட்டும் பறித்துவரச் சொல்வான்.

## செங்கோல் வேந்தன் திருவிளையாடல்.

பாரியின் உத்தரவைத் தலைமேற்றாங்கி, ஏவலாளர்கள் ஓட்டமும் நடையுமாகச் சென்று, புலவர்களை வருத்தாமல் பொருளைப் பறித்துக் கொண்டுவந்து, பாரியினிடம் கொடுத்துவிடுவார்கள்.

பாரியோ தாமளித்த பொருள்களைப் புலவர்களிடமிருந்து ஏவலாளர்கள் இன்மொழி புகன்று பறித்துவந்த செய்தி கேட்டுப் பாவலர்கள் இனித் திரும்பிவந்து விடுவார்கள், நாம் இன்னுஞ் சில காலம் அவர்களுடன் இன்பமாக வசிக்கலாம் என்று எல்லையற்ற பேருவகையுற்றுப் பேரின்பக்கடலி லாழ்ந்தவனாக விருப்பான் அவனடையும் ஆநந்தம் அளவிட்டுக்கூற முடியாதெனவே இயம்பலாம். பரிசு பெற்றுச் சென்ற பாவலர்கள் பாரியின் ஏவலால் பரிசெலாம் பறிக்கப் பெற்ற உண்மை யறியாது, ஆறலைக் கள்வர் அபகரித்துச் சென்றனரென மனங்கலங்கி இத்துணை நாளிருந்தும், கையிற் பொருளின்றி வறிதே மனைக்குச் செல்வது எவ்வண்ணமென நினைந்து நினைந்து, நெக்கு நெக்கென நெஞ்சமுருகி, நமது மன்னனிடஞ் சென்று, குறையிரந்தால் வள்ளற்பிரான் மகிழ்ந்தளிப்பானென்று மீண்டும் பாரியின்பால் வந்து உற்றது கூறுவர்.

இவ்வண்ணங் கூறக்கேட்ட பாரியானவன், ஒன்றுமறியாதவன் போல துடிதுடித்து, "ஆ! இவ்விதஞ் செய்தவர் யாவர்? ஓ! இதுகாறும் இச்செயல் நமது நாட்டில் நடந்ததில்லையே! இதனை நன்கு விசாரித்துத் தக்க தண்டனை விதிக்கின்றேன்", எனக் கடுஞ் சினத்துடன் கூறுவான் போன்று கூறி உடனே சினம் மாறிப் புலவர்கட்கு இதமாகப் பேசி, தன்னிடமே புலவர்களை வசிக்கச் செய்து, பறித்துவந்த பொருள்களை அவரவர்களது மனைவிமக்கட்கே கொடுத்துவரும்படியாகத் தன் ஏவலாளரை எடுத்துப் போகச் செய்வான். பின் புலவர்கள் இழந்த பொருளைப்பற்றி இன்று விசாரிப்போம், நாளை விசாரிப்போம், எனவும் சிலரை அழைத்து வினவியும் இவ்வாறு நாளைக் கடத்திவருவான்.

பரிசு பெற்ற பொருளைப் பறி கொடுத்த புலவர்களும் 'இனி என் செய்வது எப்படியும் பொருள் வாங்கிக் கொண்டுதான் ஊருக்குப் போகவேண்டும்' என்ற எண்ணத்துடன் சில நாள் இவனிடத்திலேயே வசிப்பார்கள். பாரி பின் மனமகிழ்ந்து, புலவர்களையழைத்து, களவுபோன பொருள் வந்ததென்று கூறியோ, அல்லது நானே அப் பொருள் முழுமையும் கொடுக்கின்றேனென்று கூறியோ, மீண்டும் இவர்களுக்குப் பொருள் கொடுத்து, ஏவலாளர் துணையுடன் அவர்களூருக்கு அனுப்பி க்ஷேமமாகச் சென்று, நீண்ட நாள் தங்காமல் விரைந்து வருவீர்களெனக் கூறி, வழி



யனுப்புவான். இதுவே அவன் வழக்கமாக இருந்து வந்தது. "இனியவ ரென் சொல்லினும் இன் சொல்லே" என்பது போல அன்புடைய பாரி வழிப்பறி செய்வதும் புலவர்களுக்கு இனிமையாகவே இருந்தது. இதுபற்றியே கவிராஜேஸ்வரி, ஔவைப் பிராட்டியாரும் "பாரி பறித்த பறியும் பழையனூர்க்-காரி கொடுத்த களைக் கொட்டும்-சேரமான்-வாராயென வழைத்த வாய்மையு மிம்மூன்றும்· நீலச்சிற் றாடைக்கு நேர்", என ஒரு பெண் தனக்குச் சிற்றாடை கொடுத்துதவிய அன்பைச் சிறப்பிக்குமிடத்து இவைகளை உவமையாகக் கூறிப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

(தொடரும்)

---

# பத்திரிகாபிமானமும் யாதவரும்.

(திரு. கோ. சௌரிராஜன்.)

---

இப் பரந்த உலகில் அரிதரிது எனப் போற்றப் பிறந்த மானிடர்க்கு உண்ண உணவும் உடுத்த ஆடையும் எப்படி அத்தியாவசியமோ அதேபோல மக்கள் அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும், அரசியல் முன்னேற்றத்திற்கும் பத்திரிகை படிப்பது பெரிதும் அவசிய மென்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை. ஒரு நாட்டு மக்களின் கல்வி, ஆசாரம், மதம் முதலியவைகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பத்திரிகைகளே தகுந்த சாதனங்களா யிருக்கின்றன வென்பதை மேம்பாடு பெற்ற நாடுகளின் சரித்திரங்களைக் கொண்டும் அனுபவங்களைக் கொண்டும் நன்கு அறியலாம்.

பத்திரிகைகளே, மக்களின் நாட்டு வளப்பமறியாத கிணற்றுத் தவளைத் தன்மையைப் போக்கி உலகில் அறிஞர்களாகத் திகழச் செய்கிறது. மாந்தர்கள் பத்திரிகைகளின் மூலமே பண்டிதர்களின் அரும் பெரும் ஆராய்ச்சிகளையும், அபிப்பிராயங்களையும், உலகத்தில் பல தேசங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அரசியல் சம்பந்தமான விஷயங்களையும் அறிந்துகொள்ள முடியும். மக்களிடை தேசாபிமான உணர்ச்சி எழுப்பப்பட வேண்டுமானால் பத்திரிகாபிமானம் ஒவ்வொருவர்பாலும் ஏற்படவேண்டும். விரித்துக்கூறின்

மானிடராக அவதரித்த ஒவ்வொருவரும் பத்திரிகை படித்தலைத் தங்கள் தினசரி வாழ்க்கையில் பிறவிக் கடனெனக் கொள்ள வேண்டும். அத்தோடு நாம் படிக்கவேண்டிய பத்திரிகைகள் சாதாரணத் தொழில் முறையில் நடத்தப் படுபவைகளாயும், பொருள் பறிக்கும் நோக்கம் ஒன்றுகொண்டு வெளிவந் துலவுபவைகளாயும் இராமல் மக்கள் முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், முதலிய சீரிய நோக்கங்களைக்கொண்டு வெளிவருபவைகளாகவே இருக்கவேண்டும். அத்தகைய பத்திரிகைகளை ஆதரித்தலே அறிவுடைமை.

தற்கால உலக சரித்திரத்தில் பிறநாடுகளைக் காட்டிலும் நாகரிகம், கல்வி, செல்வம், ஆராய்ச்சி முதலிய எல்லாத் துறைகளிலும் மேம்பாடு பெற்றிருக்கும் இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்கள் இந்நிலை எய்தியதன் காரணம் அந்நாட்டின் பத்திரிகை வளர்ச்சியேயாகும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அந் நாட்டுவாசிகள் பண்டிதர் முதல் பாமரர்வரை, தொண்டமான் முதல் தோட்டிவரை, பத்திரிகை படித்தலைத் தங்கள் நித்திய கருமங்களில் ஒன்றெனக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தே அவர்களின் பத்திரிகாபிமானத்தின் பெருமையும், தன்மையும் நன்கு விளங்குகிறதல்லவா? இன்று இங்கிலாந்தில் வெளியாகும் பத்திரிகைகள் சுமார் 2300 எனக் கணக்கிடப் பட்டிருக்கின்றது. அந்நாட்டு ஜனத் தொகை $4\frac{1}{2}$ கோடியே யாகும்.

ஆனால் முப்பத்துமுக்கோடி மக்களைக்கொண்ட நம் பரத கண்டத்தையும் பத்திரிகையையும் கணக்கிட்டால் மிக மிகக் கேவலமாக இருப்பது கண்கூடு. இதற்குக் காரணம் நம் நாட்டு மக்களின் கல்விக் குறைவும், அசிரத்தையும் பத்திரிகைகளின் உபயோகத்தை அறியாது அலட்சியம் செய்வதுமே யாகும்.

இதுதான் இப்படி யிருக்கிறதென்றால் இந்தியாவில் ஆங்காங்கே உள்ள பெரும் ஜனத்தொகையைக் கொண்ட எமது" யாதவ சமூகத்தின் பத்திரிகாபிமானத்தைப்பற்றி எழுதப்புகின் எழுதுகோல் நகரேன் என்கிறது. அந்தோ! மனமும் திடுக்கிடுகிறது. என் சமூகத்தாரிடம் பத்திரிகை என்றால் என்ன, பத்திரிகாபிமானம் என்றால் என்ன என்று கேட்டால் அது எப்படியிருக்குமென்று கேட்கக்கூடிய அத்தகைய நிலையிலிருப்பதை யான் வெளி



யிட வெட்கப்படுவதினாலும், வருத்தப்படுவதினாலும் ஆவதொன்றுமில்லை. சுருங்கச் சொல்லின் நம்மவர்பால் பத்திரிகாபிமானமென்பது முயற் கொம்பாகவே இருக்கின்றது.

இச் சமூகத்தின் இந்நிலையைக் கண்டு எந்தச் சமூக நலங்கோரும் வீரரும் எந்த மக்கள் முன்னேற்றங்கருதும் மானிடரும் வருந்தாமலிருக்க முடியுமா? இத்தகைய சமூகத்தின் மேம்பாட்டையுன்னி அல்லும் பகலும் உழைத்து நம்மவர்க்குப் பத்திரிகாபிமான அறிவுச் சுடர் விளக்கேற்ற அவதரித்த ஆண்டகை முதல்வரை இச்சமூக மட்டுமன்றி உலகமும் துதிக்காதோ? அங்ஙனம் போற்றற்குரிய அவர்தான் யாரெனில் அவரே மதுரையம்பதியில் மகிழ்பெற விளங்கும் மண்ணுடர் போற்றும் மதியினராய நம் குலத்தலைவர் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணக் கோமான். ஏனெனில் அவரே நம் கலி தீரக்கண்டார் நம் "யாதவ மித்திரன்"

இம் "மித்திரன்" பெருமையைக் கூறவும் ஆமோ? இஃதே நம் சமூக முன்னேற்றத்திற்கு ஏற்ற மருந்து. நம்மவர்க்கு புத்தி புகட்டி அறிவை விளக்கும் பொக்கிஷமு மிதுவே. நாமும் நம் சமூகமும் முன்னேற வேண்டுமானால் யாதவ மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் "மித்திரனை" பொன்னேபோல் போற்றி வருந்தியழைத்து வழிபட வேண்டும்.

என் குல மக்காள்! உலகின் ஓட்டத்தை உற்று நோக்குங்கள். நம் சமூகத்தின் பத்திரிகையில்லாப் பெரும் பழியை நீக்கிய நம் தலைவருக்கு உங்கள் அழியா நன்றியறிதலை அவர் தோற்றுவித்த "யாதவமித்திர"னை ஆதரிப்பதின் மூலம் காண்பியுங்கள். முன்னேற்ற காலம் நெருங்கிவிட்டது என்பதை அறியுங்கள். வாழ்க நம் கோகுல கோபாலகிருஷ்ணர்! வாழ்க நம் "யாதவ மித்திரன்"!! வாழ்க நம் யாதவசமூகமாகிய மாகுலமென்னும் கோகுலம்!!!.

---

பெண்கள் படிப்பது தங்கள் மரபுக் கழகு.
கல்வியால் அறிவும் அறிவால் ஒழுக்கமும் ஒழுக்கத்தால் உயர்வும் உயர்வால் இன்பமும் உண்டாகும்.
இங்கு கண்டதை அங்கும் அங்கு கண்டதை இங்கும் சொல்லாதே.

# கோகிலகிருஷ்ணன்

S. குருசாமி அய்யர், திருச்சி.

( 128-ம் பக்கம் தொடர்ச்சி )

அங்கம் 2.] [காட்சி 2.

[காலம்—இரவு

இடம்—கோகிலத்தின் தனி யறை]

[கோகிலத்தின் புருஷன் கேவலமான உடைகளை உடுத்திக் கொண்டு வெளியே வர—பெரியண்ணன் அவனைப் பின் பற்றியே வருகிறான்.]

[பெரியண்ணன் கையில் சலவை செய்த வெண்மையான உயர்ந்த வஸ்திரங்களை வைத்திருக்கிறான்.]

கோ-பு—சீ! போ! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?

பெரி—இல்லீங்க யசமானே!

கோ-பு—ஆனால் நான் சொல்வதைச் சிறிதும் கேளாமல் அதிகப் பிரஸங்கித் தனமாகவே பேசிக் கொண்டிருக்கிறாயே?

பெரி—எல்லாம் ஒங்க சௌகர்யத்துக்குத் தானே?

கோ-பு—என்னுடைய சௌக்கியத்தை நீ கவனிக்க வேண்டாம் போ!

பெரி—நானு கவனிக்கலீங்க! கோகிலத்தம்மா தான்களே கொஞ்ச நாளா இந்த ஹிம்சைக்கு என்னே ஆளாக்கி வெச்சுருக்குது.

கோ-பு—இந்த உடைகள் போதாதா? ஸதா உடையை மாற்று, சுத்தமா யிரு, புஸ்தகம் படி, கோபத்தை விடு, என்று இந்த பெருத்த எழவு தொந்தரவாகவே யன்றோ போய்விட்டது.

பெரி—இத்தே, கோகிலம்மா கிட்டவே, நேருலே சொல்லிப் புடுங்களேன். அலுப்பு விட்டுதுண்ணு போய்த் தொலையிறேன். அந்தம்மாளானு நான்தான் இத்தை யெல்லாம் கவனிக்குணு முங்குது. நீங்களா, போடாலே,-வாடாலேன்னு-என் பிராணனை வாங்குறீங்க. இந்த எளவுக்கு எங்குனியாச்சும் ஓடிப் போவலாம்னு, ரொம்பநாளா பளவியாச்சேண்ணுத்தான் கொஞ்சம் அப்படி இப்படிப் பார்க்கவேண்டியதா இருக்குது.



கோ-பு—நான் நேரில் சொல்லமாட்டே னென்பதல்ல-நான் உதைத்தாலும் பட்டுக் கொள்கிறாள். வாயில் வந்தபடி திட்டினாலும் சிரித்துக்கொண்டு நிற்கிறாள். ஆனால் எப்படியாவது என் மனத்தை அவள் வசம் திருப்பி அவள் சொன்னதைக் கேட்குமாறு செய்து விடுகிறாள். இந்த விதமாகவே அவள் என்னை எவ்வளவோ மாற்றி விட்டனள். இப்போது இதோ நான் அணிந்திருக்கும் சட்டைகளைப் போட்டுக்கொள்ளும் விதமே எனக்கு முதல் தெரியாது. சிறிது சிறிதாக அவளே இவ்வளவையும் கற்றுக் கொடுத்தாள். முதலில் எழுத்து வாஸனையே தெரியாமலிருந்தது. இப்போது இந்த இரண்டொரு வருடங்களாக இவள் என்னை எவ்வளவோ சிறப்பிக்கச் செய்து விட்டனள் என்றே சொல்லலாம். ஆயினும் தமிழாவது பாதகமில்லை, சீக்கிரம் வந்து விடுகிறது. அந்த எழவு இங்கிலீஷ் வாயில் நுழையவே மாட்டேனென்கிறது.

பெரி—அதிருக்கட்டும்! ஐயா! நீங்க இத்தே கட்டிக்கிறீங்களா? நான் போவுட்டுமா? அப்புறம், வாசிக்கிற நேரத்துலே இந்த அளுக்குத் துணிங்களே ஏன் கட்டிக்கிட்டீங்கண்ணு அந்தம்மா கேட்டா நான் அல்லாத்தியும் சொல்லீடுவேன், சர்தானு?

கோகிலம்—(பிரவேசித்து) என்னடா! பெரியண்ணு என்ன இங்கே பிரஸங்கம் செய்கிறாய்? அவர் படிப்பதையும் நீ கெடுக்கின்றனையே!

பெரி—இல்லேம்மா!—அவுரு—

கோ-பு—(பெரியண்ணன் வாயைப் பொத்தி) சீ! பேசாமலிரடா!—இல்லை; கோகிலம் நல்ல வெளுப்பான வஸ்திரங்களைக் கொண்டு வாவென்று கூறுகிறேன். எல்லாம் இந்தத் துணி இராக்காலத்திற்குப் போதாதோ என்று ஆக்ஷேபிக்கிறான். நான் என்ன செய்கிறது இவனைக் கொண்டு?

கோகி—வண்டா! பேஷ்! நன்றாய் இருக்கிறதே உன் உதவி—முட்டாளே! 'தான் கெட்டதுமன்றி புஷ்கரணியையுங்கூடக் கெடுத்ததாம்' என்பது போலன்றோ இருக்கிறது!

பெரி—அம்மா—(பயந்து உறக்க) நான் மொத அவுரே—

கோ-பு—(ஜாடையாக, வாயைப் பொத்திப் பேசாமலிருக்கும்படி சைகை காட்ட, பெரியண்ணன் மௌனமாயிருக்கிறான்.)

கோகி—சீ! மடையா கொடு அதை.

கோ-பு—(ஆடையை வாங்கி உள்ளே சென்று அணிந்து திரும்பி) ஐயையோ, கோகிலம் இந்த சுருக்குப் போட்டுக்கொள்ளத் தெரியவில்லையே!

கோகி—(வாயைப் பொத்தி) அடாடா! போதும்! இனி அவ்விதம் கூறாதீர்கள். அதற்கு "டை" என்று பெயர். சுருக்கல்ல. எங்கே சொல்லுங்கள்.

கோ-பு—ஸ்—ஓஹோ—"டை—டை" சரிதானா—

கோகி—அது போகட்டும்—ஸ்வாமி! இப்படி உட்காருங்கள்.

கோ-பு—(உட்கார்ந்ததும் கோகிலம் டையைப்போட்டுவிட்டு—கண்ணாடியைக் கொடுக்க)

கோ-பு:—பேஷ்! இப்போது எல்லாம் ஸரியாகப் போய்விட்டது. பிறகு?

கோகி—தாங்கள் நேற்றைப் பாடங்களை ஸரிவரப் படித்துவிட்டீர்களா?

கோ-பு—ஓ! படித்து விட்டேனே.

கோகி—எங்கே தமிழை எடுங்கள்—

கோ-பு—(தமிழ் எடுத்து வாசிக்க, இடையிடையே, இரண்டொரு பிழைகளைத் திருத்தி முடித்து)

கோகி—பார்த்தீர்களா! தமிழ் இப்போது உங்களுக்கு எவ்வளவு ஸரளமாகப் படிக்க முடிகிறது. போகட்டும்—நாளை அடுத்த பாடத்தைப் படித்து விடுங்கள். எங்கே இங்கிலீஷ் புஸ்தகத்தை எடுங்கள் பார்ப்போம்.

கோ-பு—(இங்கிலீஷ் புஸ்தகத்தை எடுத்து வாசிக்க, ஆங்காங்கு சில உச்சரிப்புகளைத் திருத்திக் கொடுக்கிறாள். சிலவற்றிற்கும் அர்த்தம் கேட்கிறாள். அவன் சில விடங்களில் தவறாகச் சொல்ல ஆங்காங்கு அவற்றையும் திருத்துகிறாள்.—பிறகு கேள்விகள் இங்கிலீஷில் கேட்கவே, அவைகளுக்கும் அவன் படித்திருக்கிறபடி அதததற்குத்தக்க விடை யளிக்கிறான்.)



கோகி—(புதிய பாடம் கற்பித்ததும்) ஸ்வாமி! இத்தகைய, கல்விப் பயிற்சி மாத்திரம் இருந்தால் போதாது. நல்ல பழக்க வழக்கங்களும், ஒரு மனிதனுக்கு அமைய வேண்டும். ஏற்கனவே உங்களுக்கு, சுத்தமாயிருக்க வேண்டியதைப் பற்றியும், அதிலும் பரிசுத்தமான ஆகாரம், ஆகாயம், ஆடை இவைகளைப் பற்றி ஏதோ என் சிற்றறிவுக் கெட்டியவரையில் எடுத்துக் கூறியிருக்கிறேன். அத்துடன் பகுத்தறிவுடைய மனிதர்களுக்குக் கோபம் இருத்தலே கூடாது என்றும், அது ஸம்மந்தமாக ஔவை, திருவள்ளுவர் முதலானோர் கூறியிருக்கும் நியாயங்களையும் அத்தகைய கோபத்தை அடக்காததால் கௌசிகர் போன்ற முனிவர்கள்கூடத் தங்கள் தபோ மகிமையை இழந்ததையும் பற்றி நாம் விஸ்தாரமாகப் படித்துக் கொண்டிருந்தோம். இப்போது அதேமாதிரியான சில உலக நியாயங்களையும் நன்கு புலப்படுத்தும் சில வியாஸங்களடங்கிய இதோ, இப் புத்தகத்தை உங்களுக்கென வாசிக்கப் போகிறேன். பிறகு வழக்கம்போல் நமது கண்ணனைத் தொழுது துயில் கொள்வோம். (ஒரு இங்கிலீஷ் புஸ்தகத்திலிருந்து இவ்விஷயங்களை வாசித்து அர்த்தம் சொல்லிக்கொண்டே வருகிறாள். அவனும் இரண்டொரு இடங்களில் ஸந்தேகம் கேட்கிறான். இவ்வாறு அது முடியும் ஸமயம்—பெரியண்ணன் வந்து சற்று நேரம் நின்றுகொண்டிருந்து ஏதோ காதண்டை சொல்லப் புத்தகத்தைத் தன் கணவனிடம் கொடுத்துவிட்டுக் கோகிலம் எழுந்து போகிறாள்.)

கோ-பு—ஆஹா! என்ன அருமையான குணம் இப் பெண்மணிக்கு! இந்த யாதவ குலத்திற்கே திலகமென இவளை மதிக்கவேண்டும். நான் ஏற்கெனவே இருந்த நிலைமை யென்ன? இப்போது இருப்பதுதான் என்ன? இவளைப் போன்று இன்னொருத்தியானால் புருஷனை இகழ்வாள். அவனைமீறி நடப்பாள். அவனை அலக்ஷியமாய்ப் பேசுவாள். இவளோ! எனது குணத்திற்கிரங்கி, படாதபாடும் பட்டு இராக்காலங்களில் இவ்விதமாக என்பொருட்டு உழைத்து, கொஞ்சம் படிக்கவேண்டியது உசிதந்தானென்று என் புத்தியிற் படும்படி செய்திருக்கின்றனளே. இத்தகைய குணவதிக்கு ஏற்ற கணவனா நான்! எனக்கே வெளிப்போக வெட்கமாயிருக்கிறதே. அதுவும்

சில சமயங்களில் சிலர் வந்து கோகிலம் உன் புருஷனுக்கு என்ன உத்தியோகம், இங்கிலீஷ் எது வரையில் படித்திருக்கிறான் என்று கேட்கும்போது அவள் மனம் படும்பாட்டையும், எனக்கு நேரிடும் அவமானத்தையும் உண்மையில் கடவுளே அறிவார். நமது குலத்தாரில் படித்தவர்களின் தொகை மிகவும் குறைவாயிருக்கிறது. அதை விருத்தி செய்ய வேண்டுமானால் ஆடவர்களாவது சிறிது படித்து முன்னேற்ற மடைந்தாலன்றோ அனுகூலமா யிருக்கும். (யோசித்து) ஆம்! நாம் இன்னும் சிறிது காலத்தில் நன்றாகப் படிக்கவும் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டே தீர வேண்டும். இதுவரையில் இருந்த ஊக்கத்தைவிடப் பதின் மடங்கு அதிக ஊக்கத்துடன் உழைத்து முன்னேற்றமடைவதுடன் நமது யாதவ வாலிபர்களுக்கும் கல்வி யபிவிர்த்திக்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். எழுத்து வாஸனை இல்லாமல் சொத்திருந்து என்ன பயன்? நமது குலத்து வாலிபர்களும் சிறுமிகளும் என்னையாவது திருஷ்டாந்தமாகக் கொண்டு இனியாவது நாம கல்விப்பயிற்சி பெறவேண்டுமென்ற தீர்மானம் செய்து கொள்ளட்டும். (சற்று நிமிர்ந்து எதிரேயுள்ள கடிகாரத்தைப் பார்த்து) ஓஹோ! இதோ பதினொரு மணியாய்விட்டது. இனி நாம் படுக்கைக் கேகவேண்டியதுதான் இருக்கட்டும் பார்ப்போம்—(நிஷ்கிரமித்தல்)

( தொடரும் )

---

### சந்தா நேயர்களுக்கோர் விண்ணப்பம்.

மணியாடர்செய்கையில் புதிய-பழய-சந்தாதார் என்ற விவரத்துடன் பழய சந்தாதாராயிருந்தால் தங்கள் சந்தா நம்பரையும் குறிப்பிடவேண்டும் தங்களின் விலாசத்தையும் தெளிவாய்க் கிறுக்கு எழுத்தன்றிக் கூப்பனில் எழுதவேண்டும். விலாசத்தைமாற்ற விரும்புவோர் அடுத்த பத்திரிகை வெளிவருவதற்குள் சந்தாநம்பருடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ப-ர்.

# ஒரு விசேஷச்செய்தி.

---

### யாதவ வாலிப சங்கம்.

சித்தூரில் சென்ற திங்கட்கிழமை 17—11—30-ந் தேதி காலை சென்னை யாதவ வாலிப சங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் தி. சா. வேணுநாதக் கோன் F. C. I. M. R. A S. அவர்களின் தலைமையின்கீழ் யாதவப் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அச்சமயம் வந்திருந்தவர்களின் முக்கியமானவர்கள். ஸ்ரீமான்கள், முனுசாமிப் பிள்ளை, அ. குப்புசாமிப் பிள்ளை. பொன்னுசாமிப் பிள்ளை. கோவிந்தசாமிப் பிள்ளை. சி. பெரியசாமிப் பிள்ளை, மு. வரதப் பிள்ளை. பீ. கோவிந்தபிள்ளை. திருமலைப் பிள்ளை.

தலைவர் யாதவ வாலிப சங்கத்தின் கொள்கைகளையும் உபயோகங்களையும் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்த பிறகு, ஓர் கிளைச்சங்கம் ஸ்தாபனம் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டுக் கீழ் கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர்:—ஸ்ரீமான், சா. பட்டுபிள்ளை. காரியதரிசி.—ஸ்ரீமான், மு. கிருஷ்ணபிள்ளை. கமிட்டி அங்கத்தினர்கள்:—ஸ்ரீமான்கள், அ. குள்ளப்பிள்ளை. சா. கரியப்பிள்ளை. மு. கோவிந்தபிள்ளை.

---

# ஸ்ரீயதுகுல மகா சங்கம்.

---

திருவல்லிக்கேணி. வீரராகவ முதலி வீதி 69-ம் நம்பர் கட்டடத்தில் நாளது டிசம்பர் 14-தேதி மாலை 4 மணிக்கு இச்சங்கத்து 10, 11, 12வது வருஷாந்த மகாநாடு கூடியது.

திருவாளர் ராவ் ஸாஹிப் டி. சி. ஆதிகேசவலு பிள்ளை அவர்கள் (சங்கத்து அக்கிராசனாதிபதி) தலைமை வகித்தார். யாதவகுல பிரமுகர்கள் பலர் அச்சமயம் விஜயம் செய்திருந்தார்கள். பிறகு சங்கத்து வருஷாந்தர அறிக்கை படித்து அனுமதிக்கப்பட்டது. சங்கத்திற்கு வேண்டிய சில சீர் திருத்திய சட்டதிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அடுத்த முறைக்குச் சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்கள் அடியிற்கண்டபடி தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்,

1. தலைவர். திருவாளர், ராவ் ஸாஹிப் டி. சி. ஆதிகேசவலு பிள்ளை, பி. ஏ. பி. எல்.
2. உப தலைவர்கள். திருவாளர், எம். அப்பாத்துரைப் பிள்ளை,
3. ,, சி. ஆதிகேசவலு நாயுடு.
4. ,, பி. பெருமாள் பிள்ளை,
5. காரியதரிசிகள். திருவாளர். எம். கே. ஆராவமுது பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ்.
6. ,, சி. தீனதயாளு நாயுடு'' பி. ஏ. பி. எல்.
7. உதவி. காரியதரிசிகள். திருவாளர், கே. மணிவண்ணன் பிள்ளை, பி. ஏ.,
8. ,, டாக்டர். எஸ். சுப்பராயலு நாயுடு.
9. பொக்கிஷதார். திரு. பி. எம். ராமகிருஷ்ணப் பிள்ளை,

கமிட்டி. அங்கத்தினர்கள்.

10. திருவாளர், எம். சி. தீனதயாளு நாயுடு.
11. ,, வி. கண்ணுப்பிள்ளை,
12. ,, சி. வி. திருவேங்கடம் பிள்ளை,
13. ,, டி. எஸ். வேணுநாதக்கோன். எப், சி. ஐ. எம். ஆர். ஏ. எஸ்.
14. ,, பண்டிதர். வி. வேணுகோபாலப் பிள்ளை,
15. ,, டி. ஆர். சாரங்கபாணி பிள்ளை, எம். ஏ.
16. ,, பி. இராமகிருஷ்ண பிள்ளை,
17. ,, சி. பி. ராஜரத்தினம் பிள்ளை,
18. ,, கெ. வீரராகவப் பிள்ளை, பி. ஏ.
19. ,, சி. என். முனிசாமி பிள்ளை,
20. ,, பி. பட்டாபிராம் பிள்ளை, பி. ஏ.

தம் நீண்ட உரையில் திருவாளர். ராவ் ஸாஹிப் டி. சி. ஆதிகேசவலுபிள்ளை, தம்மை ஒரே மனதாகத் தலைவராய்த் தேர்ந்தெடுத்ததற்காக எல்லோருக்கும் வந்தனம் கூறித் தம்மாலானவரையில் தம் வேலையைச் சரிவர நடத்தி வருவதாக உறுதி கூறினர்.

பிறகு வந்தனோப சாரத்தோடு கூட்டம் இனிது முடிந்தது.

M. K ஆராவமுது பிள்ளை,
காரியதரிசி.

End

JL 45926 N29YM N301
22417